உ

குகமயம்

ஓம் குமார பரமேச்வராய நம:

வடமொழியில்

ஸ்ரீ கல்யாணவர்மனார் இயற்றியருளிய

# சாராவளியின்

தமிழ் மொழிபெயர்ப்பு.

---

இது

செங்கோட்டை

பிரம்மஸ்ரீ பா. ஆ. விசுவநாத பாரதியார்

கீழச்செவல்பட்டி

பிரம்மஸ்ரீ ம. வைத்தியநாத ஸ்தபதியார்

இவர்களின் பேருதவிகொண்டு

பறங்கிப்பேட்டை கணித ஜோதிஷ ஆயுர்வேத
சித்தவைத்திய சிற்ப சாஸ்திர பண்டிதரும்
வைத்தியரத்ந பிஷங்மணியுமான

சு. ஏ. குமாரஸ்வாமி ஆச்சாரியாரால்

தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு

சிதம்பரம் தாலூக்கா K ஆடூர் மிராசுதார்

திருவாளர் M. இரத்தினசபாபதிப் பிள்ளை

அவர்களின் நன்முயற்சியால்

சென்னை, கேசரி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

*All Rights]* 1939 *[Reserved*

குகமயம்

ஓம் குமாரகுருப்யோ நம:

# சாராவளி

## பதிப்புரை.

### வழிபடு கடவுள் வணக்கம்.

உலகியல் சிறப்பப் பலகதிர் பரப்பும்
பரிதியஞ் செல்வனும் விரிசுடர்க் கோள்களும்
அமைவுற வியக்குங் குமரவேட் பரவுதும்
பாரா வாரம் பரவிய பாருளார்
சாரா வளிநூற் றகுதிகாண் பதற்கே.

உலக முய்ய உயிர்க்குயிராய் எங்கும் ஒளிர்ந்திலகும் இறைவன் இயற்றியது வேதமெனப்படும். அவ்வேதத்தின் பொருளைச் செவ்வனே யறிந்து கொள்ளுவதற் குரியனவாய் உள்ள நூல்கள் அங்கமெனப்படும். அவ்வங்க நூல்கள் ஆறென மொழிப. அவ்வாறனுள் சோதிடமும் ஒன்றாகும். அச்சோதிடம் வேதத்தின் கண்ணெனக் கொள்ளப்படுவதால் "கண்ணிற் சிறந்த உறுப்பில்லை" என்பது பற்றி ஏனைய அங்க நூல்களினும் சிறந்த தென்பது பெறப்படும்.

ஜோதிடம், புண்ணிய காலங்களையறிந்து அவ்வக் காலங்களில் செய்தற்குரிய கருமங்களைச் செய்து புண்ணிய மீட்டுதற்கும், முற்செய் வினையால் அநுபவித்தற்குரியனவாய் வரும் இன்ப துன்பங்களை வருங் காலமறிந்து வருவது நன்மையாயின் மேலும் மேலும் நன்மை விளைதற்கேதுவாயின செய்தற் பொருட்டும், வருவது தீமையாயின் அத்தீமை நீங்குதற் குரியவாய சாந்தி முதலியன செய்து அதனை நீக்கிக் கொள்ளுதற்கும் இன்றியமையாததாகவுள்ளது.

இஃது இங்ஙனம், உற்றுழியுதவும் துணைவன்போல உதவுதல் பற்றி எல்லாராலும் ஒரு தலையான் பயிலற்பால தாயுள்ளது. இது கணிதம்-ஜாதகம்-பிரச்னம் (ஆரூடம்) என மூன்று வகைப்படும். இம்மூவகையுள் :

கணிதமாவது:—கிரகங்களின் நிலையை சிறிதும் பிழையின்றி நுணுக்கமாக விளக்குவது.

ஜாதகமாவது:—அவரவர்கள் பிறந்த காலத்திலுள்ள கிரக நிலையைக் கொண்டு இலக்கின முதலிய பன்னிரு பாவங்களையும் தெரிவிப்பது.

ஆரூடமாவது:—தாம் விரும்பியவற்றின் பலாபலன்களை யறியும் பொருட்டு வினவுங்காலத்து உதயமாகும் கிரக நிலை கொண்டு பலாபலன்களை யறிவிப்பது.

இம்மூன்றனுள் கணிதமின்றி ஜாதகமும் பிரசினமும் பெரிதும் பயன்தரா. அங்ஙனமே ஜாதகமும் பிரசினமுமின்றிக் கணிதம் பயன்தராது. ஆகவே இம் மூன்றினும் நன்கு பயின்றவரே சோதிட நூற்பொருளின் உண்மை யுணர்ந்தோராவர். இதனை,

"செப்பியதோர் பலபாகம் பகர வேண்டிச்
செங்கதிரோன் முதனவகோள் செறிபலங்க டெரிந்தே
ஒப்புடனே சனித்தநவக் கிரகபுடங் கண்டே
யுயர்தூமன் முதலைவர் குளிகாதி நால்வர்
தப்பறவே யெண்ணிலக் கினபுடமு மாகச்
சாற்றிடுபத் தொன்பதெனக் தரும்புடங்கள் வரைந்தே
இப்புவியி லுரைத்தவர்க்கே சித்திக்கும் பலன்கள்
எனக்கருதி மொழிப்புலவ ரியம்பினர்க டாமே"

என்ற செய்யுளால் நன்குணரலாம்.

இச்சோதிட நூல் பராசரர் முதலிய பதினெண்மரால் மிக விரிவாக இயற்றப்பட்டுளது. அங்ஙனம் விரிவாக இயற்றிய நூல்களனைத்தையும் கற்று அதன் பயனை உணர்தல் அருமையாதலின் எல்லோரும் எளிமையாய் உணர்தற் பொருட்டு ஆசிரியர் வராஹமிஹிரரென்னும் பெரியார் பிருகஜ் ஜாதகமென்னும் ஹோரா சாஸ்திரத்தை யியற்றியருளினர்.

அப் பிருகஜ்ஜாதகம் சூத்திரம்போலச் சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தலென்னும் அழகுபற்றி யிருத்தலின் அதன் வாயிலாக திரேக்காணம் முதலிய தச வர்க்கங்களை எளிதில் மந்த மதியினர் அறிந்துகொள்ளற் கியலாதவராய் இடர்ப்படுவாராயினர்.

இதனைக் கண்டறிந்த ஸ்ரீ கல்யாண வர்மரென்னும் ஆசிரியர் விரிவும் சுருக்கமுமின்றி தொகை விரியென்னும் நூல் யாப்புப் பற்றி சாராவளி யெனும் இந்நூலை இயற்றி யருளினர்.

இந்நூல் தொல்லாசிரியர்கள் விரிவாகவும் சுருக்கமாகவும் இயற்றிய எல்லா நூற்களின் சாரங்கொண்டு மிளிர்வதாலும் வடமொழியில் உள்ள ஜாதக பாரிஜாதம் சர்வார்த்த சிந்தாமணி முதலிய நூல்களுக்கும் தென் மொழியில் ஜாதகாலங்காரம் முதலிய நூல்களுக்கும் முதனூலாய் நிலவுதலானும் இஃதொன்றே சோதிட நூல்கள் பலவற்றுள்ளும் மிகச் சிறந்ததெனப்படும்.

இதனை "ஹோரா சாஸ்திரமெனும் கடுவெயிலில் இன்னலுறுவார்க்கு அவ்வின்னல் நீங்குதற்பொருட்டு கல்யாண வர்மனென்னும் மலையிலிருந்து குளிர் ஜலப் பெருக்கோடு சாராவளி யென்னும் நதி பெருக்கெடுத்தோடுகின்றது," என்னும் இந்நூற் பிரமாணத்தால் நன்குணரலாம்.

நான் சோதிடம் பயின்று சாதகாலங்கார முதலிய நூலின் உதவி கொண்டு பலன் சொல்லி வருங்கால் எம் முன்னோரிடமுள்ள சாராவளியின் சில பாகங்கள் கிடைக்கப்பெற்றன. அவைகள் மிகத் தெளிவாகப் பலன் தெரிவிப்பது கண்டு ஏனைய பாகங்களையும் தேடிப் பெறுதல் வேண்டுமெனப் பேராசையுடன் இருந்தேன். அங்ஙனமிருந்த யான் வடமொழியில் மந்த்ரேஸ்வர ரென்னும் முனிவர் பெருமான் இயற்றிய பலதீபிகை யென்னும் நூலின் தமிழ் மொழி பெயர்ப்பைத் தமிழர்க்கு உதவியாகும் பொருட்டுப் பதிப்பிக்க வெண்ணி பதித்து வருங்காலத்தில் சாராவளியை நன்குணர்ந்து ஜாதக பலன் கூறவேண்டுமென 20-ஆம் அத்தியாயம் 63-ஆம் சுலோகத்தில் ஆசிரியர் கூறியிருத்தல் கண்டு சாராவளியைப் பெறவேண்டுமென முன்னுள்ள ஆசையானது மிகப்பெருகிற்று.

அவ்வாசையால் எனது நண்பர் பலர்களுக்குங் கடித மெழுதினேன். அவர்களுள் கீழச்செவல்பட்டி பிரம்மஸ்ரீ ம. வைத்திய நாதஸ்பதி அவர்கள் தன்னிடமும் தென் திருவிதாங்கூர் செங்கோட்டை பிரம்மஸ்ரீ. பா. ஆ. விசுவநாத பாரதியார் அவர்களிடமும் வியாக்கியானத்துடன் கூடிய சாராவளி இருப்பதாகத் தெரிவித்தார்கள். தெரிவித்தவுடன் பெரு மகிழ்ச்சி கொண்டு அவ்விருவர்களிடமுஞ் சென்று சாராவளி யென்னும் அரிய நூலைப் பெற்று இவ்வரிய நூலானது தமிழில் மொழி பெயர்த்து வெளியிடப்படின் சோதிடம் பயிலும் தமிழர்க்குப் பேருதவி யாகுமென வெண்ணி அவ்விரு பெரியார்களின் உதவி கொண்டு தமிழில் மொழி பெயர்த்து அச்சிடுவதற்கு ஏற்றவாறு எழுதி பல ஆண்டுகளாகியும் அதற்கு வேண்டிய பொருளுதவி யின்றிக் காலந் தாழ்த்தலாயிற்று.

இங்ஙனம் வெளிவராது காலந் தாழ்த்தல்பற்றி மிக வருந்தி யிருந்த காலத்து எல்லாம் வல்ல வல்லி தேவசேனு சமேத ஸ்ரீகுமாரப்பெருமான் திருவருளால் பெருநிலக்கிழாரும் தர்ம சீலரும் கற்றுரிடத்துப் பேரன்புடையவரும் ஆகிய திருவாளர் சிதம்பரந் தாலூக்கா K. ஆடூர் M. இரத்தினசபாபதிப் பிள்ளையவர்கள், பெருநிலக்கிழாரும் வாய்மை பிழையா வள்ளலும் சிவபூஜா துரந்தாரும் ஆகிய திருவாளர் சிதம்பரந் தாலூக்கா பின்னலூர் R. கணபதிப்பிள்ளையவர்கள் ஆகிய இருவர்களுடைய பழக்கம் உண்டாயிற்று. அப்பழக்க மிகுதியால் அவர்களிடம் சாராவளியின் மொழிபெயர்ப்பு வெளியிடுதலைப் பற்றி தெரிவித்து வெளியிடுமாறு கேட்டுக்கொண்டேன். அவ் வேண்டுகோளுக்கிணங்கி தாங்கள் பெரும் பொருள் உபகரித்ததேயன்றித் தக்கார் பலரிடம் புத்தகத்திற்கு முன் பணமாக சுமார் நூறு புத்தகத்திற்கு பணங்கொடுத்துதவுமாறு செய்துள்ளார்கள். இப் பொருளுதவியால் இப்புத்தகம் வெளிவரலாயிற்று.

மொழிபெயர்த்தற்குப் பேருதவிபுரிந்தவர்களும் இப்புத்தகம் வெளிவருதற் கேதுவாக இருந்த திருவாளர் M. இரத்தின சபாபதிப் பிள்ளையவர்களும் திருவாளர் R. கணபதிப் பிள்ளையவர்களும் புத்தகத்திற்கு முன்பணம் உதவிய பெரியார்களும் எல்லாம்வல்ல ஸ்ரீகுமாரப்பெருமான் திருவருளால் எண்ணிய எண்ணியாங்கு எல்லா நலங்களும் எய்தி இன்புற்று நீடூழி வாழுமாறு ஸ்ரீகுமாரப்பெருமான் திருவருளை வேண்டுகின்றேன்.

இந்நூலை அச்சிடுங்காலத்து உடனிருந்து தமிழ் நடை செவ்வனே திருத்தி யுதவிய திருவாளர் வித்வான் ப. அ. கிருஷ்ணஸ்வாமிப் பிள்ளையவர்களுக்கும் இடையிடையே யுண்டாகிய சந்தேகங்களை அவ்வப்போது சிரமம் பாராது நிவர்த்தித்ததோடு புரூப் பார்த்துப் பிழையின்றி வெளியிடுவதற்கு உதவிய பறங்கிப்பேட்டை போர்டு ஹைஸ்கூல் தலைமைத் தமிழாசிரியர் திருவாளர் வித்வான் K. ஆடூர் பெரியசாமிப் பிள்ளை யவர்களுக்கும் நன்றி பாராட்டுகிறேன்.

இவ்விரு தமிழ்ப் புலவர்களும் நீடூழி வாழுமாறு எல்லாம் வல்ல குகப்பெருமானை வணங்குகின்றேன்.

இச்சாராவளித் தமிழ் மொழி பெயர்ப்பு எங்கும் என்றும் எல்லார்க்கும் பயனளித்து நிலவும் வண்ணம் ஸ்ரீ வல்லி தேவசேனு சமேத ஸ்ரீ குமாரப் பெருமானை வேண்டுகின்றேன். சுபம்.

பிரமாதி வருஷம்
விருஷபரவி 24உ
பறங்கிப்பேட்டை

**சு. ஏ. குமாரஸ்வாமி.**

சிவமயம்.

THE TANJORE + ...RY

# சாராவளி

## முகவுரை.

சோதிடம் என்பது சிவ பெருமான் திருவாக்காகிய நான்மறை யின் பொருளை உணர்தற்குக் கருவியாய் அவற்றிற்கு உறுப்புகள் எனப்பட்ட வேதாங்கம் ஆறனுள் ஒன்று.

“ நன்றாய்ந்த நீணிமிர் சடை
முதுமுதல்வன் வாய்போகா
தொன்றுபுரிந்த வீரிரண்டின்
ஆறுணர்ந்த வொருமுதுநூல்”

என்னும் புறப்பாட்டு அடிகளால் நான்மறைகள் முதுமுதல்வனுகிய சிவபிரான் வாய்மொழியா மென்பதும், ஆறங்கங்கள் அவற்றை உணர் தற்குக் கருவியா மென்பதும் பெறப்படும். சோதிடமானது எண் என்றும் கூறப்படும். இது வேதத்திற்குக் கண்ணுக வுள்ளது. இதனைச் சங்கப் புலவராகிய கூலவாணிகன் சாத்தனுர் தாமியற்றிய மணிமேகலையில்:

“ கற்பங் கைசந் தங்கா லெண்கண்
டெற்ற னிருத்தஞ் செவிசிக் கைமூக்
குற்ற வியாகர ணமுகம் ”

என்று கூறுவதனு லறியலாம்.

இங்ஙனம் தொன் முதுனூலாகிய வேதத்திற்கு அங்கம் என்று கூறப்பட்டமையினுலே சோதிடக் கலையானது எத்தனையோ பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தொட்டு இப்பரத கண்டத்தில் பயி லப்பெற்று வந்ததென்பது பெறப்படும். பண்டை நாளிலிருந்த முனிபுங்கவர்களும் இடைக்காலத்திருந்த வராஹமிஹிரர் முதலான வர்களும் ஆக எண்ணிறந்த பெரியோர்கள் வட மொழியிலே காலந் தோறும் சோதிட நூல்கள் இயற்றிப்போந்தனர். தமிழ் மொழியி லும் சோதிடக் கலையும் அதனோடு தொடர்புடைய வானநூல் முத

வியனவும் பண்டை நாளிலேயே பேன்மையுற்றிருந்தன என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன.

எட்டுத் தொகையுள் ஒன்றாகிய பரிபாடலில்

"விரிகதிர் மதியமொடு வியல்விசும்பு புணர்ப்ப
வெரிசடை யெழில்வேழந் தலையெனக் கீழிருந்து
தெருவிடைப் படுத்தமூன் றொன்பதிற் றிருக்கையுள்
உருகெழு வெள்ளிவந் தேற்றியல் சேர
வருடையைப் படிமகன் வாய்ப்பப் பொருடெரி
புந்தி மிதுனம் பொருந்தப் புலர்விடிய
லங்கி யுயர்நிற்ப வந்தணன் பங்குவி
னில்லத் துணைக்குப் பாலெய்த விறையமன்
வில்லிற் கடைமகர மேவப்பாம் பொல்லை
மதிய மறைய வருநாளில் வாய்ந்த
பொதியின் முனிவன் புரைவரைக் கீறி
மிதுன மடைய விரிகதிர் வேனி
லெதிர்வரவு மாரியியை கென விவ்வாற்றாற்
புரைகெழு சையம் பொழிமழை தாழ
நெரிதரூஉம் வையைப் புனல்" என்ற பாட்டை நோக்கினால் இவ்வுண்மை புலனாம். வான நூற் பயிற்சியில் மேம்பட்டவர்கள் பண்டிருந்தனர் என்பதற்கு,

"செஞ்ஞா யிற்றுச் செலவுமஞ் ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச் சூழ்ந்தமண் டிலமும்
வளிதிரிதரு திசையும்
வறிது நிலைஇய காயமு மென்றிவை
சென்றளந் தறிந்தோர் போல வென்றும்
இனைத்தென் போரு முளரே"

என்னும் புறநானூற்றுச் செய்யுட் பகுதியும் பன்னூலும் ஆராய்ந்து தவறின்றிக் குறியுரைக்கும் சோதிடர்கள் இருந்தனர் என்பதற்கு

"நெறியறி செறிகுறி புரிதிரி பரியா வறிவன்"

என்னும் கலித்தொகை யடியும் சான்றாதல் காண்க.

சோதிடர்க்கு அறிவர் கணிவர் என்ற பெயர்கள் வழங்கின.

"மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன்"

என்று தொல்காப்பியத்து வாகைத் திணையில் ஓதப்பட்டவன் சோதிடனே யாவன் என்பது இளம்பூரணர் கொள்கை. அவரெழுதிய "அறிவன்" என்றது கணிவனை. மூவகைக் காலமும் நெறியினால் ஆற்றல் ஆவது பகலும் இரவும் இடைவிடாமல் ஆகாயத்தைப் பார்த்து ஆண்டு நிகழும் வில்லும் மின்னும் ஊர்கோளும் தூமமும் மின்வீழ்வும் கோணிலையும் மழைநிலையும் பிறவும் பார்த்துக்கூறல் என்பதாம். அங்ஙனம் வேண்டுதலின் "ஆற்றிய அறிவன்" என்னும் அவரது உரை நோக்கற்பாலது.

இங்ஙனம் பண்டை நாளிலே மிகவும் சிறப்புற்றிருந்த தமிழ்ச் சோதிட நூல்கள் ஏனைய பல திறப்பட்ட நூல்களை யொப்பவே தமிழகத்தின் தெற்கே நிகழ்ந்த கடல்கோள் முதலியவற்றால் அழிந்தொழிந்தன. அவ்வாறாயினும், நிமித்தமும் விரிச்சியும் முதலாகவுள்ள பல திறப்பட்ட குறிகள் உரைக்கும் கணிவர் அல்லது சோதிடர்கள் எப்பொழுதும் இருந்தே வந்திருக்கின்றனர். ஏறக்குறைய 800 ஆண்டுகள் முன்தொட்டு தமிழிலே சோதிட நூல்கள் பல இயற்றப் படுவவாயின. அவைகள் வட மொழியில் நின்று மொழி பெயர்த்தனவும் வட நூல்கள் பலவற்றையும் ஆராய்ந்த புலவர்களால் தமிழிலே இயற்றப்பட்டனவும் ஆகும்.

இதுகாறும் தமிழில் மொழி பெயர்க்கப் படாதிருக்கிற வட மொழிச் சோதிட நூற்கள் பலவுள்ளன. அவையும் மொழி பெயர்க்கப்படுமாயின் தமிழ் மக்களுக்குப் பெரிதும் உதவியாயிருக்குமென்பதில் ஐயமில்லை.

சாராவளி என்பது வடமொழியிலுள்ள ஓர் சிறந்த சோதிட நூல். இந்நூலைத் தமிழிலே பலராலும் பயிலப்படுகின்ற சாதகாலங்காரம் என்னும் நூலியற்றிய கீரனூர் நடராசன் என்பார் தாம் ஆராய்ந்த நூல்களில் ஒன்றாகக் குறிப்பிடுகின்றார். இந்நூலை இயற்றியவர் பல நூற்றாண்டுகளின் முன் விளங்கிய கல்யாண வர்மன் என்பவராவர். இந்நூலாசிரியரே தெரிவிக்கின்றபடி இது பௌலிசன் உரோமசன் வசிஷ்டன் முதலாய பதினெட்டு ஆசிரியர்களாலியற்றப் பெற்ற பரந்து பட்ட சோதிட நூல்களின் சாரமாக வடித்தெடுக்கப் பெற்றதாகும். ஐம்பத்து நான்கு அத்தியாயங்களில் 2541 சுலோகங்கள் அமைந்த இந்த நூலை வடமொழியிலுள்ள உரையுடன் மொழி பெயர்த்துத் தமிழ் மக்களுக்கு அளிக்கும் பணியைப் பறங்கிப்பேட்டையிலுள்ள சோதிட வைத்திய சிற்ப நூல்

வித்துவானுகிய பண்டிதமணி சு. ஏ. குமாரஸ்வாமி ஆச்சாரியாரவர்கள் மேற் கொண்டுள்ளனர். இவர்கள் முன்னரே பல தீபிகை, சூரிய சித்தாந்த சோதிட கணிதம் முதலாகிய எத்தனையோ பல சோதிட நூல்களை அச்சிட்டு வெளிப்படுத்தி உதவியுள்ளார்கள். தமிழ் மக்கள் அறிந்து பயன் எய்துதற்கும் தமிழ் மொழி ஒரு துறையில் வளமுறுதற்கும் ஏற்ற இந் நற்பணியைச் சலியாத ஊக்கத்துடன் செய்துவரும் ஆச்சாரியாரவர்களுக்குத் தமிழ் மக்கள் அனைவரும் கடமைப்பாடுடையவர்கள் ஆவார். இவர்கள் இதனை வெளியிடுதற்குப் பல்லாற்றானும் உதவி புரிந்துவரும் தமிழாசிரியர்களாகிய திருவாளர். ப. அ. கிருஷ்ணஸ்வாமிப் பிள்ளை யவர்கள், திருவாளர். வித்துவான் சா. பெரியசாமிப் பிள்ளை யவர்கள் ஆகிய அன்பர்களின் முயற்சி பாராட்டற் குரியதாகும்.

சோதிடர்கள் அறிந்துகொள்ளவேண்டிய எல்லாப் பொருளையும் தன்னகத்தடக்கி ஓர் கருவூலமென விளங்குவதும் ராஜயோகம் முதலியவற்றை மிக விரித்துரைப்பது மாகிய இந் நூலைத் தமிழ் மக்கள் விரைந்து ஏற்றுப் பயனெய்துவ ரென்னும் துணிபுடையேன். சுபம்.

இங்ஙனம்,

அண்ணாமலைநகர்
20 - 3 - 1937.
தாதுஸ பங்குனிமீ 7உ

ந. மு. வேங்கடசாமி நாட்டார்,
தமிழ்ப்பேராசிரியர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

சிவமயம்.

# சிறப்புப் பாயிரம்.

இஃது
அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் வித்வஸ்ரீ
ரா. கந்தசுவாமியார் அவர்களால்
இயற்றப் பெற்றது.

### நிலை மண்டில ஆசிரியப்பா.

உலக முவப்ப விலகுதா மரைவாழ்
திருமக டழீஇய குருநிற மேய
நெடியோ னன்ன கடிபொழில் வளைஇய
பாக்கமும் புறவமும் மேக்குயர் குப்பமும்
கண்ணிறை கவின்செறி விண்ணுறு சேடியென்
னுருமை யாப்ப சீருறத் தழீஇய
அறம்புரி குநர்பயில் பறங்கியம் பதியினில்
யோகார் நிலைசெறி யேகாம் பரனனி
இழைத்தநற் றவத்திற் றழைத்திடு பயனெனத்
தோன்றிய புதல்வன் சான்றவ ருவக்கும்
நடைபயி லறிஞன் விடையுகை யிறையடி
உச்சிகொள் புகழ்சால் விச்சுவப் பிரம
விப்பிர குலமாங் திப்பிய சலதியின்
மருத்துவஞ் சோதிட மருத்திகொண் டொளிரும்
சிற்ப முதலா நற்பெருங் கலைகெழீஇத்
தோன்றுவெண் கதிரென வான்றவர் கூறும்
கலைநிறை புனிதன் றலைநடு நாவெனச்
சமனிலை யுடைய னமலையின் பதமலர்
கண்ணிக் கண்ணி நண்ணுமெய் நெறியினிற்
சென்றவன் புலனெறி நின்றவர் கண்ட
விச்சுவ கன்மீய மெச்சமி லாயாதிப்
பொருத்த விளக்க மருத்த மதீயும்

பலதீ பிகையே நலமிகு புட்ப
பந்த மயனிழை யந்தமி லிரத்தின
கரமே நலனேய் வரமிகு மச்ச
சாத்திர மக்க ணேத்திர மெனக்கொளுங்
கோல மார்தரு நீல கண்டதா
சிகமே சிந்துசூழ் சகமகிழ் சீபதி
சாதக கன்ம மேதகு பத்ததி
ஆரியர் புகழும் சூரியசித் தாந்த
சோதிட கணித மாதிடத் தான்கழ
லுன்னும் புலவர் பன்னுசித் தாந்த
திருக்கணி தமுத லுருக்கிளர் நூல்களின்
பதிப்பா சிரியன் மதிப்புறும் வைத்திய
அரதன வசன நிரல்படு பூடண
நூலா சிரியன் மேலா நூல்களைத்
தோலா நாவின் மேலோ ராணையிற்
பயின்றந் நெறிவழி யியன்றவா றொழுகி
தயாக்கிரு கத்தர்வாழ் வியாக்கிர புரியினை
ஆசற வாட்சிசெய் மாசறு மிறைபிறர்
நலியா வுளத்துக் கலியாண வர்மன்
வராக மிகிர ரிராகமோ டோதிய
மதவிகற் பங்க ளிதமுடன் செறிய
ஈரிரண் டெண்ணினைச் சீருற முடியிடு
மைந்துபத் தாகும் சந்தமா ரியலுற
வடமொழி யதனிற் றிடமுட னருளிய
சாரா வளியெனு மோரா நூலினை
அமரர் சாமியாம் குமரசாமி யின்பெயர்
கொண்டநற் பத்தன் பண்டைய நூல்செறி
அமிழ்தென மிளிருந் தமிழ்மொழி யதனில்
மொழிபெயர்த் தருளிய விழுமிய குணத்தோன்
நீடு வாழியவெனப் பாடல்சால் சிறப்புறு
கூத்துடை யான்கழ லேத்துகம் யாமே.

---

உ

# சிறப்புப் பாயிரம்.

இது

புதுவை கவர்ன்மென்ட் கல்விச்சாலைத் தமிழ்ப் பண்டிதர்,

**வித்வ ஸ்ரீமாந் வீ. துரைசாமி முதலியாரவர்களால்**

இயற்றப் பெற்ற

**நேரிசை ஆசிரியப்பா.**

உலகம் போற்றும் பலகலை யாய்ந்தோர்
நலமுறு சோதிடம் நாடிய வெவர்க்குங்
கண்ணெனக் கால கதிதெளி விக்குமென்
றெண்ணின ருரைப்ப ரிதன்பயன் பெரிதே
அக்கலை பயிலப் புக்கவர்க் கெல்லாம்
தக்கதோர் துணையாஞ் சாரா வளிநூல்
நல்யாணர் மேவுங் கல்யாண வர்மா
பல்யாண்டு கட்குமுன் பகர்ந்துள ததுவே
வாத ராயணர் வசிஷ்டர் யவனர்
கோதில் சக்தி குடனர் பௌலிசர்
அத்திரி கர்க்கர் அக்கினி கேசர்
மெய்த்திற முற்ற விஸ்வா மித்திரர்
வரத்துயர் பரத்து வாசரோ டருஞ்சீர்
மன்னிய ரோமசர் மனுவே காசிபர்
என்னும் பெரியோ ரியற்றிய நூல்களை
ஆராய்ந் துரைத்த வருநூ லிதுவே
பேரா ருரையும் பெருமையின் மிக்கதே
மேற்கோள் பலவும் விளக்கமுற் றதுவே
முன்னூற் கெல்லா முரணின் றியன்றது
சோதிடர் தமக்கு மாதிட னளிப்பது
வடமொழி தன்னில் வாய்ப்புடைத் தாயது
தென்மொழி பயில்வோர் தெரியாதிருந்தனர்
குறையிது தீர்தா நிறைமதி யாலே

கறையிலா தெண்ணூக் காட்சியி னெழுதுபு
யாவரு மெளிதில் மேவுற வுணர்வகை
நாவரு செந்தமிழ் நடையி னமைத்தனர்
கண்வளர் வனப்பிற் கருதியச் சிட்டனர்
அன்னவர் யாரெனில் அறைகுதுங் கேண்மின்
பலதீ பிகையே புட்ப பந்தமே
சூரிய நாமச் சோதிட கணிதமே
சீபதி பத்ததி சிற்பரத் நாகரம்
வைத்ய ரத்ந வசன பூஷணம்
மச்ச சாஸ்திரம் வரகன்யாப் பொருத்தம்
முதலிய நூல்களை முன்வெளி யிட்டவர்
தரும புரத்துத் தகைசான் றொளிரும்
திருமிகு வித்வ சிகாமணி தன்னால்
வைத்திய ரத்நமென் மாண்பெயர் பூண்டோர்
அரசாங் கத்தின் அருமதிப் பெய்தினோர்
கலையுணர் புலவர் கவின்பெரி யோரால்
சோதிட பாஸ்கர னெனும் பெயர் சூடினர்
மீனாட்சி நாம மேவுறப் பெற்ற
ஔஷதா லயத்தை யருமையி னமைத்தோர்
தவவில் மாந்தர் தண்டா துறையும்
நிறங்கிளர் பறங்கிப் பேட்டையி னிலவுவோர்
பெட்புறு கிருஷ்ண சாமிவேள் நட்பினர்
அறங்கரை கொள்கை திறம்பட வுடையோர்
கற்றவர் குழுவிற் கவினுற விளங்குவோர்
நற்றவர் தமக்கு நற்பணி புரிவோர்
நாளு நாளுங் கேள்பெருக் கிடுவோர்
கோளுநா ளுஞ்செய் குறிபல கூறுவோர்
மறுமையு மிம்மையு மாண்பய னெய்துவோர்
ஆகிய குமர சாமியா மண்ணல்
என்றறிந் தின்புற வுணர்க
நன்றறி யுலகில் நின்றது புகழே.

திருச்சிற்றம்பலம்.

# சிறப்புப் பாயிரம்.

இது
பறங்கிப்பேட்டை இயற்றமிழ்ப் பிரபந்த வித்வ ஸ்ரீமாந்
திருநெறித் தமிழ்
ஆ. நாராயணசாமிப் பிள்ளை அவர்களால்
இயற்றப்பெற்றது.

உலகமுன் றினுந்தன் சோதி ஒளிர்தரும் கமலப் புத்தேள்
இலகவா ழியசோ ளொன்பான் இவர்வழி தொடரு மற்றை
நிலவுமாக் கோள்கள் தம்மால் நிறுவிய பலன்கள் சொல்லும்
அலகின்மா மறைகள் தம்முள் அறிந்ததாக் கொள்ப மாதோ. 1

மாதவத் துருவாய் மண்ணின் மன்னவ னாக வெங்கும்
பேதமற் றுணர வந்த பெரியன்கல் யாண வர்மன்
மேதகு பிரகத் சாத கத்தினை விரித்த சீர்சால்
போதக மாக நன்கு பொலிதர பொலிந்த மெய்நூல். 2

மேன்மையிற் புலவ ரியற்ற விளங்கிய பலன்றேர் நூலாய்
பான்மைபெற் றுயரும் சாரா வளியெனப் பகர்பேர் போற்ற
தேன்மலி வடநூ லைம்பான் சேர்த்திடு மீரி ரண்டாய்
மான்மலி மனத்தி னோடு வழங்கினன் வைய முய்ய. 3

காண்டகு முறையின் மேன்மை கவின்தர விரித்த நூலை
மாண்டகு வைத்ய னாதன் மதிமிகு விஸ்வனாதன்
பூண்டகு முதவி பெற்று பொறித்தவன் புனித ஞான
ஆண்டலைக் கொடியு யர்த்த அண்ணல்பா லன்பு மிக்கோன். 4

சோதிட நூல்கட் கெல்லாம் துணிபுடைப் பயனாக் கொள்ப
மாதிட னமைந்த சாரா வளியெனுந் தலைநூல் வையம்
ஓதிட வரைந்து நாம்கண் டுணருமாப் பொருளாய்த் தந்த
நாதிற னுடைய நண்பன் நன்மையே பயக்குஞ் சீரோன். 5

அங்கமா றதனுண் மேன்மை அமைந்தநன் னோக்க மாகுந்
துங்கமார் சோதி டத்தின் துறைகண்டு துணிந்த வாற்றல்
தங்குவான் புட்ப பந்தம் தகுபல தீபி கைச்சீர்
செங்கதி ரோன்சித் தாந்தம் சிற்பமாத் திகழு நூலும். 6

திருக்கணி தஞ்சொல் மாண்பின் சீபதி பத்த திப்பேர்
பெருக்கணி வகுத்த பெற்றி பெருமைசார் நீல கண்டம்
இருக்கணி வைத்ய ரத்நம் இலங்குமா யாதி மற்றை
வருக்கநற் றெய்வ நூலும் வகைமையாற் பதித்த செல்வன். 7

சாத்திரக் கடல்க டந்த சதுரன்சொல் வன்மை வாய்மை
மாத்திரம் படைத்த நண்பன் மயன்வழி வழியாம் விஸ்வ
கோத்திர முதித்த கோமான் குணங்கொளே காம்ப ரன்சேய்
ஆத்தநன் புறுகா மாட்சி அடிமலர் சிந்தை கொண்டோன். 8

அம்பிகைக் கொருசேய் வேதம் அண்ண லுக் குணர்த்து ஞான
நம்பனுக் கினிய வன்பால் நற்றமிழ்க் கடல்ப டிந்து
செம்பொருள் பயக்குந் தூய சிற்பமா மயனூ லாலும்
இம்பர்சோ திடத்தால் தேற்றம் எய்துமாத் தகைமை யானும். 9

தெள்ளிய முறையிற் காண தெரித்திடும் கணிதந் தேர்ந்து
உள்ளிய வழிமேற் கொண்டே உரிமையிற் குணித்துக் காட்டும்
வள்ளியோன் நெறியிற் பேத வழக்குரை கடந்து மேன்மை
ஒள்ளிய முறையிற் காண உணர்த்துபாஸ் கரனு மாவான். 10

இயங்கிய நாடி யானும் இசைந்தவன் நோய்கண் டாய்ந்து
வயங்கிய வகையுங் காட்டி மருத்துவ முறையின் மாற்றும்
சயங்கிளர் வைத்ய மேன்மை சார்ந்ததில் வைத்ய ரத்ன
நயங்கிளர் பெயரா லோங்கும் பிஷங்மணி நாமம் பெற்றோன். 11

மருக்கிளர் துளப மாலின் மருகனை மறவாச் சிந்தை
பெருக்கலிற் குமர னவான் பெற்றிமை செறிந்த மேன்மை
உருக்கிளர் செல்வம் பூத்தோன் உணர்வினும் செல்வ மல்க
திருக்கிளர் குமார சாமிச் செந்தமிழ்ப் புலவ ரேறே. 12

### நேரிசை வெண்பா.

உயர்மறையா றங்கத் தொளிர்சோ திடமாம்
மயர்வறுசீர் சாரா வளியே—இயன்மொழியால்
தந்துபுகழ் பெற்ற தகுசீர் குமரசாமி
கந்தனடி சிந்தனையிற் கண்டு. 13

சிவமயம்.

# சிறப்புப் பாயிரம்.

இது
திருக்கைலாய பரம்பரைத் தருமபுர ஆதீன
வித்வ சிகாமணி

## ஸ்ரீ ப. அ. முத்துத்தாண்டவராயப் பிள்ளை

அவர்களால் இயற்றப் பெற்ற

## பிரகடன ஆசிரியர் பிரபாவம்.

குமர சுவாமி குருபறங்கிப் பேட்டைக்
குமர சுவாமி குருநூல் — அமரர்தன்
வந்தரியை மானவிம் மாந்தர்க் குதவுகின்றான்
சுந்தரியைப் போற்றித் துதித்து. 1

வேதாங்கங் கண்கணிதம் வேதத் துபவேதம்
மீதாங்கம் பாவும் வியன்சிகிச்சை — ஈதாம்
கலையுணர்ந்து சொற்றான் கவிதான் நிலைத்தான்
நிலையுணர்ந்து செல்வம் நிறைந்து. 2

பேச்சாரி யத்தின் பெருநூலும் முத்தமிழின்
ஏச்சாரி யம்பா வியனூலும் — ஆச்சாரி
யாரறிந்து விள்ளா வமயத்திப் பூதலத்து
யாரறிந்து கொள்வார் இசை. 3

உவணக்கார் மேனி யொருவன் செயல்போல்
சுவணக்கார் இன்னோன் சுரரைச்—சிவணப்
புரக்கின்றான் மாந்தர் புரத்தைக் கடுநோய்
கரக்கின்றான் கண்ணுற் கணித்து. 4

---

1. குரு = கேழ், தன்வந்தரி = திருமாலின் அமிசமாகிய தேவவைத்தியர். 2. கம்பாவும் = தேவருலகத்தில் பரவுகின்ற. 3. பேச்சு = புகழ் ஏச்சு—யாரும் இயம்பா.

4. உவணன் - கருடன். சுவணக்கார் - கம்மியரில் ஒரு பகுப்பினர் சிவண - ஒப்ப. புரத்தை - சரீரத்தை.

* c

ஏகாம் பரன்சத்தி யேந்துகர னாற்பெற்றான்
ஏகாம் பரன்சத்தி யீதலால்—ஏகாம்
பரன்றந்த பாவைப் பரப்பினான் பாரில்
முரன்றந்த மீர்ந்தான் முனம். 5

சீதனமும் கோதனமும் செல்வத் தனமுதலா
மீதனமுங்கொண்டு மிளிர்குமரன்—ஓதனத்தை
உண்ணா தவன்பருக வுண்மருந்தை நல்கியுணப்
பண்ணா தவன்கருதிப் பார். 6

ஆறிரண்டு செங்கரத்தெம் மண்ணல் திருவருளால்
ஆறிரண்டு பைந்தமிழ்நூல் அச்சிட்டான்—பாறிண்ட
தண்ணடையின் சொற்குமர சாமிக் குரிசில்சொல்
தண்ணடையின் பெற்றான் தனம். 7

சார்ந்தநூல் ஈங்கிவற்றில் சாரா வளிப்பனுவல்
தேர்ந்தகீர் வாணத் திருமொழியில்—ஆர்ந்தசீர்க்
கல்யாண மெய்ப்புலவர் காட்சியுறத் தந்தளித்தான்
கல்யாண வர்மக் கவி. 8

சீரா வளியுலவுஞ் சீர்தலத்துச் செந்தமிழின்
சாரா வளியிந்நூல் தந்தியற்றும்—பேராளன்
நற்குமர சாமியெனும் ஞானபரன் தன்னைப்
பொற்குமரன் போற்றும் புவி. 9

தந்திரமு மந்திரமு சாருமுப தேசமுமுன்
தந்திரமாக் கொள்குமர சாமிதனை முந்திழித்துத்
தூற்றித் திரிபொல்லார் தூடிப்பர் காணார்சீர்
சாற்றித் திரிநல்லார் சார்பு 10

---

5. ஏகாம்பரன் - தந்தையின் பெயர். சத்தி - வேலாயுதம். ஏகாம்பரன் - தனிமாவின் அடியில் உள்ளார். சத்தி - ஸ்ரீகாமாட்சி யம்மையாரது. ஏகாம்பரன் - ஒப்பற்ற சிதாகாசத்தார். முரனுடைய - பற்களைத் தகர்த்த திருமாலின் அமிசராகிய தன்வந்தரியின் சந்நிதியில்.

6. உள்மருந்தை - பண்ணுகின்ற சூரியனை.

7. பால்திரண்ட-இன்சொல் தண் அடை இன்பமுள்ள அடை மொழிகளோடுகூடிய அல்லது நடை பாஷையின் ரீதி சொல் தண்ணடை - நெல் வயல்.

வாழியர் சாரா வளியாம் பெரும்பனுவல்
வாழியார் அச்சிட்ட மாந்தர்தாம்—வாழியர்
கற்குமரன் நேயர் கலிகடிந்த சித்தாந்த
நற்குமர சாமி நயந்து. 11

வேறு.

பிறங்குதிரை கறங்குமொலி பறங்கிப் பேட்டைப்
பெருந்தவத்துப் புவித்தலத்துப் பிறந்த பாலன்
மறங்குறைக்கும் வேற்றடக்கை மகிப னெம்மான்
வழங்கருளான் புவனியுய்ய வந்த சீலன்
அறங்குதிகொள் விசுவகுலத் தந்த ணாளன்
அருநூல்கள் பலகற்று மாட்சி யுற்றுத்
திறங்குலவு மறிஞருக்கும் பாவா ணற்குஞ்
சீர்மையுற வச்சியற்றித் தந்த நூல்கள். 12

இலகுபல தீபிகைநற் புட்ப பந்தம்
ஏற்குஞ்சோ திடகணிதம் நீல கண்டந்
திலகமெனுஞ் சீபதிதன் ஜாத கர்மம்
சிற்பாத்தி ஞகாமா யாதி மச்சம்
பலகலையுள் சித்தாந்த கணிதம் பாரில்
பாரியையின் பொருத்தம்வைத் தியமாநன்னூல்
உலகுபுகழ் பொற்சாரா வளியா மிந்நூல்
உவந்தறிவோர் சீரடைந்து வாழ்வர் மாதோ. 13

வேறு.

இன்னும் பலநூல் இவர்தாம் இயற்றி
மன்னும் புலமையின் மகிழ்ந்து வாழியரே. 14

SRI

# INTRODUCTION

BY


## N. R. TIRUVENKATACHARIAR B. A.

*Astrologer and Journalist, Sri Kasyapa Asram 260, Mint Street, Madras.*


SARAVALI is an extensive work in Sanskrit on predictive astrology giving information certainly more copious and valuable than can be found in any of the current astrological works. It was written by Sri Kalyana Varman who seems to have come after Varahamihira to whom there is a reference in the 1st Stanza of the 2nd chapter. Extending over 2541 stanzas, SARAVALI is nearly six times larger than Brihatjathaka which gives only 409 stanzas. Varahamihira is quoted as a celebrated court astrologer and astronomer of king Vikramarka who is generally credited to have flourished before 56. B. C. in whose name the Vikramasaha runs as 1995, for the current year. Batotpala the illustrious commentator of Varahamihira's astrological works, makes very large indents upon Kalyanavarma's SARAVALI in his commentaries called " Chintamani." Vaidhyanatha Dikshithar, the learned compiler of Jathaka Parijatha expressly states that his astrological production is but an epitome of the great scientific work Saravali, vide stanza 3 of chapter I of Jathaka Parijatha Sri Manthreswara another well known compiler of ancient works on astrology also makes a clear reference to the greatness of SARAVALI in stanza 63. of chapter xx of Phaladeepika ; the first half of this stanza in English translation runas follows :—" In the case of a nativity one ought to guess at the effects after a reference to Saravali, Hora Sastra and the Naxatra Dhasa." The supreme significance of Saravali as a remarkable work on predictive astrology has thus become quite evident from the emphasis made about it by such erudite scholars as Batotpala, Vaidhyanatha Dikshitha and sri Manthreswara.

Batotpala definitely gives the date of completing his commentaries as the 5th of the bright half of the lunar month chaira in the saha year 888. Batotpala thus observes at the con-

clusion of his commentaries "chaitra masasya Panchamyan, Sutayam Guruvasare, Vasuashta shtamithe sake, antoyaru Virutirmay," but he does not specify whether the saka referred to in this sloka is Salivahan or Vikrama. But late Professor Suryanarayana Rao of Bangalore discussing the age of Batotpala in the 22nd volume of his Astrological Magazine conclusively proves it to be Vikrama saha only. So Kalyanaverman's age though not given in his books has to be fixed sometime before Batotpala and after Varahamihira. Batotpala finished his commentaries called Chintamani in 888 Vikrama saha and seems to have lived about 1107 years before now. So Varahamihira lived about 56 B. C. and Batotpala about 1938—1107=831. A. D. Kalyanavarman's age is to be located somewhere in this long interval of time. That he lived about 500 A. D. seems to be near the truth in the light of the conclusions arrived at here.

Now, a few words about the use and value of astrology will not be out of place. Kalyanavarman himself states in chapter II of his work thus :—" Artharjanas Sahaya Purushanam apadhameve Pothaha, yathra kalae Manthree Jathaka mapahaya nasthys Paraha." " The sloka when translated will run thus :—There is nothing in the world like a horoscope to help men in the acquisition of wealth, to save them like a boat in a sea of troubles and to serve them as a guide in their journeys."

Karmarjetham Poorva Bavae Sadhadhi Yaththasya Pakthim Samabivyanakthi. The meaning of this sloka found in Brihatjathaka is thus :—Whatever has been acquired by a person through his karma—whether good or bad done in previous births, the hora now reveals its effects. The Late Professor B. Suryanarayana Row of Bangalore states in his English translation of Sarvartha chintamani as follows :—" The theory of past and rebirths must be accepted here as proved and all the astrological assumptions are based upon this theory (the theory of karma)...

The impressions of sound are always stored in our favour or against us as we fulfil or break our promises. Phonograph gives a distinct explanation that what we speak or promise is recorded in the ethereal space. When the dissolution of the body is set in, the finer and more spiritual portion goes away

with these ethereal records and has to account for it in the future births for the various promises it has to its credit. When the molecules join together and the integrating processes begin to produce human body, they do so with the previous liabilities attached to them. A knowledge of what those impressions were in the previous births and how they work now is clearly indicated to us by the rays of the various planets expressed in the technical language of the astrological symbols."

The following words enable us to feel the indispensability of knowledge of astrology as an invaluable guidance in our life. "Astrology enables one to probe into the womb of futurity, warns man of the pit-falls that threaten him in his career, protects him from surprises and enables him to meet those contingencies unabashed and undaunted...............Even if a person cannot altogether avert an impending calamity, he may either mitigate its rigour or face it calmly..............It is the karmaic result at the time of the birth of a native that is unfolded by astrology from the planetary positions.............. and there is ample warrant in the Sastras for the soul or Atman exerting and striving itself and thereby asserting its strength to overcome the evils prognosticated by the positions of the celestial bodies at the time of his nativity. Otherwise man would be an abjectly helpless and purposeless being, a pawn and a puppet, an automaton that walks along the destined line." It behoves us, therefore, to develop the Brahma Shakthi latent in us by adopting the necessary remedial measures such as Japa, Homa and Dhana to mitigate the intensity of suffering, if not to completely avert it.

Thus astrology, much less philosophy, never subscribes in the least to the fatalistic theory of karma. In short it reveals to us the forces that help or retard our progress and enables us to estimate with some precision the amount of exertion to put forth to attain the summum bonum of life.

Sriman S. A. Kumaraswami Achariar of Porto-Novo has laid the Tamil Public under a deep debt of gratitude by publishing a Tamil rendering of this great and useful work on astrology. He has already published a Tamil translation of Manthres

wara's Phaladeepika referred to in the beginning of this introduction. He has got to his credit publications of a Tamil rendering of Sripathy's principles and Manthreswar's Drigganitha, Important works on mathematical astrology of the ancient Hindus. He has got, in view, if sufficient encouragement is forth-coming, publication of another compilation entitled "Satayoga manjari." I am sure the public will accord its hearty support to this and future publications of his.

I sincerely bid him god-speed in the successful materialisation of his ambitions.

SRI KASYAPA ASRAM,
260, *Mint St.,Madras*
18-3-1938

(Sd) N.R. THIRUVENKATA CHARIAR, B.A.,
*Astrologer and Journalist.*

ஸ்ரீ

# சாராவளி

## முன்னுரை.

(ஆங்கிலத்திலிருக்கும் விஷயங்களின் சாராம்சம்)

சமஸ்கிருதத்திலுள்ள ஜோதிஷ நூல்கள் எல்லாவற்றிலும் சாராவளியே ஜாதக பலித பாகத்தைத் தழுவிய விஷயங்களை மிகவும் அழகாகப் போதிக்கிறது. இந்நூலில் எந்தப் புஸ்தகத்தைக் காட்டிலும் அதிகமான விஷயங்கள் அடங்கி இருக்கின்றன. இதன் ஆசிரியர் ஸ்ரீ கல்யாணவர்மன். அவர் ப்ரஹத் ஜாதக ஆசிரியரான வராஹ மிஹிராசாரியார் காலத்திற்குப்பிறகு இருந்திருக்க வேண்டுமென்று இந்நூல் இரண்டாவது அத்தியாயத்தில் முதல் சுலோகத்தில் வராஹ மிஹிரரைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறதினின்றும் ஊகிக்கலாம். ப்ரஹத் ஜாதகத்தில் ஜ்யோதிர் விஷயங்களை 409 சுலோகங்களுள் கூறப்பட்டிருக்கின்றன. சாராவளியில் 2541 சுலோகங்கள் இருப்பதால் இது ப்ரஹத் ஜாதகத்தைப் போல் ஆறுமடங்கு பெரியது. வராஹமிஹிரர் விக்கிரமார்க்க அரசனுடைய சமஸ்தான ஜோதிஷ, வான சாஸ்திரியாக இருந்தாரென்றும், விக்கிர மார்க்கன் கி. மு. 56-க்கு முன் இருந்தாரென்றும் சொல்லப்படுகிறது. வராஹமிஹிராசாரியாருடைய ப்ரஹத்ஜாதகம் முதலிய நூல்களுக்குவியாக்கியானம் பண்ணி இருக்கும் பட்டோத் பலர் என்ற மஹான் தம்முடைய சிந்தாமணி என்று பெயரிடப்பட்ட வியாக்யான நூல்களில் ஸ்ரீ கல்யாணவர்மனுடைய சாராவளியை ஆதாரமாகக் கொண்டு ஜ்யோதிர் விஷயங்களை விளக்கி யிருக்கிறார். ஜாதக பாரிஜாதம் என்ற ஜோதிஷ நூலை இயற்றிய வைத்தியநாத தீக்ஷதர் தம்முடைய பாரிஜாதம் சாராவளியின் சங்கிரஹமே தான் என்று ஜாதக பாரிஜாதம் முதலாவது அத்தியாயத்தில் மூன்றாவது சுலோகத்தில் தெரிவிக்கிறார். ஸ்ரீ மந்திரேஸ்வரர் என்ற ஒரு பெரிய ஜோதிஷாசாரியாரவர்களும் தம்மால் இயற்றப்பட்ட பலதீபிகை 20-ஆவது அத்தியாயம் 63-ஆவது சுலோகத்தில் ஜாதக பலன்களை நிர்ணயம் பண்ணுவதற்குச் சாராவளியை அவசியம் படித்தறிய வேண்டுமென உபதேசிக்கிறார்.

சிந்தாமணி ஆசிரியரான பட்டோத்பலர், ஜாதக பாரிஜாதத்தின் ஆசிரியரான வைத்தியநாத தீக்ஷதர், பலதீபிகையின் ஆசிரியரான மந்திரேஸ்வரர் முதலான இம்மஹான்களே சாராவளியைப் புகழ்ந்திருப்பதினின்றும் சாராவளி ஜாதக பலன்களை உபதேசிக்கும் நூல்களுள் மிகவும் சிறந்தது என்பது நன்கு விளங்குகிறது.

பட்டோத்பலர் தம்முடைய சிந்தாமணி யென்ற ஜோதிஷ வியாக்யான நூலை 888-ஆவது சகாப்தம் சைத்ரமீ சுக்லபக்ஷம் பஞ்சமி திதியும் குருவாரமுங் கூடின தினத்தில் எழுதி முடித்ததாகச் சிந்தாமணியின் முடிவு சுலோகத்தில் சொல்லுகிறார். ஆயினும், 888-ஆவது சகம் விக்கிரம-சாலிவாகன மாகிய இவ்விரு சகங்களுள் எது என்பதைக் குறிப்பிடவில்லை. ஆயினும் புரொபசர் பெங்களூர் சூரியநாராயண ராவ் தம்முடைய ஜோதிஷ சஞ்சிகை 22-ஆவது வால்யூமில் பலகாரணங்களைக் காண்பித்து விக்கிரம சகம் 888 என்றே சித்தாந்தப்படுத்தி யிருக்கின்றார். ஆகையினால் ஸ்ரீ கல்யாணவர்மன் வராஹமிஹிராசாரியார் காலத்திற்குப் பின்னும் பட்டோத்பலர் காலத்திற்கு முன்னும் இருந்திருக்க வேண்டுமெனச் சரித்திர ஆராய்ச்சிக் காரர்கள் சொல்லுகிறார்கள். நடப்பு இங்கிலீஷ் வருஷம் 1938-க்கு விக்கிரம சகம் 1995 ஆக ஆவதால் பட்டோத்பலருடைய காலம் கி. பி. 831 என்று தெரிகிறது. விக்கிரம சகம் 888 லிருந்து நடப்பு விக்கிரம சகம் 1995 வரையில் 1107 வருஷம் சென்றிருப்பதால் இங்கிலீஷ் வருஷம் 1938-லிருந்து 1107-ஐக் கழிக்க இங்கிலீஷ் வருஷம் கி. பி. 831 என்று அறிகிறோம். இந்த 831-ஆவது வருஷமே பட்டோத்பலருடைய காலம். வராஹமிஹிராசாரியார் கி. மு. 56-ஆவது வருஷத்தில் இருந்தா ரென்பது சரித்திர ஆராய்ச்சிக்காரர்களின் துணிபு. ஆகையினால் கல்யாணவர்மன் வராஹமிஹிரர் காலமான கி. மு. 56-ஆவது வருஷத்திற்கும் பட்டோத்பலர் காலமான கி. பி. 831-ஆவது வருஷத்திற்கும் இடைக்காலத்தில் இருந்திருக்க வேண்டும். கி. பி. 500-ஆவது வருஷம் கல்யாணவர்மன் இருந்திருக்கவேண்டுமென்று சரித்திர ஆராய்ச்சிக் காரர்கள் முடிவு சொல்லியிருப்பது இங்கு காட்டிய காரணங்களினால் நியாயமென ஒப்புக்கொள்ள வேண்டியதே.

ஜோதிஷ சாஸ்திரத்தின் பயன்களை இங்கு கொஞ்சம் கவனிப்போம். கல்யாணவர்மன் சொல்லுகிறதாவது :—“ அர்த்தார்ஜனே சஹாய புருஷாணும் ஆபத்தார்ணவே போத : யாத்ராகாலே மந்த்ரி ஜாதக மபஹாய நாஸ்த்யபர :” அதாவது புருஷர்களுக்குப் பொருள்

தேடும் விஷயத்தில் உதவிக் கருவியாகவும், ஆபத்தாகிற கடலைத் தாண்டும் விஷயத்தில் கப்பலாகவும், யாத்ரா காலங்களில் மந்திரியாகவும் இருக்கக் கூடியது ஜாதகமே தவிர, வேறொன்றாலும் இப் பிரயோசனங்களை அடைவதற்கு முடியாதென்பது.

" கர்மார்ஜிதம் பூர்வபவே சதாதீ யத்தஸ்ய
பக்திம் சமபிவ்யனக்தி :"

அஃதாவது முற்பிறவியில் செய்த சுபாசுப கர்மங்களின் பலன்களை இந்நூல் நன்கு விளக்குகிற தென்பது. சாதகாலங்கார ஆசிரியரும்,

" குறித்திடுசா தகமென்ப தவரவர்தம் வினையின்
குணங்களறிந் தயன்விதித்த கொள்கையுள தன்றோ"

என்று சொல்லியிருப்பதையுங் காண்க. நாம் எதைப் பேசுகிறோமோ அதையே மறுபடியும் எவ்வளவு காலம் கழித்தும் திரும்பவும் கேட்கலாம் என்று தற்காலத்தில் கிராமபோன் (Gramophone) முதலான கருவிகள் மூலம் அறிகிறோம். அதுபோலவே நாம் அந்தரங்கத்தில் எவ்வளவு குற்றம் குறைகளுடன் இருக்கிறோமோ அவைகளெல்லாம் இயற்கையாகவே சப்தமானது கிராமபோன் பிளேட்டில் வரையப்படுகிறதுபோல் அவ்வப்பொழுது நம்மைச் சுற்றியுள்ள ஆகாயத்தில் அணு அணுவாக அதன்படியே பதிந்துவிடுகிறது. சரீரம் அழிந்தாலும் இவைகள் ஜீவன் மறுபடியும் வேறொரு சரீரத்தினுள் அடைபடும் பொழுது, அஃதாவது மறுபடியும் இப்பூமியில் பிறக்கும்பொழுது, இதனுடன் முற்பிறவியில் இருந்தகுற்றம் குறைகளுடனேயே சேர்ந்து பிறக்கிறது. அக்குற்றம் குறைகளும் அவ்வவற்றிற்குரிய சுக துக்கமும் இஜ்ஜன்மத்திலும் மாறி மாறி வருகிறதென்றும், அவ்வித சுகதுக்கங்கள் எவையெவை யென்பதையே கிரகஸ்திதிமூலம் நாம் அறியக்கூடுமென்று காலஞ்சென்ற புரொபசர் சூரிய நாராயண ராவ் தம்முடைய சர்வார்த்த சிந்தாமணி ஆங்கில மொழி பெயர்ப்பில் விளக்கிக் காட்டியிருக்கின்றார்.

நவக்கிரஹ ஸ்வரூபக் ஞானத்தினால் நமது எதிர்கால பலாபலன்களை அறிந்துகொள்ளலாம். வரக்கூடியது கஷ்டமாயினுங்கூட அதை நாம் முன்னதாகவே தெரிந்து கொண்டால் பதறாமல் அவைகளை நீக்க முடியாமற் போனாலும் எதிர்பார்த்தபடியே தானே நேரிட்டது என்று ஒருவித சாந்தியுடன் இருக்கலாம். அல்லது சாந்தி பரிகாரங்களினால் கஷ்டத்தைப் பூராவும் நீக்கக் கூடுவதற்கு இல்லையேயாயினும் குறைத்துக்கொள்ளவாவது செய்யலாம்.

இஜ்ஜட சரீரத்திற்குள் இருக்கும் ஜீவனுக்குச் சுதந்தரமுண்டென்றும், அச்சுதந்தரம் இருக்கிறதனலேயே இதற்குப் பாப புண்ணியங்கள் ஏற்பட்டதென்றும், ஆதலால் தனக்கு இருக்கும் சுதந்தரத்தைக்கொண்டே சாந்தி பரிகாரங்களினல் துக்கநிவர்த்தியைப் பண்ணிக்கொள்ள வேண்டுமென்பது ஜோதிஷ சாஸ்திரத்தின் கருத்தேயாம். இப்படி ஜீவனுக்கு ஸ்வாதந்திரியம் இல்லையென்றால் ஜாதக பரிசீலனை பண்ணவேண்டிய அவசியமே இல்லையன்றோ. ஆகையினல் நம்மிடமிருக்கும் தெய்வ சக்தியாகிய ப்ரம சக்தியை ஜெப ஹோம தானதிகளால் விருத்திபண்ணித் துக்க நிவர்த்தியையும் சுக விருத்தியையும் அடையக்கூடும். அடையவேண்டுமென்பதுமஹரிஷிகளின்உபதேசம்.

ஆகையினல் ஜோதிட சாஸ்திரமானது நமக்கு இஹத்தில் பூர்வ வினையின் பயனுக நிகழக்கூடிய சுக துக்கத்தின் தன்மையையும் அதற்காக நாம் அநுஷ்டிக்க வேண்டிய நிவர்த்தி மார்க்கத்தையும் போதிக்கிறது. இக் கருத்தையே சாதகாலங்கார ஆசிரியரும் பின் வரும் செய்யுள்மூலம் வெளியிட்டிருக்கிறதையுங் காண்க.

"குறித்திடுசா தகமென்ப தவரவர் வினையின்
குணங்களறிந் தயன்விதித்த கொள்கையுள தன்றோ
மறித்துமவ ரவர்தமக்கு வரும்பலபா வகத்தின்
வகையறிந்து பெரியோர்கள் வழுத்திய சொல்லதனைப்
பிறித்தறிந்து சுபம்வருமென் றுளமகிழ்ச்சி பொங்கப்
பின்னசுபம் வரிலதற்குப் பிரீதியென்கொ லென்று
நெறித்தரும சாஸ்திரத்தின் விதிசாந்தி செய்தே
நிறைந்தசுபம் பெறுவதற்கே நிகழ்த்தினர்சா தகமே."

பறங்கிப்பேட்டை S. A. குமாரஸ்வாமி ஆச்சாரியாரவர்கள் இவ்வளவு பெருமை பொருந்திய சாராவளி என்னும் வடமொழியிலிருக்கும் ஜோதிஷ நூலைத் தமிழில் மொழிபெயர்த்து பிரசுரம் பண்ணியிருப்பதால் தமிழுலகம் அவருக்கு என்றும் நன்றி பாராட்டுமென்பதில் ஐயமில்லை. அவர் மந்திரேஸ்வரருடைய பல தீபிகை, மந்திரேஸ்வரர் திருக்கணிதம், ஸ்ரீபதி ஆகிய மூன்று அபூர்வமான வடமொழி ஜோதிஷ நூல்களைச் செந்தமிழில் தமிழுலகுக்குப் பயன்படுமாறு பிரசுரம் பண்ணியுள்ளார். சதயோக மஞ்சரி என்று பெயர் கொண்ட ஒரு ஜோதிஷ நூலையும் சீக்கிரத்திலேயே வெளியிடப் போகிறர். இவ்வரிய சேவையைத் தமிழுலகம் அன்புடன் ஏற்குமென்பது எனது துணிபு.

அவருடைய முயற்சிகளுக்குரிய பலன்களைச் சீக்கிரமே பகவான் அருள்புரியவேண்டுமாய் அன்புடன் அவனையே பிரார்த்திக்கின்றேன்.

ஸ்ரீகாஸ்யபாஸ்ரமம்,
260, தங்கசாலை வீதி,
சென்னை. 18-3-1938.

நீ. ரே. திருவேங்கடாசாரியார், B.A.
ஜோதிஷர்.

## FOREWORD

BY

## RAO SAHIB C. S. SRINIVASACHARI, M. A.

*Professor and Head of the department of History and Politics, Annamalai University, Annamalai Nagar.*

It gives me great pleasure to write a foreword to the learned Treatises of Dwibhasha Siromani Pandithamani Vidwan M. R. Ry. S. A. Kumaraswami Achariar Avl. of Porto Novo. His quiet unostentatious and valuable devotion to the study of scientific astrology based on a careful interpretation of ancient Indian works, carried through nearly three decades, has given to the public of South India several valuable publications :— The Paladeepikai, Sripathy Jathaka Karma Baddhathee, The Surya Siddhantha Jyotisha Ganitba, The Siddhanta Drigganitha Silpa Rathnakaram, Kalyana Varman's SARAVALI (rendered into Tamil) and other works which greatly help the study of scientific astrology on indigenous lines. He has taken considerable pains in collecting the court material for his different works and has brought to bear an immense and varied mass of information culled from modern astronomical and mathematical calculations on his conclusions.

The prefatory notices written to his publications are a source of information important alike to the lay student as well as to the professed scholar of the Indian astrological science. The original manuscripts or works like the Saravali of Kalyana Varma were very difficult of access and were available only in partial chapters to the student besides showing variant readings difficult of reconciling together. Our author was helped in the translation of this work by Bramasri P. A. Visvanatha Bharathi of Shencottah and Panditha Stapathi Bramasri M. Vaithinatha Stapathi of Keela Sevalpatti.

The work contains 54 chapters and 2541 slokas ; and the great length of the book has now been made available to Tamil Scholars by the selfless and sacrificing toil of Pandit S. A. KUMARASWAMI ACHARIAR AVL. The Pandit's humility and

gentle temper are as remarkable as the width and intensity of his learning and the greatness of his devotion to it.

I am sure that his valuable services fully deserve every kind of encouragement at the hands of patrons of learning and conservers of our ancient culture. He has devoted himself to the exposition of the hidden treasures of one of our most valuable and least known branches of knowledge. He has imported to his works thoroughness and accuracy that call for high praise and a fullness of treatment that is most commendable. It is such type of men that form the most trusted conservers and expositors of our traditional and buried knowledge.

The duty of encouraging such scholars is a most salutary and useful one. M. R. Ry. S. A. Kumaraswami Achariar has deserved well of the Tamil country and of the financial help that can be afforded to him by our philanthropists.

RAO SAHIB
(Sd.) C. S. SRINIVASACHARI, M. A.
*Professor of History and Politics,*
*Annamalai University.*

ANNAMALAI NAGAR
12-8-1938.

ஸ்ரீ

# நூன்முகம்.

எனது மதிப்பிற்குரிய நண்பர் பறங்கிப்பேட்டை துவிபாஷா சிரோமணி பண்டிதமணி வித்வான் ஸ்ரீ S. A. குமாரஸ்வாமி ஆச்சாரியார் அவர்களின் ஆராய்ச்சி யுரைகட்கு இந்த முகவுரை யெழுதுவது எனக்குப் பெருமை யளிக்கிறது. சென்ற முப்பது வருஷமாக அன்னார் அடக்கமும் ஆற்றலும் தேர்ந்த திறனும் நிறைந்த தம் பாண்டித்வத்தினால் தென்னிந்திய ஆராய்ச்சியாள ருலகிற்கு அளித்திருக்கும் அரிய சோதிட நூல்கள் பல. பலதீபிகை, ஸ்ரீபதி ஜாதக கர்மபத்ததி, ஸூர்ய ஸித்தாந்த ஜ்யோதிஷ கணிதம், ஸ்ரீ ஸித்தாந்த திருக்கணிதம், சில்பரத்னகரம், கல்யாண வர்மா இயற்றிய ஸாராவளி (தமிழ் மொழி பெயர்ப்பு) முதலிய பல அரிய சோதிட நூல்கள் இவருடைய நன் முயற்சியினாலேயே வெளிவர ஏதுவாயின. பண்டைய இந்திய சோதிட சாஸ்திரத்தைச் சாஸ்திர பூர்வமாகக் கற்க விரும்பும் மாணவர்கட்கு இவ்வெளியீடுகள் பெரிதும் பயன்படும். தாமெடுத்துக் கொண்ட பொருளைப்பற்றி பல கிரந்தங்களிலிருந்தும் ஆதாரங்களைத் திரட்ட ஆசிரியர் எடுத்துக்கொண்டிருக்கும் சிரமம் ஒரு புறமிருக்க நவீன மேல்நாட்டு வான சாஸ்திர கணித சாஸ்திரங்களிலிருந்து மேற்கோள்கள் காட்டி தம்முடைய சித்தாந்தங்களை நிலைநிறுத்த அவர் முயற்சித்திருப்பது போற்றற்குரியது.

மேற்கூறிய ஆராய்ச்சி நூல்களுக்கு ஸ்ரீ ஆச்சாரியார் அவர்கள் எழுதியிருக்கும் முன்னுரைகள் படித்தவர்களுக்கே யன்றி பாமாருக்கும் பயன்படத்தக்கன. கல்யாண வர்மரின் ஸாராவளி போன்ற சில நூல்களின் கையெழுத்துப் பிரதிகள் கிடைப்பதே இக்காலத்தில் அரிதாயிருக்கிறது. கிடைக்கும் சில பகுதிகளிலும் பாட பேதங்கள் மலிந்து கிடக்கின்றன. ஸாராவளி மட்டும் 54 அத்தியாயங்களையும் 2541 சுலோகங்களையும் கொண்டிருக்கிறது. எனவே இவற்றை முதன் முதலாகத் திரட்டி வெளியிடுவதற்காகத் தமிழுலகம் ஸ்ரீ குமாரஸ்வாமி ஆச்சாரியார் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றது.

அன்னாருடைய அறிவுத்திறனும் ஊக்கமுமேயன்றி அவருடைய தன்னடக்கமும் இனிய பண்பும் பாராட்டத்தக்கன. இந்நூலை மொழி பெயர்ப்பதில் செங்கோட்டை பிரமஸ்ரீ P. A. விஸ்வநாத பாரதி அவர்களும் பண்டித ஸ்தபதி பிரமஸ்ரீ M. வைத்தியநாத ஸ்தபதியுங்கூட ஆசிரியருக்குத் துணைபுரிந்திருக்கின்றார்கள்.

வித்தியார்த்திகளும் நாட்டின் புராதானக் கலையில் ஊக்கமுள்ள அனைவரும் இந்த நூலைப் பிரியத்துடன் வரவேற்பார்கள் என்பதைப் பற்றி எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை. ஸ்ரீ ஆச்சாரியார் நம் தேசத்தின் பண்டையகலைப் பொக்கிஷங்களில் அரியதும், ஆனால் துரதிஷ்டவசமாக அலட்சியம் செய்யப்பட்டதுமான சோதிட சாஸ்திரத்தின் பெருமையைப் பரப்பும் பெருந்தொண்டில் ஈடுபட்டிருக்கிறார். எடுத்துக்கொண்ட விஷயத்தை அரை குறையாகக் கூறி மழுப்பாமல் சுருங்கக்கூறி விளங்கவைக்கும் அருங்குணம் அவரிடம் அமைந்திருக்கின்றது. எழுப்பப்படும் பிரச்சனைகளில் ஒரு அம்சத்தையும் அவர் விளக்காது விடுவதில்லை. மறைந்துபோன மேன்மையான நம் நாகரிகத்திற்குப் புத்துயிரளித்து அதன் பெருமையை வெளியிடும் ஸ்ரீ ஆச்சாரியார் போன்றவர்கட்கு நாம் மிகவும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். பொதுமக்கள் இவர்களை ஆதரித்து ஊக்க வேண்டுவது மிகவும் அவசியம். பரோபகாரிகளும் தமிழ் மக்களும் இந்த உண்மையை உணர்ந்து தம்மாலியன்றவரை ஸ்ரீ ஆச்சாரியாருக்கு ஆதரவளித் துதவவேண்டும். சுபம்.

அண்ணாமலை நகர்,
12-8-1938

**C. S. ஸ்ரீநிவாஸாசாரியார், M. A.,**
சரித்திரப் பேராசிரியர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

## FOREWORD

BY

**S. S. BHARATHI, M.A., B.L.**

*Professor in Tamil, Annamalai University.*

I write this foreword with great pleasure for the Tamil Translation of SARAVALI by Mr. S. A. Kumaraswami Achariar of Porto-Novo. Astrology has been in vogue at all times and in all civilised countries. In India it has had an unbroken history, and has been held in much esteem from the times of the Ithihasas in Sanskrit and the Sangam classics in Tamil. In our country astrology has always been claimed to be an applied science based on the universal laws of astronomy.

Of the several astrological treatises in vogue, "SARAVALI" is said to be a work of great authority. Its author Kalyana Varma appears to have been a chieftain of some petty state known as Viyagrapathi, and must have been a great scholar as well. He must have written this work in Sanskrit about eleven or twelve centuries ago. For it is copiously cited and referred to in the great commentary on Brahat Jathaka which Pattothpalar wrote in the year 888 Vikramasagam corresponding to about 831 A. D.

It is claimed by competent judges to be a comprehensive work of authority, not only condensing, synthesising and systematising all that was best in earlier works like those of "Varaha Mihirah", but also covering and traversing a much wider field, and carrying the system much farther than "Varaha Mihirah" for purposes of astrology. This book comprises 2541 Slokas in 54 chapters, and treats of all the diverse aspects of astrology thoroughly and efficiently. To astrologers therefore, to read tbe lives and to foretell the future of people, no other book can be of greater use and of more accurate value. MR. KUMARASWAMI ACHARIAR has laid the Tamil Jothisha world under a great debt of obligation by publishing this accurate and authoritative Tamil translation of the old work of repute, hitherto inaccessible to all except to the advanced Sanskrit scholars.

Mr. Achariar is a learned astrologer himself and has already earned much reputation by and through his many other astrological publications such as Paladeepikai, Surya Sidhantha Jothida Ganitham, Putbabantham, Neelakanda Thajeegam, Sripathi Jathaga Baddhathee, Silparathnakaram, Visvakarmeeya Ayathi, Machcha sastram, Siddhantha Driganitham.

This book deserves the patronage of all who may be interested in Indian astrology. I wish it all success, and I wish Mr. Achariar many a year of prosperity and happiness, of health and usefulness.

ANNAMALAI NAGAR, 6-2-1938. (Sd.) S. S. BHARATHI, M.A., B.L.
*Professor in Tamil, Annamalai University.*

FOREWORD

BY

## VIDWAN P. M. SOMASUNDARAM PILLAI AVARGAL
## M. A., L. T.

*District Educational Officer, Chitraldrug, (Mysore State).*

Astrology is one of the ancient Sciences, being in vogue since the Sangam age. This science of divination enables people to know their future and to be prepared for any eventuality. Hence, it is utilitarian and popular. Astrological works of the present day like Jathakalankara and a host of others have been based on ancient Sanskrit treatises on the subject, of which this SARAVALI is one.

It is at once authoritative and simple, as it is based on works of famous astrologers like Varahamihira, and the style of the book is easy and explanatory. This treatise elaborately treats of life, Rajayogam, Arishtam, Arishta Bangam and other innumerable astronomical influences on human existence and consists of 54 chapters and 2541 slokas. It is a complete and exhaustive work and has been laid under contribution for Parijatham, Sarvatha Chintamani, and other later works.

As the original Sanskrit work of the ancient king Kalyanavarman is necessarily limited in its utility, this rendering in simple chaste Tamil, has been attempted, to serve a wider reading public interested in the subject.

The publisher M. R. Ry. S. A. KUMARASWAMI ACHARIAR Avl. of Porto Novo is not new to this kind of work and his translations of astrological books like Paladeepikai have already brought him before the public.

It is hoped that this book will be appreciated by Tamils in general, and astrologers in particular and that Tamilakam will encourage the author to continue to serve them.

May the Almighty bless the publisher and author M. R. Ry. S. A. Kumaraswami Achariar Avl. with long life and prosperity.

CHITRALDRUG, (MYSORE STATE) 20-8-1938.

(Sd.) VIDWAN P. M. SOMASUNDARAM PILLAI,
M. A., L. T.,
*District Educational Officer.*

# FOREWORD

*by*

PANDITHA BHUSHANA

V. SUBRAHMANYA SASTRI, B. A.

*Asst. Secretary to the Govt. of Mysore (Retd.)*

AND

Translator of "*Brihat Jathaka*", "*Jataka Parijatha*", "*Sripathi paddhati*", "*Phaladeepika*" and "*Uttarakalamrita*" and Editor of *Saravali* (Sanskrit text) first published at Bombay in 1907.

---

A Tamil translation of an important astrological work—*Saravali*-was long overdue and Mr. *S. A. Kumaraswami Achariar* of Porto-Novo deserves our congratulations on the successful attempt in presenting the salient and essential features of Saravali before the public.

The author Kalyanavarman appears to have flourished in the latter half of the ninth century A.D., being of a considerably later origin than of Varahamihira.

The planets Mars, Mercury, Jupiter, Venus and Saturn represent the five elements both according to *Saravali* and Uttarakalamrita. The order in which the elements are represented may differ; and for our purpose it is not material. However, we may take it that the five elements represented by the planets are Prithvi (पृथ्वी) Ap (अप्) Tejas (तेजस्) Vayu (वायु) and Akasa (आकाश) according to Uttarakalamrita (Khanda IV, Sloka 25.) The position which these planets occupy in a nativity will affect the native's life, and more so, if the 12th house be occupied by them. The evil effects might differ in degree or variety, but they exist. Mars for example, posited in the 12th house, indicates a premature death unless there are other influences exerting towards longevity.

Kataka and Meena are two watery signs beginning with the 4th quarters of Punarvasu and Purvabhadrapada respectively and ending with the last Padas (पाद) of Aslesha and Revati respectively. Kataka is the exaltation sign of Jupiter, the Amara guru (अमर गुरु), and is owned by the Moon, the planet risen from the Ksheera Sagara (क्षीरसागर) and all planets having their origin from Satva

(सत्व) have got interest in this sign with everything heavenly about it. Kataka is even identified with Ksheera Sagara (क्षीर सागर) —one of the seven oceans. Nectar and poison were available side by side in Ksheera Sagara (क्षीर सागर); for Punarvasu (पुनर्वसु) 4th Pada (पाद) stands for Amrita (अमृत) while the constellation Aslesha (आश्लेष) in the same Rasi stands for poison being presided over by the Serpents. Hence malefics when they transit or are posited in Kataka produce a lot of evil the nature of which depends upon the Bhava represented by Kataka.

Meena is supposed to represent the Lavana Sagara (लवण सागर). The Vargottama Pada (वर्गोत्तम पाद) of this Rasi—Revati 4—is given as the Paramochcha (परमोच्च) for the Asura guru (असुर गुरु) —Venus—who presides over salt, one of the shad Rasas (षड्रसा:)

[*Vide* Uttarakalamrita Khanda V Sloka 42].

Mr. *Kumaraswami Achariar* has translated many other interesting and valuable astrological works and his translations are lucid. Translations such as these in Indian Vernaculars are a great desideratum, and it is to be hoped that Mr. Kumaraswami Achariar or his work will not be the last in this attempt.

BASAVANGUDI,<br>
25*th July* 1939. } (Sd) V. SUBRAHMANYA SASTRI, B. A.

## TESTIMONIAL.

The great sastras laying down restrictions and regulations for discrimination between good and evil, are believed to date back to almost creation and to have come to exist since then. It is therefore by no means possible or necessary, to determine the age of such Shastras as Sixshai, Karpa, Vyakarna, Nirdham, Santhopisithi and astrology.

Among these, astrology is of three parts, Ganitham, Horai and Samhita and six sub-divisions. Secondary works tracing their origin to ganitham are far too numerous and include Saravali and Bhava kuthookalam in them. By far the greatest of these is the SARAVALI of Kalyana Varma which easily occupies the first rank, though in its present available form it contains but a few parts of the original.

Panditharmani S. A. KUMARASWAMI ACHARIAR of Porto Novo who is already the celebrated author of several well-known works in Architecture, Medicine and astrology among which may be mentioned Paladeepikai Siddhanta Driganitham, Vaidyarathna Vachana Bhushanam etc., besides sweet and melodious Tamil devotional literature, has compiled this Saravali in the form of an exquisite Tamil production of fifty-four chapters and commentaries for 2541 verses. His learning and knowledge in astrology are as wide, deep, and abundant as they are in medicine.

The present work from the pen of this firm and ardent devotee of Lord Subramanya is sure to occupy a prominent place as a piece of outstanding merit and distinction not only in the field of astrology but in the realm of entire Tamil literature as well.

May God spare the author and his friends and admirers who have helped him in the publication of this useful and valuable work and bless them more and ever more that further works of worth and eminence might see the light of day from their selfless endeavours.

PORAYAR,
April 13th 1938.

(Sd.) N. RANGASWAMI IYER, B.A., L.T.
*Journalist.*

உ

மெய்கண்டமயம்

# சிறப்புப்பாயிரம்

இது
பறங்கிப்பேட்டை
உயர்தரக் கலாசாலைத் தலைமைத் தமிழாசிரியரும்
சிதம்பரம் சிவஞானத்திருத்தளி
ஸ்ரீலஸ்ரீ செப்பறைச் சுவாமிகளின் மாணாக்கரும்
சித்தாந்த கலா நிதியுமாகிய
திருவாளர்

## வித்வான் S. பெரியசாமிப் பிள்ளையவர்களால்

இயற்றப்பெற்றது

### எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

உலகியல் நடாத்து மானிடர் யாரும்
ஓங்குநல் வினைப்பயன் துய்த்துக்
கலகமுள் தீய வினைப்பயன் கழித்துக்
காட்சியார் மெய்ந்நிலை காட்டிப்
பலகலை தம்முள் பாவுறும் பேற்றைப்
பண்புற வளிப்பவை யெவற்றும்
அலகிலாச் சிறப்பை யளிப்பது கருதின்
அமர்தரு சாதகம் என்ப (1)

சீதவெண் மதியிற் றிகழ்சடைப் பரமன்
செப்புறா லெவற்றினும் பரந்த
வேதநூல் தனக்குக் கண்ணென மிளிர்ந்து
விளங்குசோ திடக்கலை பலவாம்
ஓதுமக் கலையிற் சிறந்தசா ரமதா
யுவப்புறு மாவளி யிதனைக்
காதலிற் பயந்த கல்யாண வருமர்
கருத்ததைக் கருத்தினி லாய்ந்து (2)

செந்துவர் வாயாள் சேலன கண்ணாள்
 செறிபரா பரையரு ளதனால்
சுந்தர மாகும் சோதிடக் கலைஞர்
 சுகமுறப் பூவுல குதித்த
எந்திர மாந்த ரின்னல மடைய
 எழில்பெற மொழிபெயர்த் தருள்வான்
மந்திர விதியை மரபுளி யெண்ணி
 மாண்பினி லியற்றியச் சிட்டான் (3)

தரளமும் பவள மணிகளுந் தழைத்துச்
 சங்கொடு சக்கர நிகர்ப்ப
விரவுறு கரிய சாகர மாலின்
 வியனுருக் காட்டிட விளங்கிப்
பரவுறு பறங்கிப் பேட்டைமா நகரில்
 பாலனே காம்பரன் தோன்றல்
தரைபுகழ் குமர சாமியென் னண்பன்
 தழைக்குமெய்ப் புலவர்க ளேறு (4)

பண்ணமர் தருசீர் வைத்திய கலையும்
 பாங்குள சிற்பநூற் கலையும்
விண்ணவர் துதிக்குஞ் சோதிட கலையும்
 மேன்மையார் தரவெளி யிட்டோன்
பெண்ணுறு பாகன் சேய்தொழும் விசுவ
 பிராமணர் குலத்தினி லுதித்தோன்
கண்ணுதல் கருணை களிப்புறப் புவியோர்
 கருதநூ லிதினடை குவரே. (5)

இங்கித முணர்ந்தார் இனிதுறை யாடூர்
 இரத்தின சபாபதி யண்ணல்
பொங்குறு கருணை மணிமொழித் தேவர்
 புனிதநூற் பூசனை புரிவோர்
இங்கியல் தருமம் யாவர்க்கு மியற்றும்
 எழிற்புகழ்ப் பிரபுவென் நேயர்
தங்கிய முயற்சி யாலிந்த நன்னூல்
 தரணியில் வெளிவந்த தம்மா. (6)

பருவரா லுகளும் பாரிடை யிந்நூல்
 பலபல வாண்டுகள் பிறங்கி
இருவரா லறியா வொருபர னருளால்
 ஒப்பறு மிருமையம் பயன்கள்
திருவெலா மளித்துத் திகழ்நிதி வழங்கிச்
 செல்வர்கள் சிறப்பெலாந் தந்து
மருவுலா மறுமை வீட்டினை யுதவி
 வயங்குக ஞாலமோங் குகவே. (7)

# மதிப்புரை.

தென்னாற்காடு ஜில்லா கல்வித்துறைத் தலைவர்

## திருவாளர் - ச. சச்சிதானந்தம் பிள்ளை, B. A., L. T.

அவர்கள் எழுதியது.

வேதத்தின் ஆறங்கங்களுள் ஒன்றாய் விளங்குவது சோதிடம். இக்கலை பல்லாயிர ஆண்டுகளாக, அறிஞர்களாற் பயிலப்பட்டு வந்துள்ளது. இஃது ஒவ்வொருவர் இயல்பையும் அவரவர் வாழ்க்கையின் அமைப்பையும் அதன்கண் நுகர்தற் குரியனவாய் விதிக்கப்பட்டுள்ள இன்ப துன்ப அடைவையும் ஒருங்கே புலப்படுத்தும் ஒட்பமும் பயனும் உடையது. சோதிடர்கள் சொல்லுவது சிற்சில சமயங்களிற் பொய்த்துப் போவது கொண்டே சோதிடம் பொய்யெனச் சொல்லொணாது. அளப்பரும் நுண்மைபுணர்வும், கலைபயில் தெளிவும், கணிதத்திறனும், தேவோபாசனைத்திடனும் ஒன்று கூடினல்லது, "பிரமதேவன் மக்கள் நெற்றியில் எழுதியுள்ள எழுத்தின் வரிசைகளாகிய" சாதகத்தை விளக்கமாகக் காணவோ கண்டதன் பலனைக் கூறவோ இயலாதென்ப.

இவ்வாறு சோதிடக்கலை அதிக நுட்பமும் அருமையும் வாய்ந்ததாயிருப்பினும், அது மக்கட்குச் செய்துவரும் உதவி மாணப் பெரிதாதலின் தொன்றுதொட்டே அறிஞரால் பேணப்பட்டு வந்துள்ளது. அதன் விரிவுகளைத் தவமுதிர் சான்றோர் பலர் தங்கள் நூல்களில் பரக்கச் சாற்றி யிருக்கின்றனர். அம்முறையில் வந்த வடமொழிச் சோதிட நூல்களுள் சாராவளி என்பது பெரும்புகழ்பெற்ற தொன்றாம்.

இச் சாராவளியை இயற்றியவர் இற்றைக்குச் சுமார் 880 யாண்டுகட்கு முன்னர் வியாக்கிர பதியை ஆண்டுவந்த கலியாண வருமர் என்னும் மன்னர் என்னும் உண்மை, நூலின் முதலத்தியாயத்தால் தெரியவருகின்றது. சோதிடங் கற்பார்க்கு எங்ஙனம் பயன்படவல்லதென்பது அம்மன்னரே பின்வருமாறு பேசுகின்றார்.

"ஹோரா சாத்திரம்" என்னும் கடுவெயிலிற் களைப்புற்ற மாணவர்க்கு, அக்களைப்பு நீங்கக் கலியாணவர்மா என்னும் மலைக்குவட்டி

லிருந்து குளிர்ந்த நீர்ப்பெருக்கோடு தெளி பொருளுடைய சாராவளி என்னும் ஆறு தோன்றியிருக்கின்றது. இவ்வுரை வெறும் புனைந்துரையல்ல என்று பல நூற்றாண்டுகளாய்ச் சோதிடர்கள் பெற்றுள்ள அனுபவமே சான்று பகரும் என்று அறிந்தோர் அறைகின்றனர்.

இத்துணைச் சிறப்புவாய்ந்த சாராவளி வடமொழியில் இயற்றப்பட்ட தொன்றாதலின் அது தமிழ் நாட்டில் அம்மொழி யறிந்தார்க்கு நேராகவும் பிறர்க்கு அதனையொட்டி யெழுந்த பல தமிழ் நூல்கள் வாயிலாகவும் பயன்பட்டு வந்துள்ளது. இனி அதனை நேரே யாவர்க்கும் கிடைக்கும் பொருளாக்கி கிழமைப்பட வாழவேண்டும் என்னும் விழுமிய விருப்பம் பறங்கிப்பேட்டை சோதிட வைத்திய சிற்ப சாஸ்திர வித்துவான் திருவாளர் பண்டிதமணி சு. ஏ. குமாரஸ்வாமி ஆச்சாரியார் உள்ளத்திற் பல்லாண்டுகட்கு முன்னரே உதித்தது. அவர்கள் அதன் வழியே மனஞ்செலுத்தி உலையா முயற்சி மேற்கொண்டு பல லிபிகளில் எழுதிய மூல நூலின் பிரதிகளைக் கண்டு பிடித்து, ஒப்புநோக்கி அதன் 54 அத்தியாயங்களிலுள்ள சுலோகங்கள் அனைத்தையும் தமிழில் மொழிபெயர்த்து, அச்சுவாகனத்தேற்றி உலவிவர இஞ்ஞான்று வெளியிட்டு உதவியுள்ளார்கள். இஃது உள்ளார்ந்த நன்றியோடு போற்றத்தக்க பெருங் காரியமேயாகும். அடக்கத்தை அணிகலமாய்க்கொண்ட ஆச்சாரியாரவர்கள் இது போன்ற அறிவுக்கொடையை முன்னமே சோதிட சிற்பத்துறையில் அளித்துள்ளார்கள். பல தீபிகை முதலிய சோதிட நூல்களை வட மொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டதோடு சிற்பரத்நாகரம் முதலிய தமிழ் நூல்களையும் முதல் முதல் அச்சிட்டு உதவியிருப்பதை நம் நாட்டுச் சோதிட சிற்ப அறிஞர்கள் நன்கறிவர். இச்சாராவளியினும் பேரளவினதாகிய பராசர சங்கிதையையும் சத யோக மஞ்சரியையும் இவ்வாறே தமிழுலகிற் களிக்கவேண்டுமென்னும் வேட்கை ஆச்சாரியாரவர்கள் உள்ளத்து முகிழ்த்தெழுந்துள்ளது. வயது தளர்ந்தும் தளரா அன்பும் முயற்சியும் மிக நுண்ணிய கலைகளில் வியக்கத்தக்க தேர்ச்சியும் இவர்கள்பால் விளங்குவது இவர்கள் முன்னே புரிந்த நல்வினைப் பயனெனவே கோடல் வேண்டும். இந்நல்வினை இவர்கள் இளமையிலேயே ஒரு தவவேந்தர் தண்ணருட் பார்வைக்கு இலக்காக்கியது. இம்முனிவர் கனவிலும், ஓர் கால் நனவிலும் கந்தவேளைக் காணும் பேறுபெற்ற பெரியார். இருமொழியின் கருத்துணர்ந்து, பலருளத்தில் அறிவுச்சுடர் கொளுத்திய சிவஞான தீபமும் முருகன் பெருமையைச் சாத்திரவாயிலாகவும் தோத்திர

வாயிலாகவும் விரித்து விளக்கும் அரிய நூல்கள் பலவும் அருளிச் செய்த பெரும்புலவர். ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் என்னும் தீக்ஷா நாமமுடையார்.

இச் சுவாமிகளது தொடர்பு இம்மொழி பெயர்ப்பாசிரியருக்குக் கிடைத்த காலத்தே அவர்கள் இவ்வாசிரியருக்குச் சோதிடத்திற் பாண்டித்தியமும் பல நூல் வெளியிடுந்திறனும் புகழும் வாய்க்குமென ஆசிமொழி வழங்கினர் என்னு முண்மை இவ்வாசிரியர் வாயிலாகவே அறியப்பட்டது. இவ்வாறு 'நடையறுப் பெருந்துறவும்' 'நாயகன் சேவடி தைவரு சிந்தையும் உடையராகிய' ஒரு பெரும் ஆன்ஞேர் அருளுக்கு உரியராயினமையின், நமது பண்டித மணியவர்களது சோதிட சிற்பப் புலமை குடத்துள் விளக்காய்க் குன்றிக் காணுது குன்றின் மேலிட்ட தீபமாய்த் தமிழ்க் குவலயம்போற்ற இலகுகின்றது. இக்கலை பயில்வோர்கள் இவர்கள்பால் என்றும் நன்றியுடையராயிருக்கும் கடமைப்பாடுடையர்.

இன்னும் இவ்வாசிரியர் செய்துமுடிக்க விழையும் அறிவுப்பணிகள் அனைத்தும் முட்டின்றி இனிது நிறைவேறத் திருவருள் உடன்நின்று எல்லா வழிகளிலும் உதவவேண்டும் என்று அதனையே வேண்டுவோமாக.

கூடலூர்,
10-7-1939.

**ச. சச்சிதானந்தம் பிள்ளை,** B. A., L. T.
*கல்வித்துறைத் தலைவர்.*

குகமயம்.

ஓம் குமார குருப்யோ நம:

# சாராவளி

## சூசி பத்திரம்.



| அத்தியாயம். | விஷயம். | | சுலோகம். | பக்கம். |
|---|---|---|---|---|
| 1. | மங்கள சுலோகமும் சாஸ்திரோத்பவமும் | ... | 6 | 1 |
| 2. | ஹோரா சாஸ்திரப் பிரயோசனம் | ... | 5 | 3 |
| 3. | இராசிகளின் ஸ்வரூபம் | ... | 44 | 4 |
| 4. | கிரகங்களின் ஸ்வரூபம் | ... | 40 | 13 |
| 5. | மிஸ்ர - கிரகாவஸ்தைகள் | ... | 52 | 25 |
| 6. | அந்யோந்ய காரகத்வம் | ... | 6 | 34 |
| 7. | கிரகங்களின் காரகத்வம் | ... | 15 | 36 |
| 8. | கர்ப்பாதான லட்சணம் | ... | 62 | 39 |
| 9. | பிரசவ கால லட்சணம் | ... | 51 | 52 |
| 10. | பாலாரிஷ்டாதி லட்சணம் | ... | 118 | 65 |
| 11. | சந்திராரிஷ்ட பங்கம் | ... | 17 | 83 |
| 12. | அரிஷ்ட பங்க சாமான்ய லட்சணம் | ... | 15 | 86 |
| 13. | சுனபா அனபா துருதுரா யோகங்கள் | ... | 33 | 89 |
| 14. | வேசி வாசி உபயசரி யோகங்கள் | ... | 12 | 97 |
| 15. | துவி கிரக யோக பலம் | ... | 23 | 100 |
| 16- | திரி கிரக யோக பலம் | ... | 38 | 104 |
| 17. | சதுர்க் கிரக யோக பலம் | ... | 35 | 111 |
| 18. | பஞ்சக் கிரக யோக பலம் | ... | 25 | 117 |
| 19. | ஷட் கிரக யோக பலம் | ... | 15 | 123 |
| 20. | பிரவிருஜ்யா யோக லட்சணம் | ... | 37 | 126 |
| 21. | நாபச யோகம் | ... | 52 | 133 |
| 22. | சூர்யாஸ்ரய ராசிபலமும் திருஷ்டி பலமும் | ... | 67 | 142 |
| 23. | சந்திராஸ்ரய ராசிபலமும் திருஷ்டி பலமும் | ... | 86 | 153 |
| 24. | சந்திர நவாம்ச திருஷ்டி பலம் | ... | 24 | 168 |
| 25. | குஜாஸ்ரய ராசிபலமும் திருஷ்டி பலமும் | ... | 66 | 172 |
| 26. | புதாஸ்ரய ராசிபலமும் திருஷ்டி பலமும் | ... | 66 | 182 |
| 27. | ஜீவாஸ்ரய ராசிபலமும் திருஷ்டி பலமும் | ... | 66 | 192 |

| அத்தியாயம். | விஷயம். | | சுலோகம். | பக்கம். |
|---|---|---|---|---|
| 28. | சுக்கிராஸ்ய ராசிபலமும் திருஷ்டி பலமும் | ... | 66 | 201 |
| 29. | மந்தாஸ்ரய ராசிபலமும் திருஷ்டி பலமும் | ... | 66 | 210 |
| 30. | சூரியாதி கிரகஸ்திதி பாவ பலம் | ... | 87 | 219 |
| 31. | கேந்திரங்களில் இரண்டிரண்டு கிரகங்கள் இருப்பதின் பலன்கள் | ... | 87 | 232 |
| 32. | பாக்கிய பாவ சிந்தை | ... | 114 | 243 |
| 33. | கர்ம பாக்கிய பாவசிந்தை | ... | 82 | 258 |
| 34. | இலக்கிஞதி பாவ சிந்தை | ... | 78 | 271 |
| 35. | இராஜ யோகம் | ... | 186 | 287 |
| 36. | கிரக ரஜ்மிகளும் பலன்களும் | ... | 29 | 312 |
| 37. | பஞ்ச மகாபுருஷ யோகங்களும் பலன்களும் | ... | 44 | 317 |
| 38. | இராஜ யோக பங்க லட்சணம் | ... | 21 | 326 |
| 39. | ஆயுர்த்தாய கணிதம் | ... | 25 | 330 |
| 40. | மூல தசா பலம் | ... | 76 | 335 |
| 41. | அந்தர் தசாபலம் | ... | 59 | 347 |
| 42. | தசாரிஷ்ட பலம் | ... | 4 | 356 |
| 43. | தசாரிஷ்ட பங்கம் | ... | 3 | 357 |
| 44. | உச்ச ஸ்வ க்ஷேத்திராதி கிரகஸ்திதி பலம் | ... | 45 | 358 |
| 45. | ஸ்திரீ ஜாதகம் | ... | 32 | 365 |
| 46. | நிர்யாண லட்சணம் | ... | 45 | 372 |
| 47. | நஷ்ட ஜாதக லக்கின பலம் | ... | 49 | 379 |
| 48. | ஹோராபலம் | ... | 25 | 385 |
| 49. | திரேக்காண பலம் | ... | 37 | 389 |
| 50. | நவாம்ச பலம் | ... | 110 | 395 |
| 51. | நஷ்ட ஜாதகம் | ... | 16 | 411 |
| 52. | அஷ்ட வர்க்க வின்யாசக் கிரமம் | ... | 10 | 416 |
| 53. | வியோனி ஜன்மம் | ... | 57 | 419 |
| 54. | அஷ்ட வர்க்க பலம் | ... | 12 | 428 |


ஆக 54 அத்தியாயங்களுக்கு சுலோகங்கள் 2541.

**குறிப்பு.** மேலே கூறப்பெற்றுள்ள அத்தியாயங்களைக்கொண்டு ஒவ்வோரத்தியாய உள்ளுறைப் படலங்களைத் தெரிந்து கோடல் எளிதாமென் றுன்னியே படல விஷய சூசிகை வரைதலை நிறுத்திக் கொண்டனன். சுபம்.

குகமயம்

ஓம் குமார குருப்யோ நம:

# பிழையுந் திருத்தமும்.

இப் பிழைத் திருத்தங்களை
அவ்வப் பக்கங்களின் திருத்திக் கொள்ளுக.

| பக்கம். | சுலோகம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| 13 | 1 | 4 | யாதெனில்:— | யாவை யெனில்:— |
| ... | 2 | 1 | காரர்களாகிய | காரகர்களாகிய |
| 15 | 7 | 3 | கிரகங்களுன் | கிரகங்களுள் |
| ... | 7 | 5 | செல்லவேண்டும். | சொல்லவேண்டும். |
| 18 | 22 | 9 | அழகுள்ளவலும் | அழகுள்ளவனும் |
| 20 | 27 | 1 | வளைந்திருப்ப | வளைந்திருப்பவனும் |
| ... | 28-29 | 10 | சள் | கள் |
| 23 | 36 | 4 | கிர த் | கிரகத் |
| 26 | 6 | 3 | கிரகம் | கிருகம் |
| 43 | 21 | 3 | லக்னம் பழுதுபட்டது | லக்னம் |
| 51 | 60 | 6 | சுபக்கிரக்ஙகளின் | சுபக்கிரகங்களின் |
| 63 | 46 | 1 | சொல்லா மென்றும் | சொல்லலாமென்றும் |
| 68 | 27 | 2 | பல முள்ள | பலமுள்ள சுபக் |
| 77 | 81 | 1 | சந்தர ராசிக்கு | கந்திர ராசிக்கு |
| 80 | 107 | 2 | சுபக்கிரகங்களுக்குப் | சுபக்கிரகங்களின் |
| 83 | 2 | 3 | ஆசாரியார்க | ஆசாரியார்களு |
| 89 | 3 | 1 | யோகங்சுளுள் | யோகங்களுள் |
| 92 | 16 | 2 | கவியாகயும் | கவியாகவும் |
| ... | 18 | 5 | சுவர்னம் | சுவர்ணம் |
| 115 | 33 | 1 | செவ்வாவ் | செவ்வாய் |
| 123 | 1 | 3 | பிரிய உள்ளவனுகவும் | பிரியம் உள்ளவனுகவும் |
| 125 | 15 | 6 | அநுபவிக்கின்றவனுகரும் | அநுபவிக்கின்றவ னுகவு[ம் |
| 127 | 9 | 1 | சூரியன | சூரியன் |
| ... | 9 | 5 | ராசியிலிருப்பன் | ராசியிலிருப்பின் |
| 130 | 25 | 1 | லொருபர் | லொருவர் |
| 131 | 30 | 8 | பிர்விரஜயை | பிரவிரஜயை |

| பக்கம். | சுலோகம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| 137 | 27 | 1 | சாந்திராயனம் | சாந்திராயணம் |
| 147 | 37 | 5 | இருப்ப்பான். | இருப்பான் |
| 171 | 22 | 6 | கொள்க ! | கொள்க. |
| ... | 23 | 4 | பவத்தையே | பலத்தையே |
| 173 | 13 | 1 | 131 - 14. | 13 - 14. |
| 174 | 15 | 1 | 151 - 16. | 15 - 16. |
| ... | 17 | 1 | 171 - 18. | 17 - 18. |
| 180 | 60 | 5 | அநுஷ்டிக்கின்றவனுவும் | அநுஷ்டிக்கின்றவனுயும் |
| 184 | 13-14 | 1 | செய்கின்றவனுயம் | செய்கின்றவனுயும் |
| 186 | 30 | 1 | இருந்லு | இருந்து |
| 187 | 35 | 4 | அநுபவிப்பதிலிலும் | அநுபவிப்பதிலும் |
| ... | 38 | 1 | இருந்நு | இருந்து |
| ... | ... | 2 | நித் | நிந் |
| 189 | 50 | 1 | சந்திரன் | சந்திரனின் |
| 206 | 39 | 2 | அதி சௌபாக்கிய | அதிக சௌபாக்கிய |
| 207 | 52 | 4 | பயமே யில்லாதலனுயும் | பயமே யில்லாதவனுயும் |
| 210 | 5-6 | 4 | தள்ளப்பட்வனுயும் | தள்ளப்பட்டவனுயும் |
| 218 | 63 | 1 | மகரத்திலாது | மகரத்திலாவது |
| 221 | 16 | 1 | மூன்ரு மிடத்தில் | மூன்ருமிடத்தில் |
| 223 | 31 | 3 | மும்பலமும் | பலமும் |
| 226 | 50 | 4 | வியுய் | வியும் |
| 235 | 32 | 5 | அழககான | அழகான |
| 238 | 54 | 3 | கீாத்தி | கீர்த்தி |
| 240 | 64 | 2 | மானசனுகவும் | சமானனுகவும் |
| ... | 70 | 2 | ராஜ சமானுனகவோ | ராஜசமானனுகவோ |
| 241 | 75 | 1 | இரு தால் | இருந்தால் |
| 243 | 2 | 7 | லறிந்து காள்க. | லறிந்துகொள்க. |
| 253 | 82 | 2 | சாதனங்கள | சாதனங்கள் |
| 255 | ... | 1 | முப்பத்திரண்டவாது | முப்பத்திரண்டாவது |
| 257 | ... | 1 | இருபத்திரண்டாவது | முப்பத்திரண்டாவது |
| ... | 109 | 1 | சந்திரன் புதன் குரு சனி | செவ்வாய் புதன் குரு சனி |
| ... | 111 | 1 | சந்திரன் குரு சுக்கிரன் சனி | செவ்வாய் குரு சுக்கிரன் சனி |
| ... | ... | 35 | இருபத்திரண்டாவது | முப்பத்திரண்டாவது |
| 259 | 9 | 3 | வசித்கல் | வசித்தல் |
| 260 | 14 | 4 | சித்தாங்வம் | சித்தாந்தம் |

| பக்கம். | சுலோகம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| 267 | 72-74 | 7 | ஆதாயமும் | ஆதாயம் |
| 272 | 7 | 4 | சுக்மு மில்லாதிருத்தல் | சுகமு மில்லாதிருத்தல் |
| ... | 11 | 7 | ளை அறிந்து | களை அறிந்து |
| 277 | 29 | 7 | குழந்தையிள் | குழந்தையின் |
| 281 | 51 | 2 | ஐந்தாமிடத் லோ | ஐந்தாமிடத்திலோ |
| 284 | 70 | 3 | திருஷ்டியில்லா திருப்ப | திருஷ்டியில்லா திருப்ப் |
| 286 | ... | 6 | ஐந்திலோ [ன் | சு. 78. ஐந்திலோ [ன் |
| 310 | 174 | 3 | அரசனுப் | அரசனுய் |
| 314 | 15 | 4 | உள்ளவனு பிருப்பான். | உள்ளவனுயிருப்பான். |
| ,, | 19 | 2 | அதிபர்சளாய் | அதிபர்களாய் |
| 341 | 33·34 | 8 | சூதுகள் | சூது கள் |
| 366 | 6-13 | 24 | ஜனித்தவள் | ஜனித்தவள் |
| 375 | 22 | 6 | நியாப | நியாய |
| 390 | 8 | 4 | இவை ளுள்ளவனுய் | இவைகளுள்ளவனுய் |
| 392 | 21 | 4 | க்ளும் | களும் |
| 396 | 7 | 3 | சிறத்த | சிறுத்த |
| 397 | 18 | 5 | வாசாலனுகயும் | வாசாலகனுயும் |
| 398 | 23 | 5 | ளும | ளும் |
| 407 | 88 | 4 | டரந்த | பரந்த [பின் |
| 412 | 4-5 | 22 | 7 பாகைக்குள்ளிருப்பின் | 7½ பாகைக்குள் ளிருப் |
| 431 | .. | 34 | அநுபஜபத்திலோ | அநுபஜயத்திலோ |
| 439 | 9 | 7 | சஞ்சரிக்குக்குங்காலம் | சஞ்சரிக்குங்காலம் |

மேலே கண்டவைகளல்லாத பிழைகளுமிருப்பின் திருத்திக்கொள்க.

சுபம்.

## OPINION

BY

# B. N. VIJAYA DEVA, M. A.

*Barrister-at-Law.*

*Advocate, Chickpet, (Bangalore City).*

The learned Translator of this important work "**Saravali**" has asked me to express an opinion of the book. I take it that I am called upon to give my view about the original work and the present translation. As I am myself coming out with an English translation of the work which, God willing, I hope to publish shortly, I will say a word or two about the work.

Bhattotpala, the commentator of Brihat Jataka of the cele brated Astronomer Varaha Mihira, has extensively quoted from this work "**Saravali**" to explain and illustrate the meaning of the verses in Brihat Jataka. This led many a scholar to long for a complete edition of the work and thanks to the labours of my respected friend Pandita Bhushana V. Subrahmanya Sastri, a complete edition of Saravali was for the first time, I believe, published in 1907. The Astrological public are indeed indebted to the above gentleman for his indefatigable work in this field for his able translations of many books. From a perusal of the edition of Mr. Sastri and also a translation of this book in Malayalam by Brahmasri Puliyur P. S. Purushottama Nambudri Avergal, (Publishers S. T. Reddiar and Sons, V. V. Press, Quilon, published in 1927) it will be clear that in several cases there have been different readings and the work of the translator is beset with difficulties. The work itself as presented to us consists of 54 chapters. The author Kalyana Varma styling himself Vyagrapadeeswara (Chapter 1, Sloka 5) states the necessity for writing this work in slokas 2, 3 and 4 (Ibid) as follows:

"Varaha Mihira wrote in brief the essence of all that was written extensively on the subject by savants. On topics like Rasi (signs), Dasa Varga (tenfold divisions of a sign), Bhupathi Yoga (Raja Yoga), Ayurdaya (Longevity), Dasas (Periods and sub-periods of planets or directions) the work (Brihat Jataka) has not dealt with these in detail. I am going to treat fully these topics giving the essence according to the works of Yavanas and others leaving out that which is unnecessary."

Varaha Mihira has written on all the three branches of astrology: (1) Jataka (doctrine of Nativities or Horoscopy) (2) Samhita (Mundane astrology and other topics) and (3) Siddhanta (astronomy). His work on astronomy, known as Pancha Siddhantaka, "occupies a marked position of its own in Indian Astronomical Literature." His work on Samhita is known as Brihat Samhita. The works on Jataka are Brihat Jataka and Laghu Jataka. That the above are outstanding works is beyond dispute and Kalyana Varma himself has drawn freely from Brihat Samhita and Brihat Jataka.

On a close examination of Saravali it will be evident that to a great extent Kalyana Varma has succeeded in his object and has treated at considerable length the nature of signs, Rajayoga, Dasas, Rasmis (Rays of planets), Lagna (Ascendant) and its divisions like Hora, Drekkana and Navamsa and many other topics. Where Varaha Mihira has not treated of certain topics or has treated them only in brief Kalyana Varma has given us wealth of information.

He seems to have traversed the entire ground of astrological literature extant in his time judging from his references and rightly therefore subsequent writers have considered Saravali as authoritative. Saravali supplements and does not supplant Brihat Jataka. Vaidyanatha Dikshita, the author of Jataka Parijatha, bases his work on Saravali, and Manthreswara, the author of Phala Deepika, wants us to refer to Saravali and Brihat Jataka for ascertaining the effects of a nativity.

Such is the work that the learned Translator has rendered into Tamil. Within the short time at my disposal, I have read through a few important chapters. Judging from this, I have no hesitation in saying that the Translator has turned out an excellent piece of work and that the book deserves to be in the hands of every Tamil-speaking student of this great subject. The learned Pandit M. R. Ry. S. A. Kumaraswami Achariar of Porto Novo has my best wishes and I hope to see him again in the field as there are many works in Sanskrit which have yet to be rendered into the various Vernaculars of our motherland.

CHICKPET,
BANGALORE CITY.
*18—8—1939.*

(Sd.) B. N. VIJAYA DEVA, M. A.,
*Barrister-at-Law,*
*Advocate.*

# INTRODUCTION

## ERRATA.

| Page. | Line. | Mistake. | Correct. |
|---|---|---|---|
| 21 | 35 | ra | tra |

### Foreword.

| Page. | Line. | Mistake. | Correct. |
|---|---|---|---|
| 29 | 18 | court | correct |
| 33 | 33 | the | this |
| 37 | 9 | evil | evil, |

### சிறப்புப்பாயிரம்

| Page. | Line. | Mistake. | Correct. |
|---|---|---|---|
| 40 | 25 | கருதநூ | கருதுநூ |

குகமயம்

ஓம் குமார குருப்யோ நம:

# வேண்டுகோள்.

"அரியகற்று ஆசற்றார் கண்ணுந் தெரியுங்கால்
இன்மை யரிதே வெளிறு."

என்னுந் தெய்வப்புலவர் திருவள்ளுவனார் திருவாக்கிற்கேற்ப அருநூற் பயிற்சியில்லாமையின் அடியேனால் பெரியா ருதவிகொண்டு மொழி பெயர்க்கப்பட்ட இந்நூலின் கண் பிழைகள் இருத்தல் இயல்பே. அப்பிழைகளைக் கற்றுணர்ந்த ஆன்றோர்கள் தெரிவிப் பார்களாயின் அவைகளை, மறுபதிப்பில் திருத்திக் கொள்ளுவதோடு அவர்களுக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

"தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வா
ரெம்மை யுடைமை யெமையிகழார்—தம்மை
யுணரா ருணரா ருடங்கியைந்து தம்மிற்
புணராமை கேளாம் புறன்."

பறங்கிப்பேட்டை,
பிரமாதீச விருஷபரவி,
24உ

இங்ஙனம்:

சு. ஏ. குமாரஸ்வாமி.

குகமயம்.

ஓம் குமார குருப்யோ நம:

# சாராவளி.

## துதி.

"உலகெ லாமுணர்ந் தோதற் கரியவ
னிலவு லாவிய நீர்மலி வேணிய
னலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்."

యస్యోదయే జగదిదం ప్రతి బోధమేతి।
మధ్యస్థితే ప్రసరతి ప్రకృతి క్రియాసు।
అస్తంగతే స్వపతి చోచ్వస్సితైక మాత్రం।
భానుస ఏష జగతి ప్రకట ప్రభావః॥

யஸ்யோதயே ஜகதிதம் பிரதி போதமேதி
மத்யஸ்திதே பிரஸரதி ப்ரக்ருதி கிரியாஸு
அஸ்தங்கதே ஸ்வபதி ஸ்வோச்சஸ் சிதைக மாத்ரம்
பாநுஸ ஏஷ ஜகதி ப்ரகட பிரபாவ:

## சூரிய பகவான் ஸ்துதி.

எவனவன் விழித்த காலை இப்புவி விழிக்கு மன்றே
எவனவன் நடுவண் எய்த இப்புவி இயலு மன்றே
எவனவன் மறைந்த காலை இப்புவி உயிர்க்கு மன்றே
அவன்றனை இரவி யென்பர் அவன்புவிக் குத்த மன்காண்.

முதற்சுலோக வியாக்கியானம்:

இவ்வுலகம் விழிப்பை யடைதற்கும் தத்தமக்குரிய தொழில்களைச் செவ்வனே செய்தற்கும் உச்சுவாசம் ஒன்றோடு உறங்குதற்கும் ஏதுவாக உதித்தலும் உச்சியை யடைதலும் அஸ்தமன மடை-

தலும் ஆன முத்தொழிலுடைய பெரும் பிரபாவராய சூரியபகவான் சர்வோத்தமராக விளங்குகின்றார்.

சு - 2. வசிஷ்டர் பராசரர் முதலிய மகருஷிகள் மிகவும் விஸ்தரித்து விளக்கிய புராதன கிரந்தங்களாகிய ஹோரா சாஸ்திரங்களைச் சுருக்கி வராக மிஹிராசாரியார் பிருகஜ் ஜாதகம் என்ற பிரபலமான ஹோரா சாஸ்திரத்தை இயற்றி யருளினர்.

சு - 3-4-5. எனினும் அதன் துணைகொண்டு இராசிகள் அவற்றின் பலன்கள் திரேக்காணம் ஹோரை முதலிய தசவர்க்கங்கள் ராஜயோகங்கள் ஆயுர்த்தாயம் கோசரபலம் முதலிய பல விஷயங்களை நுண்ணறிவினரன்றி ஏனையோர் நன்கு அறிந்துகொள்ள முடியாமையின் அவர்களும் அறிந்துகொள்ளும் பொருட்டு யவனாசாரியர் முதலிய பூர்வாசாரியர்கள் மிகவும் விரிவாக இயற்றிய ஹோரா சாஸ்திரங்களுள் வேண்டுவனவாய சாரங்கொண்டு; தேவாலயங்கள் நகரங்கள் கிராமங்கள் இவைகளின் பரிபோஷணத்தால் உண்டான பெருங்கீர்த்தி யுடையவரும் பிரமாண்டமாகிற கூட்டிலுள்ள அன்னப்பட்சியைப்போன்றவரும் ஹோரா சாஸ்திரத்தின் உண்மை யறிந்தவரும் வியாக்கிரபதி யென்னும் தேசத்தின் தலைவரும் ஆகிய கல்யாணவர்மா என்னும் கவிஞர் சாராவளி யென்னும் நூலை இயற்றி யருளினர்.

சு. 6. ஹோரா சாஸ்திர மெனும் கடுவெயிலில் சோர்வடைந்த மாணவர்களுக்கு அச்சோர்வு நீங்கக் கல்யாண வர்மா என்னும் சிகரத்திலிருந்து குளிர்ந்த ஜலப் பெருக்கோடு தெளி பொருளுடையதாகிய சாராவளி யெனும் நதி உற்பத்தியா யிருக்கின்றது.

முதலாவது அத்தியாயம் முற்றிற்று.

## இரண்டாவது அத்தியாயம்.

## ஹோரா சாஸ்திரப் பிரயோசனம்.

சு. 1. பிரமதேவன் மனிதர்களுடைய நெற்றியிலெழுதியிருக்கின்ற அட்சர வரிசைகள் ஜாதகம் எனப்படும். அதனைத் தைவக்ஞர்கள் ஹோரா சாஸ்திரமான நிர்மல நேத்திரங்களால் விளக்கமாக அறிந்து கொள்ளவேண்டும்.

சு. 2. அஹோராத்ரம் என்ற சொல் முதலிலும் கடையிலும் உள்ள அ............த்ர என்ற எழுத்துக்களை விலக்கினால் ஹோரா எனப்படும். அஹோராத்ரம் என்பது பன்னிரண்டு ராசிகளின் பரிவர்த்தனை காலமாம். எல்லாக் கிரகங்களும் அவ்விராசிகளைத் தழுவியிருக்கின்றமையால் அதுகொண்டுசுபா சுபபலன்களை அறியவேண்டும்.

சு. 3-4. ஹோரா என்ற சொல் இந்த ஜென்மத்தில் அநுபவிக்க வேண்டிய கர்ம பலன்களைத் தெரிவிக்கின்றதென்று சோதிடர்கள் சொல்கின்றார்கள். ஹோரா என்றது சாஸ்திரத்தின் பெயராம். இலக்கினத்தையும் அதன் பாதியையும் ஜாதகத்தையும் ஹோரையென்றும் புகழ்கின்றார்கள். அன்றியும் ஹோரா என்னுஞ் சொல்லை பாக்கிய சிந்தை என்பதின் பரியாயப் பெயராகவும் கூறுகின்றனர்.

சு. 5. ஜாதகம் பொருளீட்டுங்கால் சகாயம் போன்றும், சமுத்திர ஆபத்தில் உதவும் கலம் போன்றும், யாத்திரா வேளையில் உதவும் மந்திரி போன்றும் சர்வ சமயங்களிலும் உதவுகின்றது. எனவே இதைத் தவிர வேறொன்றும் உலகில் உபகரிக்கின்றதில்லை யென்க.

இரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

# மூன்ருவது அத்தியாயம்.

## இ ர ா சி க வி ன் ஸ்வ ரூ ப ம்.

சு. 1-2. ஜல மயமா யிருந்த இந்தப் பூமண்டலம் இருளினல் எங்கும் வியாபிக்கப்பட் டிருந்த சமயம் தேஜோமயராகிய சூரிய பகவான் யதாசக்தராய்த் தோன்றி ஆகாச மத்தியில் இருந்து தன்னுடைய சுபாவப் பிரகாசத்தினுல் உலகத்தைப் பிரகாசிக்கச் செய்து கிரக நட்சத்திரங்களாகிய அவயவத்தோடு கூடிய லோகம் முழுவதையும் சிருஷ்டித்தார். அதில் நின்று பன்னிரண்டு பேதங்களைக் கொண்ட காலமானது உண்டாயிற்று.

அஃதாவது பன்னிரண்டு மாசங்களுடைய ரூபத்தினுல் வித்தியாசப்பட்ட அவஸ்தைகளோடுள்ள வத்சராத் மகமாகிய காலம் ஏற்பட்டமையால் பன்னிரண்டு வித ரூப பேதத்தை அங்கீகரிக்கின்றவராய்க் காலசுவரூபன் என்று ஜனங்களால் வழக்கம்போல் ஸ்துதிக்கப்பட்டவராய்ச் சமஸ்தமான இந்த உலகத்தைச் சிருஷ்டித்தார். "சர்வம் தேவமயோ ரவி:" என்ற பிரமாணப்படி இங்கு பிரம ஸ்வரூபியாகச் சொல்லப்பட் டிருப்பதாக ஏற்படுகின்றது.

சு. 3. அந்தப் பன்னிரண்டு இராசிகளாவன: மேடம்-இடபம்-மிதுனம்-கடகம்-சிங்கம்-கன்னி-துலாம்-விருச்சிகம் - தநுசு-மகரம் - கும்பம்-மீனம் என்பவைகளாம்.

சு. 4. இந்தச் சுலோகத்தால் இராசிகளின் ஸ்வரூபத்தைச் சொல்லுகிருர்.

கும்பம் என்ற இராசியானது தோளில் வெறுங் குடத்தைத் தரித்த ஒரு புருஷனுகும். மிதுனம் என்ற இராசியானது கையில் கதை என்ற ஆயுதத்தைத் தரித்த ஒரு புருஷனும், வீணை என்ற வாத்தியத்தைத் தரித்த ஸ்திரீயும் ஆகிய இரட்டை வடிவமான மனித சொரூபமாகும். மீனம் என்ற இராசியானது வால் தலை மாறின இரண்டு மீன்களின் வடிவமாகும். தநுசு என்ற இராசியானது கையில் வில்லையுடைய மனித முகத்தையும், குதிரையினுடைய உடல் கால்களையு முடைய மனித வடிவமாகும்.

மகரம் என்ற இராசியானது மான்முகம் போன்ற முகமுடைய ஜலத்தில் வசிக்கும் மீன் ரூபமாகும். கன்னி என்ற இராசியானது

தோணியிலிருக்கின்றவளாயும் கையில் நெருப்பையும் பயிரையும் தரித்துள்ளவளாயுமுள்ள கன்னிகை ரூபமாகும். துலாம் என்ற இராசியானது தராசு பிடித்த ஒரு புருஷ வடிவமாகும். ஏனைய விராசிகளான மேடம் - இடபம் - கடகம்-சிங்கம் - விருச்சிகம் என்ற இராசிகள் தமது பெயர்களுக் கேற்ற ரூபத்தை உடையவைகளா யிருக்கின்றன.

சு. 5. இந்தச் சுலோகத்தினால் கால புருஷனுடைய அங்கங் களைச் சொல்லுகின்றார்.

மேடம் தலை. இடபம் முகம். மிதுனம் கை, கழுத்து, தோள், மார்புகள். கர்க்கடகம் இருதயம். சிங்கம் வயிறு. கன்னி இடுப்பு. துலாம் வஸ்தி (நாபிக்கும் குய்யத்திற்கும் நடுப்பாகம்). விருச்சிகம் லிங்கம் (விருஷணம்). தநுசு தொடைகள். மகரம் முழங்கால்கள். கும்பம் கணுக்கால்கள். மீனம் பாதங்கள்.

இராசியாதி பத்தியமுள்ள கிரகங்களுக்கு இராசிகளுக்குச் சொன்ன அங்கங்களையே கொள்ள வேண்டு மென்ப. மேடத்திற்குச் செவ்வாய் அதிபனாவதால் செவ்வாய் தலை. இடபத்திற்குச் சுக்கிரன் முகம். மிதுனத்திற்குப் புதன் கை கழுத்து தோள் மார்புகள். பிறவும் இவ்விதம் கண்டு கொள்க.

சு - 6. முன்சொன்ன பிரகாரம் மேடாதி யிராசிகளைக்கொண்டு காலபுருஷனுடைய சிரசு முதலிய அங்கங்களை யறிந்து சுபா சுபக் கிரகங்களுடைய ஸ்திதியை யநுசரித்து ஜாதக மூலமாக இலக்கினாதி பாவங்களுடைய புஷ்டியையும் ஹானியையும் அறிந்து கொள்க.

சு. 7. மேடாதிகளாகிய இராசிகளுக்கு முறையே 1. க்ரியம், 2. தாவுரு, (தாவுரி) 3. ஜுதுபம், (ஜுதுமம்) 4. குளீரம், 5. லேயம், 6. பார்த்தோனம், (பாதோனம்) 7. ஜூகம், 8. கோர்ப்பி, (கௌர்ப்பி) 9. தௌர்க்ஷம், (தௌஹிகம்) 10. ஆகோகேரம், 11. ஹிருதய ரோகம் (ஹ்ருத்ரோகம்), 12. அந்த்யம் (சேத்தஸி) என்ற வேறு நாமங்களும் உள.

சு. 8. மேடம் முதலிய எல்லா ராசிகளுக்கும் ருக்ஷம் - பவனம் என்ற பெயர்களும், கிருகத்தினுடைய பரியாயப் பெயர்களான கேஹம் - வேஸ்மம் - திஷ்ணியம் - ஸத்மம் இவைகளும், ராசி - க்ஷேத்திரம்-பம் என்ற பெயர்களும் சமத்துவமான அர்த்தங்களையுடையன வென்று பூர்வாசாரியர்கள் திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்றார்கள்.

சு. 9. மேடாதி பன்னிரண்டுராசிகளில் சிங்கம் முதல் 6 இராசிகளுக்குச் சூரியன் நாதனும். கடகம் முதல் அநுலோமமாய் (தலைகீழாக) கும்பம் வரை 6 இராசிகளுக்குச் சந்திரன் நாதனும். இதனால் குஜாதி பஞ்சக் கிரகங்களுக்கு ராசியாதிபத்யம் உண்டானது சூரிய சந்திரர்களினால் என்று ஏற்படுகின்றது. சிஷ்யர்களுக்கு லகுவாய்த் தெரியும் பொருட்டே அஃது இங்கு சொல்லப்படுகின்றது. எங்ஙனமென்றால் சூரியன் ஸ்வஸ்தானமாகிய சிம்மத்திற்குத் தன ஸ்தானமாகின்ற கன்னியை குமார பூதனாகிய புதனுக்கும், பராக்கிரம ஸ்தானமாகிய துலாத்தைப் பராக்கிரமனாகிய சுக்கிரனுக்கும், பந்து ஸ்தானமாகிய விருச்சிகத்தைச் சேனைக்கதிபனாகிய செவ்வாய்க்கும், புத்தி ஸ்தானமாகிய தநுசைப் புத்தி ஸசிவனாகிய குருபகவானுக்கும், பிரேஷ்ய ஸ்தானமாகிய மகரத்தைப் பிரேஷியனாகிய சனி யீசுர பகவானுக்கும் கொடுத்திருக்கின்றார். கடகத்திற்கு ஆதிபனாகிய சந்திரனும் இவ்விதம் அநுலோமமாகவே தன்னுடைய தன பராக்கிரமாதி ஸ்தானங்களைப் புத சுக்கிராதிகளுக்குக் கொடுத்திருக்கின்றார் என்று ஊகித்தறிந்து கொள்க.

சு. 10. முன்பு சொல்லிய பிரகாரம் சூரியனுடைய சிங்கமுதலிய 6 ராசிகளில் கிரகங்கள் நிற்கும்பொழுது ஜனித்தவன் : சூரனாகவும் தேஜஸ்வியாகவும் சாகஸ சீலனும் இருப்பன். சந்திரனுடைய கர்க்கடக முதலிய (தலைகீழாக) கும்பம் வரையுமுள்ள 6 ராசிகளில் கிரகங்கள் நிற்கும்பொழுது ஜனித்தவன் : மிருதுவான குணமுள்ளவனும் சௌமியனும் சௌபாக்கிய முள்ளவனும் இருப்பன்.

சு. 11. மேடாதி பன்னிரண்டு ராசிகளுக்கும் நவாம்சங்களுக்கும் நாதர்கள் மேடமுதல் கிரமமாக செவ்வாய், சுக்கிரன், புதன், சந்திரன், சூரியன், புதன், சுக்கிரன், செவ்வாய், குரு, சனி, சனி, குரு என்பவர்களாம். மேட விராசிக்கு மேடம் ஆதியாகவும், இடபத்திற்கு மகரம் ஆதியாகவும், மிதுனத்திற்குத் துலாம் ஆதியாகவும், கடகத்திற்குக் கடகம் ஆதியாகவும் நவாம்சத்தைக் கண்டுகொள்ள வேண்டும். இம்முறை போலவே சிங்கம் முதலான ராசிகளுக்கும் மேடாதியாக நவாம்சங்கள் அறிந்து கொள்க.

சு. 12. புத்திமானான தைவக்ஞன் ராசி அதிபர்களாகிய கிரகங்களைக்கொண்டு ஜாதக சுபாசுப பலன்களை விசாரித்து அறிந்து சொல்ல வேண்டும்.

சு. 13. வர்க்கோத்தமாம்சம் என்பது தன்னுடைய ஸ்புடம் நிற்கின்ற ராசியில் வருகிற நவாம்சமாகும். சர ராசிக்கு முதலாவது

பாகமும், ஸ்திர ராசிக்கு ஐந்தாவது பாகமும், உபய விராசிக்கு ஒன்பதாவது பாகமும், ஆகிய நவாம்சங்கள் வர்க்கோத்தமங்களாகின்றன. வர்க்கோத்தமாம்சத்தில் ஜனிக்கின்ற மனுஷ்யன் துவாதசாம்சத்திற்குத் தன்னுடைய ராசி முதல் முன்போல் கண்டுகொள்ள வேண்டும்.

சு. 14. இனிமேல் திரேக்காணுதிபர்களைச் சொல்லுகிருர். ஒரு ராசியினுடைய மூன்றிலொரு பாகம் திரேக்காணம் எனப்படும். இலக்கினம்-ஐந்து-ஒன்பது இந்த ராசியதிபர்கள் கிரமமாகத் திரேக்காணுதிபர் ஆகின்ருர்கள். [எவ்விதமெனின் மேஷ விராசிக்கு முதல் திரேக்காணுதிபதி செவ்வா யென்றும், இரண்டாவது திரேக்காணுதிபதி சூரியனென்றும், மூன்ருவது திரேக்காணுதிபதி குருவென்றும் அறிந்து கொள்க.]

எல்லா ராசிகளுக்கும் 1-12-11 இந்த ராசியதிபர்கள் திரேக்காணுதிபதிகள் என்பது யவனுசாரியர்களுடைய பக்ஷம். இதை அதிகமாக ஒருவரும் அங்கீகரிப்பதாகத் தெரியவில்லை. என்ருலும் பிரஸ்ன விஷயத்தில் இந்தப் பட்சத்தை அங்கீகரிக்கலாம் என்பது சிலர் சம்மதமாம்.

ஹோரா என்றது: ராசியின் பாதியாம். மேடம்-மிதுனம்-சிங்கம்-துலாம்-தனுசு - கும்பம் முதலிய ஓஜ ராசிகளுக்கு முற்பாதி சூரிய ஓரையும், பிற்பாதி சந்திர ஓரையும், இடபம் - கடகம் - கன்னி-விருச்சிகம்-மகரம்-மீனம் முதலிய இரட்டை ராசிகளுக்கு: முற்பாதி சந்திர ஓரையும், பிற்பாதி சூரிய ஓரையும் ஆகின்றன.

எல்லா ராசிகளுக்கும் முதல் ஹோராதிபன் அந்தந்த ராசியாதிபனும், இரண்டாவது ஹோராதிபன் பதினென்ரும் ராசிக்கதிபனும் ஆகின்ருர்கள். சிலர் பிரஸ்ன விஷயத்தில் இங்ஙனங் கொள்ள வேண்டுமென்று சொல்கின்றனர்.

சு. 15. மேடம்—மிதுனம் முதலிய ஒற்றை ராசிகளுக்கு 5-பாகை வரையில் செவ்வாயும், 10-பாகை வரையில் சனியும், 18-பாகை வரையில் குருவும், 25-பாகை வரையில் புதனும், 30-பாகை வரையில் சுக்கிரனும் திரிம்சாம்சாதிபர்கள் ஆகின்றனர்.

இரட்டை ராசிகளான இடபம்-கடகம் முதலியவைகளுக்குத் திரிம்சாம்சாதிபர்களை விபரீதமாகக் கொள்ள வேண்டும். எவ்விதமெனில்: 5-பாகை வரையில் சுக்கிரனும், 12-பாகை வரையில் புதனும், 20-பாகை வரையில் குருவும், 25-பாகை வரையில் சனியும், 30-பாகை வரையில் செவ்வாயும் திரிம்சாம்சாதிபர்கள் ஆகின்றனர்.

சு. 16. மேடம், மிதுனம் முதலிய ஒற்றை ராசிகளுக்கு அந்தந்த ராசிகள் முதலாகவும், இடபம், கடகம் முதலிய இரட்டையிராசிகளுக்கு அவ்விராசிகளுக்கு ஏழாவது ராசி முதலாகவும்கொண்டு சப்தமாம்சத்தைக் கண்டுகொள்ள வேண்டும். [மேடத்திற்கு மேடத்திலிருந்தும் இடபத்திற்கு விருச்சிகத்திலிருந்தும் கண்டுகொள்ள வேண்டும்.] இவ்விதமாக சப்தமாம்சத்தை அறிய வேண்டும்.

சு. 17. அறுபது கலை ஒரு பாகை. முப்பது பாகை ஒரு ராசி. பன்னிரண்டு ராசி ஒரு பகணம். (சுற்று) என்று அறிந்து கொள்ள வேண்டும். 60-ஆல் 30-ஐப் பெருக்கினால் வருவது 1800 கலைகளாம். இது ஒரு ராசியாம். 30-ஐ 30-ஆல் பெருக்க அரை ராசியாம் அல்லது ஓரையாம்.

"ஹோரேதி லக்நம் பவநஸய சார்த்தம்" என்பது பிரமாணம். 72 என்ற சங்கியையால் 24-ஐப் பெருக்கி 72-ஐச் சேர்த்தாலும் ஒரு ராசிக்குரிய 1800 கலைகள் வரும். இந்தச் சுலோகத்தின் பிரயோசனத்தை அடுத்த சுலோகத்தில் தெளிவாகச் சொல்லுகின்றார்.

சு. 18. இலக்கின ஸ்புடத்தையும், கிரக ஸ்புடத்தையும் அறிந்து பாகையை 60-ஆல் பெருக்கி சேடகலையைக் கூட்டி மேற்சொன்ன திரேக்காண ஹோராதிகளின் சங்கியையினால் பெருக்கி 1800-ஆல் வகுத்து வந்த பலம் அந்தந்த ஸ்புடத்தினுடைய திரேக்காணம் முதலிய வர்க்கங்கள் ஆகும். எவ்விதமெனின் இலக்கின ஸ்புடம் இராசி 6. பாகை 18. கலை 53. ஆனால் பாகை ஸ்தானத்திலுள்ள 18 ஐ 60- ஆல் பெருக்க 1080 இது கலை. இதனுடன் கலை 53 ஐச் சேர்க்கக் கலை 1133. இதைத் திரேக்காண வர்க்க சங்கியை 3 ஆல் பெருக்கக் கலை 3399. ஆகின்றது. இதனை 1800 ஆல் ஹரித்த பலம் 1. சேடம் 1599 வருவதினால் முதல் திரேக்காணம் கழிந்து 2 ஆவது திரேக்காண மென்றறிந்து கொள்க.

இதுபோலவே ஹோரைக்கு 2. நவாம்சகத்திற்கு 9. துவாதசாம்சத்திற்கு 12. சப்த மாம்சத்திற்கு 7. என்னும் வர்க்க சங்கியைகளால் மேற்சொன்ன பிரகாரம் பெருக்கி ஹரித்தால் ஹோராதி வர்க்கங்கள் ஏற்படும்.

சு. 19. மேலே கூறப்பட்ட ஹோராதி வர்க்கங்களுடைய குணதோஷங்கள் இனி சொல்லப்போகின்ற நஷ்ட ஜாதகாத்தியாயத்தில் விவரமாகச் சொல்லப்படுகின்றன. அவசிய சம்பாஷியங்களாகிய

பலவித பலன்களைப் பிரத்தியக்ஷமாகச் சோதித்துக் கொண்டு நஷ்ட ஜாதகத்தில் லக்கினுதிகளை நிர்ணயிக்க வேண்டும்.

சு. 20. மேடம் குரூரராசி. இடபம் சௌமியராசி. மிதுனம் குரூரராசி. கடகம் சௌமியராசி. இவ்விதமே ஏனைய ராசிகளுக்கும் கண்டுகொள்க. மேடம் புருடன், ஓஜம் - ஒற்றை. இடபம் பெண், யுக்மம்-இரட்டை. மிதுனம் புருடன். கடகம் பெண். இவ்விதமாக சிம்மம் முதலிய ராசிகளுக்கும் அறிந்து கொள்க.

மேடம் - சரம். இடபம் - ஸ்திரம். மிதுனம் - உபயம். கடகம் - சரம். சிங்கம் - ஸ்திரம். கன்னி - உபயம். ஏனைய துலாம் முதலிய ராசிகளுக்கும் இவ்விதமே சர ஸ்திர உபயங்களை யறிந்துகொள்க. கடகம், விருச்சிகம், மீனம் ஆகிய இந்த ராசிகளின் கடைசியிலுள்ள நவாம்சத்தை ருக்ஷசந்தி என்றும், கண்டாந்தமென்றும் சொல்லுகின்றுர்கள்.

சு. 21. மேற் சொன்ன கடகாந்தம் விருச்சிகாந்தம் மீனுந்தமான கண்டாந்த சந்தியில் ஜனித்தவன் மாதா பிதாக்களுக்கும் குலத்திற்கும் நாசகர்த்தாவாகிறுன். அவன் ஜீவித்திருந்தானே யாகுல் அநேக குதிரை யானைகளோடு கூடிய ராஜனுகவோ ராஜதுல்லியனுகவோ இருப்பான்.

சு. 22. மேடம், இடபம், மிதுனம் இந்த ராசிகள் கிழக்கு. கடகம், சிங்கம், கன்னி இந்த ராசிகள் தெற்கு. துலாம், விருச்சிகம், தநுசு இந்த ராசிகள் மேற்கு. மகரம், கும்பம், மீனம் இந்த ராசிகள் வடக்கு. இவ்விதம் திக்குகளை நிச்சயித்து யாத்திரை முதலிய காரியத்தைச் செய்யின் இஷ்டசித்தி யுண்டாம்.

சு. 23-24-25. மேடம், இடபம், சிங்கம், தநுசு இராசியின் பிற்பாதி, மகர விராசியின் முற்பாதி இவைகள் நாற்கால்ராசிகள். கடகமும் விருச்சிகமும் கீடவிராசி. (பலகால் ராசி.)மீனம், மகர விராசியின் பிற்பாதி இவை ஜலராசிகள். மிதுனம், கன்னி, துலாம், கும்பம், தநுசு இராசியின் முற்பாதி இவைகள் மநுஷ்யராசிகள். இவைகளுள் மநுஷ்ய ராசிகளுக்குக் கிழக்குத் திக்கிலும் அஃதாவது இலக்கினத்திலும், நாற்கால் ராசிகளுக்குத் தெற்குத் திக்கிலும் அஃதாவது பத்தாமிடத்திலும், கீடவிராசிகளுக்கு மேற்குத் திக்கிலும் அஃதாவது ஏழாமிடத்திலும், ஜலராசிகளுக்கு வடக்குத் திக்கிலும் அஃதாவது நான்காமிடத்திலும் பூர்ண பலமுண்டு. சதுஷ்பதமான நாற்காலிராசிகளுக்கு இராத்திரியிலும், இருகாலிராசிகளான மனித விராசிகளுக்

குப் பகலிலும், மகர விராசியின் பிற்பாதி, கடகம், விருச்சிகம், மீனம் இந்த ராசிகளுக்கு இரண்டு சந்தியா காலங்களிலும் பலம் உண்டு.

சு. 26. மேடம், இடபம், மிதுனம், கடகம், தநுசு, மகரம் இவைகள் இராத்திரியில் பலமுள்ள விராசிகளாம். சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், கும்பம், மீனம் இவைகள் பகலில் பலமுள்ள விராசிகளாம். மேடம், இடபம், கடகம், தநுசு, மகரம் இவை 5-ம் பிரஷ்டோதய விராசிகளாம். சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், கும்பம், மிதுனம் இவை 6-ம் சிரோதய விராசிகளாம். மீனம் உபயோதய விராசியாம்.

சு. 27. எல்லா விராசிகளுக்கும் அவ்வவ் விராசியாதிபன் அவனது மித்துருக் கிரகங்கள், குரு, புதன் இவர்களுடைய சேர்க்கையோ திருஷ்டியோ இருக்குமாயின் அந்த ராசிகள் பலமுடையனவாம்.

சு. 28. இலக்கினாதி 12 பாவங்களைக் கொண்டு முறையே 1-தேகம், 2-தனம், 3-பிராதா, (சகோதரம்) 4-பந்து, 5-புத்திரன், 6-சத்துரு, 7-பத்தினி, 8-மரணம், 9-புண்ணியம், 10-கர்மம், 11-லாபம், 12-விரயம் இவைகள் பன்னிரண்டையு மறிக.

சு. 29. இலக்கினம் முதலிய 12 பாவங்களுக்கும் முறையே 1-சக்தி, (ஆரோக்கியம்) 2-தனம், (குடும்பம்) 3-பௌருஷம், 4-கிரஹம், 5-பிரிபா, (புத்தி விசேஷம்) 6-விரணம், 7-காமபோகம், 8-ரந்திரம், 9-குரு, 10-மானம், 11-பவம், 12-வியயம் என்ற நாமங்களும் கூறப்பட்டிருக்கின்றன. மேற்கூறிய தன்வர்த்த சஹஜாதி சுவபௌருஷாதிசப்தங்களும் இவற்றின் பரியாயங்களும் பாவங்களைக் குறிக்கும் பெயர்களாம்.

சு. 30. நான்கு, எட்டு இந்தப் பாவங்கள் சதுரஸ்ரமெனவும், 9-ஆம் பாவம் தபஸு எனவும் பெயர் பெறும். இலக்கினம், நான்கு, ஏழு, பத்து இந்த நான்கு பாவங்களுக்கும் முறையே இலக்கினம், கண்டகம், கேந்திரம், சதுஷ்டயம் என்ற பெயர்களுமுள்ளன.

சு. 31-32-33. நான்காமிடத்திற்குச் சுகம், ஜலம், பாதாளம், பந்து, ஹிபுகம் என்ற நாமங்களும், பத்தாமிடத்திற்குக் கர்மம் ஆக்ஞை, மேஷூரணம், ஆகாயம் என்ற பெயர்களும் உண்டு.

ஐந்து, ஒன்பது இந்த இடங்கள் திரிகோணம் என்றும், ஐந்தாமிடம் தீ (புத்தி) என்றும், ஒன்பதாமிடம் த்ரித்ரிகோணம் என்றும் பெயர் பெறும். ஏழாமிடத்திற்குத் தியூனம், ஜாயா, அஸ்தமயம், ஜாமித்திரம் என்ற பெயர்களும், 6-12-இந்தப் பாவங்களுக்கு ஷட்கோணம் என்ற பெயரும், மூன்றுமிடத்திற்குத் துச்சித்தம் (துர்ப்

புத்தி) என்ற பெயரும், 12-ஆமிடத்திற்கு ரிப்பம், பாபம் என்ற பெயரும், இரண்டாமிடத்திற்குக் குடும்பம் என்ற நாமமும் உண்டு.

சு. 34. இலக்கினம் 4, 7, 10 இந்தப் பாவங்கள் கேந்திரங்கள் என்று முன்னமே சொன்னோமல்லவா? அவைகளுக்குப் பின் உள்ளதாகிய 2,5,8,11 ஆகிய இடங்கள் பணபர மென்றும், அவைகளுக்குப் பின் உள்ளதாகிய 3, 6, 9, 12 ஆகிய இடங்கள் ஆபோக்கிலீபம் என்றும் கூறப்படும். கேந்திரஸ்தானாதிபதி யாகின்ற கிரகங்கள் பால்யத்திலும், பணபர ஸ்தானாதிபதியாகின்ற கிரகங்கள் யௌவனத்திலும், ஆபோக்கிலீபஸ்தானாதிபதி யாகின்ற கிரகங்கள் விருத்த வயதிலும் தங்கள் தங்களுடைய பலத்தைக் கொடுக்கின்றார்கள்.

சு. 35. மேஷம்-சிம்மம்-தநுசு இவை மூன்றும் க்ஷத்திரிய ராசிகள். இடபம்-கன்னி-மகரம் இவை மூன்றும் வைசிய ராசிகள். மிதுனம்-துலாம்-கும்பம் இவை மூன்றும் சூத்திர விராசிகள். கடகம் விருச்சிகம்-மீனம் இவை மூன்றும் பிராமண விராசிகள் என்று கூறுகின்றனர்.

சு. 36. 3, 6, 10, 11 இந்தப்பாவங்கள் உபசயம் எனப்படும். இந்த ஸ்தானங்கள் ஒழிந்த 1, 2, 4, 5, 7, 8, 9, 12 இந்தப் பாவங்கள் அநுபசயம் (அபசயம்) என்றும் வேறு கிரந்தங்களில் பீடர்க்ஷம் என்றும் சொல்லப்படுகின்றன.

சு. 37. சூரியன் முதலிய ஏழு கிரகங்களுக்கும் முறையாக சிங்கம் இடபம்-மேடம்-கன்னி-தநுசு-துலாம்-கும்பம் இந்த விராசிகள் மூலத்திரிகோணங்கள் (மூல க்ஷேத்திரங்கள்) ஆகின்றன.

சு. 38-39. சூரியனுக்கு மேடத்தில் 10-ஆம் பாகையும், சந்திரனுக்கு இடபத்தில் 3-ஆம் பாகையும், செவ்வாய்க்கு மகரத்தில் 28-ஆம் பாகையும், புதனுக்குக் கன்னியில் 15-ஆம் பாகையும், குருவிற்குக் கடகத்தில் 5-ஆம் பாகையும், சுக்கிரனுக்கு மீனத்தில் 27-ஆம் பாகையும், சனிக்குத் துலாத்தில் 20-ஆம் பாகையும் பரமோச்சம் (அதியுச்சம்) ஆகின்றன.

இங்கு கூறிய இராசிகளின் சேடபாகங்கள் உச்சங்களெனினும், உச்சபல சிந்தையில் இந்தப் பட்சம் அங்கீகரிக்கத் தக்கதில்லை யென்று சிலர் சொல்கின்றனர்.

எல்லாக் கிரகங்களுக்கும் அவரவர்களுடைய உச்சராசிகளுக்கு ஏழாமிராசி நீசமும், அந்த ராசிகளில் பரமோச்ச பாகத்திற்குச் சொன்ன பாகைகள் பரம நீச பாகைகளும் ஆகின்றன. ஆதித்தனுக்

குத் துலாம் நீசம். அதில் 10 ஆம் பாகை அதிக நீசம் என்று கண்டு கொள்க.

சு. 40-41. கும்பம், மீனம், மேடம், இடபம் இந்த நான்கு ராசிகளும் * ஹ்ரஸ்வ ராசிகளாம். மிதுனம், தநுசு, மகரம், கடகம் இந்த நான்கு ராசிகளும் சமராசிகளாம். விருச்சிகம், கன்னி, சிம்மம், துலாம் இந்த நான்கு ராசிகளும் தீர்க்க ராசிகளாம். இந்தப்பிரகாரம் ஹ்ரஸ்வ சம தீர்க்க ராசிபேதங்களை யறிந்து லக்கினுதி பாவங்களாகிய ராசிகளைக்கொண்டும் அவ்விடத்தில் நிற்கின்ற கிரகங்களைக்கொண்டும் சிரசு முதலிய அங்க விபாகங்களுடைய ஹ்ரஸ்வ சம தீர்க்க ரூப பேதத்தை அறிந்து கொள்ள வேண்டும். * குட்டை = குள்ளம்.

சு. 42. மேடம் முதலிய எல்லா ராசிகளுக்கும் தத்தமது ராசியாதிபனது திக்குகள் ப்லவம் எனப்பெயர் பெறுமென்று யவனுசாரியர் கூறியுள்ளார். ஆகையால் எந்தத்திக்கில் எந்த ராசியானது ப்லவம் என்ற பெயரை அடைகின்றதோ அந்தத் திக்கை நோக்கி அந்த ராசியில் அரசன் புறப்பட்டால் சீக்கிரமாகச் சத்துருக்களை வென்று வெற்றிபெறுவான்.

சு. 43. மேடம் சிவப்பு நிறம். இடபம் வெண்மை நிறம். மிதுனம் பச்சை (கிளி) நிறம். கடகம் பாடல (மங்கலான சிவப்பு) நிறம். சிங்கம் தூம்பிர பாண்டு (புகை நிறமும் கொஞ்சம் வெண்மை நிறமும் கலந்த) நிறம். கன்னி நாநா (பல) நிறம். துலாம் கறுப்பு நிறம். விருச்சிகம் பொன்னிறம். தநுசு பிங்கல (செங்கல் மங்கல்) நிறம் மகரம் கர்ப்பூர நிறம். கும்பம் பிங்கல நிறம். மீனம் சுக்கில (வெண்மை) நிறம். மீன் வர்ணம் என்றும் கூறுகின்றனர்.

சு. 44. ஜன்மலக்கின ராசியினுடைய நிறத்தை அநுசரித்து அந்த ராசி யதிபர்களின் பிரதிமை (பிம்பங்) களைச்செய்து பூசிக்கவேண்டும். அப்படிச்செய்து பூசித்தானுல் அசுரர்களை இந்திரனின் சைந்நியங்கள் வென்றதுபோலச் சத்துருக்களைச் சீக்கிரத்தில் ஜெயிப்பான்.

மூன்றாவது அத்தியாயம் முற்றிற்று.

## நான்காவது அத்தியாயம்.

# கிரகங்களின் ஸ்வரூபம்.

சு. 1. முன் ராசிசுவரூபாத்தியாயத்தில் (கிருகர்க்ஷ ஸங்காத கல்பிதா வயவம்) என்று கால புருஷனைப்பற்றிக் கூறியுள்ளார். இவ் வத்தியாயத்தில் சூரியாதி கிரகங்கள் ஆத்மாதி காரகர்களாகின்றன ரென்று கூறுகின்றார். அவை யாதெனில்:—

சூரியன் ஆத்மாவிற்கும், சந்திரன் மனசிற்கும், சேவ்வாய் சத்து வத்திற்கும், (அவிகார கரம் ஸத்வம் ஸம்பதாத் யுபயாகமே என்ற பிரமாணப்படி ஸம்பத்திலும் ஆபத்திலும் சுகத்திலும் துக்கத்திலும் யாதொரு விகாரங்களும் சம்பவிக்காத மனஸ்திதிக்கு சத்வம் என்று பெயராம்.) புதன் வாக்கிற்கும், குரு ஞான சுகங்களுக்கும், சுக்கிரன் மதத்திற்கும், சனி துக்கத்திற்கும் காரகர்களென்று பெரியோர்கள் கூறுகின்றார்கள்.

சு. 2. ஆத்மாதி காரர்களாகிய சூரியாதி கிரகங்கள் பலவான் களாயிருந்தால் ஆத்மா முதலிய பாவங்களுக்குப் புஷ்டியும், பல ஹீனர்களா யிருப்பின் பாவங்களுக்கு ஹானியும் உண்டாகும். ஆனால் சனிக்கு மட்டும் பேதமுண்டாம். அவர் பலஹீனமாயிருப் பின் அதிக துக்கமும், பலவானு யிருப்பின் துக்க ஹானியும் உண் டாகும் என்ப.

சு. 3-4. இப்பொழுது இலக்கினுதி ராசிகளை ஆசிரயித்துள்ள அங்க விபாகத்தை இந்தச் சுலோகத்தினுல் தெளிவாய்க் கூறுகின்றார். இலக்கின விராசியின் முதல் திரேக்காணத்தி லுதிக்கின் ஏழு ஊர்த் வாங்கங்களும், மத்திய திரேக்காணத்தி லுதிக்கின் ஏழு மத்தியாங் கங்களும், அந்திய திரேக்காணத்தி லுதிக்கின் எட்டு அதோ அங்கங் களும் கிரமமாக உண்டாகின்றன. இலக்கினத்தில் உதித்த பாகை முதல் ஆறு ராசிகள் வலப்பாகத்தின் அங்கங்களும், சேடம் ஆறு ராசிகள் இடப்பாகத்தின் (தலைகீழாக) அங்கங்களும் ஆகின்றன. இதனுடைய தாத்பரியம் அடுத்த சுலோகத்தில் வியக்தமாகச் சொல் லப்படுகின்றது.

சு. 5. இலக்கினத்தினுடைய முதல் திரேக்காணத்தினுல் கண் டத்திற்கு மேலுள்ள அங்கங்களையும், மத்திய திரேக்காணத்தினுல்

இடுப்பிற்கு மேலும் கண்டத்திற்குக் கீழுமுள்ள அங்கங்களேயும், கடைசித் திரேக்காணத்திஞல் இடுப்பிற்குக் கீழ்ப்பாகத்திலுள்ள அங்கங்களேயும் அறிந்துகொள்ளவேண்டும். எவ்விதமெனில் கூறுவாம்.

இலக்கினத்தின் முதல் திரேக்காணத்திஞல்: இலக்கின ராசி தலை. இலக்கினஸ்புடத்தில் செல்லவேண்டிய பாகம், சிரசின் வலது பாகமும், சென்றபாகம் இடதுபாகமும் ஆகும். இரண்டாமிடம் வலது கண். பன்னிரண்டாமிடம் இடது கண். மூன்ருமிடம் வலது காது. பதிஞேராமிடம் இடது காது. நான்காமிடம் வலது மூக்கு. பத்தாமிடம் இடது மூக்கு. ஐந்தாமிடம் வலது கன்னம். ஒன்பதாமிடம் இடது கன்னம். ஆருமிடம் வலது ஹநு(மோவாய்க்கட்டை). எட்டாமிடம் இடது ஹநு. ஏழாமிடம் முகம். சப்தம பாவஸ்புடத்தின் சென்றபாகம் முகத்தினுடைய வலது பாகம். செல்லவேண்டிய பாகம் இடது பாகம்.

இலக்கினத்தின் மத்திய திரேக்காணத்திஞல்: லக்கின ராசி கழுத்து. இரண்டாமிடம் வலது தோள். பன்னிரண்டாமிடம் இடது தோள். மூன்ருமிடம் வலக்கை. பதிஞேராமிடம் இடக்கை. நான்காமிடம் வலது பார்சுவம் (கம்புக்கூட்டின் கீழ்ப்பிரதேசம்). பத்தாமிடம் இடது பார்சுவம். ஐந்தாமிடம் ஹிருதயத்தினுடைய வலது பாகம். ஒன்பதாமிடம் ஹிருதயத்தினுடைய இடதுபாகம். ஆருமிடம் வயற்றின் வலது பாகம். எட்டாமிடம் வயற்றின் இடது பாகம், ஏழாமிடம் நாபி. (தொப்புள்)

இலக்கினத்தினுடைய கடைசித் திரேக்காணத்திஞல். இலக்கின ராசி வஸ்தி. (தொப்புளுக்குக் கீழ்ப்பாகம்) இரண்டாமிடம் லிங்கம் இருப்பிடம் இவைகளின் வலது பாகம். பன்னிரண்டாமிடம் லிங்கம் இருப்பிடம் இவைகளின் இடது பாகம். மூன்ருமிடம் வலது பீஜம். பதிஞேராமிடம் இடது பீஜம். நான்காமிடம் வலது தொடை. பத்தாமிடம் இடது தொடை. ஐந்தாமிடம் வலது முழங்கால். ஒன்பதாமிடம் இடதுமுழங்கால். ஆருமிடம் வலது கணுக்கால். எட்டாமிடம் இடது கணுக்கால். ஏழாமிடம் பாதம்.

முதல் திரேக்காணத்திற்குச் சொன்னது போலவே இரண்டாவது மூன்ருவது திரேக்காணங்களிலும் இலக்கின சப்தம பாவங்களைக்கொண்டு மேலே சொன்ன அங்கங்களுக்கு அந்தப் பாவங்களுடைய சென்ற செல்லவேண்டிய பாகங்களை யநுசரித்து அவயவங்களுடைய வாம தட்சிண பேதங்களை யறிந்து கொள்ளவேண்டும்.

சூ. 6. முற்கூறிய பிரகாரம் இலக்கினம் முதலிய பாவங்களினுல் சீர்ஷம் முதலிய அங்கங்களைக் கற்பிப்பதால் அந்தப் பாவங்களில் இருக்கின்ற பாபக்கிரகங்களைக்கொண்டு முன்சொன்ன அங்கங்களில் விரணத்தையும், சுபக்கிரகங்களைக்கொண்டு மறுவையும் கூறவேண்டும். அந்தக் கிரகம் ஸ்வக்ஷேத்திரத்திலோ ஸ்திரராசியிலோ நிற்குமேயானுல் அந்த இடத்தில் விரணமோ, மறுவோ ஜனனகாலத்திலிருக்க வேண்டுமென்றும், இவ்விதங் கூறியதற்கு விபரீதமாகிய ராசிகளிலோ அம்சத்திலோ அந்தக் கிரகம் நிற்குமேயானுல் பின்னுல் வேறு காரணத்தினுல் உண்டாகுமென்றும் அறிந்து கொள்க.

சூ. 7. சூரியனும், சந்திரனும் இராஜா. புதன் யுவராஜன். செவ்வாய் சேனுதிபதி. குருவும், சுக்கிரனும், மந்திரி. சனி வேலையாள் ஆகின்ருர்கள். இங்ஙனம் சொல்லப்பட்ட கிரகங்களுள் ஜனன காலத்தில் யாருக்குப் பலாதிக்கியமுண்டோ அதனையறிந்து செல்லவேண்டும்.

சூ. 8. கிழக்கு முதலிய எட்டுத் திக்குகளுக்கும் முறையே சூரியன், சுக்கிரன், செவ்வாய், இராகு, சனி, சந்திரன், புதன், குரு என்ற கிரகங்கள் உரியவர் ஆகின்ருர்கள்.

சூ. 9. புதன், குரு, சுக்கிரன் இவர்கள் சுபக் கிரகங்கள். சூரியனும், செவ்வாயும், சனியும், பாபியோடு கூடின புதனும் க்ஷீண சந்திரனும் (அமர பக்க சந்திரன்) ஆகிய இவர்கள் பாபக் கிரகங்கள். சுக்கில பட்ச அஷ்டமியின் பிற்பாதி முதல் கிருஷ்ணபட்ச அஷ்டமி முற்பாதி வரையில் சந்திரன் சுபனுவர். இராகு கேதுக்கள் பாபக் கிரகங்கள் என்று பிரமாணமும் உண்டு.

சூ. 10-11. சூரியனுக்கு ஹேளி என்றும், சந்திரனுக்குச் சசி என்றும், பூமிபுத்திரனுன செவ்வாய்க்கு க்ரூராக்ஷன், ஆரன், ரக்தன், வக்கிரன் என்றும், புதனுக்கு ஹேமன், வித், க்ஞன், போதனன் என்றும், குருவிற்கு ஈட்யன், இஜ்யன், அங்கிரன், ஜீவன் என்றும், சுக்கிரனுக்கு ஆஸ்ப்புஜிதன், ஸிதன் என்றும், சனிக்கு கோணன், யமன், மந்தன், கிருஷ்ணன் என்றும் பெயராம்.

சூ. 12. சூரியனுக்குத் தாம்பர வர்ணமும், சந்திரனுக்கு வெண்மை நிறமும், செவ்வாய்க்குச் சிவப்பு நிறமும், புதனுக்குப் பச்சை நிறமும், குருவிற்கு மஞ்சள் நிறமும், சுக்கிரனுக்கு விசித்திர (பல) நிறமும், சனிக்குக் கறுப்பு நிறமும் ஆம்.

சூரியனுக்கு அக்கினியும், சந்திரனுக்குச் சலமும், செவ்வாய்க்குச் சுப்பிரமணியனும், புதனுக்கு விஷ்ணுவும், குருவிற்கு இந்திரனும்,

சுக்கிரனுக்கு இந்திராணியும், சனிக்குப் பிர்மாவும் அதி தேவதை களாம். வேறுவிதமாக அதி தேவதைகளையும் தெரிவிக்கின்றார்.

சூரியனுக்கு ஸ்ரீ சிவபெருமானும், சந்திரனுக்கு ஸ்ரீ பார்வதி தேவியும், செவ்வாய்க்கு ஸ்ரீ ஷண்முகப் பெருமானும், புதனுக்கு ஸ்ரீ மகாவிஷ்ணுவும், குருவிற்கு ஸ்ரீ தட்சிணாமூர்த்தியும், சுக்கிர னுக்கு ஸ்ரீ துர்க்காதேவியும், சனிக்கு சாஸ்தாவும் அதிதேவதை களாம். முன் சொன்ன பட்சத்தையும் பல ஆசாரியர்கள் அங்கீகரித் திருக்கின்றனர்.

சு. 13. மேற் சொன்ன பிரகாரம் சூரியாதி கிரக தேவதைகளை யறிந்து அவைகளுக்குரிய மந்திரங்களைக்கொண்டு பூசித்து அவைக ளின் திக்கை நோக்கி யாத்திரை செய்யும் அரசனுக்கு சுவர்ணம் யானை குதிரை ரதம் முதலாய சம்பத்துக்கள் பிரயாசையின்றிக் கிடைக்கின் றன. இந்த விதி மற்று முள்ளவர்களுக்கும் பொருத்தமாகும்.

சு. 14. சந்திரன், சுக்கிரன் இவர்கள் ஸ்திரீ கிரகங்கள் என்றும், புதன், சனி, இவர்கள் நபும்சககிரகங்கள் என்றும், சூரியன், செவ்வாய் குரு இவர்கள் புருஷக் கிரகங்கள் என்றும் அறிக. நபும்சகத்துவம் அசாதாரணமாகையால் புதன் ஸ்திரீ நபும்சகனென்றும், சனி, புந் நபும்சகனென்றும் அறிக.

குரு, சுக்கிரன் இவர்கள் பிராம்மண ஜாதி. சூரியன், செவ்வாய் இவர்கள் க்ஷத்திரிய ஜாதி. சந்திரன் வைசிய ஜாதி. புதன் சூத்திர ஜாதி. சனி சங்கர (கலப்பு) ஜாதி. (தாழ்ந்த ஜாதி யென்றறிக.)

செவ்வாய்-அக்கினி. புதன்-பூமி. குரு-ஆகாயம். சுக்கிரன்-ஜலம். சனி-வாயு. இவைகள் பஞ்ச பூதக்கிரகங்களாம். சூரியன் அக்கினி. சந்திரன் சலம், என்று பிரமாணாந்தரமு முண்டு.

சு. 15. சூரியனுக்கு உறைப்பு. சந்திரனுக்கு உப்பு. செவ் வாய்க்குக் கசப்பு. புதனுக்கு மிசிரம் (ஷட்ரசங்கலந்தது) குருவிற்கு இனிப்பு. சுக்கிரனுக்குப் புளிப்பு. சனிக்குத் துவர்ப்பு என கிரகங் களுடைய ரசங்களையும் அறிந்து கொள்க.

சூரியனுக்குத் தேவாலயம் அல்லது இராஜஸ்தானம். சந்திரனுக் குச் சலமுள்ளவிடம். செவ்வாய்க்கு நெருப்புள்ள விடம். புதனுக்கு விளையாடு மிடம். குருவிற்குப் பணம் வைக்குமிடம். சுக்கிரனுக்குப் படுக்கைப் புறம். சனிக்குப் புழுதியடைந்த எச்சிற்குழி ஆகிய இவை கள் இருப்பிடமாம்.

சு. 16. சூரியனுக்குத் தடிப்புள்ள வஸ்திரம். சந்திரனுக்குக் கோடி முண்டு. அங்காரகனுக்குத் தீயினால் பொசுங்கின வஸ்திரம். புதனுக்குச் சலத்தில் நனைந்த வஸ்திரம். குருவிற்குப் பட்டு வஸ்திரம். (இடைத்திறமுடையது) சுக்கிரனுக்குக் கெட்டியான வஸ்திரம். சனிக்குக் கிழிந்த வஸ்திரம் இவைகள் உடைகளாம்.

சூரியனுக்குத் தாம்ரம். சந்திரனுக்கு இரத்தினம். செவ்வாய்க்குச் சுவர்ணம். புதனுக்குப் பித்தளை, வெண்கலம், நாகம். குருவிற்கு வெள்ளி. சுக்கிரனுக்கு முத்து. சனிக்கு இரும்பு ஆகிய இவை திரவியங்களாம்.

சு. 17. சூரியனுக்கு அயனம் (ஆறு மாதம்). சந்திரனுக்கு க்ஷணம் (பத்து விநாடி). செவ்வாய்க்கு ஒரு தினம். புதனுக்கு ருது. (இரண்டு மாசம்) குருவிற்கு ஒரு மாசம். சுக்கிரனுக்கு ஒரு பட்சம். (15-தினம்) சனிக்கு ஒரு வருஷம் ஆகிய இவை காலங்களாம்.

சனிக்குச் சிசிர ருது. சுக்கிரனுக்கு வசந்த ருது. செவ்வாய்க்குக் கிரீஷ்மருது. சந்திரனுக்கு வருஷருது. புதனுக்குச் சரருது. குருவிற்கு ஹேமந்தருது ஆகிய இவை ருதுகாலங்களாம். சூரியனுக்குக் கிரீஷ்மருது என்று அந்நியர்கள் சொல்கின்றனர்.

சு. 18. சத்துரு விஜயாதிகளாகிய காரியங்களுடைய சாத்திய காலத்தைக் குறித்துச் சிந்திக்கும்போது பிரஸ்ன லக்கினாதிபதியாகிய கிரகத்திற்குச் சொல்லியிருக்கின்ற அயனாதி காலத்தை லக்கினத்தில் உதித்திருக்கின்ற அம்சகத்தின் சங்கியையினால் பெருக்கி வருகின்ற காலத்தைச் சொல்லவேண்டியது.

சு. 19. குருவிற்கு ருக்வேதம். சுக்கிரனுக்கு யஜுர் வேதம். செவ்வாய்க்குச் சாம வேதம். புதனுக்கு அதர்வ வேதம் என்று அறிந்துகொள்க.

சு. 20. குருவிற்குத் தேவலோகமும், சந்திரனுக்கு மனுஷ்ய லோகமும், சுக்கிரனுக்குப் பிதுர்லோகமும், சூரியன், செவ்வாய் இவர்களுக்குத் திர்யக் (பசுபட்சி முதலிய) லோகமும், புதன், சனி இவர்களுக்கு நரகலோகங்களும் இருப்பிடங்கள் ஆகின்றன. இவைகளைக் கொண்டு பூதமும் பவிஷ்யமும் ஜென்மங்களின் ஸ்திதி கதிகளும் அறிந்து கொள்ள வேண்டும்.

சு. 21. சூரியன் : சுருண்டு இருக்கின்ற குறைந்த தலைமயிரை உள்ளவனும், புத்தி சாமர்த்தியமுள்ளவனும், சத்திய ஸ்வ ரூபனும்,

அதிக உயரமில்லாதவனும், தேன்போன்ற பிங்கல வர்ணனும், மனோஹரமான நேத்திரங்களை யுடையவனும், சூரனும், அதி உத்கிருஷ்டனும், ஸ்திரத்தை யுள்ளவனும், சிவப்பும் கறுப்பும் கலந்திருக்கின்ற நிறத்தையுடையவனும், தடித்த கால்களையுடையவனும், பித்தப் பிரகிருதியுடையவனும், அஸ்தியையே பிரதான பலமாக வுடையவனும், மகத்துவம் காம்பீர்யம் இவைகளையுடையவனும், நாற்சதுரமான சரீரமுடையவனும், நீண்டிருக்கின்றகைகளை யுடையவனும், குசும புஷ்ப நிறமுள்ள வஸ்திரத்தைத் தரித்திருக்கின்றவனுமாவன்.

சு. 22. சந்திரன் : சௌம்யனும், மனோஹரமாகிய நேத்திரங்களை யுடையவனும், மதுரமான வார்த்தை பேசுகின்றவனும், வெண்மை நிறமுள்ளவனும், சிறியதாயிருக்கப்பட்ட சரீர முடையவனும், யௌவன யுக்தனும், மெலிந்து கறுத்து சுருண்டிருக்கின்ற தலைமயிரையுடையவனும், அறிவுள்ளவனும், மிருதுவானவனும், சத்துவ குண முள்ளவனும், சுந்தரனும், வாதகபங்கள் அதிகமாயுள்ளவனும், சுக காரியங்களில் பிரியமுள்ளவனும், ரக்தப் பிரசாதமுள்ளவனும், தயாசீலனும், விருத்தஸ்திரீகளினிடத்தில் பிரியமுள்ளவனும், அதிக அழகுள்ளவனும், ஸ்திரமில்லாதவனும், பலவர்ணங்களையுடைய வஸ்திரத்தைத் தரித்தவனுமாவன்.

சு. 23. செவ்வாய் : ஹ்ரஸ்வ (குள்ள) னும், பிங்களவர்ண நேத்திரங்களையுடையவனும், திடமான சரீர முள்ளவனும், நெருப்பைப் போன்று பிரகாசிப்பவனும், ஸ்திரமில்லாதவனும், மஜ்ஜையையே பிரதானமாகவுடையவனும், சிவப்பு வஸ்திரத்தைத் தரிக்கின்றவனும், மிகவும் சமர்த்தனும், சூரனும், ஆலோசிக்காமலே சொல்கின்றவனும், ஹிம்சா சீலனும், சிவந்து சுருண்டிருக்கும் தலை மயிரை யுடையவனும், யௌவனம் வாய்ந்த சரீர முள்ளவனும், பித்த சுபாவ முள்ளவனும், தமோ குணமுள்ளவனும், கோபியும், குரூரனும், பிடிவாத முள்ளவனும், அல்லது மிகத் துணிவுள்ளவனும், கொல்லுதல் முதலிய துஷ்கிருத்தியங்களில் சமர்த்தனும், அருணவர்ண முடையவனுமாவன்.

சு. 24. புதன் : சிவந்திருக்கின்ற கடைக்கண்களோடு கூடியவனும், மதுரமான வாக்குள்ளவனும், அருகம் புல்லின் நிறமுள்ளவனும், தோல்பல முள்ளவனும், ரஜோகுணப் பிரதானியும், யுக்தி யுக்தமான அல்லது பிரியமான அல்லது ஸ்பஷ்டமான வார்த்தையை யுடையவனும், தடித்தவனும், வாத பித்த கபங்கள் சமமாயுள்ளவ

னும், சந்துஷ்டனும், அதிக சுந்தரனுகவோ விரூபனுகவோ இல்லாத வனும், மிகவும் சாமர்த்திய முள்ளவனும், தேகத்தில் எல்லா விடங் களிலும் வியாபித்திருக்கின்ற நரம்புகளோடு கூடியவனும், ஆகிருதி பிரகிருதி வாக்கு முதலானவைகளைக் கொண்டு எல்லாரை யும் அநுசரித்து நடக்கின்றவனும், பச்சைப்பட்டு தரிப்பவனு மாவன்.

சு. 25. குரு: கொஞ்சம் மங்கல் வர்ண முள்ள கண்களை யுடையவனும், வேதம் அறிந்தவனும், சிம்மம் இடி இவைகளுடைய த்வனி போல் சப்தத்தை யுடையவனும், ஸ்திரமுள்ளவனும், சத்துவ குணப் பிரதானியும், விசுத்தமான பொன்னிறமுள்ள சரீரத்தோடு கூடியவனும், விசாலமும் உந்நதமும் பொருந்திய மார்புஸ்தானத்தை யுடையவனும், உயரமில்லாத (குள்ளமான) வனும், தர்மகாரியங்க ளில் பிரீதியுள்ளவனும், (நீதிமானும்) நிபுணனும், விசாலம் பொருந் திய கண்களோடு கூடியவனும், பொறுமையுள்ளவனும், மஞ்சளாடை தரிக்கின்றவனும், கபம் உள்ளவனும், கொழுப்பு நிறைந்த ஸ்தூல சரீரத்தோடு கூடியவனுமாவன்.

சு. 26. சுக்கிரன்: அழகுள்ளவனும், நீண்டிருக்கின்ற கைக ளோடும் தடித்த இடையோடும் விஸ்தாரமான முகத்தோடும் கூடின வனும்; சுக்கில தாது நிறைந்தவனும், பிரகாச முள்ளவனும், சுருண்டு நீண்டிருக்கின்ற கருமையான நல்ல தலைமயிரை யுடையவனும், அறு கம் புல்போன்ற சியாமள வர்ணமுடையவனும், காமாதிக்கிய முள்ள வனும், வாதம் கபம் உள்ளவனும், மிகவும் சௌபாக்கிய முடையவ னும், பல நிறங்களான வஸ்திரத்தைத் தரிக்கின்றவனும், ராஜஸ குணத்தையுடையவனும், கிரீடைகள் செய்கின்றவனும், புத்திமா னும், விஸ்தாரமான கண்களை யுடையவனும், ஸ்தூல தேகத்தை யுடையவனும், சாதுவாக வுள்ளவனுமாவன்.

சு. 27. சனி: பிங்கல (செங்கல் மங்கலான) வர்ணமுடையவ னும், ஆழமான (குழிவிழுந்த) கண்களோடு கூடியவனும், சிறுத்து நீண்டிருக்கின்ற சரீர முள்ளவனும், வெளியில் தெரிகின்ற நரம்புக ளுடையவனும், சோம்பலுள்ளவனும், கறுத்த நிற முள்ளவனும், வாதம் உள்ளவனும், மிகுந்த துஷ்டனும், பெருநரம்புள்ளவனும், தயையில்லாதவனும், மூர்க்கத்தன முள்ளவனும், நீண்டிருக்கின்ற நகம் பற்களோடு கூடியவனும், அழுக்குள்ளவனும், கடினமான சுபாவ முள்ளவனும், சுத்தமில்லாதவனும், தமோகுண முள்ளவனும், பயங்

கரனும், கோப முள்ளவனும், கிழத்தன்மையினுல் வளைந்திருப்ப கறுத்த வஸ்திரம் தரிக்கின்றவனுமாவன்.

## நைஸர்க்கிகம்.

சு. 28-29. சூரியனுக்கு : சந்திரனும், செவ்வாயும், குருவும் மித்துருக்கள். சுக்கிரனும், சனியும் சத்துருக்கள். புதன் சமமானவர்.

சந்திரனுக்கு: சூரியனும், புதனும் மித்துருக்கள், சத்துருக்களில்லை. செவ்வாய், குரு, சுக்கிரன், சனி சமமானவர்கள்.

சேவ்வாய்க்கு: சூரியனும், சந்திரனும், குருவும் மித்துருக்கள். புதன், சத்துரு. சுக்கிரன், சனி சமமானவர்கள்.

புதனுக்கு: சூரியனும், சுக்கிரனும் மித்துருக்கள். சந்திரன், சத்துரு. செவ்வாய், குரு, சனி சமமானவர்கள்.

குருவிற்கு: சூரியனும், சந்திரனும், செவ்வாயும் மித்துருக்கள். புதனும், சுக்கிரனும், சத்துருக்கள். சனி, சமமானவர்.

சுக்கிரனுக்கு: புதனும், சனியும், மித்துருக்கள். சூரியனும், சந்திரனும் சத்துருக்கள். செவ்வாய், குரு சமமானவர்கள்.

சனிக்கு: புதனும், சுக்கிரனும் மித்துருக்கள். சூரியனும், சந்திரனும், செவ்வாயும் சத்துருக்கள். குரு சமமானவர்.

இவ்விதம் கிரகங்களுடைய நிஸர்க்க மித்துரு, நிஸர்க்க சத்துரு, நிஸர்க்க சமன் அறிக.

இராகு கேதுக்களுக்கு: புதனும் சுக்கிரனும் சனியும் மித்துருக்கள். சூரியனும் சந்திரனும் குருவும் சத்துருக்கள். செவ்வாய் சமமானவர்.

சு. 30. தற்கால மித்துரு தற்கால சத்துருக்களைச் சோல்லுகின்றார். எல்லாக் கிரகங்களுக்கும் தனித்தனியே தாமிருக்கும் இடத்திலிருந்து 2-12-3-11-4-10 இந்த ஸ்தானங்களில் இருக்கின்ற கிரகங்கள் தம்மில் தற்கால மித்திரர்களும், 5-9-6-8-7-1 இந்த ஸ்தானங்களில் இருக்கின்ற கிரகங்கள் தம்மில் தற்கால சத்துருக்களும் ஆகின்றார்கள்.

சு. 31. நிஸர்க்க மித்துருவும் தற்கால மித்துருவுமானுல் அதிமித்துரு என்றும், நிஸர்க்க, சமனும் தற்கால மித்துருவுமானுல் மித்துரு என்றும், நிஸர்க்க சத்துருவும் தற்கால மித்துருவுமானுல் சமன் என்றும், நிஸர்க்க சத்துருவும் தற்கால சத்துருவுமானுல் அதிசத்துருவென்றும், நிஸர்க்க சமனும் தற்கால சத்துருவுமானுல் சத்துரு வென்

றும், நிஸர்க்க மித்துருவும் தற்கால சத்துருவுமானல் சமன் என்றும் இந்த பேதத்தை ஜாதகம் பிரஸ்னம் முதலியவைகளில் கிரகஸ்திதிகளைக்கொண்டு அறிந்து கொள்க.

**சு. 32-33.** எல்லாக் கிரகங்களும் அவரவர்களுடைய 3-10-ஆம் பாவங்களைக் கால்பாக திருஷ்டியாயும், 5-9-ஆம் பாவங்களை அரைப் பாக திருஷ்டியாயும், 4-8-ஆம் பாவங்களை முக்கால்பாக திருஷ்டியாயும், ஏழாம் பாவத்தைப் பூரண திருஷ்டியாயும் பார்க்கின்றார்கள்.

இனிவிசேட திருஷ்டியைச் சொல்லுகின்றார். சனிக்கு மூன்று பத்தாம் பாவங்களிலும், குருவிற்கு ஐந்து ஒன்பதாம் பாவங்களிலும், செவ்வாய்க்கு நான்கு எட்டாம் பாவங்களிலும் திருஷ்டியுண்டு. மற்ற கிரகங்களான சூரியன், சந்திரன், புதன், சுக்கிரன், இவர்கள் ஏழாம் பாவத்தை மட்டிலும் பூரண திருஷ்டி கொண்டு பார்க்கின்றார்கள். எந்தக் கிரகத்திற்கும் 1-2-6-11-12 இந்தப் பாவங்களில் ஒரு விதத்திலும் திருஷ்டி வருகின்றதில்லை யென்றறிக.

சு. 34. எல்லாக் கிரகங்களுக்கும் * பல பிண்டத்தைச் செய்து பலாபலங்களை நிர்ணயிப்பதற்குத் திக்குபலம், ஸ்தானபலம், கால

---

* உச்சபல, சப்தவர்க்கஜபல, யுக்மபாம்சகதபல, கண்டகாதிபல, பாந்தமத்தியமுகபல, திக்குபல, தினராத்திரிபல, பட்சபல, அன்ஹஸ்திருபாகபல, வருஷ, மாச, தின, ஹோர பல, அயனபல, சேஷ்டாபல, கிரககிராந்திபல, ஸ்புடகிராந்திபல, யுத்தபல, நைஸர்க்கிகபல, திருக்பலமாதியே ஸமஸ்த பலமாமென்றும் இவையாவும் சேர்ந்ததே **பலபிண்ட**மென்றுங் கூறுவர் பெரியார்.

**பலபிண்ட சங்கை** : சூரியனுக்கு $6\frac{1}{3}$. சந்திரனுக்கு 6. செவ்வாய்க்கு 5. புதனுக்கு 7. குருவிற்கு $6\frac{1}{3}$. சுக்கிரனுக்கு $5\frac{1}{2}$. சனிக்கு 5 ஆம்.

**ஸ்தானபலத்தில்** : சூரியன், புதன், குரு, இவர்களுக்கு $2\frac{3}{4}$ அல்லது 3 ரூபமும், **திக்குபலத்தில்** $\frac{3}{4}$ ரூபமும், **சேஷ்டாபலத்தில்** $\frac{5}{6}$ ரூபமும், **காலபலத்தில்** $1\frac{7}{8}$ ரூபமும், **அயனபலத்தில்** $\frac{1}{2}$ ரூபமும் கிடைத்தால் பலவான்களாவார்கள்.

**ஸ்தானபலத்தில்** : சந்திரன், சுக்கிரன், இவர்களுக்கு $2\frac{1}{4}$ ரூபமும், **திக்குபலத்தில்** $\frac{5}{6}$ ரூபமும், **சேஷ்டாபலத்தில்** $\frac{1}{2}$ ரூபமும், **காலபலத்தில்** $1\frac{2}{3}$ ரூபமும், **அயனபலத்தில்** $\frac{2}{3}$ ரூபமும் கிடைத்தால் பலவான்களாவார்கள்.

**ஸ்தானபலத்தில்** : செவ்வாய், சனி இவர்களுக்கு $2\frac{1}{2}$ ரூபமும், **திக்குபலத்தில்** $\frac{1}{2}$ ரூபமும், **சேஷ்டாபலத்தில்** $\frac{2}{3}$ ரூபமும், **காலபலத்தில்** $1\frac{1}{8}$ ரூபமும், **அயனபலத்தில்** $\frac{1}{3}$ ரூபமும் பெற்றால் பலவான்களாவார்கள். (ரூபம் = பாகை)

பலம், சேஷ்டாபலம் ஆகிய நான்கு விதமான பலங்களை அறிந்து கொள்ளவேண்டும். ஒவ்வொரு பிரகாரத்திலும் பலமில்லையென்றால் அந்தக் கிரகங்கள் பலஹீன முள்ளவர்களென்றறிக. அடுத்த சுலோகத்தில் அவைகளின் விவரத்தைக் கூறுகின்றார்.

சு. 35. இங்கு திக்கு பல முதலியவற்றைச் சொல்லுகின்றார். * குரு புதன் இலக்கினத்திலும் (கிழக்கு), † சூரியன் செவ்வாய் 10-ஆம் பாவத்திலும் (தெற்கு), ‡ சனி 7-ஆம் பாவத்திலும் (மேற்கு), § சந்திரன் சுக்கிரன் 4-ஆம் பாவத்திலும் (வடக்கு) இருந்தால் பூர்ணபலம் உண்டு. இவை திக்கு பலமாகின்றன. உச்சம், மூலத்திரிகோணம், தனது க்ஷேத்திரம், மித்துரு க்ஷேத்திரம் இந்த ஸ்தானங்களில் நிற்கின்ற கிரகங்களுக்கும் - தனது நவாம்சத்திலிருக்கும் கிரகத்திற்கும் - மித்துரு கிரகங்களுடைய திருஷ்டியும், சுபக்கிரகங்களுடைய திருஷ்டியும் பெற்ற கிரகங்களுக்கும் பலமுண்டு. சந்திரன் சுக்கிரன் இவர்கள் யுக்ம (பெண்) விராசியிலும் மற்றக் கிரகங்களான சூரியன், செவ்வாய், புதன், குரு, சனி இவர்கள் ஓஜ (ஆண்) விராசியிலுமிருப்பின் பலம் பெற்றவர்களாவார்கள். இது ஸ்தானபலமாம்.

---

* குரு, புதன் இவர்கள் உதய விராசியிலிருக்கின் விசேட பலமுடைத்து. அது மானிட விராசியாயின் இராசி பலமுடைத்து.

† சூரியன், செவ்வாய் இவர்கள் 10-ஆம் இடத்தில் இருக்கின் பலவான்கள். அவ்விராசி நாற்கால் ராசியாகவரின் இராசி பல முடையதாம்.

‡ சனி, இராகு இவர்கள் 7-ம் இடத்தில் இருக்கின் பல முடையோர். அவ்விராசி கீட விராசியாயின் இராசி பலமுடையதாம்.

§ சந்திரன் - சுக்கிரன் இவர்கள் 4-ஆம் இடத்தில் இருக்கின் பலமுடையோர். அவ்விராசி ஜல விராசியாயின் இராசி பல முடையதாம்.

**மானிட விராசிகள் :** மிதுனம், துலாம், கன்னி, கும்பம், தநுசின் முற்பாதி.

**நாற்கால் ராசிகள் :** மேடம், இடபம், சிம்மம், மகரத்தின் முற்பாதி, தநுசின் பிற்பாதி.

**கீட விராசிகள் :** கடகம், விருச்சிகம்.

**ஜலராசிகள் :** மீனம், மகரத்தின் பிற்பாதி.

**குறிப்பு :** இதன் முழு விவரமும் அறிய விரும்புவார் யாம் அச்சிட்டுள்ள ஸ்ரீபதி ஜாதக கர்ம பத்ததி விருத்தியுரையின் 3-ஆம் அத்தியாயத்தே மிகத் தெளிவாய்க் காண்க.

சு. 36. சூரியன், குரு, சுக்கிரன் இவர்களுக்குப் பகலிலும், சந்திரன், செவ்வாய், சனி இவர்களுக்கு இரவிலும் பூர்ண பலமுண்டு. புதனுக்குப் பகலிலும் இரவிலும் பலமுண்டாம். காலஹோராதிபனுன கிரகத்திற்குப் பூர்ணபலமும், வாராதிபனுன கிரகத்திற்கு முக்கால் பலமும், மாசாதிபனுன கிரகத்திற்கு அரைப்பலமும், வருஷாதிபனுன கிரகத்திற்குக் கால்பலமும் உண்டாம்.

சுபக்கிரகங்கள் சுக்கில பட்சத்திலும், பாபக்கிரகங்கள் கிருஷ்ண பட்சத்திலும் பலமுள்ளவராவர். யுத்தத்தில் ஜபமடைந்த கிரகங்களும், வக்கிரம் பெற்ற கிரகங்களும், விருத்தியாயிருக்கின்ற * ரஸ்மிகளோடு கூடிய கிரகங்களும் பலவான்களாகின்றுர்கள். சூரியன் சந்திரன் இவர்கள் உத்தராயணத்தில் பலவான்களென சத்தியாசாரியார் கூறுகின்றுர்.

சு. 37. சூரியன், செவ்வாய், குரு, சுக்கிரன் இவர்கள் உத்தராயணத்திலும், சந்திரன் சனி இவர்கள் தட்சிணுயனத்திலும் பலவான்களாவார்கள். இரண்டு அயனங்களிலும் புதனுக்குப் பலமுண்டு. இவ்விதம் சொல்லப் பெற்றவைகள் யாவும் கால பலங்களென்றறிக.

சு. 38. இராசிகளுடைய முதல் திரேக்காணத்தில் இருக்கும் புருஷகிரகங்களும், மத்திய திரேக்காணத்தில் இருக்கும் நபும்சக கிரகங்களும், கடைசித் திரேக்காணத்தில் இருக்கும் ஸ்திரீ கிரகங்களும் கால்பலம் உடையனவாம். கேந்திரத்தில் நிற்கின்ற கிரகங்களுக்குப் பூர்ணபலமும், பணபரத்தில் நிற்கின்ற கிரகங்களுக்கு அரைப்பலமும், ஆபோக்லிபத்தில் நிற்கின்ற கிரகங்களுக்குக் கால்பலமும் உண்டென்ப. மௌட்யம் இல்லாத கிரகங்களும் பலமுள்ளனவாகின்றன. (மௌட்யம் = மூடம், அஸ்தமனம்.)

சு. 39. பகலையும் இரவையும் மும்மூன்றுய்ப் பிரித்தால் பத்துப் பத்து நாழிகை வீதம் சராசரி ஆறு பாகங்கள் ஆகுகின்றன. அவற்றுள் பகலின் முதற்பாகத்தில் புதனும், மத்திய பாகத்தில் சூரியனும், கடைசி பாகத்தில் சனியும், இரவின் முதற்பாகத்தில் சந்திரனும், மத்திய பாகத்தில் சுக்கிரனும், கடைசி பாகத்தில் செவ்வாயும் பூர்ண பலவந்தர்களாகின்றனர். தினராத்திரி பேதமில்லாமல் குருவிற்கு எப்போதும் பூர்ண பலமுண்டாம். மேற்சொல்லப் பெற்றுள்ள பாகத்

* ரஸ்மீ = கிரணம். இதனைக் கணிக்கு முறை யாவும் என்னுல் வெளியிடப்பெற்றுள்ள ஸ்ரீபதி ஜாதககர்ம பத்ததியில்காண்க.

தில் எந்தப் பாகத்தில் ஜனனமோ அந்தப் பாகத்திற்குச் சொன்ன கிரகத்திற்கும் குருவிற்கு மட்டுமே இந்தப்பலம் உண்டாம். மற்றக் கிரகங்களுக்குத் தினராத்திரி பலம் இல்லை.

சு. 40. இனிமேல் நிஸர்க்கப்பலத்தைச் சொல்லுகின்றார். சனி, செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சந்திரன், சூரியன் இந்தக் கிரகங்கள் ஒருவரைவிட ஒருவர் பலமுள்ளவர்களாவர். இதில் சூரியனுக்கு மட்டும் பூர்ண பலமுண்டாம். மற்ற கிரகங்களுக்கு மேற்சொன்ன பூர்ணபலத்தில் 7-ல் ஒவ்வொரு அம்சம் குறைந்து கொண்டே வரும் இது நைஸர்க்கிக பலமாம்.

நான்காவது அத்தியாயம் முற்றிற்று.

# ஐந்தாவது அத்தியாயம்.

## மிஸ்ர கிரகாவஸ்தைகள்.

சு. 1. இராசி ஸ்வரூபாத்தியாயத்தையும் கிரக ஸ்வரூபாத்தியாயத்தையும் சொன்ன பிறகு எல்லா விடங்களிலும் இன்றியமையாததாயுள்ள மிஸ்ரகம் என்கிற அத்தியாயத்தைச் சொல்லுகின்றார்.

சு. 2. எல்லாக் கிரகங்களுக்கும் தீப்தன், சுவஸ்தன், முதிதன், சாந்தன், சக்தன், நிபீடிதன், பீதன், விகலன், கலன் என்னும் ஒன்பது விதமான அவஸ்தைகள் உண்டாகின்றன.

சு. 3-4. தனது பரமோச்சத்தினை யடைந்து நிற்கின்ற கிரகத்திற்குத் தீப்தன் என்னுமவஸ்தை யுண்டாகின்றது. இவ்விதமே தனது மூலத் திரிகோணத்திலிருக்கும் கிரகத்திற்கு தீப்தன் என்னுமவஸ்தை யுண்டாகின்றது.

ஆனால், வேறுசில நூலாசிரியர்கள் தனது மூலத்திரி கோணத்திலிருக்கும் கிரகத்திற்குச் சுகிதாவஸ்தை உண்டாகிறதெனக் கூறுகின்றார்கள்.

சொட்க்ஷேத்திரத்தை யடைந்த கிரகத்திற்கு சுவஸ்தாவஸ்தை உண்டாகின்றது.

மித்திரக்ஷேத்திரத்தையடைந்த கிரகத்திற்கு முதிதாவஸ்தை யுண்டாகின்றது.

சுபஷட்வர்க்கத்தினை யடைந்த கிரகத்திற்கு சாந்தாவஸ்தை யுண்டாகின்றது.

வக்கிரித்துப் பலவானான கிரகத்திற்குச் சக்தனென்னும் அவஸ்தை யுண்டாகின்றது.

யுத்தத்தில் தோல்வியடைந்துள்ள கிரகத்திற்கு நீபீடிதன் என்னும் அவஸ்தை யுண்டாகின்றது.

பரமநீசத்தினை யடைந்த கிரகத்திற்குப் பீதன் என்னும் அவஸ்தை யுண்டாகின்றது.

அஸ்தமனத்தை (மூடத்தை) யடைந்த கிரகத்திற்கு விகலன் என்னும் அவஸ்தை யுண்டாகின்றது.

4

பாபஷட்வர்க்கத்தினை யடைந்த கிரகத்திற்குக் கலன் என்னும் அவஸ்தை யுண்டாகின்றது.

வேறு சில கிரந்தங்கள் சத்துரு க்ஷேத்திரத்தினை யடைந்த கிரகத்திற்குத் தீனன் என்னும் அவஸ்தை யுண்டாகின்றது என்று கூறுகின்றன. மற்றும் சில ஹோரா சாஸ்திரங்கள் தீன அவஸ்தையையும் சேர்த்துப் பத்து அவஸ்தைகளெனப் பகர்கின்றன.

சு. 5. கிரகம் தீப்தாவஸ்தையை அடைந்திருக்கின்ற சமயம் ஜனிக்கின்றவன்: தனது பிரதாப அக்கினியினால் சத்துருவர்க்கத்தை ஜெயித்துத் திரண்ட பொருளாளனாய், மும்மதப் பெருக்கால் பூமியை நனைப்பிக்கும் கஜ சிரேஷ்டங்கள் நிரம்பப்பெற்ற பரந்த மண்டலாதிபதியாவன்.

சு. 6. கிரகம் சுவஸ்தனாயிருக்கும்போது ஜனிக்கின்றவன்: பலவித இரத்தினங்களை யுடையவனாயும், சுகம் சுவர்ணம் பரிஜனம் இவைகளோடு கூடினவனாயும், அரசனின் சேனைத்தலைவனாயும், கிரகம் சாலி முதலியவைகளோடு கூடினவனாயும், குடும்ப விருத்தியுடையவனாயும் இருப்பன்.

சு. 7. கிரகம் முதிதனாயிருக்கும்போது ஜனிக்கின்றவன்: அழகுடன் கூடிய ஸ்திரீகளோடும், சுவர்ண இரத்தின தனங்களோடும், சகல சத்துருவர்க்கத்தை ஜெயிக்கின்ற தன்மையோடும், அநேக சுகங்களை அநுபவிப்பான்.

சு. 8. கிரகம் சாந்தனாயிருக்கும்போது ஜனிக்கின்றவன்: சாந்தசீலனாயும், சுகம் தனம் போகம் இவைகளோடு கூடி மந்திரியாயும், வித்வானாயும், பரோபகாரியாயும், தர்மிஷ்டனாயும் இருப்பன்.

சு. 9. கிரகம் சக்தனாயிருக்கும்போது ஜனிக்கின்றவன்: பாரியைகளோடு கூடினவனாயும், விசேஷ வஸ்திரங்கள் சுகந்த வாசனைத் திரவியங்கள் மாலைகள் இவைகளை யுடையவனாயும், எங்கும் தனது குணத்தினால் வியாபித்த கீர்த்தியை யுடையவனாயும், சகல ஜனங்களுக்கும் பிரியமுள்ளவனாயும், பிரசித்த முள்ளவனாயும் இருப்பன்.

சு. 10. கிரகம் நிபீடிதனாக இருக்கும்போது ஜனிக்கின்றவன்: துக்கமுள்ளவனாயும், ரோக முள்ளவனாயும், சத்துருக்களினால் கிலேசத்தை அநுபவிக்கின்றவனாயும், அந்நிய தேசங்களில் அலைந்து நடக்கின்றவனாயும், பந்துக்களுடைய வியோகத்தால் (பிரிவால்) துக்கமடைகின்றவனாயும் இருப்பான்.

சு. 11. கிரகம் பீதனயிருக்கும்போது ஜனிக்கின்றவன் : அநேக சாதன கருவிகளோடு கூடினவனுயிருந்தாலும் அரசனுல் சக்தி க்ஷயம் சம்பவித்தவனும், சத்துருவினுல் பீடிக்கப்பட்டவனும், தோல்வியுள்ளவனும், பயந்தவனும், கடினமான தரித்திரத்தை அநுபவிக்கின்றவனும், மரணத்தை அடைகின்றவனும் இருப்பான்.

சு. 12. கிரகம் விகலனுயிருக்கும்போது ஜனிக்கின்றவன்: தனது கிருகத்தில் நின்றும் தனது தேசத்தில் நின்றும் விலகினவனும், கிலேசத்தை அநுபவிக்கின்றவனும், அழுக்குள்ளவனும், (சுத்த மில்லாதவன்) அந்நிய தேச சஞ்சாரியாயும், தனநாசமுடைய வனும், சத்துருக்களின் பலத்தால் பயப்பட்டு பிரமிக்கின்ற மன தோடு கூடினவனும் இருப்பான்.

சு. 13. கிரகம் கலன் என்னும் அவஸ்தையை அடைந்திருக்கும் போது ஜனிக்கின்றவன் : பிரயாசையோடு ஸ்திரீயை ஆதரிப்பதால் மிகவும் துக்கிக்கின்றவனும், சகல சம்பத்தும் நசிக்குங் காலத்தில் கலங்கும் மனதுடையவனும், ஒரு விதத்திலும் தனது துக்கத்தை யொழிக்க நிவிருத்தியில்லாதவனும், நிந்திக்கப் பெறுபவனும் இருப்பன்.

சு. 14. கிரகங்களுக்குத் தங்களுடைய உச்சராசி ஸ்திதியிலும் வக்கிர சாரத்திலும் அன்ய தூஷ்யங்களுண்டாயிருந்தால் பலம் இல்லை யென்று சிலர் சொல்லுகின்றார்கள். என்றாலும், எல்லாக்கிர கங்களுக்கும் தனது உச்சத்திலும் வக்கிர கதியிலும் பலம் உண் டென்று பலர் அபிப்பிராயப்படுகின்றனர். இவ்விடத்தில் உச்சராசி ஸ்திதியைக் காட்டிலும் உச்சராசி அம்சகம் பிரதானமென்று சிலரும், இரண்டும் ஒன்று போலவே அறியப்படவேண்டியது தானென்று வேறுசிலரும் சொல்லுகின்றனர்.

சு. 15. தன்னுடைய உச்சத்தில் நிற்கின்ற கிரகங்களுக்குப் பூர்ணபலமும், மூலத்திரிகோணத்திலும் ஸ்வக்ஷேத்திரத்திலும் நிற் கின்ற கிரகங்களுக்கு மத்தியம பலமும், மித்திர கிரகங்களால் பார்வை பெற்ற கிரகங்களுக்கும் மித்திரக்ஷேத்திரத்தில் நிற்கும் கிரகங்களுக் கும் அற்பபலமும் உண்டென்கின்றார்கள்.

சு. 16. சுக்கில பட்சப் பிரதமைமுதல் தசமி வரையில் 10 தினம் சந்திரன் மத்தியம பலனுவன். அதன்மேல் 10 தினம் (சுக்கில பட்ச ஏகாதசிமுதல் கிருஷ்ணபட்ச பஞ்சமி வரையில்) பூர்ண பல

ஞவன். அதன்மேல் 10 தினம் (கிருஷ்ண பட்ச சஷ்டிமுதல் அமாவாசியை வரையில்) பலஹீனஞவன். சுக்கில பட்சத்தில் சந்திரனென்மேலும் விருத்தியாகின்ற பலத்தோடு கூடியவனுமென்றும், கிருஷ்ணபட்சத்தில் முறையாகக் குறைந்து வருகின்ற பலத்தோடு கூடியவனுமென்றும் தாரதம்மியம் அறிந்துகொள்ளவேண்டும்.

சு. 17. பரிபூரணத்தை அடைந்திருக்கின்ற சகல கலைகளோடு கூடியவனும், அதிசயத்தினலே தெளிந்திருக்கின்ற மண்டலத்தோடு கூடியவனும், பரிபூர்ணனுமாகிய சந்திரன் தடையில்லாமல் ராஜ பலத்தைச் செய்கின்றவனுகின்றான். மற்றக் கிரகங்களுடைய பலத்தைக் காட்டிலும் சந்திர பலத்திற்குச் சிரேஷ்ட முண்டு என்று எல்லாப் பூர்வாசாரியர்களும் சொல்லுகின்றார்கள்.

சு. 18. சந்திரன் நிற்கின்ற இராசியின் அதிபனை கிரகமும், இலக்கினுதிபனுபிருக்கின்ற கிரகமும், குருவும் கேந்திரஸ்தானங்களில் (1-4-7-10 இந்தப் பாவங்களில்) நிற்கின்ற சமயம் ஜனித்தவன் தனது ஜீவித காலத்தில் மத்தியில் சுகத்தை அநுபவிக்கின்றவனுகின்றான்.

சு. 19. இராசியினுடையவும் இராசியதிபனுடையவும் பலத்தையநுசரித்து ராசிபலத்தைக் கற்பித்தல் வேண்டும். இவ்விரண்டு பலன்களும் ஒருமித்துச் சம்பவிக்கும்போது அவற்றுள் ஒன்றுக்கு ஹானி சம்பவிக்கின்றது.

சு. 20. இலக்கினத்திலிருக்கும் கிரகங்களுக்கும் இலக்கினுதிபதிக்கும் ஒன்று போலவே பலம் சாம்யமாக வந்தால் அப்போது நைஸர்க்கிக பலங்கொண்டு அவருடைய பலாதிக்கியத்தை அறியவேண்டும். இலக்கினுதிபதி பலாதிக்ய முடையனுயின், இலக்கினம் பல முடையதாம். இங்கு இலக்கினுதிபதிக்குத் துல்லியமான பலம் எனச் சூடாமணி கூறுகின்றது.

சு. 21-22-23-24. சூரியன் முதலிய கிரகங்களுடைய மூலத்திரிகோணங்கள் இன்னின்ன ராசிகளென்று மூன்ருவது அத்தியாயம் 37-ஆம் சுலோகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. சில ராசிகள் சில கிரகங்களுக்கு உச்சமும் ஸ்வக்ஷேத்திரமும் மூல க்ஷேத்திரமும் ஆக இருக்கின்றமையால் அவைகளுடைய வித்தியாசத்தை இந்தச் சுலோகங்களால் சொல்லுகின்ருர்.

புதனுக்குக் கன்னியாவிராசியில் 15 பாகைவரை அதியுச்சமும் அதன்மேல் 5 பாகை வரையில் (அஃதாவது 20 பாகை வரையில்)

மூலக்ஷேத்திரமும், அதன் மேல் 10 பாகை வரையில் (அஃதாவது 30 பாகைவரையில்) ஸ்வக்ஷேத்திரமுமாகின்றன.

செவ்வாய்க்கு மேடத்தில் 12 பாகைவரையும், குருவிற்குத் தநுசில் 10 பாகை வரையும், சுக்கிரனுக்குத் துலாத்தில் 5 பாகைவரையும், சூரியனுக்குச் சிம்மத்தில் 20 பாகைவரையும், சனிக்குக் கும்பத்தில் 20 பாகைவரையும் மூலக்ஷேத்திரங்களும், சேடபாகைகள் (அந்தந்த இராசிகளில்) முழுவதும் ஷை கிரகங்களுக்கு ஸ்வக்ஷேத்திரங்களுமாகின்றன.

சு. 25. தன்னுடைய பரமோச்சத்தில் நிற்கின்ற கிரகம் தனக்குச் சொல்லப்பட்டிருக்கின்ற சுபபலம் முழுவதும் கொடுக்கின்றது. பரம நீசத்தில் நிற்கின்ற கிரகம் சொல்லப்பட்ட சுபபலத்தைக் கொஞ்சமேனும் கொடுக்கின்றதில்லை. சத்துரு க்ஷேத்திரத்தில் நிற்கின்ற கிரகம் கொஞ்சமாக சுபபலத்தைச் செய்யும். மித்துரு க்ஷேத்திரத்தில் நிற்கின்ற கிரகம் நான்கில் ஒருபாகம் சுபத்தைக் கொடுக்கும். ஸ்வக்ஷேத்திரத்தில் நிற்கின்ற கிரகம் பாதி சுபபலத்தைக் கொடுக்கும். மூலக்ஷேத்திரத்தில் நிற்கின்ற கிரகம் முக்கால் பாகம் சுபபலத்தைக் கொடுக்கும்.

சு. 26. தனது பரமநீசத்தில் இருக்கும் கிரகம் தனக்குச் சொல்லப்பட்ட அசுபபல முழுவதையும் செய்யும். சத்துரு க்ஷேத்திரத்தில் இருக்கும் கிரகம் அசுபபலத்தைச் செய்யும். பரமோச்சத்தில் இருக்கும் கிரகம் அசுபபலத்தைச் செய்கின்றதில்லை. மித்துரு க்ஷேத்திரத்திலிருக்கும் கிரகம் முக்கால் பங்கு அசுபபலத்தைச் செய்யும். ஸ்வக்ஷேத்திரத்திலிருக்கும் கிரகம் பாதி சுபபலமும், பாதி அசுபபலமுமாக மிசிர பலத்தைச் செய்யும். மூலக்ஷேத்திரத்திலிருக்கின்ற கிரகம் நாலிலொருபாகம் அசுபபலத்தைச் செய்யும்.

சு. 27. * கேது † உல்க்கா முதலியவைகளால் துன்பப்பட்ட கிரகமும், ரூக்ஷனுயிருக்கின்ற (மூடம், அஸ்தமனம், மௌட்யம்) கிரகமும், நீசத்திலிருக்கும் கிரகமும், சத்துரு க்ஷேத்திரத்திலிருக்கும் கிரகமும், யுத்தத்தில் தோல்வியடைந்த கிரகமும் ஆகிய இவ்வெல்லாக் கிரகங்களும் தங்களுக்குச் சொல்லப்பட்டிருக்கின்ற சுபபலன்களைக் கொடுக்காமல் நேர் விரோதமான பலாபலன்களையே

* சூரியனிருக்கும் நட்சத்திரத்திற்குப் பத்தாம் நட்சத்திரம்.

† சூரியனிருக்கும் நட்சத்திரத்திற்குப் பதினெட்டாம் நட்சத்திரம்.

அதிகமாகக் கொடுக்கின்றார்கள். ரூக்ஷாதி லட்சணங்களைச் சம்ஹிதை யில் அறிந்து கொள்க.

சு. 28. உச்சத்தில் இருக்கும் கிரகம் அதிக சிரேஷ்டமான ஐசுவரியத்தைக் கொடுக்கும். மூலத் திரிகோணத்தில் இருக்கும் கிரகம் அரசனிடம் மந்திரித்துவத்தையோ அல்லது சேனாதிபதித்து வத்தையோ ஆக்குவிக்கும்.

சு. 29. ஸ்வக்ஷேத்திரத்திலுள்ள கிரகங்கள் சந்துஷ்டியையும் தன தானியாதி சம்பத்துக்களையும் கொடுக்கும். மித்துரு க்ஷேத்திரத்தி லிருக்கும் கிரகம் அதிக கீர்த்திமானாக்குவிக்கும்.

சு. 30. தனது ஹோரையில் இருக்கும் கிரகம் ஜாதகனுக்குத் தேஜஸையும், அதிக சௌக்கியத்தையும், ஸ்திரமான சம்பத்தையும், அரசர்களால் கொடுக்கப்படும் தனத்தையும், சூரத்துவத்தையும், பிறரால் நன்கு மதிக்கப்படுவதையும், விசாரிக்கப்படுவதையும் உண் டாக்குவிக்கும்.

சு. 31. தனது திரேக்காணத்தில் இருக்கும் கிரகம் ஜாதகனுக்கு அதிகமான (மேம்பாடுள்ள) குணத்தைக் கொடுக்கும். தனது நவாம் சத்தில் இருக்கும் கிரகம் ஜாதகனைப் பிரசித்தி யுள்ளவனாக்குவிக்கும்.

சு. 32. கிரகங்களுக்குச் சப்தமாம்சக பலமிருப்பின் ஜாதகனைத் துணிவுள்ளவனாகவும் பிடிவாதமுள்ளவனாகவும், தனவானாகவும், கீர்த் திமானாகவும் செய்விக்கும். கிரகங்களுக்குத் துவாதசாம்சக பலமுண் டாயிருப்பின், ஜாதகன் காரியங்களில் பிரியமுள்ளவனாகவும், பரோப காரத்தைச் செய்கின்றவனாகவும் இருப்பான்.

சு. 33-34. திரிம்சாம்சக பலம் பெற்ற கிரகங்கள் அதிகமான சௌக்கியத்தையும், நல்ல குணத்தையும், ஜாதகனுக்குக் கொடுத்து இரட்சிக்கும். சுபதிருஷ்டியைப் பெற்ற கிரகங்கள் ஜாதகனைத் தன வானும், பிரசித்தனும், சௌபாக்கியத்தோடு கூடினவனும், பிரதான்யமுள்ளவனும், நிர்மலனும், சௌந்தர்ய முள்ளவனு மும், நல்ல சரீரத்தோடு கூடினவனும், நல்ல சுகங்களை அனுப விப்பவனும் இருக்கச் செய்யும். அயன பலமுள்ள கிரகங்கள் தமது திக்கில் பலவிதமான சம்பத்துக்களை ஜாதகனுக்குக் கொடுக்கும்.

சு. 35. ஓஜராசி பலத்தோடும் உக்மராசி பலத்தோடும் கிரகங் கள் இருக்கின் ஜாதகன் ஜனங்களால் பூசிக்கப்படுபவனும், கலா வித்தைகளில் அதிக சாமர்த்திய முள்ளவனும், பிரசன்ன மனதோடு

கூடியவனும், ஆரோக்கிய முள்ளவனும், பரலோகத்தைக் குறித்துப் பயப்படுகின்றவனும் இருப்பான்.

சு. 36. கிரகங்கள் ஸ்தான பலத்தோடு கூடியிருந்தால் ஜாதகனைத் தீரமுள்ளவனாகவும், ஸ்திதி சுகமுள்ளவனாகவும், ஸ்திரமான சம்பத்துள்ளவனாகவும், சுவாதந்திரியத்தோடு கூடிய கர்மங்களைச் செய்கின்றவனாகவும் ஆக்குவிக்கும்.

சு. 37. திக்குபலத்தோடு கூடின கிரகம் ஜாதகனைத் தன்னுடைய திக்கில் சேர்ப்பித்து அவ்விடத்திலிருந்து வஸ்திரங்கள் ஆபரணங்கள் பக்ஷண சாதனங்கள் முதலியவைகளை அடையச் செய்யும். (4-ஆம் அத்தியாயம், 8-ஆம் சுலோகத்தில் சொல்லியிருக்கின்ற பூர்வம் முதலிய திக்குகளை அறிந்து கொள்க.)

சு. 38. சேஷ்டா பலத்தோடு கூடின கிரகம் ஏதோ ஒரு சமயம் ராஜ்யத்தையும், சில சமயம் பூஜ்யத்தையும், சில சமயம் திரவியத்தையும், ஓரோர் சமயம் சௌக்கியத்தையும், சில சமயம் யஜசையும் தரும். இஃது அனேகவித ரூபமாகிய பலன்களைக் கொடுக்கின்றதால் இவை வக்கிர பலன்கள் என்றழைக்கப் பெறுகின்றன. எனவே, இவை எப்போதும் உண்டாவன அல்ல வென்றறிக.

சு. 39. வக்கிர பலத்தோடுகூடிய சுபக்கிரகங்கள் (புதன்-குரு-சுக்கிரன்) பலமுள்ளவைகளா யிருப்பின் ராஜ்யத்தை ஜாதகனுக்குக் கொடுக்கும். வக்கிர பலமுள்ள பாபக்கிரகங்களான செவ்வாய்-சனி இவர்கள் துக்கத்தையும், வீண் அலைச்சலான தேச சஞ்சாரத்தையும் கொடுப்பார்கள். சூர்யனுக்கும் சந்திரனுக்கும் வக்கிரம் உண்டாவதில்லை.

சு. 40. குஜாதி பஞ்சக் கிரகங்கள் சமலிப்தையில் (ஒரு ராசியில் ஒரு பாதத்தில் ஒரு கலையில்) சேருகின்ற சமயம் ஜோதிஸ் சக்கரத்திலுண்டாகின்ற பயங்கரமாகிய யுத்தத்தில் ஜெயித்து ரஜ்மி விருத்தியாயிருக்கின்ற கிரகம் சரீர ஆரோக்கியத்தையும், சுகத்தையும், எல்லாவித சுபத்தையும், சத்துருவில்லாத ராஜ்யத்தையும் கொடுக்கின்றது.

சு. 41. பூர்ணமான தினராத்திரி பலத்தோடுகூடிய கிரகம் பூமி கஜம் அசுவம் இவைகளைத்தரும். அன்றியும் அதிக சௌரிய பராக்கிரமமும், சத்துருவர்க்க நிர்மூலமும், பெரும் சம்பத்தும் உண்டாக்குவிக்கும்.

சு. 42. வருஷாதிபனும் மாசாதிபனும் வாராதிபனும் கால ஹோராதிபனும் ஆகிய கிரகங்கள் தத்தம் தசாகாலங்களில் முறையாக சுகம் தனம் யஜசு முதலான பலன்களை இரட்டித்து இரட்டித்துக் கொடுக்கும்.

சு. 43. பட்ச பலமுள்ள கிரகங்கள் சத்துரு நாசத்தையும், விசேஷ இரத்தினங்களையும், வஸ்திரங்களையும், ரத கஜ துரக பதாதி இவைகளின் பெருக்கையும், பார்யா லாபத்தையும், சுவர்ண லாபத்தையும், பூமி லாபத்தையும், சந்திரிகைபோன்ற வெண்மையுள்ள நல்ல யஜசையும் கொடுக்கும். (யஜசு = கீர்த்தி)

சு. 44. நிர்மலமான பலரஜ்மிகளோடு கூடியிருக்கின்ற கிரகங்கள் ராஜ்ய லாபத்தையும், கனவிலுங் கண்டறியாத அரும்பெரும் சுகத்தையும் கொடுக்கின்றன.

சு. 45. மற்ற கிரகங்களைக் காட்டிலும் சுபக்கிரகங்களுக்குப் பூர்ண பலமுண்டானால் ஜாதகன் நல்ல ஆசாரம் சத்தியம் சுபம் சுசித்துவம் இவையுள்ளானும், ராஜ விஸ்வாசியாயும், நன்றியுள்ளவனும், தேவப் பிராமண பக்தியுள்ளவனும், இருப்பதோடு விசேஷ வஸ்திர புஷ்ப களப பன்னீர் ஆபரண பரிமள நீராதிகளில் பிரியமுள்ளவனும் இருப்பான்.

சு. 46. பாபக்கிரகங்கள் பலவந்தர்களானால் லுப்தனாகவும், (பேராசையுள்ளவன்) நித்திய கர்மங்களில் கருத்துள்ளவனாகவும், தனது காரியத்திலேயே எண்ண முடையவனாகவும், சத்ஜனங்களை துவேஷிக்கின்றவனாகவும், கலகத்தை உண்டாக்குகின்றவனாகவும், ஞான ஹீனனாகவும், குரூரனாகவும், ஹிம்சை முதலிய துஷ்கிருத்தியங்களில் கருத்துள்ளவனாகவும், அழுக்குள்ளவனாகவும், (பொறாமை) கிருதக்னனாகவும், (உபகாரஸ்மரணை யில்லாதவன்) துஷ்டனாகவும் அல்லது தூஷிப்பவனாகவும், விரூபனாகவும் இருப்பான்.

சு. 47-48-49. ஸ்வக்ஷேத்திரத்திலும் மித்துரு க்ஷேத்திரத்திலும் இருக்கின்ற கிரகங்களுக்குப் பாலன் என்றும், மூலத்திரிகோணத்திலிருக்கின்ற கிரகங்களுக்குக் குமாரன் என்றும், பரமோச்சத்திலிருக்கின்ற கிரகங்களுக்கு அரசன் என்றும், சத்துரு க்ஷேத்திரத்திலிருக்கின்ற கிரகங்களுக்கும் மூடத்தையடைந்த கிரகங்களுக்கும் விருத்தன் என்றும், பரமநீசத்தில் இருக்கின்ற கிரகங்களுக்கு மிருதன் (சாவு) என்றும் நாமதேயமுண்டு. இந்தக் கிரகங்கள் தங்கள் பெயர்களுக்கேற்றபடி பலத்தைச் செய்கின்றார்கள்.

இவ்விடத்தில் சமக்ஷேத்திரத்தில் நிற்கின்றவர்கள் அதிபாலன் என்றும், ஸ்வக்ஷேத்திரத்தில் நிற்கின்றவர்கள் குமாரன் என்றும், மூலத்திரிகோணத்தில் நிற்கின்றவர்கள் யுவன் (அரசன்) என்றும் பெயர் பெறுவர் என்று கூறுவாருமுண்டு.

எல்லாக் கிரகங்களுக்கும் இவ்வித ஏழவஸ்தைகளுமுள வென்பர் ஒரு சாரார். கிரகங்களுக்குப் பாலாதி அவஸ்தைகள் உளவென்று வேறு சாஸ்திரங்களில் சொல்லியிருக்கின்றபடியால் அவைகள் இங்கு தெரிவிக்கப்படுகின்றன.

அஸ்தமனம் கழிந்ததினம் அதிபாலன் என்றும், பின்னால் ஏழு தினம் வரையில் பாலன் என்றும், அதற்குமேல் குமாரன் என்றும், * கிரமகதி கிரமமாகக் குறைந்து வக்கிரகதி தொடங்குகின்றவரையில் அரசன் என்றும், † வக்கிரகதியில் யுவன் என்றும், மௌட்யம் (மூடம் அஸ்தமனம்) தொடங்குவதற்குமுன் ஏழுதினம் விருத்தன் என்றும், மௌட்யமுள்ளபோது மிருதன் (மரணன்) என்றும் பெயர் பெறுவார்கள் எனக் கூறுகின்றார்கள். எனவே இந்த இரண்டு மதமும் அங்கீகரிக்கத் தக்கனவென்று அறிந்து கொள்ளவேண்டும்.

சு. 50. கிரகங்கள் பால்ய அவஸ்தையில் இருந்தால் சுகியாயும், குமார அவஸ்தையில் இருந்தால் சீலகுண மில்லாதவனாயும், அரச அவஸ்தையில் இருந்தால் பிரபுவாயும், விருத்த அவஸ்தையில் இருந்தால் வியாதிபீடை சத்துருபீடை உள்ளவனாயும், மரண அவஸ்தையில் இருந்தால் விரயமும் மரண துக்கமும் அநுபவிக்கின்றவனாயும் இருப்பன். இவ்விதமாகப் பால்யாதி அவஸ்தைகளின் பலன்களை அறிந்து கொள்க. அதிபாலன் பால்யத்திலும் யுவன் அரசனிலும் அடங்கும்.

சு. 51. கிரகங்கள் ஓஜ (ஆண்) இராசியில் பலவந்தர்களாயிருந்தால் தீரம் பௌருஷம் உள்ளவனாகவும், யுத்த சாமர்த்திய முள்ளவனாகவும் (யுத்தத்தில் நின்று பயப்படாமல் ரக்ஷிக்கின்றவன்) இருப்பன். ஓஜ விராசியில் பலமில்லாதவர்களாயிருந்தால் மிகவும் கடினமுள்ளவர்களாகவும், குரூரர்களாகவும், மூர்க்கர்களாகவும் இருப்பார்கள்.

சு. 52. கிரகங்கள் யுக்ம (பெண்) இராசியில் பலவந்தர்களாயிருந்தால் மிருதுவான குணமுள்ளவனாயும், யுத்தத்தில் பயந்தவனாயும், ஜலம் (வெள்ளம்) புஷ்பம் வஸ்திரம் இவைகளில் பிரியமுள்ளவனாயும் சௌக்கியத்தை அடைபவனாயும் ஆரோக்கிய முடையவனாயும் இருப்பான்.

ஐந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

---

* முன்னோக்கிச் செல்லுதல். † பின்னோக்கிச் செல்லுதல்.

# ஆருவது அத்தியாயம்.

## அந்யோந்ய காரகத்துவம்.

சு. 1. இனிமேல் இந்த அத்தியாயத்தினுல் கிரகங்களுடைய அந்யோந்ய காரகத்துவத்தைத் தெரிவிக்கின்ருர்.

ஸ்வக்ஷேத்திரத்திலோ மூலத்திரி கோணத்திலோ உச்சத்திலோ கிரகங்கள் இருந்து அந்த ராசிகள் இலக்கினம் நான்கு ஏழு பத்து ஆகிய இந்த ஸ்தானங்களாயு மிருக்குமானுல் அந்தக் கிரகங்கள் அந்யோந்யகாரகர்கள் ஆகின்ருர்கள். கேந்திரங்களில் மாத்திரம் நின்ருலும் பரஸ்பரம் அந்யோந்ய காரகத்துவ முண்டென்னும் ஹரியினுடைய மதத்தைப் பலர்கள் அங்கீகரிப்பதில்லை.

சு. 2. இந்தச் சுலோகத்தினுல் பரஸ்பரம் அந்யோந்ய காரகத்துவத்தை உதாரணத்தால் விளக்குகின்ருர். கடகம் இலக்கினமாகி அதில் ஸ்வக்ஷேத்திராதிபனுன சந்திரனும் உச்சத்தை யடைந்தவனுன குருவும் சேர்ந்து நிற்பதாகவும், நான்காமிடமாகிய துலா விராசியில் உச்சனுகிய சனியும், பத்தாமிடமான மேடத்தில் மூலத்திரி கோணுகிய செவ்வாயும் அதில் உச்சத்தை யடைந்த சூரியனும் இருப்பதாகவும் வைத்துக்கொள்வோம். அவ்விதமானுல் இந்தக் கிரகங்களெல்லாம் அந்யோந்யகாரகர்களாகின்றனர். இங்கு வேறு விசேஷத்தையும் சொல்லுகின்ருர். இலக்கினகதனுன சந்திரனுக்கும் குருவிற்கும் பரஸ்பரம் காரகத்துவமுண்டு. இந்தக் குரு சந்திரர்களுக்குச் செவ்வாயும் சூரியனும், சனிக்குக் குருவும் சந்திரனும் பரஸ்பரம் காரகர்களாகின்ருர்கள்.

இவ்விதம் இலக்கினத்திலிருந்தும் கிரகங்கள் நிற்கின்ற இராசியிலிருந்தும் அந்யோந்ய கேந்திரஸ்தர்களான கிரகங்களெல்லாம் பரஸ்பர காரகர்களாகின்ருர்கள் என்று அறிந்துகொள்க. இவ்வித காரகபேதத்தால் தசாபலன்களுக்கும் வித்தியாசம் வரும். குருவும் சந்திரனும் தம்மில் காரகத்துவ முண்டென்று முன்பு தெரிவித்த பிரகாரம் குருதசையில் சந்திரனுக்குச் சொல்லியிருக்கின்ற பலன்களும் சந்திர தசையில் குருவிற்குச் சொல்லியிருக்கின்ற பலன்களும் மாறி உண்டாகுமென்றும் இவைபோலவே சேஷமுள்ள கிரகங்களுக்கும் காரகத்துவங்களினுல் பலபேத முண்டாகுமென்றும் அறிந்து கொள்ளவேண்டும்.

சூ. 3. உச்சத்திலும் ஸ்வக்ஷேத்திரத்திலும் மித்துரு க்ஷேத்திரத்திலும் நிற்கின்ற கிரகங்களும் காரகர்களாகின்ருர்கள். 10-ஆம் இடத்தில் நிற்கின்றசூரியன் காரகனுமென்று சாணக்கியர்சொல்லுகின்ருர். இந்தப் பட்சத்தில் உச்சத்திலிருப்பவனுகவோ ஸ்வக்ஷேத்திரத்திலிருப்பவனுகவோ நிற்கின்ற கிரகத்திற்குக் கேந்திர ஸ்திதி வேண்டுவதில்லை. இதனுல் கேந்திரம் தவிர்த்து நிற்கின்ற கிரகத்தினுடைய 10-ஆம் இடத்தில் ஒரு கிரகம் உச்சத்திலோ ஸ்வக்ஷேத்திரத்திலோ நின்ருல் தம்மில் தற்கால பந்துத்வ முள்ளவராகையால் அந்தப் பந்து குணங்களோடு நான்கில் நிற்கின்ற கிரகத்தினுடைய காரகனுகின்றது என்பது பெறப்படுகின்றது. ஆனுல் இங்கு பரஸ்பர காரகத்துவம் இல்லை.

சூ. 4. இலக்கினத்திலும் நான்காமிடத்திலும் பத்தாமிடத்திலும் நிற்கின்ற எல்லாக் கிரகங்களும் காரகர்களாகின்றனர். பதிஞேராமிடத்தில் நிற்கின்ற கிரகங்களும் காரகராமென்று சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். ஆனுலும் பூர்வாசாரியர்களில் பெரும்பான்மையோர் அந்த மதத்தை அங்கீகரிக்கவில்லை. இங்கு உச்சம், மூலத்திரிகோணம், ஸ்வக்ஷேத்திரம் இவைகளில் இல்லாமலிருந்தாலும் காரகத்துவம் உண்டாகும். இலக்கினத்தில் நிற்கின்ற கிரகத்திற்கு நான்கிலோ பத்திலோ நிற்கின்ற கிரகம் (உச்ச ஸ்வக்ஷேத்திராதி ஸ்திதி இல்லையென்ருலும்) காரகனுகின்றது. இந்தக் காரகத்துவம் பரஸ்பர முள்ளதல்லவென்றும் அறிந்து கொள்ளவேண்டும்.

சூ. 5. முற்கூறியபடி காரக லட்சணம் உண்டாயிருக்கும்போது ஜனித்தவன் நீசகுலத்தில் பிறந்தவனுனுலும் பிராதான்யத்தை அடைவான். அரசகுலத்தில் பிறந்தவனுனல் சந்தேகமில்லாது அரசனுவான்.

சூ. 6. மேற்கூறப்பட்ட காரகவேதம் மற்ற யோகங்களைக் காட்டிலும் பிரபலமும் பிரதானமும் ஆகின்றது என்று ஹரி சொல்லுகின்ருர். அதுகொண்டு காரகவேதத்தினுடைய பலாபலன்களை அறிந்துகொண்டு பலத்தை நிச்சயிக்கவேண்டும்.

ஆறுவது அத்தியாயம் முற்றிற்று.

# ஏழாவது அத்தியாயம்.

## கிரகங்களின் காரகத்துவம்.

சு. 1. ஞாயிறு முதலாகிய ஏழு கிழமைகளுக்கும் முறையே: சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி என்ற இந்தக் கிரகங்கள் நாதர்களாகின்றனர். இந்தக் கிரகங்களே மாசத்திற்கும் சம்வத்சரத்திற்கும் காலஹோரைக்கும் நாதர்களாகின்றனர். இனிமேல் சம்வத்சராதிபத்தியாதிகளைச் சொல்லுகின்றார்.

சு. 2. சம்வத்சராதிபத்யம் நான்காம் வாரேசனுக்கும், காலஹோராதிபத்யம் ஆறும் வாரேசனுக்கும் ஏற்படுகின்றன. இரவு பகல் கொண்ட ஒரு நாளில் 2½ நாழிகை விழுக்காடு 24 ஹோரை யுண்டென்க. ஆதித்திய வாரத்தில் உதயாதி 2½ நாழிகை வரைக்கும் சூரியனும், பிறகு முறையே சுக்கிரன், புதன், சந்திரன், சனி, குரு, செவ்வாய் இவர்களும் காலஹோரா நாதர்களாகி மீண்டும் சூரியன் முதல் ஆரம்பித்து சனிஹோரை வரையில் பகல் முடிகின்றது. இரவு 5-ஆம் வாராதிபனான குருஹோரைமுதல் புதன் ஹோரை வரையில் முடிகின்றது. திங்கட்கிழமை உதயாதி 2½ நாழிகை வரை இருப்பது சந்திரஹோரை என்றும், எல்லா வாரங்களுக்கும் முதலில் அவரவர்களின் ஹோரை நடக்கும் என்றும் கண்டுகொள்ள வேண்டும்.

சு. 3-4-5-6. முன் சுலோகத்தில் சொல்லப்பட்ட சம்வத்சராதி பத்தியமும், மாசாதிபத்தியமும் அறிந்து கொள்ளும் முறைகள் வராஹமிஹிரர் முதலிய பூர்வாசாரியர்களால் சொல்லப்படாமையால் இனி அவைகளை அறிந்துகொள்ளும் முறையை இச்சுலோகத்தில் வேறுவிதமாகக் கூறுகின்றார்.

மீன (பங்குனி) மாசத்திலே சுக்கிலப் பிரதிபதம் (பிரதமை திதி) உதயாத்பரத்தில் கலைமாத்திரம் இருந்தாலும் அந்தக் கிழமையின் நாதன் சம்வத்சராதிபனாகின்றான். எல்லா மாசத்திலும் இவ்விதமாகவே சுக்கில பிரதிபதம் கொண்டு மாசாதிபர்களையும் அறியவேண்டும்.

எல்லாக் கிரகங்களும் தங்கள் தங்களுடைய அவஸ்தைக்குத் தக்க பலத்தைக் கொடுக்கின்றன. கிரகம் உபஜெயத்திலோ இலக்கினத்திலோ நின்றால் அந்தப் பலம் பூர்ணமாக இருக்கும். சம்வத்

சரம், மாசம், திவசம், காலஹோரை இவைகளுடைய நாதர்களான கிரகங்களுக்கு முறையே கால், அரை, முக்கால், ஒன்று இவ்விதம் பலங்களைக் கொள்ளவேண்டும்.

சு. 7. சூரியன் முதலிய கிரகங்களைக்கொண்டு அறியவேண்டிய காரகத்துவமும் நாதத்துவமுமான திரவியங்களைச் சொல்லுகின்றார்.

சூரியன்: சர்ப்பம், கம்பளம், பர்வதம், சுவர்ணம், ஆயுதம், விஷம், அக்கினி, ஔஷதம், ராஜா, மிலேச்சன், அஸ்தி, பிரகாசம், காடு, விறகு, மந்திரம் இவைகளுக்கு நாதனாகின்றார்.

சு. 8. சந்திரன்: புஷ்பங்கள், உணவு வஸ்துக்கள், இரத்தினம், வெள்ளி, சங்கு, உப்பு, வெள்ளம் (ஜலம்), இஷ்ட வஸ்திரங்கள், ஆபரணம், ஸ்திரீ, நெய், எண்ணெய், நித்திரை இவைகளுக்கு நாதனாகின்றார்.

சு. 9. செவ்வாய்: செந்தாமரை, செம்பு, சுவர்ணம், இரத்தம், ரசம், ஔஷதம், மனோசிலை முதலியவைகள், பூமி, ராஜா, விழுதல், மோக ஆலஸ்யம், குத்து, வெட்டு, அடி, திருடன் இவைகளுக்கு நாதனாகின்றார்.

சு. 10. புதன்: சாஸ்திரங்கள், எழுத்துக்கள், எழுத்துச் சாமான்கள், சிற்ப வித்தைகள், யாகஸ்தானம் அல்லது தேவாலயம், திறமை, மந்திரித்துவம், தூதன், ஹாஸ்யம், பட்சிகள், விருக்ஷ விசேஷங்கள், சுவர்ணம் இவைகளுக்கு நாதனாகின்றார்.

சு. 11. குரு: எல்லாவற்றிலும் சுபத்துவம், மங்கல கர்மம், தர்மம், புஷ்டி, கர்மம், மஹத்துவம், வேத சாஸ்திராப்பியாசம், கட்டளை, நகரம், ராஜ்யம், வாகனம், பீடம், மஞ்சம், சுவர்ணம், தனதான்னியங்கள், நெற்களஞ்சியம், புத்திரன் இவைகளுக்கு நாதனாகின்றார்.

சு. 12. சுக்கிரன்: வஸ்திரம், இரத்தினம், ஆபரணம், விவாகம், சுகந்த திரவியம், இஷ்ட வஸ்திரம், பார்யை, கோமயங்கள் (தயிர் நெய்கள்), நிதி (பொக்கிஷம்), சங்கீதாதி கலாவித்தை, கவித்துவம், மைதுனம், வெள்ளி இவைகளுக்கு நாதனாகின்றார்.

சு. 13. சனி: பித்தளை, ஈயம், நாகம், இரும்பு, இழிவான தான்னியங்கள், மரணம், பந்தனம், காராக்கிரகம் (ஜயில்), துக்கம், வேலைக்காரன், அடிமை, நீசஸ்திரீகள், வியாபாரி, கிழவர்கள், பிரேத

தீட்சை, தாரித்திரம் இவைகளுக்கு நாதனுகின்றார் என்று அறிந்து கொள்ளவேண்டும்.

சு. 14-15. சூரியன் அங்கதேசத்திலும், சந்திரன் யவன தேசத்திலும், சுக்கிரன் சமதடத்திலும், குரு சைந்தவ தேசத்திலும், புதன் மகத தேசத்திலும், சனி சௌராஷ்டிர தேசத்திலும், செவ்வாய் உஜ்ஜயினி தேசத்திலும், இராகுகேதுக்கள் திராவிட தேசத்திலும் ஜனித்தவராகின்றனர். இங்ஙனம் சூரியாதி கிரகங்களுக்குத் தேசங்களை அறிந்து கொள்க. இங்கு "அர்க்ககலிங்க விஷயே" என்ற பேதத்தினுல் சூரியன் கலிங்க தேசத்தில் ஜனித்தானெனக் கொள்வாருமுண்டு.

ஏழாவது அத்தியாயம் முற்றிற்று.

## எட்டாவது அத்தியாயம்.

# கர்ப்பாதான லட்சணம்.

சு. 1. இராசி பலம், கிரகபலம், பாவபலம் முதலியன இல்லாத ஒருவனுக்குச் சொல்வது நடைபெறுவதில்லை. ஆகையினால் எல்லாருடைய ஜனனத்திற்கும் காரண பூதமான ஆதானத்தை (கர்ப்பாதானத்தை) இனிச் சொல்லுகின்றார்.

இந்த அத்தியாயத்தில் சொல்லப்படுகின்ற லட்சணங்களெல்லாம் ஆதான லக்கினத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. அந்த ஆதான லக்கினம் அவிக்ஞாத மாகையால் (அறியப்படாதது) அதனைப் பிரசின லக்கின பலனாலும் ஜாதக லக்கின பலனாலும் நிர்ணயிக்கவேண்டும்.

சு. 2. ஸ்திரீ ஜன்மராசியினுடைய அநுபசய ராசிகளில் (1, 2, 4, 5, 7, 8, 9, 12) சந்திரனிருந்து செவ்வாயின் திருஷ்டியைப் பெற்று நிற்கின்ற காலம் ஸ்திரீகளுக்கு மாதந்தோறும் ஆர்த்துவம் உண்டாகின்றது. இந்த ஆர்த்துவம் கர்ப்பயோக்கியமானது. ஒவ்வொரு மாசத்திலு முண்டாகின்ற ஆர்த்துவத்திற்கு செவ்வாய்க்கும் சந்திரனுக்கும் தம்மில் யோகமோ திருஷ்டியோ திரேக்காணாதி ஷட்வர்க்க சம்பந்தமோ உண்டானால் அதற்குப் போதும் என்றும், கெர்ப்ப க்ஷமமாகிய ஆர்த்துவத்திற்குச் சந்திரனுக்கு அநுபசயராசி ஸ்திதியும் செவ்வாய் திருஷ்டியும் அவசியம் வேண்டுமென்றுமறிக.

சு. 3. சந்திரன் ஜலமும், செவ்வாய் அக்கினியுமாவர். ஜலம் என்பது இரத்தமும், அக்கினி என்பது பித்தமுமாகும். இவ்விதம் ரத்தம் பித்தத்தினால் க்ஷோபிக்க (கலக்க)ப் படுகின்ற சமயம் ஸ்திரீகளுக்கு ரஜஸு (ஆர்த்துவம்) உண்டாகின்றது.

சு. 4. மேற்கூறிய விதம் சம்பவிக்கின்ற ரஜஸு கர்ப்பத்திற்குக் காரணமாகின்றது. ஆர்த்துவம் ஆரம்பித்ததினம் முதல் 4 தினம் சென்ற பிறகு உள்ள 12 தினம் ருதுகாலமென்றும், அந்தக் காலத்திலுள்ள சம்போகம் கர்ப்பத்தைக் கொடுப்பதாகுமென்றும் அறிக. சந்திரன் உபசயத்தில் நிற்கின்ற காலம் சம்பவிக்கின்ற ஆர்த்தவம் நிஷ்பலமாதலால் அப்பொழுது கர்ப்பசித்தி யுண்டாவதில்லை.

சு. 5. புருஷனின் ஜன்மராசியினுடைய உபசயத்தில் (3,6,10,11 இந்த ஸ்தானங்களில்) சந்திரன் நின்று அந்தச் சந்திரனைக் குருவாவது, மித்துருக் கிரகங்களாவது, அவர்களுள் விசேஷமாய்ச் சுக்கிரனாவது பார்த்தார்களானால், அப்போது ஸ்திரீ பர்த்தாவினுடைய சம்போகத்தை அடைகிறாள். அந்தச் சம்போகம் கர்ப்பயோக்கிய மான தாம் என்பது இதன் கருத்து. இங்குச் சுக்கிர திருஷ்டியைக் காட்டிலும் குருதிருஷ்டிக்குப் பிராதான்ய முண்டென்று சொல்லுவது முண்டு.

சு. 6-7. மேற்சொன்ன விதம் உபசயத்திலிருக்கின்ற சந்திரன் சூரியனுடைய திருஷ்டியைப் பெற்று நின்றால், ராஜ புருஷரோடும், சனியின் திருஷ்டியைப் பெற்று நின்றால், வேலைக்காரனோடும், செவ்வாயின் திருஷ்டியைப் பெற்று நின்றால் கள்ள புருடனோடும் சம்போகிப்பாள் என்று சொல்லவேண்டும். மற்ற சுபர்களுடைய திருஷ்டியைப் பெற்று நின்றால் தனது பர்த்தாவோடு சம்போகத்தை அடைவாளென்று சொல்லவேண்டும். பாபதிருஷ்டிக்குப் பலம் தனித்தனியே இங்கு தெரிவித்தன ரென்றாலும், இந்தப் பாபர்கள் சுபர்களது திருஷ்டி யோகாதிகளோடு கூடாமலும், ஸ்வக்ஷேத்திரத்திலிருக்காமலும், பலஹீனர்களாயும் இருந்தால் ராஜ புருஷன் முதலியவர்களோடு சம்போக முண்டாமென்று சொல்லலாம்.

சு. 8-9. ஆதானலக்கின விராசிக்கு ஏழாமிராசி துவிபத, சதுஷ்பதாதி ராசிகளில் எதாகின்றதோ அதே பிரகாரமான சுரதத்தைக் குறிப்பிடவேண்டும். துவிபத ராசியானால் மநுஷ்யரைப் போலவும், சதுஷ்பதாதி ராசியானால் அஜவிருஷபாதிகளைப் போலவும் உள்ள சம்போகமென்று யுக்தா யுக்தமாக ஊகித்துச் சொல்லவேண்டும். ஆதான லக்கினம் அறிவது சிரமமாதல்பற்றி ஜன்ம லக்கினத்தினாலும், பிரஸ்ன லக்கினத்தினாலும், இந்த லட்சணத்தை அறியவேண்டும். மேற்சொன்ன ஏழாமிராசிக்குப் பாபக் கிரகங்களுடைய யோகதிருஷ்டியாதி சம்பந்தமுண்டானால், கோபத்தோடும் கலகத்தோடும் கூடியுள்ள சுரதமென்றும், சுபக்கிரகங்களுடைய யோக திருஷ்டியாதி சம்பந்தமுண்டானால், அந்யோன்ய சந்தோஷத்தோடும் சௌமியத்தோடும் வாத்ஸ்யாயன முனிப் பிரணிதமாகிற காமசாஸ்திரத்தை யநுசரித்துள்ள சுரதம் என்றும் அறியவேண்டும்.

சு. 10. * பூர்வ ஜென்மங்களில் செய்த புண்ணிய பாப கர்மங்களை அநுபவிப்பதற்காக ஜீவன் தூமாதி மார்க்கங்களில் கூடி-

* இதன் விரிவை நீலகண்ட [illegible] காண்க

ஓஷதிகளில் சேர்ந்து பிறகு அவற்றாலாகிய உணவோடு கலந்து புருஷனுடைய சுக்கிலமாய் சம்போகத்தில் ஸ்திரீயினுடைய சோணி தத்தில் கலந்து கர்ப்பாசயத்தில் சேர்கின்றது.

சு. 11. சூரியனைக்கொண்டு புருஷனுடைய கர்ப்பாதான சாமர்த்தியத்தையும், சுக்கிரனைக்கொண்டு ரேதஸையும், செவ்வாயைக் கொண்டு ஸ்திரீயின் கர்ப்பாதான சாமர்த்தியத்தையும், சந்திரனைக் கொண்டு சோணிதத்தையும் அறியவேண்டும். இந்நியாயத்தினால் சூரியனும் சுக்கிரனும் புருஷனுடைய ஜன்ம சந்திரனிலிருந்து உப சயராசியிலும், தங்களுடைய நவாம்சங்களிலும், செவ்வாயும் சந் திரனும் ஸ்திரீயினுடைய ஜன்ம சந்திரனிலிருந்து உபசயராசியிலும், தங்களுடைய நவாம்சங்களிலும் இருக்கின்ற காலத்தில் சம்போகத்தி னால் கர்ப்பம் சம்பவிக்கின்றது.

சு. 12. சுக்கிரனும், சூரியனும், செவ்வாயும், சந்திரனும் பலவந் தர்களாகி ஆதான லக்கினத்தின் உபசயராசியிலும், தங்களுடைய நவாம்சங்களிலும் இருக்கும் பொழுதும் ஆதான லக்கினத்திலோ அதனுடைய ஐந்தாமிடத்திலோ, ஒன்பதாமிடத்திலோ, குரு பல வானாகி இருக்கும் பொழுதும் கர்ப்பம் சம்பவிக்கும்.

சு. 13. சூரியன் ஆத்மாவும், சந்திரன் மனசும், சுக்கிரன் சுக்கில முமாமென்று முன் சம்க்ஞாத்தியாயத்தில் சொல்லி யிருக்கின்றமை யால் ஆத்மானுப் பிரவிஷ்டமான மனசோடுகூடி நேத்திராதிகளான இந்திரியங்கள் தமது விஷயத்தை அநுபவித்தற்குரிய ஸ்திரீ புருஷ சம்போகத்தின்கண் ஸ்திரீயினுடைய உதிரத்தைப் பிரவேசிக்கின்ற தான ரேதஸ் கர்ப்ப காரணமாகையால் அந்தச் சமயம் தம்பதிக ளுடைய மனது துர்விசாரங்களுக்கு உட்படலாகாது. அவ்விதமானால் சந்தானம் மகா ரோகியாகவோ, அற்பாயுசாகவோ உண்டாகும். தம்பதிகளுடைய மனோபாவத்திற்கு அநுகுணமான வாத பித்த கபங்களைக்கொண்டு அந்தக் கர்ப்பம் அந்த வாதாதிகளுடைய குண குணங்களைப் பெற்றுள்ளதாயிருக்கும். இந்த விஷயத்தில் பெரிதும் சொல்ல வேண்டியது உண்டென்றாலும் விஸ்தாரபயத்தினால் சுருக் கப்பட்டது. இந்தப் பாகங்களை வைத்திய சாஸ்திரத்தைக் கொண்டு அறிந்து கொள்ளவேண்டும்.

சு. 14. கர்ப்பத்திலேயுள்ள பிரஜையினது ஸ்திரீ புருஷ பேதத்தைச் சொல்லுகின்றார். இது ஆதான லக்கினங் கொண் டும் பிரஸ்ன லக்கினங் கொண்டும் சமயோசிதமாக அறியவேண்

டியதாகின்றது. பலவந்தர்களான லக்கினமும், சந்திரனும், குருவும், சூரியனும் மேடம் மிதுனம் முதலான ஒற்றையிராசியிலும் ஒற்றையிராசி அம்சத்திலும் நின்றால் புருஷப் பிரஜை என்றும், இடபம் கடகம் முதலான இரட்டையிராசியிலும் இரட்டை அம்சத்திலும் (நவாம்சம்) நின்றால் ஸ்திரீ பிரஜையென்றும் அறிந்துகொள்ள வேண்டும்.

சு. 15. சூரியனும், குருவும் ஒற்றையிராசியில் பலிஷ்டர்களாய் நின்றால் கர்ப்பத்திலிருக்கும் சிசு புருஷப் பிரஜையாம். சுக்கிரனும் சந்திரனும் செவ்வாயும் இரட்டையிராசியில் பலத்தோடு கூடி நின்றால் ஸ்திரீ பிரஜையாம். இங்கு ஒற்றை இரட்டை என்பவைகளை இலக்கினம் முதலாகக் கொள்ளவேண்டுமென்று உபதேசார்த்தமுமுண்டு. புருஷக் கிரகமான செவ்வாய் இலக்கினாதிகணனப் பிரகாரம் இரட்டை யிராசியில் நின்றால் ஸ்திரீ பிரஜை யென்றும், ஒற்றை யிராசியில் நின்றால் புருஷப் பிரஜையென்றும் வேறு பிரமாணமுமுண்டு.

சு. 16. இனி யுக்ம பிரசவ லட்சணத்தைச் சொல்லுகின்றார். மிதுனம், கன்னி, தநுசு, மீனம், இந்த நான்கு உபயராசிகளில் மிதுனமும் தநுசும் ஓஜராசிகளும், கன்னியும் மீனமும் யுக்ம ராசிகளுமாகின்றன. சூரியனும் குருவும் மிதுனத்திலோ தநுசிலோ இருந்து புதனுடைய திருஷ்டியை யடைந்தால் இரண்டு புருஷப் பிரஜை பிரசவிக்குமென்றும், சுக்கிரனும் சந்திரனும் செவ்வாயும் கன்னியிலோ மீனத்திலோ இருந்து புதனுடைய திருஷ்டியை யடைந்தால் இரண்டு ஸ்திரீப் பிரஜை பிரசவிக்குமென்றும் அறிக. இவ்விடத்தில் இந்தக் கிரகங்களுக்கு மேற்கூறிய உபயராசிகளில் ஸ்திதி வேண்டாமென்றும், அம்சகம் மாத்திரம் போதுமென்றும், கிரந்தாந்தரங்களில் காணப்படுகின்றது. இந்த மதத்தைப் பலரும் அங்கீகரிக்கின்றனர். (ஓஜம் - ஒற்றை. யுக்மம் - இரட்டை.)

சு. 17. சனி லக்கினத்தில் இராமல் லக்கினாதியான ஓஜ ராசியில் (3-5-7-9-11) நின்றால் புருஷப் பிரஜை உற்பவிக்கும். இதுபோலவே குளிகனைக் கொண்டும் நிரூபித்துக்கொள்க. புதன் 2-4-6-8-10-12 இந்தப் பாவங்களில் நின்றால் ஸ்திரீ பிரஜை ஜனிக்கும். இவ் விஷயங்கள் ஹோரா வியாக்கியானத்திலும் கூறப்படுகின்றன. மேற்சொன்ன ஸ்திரீ புருஷ பிரசவ யோகங்களில் கிரகங்களுடைய பலங்களையும் பலக் குறைவுகளையும் நன்றாய் நிச்சயித்துப் புருஷன் ஸ்திரீ என்று கூறவேண்டும்.

சு. 18-19-20. இந்த மூன்று சுலோகங்களினால் ஆறு நபும்சக பிரசவ லட்சணத்தைச் சொல்லுகின்றார். சூரியன் ஓஜராசியிலும் சந்திரன் யுக்மராசியிலும் இருந்து அந்யோன்ய திருஷ்டியுற்றாலும், சனி யுக்மராசியிலும் புதன் ஓஜ ராசியிலும் நின்று அந்யோன்ய திருஷ்டியை யடைந்தாலும், ஓஜராசியிலிருக்கும் செவ்வாயும் யுக்ம ராசியிலிருக்கும் சூரியனும் தம்மில் பரஸ்பர திருஷ்டியுற்றாலும், சந்திரனும் லக்கினமும் ஓஜராசியாக யுக்மராசியிலிருக்கும் செவ்வாய் அந்த லக்கினம் சந்திரன் இவர்களை நோக்கினாலும், புதன் ஓஜராசியிலும் சந்திரன் யுக்மராசியிலும் நிற்க இவர்களைச் செவ்வாய் எங்கிருந்து பார்த்தாலும், லக்கினமும் சந்திரனும் சுக்கிரனும் ஓஜராசியில் ஓஜராசி அம்சகத்தோடு கூடிநிற்றலேயன்றி, புதன் சனி இவர்களின் திருஷ்டி யுற்றாலும் நபும்சகம் பிறக்கும். இங்கு சமராசி ஸ்திதியுள்ள கிரகங்களுக்கு மட்டிலுமே பரஸ்பர திருஷ்டியுண்டாவதுண்டு. அப்போது யுக்ம ஓஜராசி ஸ்திதி உண்டாவதற்கு இடமுமில்லை. ஆகையினால் "திருஸ்யே திருஷ்ட்ரு விவர்ஜிதே" என்ற ஸ்ரீபதி ஜாதக பத்ததி வசனப்பிரகாரம்* திருஷ்டி கணனத்தைச்செய்து இந்த லட்சணத்தைச் சொல்லவேண்டும். முதலில் சொன்ன ஸ்திரீ புருஷ பிரசவ யோகங்கள் இல்லாவிட்டாலும், பலஹீனமாயிருந்தாலும் நபும்சக யோகம் பலமாக வந்தால் அதனை நிச்சயமாகச் சொல்லவேண்டும். (நபும்சகமென்பது புருஷத்துவமில்லாத புருஷனும், ஸ்திரீத்துவமில்லாத ஸ்திரீயுமென்பதாம்.)

குறிப்பு: இவ்யோகங்களுள் சில மாறுபடுகின்றன. ஆயினும் எனக்குக் கிடைத்த உரையொடுகூடிய மூலப் பிரதியிலுள்ளவாறே பதிப்பிக்கப்பட்டுள்ளன.

சு. 21-22-23-24-25-26. இனி இரட்டை முதலிய பிரசவ லட்சணத்தைச் சொல்லுகின்றார். சந்திரன் சுக்கிரன் இவர்கள் யுக்ம ராசியிலும், லக்னம் பழுதுபட்டது. குரு-செவ்வாய்-புதன் இவர்கள் பலவந்தர்களாய் ஓஜராசியிலுமிருந்தால் இரட்டைக் குழந்தைகள் (ஒரு ஸ்திரீயும் ஒரு புருஷனும்) பிறக்கின்றன. யுக்மராசியான லக்கின சந்திரர்களை பலவானான புருஷக்கிரகம் நோக்கினாலும் இரட்டைக் குழந்தைகள் (ஒரு ஸ்திரீயும் ஒரு புருஷனும்) பிறக்கின்றன. லக்கினம்-செவ்வாய்-புதன்-குரு இவர்கள் பலவான்களாகி யுக்மராசியில் நின்றாலும் இரட்டைக் குழந்தைகள் பிறக்கும். எல்லாக் கிரகங்களும் லக்கினத்தி

* என்னால் வெளியிடப்பெற்ற ஸ்ரீபதி ஜாதக பத்ததியிற் காண்க.

லும் லக்கினம்சத்திலும் நிற்க, மிதுனம்சத்தில் நிற்கின்ற புதன் அவர்களைப் பார்த்தாலும் ஒரு ஸ்திரீயும் இரண்டு புருஷக் குழந்தைகளும் ஆக மூன்று குழந்தைகள் பிறக்கும். மேற்சொன்ன பிரகாரம் லக்கினத்திலும் லக்கினம்சத்திலும் எல்லாக் கிரகங்களும் நிற்க, கன்னியாம்சகத்தில் நிற்கின்ற புதன் நோக்கினாலும் இரண்டு பெண்ணும் ஒரு ஆணும் ஆக மூன்று குழந்தைகள் பிறக்கும். எல்லாக் கிரகங்களும் லக்கினம்-மிதுனம்-தநுசு இந்த நவாம்சங்களிலிருக்க மிதுனம்சகத்தில் இருக்கின்ற புதன் அவர்களை நோக்கினாலும் மூன்று புருஷப் பிரஜைகள் பிறக்கும். மேற்சொன்ன பிரகாரம் கன்னியாம்சகத்திலும் மீனம்சகத்திலும் எல்லாக் கிரகங்களும் நிற்க கன்னியாம்சகத்தில் நிற்கின்ற புதன் நோக்கினாலும் மூன்று ஸ்திரீ பிரஜைகள் பிறக்கும். எல்லா யோகங்களுடைய பலாபலன்களையும் நன்றாக யோசித்து நிரூபணம் செய்து பிரஜையின் சங்கியை நிர்ணயித்துக்கொள்ள வேண்டும்.

சு. 27. பகலில் ஜனித்த ஜாதகனுக்குச் சுக்கிரன் மாதாவும், சூரியன் பிதாவும், இராத்திரியில் ஜனித்த ஜாதகனுக்குச் சந்திரன், மாதாவும், சனி பிதாவுமாகின்றனர். அவைபோலவே, பகலில் சனி பிதாவினுடைய சகோதரனும், சந்திரன் மாதாவினுடைய சகோதரியும், இராத்திரியில் சூரியன் பிதாவின் சகோதரனும், சுக்கிரன் மாதாவினுடைய சகோதரியும் ஆகின்றனர் என்று யவனாசாரியார் சொல்லுகின்றார். எப்போதும் சூரியன் பிதுருகாரகனும் சந்திரன் மாதுருகாரகனுமாவரென்னும் பிரசித்தமுண்டென்றாலும் இரண்டுவித கொள்கைகளையும் கொள்வாருமுளர்.

சு. 28. மேற்கூறிய விதம் பிதுருகாரகனும் பிதாவின் சகோதர காரகனுமாகிய கிரகங்கள் ஓஜராசியில் நின்றால், அந்தப் பிதாவிற்கும் பிதாவின் சகோதரர்களுக்கும், மாதுருகாரகனும் மாதாவின் சகோதரிகாரகனுமாகிய கிரகங்கள் யுக்மராசியில் நின்றால், மாதாவிற்கும் அன்னவர்களின் சகோதரிக்கும் சுப பலன்களுண்டாகின்றன. இவைகளை ஆதான லக்கினத்தைக் கொண்டும், ஜன்ம லக்கினத்தைக் கொண்டும் தீர்மானப்படுத்தவேண்டும். ஓஜ யுக்மங்களை லக்கின முதலாக அறியவேண்டு மென்க. இவ்விதம் சொன்னதற்கு விரோதமாக இந்தக்காரகக் கிரகங்கள் நின்றால் அவர்களுக்கு அசுபமென்றும் தெரிந்துகொள்க.

சு. 29. ஆதானம் முதல் ஏழு மாசத்தில் கர்ப்பம் முறையாக பரிபூர்ணத்தை யடைகின்றது. முதல் மாசத்தில் சுக்கில சுரோணி

தங்கள் சேர்ந்து குழம்புபோல் ஆகின்றது. இரண்டாவது மாசத்தில் அவை கனக்கின்றது. மூன்றுவது மாசத்தில் அவயவங்கள் உண்டா கின்றன. நான்காம் மாசத்தில் அஸ்திகள் (எலும்பு) உண்டாகின்றன. ஐந்தாம் மாசத்தில் தோல் உண்டாகின்றது. ஆறும் மாசத்தில் ரோமங் கள் உண்டாகின்றன. ஏழாம் மாசத்தில் சைதன்யம் (ஜீவன்) உண்டா கின்றது. இவ்விதம் ஏழு மாசத்தில் கர்ப்பத்தில் இருக்கின்ற சிசுவி னுடைய அங்கங்கள் பூர்த்தியாகின்றன.

சு. 30. எட்டாவது மாசத்தில் பசியும் தாகமும், ஒன்பதாம் மாசத்தில் சலனமு முண்டாகி, பத்தாம் மாசத்தில் கர்ப்பம் பரிபூர ணம் அடைந்து பிறகு பழுத்த பழம் தானே விழுகின்றதுபோல் பிரசவமாகின்றது.

சு. 31. கர்ப்பாதானத்திற்குப் பிறகு ஒன்று முதல் பத்து வரையிலுமுள்ள மாசங்களுக்கு முறையே சுக்கிரன், செவ்வாய், குரு, சூரியன், சந்திரன், சனி, புதன், லக்கினுதிபன், சந்திரன், சூரியன் என்ற இவர்கள் அதிபர்களாகின்றனர். இந்த மாசாதிபர்களால் கர்ப்பத்திலிருக்கின்ற சிசுவின் சுபா சுபத்தை அறியவேண்டும்.

சு. 32. கர்ப்ப மாசாதிபனுன கிரகத்திற்கு மௌட்யம், (மூடம் = அஸ்தமனம்) சத்துருக்ஷேத்திரம், நீசம், யுத்தத்தில் அப ஜயம், முதலிய பலஹீனமான லட்சணங்கள் சம்பவிக்குமானுல், அந்த மாசத்தில் கர்ப்பத்திற்குக் குறைவு சம்பவிக்கும். யோககர்த்தா வாகிய கிரகம் லக்கினத்தில் வருகின்ற காலத்திலும் கர்ப்பம் குறைவை யடையும்.

சு. 33. அல்லது செவ்வாயும் சனியும் லக்கினத்தில் வரும் போதோ, சந்திரன் அவர்கள் நிற்கின்ற ராசியிலோ, அவர்கள் திருஷ்டி யுள்ள ராசியிலோ வரும்போதோ கர்ப்ப அழிவு அல்லது வீழ்ச்சி உண்டாகும். மாசாதிபனுன கிரகத்திற்கு உச்ச, ஸ்வக்ஷேத்திராதி, பல யோகலட்சணங்கள் உண்டெனில், கர்ப்பத்திற்கு அழிவு இல்லையென்று அறிந்து கொள்க.

சு. 34. இலக்கின இராசியிலோ, சந்திர விராசியிலோ, அந்த இரண்டு ராசிகளிலுமோ சுபக்கிரகங்கள் நின்றுலும், அவ்விராசி களுக்குச் சூரியனுடைய திருஷ்டி யுண்டாயிருந்தாலும், எல்லாச் சுபக்கிரகங்களும் 5-9-7-2-10-4 இந்த ஸ்தானங்களிலும், எல்லாப் பாபக் கிரகங்களும் 3, 6 இராசிகளிலும் நின்றுலும் கர்ப்பம் தோஷ

யின்றிச் சுகப்பிரசவமாகும். இங்கு சூரிய திருஷ்டிக்குத் திரிதசாதி கணனத்தைச் செய்பவருமுண்டு.

சு. 35. சூரியன் அல்லது சந்திரன் தனித்தோ ஒருகால் அவ்விருவரும் சேர்ந்தோ பாபர்கள் மத்தியில் நின்று சுபக் கிரகங்களுடைய திருஷ்டி யில்லாமலிருந்தால் கர்ப்பிணிக்கு மரணம் ஏற்படும். பாப மத்தியமென்பது முன்னும் பின்னும் பாபர்கள் இருப்பது.

சு. 36. இலக்கினத்திலும் ஏழாமிடத்திலும் பாபர்கள் இருந்து சுபக்கிரகங்களுடைய திருஷ்டியில்லாமலிருந்தால் கர்ப்பிணிக்கு மரணம் உண்டாம். இலக்கினத்தில் சனியோ க்ஷீண சந்திரனே இருந்து செவ்வாயின் பார்வையிருப்பினும் கர்ப்பிணிக்கு மரணம் ஏற்படும்.

சு. 37. பன்னிரண்டாமிடத்தில் சூரியன் இருந்து சந்திரன் க்ஷீணனுயிருந்தாலும், நான்காமிடத்தில் செவ்வாய் இருந்தாலும், அல்லது சுக்கிரன் பாபரின் மத்தியிலிருந்தாலும் கர்ப்பஸ்திரீக்கு மரணம் உண்டாகும்.

சு. 38. சந்திரனுக்கு நான்காமிடத்திலோ இலக்கினத்திற்கு நான்காமிடத்திலோ பாபர்கள் இருந்து இலக்கினத்திலோ ஏழாமிடத்திலோ செவ்வாய் சுபதிருஷ்டி யில்லாமலிருந்தால் கர்ப்பிணிக்கும் கர்ப்பத்திற்கும் நாசம் உண்டாகும்.

சு. 39 - 40. நான்காமிடத்தில் செவ்வாயும் பன்னிரண்டாமிடத்தில் சூரியனும் இருந்து சந்திரன் க்ஷீணனுயும் இருப்பின் கர்ப்பவதி இறந்துவிடுவாள். ஏழாமிடத்தில் பாபக் கிரகமும் இலக்கினத்தில் சூரியனே க்ஷீண சந்திரனே செவ்வாயோ இம்மூவரிலொருவர் இருப்பார்களானல் கர்ப்பிணிக்கு மரணம் ஏற்படும். இலக்கினத்திற்கு 2-ஆமிடத்தும் 12-ஆமிடத்தும் பாபக் கிரகங்கள் நின்றாலும், இலக்கினத்திற்குச் சுபதிருஷ்டி யில்லாமலிருந்தாலும் கர்ப்பிணி இறந்துவிடுவாள்.

சு. 41. ஏழாமிடத்தில் சூரியனும் இலக்கினத்தில் செவ்வாயும் இருந்தாலும், ஏழாமிடத்தில் செவ்வாயும் இலக்கினத்தில் சூரியனும் இருந்தாலும், அல்லது இவர்கள் சேர்ந்து இருந்தாலும் இந்த இரண்டு யோகத்திலும் கர்ப்பிணிக்கு ஆயுதசிகிச்சையால் மரணமுண்டெனச் சொல்லவேண்டும்.

சு. 42. பலவந்தர்களான புதனும் குருவும் சுக்கிரனும் சூரியனும் இலக்கினத்தையோ சந்திரனையோ பார்க்கின் கர்ப்பபுஷ்டியும்

சந்தான சித்தியும் உண்டாகும். மாசாதிபர்களான கிரகங்களுடைய பலத்திற்குத் தக்கவாறு அவ்வவற்றின் பாவங்களுக்கு அனுகுண மான பலன்களை யுக்திகொண்டு அறிந்து சொல்க.

சு. 43. கர்ப்பத்தின் பிறகு கர்ப்பிணிக்கு மூன்று மாசமானல், விசேஷ போஜ்ய (உணவு) வஸ்துக்களில் அபிருசி உண்டாகின்றது. மாசாதிபக் கிரகங்களைக் கொண்டும், இலக்கினுதிபக் கிரகங்களைக் கொண்டும், இலக்கினத்தில் நிற்கின்ற கிரகங்களைக் கொண்டும் திரவியங்களுடைய ரச பேதங்களையும் சுபாவத்தையும் கிரகங்க ளுடைய பலங்களுக்குத் தக்கவாறு யோசித்துச் சொல்லவேண்டும். ரசாதிபனை கிரகத்திற்குப் பலமில்லையென்றால், இந்த ரசம் நிமித்தமாக திரிதோஷ கோபத்தால் சம்பவிக்கின்ற ரோகத்தைச் சொல்லவேண்டும்.

"ரஸாஃஸ் ஸ்வாத் வதம்ல லவண திக்த்தோஷண கஷாயகாஃ தத் ராத்யா மாருதம் க்நந்தித்ரயஃ திக்தாதயஃ கபம் கஷாய திக்த்த மதுராபித் தம் புஷ்ணந்தி சேதரே" என்றபடி இவைகளை வைத்திய சாஸ்திர மூலமாக ரசாதி திரிதோஷ ரூபத்தையும் ரோக பேதங்களையும் அறிந்துகொள்ளவேண்டும். மூன்றும் மாசத்தில் கர்ப்பம் உருவப் படும் என்று பாட பேதமுமுண்டு.

சு. 44. ஆதான காலத்தில் சூரியன் சரராசியில் நின்றால், பத் தாவது மாசத்திலும், ஸ்திர ராசியில் நின்றால், பதினோராம் மாசத்தி லும் உபயராசியில் நின்றால், பன்னிரண்டாம் மாசத்திலும் பிரசவ மாகும்.

சு. 45. சரராசியான இலக்கினத்தில் கர்ப்பாதானம் நிகழ்ந்தால் பத்தாம் மாசத்திலும், ஸ்திர ராசியான லக்கினத்தில் நிகழ்ந்தால் பதி னோராம் மாசத்திலும், உபய ராசியான லக்கினத்தில் நிகழ்ந்தால் பன்னிரண்டாம் மாசத்திலும் பிரசவமாகும். இங்கு பின் னுள்ள இவ்விரண்டு விதமும் ஏற்றவாறு அறிந்துகொள்ள வேண்டிய வைகளாம். எல்லாப் பிரசவங்களும் பத்தாமாசத்தி லேற்படுமென்று பிரசித்தமிருந்தாலும், சாதாரணமாக சம்வத்சரம்வரை சொல்லப் பட்டதன் காரணம் "தஸ்மின்னேக திவசாதி க்ராந்தோபி பிரஸவ கால மாஹுரா ஸம்வத்சராத்" என்னும் வைத்திய சாஸ்திரம் பற்றியேயாகும்.

சு. 46-47. ஆதான பிரஸ்ன இலக்கினங்களினுலும், அவைக ளின் ஷட்வர்க்கம் முதலியவைகளினுலும் பிரசவ காலத்தைச் சொல்ல

வேண்டும். ஆதானத்தின் நட்சத்திரத்திற்குப் பத்தாவது நட்சத்திரத்தில் பிரசவம் ஏற்படும் என்று சில ஆசாரியார்கள் சொல்லுகின்றனர். ஜன்ம நட்சத்திரத்தினுடைய பத்தொன்பதாம் நட்சத்திரம் ஆதான நட்சத்திரம் ஆம் என்று விசாரணையால் அறிக. அவ்விதமானால் இந்த அபிப்பிராயம் "ஜன்மர்க்ஷாத்தசமம் ததோபிதசமம் சாதானபம் கர்ம்மபம்" என்றுள்ள சாதாரண நம்பிக்கைக்கு விபரீதமாகின்றது. ஆதான லக்கினத்தினுடைய ஏழாம் இராசி ஜன்ம லக்கினமாயும், ஆதானகால சந்திரன் ஜன்ம சந்திரனாகவும் ஏற்படுகின்றது என்று பாதராயணர்சொல்லுகின்றார். இவ்விதமாக அந்யோந்ய விருத்தமாகிய அபிப்பிராயத்தினால் பிரசவ காலம் நிர்ணய மில்லாமையால் எல்லோர்களுக்கும் சம்மதமான பட்சம் இனிமேல் சொல்லப்படுகின்றது.

சு. 48. கர்ப்பாதான காலத்திலோ அல்லது பிரஸ்ன காலத்திலோ சந்திரன் எத்தனையாவது துவாதசாம்சத்தில் நிற்கின்றார் என்றறிந்து அத்தனையாவது சங்கியையால் மேடமுதல் எண்ணினால் எந்தராசி வருமோ அம்மாசத்தில் அந்த ராசியில் சந்திரன் வரும்போது பிரசவம் ஏற்படும். இங்கு சந்திரத்வாதசாம்சகம் எத்தனையென்றறிந்து அவ்வெண்ணால் துவாதசாம்சக ராசிமுதல் எண்ணவருகின்ற ராசியில் சந்திரன் வரும்போது பிரசவம் ஆகும் என்னும் அபிப்பிராய பேதமுமுண்டு. இவ்விரு கொள்கைகளினாலும் ஆய்ந்தறிவதே முறையாம். வித்தியாசப்பட்டால் முதலிலே சொன்ன பட்சத்தையும் அங்கீகரிக்கலாம். சந்திரன் நிற்கின்ற துவாதசாம்சகத்தில் சென்ற கலைகளினால் நட்சத்திரத்தையும் திரைராசிகப் பிரகாரம் பங்கிட்டுக் கொள்ளவேண்டும்.

சு. 49. மேடம் முதலிய விராசிகளில் ஏதாவதொன்று லக்கினமாகி அந்த லக்கின நவாம்சகம் மகரமாகவோ கும்பமாகவோ வந்து அந்த லக்கினத்திற்கு ஏழிலே சனியும் நின்றால் மூன்று வருஷம் சென்றபின்னரே பிரசவம் ஏற்படும். இவைபோலவே லக்கினம் கடகத்தினுடைய நவாம்சகமாய் வந்து லக்கினத்திற்கு ஏழாமிடத்தில் சந்திரன் நின்றால் பன்னிரண்டு வருடம் சென்றே பிரசவம் ஆகும். அன்றியும் இந்த லட்சணத்தை ஆதான லக்கினத்தினாலும், அல்லது பிரஸ்ன லக்கினத்தினாலும் உசிதப்படி அறிந்து சொல்லவேண்டுமென்று கூறுப. இத்திறச் சம்பவம் அசாதாரணமானவை யென்றும் யோகம் யதார்த்தம் என்றே அறிந்து கொள்ளவேண்டும்.

சு. 50. இலக்கினராசி தின (பகல்) ராசியானல் பிரசவகாலம் பகல் என்றும், இராத்திரியானல் இராத்திரியில் பிரசவம் என்றும் சொல்லவேண்டும். தின (பகல்) ராத்திரி ராசிபேதம் 3-ஆம் அத்தியாயம் - 26-ஆம் சுலோகத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. இவ்விதம் தின ராத்திரி காலங்களை அறிந்து இலக்கின ஸ்புடத்தில் சென்ற பாகைகட்குரிய நாழிகை பகலிலோ இரவிலோ செல்லும்போது பிரசவம் ஏற்படும் என்று அறிந்து கொள்க.

சு. 51. முற்கூறியவிதம் பகலிலோ இராத்திரியிலோ சென்ற நாழிகையினல் இலக்கினத்தையும், இலக்கினத்தில் சென்ற நாழிகையினல் திரேக்காணதி ஷட்வர்க்கங்களையும் கணிதம் செய்துகொள்ள வேண்டுமென்ப. இவ்விதம் இலக்கினத்தைக் கொண்டும், சந்திரனைக் கொண்டும், பிரசவ கால மாசம் நட்சத்திரம் திதி பட்சம் இலக்கினம் முதலானவை யறிந்து காலத்தையும் தீர்மானப் படுத்திக் கொள்ளவேண்டும்.

சு. 52. இவ்விதமாக ஆதான லக்கினத்தையோ பிரஸ்ன லக்கினத்தையோ அடிப்படையாகக் கொண்டு பிரசவகாலத்தை நிர்ணயித்துத் தைவக்ஞன் அந்த லக்கினத்தைக் கொண்டே ஜாதக பலத்தை அறிந்துகொள்ள வேண்டும். இனிமேல் அவைகளின் பலத்தைச் சொல்லுகின்றார்.

சு. 53. ஆதான கால லக்கினம் சிம்மராசியாக ஏற்பட்டு அதில் செவ்வாய் சனி இவர்களின் திருஷ்டியோடுகூடி சூரியனும் சந்திரனும் நின்றால், அந்தக் கர்ப்பத்திலிருக்கின்ற சிசு ஜனிக்கும் போதே குருடாகப் பிறக்கும். இவ்விடத்தில் இலக்கினராசியான சிம்மத்தில் நிற்கின்ற சூரியனைச் செவ்வாய் சனி இவர்கள் நோக்கினல், வலது கண்ணில்லாதவனாகவும், அதுபோலவே சிம்மலக்கினத்தில் இருப்பவனான சந்திரனைச் செவ்வாய் சனி இவர்கள் நோக்கினல் இடது கண்ணில்லாதவனாகவும், சூரியன் சந்திரன் ஒன்றுசேர்ந்து சிம்மலக்கினத்தில் நிற்க அவர்களைச் செவ்வாய் சனி நோக்கினல் இரண்டு கண்ணுமில்லாதவனாகவும் பிறப்பானென்று அறிந்து கொள்க.

சு. 54. மேற்சொன்ன விதம் சிம்மலக்கினத்தில் இருக்கும் சூரிய சந்திரனைச் சுபக்கிரகங்களும் பாபக்கிரகங்களும் சேர்ந்து பார்த்தால் கண்ணில் வெளுப்புள்ளவனாவன். இங்குச் சூரியனுக்குப் புதன் சுக்கிரன் இவர்களுடைய பூர்ண திருஷ்டி சம்பவிக்கின்றதில்லை.

அவ்விதம் வரும்போது குருவினுடைய திருஷ்டி மட்டிலும் உபகாரப் படுகின்றது. சந்திரனுக்கு இவையெல்லாம் உண்டு. இத்தியாதி பேதங்களைக் கணித யுக்தியானுசாரமாக நிரூபித்துக் கொள்ள வேண்டும்.

சு. 55. ஆதான லக்கினத்திற்கோ ஜன்மலக்கினத்திற்கோ 12-ஆமிடத்தில் சந்திரன் நின்றால் இடது கண்ணிற்கும், சூரியன் நின்றால் வலது கண்ணிற்கும் நாசம் ஏற்படும். உண்மைபாக சூரியனும் சந்திரனும் சேர்ந்து 12-ஆமிடத்தில் நின்றால் இரண்டு கண்ணிற்கும் நாசம் சம்பவிக்குமென்று அறிந்துகொள்க.

யோக கர்த்தாவாகிய சூரியனுக்கோ சந்திரனுக்கோ அல்லது இவர்கள் இருவருக்குமோ பாப திருஷ்டி யுண்டானால் நிச்சயமாக இந்த யோகம் பலிக்குமென்றும், சுபதிருஷ்டி இருக்குமேல் கண்ணிற்கு நாசமில்லையென்றும் அறிந்துகொள்ள வேண்டும்.

சு. 56. கடகம்-விருச்சிகம்-மீனம் இந்த ராசிகளிலே அந்திய நவாம்சத்தில் பாபர்களும், இடபத்தில் சந்திரனும் நின்றால் மூகனை (ஊமை) ஜனிக்கின்றான். இந்தச் சந்திரனைச் செவ்வாயும் சனியும் சூரியனும் நோக்கினாலும் மூகனையே ஜனிப்பான். பலவந்தர்களான சுபக்கிரகங்கள் சந்திரனை நோக்குவார்களேயானால் காலாந்தரத்தில் வார்த்தை பேசுபவனாக இருப்பன்.

சு. 57. கடகம்-விருச்சிகம்-மீனம் இந்த ராசிகளிலே அந்திய நவாம்சத்தில் பாபக்கிரகங்களும் சந்திரனும் சேர்ந்து நின்று சுபக்கிரகங்களுடைய திருஷ்டியில்லாமலிருந்தால் அப்போது ஜனிக்கின்றவன் ஜடனாக (காது கேளாதவனாக) உற்பவிப்பன். சனியும் செவ்வாயும், புத நவாம்சத்தில் (அஃதாவது அம்சையில் மிதுனத்திலாவது கன்னியிலாவது) இருந்தால் பிறக்கும் போதே பல்லுடன் குழந்தை பிறக்கும். இங்கு அம்சகத்தைப் போலவே ராசியையும் விசாரித்து அறிந்துகொள்ளவேண்டும்.

சு. 58. புதன் லக்கினத்திலிருந்து 5-ஆமிடத்திலோ 9-ஆமிடத்திலோ எல்லாக் கிரகங்களும் பலஹீனர்களாக இருப்பின் * இரண்டு தலையும் நான்குகாலும் நான்கு கையும் உள்ள குழந்தை ஜனிக்கும்.

சு. 59. இலக்கினம் மகரமாயும் லக்கினம்சகம் கன்னியாயுமிருந்து இலக்கினத்திற்குச் சூரியன் சந்திரன் சனி இவர்களுடைய

---

* இந்த யோகம் சம்பவிப்பது அரிது. விபரீத காலத்திற்கே இவ்விதம் சம்பவிக்குமெனப் பெரியார் கூறுகின்றனர்.

திருஷ்டி ஏற்பட்டால் வாமனனுக (குள்ளன்) ஜனிப்பான். இலக்கினம் கடகமாகி அதில் சந்திரனிருந்து செவ்வாய் சனி இவர்களின் திருஷ்டியுண்டானுல் குப்ஜனுக (கூனன்) ஜனிப்பான்.

சு. 60. இலக்கினம் மீனமாகி அதைப் பலமுள்ள செவ்வாயும் சனியும் சந்திரனும் நோக்கின் அப்போது ஜனித்தவன் பங்கு (முடவனுக) வாக இருப்பன். இவ்விதம் சொன்ன யோகங்களையெல்லாம் ஸ்பஷ்டமாகக் கண்டு கொண்டால் நிச்சயமாக அவைகளைச் சந்தேக விபரீத மறச் சொல்லவேண்டியதாகத்தா னிருக்கின்றது. அப்படியானுலும் யோக கர்த்தாக்களாகிய கிரகங்கட்குச் சுபக்கிரக்ங்களின் திருஷ்டியுண்டா யிருந்தால் யோகபலம் பூர்ணமா யிருக்கின்ற தில்லையென்று மறிக. எனவே பலா பலன்களுக்குத் தக்கவாறு சொல்லவேண்டும்.

சு. 61. இலக்கினத்தினுடைய முதற்றிரேக் காணத்தில் பாபக் கிரகம் (செவ்வாய்) இருந்து பலவந்தர்களான சூரியன் சந்திரன் சனி இவர்களால் நோக்கப்பெற்று மற்றக் கிரகங்கள் பலஹீனர்களாக இருப்பார்களாயின் சிரசில்லாதவனுகப் பிறப்பான். மத்தியதிரேக் காணத்தில் மேற்கூறிய விதம் பாபஸ்திதியும் சூரிய சந்திர சனி திருஷ்டியும் சம்பவித்தால் கையில்லாதவனுகப் பிறப்பான். அந்திய திரேக் காணத்தில் மேற்சொன்னவாறு ஏற்பட்டால் கால்களில்லாதவனுக பிறப்பான்.

சு. 62. மேற்சொன்ன லட்சணங்களெல்லாம் ஆதான லக்கினத்தை அடிப்படையாகக் கொண்டு சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த லட்சணங்களை உசிதப்படி ஜன்ம லக்கினத்தைக் கொண்டு அறிந்து சொல்லவேண்டும். இவைகளைப் போலவே ஜன்ம லக்கினத்தைக் கொண்டு சொல்லியிருக்கின்ற மற்ற லட்சணங்களை ஆதான லக்கினங்கொண்டு உசிதத்திற்குத் தக்கவாறு அறிந்து சொல்லவேண்டும். ஆதான லக்கினம் ஜன்ம லக்கினங்கள் கொண்டு சொல்லப்பட்டிருக்கின்ற எல்லாப் பலங்களையும் பிரஸ்ன லக்கினங்கொண்டு நியாயப்படி சொல்லவேண்டும்.

எட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

## ஒன்பதாவது அத்தியாயம்,

# பிரசவகால லட்சணம்.

சு. 1. பிரசவ காலத்தை நிர்ணயிப்பதற்கு வேண்டிய ஆதான லட்சணங்களை முன் அத்தியாயத்தில் விவரித்து அதனுடைய இயல்பை வேண்டியவாறு அறிந்து பிறகு தெரிந்துகொள்ள வேண்டிய தான் ஜன்மகால லட்சணுத்தியாயத்தைக் கூறுகின்றூர்.

சு. 2. ஜன்ம லக்கினம் *சீர்ஷோதய ராசியானல் சிரசு முன் கொண்டு பிறக்கும். அதோ முகராசியானல் கால் முன்பாகப் பிறக்கும். உபயோதய ராசியானல் கைகள் முதலில் பிறக்கும். இலக்கினத்திற்குச் சுபதிருஷ்டி யேற்பட்டிருப்பின் பிரசவம் சுபமாயும், பாப திருஷ்டி யேற்பட்டிருப்பின் பிரசவம் கஷ்டமாயும் இருக்கும். சந்திர லக்கினத்தைக் கொண்டும், இராசிகளுடைய ஊர்த்துவ முகாதி பேதத்தை அநுசரித்தும், இந்தப் பலம் சொல்லவேண்டியதாகின்றது. இலக்கினுதிபனும் இலக்கினும்சகாதிபனும் இலக்கினத்திலிருக்கும் கிரகமும் வக்கிரியாயிருந்தால் பிரசவம் கிலேசத்தைத் தரத்தக்கதாமென்று மணித்தர் சொல்லுகின்றூர்.

சு. 3. பிரசவம் இலக்கின ராசியின் அம்சகராசிக்குச் சமத்துவமான பிரதேசத்தில் நிகழ்ந்திருக்கும். "மேஷஸ்ய தாத்வாகர ரத்ந பூமி:" என்றவைகளைக்கொண்டு ராசிப் பிரதேசத்தை அறிந்துகொள்ள வேண்டும். இலக்கினம் சரராசி அம்சகமானல் வழியில் பிரசவம் ஆனதென்றும், ஸ்திரராசி அம்சகமானல் பிரசவம் தனது கிருகத்தில் ஆனதென்றும், உபயராசி அம்சகமானல் கிருகத்திற்குப் பின்னல் அடுத்துள்ள ஒரு இடத்தில் பிரசவம் ஆனதென்றும் அறிய வேண்டும். அம்சகத்தைக் காட்டிலும் லக்கினத்திற்குப் பலமிருப்பின் இந்தப் பலன்களை இலக்கினத்தைக்கொண்டு அறியவேண்டியதாகின்றது.

சு. 4. மேற்கூறிய விதம் இலக்கினமோ இலக்கினும்சகமோ சர ஸ்திர உபயராசிகளில் ஒன்றுயிருப்பினும் இலக்கினம் தனது ராசி நவாம்சகத்திலிருந்தாலும், அல்லது இலக்கினுதிபதி ஸ்வ அம்சகமேறி யிருந்தாலும் தனது கிருகத்திலேயே பிரசவமாகுமென்க. பிதுர் மாதுர்காரகர்களான கிரகங்கள் பலமுடையவர்களா

---

* மூன்றும் அத்தியாயம் 26-ம் சுலோகத்தில் கூறப்பட்டுளது.

ளுல் பிதா மாதா இவர்களின் கிரகங்களில் பிரசவம் ஆகுமென்று சொல்லவேண்டும். அவை எவ்விதமெனில் கூறுவாம். சூரியன் பல வாளுல் பிதாவினுடைய கிருகத்திலும், சுக்கிரன் பலவாளுல் மாதாவினுடைய கிருகத்திலும், சனி பலவாளுல் பிதாவின் சகோதரனுடைய கிருகத்திலும், சந்திரன் பலவாளுல் மாதாவின் சகோதரியினுடைய கிருகத்திலும் பிரசவம் ஏற்படும். பகல் பிரசவத்திற்கு இவ்வாறு அறிந்து கொள்ளவேண்டும். இராத்திரி பிரசவமாயின் சனிக்குப் பிதுருகிருகமென்றும், சந்திரனுக்கு மாதுர்கிருகமென்றும், சூரியனுக்குப் பிதாவின் சகோதரர் கிருகமென்றும், சுக்கிரனுக்கு மாதாவின் சகோதரியின் கிருகமென்றும் அறிந்து கொள்ளவேண்டும். இங்குச் சூரியனும் சனியும் பிதுருகாரகராகையால் அவர்களுக்குப் பிதுரு பிதுர்வ்யாதி கிருகமென்றும், சந்திரன் சுக்கிரன் மாதுருகாரகராகையால் மாத்துரு மாத்துருவாதி கிருகமென்றும் பலத்திற்குத் தக்கவாறு அறிந்து கொள்ளவேண்டும். செவ்வாய்க்குப் பிராதுரு கிருகம் புதனுக்குப் பந்து (மித்துரு) கிருகம் இவை முதலிய காரகத்துவத்தை அநுசரித்து அறிந்து கொள்ளுக.

சூ. 5. மூன்றிற்குக் குறையாமல் சுபக்கிரகங்கள் தங்கள் தங்கள் நீசராசியிலிருந்தால் பிரகாரமதிலருகிலும் மரத்தின் கீழும் ஆற்றின் கரையிலும் பிரசவம் ஏற்படுமென்று சொல்லவேண்டும். வராஹ ஹோரையில் "தருசாலாதிஷு" என்றுள்ள ஆதிசப்தத்திளுல் "கூபா ராம பர்வதேஷு சர்வேஷு பிரதேசேஷ்வனுவ்ரு தேஷு" என்ற வியாக்கியானத்தை யநுசரித்து மேற்படி பிரதேசங்களையும் சிந்தித்துக் கொள்ள வேண்டும். ஒரு ராசியில் கிரகங்கள் எல்லாம் நின்று வெவ்வேறு ராசியான லக்கினத்தையும் சந்திரன் நின்ற ராசியையும் எவ்விதத்திலும் பார்க்காமலிருந்தால் காட்டில் பிரசவம் ஏற்பட்டதென்று சொல்லவேண்டும். இங்கு "திருஸ்யே திருஷ்ட்ரு விவர்ஜிதே" என்ற ஸ்ரீபதி பத்ததியின் வசனப் பிரகாரம் திருஷ்டியைக் கணித்து யோகத்தை நிர்ணயிக்கவேண்டும். பல கிரகங்கள் ஒன்று சேர்ந்திருந்து இலக்கினத்தையும் சந்திரனையும் நோக்குவரேல் மிகவும் ஜனங்களுள்ள விடத்தில் பிரசவித்ததென்றும் அறிந்து கொள்ள வேண்டும்.

சூ. 6. ஜலராசிகளான கடகம், மீனம், மகரத்தின் பிற்கூறு இவைகள் லக்கினமாய் இந்த ஜல ராசிகளு ளொன்றில் சந்திரனிருந்தால் ஜலத்தின் சமீபத்தில் பிரசவம் ஏற்படும். மேற்சொன்ன

ஜலராசி லக்கினமாக அதில் பூர்ண சந்திரன் இருந்தாலும் அல்லது அவனால் பார்க்கப்பட்டிருந்தாலும் ஜலத்தின் சமீபம் பிரசவம் ஏற்படும். இங்குச் சம சப்தம திருஷ்டியைக் கொள்ள வேண்டுமென்ப. அது போலவே லக்கினம் ஜலராசியாக ஏற்பட்டுச் சந்திரன் இலக்கினம் 4-10-ல் இருந்தாலும் ஜலத்தின் சமீபம் பிரசவம் ஏற்படும்.

சு. 7. புதன் இலக்கினத்திலும் கடகத்தில் பூர்ண சந்திரனும் நான்காமிடத்தில் ஒரு சுபக்கிரகமு மிருந்தால் ஜலயானத்தில் (கப்பல் அல்லது தோணியில்) பிரசவமானது என்று கூறவேண்டும். இலக்கினம் ஜலராசியாயும் நான்காமிடத்தில் சந்திரனுமிருந்தால் தோணியில் பிரசவம் ஏற்படும். இலக்கினம் ஜலராசியாகி ஏழாமிடத்தில் சந்திரனிருந்தால் தோணியில் பிரசவமாகு மென்று வராக ஓரையில் கூறப்பட்டுளது.

சு. 8. இலக்கினம் கடகம் விருச்சிகமாகி அதில் சனி நின்று அந்தச் சனியைச் சந்திரன் பார்த்தால் பிரசவம் பள்ளத்தில் ஏற்படுமென்று யவனாசாரியார், மணித்தர் முதலாயினோர் தெரிவித்திருக்கின்றார்கள்.

சு. 9. இலக்கினம் ஜலராசிகளிலொன்றாகி அதில் சனி நின்று அந்தச் சனியைப் புதன் பார்ப்பனேல் கேளீ சிருங்கார வனத்திலும், அந்தச் சனியைச் சூரியன் பார்த்தால் தேவாலயத்திலும், சந்திரன் பார்த்தால் ஊஷர (ஒன்றும் விளையாத உப்புநில) பிரதேசத்திலும் பிரசவம் ஏற்படுமென்று சொல்லுக.

சு. 10-11. வனராசிகளான சிங்கம் மகரத்தின் முற்பாதி இவைகள் இலக்கினமாகி அதில் சனி யிருந்தால் பர்வதத்திலோ காட்டிலோ பிரசவம் ஏற்படுமென்று சொல்லவேண்டும். மநுஷ்ய ராசிகளான மிதுனம், கன்னி, துலாம், தநுசின் முற்பாதி இவைகள் இலக்கினமாகி அதில் சனியிருந்து செவ்வாயினால் பார்க்கப்பட்டால் சுடுகாட்டிலும், மேலே தெரிவித்த பிரகாரமுள்ள சனி புதனால் பார்க்கப்பட்டால் சில்பவேலை செய்கின்ற இடத்திலும், சூரியனால் பார்க்கப்பட்டால் ராஜகிருகம் தேவாலயம் பசுத்தொழுவம் இவைகளிலும், சுக்கிரன் புதன் இவர்களிலொருவரால் பார்க்கப்பட்டால் மனதிற்குச் சந்தோஷமான விடத்திலும், குருவினால் பார்க்கப் பட்டால் பிராமணர் வீடு அக்கினி ஹோத்திரம் செய்யுமிடம் இவைகளிலும் பிரசவம் ஏற்பட்டிருக்குமென்று சொல்லவேண்டும்.

சூ. 12. இலக்கினத்திற்குப் பத்தாமிடமான கடகத்தில் குரு உச்சம் பெற்றிருந்தால் இரண்டோ மூன்றோ நான்கோ கட்டுள்ள கிருகத்தில் பிரசவம் ஏற்படும். எவ்வாறெனில் துலா லக்கினத்திற்குப் பத்தாமிடமான கடகத்தில் குரு பரமோச்ச பாகத்தில் இல்லாது (5 பாகைக்குமேல்) இருந்தால் இரண்டு கட்டுள்ள வீடென்றும், அதற்குக் கீழ் (5 பாகைக்குக் கீழ்) இருந்தால் மூன்று கட்டுள்ள வீடென்றும், பரமோச்சமான 5 பாகையில் இருந்தால் நான்கு கட்டுள்ள கிருகமென்றும் சொல்லவேண்டும். இது போலவே குரு பலவானாகித் தநுசிலிருந்தால் மூன்று கட்டுள்ள வீடென்றும், மிதுனம் கன்னி மீனம் இந்த ராசிகளில் இருந்தால் இரண்டு கட்டுள்ள வீடென்றும் சொல்லவேண்டுமென்ப. எல்லா விடத்திற்கும் குரு பத்தாமிடத்தில் இருக்கவேண்டு மென்பதாம்.

சூ. 13. மேடம் இடபம் கிழக்கு. மிதுனம் தென்கிழக்கு. கடகம் சிம்மம் தெற்கு. கன்னி தென்மேற்கு. துலாம் விருச்சிகம் மேற்கு. தநுசு வடமேற்கு. மகரம் கும்பம் வடக்கு. மீனம் வடகிழக்கு. இவ்விதம் மேற்சொன்ன ராசி ஸ்திதிகளையும் அநுசரித்துக் கொண்டு கிழக்கு முதலான திக்குகளையும் தென்கிழக்கு முதலான மூலைகளையும் அறிந்து இவைகளில் லக்கின விராசியின் திக்கில் பிரசவ சயன ஸ்தானத்தைச் சொல்லவேண்டும்.

சூ. 14. துவாதச பாக மண்டலமாகிய இராசிச் சக்கரத்தைக் கற்பித்து ஜென்ம லக்கின முதல் அதனை நான்கு பங்குகளாக்கிக் கொண்டு அந்தப் பிரதமாதி பங்குகளில் இருக்கின்ற கிரகங்களினால் பிரசவ வீட்டின் கிழக்கு முதலிய திக்குகளிலுமுள்ள வீடுகளை அறிய வேண்டும். கிருக கர்த்தாக்களான கிரகங்களுடைய ஸ்தான பலங்களுக்குத் தக்கவாறு சுற்றிலுமுள்ள கிருகங்களுக்குத் துவிசாலை திரிசாலை முதலான வேறுபாட்டையும் அந்தக் கிருகத்தில் வசிக்கப்பட்டவர்களுடைய ஜாதி தேவாலயம் நதி முதலான மற்ற லட்சணங்களையும் உள்ளபடியே நிரூபித்துக் கொள்ளவேண்டும்.

சூ. 15. ஜனன காலத்தில் சுக்கிரன் பலவானானால் பிரசவ வீடு சித்திரவேலைகளோடுள்ளதாயும் புதிதானதாயும் இருக்கும். குரு பலவானால் காத்திரமும் புஷ்டியுமுள்ள கிருகமாயிருக்கும். செவ்வாய் பலவானானால் தீப்பிடித்து எரிந்து சேடமான வீடாயிருக்கும். சூரியன் பலவானானால் வேண்டிய பணி செய்யாததும் மிகவும் புஷ்டியில்லாததுமான கிருகமாயிருக்கும். சந்திரன் பலவானானால் புதி

தான வீடாயிருக்கும், புதன் பலவானானால் மிகவும் சிறந்த ஆச்சாரிகள் சேர்ந்து வேண்டியவாறு பணி செய்துள்ள கிருகமாயிருக்கும். சனி பலவானானால் ஜீர்ணமும் கேடும் பழமையானதுமாயுள்ள கிருகமாயிருக்கும். இங்ஙனம் அறிந்து சொல்லுக.

சு. 16. பிரசவ வீட்டை இவ்விதமாக அறிந்து அதன் வாசல்களின் கிரமத்தைச் சொல்லவேண்டும். கிரகங்களுக்குத் தெரிவித்த கிழக்கு முதலிய திக்குகளில் வாயிலிருக்குமென்பதை 7-ஆமிடத்திலிருக்கும் கிரகத்தைக்கொண்டும், அல்லது நான்கு பத்து இலக்கினம் இந்த ஸ்தானங்களில் கிரகங்களிருந்தால் அக்கிரகங்களைக் கொண்டும் அவர்களுக்கு ஏற்பட்ட திக்குகளில் வாயிலிருக்குமென்றும், பல கிரகங்கள் கேந்திரத்திலிருப்பின் பலமுள்ள கிரகத்தின் திக்கிலும், பலமுள்ள கிரகங்கள் பல இருப்பின் அவரவர்கள் திக்குகளில் வாயிலிருக்குமென்றும் உசிதத்திற்குத் தக்கவாறு சொல்ல வேண்டும். கேந்திரத்தில் ஒரு கிரகமுமில்லை யென்றால் இலக்கின இலக்கின துவாதசாம்சக ராசிகளின் திக்கில் வாயில் உண்டென்று சொல்க. முன்னமே தெரிவித்தபடி பலமுள்ள கிரகத்தைக்கண்டு பிரசவ வீட்டைக் கூறியது போலவேபிரசவ வீட்டைச் சுற்றிலுமுள்ள வீடுகளையும் அறிந்து கொள்ள வேண்டும்.

சு. 17. சூரியனுக்குத் தேவாலயம். சந்திரனுக்குச் ஜலமிருக்குமிடம். சேவ்வாய்க்குச் சமையல்செய்யுமிடம். (நெருப்பு இருக்குமிடம்) புதனுக்குப் படுக்கையறை. குருவிற்குப் பொக்கிஷ அறை. சுக்கிரனுக்கு விளையாடுமிடம். சனிக்கு மலங்கழிக்கு மிடம். இவ்விதம் கிரகங்களைக் கொண்டு கிருகங்களையும் கிழக்கு முதலிய திக்குகளையும் அறியலாம். சுக்கிரனுக்கு நித்திரை செய்யுமிடமென்று பிறநூல் கூறுகின்றது.

சு. 18. முன் அத்தியாயத்தில் 13-ஆம் சுலோகத்தில் தெரிவித்தவாறு மேடம் முதலிய ராசிகளின் திக்கில் கட்டில் இருப்பதை நிரூபணம் செய்யவேண்டும். அதில் நிற்கின்ற கிரகங்களுக்குத் தகுதியான அடையாளங்களையும், சுபக்கிரகங்களுடைய திருஷ்டியினால் விரித்திருக்கின்ற சமுக்காளம் முதலிய பேதங்களையும் நிரூபிக்க வேண்டியதாகின்றது.

சு. 19-20. இவ்விதம் கட்டிலின் நிலைமை தெரிந்து ஜன்மலக்கினம் எந்த ராசியாகிறதோ அந்த ராசிக்குச் சொல்லப்பட்ட திசையில் தலைவைத்துப் படுத்திருந்ததாகச் சொல்லவேண்டும். அவ்

விடத்தில் திசைகளிலும் மூலைகளிலுமுள்ள எல்லாராசிகளும் சரீராங்கங்களாகின்றன.

* திருசியார்த்த ராசிகளைக் கொண்டு வாமாங்கத்தையும் அதிருசியாதி ராசிகளைக் கொண்டு தட்சிணாங்கத்தையும் அறிந்து கொள்ள வேண்டும். இதைத் தெளிவாகக் கூறுவாம்.

இலக்கினமும் இரண்டாமிடமும் தலைப்பக்கமாம். 7 - 8-ஆமிடங்கள் பின்பக்கமாம். 4-5-ஆமிடங்கள் வலது பக்கமாம். 10-11-ஆமிடங்கள் இடதுபக்கமாம். 3-ஆமிடம் முன்பக்கத்து வலது கால். 12-ஆமிடம் முன்பக்கத்து இடது கால். 6 ஆமிடம் பின்பக்கத்து வலதுகால். 9-ஆமிடம் பின்பக்கத்து இடதுகால் என்று இங்ஙனம் கட்டிலின் நிலையை அறிந்துகொண்டு அந்த இடத்திலிருக்கின்ற கிரகங்களைக் கொண்டு அவரவர்களுக்குச் சொல்லியிருக்கிற இலட்சணங்களைச் சொல்லவேண்டும்.

உபயராசிகள் மேற்கூறிய கட்டிலில் எந்த பாகத்திலிருக்கின்றனவென்றறிந்து அவ்விடங்கள் தாழ்ந்திருக்குமென்றும், குரூரகிரகங்கள் எந்த விடத்திலிருக்கின்றனவோ அந்தவிடம் உபகாகாதி தோஷமானதென்றும் அறிந்து கொள்ள வேண்டும்.

உச்சம் ஆட்சி முதலிய விடங்களில் இருக்கும் பாபக்கிரகங்கள் சுபபலத்தையே கொடுப்பார்கள் என்றும் அறிந்து கொள்ள வேண்டும்.

---

* இலக்கினத்தில் செல்ல வேண்டிய பாகை கலையாதிகளில் 180 பாகைகள் வரை செல்வதை அதிரிசியமென்றும் மற்றதைத் திருசியமென்றுங் கூறுப. இலக்கினஸ்புடம் இராசி 2. பாகை 9. கலை 20.

**உதாரணம்: இலக்கினஸ்புடம் இ. 2. 9. 20**

| | |
|---|---|
| மிதுனத்தில் செல்லவேண்டிய பாகை கலைகள் | 20. 40 |
| கடகம் 30, சிம்மம் 30, கன்னி 30, துலாம் 30, விருச்சிகம் 30 ஆக பாகை | 150. 0 |
| தநுசில் ஆரம்பமுதல் செல்ல வேண்டிய பாகை கலைகள் | 9. 20 |
| ஆக பாகை | 180. 0 |

**இப்பாகத்தேயுள்ள கிரகங்கள் அதிரிசிய கிரகங்களாம். மற்றப் பாகத்தேயுள்ள கிரகங்கள் திரிசிய கிரகங்களாம்.** துலாம் முதல் 6 இராசிகள் வாமாங்கம். மேடம் முதல் 6 இராசிகள் தட்சிணாங்கம்.

சு. 21. நீசத்திலோ நான்காமிடத்திலோ இலக்கினத்திலோ சந்திரன் இருந்தால் தரையிலே யிருந்து பிரசவம் ஆனதென்று சொல்ல வேண்டும். சந்திரனுடைய பலாபலத்திற்குத் தக்கவாறு பாய் முதலியவைகளையும் அறிந்து கொள்ளவேண்டும். கட்டிலில் படுக்காத படுக்கை என்பது தாத்பரியம். இலக்கினத்திலிருந்து எத்தனையாவது ராசியில் சந்திரனிருக்கின்றானென்றறிந்து அந்த லக்கின சந்திரர்களுடைய மத்தியிலிருக்கின்ற கிரகங்களின் சங்கியைப்படி பிரசவஸ்திரீயின் சமீபத்திலிருப்பவர்களைச் சொல்லவேண்டும்.

சு. 22-23. இலக்கினஸ்புடத்தில் சென்ற பாகை முதல் தலைகீழாக ஏழாவது பாவத்தில் இலக்கினத்தில் உதயமாக வேண்டிய பாகைகளுக்கு ஒப்பானபாகம் வரையிலும் ஆக இவையாவும் சேர்ந்துள்ள சக்கரத்தின் பாதியைத் திரிசியார்த்தமென்றும், மற்றவைகளை அதிரிசியார்த்தமென்றும் சொல்லுகின்றனர். ஆகவே, திரிசியமான சக்கரார்த்தத்தில் எவ்வளவு கிரகங்கள் இருக்கின்றனவோ அவ்வளவு உபசூதிகைகள் கிருகத்திற்குள் இருப்பார்கள் என்றும், ஏழாம் பாவத்திற்கு மேல் சந்திரன் இருந்தானேயானால் முன்சொன்ன திரிசியார்த்தத்திலிருக்கின்ற கிரக சங்கியையின்படி பிரசவ வீட்டிற்கு வெளியிலிருக்கின்ற உபசூதிகைகளையும் அறிந்து கொள்ளவேண்டும். இங்கு திரிசியார்த்தத்தைக்கொண்டு வீட்டிற்குள் என்றும், அதிரிசியார்த்தத்தைக் கொண்டு வீட்டிற்கு வெளியே யென்றும் வேறு பட்சமுமுண்டு. என்றாலும் பெரும்பான்மையோர் முதல் அபிப்பிராயத்தை அநுசரிக்கின்றனர்.

சுபக்கிரகங்களைக் கொண்டு உபசூதிகைகளுடைய அழகு ஆபரணம் முதலியவைகளுடைய குணங்களையும், பாபக்கிரகங்களினால் விரூபம் அசுத்தம் முதலியவைகளையும் பலத்திற்குத் தக்கபடி சொல்லவேண்டும். மேலும் உபசூதிகா கர்த்தாக்களைக்கொண்டு அவர்களுடைய ஜாதி சுபாவம் அழகு (ரூபம்) ஆயுள் நிறம் முதலியவைகள் எல்லாம் அறியவேண்டும். இவ்விஷயத்தில் உச்சம் வக்கிரம் முதலியன கிரகங்களுக்கிருக்குமேல் ஆயுர்த்தாயயுக்தத்தைக் கணித்துக் கொள்ள வேண்டுமென்று ஹோரா வியாக்கியான காரர்கள் கூறுகின்றார்கள்.

சு. 24 தீபலட்சணத்தைச் சொல்லுகின்றார். பிரசவ வீட்டைப் 12 பாகமாகச் செய்து மேடம் முதலாக எண்ணி எந்தப் பாகத்தில் சூரியன் இருக்கின்றான் என்றறிந்து அந்தப் பாகத்தில் தீப

மிருக்கும் என்று சொல்லவேண்டும். சூரியன் சரராசியிலிருந்தால் கோல் விளக்கு என்றும், ஸ்திரராசியிலிருந்தால் நில விளக்கு என்றும், உபயராசியிலிருந்தால் தூக்கு விளக்கென்றும் அறிந்து கொள்க.

சு. 25. சந்திரன் பூர்ணனுயிருந்தால் விளக்கில் எண்ணெய் நிறைந்திருக்குமென்றும், க்ஷீண சந்திரனுயிருந்தால் விளக்கில் எண்ணெய் குறைவாயிருக்கு மென்றும் அறிந்துகொள்ள வேண்டும். இலக்கினஸ்புடத்தில் சென்ற செல்லவேண்டிய பாகைகளைக் கொண்டு எரிந்த திரிகளையும் எரியும் திரிகளையும் அறிந்து சொல்க. இலக்கினத்தின் ராசி நிறம் கொண்டு திரியின் நிறத்தை அறிந்துகொள்க.

சு. 26. சூரியன் பலம் பெற்றுச் செவ்வாயின் திருஷ்டியை யடைந்து இருப்பின் பிரசவ சமயம் அதிகமான விளக்குகள் இருந்திருக்கு மென்றும் சொல்ல வேண்டும். பலமில்லாத மற்றக் கிரகங்கள் சூரியனைப் பார்த்திருந்தால் புற்களினுல் வெளிச்சம் உண்டாயிருக்குமென்றும் அறிந்துகொள்ளவேண்டும்.

சு. 27. சந்திரனின் நவாம்சகம் சனி க்ஷேத்திரமான மகர கும்பமாயிருந்தாலும், சந்திரன் சனியோடு சேர்ந்திருந்தாலும், சந்திரனைச் சனி பார்த்திருந்தாலும், ஜலராசியின் நவாம்சத்தில் சந்திரனிருந்தாலும், நான்காமிடத்தில் சந்திரன் நின்றாலும் சந்தேகமில்லாமல் இருட்டு வீட்டில் பிரசவமானதென்று சொல்லலாம்.

சு. 28. ஒரு விதத்திலும் லக்கினத்தைச் சந்திரன் பார்க்காமலிருந்தால் அந்த வீட்டில் பிதா இல்லாத சமயம் பிரசவம் ஆயிருக்கு மென்று சொல்லவேண்டும். இவ்விதயோக மிருந்து சூரியன் லக்கினத்திற்கு-9 ஆமிடம் 8-ஆமிடம் இவைகளில் சரராசியில் இருந்தாலும் பிரசவ சமயம் பிதா அந்நிய தேசத்திற்குப் போயிருப்பாரென்று நிச்சயிக்க வேண்டும். சூரியன் மேற்சொன்ன ஸ்தானங்களில் ஸ்திரராசியிலிருந்தால் பிதா ஸ்வதேசத்தில் இருக்கும்போது பிரசவ மென்றும், உபயராசியில் இருந்தால் பிதா வேறு தேசத்திற்கும் ஸ்வதேசத்திற்கும் மத்தியப் பிரதேசத்தில் (நடுவழியில்) இருக்கும் சமயம் பிரசவமென்றும் சொல்க.

சு. 29. பகல் ஜனனத்தில் சூரியனும் இராத்திரி ஜனனத்தில் சனியும் செவ்வாயின் திருஷ்டியோடு இருந்தால் பிதா காலஞ்சென்று போயிருப்பானென்றே சொல்லவேண்டும். அங்கு சூரியனும்-சனியும்-செவ்வாயின் யோக திருஷ்டிகளோடு சரராசியிலிருந்தால் அந்நிய

தேசத்தில் பிதா இறந்து போனதாகவே சொல்லவேண்டும். முற் கூறிய விதமே சர ஸ்திர உபயங்களின் பேதத்தையும் அறிந்து சொல்ல வேண்டும்.

சு. 30. சூரியனிருக்கும் இராசிக்கு 5, 7, 9 இவ்விடங்களில் பாபர்களிருந்து பாபர்களுடைய திருஷ்டியுமுண்டானால் பிதா அந்நிய தேசத்தில் கட்டுப்பட்டு இருக்கின்றாரென்று சொல்ல வேண்டும். சூரியனிருக்கும் இராசியின் சர ஸ்திராதி பேதத்தைத் தழுவி அயல்நாடு தன்னாடு என்னும் பேதத்தை சிந்தித்துச் சொல்ல வேண்டும்.

சு. 31. இலக்கினத்திற்கு 5, 7, 9 இந்த ஸ்தானங்களில் பாபக் கிரகங்களிருக்கும் சமயம் ஏற்பட்ட பிரசவம் சந்தோஷகரமாயிரா தென்றும், நான்காமிடத்திலும் பத்தாமிடத்திலும் சுபக்கிரக மிருந் தால் அநேக சம்பத்துக்களோடு கூடியிருக்குமென்றும் சொல்லுக.

சு. 32. இலக்கினம் சந்திரன் இவைகளை ஒருவிதத்திலும் குரு பார்க்காமலிருக்கும்போது ஜனித்தவன் ஜார (கள்ள புருடன்) புத்திரனுவனென்க. சந்திரன் சூரியனோடு சேராமலிருந்தாலும் ஜார ஜனனத்தைச் சொல்லலாம். சந்திரன் சூரியனோடும் வேறொரு பாபியோடும் சேர்ந்திருந்தாலும் அத்திறப் புத்திரனேயா மென்க. இந்த மூன்றுவிதமான யோகத்திலும் குருவின் திருஷ்டியுண்டா யிருக்குமேயானால் ஜாரத்துவமேயில்லை. திருஷ்டிபோலவே குருவி னுடைய திரேக்காண துவாதசாம்ச நவாம்ச திரிம்சாம்ச க்ஷேத்திரத் தில் சந்திரனே லக்கினமோ இருந்தாலும் ஜாரத்துவம் உண்டாக ஹேதுவில்லையென்று வேறு கிரந்தங்கள் கூறுகின்றன. இவ்விதம் ஜார ஜனனத்தை நிச்சயித்து விட்டால் அந்த ஜார (கள்ளபுருட) னுடைய ஜாதி சுபாவம் ஆகிருதி முதலியவைகளைச் சொல்லலாம். ஒன்பதாம் பாவாதிபனைக் கொண்டும், ஒன்பதா மிடத்திலிருக்கின்ற கிரகத்தைக் கொண்டும், சூரியனைக் கொண்டும் இவற்றை அறிந்து கொள்க.

சு. 33. குரு சூரியன் சந்திரன் இவர்கள் பரம நீசத்திலிருந் தால் ஜார புத்திரனாகின்றான். இலக்கினத்தில் சனியிருந்து லக்கி னம் சந்திரன் சுக்கிரன் இவர்களைச் சுபக்கிரகங்கள் பார்க்காமலிருந் தாலும் ஜார புத்திரனுவான் என்றும் கண்டு கொள்க.

சு. 34. சந்திரனுக்கு 1-4-7 - ஆமிடங்களில் பாபக்கிரகங் களிருந்தால் பிரசவ சமயம் மாதாவுக்கு அதிக கஷ்டங்களுண்டா

யிருக்கும். சந்திரனோடு பாபக்கிரகங்கள் சேர்ந்திருந்தாலும் தாய்க்குக் கஷ்டத்தைச் சொல்லவேண்டும். ஏழாமிடத்தில் பாபர்களிருந்து செவ்வாயினால் பார்க்கப்பட்டால் மாதாவுக்கு மாரணத்தைச் சொல்ல வேண்டும்.

சு. 35. சந்திரனுக்குப் பத்தாமிடத்தில் சூரியன் பாபக்கிரகத்தோடு சேர்ந்து இருந்தால் தாய் இறப்பாள். சுக்கிரனுக்கு ஐந்தாமிடத்திலோ ஒன்பதாமிடத்திலோ சூரியன் சனியோடு சேர்ந்திருந்தாலும் அல்லது சூரியனைச் சனி பார்த்தாலும் மாதாவுக்கு மாரணம் உண்டாம். சுக்கிரனுக்கு 5-ஆமிடத்தில் மட்டிலுமே இந்த விதி பொருந்துமென்று வேறு நூல்கள் சொல்லுகின்றன.

சு. 36. சந்திரனுக்கு 5-ஆமிடத்திலோ 9-ஆமிடத்திலோ சனியிருந்து பாபதிருஷ்டி அந்தச் சனிக்கு உண்டானால் மாதாவுக்கு மாரணம் உண்டு. இராத்திரியில் ஜனனமாயிருந்தாலும் இவ்விதமே கூறுக. பகல் ஜனனமாயிருந்து சுக்கிரனுக்கு 5-ஆமிடத்திலோ 9-ஆமிடத்திலோ செவ்வாய் பாபதிருஷ்டியுடன் இருந்தாலும் மாதா இறப்பள்.

சு. 37. செவ்வாயும் சனியும் சேர்ந்து சுக்கிரனுக்கு 5-ஆமிடத்திலோ 9-ஆமிடத்திலோ 7-ஆமிடத்திலோ இருந்தால் அக்குழந்தையை மாதா அலட்சியம் செய்வாள். சந்திரனைப் பலவானை குரு பார்த்தால் அந்தக் குழந்தை பின்னால் சுகவானாகவும் தீர்க்காயுளுடையவனாகவும் இருப்பான்.

சு. 38. சந்திரன் லக்கினத்திலிருந்து பாபக்கிரகங்களால் பார்க்கப்பட்டு ஏழாமிடத்தில் செவ்வாய் நின்றால் அம்மகன் மாதாவினால் விடுபட்டவனாய்ப் பின் இறந்து படுவன். இவ்விதமே சந்திரன் பாபதிருஷ்டியோடு இலக்கினத்திலும் செவ்வாயும் சனியும் சேர்ந்து பதினோராமிடத்திலும் இருந்தால் மாதாவினால் உபேட்சிக்கப்பட்டு (விடப்பட்டு) அக்குழந்தை இறந்துவிடும்.

சு. 39. மேலே தெரிவித்தவிதம் இருக்கும் சந்திரன் பலவானை சுபக்கிரகத்தினால் பார்க்கப்பட்டால் அவ்விதம் பார்க்கப்பட்டவனான கிரகத்திற்குச் சொல்லப்பட்ட பிராமணாதி வர்ணத்திலுள்ள ஒருவனால் குழந்தை வளர்க்கப்பெறும். சுபர்களும் பாபர்களும் அந்தச் சந்திரனைப் பார்க்கினும் பிறரால் எடுத்து வளர்க்கப்பெற்றுப் பின்னர் கொஞ்ச காலத்துக்குள் குழந்தை இறந்து போய் விடும்.

சு. 40. இவ்விதமாகச் சொல்லப்பட்ட எல்லா யோகங்களிலும் பலவந்தனை குருவினுடைய சம்பூர்ண திருஷ்டியோடு சந்திரன் நின்றால் எந்த ஜாதியிலுள்ளவர் எடுத்து வளர்த்தாலும் அந்தக் குழந்தை தீர்க்காயுளோடு கூடி இருப்பான்.

சு. 41. சனியும் செவ்வாயும் சேர்ந்து ஒரு ராசி அம்சங்களிலிருந்தாலும் குழந்தை மாதாவினால் உபேட்சிக்கப்படும். இலக்கினத்திற்கு ஏழில் செவ்வாயிருந்து சனியினால் பார்க்கப் பெறுதிருக்கின் நிச்சயமாக மாதாவினால் விடப்படுவான்.

சு. 42. சந்திரனைப் பார்க்கின்ற சுபக் கிரகத்தினுடைய குலம் சுபாவம் முதலிய குணங்களையெல்லாம் மாதாவால் நிராகரிக்கப்பெறும் குழந்தை அடையும் என்பர் பெரியோர். சூரியன் ஜனன காலத்தில் பலவானுயிருந்தால் குழந்தை பிதாவின் சாயையாய் இருப்பான் என்றும், சந்திரன் பலவானுயிருப்பின் குழந்தை மாதாவின் சாயையாய் இருப்பான் என்றும் சொல்க.

சு. 43. சிம்மம் மேடம் இடபம் இவைகளிலொன்று லக்கினமாகி அதில் செவ்வாயாவது சனியாவது இருந்து லக்கினம்சகராசி கால் முதலிய அங்கங்களில் எந்த அங்கமாகின்றதோ அந்த அங்கத்தில் தொப்புள்கொடி சுற்றிக் கொண்டு பிரசவமாயிருக்கும் என்று சொல்லுக.

சு. 44. செவ்வாயினுடைய திரேக்காணமான லக்கினத்தில் சந்திரன் பாபனோடு சேர்ந்து இருக்க இரண்டாமிடம் பதினோராமிடங்களில் சுபக்கிரகங்களிருந்தால் சர்ப்பமோ சர்ப்பத்தால் சுற்றப்பட்டிருக்கும் குழந்தையோ பிறந்திருக்க வேண்டுமென்று சொல்லுக.

சு. 45. சூரியன் சதுஷ்பாத ராசியிலும் (மேடம் இடபம் சிங்கம் தநுசின் பிற்பாகம் மகரத்தின் முற்பாகம்) மற்ற எல்லாக் கிரகங்களும் பலவந்தர்களாகி உபயராசியிலு மிருந்தால் ஒரு கர்ப்பாசயத்தில் குடலினால் சுற்றப்பட்டு இரண்டு குழந்தைகள் பிறக்கும்

சு. 46. இலக்கினத்தினுடைய நவாம்சராசியின் அதிபனுடைய சரீர இயற்கையோ அல்லது ஜனன காலத்தில் மிகவும் பலவானுயிருக்கின்ற கிரகத்தினுடைய சரீர இயற்கையோ சொல்லவேண்டும். நவாமிச ராசிக்குப் பலமிருப்பின் அந்த அதிபனுடைய நிறத்தைச் சொல்லலாம். சந்திரனின் நவாம்சராசியின் அதிபனுடைய சரீர

நிறம் முதலியவைகளையும் சொல்லாமென்றும் கூறுப. இவைகளில் பலமுள்ளதை யறிந்து நிர்ணயித்துக் கொள்க.

சு. 47. மேற்சொன்ன சரீரலட்சண கர்த்தாவாகிற கிரகங்களில் பலர் பலவான்களாக ஏற்பட்டால் அப்போது அந்தக் கிரகங்களுக்குச் சொல்லப்பட்ட மிசிர லட்சணங்களும் கலந்திருக்குமென்று சொல்லவேண்டும். அதுபோலவே அந்தக் கிரகங்களைக் கொண்டு ஜாதி தேசம் குலம் குணம் கர்மம் முதலான பேதங்களையும் உசிதத்திற்குத் தக்கவாறு அறிந்து சொல்ல வேண்டும்.

சு. 48. ஜனன சமயம் சூரியன் எந்தக் கிரகத்தினுடைய திரிம்சாம்சத்திலிருக்கின்றானென்றறிந்து அந்தக் கிரகத்துக்குச் சொல்லியிருக்கின்ற பிரகிருதியையும் சொல்ல வேண்டுமென்று ரிஷீஸ்வரர்கள் நிர்ணயித்திருக்கின்றார்கள்.

சு. 49. ஜனன காலத்திலுள்ள கிரகங்களுடைய மித்துரு சத்துருத்துவம் முதலிய பேதங்களையும், உச்சம் நீசம் முதலிய சம்பவங்களாகிற எல்லாப் பலாபலங்களையும், கிரகங்களுடைய அவஸ்தை சுபாவம் முதலியவைகளையும், நன்றாயறிந்துகொண்டு சகல லட்சணங்களையும் சுபாசுப பலங்களையும் கால தேசங்களுக்கேற்றவாறு தைவக்ஞன் அறிந்துகொள்ள வேண்டும்.

சு. 50. க்ஷீண சந்திரன் ஜனன காலத்தில் பாபக் கிரகங்களுடன் சேர்ந்தோ பார்க்கப்பட்டோ இருந்தால் தாய் இறந்து விடுவாள். இவ்விதமே சூரியன் பலஹீனனாகி பாபர்களுடன் சேர்ந்தோ பார்க்கப்பட்டோ இருந்தால் தகப்பன் இறந்துவிடுவான். சந்திரனோ சூரியனோ பாபர்களோடும் சுபர்களோடும் சேர்ந்தோ பார்க்கப்பட்டோ இருந்தால் தாய் தந்தையர்களுக்கு வியாதியைச் சொல்லவேண்டும். பாபயோக திருஷ்டிகளில்லாமல் சுபயோக திருஷ்டிகளுண்டாயிருந்தால் (தாய் தகப்பன்) அவர்களுக்குச் சுபம் முதலிய விருத்தியைச் சொல்ல வேண்டும். இதுபோலவே குஜாதி கிரகங்களைக் கொண்டு சகோதரன் முதலியவர்களுடைய குண தோஷத்தை யறிந்து கொள்க.

சு. 51. பரிபூர்ண கலைகளோடு கூடிய சந்திரன் தனது உச்சத்திலோ மூல க்ஷேத்திரத்திலோ ஸ்வக்ஷேத்திரத்திலோ குரு சுக்கிரன் இவர்களுடன் ஒன்றுசேர்ந்து புதனுடைய திருஷ்டியைப் பெற்று ஐந்தாமிடத்தில் இருந்தால் மாதா மிகவும் சுப நலங்களை

அநுபவிப்பள். இவ்விதம் சூரியன் நிற்கின் பிதாவுக்கு மிகுந்த சுகாநுபவம் ஏற்படும். சூரியனும் சந்திரனும் இந்த லட்சணங்களோடு இருந்தால் பிதா மாதாக்கள் இருவருக்கும் சுபமுண்டாகும். சர்வாரிஷ்டங்களும் நீங்கி அரோக திடகாத்திர ஆயுராரோக்கிய சுகாநுபவங்களும் உண்டாகுமென்று வேறு சாஸ்திரங்களும் கூறுகின்றன.

ஒன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

# பத்தாவது அத்தியாயம்.

## பாலாரிஷ்டாதி லட்சணம்.

சு. 1. ஈண்டுப் பாலாரிஷ்ட அத்தியாயத்தைச் சொல்லுகிறார். ஆயுளைப் பற்றிய காலங்களை அறிந்து கொள்ளாமல் சொல்லப் பெறும் பலன்கள் யாவும் நிஷ்பிரயோசனமாம். ஏனென்றால் ஆயுட் பெருக்குடையானொருவனே மற்றபலன்களை யெல்லாம் அநுபவிக்கத்தக்கவனென்க. ஆகவே, ஆயுளுடைமை அறியும்பொருட்டு இந்த அரிஷ்டாத்தியாயத்தைச் சொல்லுகின்றார்.

சு. 2. சுக்கில பக்ஷ பகல் ஓஜராசிகளிலிருக்கின்ற புருஷக் கிரகங்களும், கிருஷ்ணபக்ஷ இரவு யுக்ம ராசிகளிலிருக்கின்ற ஸ்திரீ கிரகங்களும் பலம் அடைந்தவர்களாகின்றார்களென்று ஜோதிஷ வித்வான்கள் கூறுகின்றார்கள்.

சு. 3. சாஸ்திரக்ஞர்கள் அரிஷ்ட யோகங்களை நியதம்-அநியதம்-யோகஜம் என்று மூன்று பிரிவாக நிர்ணயித்திருக்கின்றார்கள். இங்கு முதலில் யோகஜமாகிய ஆயுர்லட்சணத்தை உபதேசிக்கின்றார். நியதமும் அநியதமும் அதற்குப் பிறகு சொல்லப்பெறும்.

சு. 4. இலக்கினத்திற்கு எட்டாமிடம் மேட விருச்சிகங்களாகி அதில் குரு நின்று சூரியன் சந்திரன் செவ்வாய் சனி இவர்களால் பார்க்கப்பட்டுச் சுக்கிரனால் பார்க்கப்படாமலிருந்தால் சிசு மூன்று வருடம் சென்று மரணத்தை யடையும். மேற்சொல்லிய அஷ்டமத்திலியிருக்கின்ற குருவைச் சுக்கிரன் பார்த்தால் மரணமில்லை யென்று சொல்க.

சு. 5. வக்கிர பலத்தோடு செவ்வாயின் வீட்டிலிருக்கின்ற சனி, இலக்கினத்திற்கு அச் சனியிருக்குமிடம் கேந்திரம் ஆறுமிடம் 8-ஆமிடங்களாகி பலமுள்ள செவ்வாயினால் பார்க்கப்பட்டால் சிசு இரண்டு வருஷம் வரையில் தான் உயிருடன் இருக்கும்.

சு. 6. சனி, சூரியனோடும் சந்திரனோடும் சேர்ந்து எந்தப் பாவத்திலிருந்தாலும் அந்தச் சமயம் பிறந்த சிசு ஒன்பது வருடம் சென்று இறந்துபோமென்று பிரம்ம சாண்டில்யர் கூறுகின்றனர்.

சு. 7. செவ்வாயும் சூரியனும் சனியும் சேர்ந்து சுக்கிரனுடைய வீடான இட த்தில் இருந்து அஃது இலக்கினத்திற்கு 8-ஆவது ராசியானால் சமயம் பிறந்தவன் யமதர்மனால் காப்பாற்றப்

பட்டிருந்தாலும் ஒரு மாசத்திற்குள் இறந்து போவானென்க. (இது துலா லக்கினத்திற்கும் மீனலக்கினத்திற்கும் பொருந்தும்.)

சு. 8. சுக்கிரனுடைய வீடு 8-ஆவது ராசியாகி அதில் ஒரு பாபக்கிரகமிருந்து வேறொரு பாபக்கிரகத்தால் பார்க்கப்பட்டால் சாதகன் அமிருதம் உட்கொண்டவனாயிருந்தாலும் ஓராண்டே ஜீவித்திருப்பன்.

சு. 9. சுக்கிரன், கடகத்திலோ சிம்மத்திலோ இருந்து அந்த இடம் இலக்கினத்திற்கு 6, 8, 12 இவைகளி லொன்றாக ஏற்பட்டு எல்லாச் சுபக்கிரகங்களும் அந்தச் சுக்கிரனைப் பார்த்தாலும் ஆறு வருஷத்தில் சிசு இறந்துவிடுமென்று நிச்சயமாய்ச் சொல்க.

சு. 10. கடகத்தில் புதனிருந்து அந்தக் கடகராசியானது இலக்கினத்திற்கு ஆறாமிடமாகவோ எட்டாமிடமாகவோ ஏற்பட்டு அதிலுள்ள புதனைச் சந்திரன் பார்த்தாலும் பிறந்த சிசு நான்கு வருடம் வரையில்தான் ஜீவித்திருக்குமென்க.

சு. 11. யவனர் முதலிய பூர்வாசாரியர்கள் தீவ்ரபலங்களாகிற சில ராஜயோகங்களை சொல்லியுள்ளார்கள். அந்த ராஜயோகங்களில் நீச குலத்தவரும் ஜனனமாவதால் அவ்விதம் ஜனித்தவர்க்கும் அரிஷ்டம் சொல்லப்பட்டிருக்குமாறு காண்க.

சு. 12. எந்த ராசியில் தூமகேது (கேது) இருக்கின்றதோ அந்த விராசியில் ஜனித்த சிசு இரண்டு மாசத்தில் இறந்துபோமென்று கூறுக.

சு. 13. செவ்வாயின் வீட்டிலோ சனியின் வீட்டிலோ சூரியன் இருந்து, அது லக்கினத்திற்குப் பத்தாமிடமாகி சனியாலும் செவ்வாயாலும் பார்க்கப்பட்டால் ஜனித்த சிசு உடனே இறந்துவிடுமென்று சந்தேகமில்லாமல் சொல்லலாம்.

சு. 14. இலக்கினத்தில் உதயமாயிருக்கின்ற திரேக்காணம் * நிகளத்திரேக்காணம் † பட்சித்திரேக்காணம் ‡ சர்ப்பத்திரேக்காணம் § பாசத்திரேக்காணம் இவைகளில் ஒன்றாக வந்து அதில்

---

* மகரத்தின் முதலாவது திரேக்காணம் நிகளத் திரேக்காணம்.

† மிதுனத்தின் 2-ஆவதும், சிம்மத்தின், 1-ஆவதும், துலாத்தின் 2-ஆவதும் கும்பத்தின் 1-ஆவதும் பட்சித்திரேக்காணங்களாம்.

‡ கடகத்தின் 2-ஆவதும், 3-ஆவதும், விருச்சிகத்தின் 1-ஆவதும், 2-ஆவதும், மீனத்தின் 3-ஆவதும் சர்ப்பத்திரேக்காணங்களாம்.

§ கடகத்தின் 2-ஆவதும், 3-ஆவதும் பாசத்திரே[illegible]ம்.

பாபர்கள் இருந்து திரேக்காணுதிபனுடைய பார்வையில்லாமலிருந் தால் ஜனித்த சிசு ஏழு வருஷத்தில் மரணமா மென்று சொல்க.

சு. 15. பாபர்களான செவ்வாய் சனி இவர்களின் திருஷ்டி யோடு கூடின ராகு இலக்கினத்திற்கு 4-ஆமிடத்திலோ 7-ஆமிடத் திலோ 10-ஆமிடத்திலோ இருந்தால் பத்து அல்லது பதினாறு வருஷம் வரையில் ஜனித்த குழந்தை உயிருடனிருக்கும்.

சு. 16. சூரியோதய காலத்தில் ஜனிப்பினும் இலக்கினத்தின் கேந்திர திரிகோணங்களில் எல்லாப் பாபக்கிரகங்களும் 6-8-12-ஆமி டங்களில் எல்லாச் சுபக்கிரகங்களும் இருந்தால் ஜனித்த சிசு அப் போதே இறந்து விடும்.

சு. 17. இலக்கினம்சராசியின் அதிபன் சந்திரராசியின் அதி பன் இலக்கினுதிபன் ஆகிய இம் மூவர்களுக்கும் மௌட்ய முண்டா யிருந்தால் பிறந்த சிசு சில வருஷம் மட்டிலுமே ஜீவித்திருக்கும். (மௌட்யம்=மூடம், அஸ்தமனம்.)

சு. 18. இலக்கினுதிபன் மேற் சொன்னவிதம் அஃதாவது மௌட்ய மடைந்து ஆறும் பாவத்தில் இருந்தால் ஆறும் வருடத்தி லும், திரேக்காணுதிபதி ஆறுமிடத்தில் இருந்தால் ஆறுவது மாதத் திலும், நவாம்சாதிபதி ஆறுமிடத்தில் இருந்தால் ஆறுவது தினத்தி லும் சிசுவுக்கு மரணமுண்டாகு மென்று சொல்க.

சு. 19. சனி, சூரியன் செவ்வாய் இவர்களுடைய திருஷ்டி யோடு இலக்கினத்திலிருந்தால் 16 தினத்திற்குமேல் மரணம் உண் டாகும். சனி, சூரியன் செவ்வாய் இவர்களோடு சேர்ந்து இலக் கினத்திலிருந்தால் ஒரு மாசத்திற்கு மேல் மரணம் உண்டாகும். சனி மட்டிலும் தனித்து இலக்கினத்திலிருந்தால் ஒரு வருடத் திற்குமேல் மரண முண்டாகும்.

சு. 20. கடகம் இடபம் மேடம் இந்த ராசிகளைத் தவிர்த்து வேறு இராசிகளில் க்ஷீணனாகிய சந்திரன் இருந்து அது இலக்கின மாகி பாபக்கிரகத்தால் பார்க்கப்பட்டு மிருந்தால் ஜனித்த குழந்தை ஒரு வருடத்திற்குள் மரணமடையுமென்பர்.

சு. 21-22. சந்திரன் 6-ஆமிடத்திலோ 8-ஆமிடத்திலோ இருந் தால் ஒரு வருடத்திற்குள் மரணமடையும். அந்தச் சந்திரனுக்கு எல்லாப் பாபக்கிரகங்களின் திருஷ்டியு மிருந்தால் உடனே சிசு மரணமடையும். எல்லாச் சுபக்கிரகங்களும் சந்திரனை நோக்கினால் எட்டு வருடங்களிருந்து மரணத்தை யடையும். சுபர்களும் பாபர்

களும் சேர்ந்து சந்திரனை நோக்கினால் நான்கு வருடங்களிருந்து மரணத்தை யடையும். இங்கு சுபர் பாபர்களுடைய திருஷ்டி களுக்குத் கூடுதல் குறைவு உண்டென்பதைத் திரைராசிகப் பிரகாரம் அறிந்து சம்வத்சரத்தை சொல்லுக.

சு. 23. ஆரு மிடத்திலோ எட்டா மிடத்திலோ சுபக்கிரகங் களிருந்து அவர்களை வக்கிரபல முள்ள பாபிகள் பார்த்தால் ஒரு மாசத்தில் மரணமுண்டாகும். ஆறிலோ எட்டிலோ இருக்கின்ற சுபக் கிரகத்தை மற்றொரு சுபக்கிரகம் பார்த்தால் சிசுவுக்கு மரணம் உண்டாகாது.

சு. 24. இலக்கினத்திற்கு 12, 2, 6, 8 இந்த ஸ்தானங்களில் பாபர்களிருந்து சுபக்கிரக யோக திருஷ்டிகளில்லாமலிருந்தால் ஆருவது மாசத்திலாவது எட்டாவது மாசத்திலாவது பிறந்த சிசு மரணத்தை அடையும்.

சு. 25. இலக்கினாதிபன் சந்திரராசியாதிபன் இவர்கள் அஸ்த மனமடைந்தவராக 6-ஆமிடத்திலோ 8-ஆமிடத்திலோ 12-ஆமிடத் திலோ இருந்தால் அவர்கள் இருக்கின்ற ராசிகளின் சங்கியைப்படி வருஷம் சென்ற பிறகு மரணமடையும்.

சு. 26. இலக்கினாதிபதி பாபக்கிரகத்தோடு கூடி யுத்தத்தில் தோல்வியடைந்து ஏழாமிடத்திலிருந்தால் ஒரு மாசத்தில் குழந்தை மரண மடையும். சந்திரராசியாதிபனும் மேற்சொன்ன பிரகாரம் யுத்தத்தில் தோல்வி யடைந்து ஏழாமிடத்திலிருந்து சந்திரனுக்குச் சுபக்கிரகங்களுடைய திருஷ்டி இல்லாமலிருந்தாலும் ஒரு மாசத்தில் குழந்தை மரணமடையும். சந்திரராசியாதிபன் பாபர் யுத்தத்தில் தோல்வி யடைந்து சுபதிருஷ்டியில்லாமல் எட்டாமிடத்திலிருந்தால் ஒரு மாசத்திற்குள் பிறந்த குழந்தைக்கு மரணம் ஏற்படும் எனக் கூறுவாருமுளர்.

சு. 27. சந்திரன், செவ்வாயோடும் சூரியனோடும் சேர்ந்து இரண்டாமிடத்திலோ ஐந்தாமிடத்திலோ இருந்து பலமுள்ள கிர கங்களுடைய திருஷ்டியைப் பெருமலிருந்தால் குழந்தை ஒன்பது வருடமிருந்து இறக்கும். இதற்குச் சந்தேகமேயில்லை.

சு. 28. இலக்கினாதிபன் இலக்கினத்திலிருந்து பலவான்களான எல்லாப் பாபர்களாலும் பார்க்கப்பட்டால், நான்காம் மாசத் தில் பிறந்த சிசுவுக்கு மரணம் உண்டாகிறது என்று ருஷிசிரேஷ்டர் கள் சொல்லுகின்றார்கள்.

சு. 29. சந்திரராசியாதிபன் சூரியன் சனி இவர்கள் ஒன்று சேர்ந்து எட்டா மிடத்திலிருந்து அதற்குச் சுக்கிர திருஷ்டி சம்பவிக்காமலிருந்தால் எட்டு வருடங்களுக்குப்பின் சிசு இறந்துபோம்.

சு. 30. சந்திரன் சுபக்கிரகங்களுடைய திருஷ்டியைப் பெறுமல் 12-ஆமிடத்திலோ 8-ஆமிடத்திலோ 7-ஆமிடத்திலோ இலக்கினத்திலோ பாபக்கிரகங்களோடு சேர்ந்திருந்து கேந்திரங்களில் சுபக்கிரகங்கள் இல்லாமலிருந்தால் பிறந்த குழந்தை இறந்து விடுவது நிச்சயம்.

சு. 31. இலக்கினஸ்புடத்தில் எவ்வளவு பாகை கலைகள் சென்றிருக்கின்றன வென்று அறிந்து அத்தனை பாகை கலைகளை நான்காம் ராசியில் கழித்து அதுமுதல் பத்தாம் ராசியில் இலக்கினத்தில் சென்ற பாகை கலைகள்வரை ஆறு ராசிகள் சக்கரத்தின் அபரமாகின்றன. சேடமுள்ள ஆறு இராசிகள் சக்கரத்தின் பூர்வமாகின்றன. விருச்சிக லக்கினத்தில் ஜெனித்து சக்கர பூர்வ பாகங்களில் எல்லாச் சுபக்கிரகங்களும் அபர பாகங்களில் எல்லாப் பாவக்கிரகங்களும் இருந்தால் பிறந்த குழந்தை உடனே மரணம் அடையும். இந்த யோகத்திற்கு வஜ்ஜிர முஷ்டியோகம் என்று பெயர். கடக லக்கினத்தில் ஜனித்த ஜாதகனுக்குச் * சக்கரபூர்வ பாகங்களில் சுபர்களும் அபர பாகங்களில் பாபர்களுமிருந்தால் மரணம் சம்பவிக்குமென்று பாதராயணர் சொல்லுகின்றார்.

சு. 32. சந்திரன் க்ஷீணனுகி இக்கினத்திலிருந்து கேந்திரங்களிலும் எட்டாமிடத்திலும் பாபக்கிரகங்களிருந்தால் நிச்சயமாக

---

* ஜனனகால இலக்கினஸ்புடத்தில் சென்ற பாகை கலைகளைத் தலைகீழாக நான்காம் ராசி வரையில் நீக்கி அதுமுதல் செல்ல வேண்டிய பாகை கலைகளும் 5, 6, 7, 8, 9 இந்த ராசிகளும் 10-வது ராசியில் இலக்கினத்தில் சென்ற பாகைகலை வரையிலும் கூடியது சக்கர அபரார்த்தம் எனப்படும்.

| | |
|---|---|
| **உதாரணம் : ஜனனகால இலக்கினஸ்புடம்.** | **2. 9. 20** |
| மீனத்தில் 9 பாகை 20 கலை முதல் செல்ல வேண்டிய பாகை கலைகள் | 20. 40 |
| மேடம் 30, இடபம் 30, மிதுனம் 30, கடகம் 30, சிங்கம் 30 | 150. 0 |
| கன்னியில் சென்ற பாகை கலைகள் | 9. 20 |
| ஆ | 180. 0 |

உடனே மரண மடைவானென்று யவனாசாரியர்கள் சொல்லுகின்றார்கள்.

சு. 33. பிராத சந்தியிலோ சாயா சந்தியிலோ ஜனித்து இலக்கினம் சந்திர ஹோரையாகி சூரியனும் செவ்வாயும் சனியும் ராசிகளின் கடைசி நவாம்சத்தில் இருந்தால் அப்போதே மரணமடையும். சந்திரன், சூரியனோடும் செவ்வாயோடும் சனியோடும் சேர்ந்து இலக்கினத்திலோ நான்காமிடத்திலோ ஏழாமிடத்திலோ பத்தாமிடத்திலோ இருந்தாலும் சத்தியோ மரணம் ஏற்படும்.

பிராதஸ் சந்தி: நட்சத்திரத்தின் பிரகாசம் குன்றினது முதல் சூரியன் அர்த்தோதயம் வரையுள்ள காலமாம்.

சாயா சந்தி: பாதி அஸ்தமன முதல் நட்சத்திரங்கள் பிரகாசிக்கின்ற வரையிலுள்ள காலமாம்.

சு. 34. ஏழாமிடத்திலோ எட்டாமிடத்திலோ நான்காமிடத்திலோ சந்திரன் இரண்டு பாபர்களின் மத்தியில் இருந்தால் குழந்தை தேவர்களால் காப்பாற்றப்பட்டிருந்தாலும் நிஜமாக உடனே மரிக்கும்.

சு. 35. சந்திரன், இலக்கினம் ஏழாமிடம் எட்டாமிடம் இவைகளிலொன்றில் இருந்து பாப மத்தியமடைந்து * பலஹீனனான சுபக்கிரகங்களுடைய திருஷ்டியைப் பெற்றிருந்தாலும் நிச்சயமாக மரணம் உண்டாகும்.

சு. 36. ஏழாமிடத்திலும் எட்டாமிடத்திலும் பாப திருஷ்டியோடு பாபக்கிரகங்களிருந்து சுபக்கிரக திருஷ்டியைப் பெற்றிருந்

---

**இப்பாகை கலைவரையில் சக்கர அபரார்த்தமெனப்படும்**
**மற்றபாகங்கள் சக்கர பூர்வார்த்த மெனப்படும்**

உதாரணம்:

| | |
|---|---|
| கன்னியில் 9 பாகை 20 கலை முதல் செல்ல வேண்டிய பாகை கலைகள் | 20. 40 |
| துலாம் 30, விருச்சிகம் 30, தநுசு 30, மகரம், 30, கும்பம் 30 ஆக | 150. 0 |
| மீனத்தில் சென்ற பாகைகலைகள் | 9. 20 |
| ஆக | 180. 0 |

இப்பாகை கலை வரையில் சக்கர பூர்வார்த்த மெனப்படும்.

* பலஹீனமாவது: துர்த்தானம் நீசம் மூடம் இவைகளை யடைதல்.

தாலும் தாயோடு குழந்தையும் மரணமடையும். இங்கு சுபக்கிர கங்களுடைய திருஷ்டி பலமாக இருந்ததேன்றால் மரணம் சம்பவிக் காமல் வியாதிமட்டிலும் சொல்லத் தகுந்ததாமென்று சத்தியாசாரி யார் சொல்லுகிறார்.

சு. 37. கிரகணத்தால் பீடிக்கப்பட்ட சந்திரன் பாபக் கிரகத் தோடு (சனி) கூடி இலக்கினத்திலும் செவ்வாய் அஷ்டமத்திலு மிருந்தால் தாயும் குழந்தையும் மரண மடைவார்கள். இவ்விதமாக ராகுக்கிரஸ்தனான சூரியன் பாபியோடு சேர்ந்து நிற்க இலக்கினத்திலா வது எட்டாமிடத்திலாவது செவ்வாய் இருந்தால் மாதாவுக்கும் குழந்தைக்கும் மரணமானது சஸ்திர ஹேது கரமாக ஏற்படும். (அஃதாவது பிரசவ சமயம் சஸ்திரத்தைக் கொண்டு குழந்தையை எடுப்பதால் பாலனும் தாயும் ஆயுதத்தினால் மரிப்பரென்றும் அறிய வேண்டியது.)

சு. 38. இலக்கினத்தில் க்ஷீண சந்திரனிருந்து பாபர்களெல் லோரும் கேந்திரத்திலும் அஷ்டமத்திலுமிருந்து சந்திரனுக்குச் சுப திருஷ்டி கிடைக்காமலிருந்தால் சத்தியோ மரண மேற்படுமென்று சத்தியாசாரியார் சொல்லுகின்றார்.

சு. 39. ஏழாமிடத்தில் சூரியன் நிற்க இலக்கினத்தில் சனி சந்திரன் செவ்வாய் இவர்கள் ஒன்று சேர்ந்து இருந்தாலும், அல்லது ஏழாமிடத்தில் சனியும் இலக்கினத்தில் சூரியனும் சந்திரனும் செவ் வாயும் சேர்ந்திருந்தாலும், அப்படியில்லாவிடின் இந்த மூன்று பாபக்கிரகங்களில் ஒரு பாபி இலக்கினத்திலும் ஒரு பாபி ஏழாமிடத் திலும் ஒரு பாபி சந்திரனோடு சேர்ந்தும் இருந்தாலும், பலவந்தர்க ளான சுபக்கிரகங்களுடைய பார்வை இம்மூன்று யோகங்களிலு மில்லாமலிருந்தால் உடனே குழந்தைக்கு மரணம் ஏற்படும் என்று சொல்லவேண்டும்.

சு. 40. இலக்கினத்திலும் எட்டாமிடத்திலும் ஏழாமிடத்திலும் பாபக்கிரகங்களும் க்ஷீண சந்திரன் பன்னிரண்டா மிடத்திலுமிருக் கும்போது கேந்திரங்களில் பலவான்களான சுபக்கிரகங்களில்லை எனில் சத்தியோ (திடும் பிரவேச) மரணம் உண்டாகுமென்று சொல்லுக.

சு. 41. இலக்கினத்தில் சந்திரனும் 12-ஆமிடத்தில் சனியும் 9 ஆமிடத்தில் சூரியனும் 8-ஆமிடத்தில் செவ்வாயும் இருந்து இந்த ஸ்தானங்களுக்குக் குரு திருஷ்டி ஒரு விதத்திலு மில்லாவிட்டால் உடனே மரணம் சம்பவிக்கும்.

இவ்வித யோகத்தில் ஐந்தாமிடத்தில் பலவானுயிருக்கின்று குருவிற்கு ஒன்பதாமிடத்திலும் இலக்கினத்திலும் திரிகோண திருஷ்டியும் பன்னிரண்டாமிடத்திலும் எட்டாமிடத்திலும் சதுரஸ்ர திருஷ்டியும் ஏற்படுதலால் மரணம் ஏற்படுகின்றதில்லையென்று தெரிந்து கொள்க. வேறு ஸ்தானங்களில் குரு இருந்தால் எல்லாவிடத்திலும் திருஷ்டி உண்டாகிறதில்லை. குரு சிலரைப் பார்த்தும் சிலரைப் பாராமலு மிருந்தால் மரணம் ஏற்படுகிறது. ஆனல் கொஞ்சநாள் தாமதித்து மரணமடையுமென்று சொல்க.

சு. 42. இலக்கினத்தில் சந்திரனுவது சூரியனுவது இருந்து ஐந்தாமிடத்திலும் எட்டாமிடத்திலும் ஒன்பதாமிடத்திலுமாக எல்லாப் பாபர்களு மிருந்து அந்தஸ்தானங்களுக்குச் சுபக்கிரகங்களுடைய திருஷ்டியோ சேர்க்கையோ இல்லாமலிருக்குமேயானல் சத்தியோ மரணம் ஏற்படுமென்று யவனுச்சாரியார் தெரிவித்திருக்கின்றார்.

சு. 43. சுக்கிரன் எந்த ராசியிலாவது சூரியனேடும் சனியோடும் சேர்ந்திருந்து குருவினுடைய திருஷ்டி ஒரு விதத்திலுமில்லையென்றால் ஒன்பது வருடத்தில் மரணம் சந்தேகமில்லாது ஏற்படுமென்று சொல்லுக.

சு. 44 பகலில் ஜனனமான ஜாதகனுக்குச் சூரியன், செவ்வாயோடும் சனியோடும் சேர்ந்திருந்தும் அல்லது அந்தப் பாபர்களுடைய திருஷ்டியடைந்து மிருந்தால் பிதாவிற்கு மரணம் சந்தேகமில்லாது சம்பவிக்குமென்க.

சு. 45. எந்த ராசியிலாவது சந்திரனிருந்து அந்தச் சந்திரனைச் செவ்வாயும் சூரியனும் சனியும் பார்த்தோ அல்லது சந்திரன் அவர்களோடு கூடியோ இருந்தால் உடனே தாய் மரணமடைவள். சந்திரனுக்குச் சுபதிருஷ்டியுண்டென்றால் அதனுடைய பலா பலத்திற்குத் தக்க வண்ணம் சுவல்பகாலம் சென்ற பிறகு மரணமடைவளென்று சொல்லுக.

சு. 46. சூரியன் சுபக்கிரகங்களோடு சேராமலும் பார்க்கப் படாமலும் சனியோடும் செவ்வாயோடும் சேர்ந்து அல்லது பார்க்கப்பட்டு பலங்குன்றி யிருந்தால் தகப்பனும் பாட்டனும் (பிதாவின் தகப்பன்) குழந்தை பிறப்பதற்கு முன்பாகவே இறந்திருக்க வேண்டுமென்று சொல்லவேண்டும்.

சு. 47. பகலில் ஜனனம் ஏற்பட்டு சூரியன், செவ்வாய் சனி இவர்களின் மத்தியிலிருந்தாலும் அல்லது அந்தப் பாபர்களோடு சேர்ந்திருந்தாலும் நிச்சயமாகப் பிதா மரணமடைவன்.

சு. 48. சூரியனுக்கு எட்டாமிடத்தில் செவ்வாயும் சனியும் சேர்ந்து சுபக்கிரகங்களினால் பார்க்கப்படாமலிருந்தால் அப்பொழுதே பிதா மரணமடைவான். சுப திருஷ்டியின் பலாபலத்தை யநுசரித்து மரணம் தூரத்தில் அல்லது சமீபத்தில் ஏற்பட்டிருக்குமென்ற பேதத்தை விசாரித்துச் சொல்க. (சூரியனுக்கு ஏழாமிடத்தில் என்ற பாட பேதத்தையும் கிரகித்துக் கொள்க.)

சு. 49. சூரியன் எல்லாப் பாபக் கிரகங்களோடும் சேர்ந்து சரராசியிலிருந்தால், பிதா அற்பாயுளுள்ளவனாய் இருப்பான் என்றும், விஷம் ஆயுதம் ஜலம் இவைகளி லெவற்றாலாவது ஒரு காரணம்பற்றி மரணமடைவானென்றும் சோதிட வித்வான்கள் சொல்லுகின்றார்கள்.

சு. 50. சூரியன் செவ்வாய் சனி இந்தப் பாபக் கிரகங்கள் சந்திரனோடு சேர்ந்திருந்தாலும், அல்லது சந்திரனுக்கு எட்டாமிடத்திலோ ஒன்பதாமிடத்திலோ ஏழாமிடத்திலோ சேர்ந்திருந்தாலும் அல்லது தனியாக இருந்தாலும் தாயாருடன் குழந்தையும் மரணமடையும்.

சு. 51. பகலில் ஜனனமாகி சூரியன், செவ்வாய் திருஷ்டியோடு சரராசியில் இருந்தால் குழந்தையினுடைய பிதா அந்நிய தேசத்திற்குப் போயிருப்பதாகச் சொல்லவேண்டும். (பிரசவ சமயத்தில் இல்லை யென்பதாம்.)

சு. 52. இராத்திரியில் ஜனனமாகி சனி, சூரியனுடைய திருஷ்டியோடு சரராசியில் இருந்தால் அப்போது தகப்பன் வேறு தேசத்தில் இருக்கின்ற சமயம் குழந்தை பிறந்ததென்று சொல்ல வேண்டும்.

சு. 53. இராத்திரி ஜனனத்திற்குச் சனி, செவ்வாயோடு சேர்ந்து சரராசியிலிருப்பின் பிதா வேறு தேசத்திற்குப் போயிருக்கின்றான் என்றும் அவ்விடத்திலேயே மரணம் அடைந்து விட்டானென்றும் சந்தேகமில்லாது சொல்லி விடுக.

சு. 54. சுபதிருஷ்டி யில்லாமல் சூரியன், சனியோடும் செவ்வாயோடும் சேர்ந்து எந்த ராசியிலிருந்தாலும் குழந்தை பிறக்குமுன்னமே பிதா இறந்து போயிருப்பான் என்று அறிந்த சொல்லுக.

சு. 55. சந்திரராசியிலும் எட்டாமிடத்திலும் ஏழாமிடத்திலும் ஆறாமிடத்திலும் பன்னிரண்டாமிடத்திலுமாக எல்லாப் பாபிகளு

மிருந்தால் தாயாரும் குழந்தையும் சேர்ந்து மரணமடைவார்களென் பதில் சந்தேகமில்லை.

சு. 56. மேற்சொன்னதை மறுபடியும் வியக்தமாக ஒரு முறை சொல்லுகின்றார். ஆறாமிடத்திலும் பன்னிரண்டாமிடத்திலும் பாபர்களிருந்தால் பிறந்த குழந்தை இறப்பான். தாய் ஜீவித்திருப்பாள். இலக்கினத்திலும் எட்டாமிடத்திலும் ஏழாமிடத்திலும் பாபிகளிருந்தால் பிறந்த குழந்தை ஜீவித்திருக்கும். தாய் இறந்து போவாள்.

சு. 57. செவ்வாயாவது சனியாவது பன்னிரண்டாமிடத்திலிருந்தால் கண்ணில் கெடுதலுள்ளவனாயிருப்பான். சனியிருப்பின் வலது கண்ணிற்கும், செவ்வாயிருப்பின் இடது கண்ணிற்கும் ஹானிவரும். அல்லது இரண்டு பேரும் சேர்ந்து பன்னிரண்டாமிடத்திலிருந்தால் இரண்டு கண்ணிற்கும் கெடுதல் சம்பவிக்கும் என்று கண்டு கொள்க.

சு. 58. சூரியனும் சந்திரனும் சேர்ந்து பன்னிரண்டில் இருந்தால் கண்ணில்லாதவனாவான். ஆறாமிடத்திலும் எட்டாமிடத்திலும் பாபிகள் இருந்தாலும் கண்ணில்லாதவனாகவே இருப்பான்.

சு. 59. சூரிய சந்திரர்களில் ஒருவர் மட்டிலும் பன்னிரண்டிலிருந்தாலும் கண்ணிற்குக் கெடுதலைச் சொல்ல வேண்டும். அதில் சூரியன் வலது கண்ணிற்கும், சந்திரன் இடது கண்ணிற்கும் ஹானியைச் செய்வார்கள் என்றும் கண்டு கொள்க.

சு. 60. இலக்கினத்தில் இராகுவும் ஏழாமிடத்தில் சூரியனுமிருந்தால் அப்போது ஜனித்தவன் நிச்சயமாகக் குருடனாகவே இருப்பான்.

சு. 61. இரண்டாமிடத்தில் சந்திரனும் பன்னிரண்டா மிடத்தில் சூரியனும் ஆறாமிடத்திலும் எட்டாமிடத்திலும் பாபிகளுமிருந்தால் குருடனாவன்.

சு. 62. ஆறாமிடத்தில் சந்திரனும் எட்டாமிடத்தில் சூரியனும் ஒன்பதாமிடத்தில் சனியும் இரண்டாமிடத்தில் செவ்வாயும் இருக்கும்போது பிறந்தவன் குருடனாவன்.

சு. 63-64. சந்திரன், செவ்வாயோடும் சனியோடும் சேர்ந்து எட்டாமிடத்திலாவது ஆறாமிடத்திலாவது இருந்தால் பித்த கபங்களின் கோப மூலமாக கண்களுக்குக் கெடுதல் வரும். இங்கு எட்டாமிடத்திலிருக்கும் சந்திரன் வலது கண்ணுக்கும், ஆறாமிடத்தி

லிருக்கும் சந்திரன் இடது கண்ணுக்கும் நாசம் செய்வார்கள். சந்திரனுக்குப் பலவானுயுள்ள சுபக்கிரகங்களின் திருஷ்டி யுண்டானுல் உடனே கண்ணிற்குக் கெடுதலேற்படுகிறதில்லை. பலாபல ஸ்திதிக்குத் தக்கவாறு பின்னுல் ஹானியோ நிந்தையோ அல்லது கேடின்மையோ ஏற்படுமென்று சொல்லுக.

சு. 65-66. சந்திரன், சனியோடு சேர்ந்து இதர பாபக்கிரகங்களின் பார்வை யடைந்து ஆறுமிடத்திலோ எட்டாமிடத்திலோ இருந்தால் வாத கபங்களின் சேஷ்டையால் கண்ணுக்குக் கெடுதல் உண்டாகும். இங்கு அஷ்டம சந்திரனுல் வலது கண்ணுக்கும் சஷ்டம சந்திரனுல் இடது கண்ணுக்கும் கெடுதலுண்டாகும் என்பர். இந்தச் சந்திரனுக்குச் சுபக்கிரகத்தின் பார்வை யிருப்பின் உடனே கண்ணுக்கு ஹானிவராதென்றும், ஒருவாறு பின்னுல் கெடுதல் ஏற்படுமென்றும், சுபதிருஷ்டிக்குப் பல மிருப்பின் கெடுதலே உண்டாகாதென்றும் சொல்லுக.

சு. 67. மேற்சொல்லப்பட்ட விதியை யநுசரித்துச் சனி செவ்வாய் சூரியன் என்ற இந்தப் பாபிகளில் ஒரு பாபனேடு சேர்ந்தும் மற்றொரு பாபியின் திருஷ்டியோடு கூடியும் ஆறுமிடத்திலோ எட்டாமிடத்திலோ சந்திரனிருந்தால், அந்தப் பாபக்கிரகங்களுக்குச் சொல்லப்பட்டிருக்கின்ற தோஷ கோபத்தினுல் நிச்சயமாகக் கண்ணுக்கு ஹானி ஏற்படுமென்பதைச் சிந்தித்துச் சொல்லுக. இனிகாதின் விகல்பத்தைச் சொல்லுகின்றார்.

சு. 68. சந்திரன் பாபர்களுடைய சேர்க்கை பெற்று பதினேராமிடத்திலோ மூன்றுமிடத்திலோ இலக்கினத்திலோ இருந்தால் காதுக்கு ஹானி ஏற்படும். அந்த ஸ்தானத்திற்குப் பாபக்கிரகங்களின் திருஷ்டியுண்டானுல் உடனே சம்பவிக்குமென்று சொல்லுக.

சு. 69. ஒன்பதா மிடத்திலும் ஐந்தாமிடத்திலும் கிரகங்களிருந்து பலவந்தர்களான பாபக்கிரகங்களினுல் பார்க்கப்பட்டிருந்தால் பிறக்கும் பொழுதே இரண்டு செவிக்கும் ஹானி ஏற்பட்டிருக்கும் என்று சொல்லுக.

சு. 70. ஒன்பதாமிடத்திலிருக்கின்ற கிரகம் வலது காதிற்கும், ஐந்தாமிடத்திலிருக்கின்ற கிரகம் இடது காதிற்கும், கெடுதலை செய்யும். அதோடு பாபக் கிரகத்தின் பார்வையும் உண்டாயிருக்க வேண்டும். ஐந்தாம் ஒன்பதாம் பாவங்கள் சுபக்கிரகங்களின் இராசியா

யிருந்து சுபக்கிரகங்களால் பார்க்கப்பட்டுமிருந்தால் காதுக்குத் தோஷம் ஏற்படாது. சுபமாகவிருக்குமென்று சொல்ல வேண்டும்.

சு. 71. பிரசவ காலத்தில் மேடாதி இராசிகளில் எந்த ராசி இலக்கினமாக ஏற்படுமோ அந்த ராசியில் இருக்கின்ற கிரகத்தைக் கொண்டு வியாதியை அறிய வேண்டும் அதுபோலவே சந்திரனிருக்கின்ற ராசியும் இலக்கின ராசியும் பிரதானமாக நிரூபிக்கத் தகுந்தவைகளாகின்றன.

சு. 72. இலக்கினத்தைச் சரீரமாகவும், ஏழாமிடத்தைச் சரீரார்த்தமாகிய களத்திரமாகவும் விழங்கி வருப. பாக்கியுள்ள பாவங்களெல்லாம் அங்கங்களாகின்றன. இரண்டாமிடம் வலது கண். பன்னிரண்டாமிடம் இடது கண். மூன்றுமிடம் வலது காது. பதினொருமிடம் இடது காது. இவ்விதமாக வலது பக்கத்திலும் இடது பக்கத்திலுமுள்ள சரீர அவயவங்களை எங்கும் தெரிந்துகொள்ள வேண்டும். இவ்விதம் இலக்கினம் முதலிய பாவங்களான சவ்ய அபசவ்யாதி ஸ்தானங்களில் இருக்கின்ற கிரகங்களைக்கொண்டு சரீர அவயவங்களுடைய வாம தட்சிண பாகங்களில் அடையாளத்தைச் சொல்ல வேண்டும். பாப திருஷ்டியோடு சேர்ந்திருக்கும் சுபக்கிரகம் அங்க விகல்பத்தையும் பயத்தையும் செய்கின்றது.

சு. 73. இவ்விதமாக லக்கினத்தையும் சந்திர ராசியையும் சவ்ய அபசவ்ய அங்க விபாகத்தையும் சாமான்யமாகவும் விசேடமாகவும் அறிந்து அந்தந்த ஸ்தானங்களிலிருக்கின்ற கிரகங்களைக்கொண்டு சுபா சுப பலன்களை யறிந்துகொள்ள வேண்டும்.

சு. 74-75-76-77. இலக்கினம் மீனமாகி சூரிய சந்திரர்கள் மூன்றுமிடத்திலிருந்தால் வியாதியும் உடனே மரணமும் உண்டாகும். அவ்விடத்திலேயே மூன்றும் நட்சத்திரத்தில் சூரியனிருந்து சந்திரனும் பத்தாமிடத்திலிருந்தால் ஒரு தினம்கூட ஜீவித்திருக்கிறதில்லை. சந்திரனுக்கு ஏழாமிடத்தில் சூரியனும் செவ்வாயும் சேர்ந்திருந்தால் ஏழு தினத்திற்குள் மரணமடையும் பாபக்கிரகங்கள் நான்காமிடத்திலும் அஷ்டமத்திலுமிருந்தால் வியாதியும் பத்து தினத்திற்குள் மரணமும் ஏற்படும்.

சு. 78. திரிகோண ராசியிலிருந்து சூரியன் ஐந்தாமிடத்திலும் சந்திரன் ஒன்பதாமிடத்திலும் இருந்தால் ரோகமும் பன்னிரண்டு தினம் சென்று மரணமும் ஏற்படும்.

சு. 79. ஐந்தாமிடத்திலாவது ஒன்பதாமிடத்திலாவது சந்திரனும் நான்காமிடத்திலாவது எட்டாமிடத்திலாவது சூரியனுமிருந்

தால் அப்போது ஜனித்த சிசு கடினமான வியாதியினால் மூன்று தினத்திற்குள் உயிரிழக்கும்.

சு. 80. இலக்கினத்திலாவது நான்காமிடத்திலாவது சந்திரனும் ஆறாமிடத்தில் சூரியனுமிருந்தால் வியாதியுடையவனாகி பதினெட்டு தினம் வரையில் உயிரோடிருப்பன்.

சு. 81. சந்தர ராசிக்கு ஐந்தாமிடத்திலாவது ஒன்பதாமிடத்திலாவது சூரியனிருந்தால் பயம் வியாதி இவற்றால் பீடிக்கப்பட்டவனாகி இருபது தினத்தில் மரணமடைவான்.

சு. 82. செவ்வாய் சனி இவர்களின் திருஷ்டியோடு சூரியன் லக்கினத்திலோ எட்டாமிடத்திலோ இருந்தால் வியாதிகளினால் பீடையும் அவற்றால் ஜீவ ஹானியும் ஏற்படும்.

சு. 83. இலக்கினம் ஏதாவதொரு ஹோரையிலேற்பட்டு அந்த ஹோரையிலேயே செவ்வாய் கேந்திரஸ்தானங்களில் எவ்விடத்திலிருந்தாலும் குருகேந்திரங்களில் இல்லாமலிருப்பரேல் குழந்தையானது உயிரில்லாமலே பிறக்கும் என்று சொல்க.

சு. 84. இலக்கின கேந்திரத்தில் சூரியனும் அஷ்டமத்தில் ஒரு கிரகமுமிருந்து குரு கேந்திரத்திலில்லாமலிருந்தால் ஜனிக்கும் போதே சிசு மரண மடையும்.

சு. 85. இலக்கின கேந்திரத்தில் சந்திரனும் எட்டாமிடத்தில் ஒரு கிரகமுமிருந்து குரு கேந்திரம் தவிர்த்து மற்ற ஸ்தானங்களில் இருந்தால் பிறந்த சிசு உடனே மரண மடையும்.

சு. 86. எந்தத் திரேக்காணத்தில் லக்கினம் உதயமாகின்றதென்றறிந்து அந்தத் திரேக்காணத்தில் பாபக்கிரகம் நிற்கச் சந்திரன் லக்கின ஹோரையிலிருந்தாலும் உடனே சிசுவுக்கு மரண முண்டாகும்.

சு. 87. இலக்கினத்திற்கு எட்டாமிடத்தில் மூன்றுக்கு மேல் அதிகமான கிரகங்களிருந்தால் ஏழுதினமோ ஒரு மாசமோ ஆயுள் என்றறிக. இங்கு ஏழுதினமென்றும் ஒருமாச மென்றும் சொல்லப்பட்டிருக்கின்ற பேதத்தை எட்டாமிடத்திலிருக்கின்ற கிரகங்களுடைய ஆதிக்கியத்திற்குத் தக்கவாறு யோசித்து ஒருவாறு காலத்தைத் தீர்மானம் செய்யவேண்டும்.

சு. 88. இலக்கினத்தில் சனியும் எட்டாமிடத்தில் செவ்வாயுமிருந்து குரு கேந்திரங்களிலில்லாம லிருந்தால் கெர்ப்பத்திலேயே மரணமாகிப் பிறக்கும்.

சு. 89-90. இலக்கினத்தில் திரேக்காணம் எது வருகின்றதோ அந்தத் திரேக்காணத்தில் ஒரு கிரக மிருந்து ஐந்தாமிடத்திலும் ஒன்பதாமிடத்திலும் ஒரு பாபியுமிருந்தால் லக்கின திரேக் காணத்திலிருக்கின்ற கிரகம் தனக்குச் சமத்துவமான பலத்தைக் கொடுக்கும். அந்தக் கிரகம் சனியானால் வியாதியுண்டாகும். செவ்வா யானால் மரணம் உண்டாகும். சூரியனாயின் வியாதியினால் விகல்பமோ அல்லது மரணமோ உண்டாகும். இதற்குச் சந்தேகமில்லை.

சு. 91. இலக்கினத்தில் செவ்வாயும் கேந்திரங்களில் சுக்கிரனும் இருக்கும்போது பிறந்தவன், அந்தச் செவ்வாய் பரிவர்த்தனப்படி மீண்டும் (பன்னிரண்டு ராசிகளின் சஞ்சாரம்) இலக்கினத்தில் வரு கின்ற காலத்தில் ஜாதகன் மரணமடைவான்.

சு. 92. ஐந்தாமிடத்திலாவது ஒன்பதா மிடத்திலாவது குரு இருந்து இலக்கினத்தில் இலக்கினாதிபன் இருக்க அவனுக்குக் கேந்தி ரத்தில் செவ்வாய் இருந்தால் உடனே உயிருக்கு விபத்து உண்டா கும்.

சு. 93. எட்டாமிடத்தில் சுபனோ பாபனோ ஒரு கிரகமிருந்து இலக்கினத்தில் பாபக்கிரக மில்லாமல் குரு கேந்திரங்களு ளொன்றில் இருந்தால் ஜாதகன் நூற்றெட்டு வருஷம் வரையில் ஜீவித்திருப் பான்.

சு. 94. இலக்கினம் நான்காமிடம் ஐந்தாமிடம் ஏழாமிடம் எட் டாமிடம் ஒன்பதாமிடம் பத்தாமிடம் இவ்வேழு ஸ்தானங்களிலும் ஒரு பாபிகளுமில்லாமல் கேந்திரங்களி லொன்றில் குருவும் சுக்கிர னும் இருந்தால் ஜாதகன் நூற்றெட்டு வருடத்திற்கு மேற்பட்ட காலம் ஜீவித்திருப்பான்.

சு. 95. இலக்கினத்தில் சுக்கிரனும் கேந்திரங்களி லொன்றில் குருவுமிருந்து எட்டில் பாபக்கிரகங்கள் இல்லாமலிருந்தால் ஜாதகன் நூற்றிருபது வயதுவரை ஜீவித்திருப்பான் என்க.

சு. 96-97 எட்டாமிடத்தில் ஒரு கிரகங்களுமில்லாமலும் கேந்திரம் திரிகோணம் இவைகளில் ஒரு பாபியுமில்லாமலுமிருக்க கடக ராசி லக்கினமாகி அதில் குருவும் சுக்கிரனுமிருந்தாலும், அல் லது சந்திரனும் குருவுமிருந்தாலும் ஜாதகனுக்குத் தேவர்களுக்குச் சமத்துவமான ஆயுசு உண்டென்று நிச்சயமாகச் சொல்லுவர் பெரி யோர். மனுஷ்யன் ஆயுள் 120 என்றாலும் வேதாந்தமாக ஆயுள் 100 வருடமாகின்றது. தேவர்களுக்கு மரணமில்லை. ஆனதுபற்றி

120 வருடத்திற்கு மேல் ஜாதகன் ஜீவித்திருப்பான் என்பது தாத்பரியம்.

சு. 98. க்ஷீண சந்திரன் பலவந்தர்களான பாபக் கிரகங்களோடு சேர்ந்து எட்டாமிடத்திலோ ஏழாமிடத்திலோ பன்னிரண்டாமிடத்திலோ இலக்கினத்திலோ திரிகோணத்திலோ இருந்தால் பால்யத்திலேயே மரணம் ஏற்படும். இந்தச் சந்திரனுக்குப் பலமுள்ள சுபக்கிரகங்களின் திருஷ்டி உண்டானால் மரணம் ஏற்படுகின்றதில்லை.

சு. 99. இவ்விதமாக மேற்சொன்ன பால மரண யோகங்களில் இன்ன சமயம் மரணம் ஏற்படுமென்று காலத்தை விவரிக்காது சொல்லுகிறவிடத்தில் ஒரு வருடத்திற்குள் வருகிற மரணத்தைக் கீழ்ச் சொல்வதினால் தீர்மானித்துக் கொள்ளவேண்டியது.

சத்தியோ மரண யோகத்தைக் கொடுப்பவர்களாகிய கிரகங்களில் அதிகம் பலம் பெற்ற கிரகமிருந்த ராசியில் சந்திரன் சார மூலமாக செல்கின்ற காலமும்,

ஜனன காலத்தில் சந்திரனிருக்கிற ராசியில் பின்னே சார மூலமாக சந்திரன் வருகின்ற காலமும்,

ஜன்ம லக்கின ராசியில் சந்திரன் சாரவசப்படி செல்கின்ற காலமும் மரணம் சம்பவிக்கும்.

இவ்விதம் இந்த ஸ்தானங்களில் செல்கின்ற சந்திரனுக்குப் பலமும் பலமுள்ள பாபக்கிரகங்களுடைய திருஷ்டியும் சுபக்கிரகத்தினுடைய திருஷ்டியேற்படாமலு மிருக்கும்போது அந்த அந்த மரணத்தைச் சொல்க.

சு. 100. சூரியன் சந்திரன் செவ்வாய் குரு இவர்கள் ஒன்று சேர்ந்தும், செவ்வாய் குரு சனி சந்திரன் இவர்கள் ஒன்று சேர்ந்தும், சூரியன் சனி செவ்வாய் சந்திரன் இவர்கள் ஒன்று சேர்ந்தும் எந்த விராசியிலிருந்தாலும் அப்போது ஜனித்தவன் ஐந்து வருடம் வரையில் ஜீவித்துப் பிறகு மரணமடைவான்.

சு. 101. புதன் சூரியனோடு சேர்ந்திருந்து சுபக்கிரகங்களினால் பார்க்கப்பட்டாலும் அந்தச் சமயம் ஜனனமான குழந்தையைத் தேவர்கள் மடியில் வைத்துக் காப்பாற்றினாலும், நிச்சயமாக பதினொரு வருடமிருந்து மரணமடைவன்.

சு. 102. இலக்கினமோ சப்தமகேந்திரமோ சுக்கிர க்ஷேத்திரமாகி அதில் க்ஷீண சந்திரன் செவ்வாயோடும் சனியோடும் சூரிய

னோடும் சேர்ந்திருந்து குரு திருஷ்டியில்லாமலிருப்பின் ஜாதகன் ஏழு வருஷத்தில் இறந்துவிடுவான் என்பது நிச்சயம்.

சு. 103. செவ்வாய் அஸ்தமனமடைந்தவனாகிச் சனியுடன் சேர்ந்தோ அல்லது சனியினால் பார்க்கப்பட்டோ கேந்திரங்களி லொன்றில் இருந்தால் சந்தேகமில்லாது நான்கு வருடங்கள் சென்ற பின் ஜாதகன் இறந்து போய்விடுவான்.

சு. 104. இலக்கினாதிபனிருக்கின்ற ராசிக்கு எட்டாமிராசியில் க்ஷீண சந்திரன், இருந்து எல்லாப் பாபக்கிரகங்களினாலும் பார்க்கப் பட்டுச் சுபக்கிரகத்தின் வீக்ஷண்யமில்லாது இருந்தால் ஜாதகன் மூன்று வருடங்கள் சென்று இறப்பான்.

சு. 105. இலக்கினாதிபன் பாபக்கிரகமாகிச் சந்திரனிருக்கின்ற இராசிக்குப் பன்னிரண்டாமிடத்திலோ சந்திராம்சகத்திலோ பாபக் கிரகங்களின் பார்வையோடு கூடியிருந்தால் பாலன் ஒன்பது வரு டமே ஜீவித்திருப்பான்.

சு. 106. அதிரிசி யார்த்த சக்கரத்தில் எல்லாச் சுபக்கிரகங்க ளும் திரிசியார்த்த சக்கிரத்தில் எல்லாப் பாபக் கிரகங்களும் இலக் கினத்தில் இராகுவுமிருந்தால் ஐந்து வருஷங்கள் வரையில் ஜாதகன் ஜிவித்திருப்பான்.

சு. 107. ஏழாமிடத்தில் இராகு இருந்து அந்த ராகுவைச் சூரியனும் சந்திரனும் பார்த்து மற்றச் சுபகிரகங்களுக்குப் பார்வை யில்லாமலிருந்தால் குழந்தை பன்னிரண்டு வருடம் வரையில்தான் உயிரோடிருக்கும்.

சு. 108. இலக்கினம் கும்பமாகவோ சிம்மமாகவோ விருச்சிக மாகவோ இருந்து அந்த லக்கினத்தில் இருக்கின்ற இராகுவைப் பாபக்கிரகங்கள் பார்த்தால் ஏழு வருடம் சென்று மரணம் ஏற்படும். (இராகுவுக்கு ஏழாமிடத்தில் கேது யதார்த்தமாகவே இருப்பவராகை யால் பாபதிருஷ்டிக்குத் தோஷ மில்லையென்று தெரிந்துகொள்க.)

சு. 109. ஜனனம் ஏற்படுகிறதற்கு முன்பாகவே கேது (தூம கேது) உதயமாய் இருந்து அதற்குப் பிறகு கொள்ளிமீன் வீழ்ச்சி கொடுங்காற்றுண்டாதல் இடி முழங்குதல் பூகம்பமுண்டாதல் முத லிய துன்னிமித்தங்கள் சம்பவித்து * ரௌத்திரமாகிய முகூர்த்தத் தில் ஜாதகன் ஜனித்துள்ளானாயின் உடனே உயிரிழந்து விடுவான்.

* சூரிய உதயத்திற்குப் பிறகும், சூரியன் அஸ்தமனத்திற்குப் பிறகும் இரண்டு நாழிகை வரையில் ரௌத்திர முகூர்த்தகாலமென்றறிக.

சு. 110. எந்த ராசியிலாவது பாபக்கிரகங்களோடு கூடியிருக்கின்ற க்ஷீண சந்திரனை ராகு பார்த்தால் கொஞ்ச தினம் சென்று குழந்தை மரணத்தை யடைகின்றது.

சு. 111-112-113. சந்திரனுக்கு மிருத்தியு பாகைகளான கும்பத்தில் 21-ஆவது பாகையிலும், சிம்மத்தில் 25-ஆவது பாகையிலும், இடபத்தில் 9-ஆவது பாகையிலும், விருச்சிகத்தில் 23-ஆவது பாகையிலும், மேடத்தில் 8-ஆவது பாகையிலும், கடகத்தில் 22-ஆவது பாகையிலும், துலாத்தில் 4-ஆவது பாகையிலும், மகரத்தில் 20-ஆவது பாகையிலும், கன்னியில் 1-ஆவது பாகையிலும், தநுசில் 18-ஆவது பாகையிலும், மீனத்தில் 10-ஆவது பாகையிலும் மிதுனத்தில் 22-ஆவது பாகையிலும் பாபக்கிரகங்களிருந்தால் மரணம் உடனே சம்பவிக்கும்.

இவ்வி ராசிகளிலே இந்தப் பாகைகளை மிருத்தியு பாகங்களென்று கூறுகின்றனர். இந்தப் பாகைகளைக் கணக்கிடுவது தற்கால சந்திரஸ்புடத்தைக் கணித்துக் கணக்கிட்டு அறிந்துகொள்ள வேண்டும். வேறு சில கிரந்தங்களில் இந்த மிருத்தியு பாகங்களை இலக்கினஸ்புடத்தினுடைய மிருத்தியு பாகங்களெனவும், சந்திரனுக்கு வேறே மிருத்தியு பாகங்கள் உண்டெனவும் கூறப்பட்டிருக்கின்றன. அவை பின் வருமாறு சொல்லப்படுகின்றன.

மேடம் முதலிய பன்னிரண்டு ராசிகளுக்கும் முறையே 26-12-13-25-28-11-26-14-13-25-5-12. இந்தப் பாகைகள் மிருத்தியு பாகங்களெனவும் கண்டுகொள்க. ஹோரைகளில் சூரியாதி நவக்கோள்களுக்கும் இலக்கினத்திற்கும் அசுவினி முதலிய நட்சத்திரங்களுக்கும் மிருத்தியு பாகங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. விரிவஞ்சி சுருக்கப்பட்டது.

சு. 114. ஒருவருடத்திற்குள் சம்பவிக்கின்ற மரணத்தினுடைய காலம் முன்பு 99-ஆம் சுலோகத்தில் விவரிக்கப்பட்டது. வேறு சில மரண யோகமும் இந்த அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. இவை இரண்டினுள் அடங்காத மரணயோகத்தை இந்தச் சுலோகத்தில் தெரிவிக்கின்றார்.

ஜனன சமயம் சந்திரனுக்கு அந்த ராசியில் எத்தனை நவாம்சங்கள் சென்றிருக்கின்றனவென்றறிந்து அத்தனை வருடங்கள் செல்லும்போது குழந்தை யமனால் ரக்ஷிக்கப்படுகின்றவனாய் மரணத்தை அடைவானென்று சொல்லுக.

சு. 115-116. இங்கு பிரதானமானதும் ஜன்மகாலத்தில் அவசியம் அறியவேண்டியவைகளும் ஆன பல ஆயுர் யோகங்களும் சொல்லப்பட்டன. இவ்விதம் பிறந்த ஜாதகனுடைய இலக்கின ஸ்தானமும் கேந்திரங்களும் கிரமம் போலவே அறிய வேண்டியவைகளாகின்றன. எல்லாருக்கும் ஜீவகர்த்தா குரு பகவானுகையால் குருவினுடைய ஸ்திதியினாலும் வயது அறியத்தக்கதானதால் இனி அதனுடைய இலட்சணத்தைச் சொல்லுகின்றார்.

சு. 117-118. குரு பகவான் முறையாக 3-4-5-7-9-10-11 இந்த ராசிகளில் இருந்தால் 15-46-21-100-40-60-50-ஆக இந்த வருடங்கள் ஆயுஷ்காலமாக ஏற்படத்தக்கன.

பத்தாவது அத்தியாயம் முற்றிற்று.

## பதினோராவது அத்தியாயம்.

## சந்திராரிஷ்ட பங்க லட்சணம்.

சு. 1. அரிஷ்டாத்தியாயத்தில் சொல்லப்பட்ட லட்சணங்கள் சரியாக இருந்தாலும் பலரும் தீர்க்காயுளுள்ளவர்களாக காணப்படுகின்றனர். அதனால் அரிஷ்டம் பங்கமாகி அல்பாயுர்யோகம் நீங்கி அதிக காலம் ஜீவித்திருக்கின்றனர் என்பது பெறப்படுகின்றது. இனி அவ்விதமான அரிஷ்டா பங்கயோக லட்சணத்தை அநேக சாஸ்திர மூலமாக இங்கு உபதேசிக்கின்றார்.

சு. 2. அரிஷ்டயோகங்கள் அநேக முண்டென்றாலும், சந்திரனால் ஏற்படுகின்ற அரிஷ்டத்தினுடைய பங்கயோகத்தை முன்னும் சேடமுள்ள யோகங்களைப் பின்னும் பிரமா முதலிய ஆசாரியார்களுடைய மதத்தைத் தழுவி நிரூபிக்கின்றார்.

சு. 3. சந்திரன் பட்சபல பூர்ணனாகி எல்லாக் கிரகங்களுடைய பார்வையோடும் கூடியிருந்தால் ராஜா நீதிமானிடமுள்ள துவேஷத்தை நீக்கினதுபோல அரிஷ்டத்தைச் சேஷமில்லாமல் நாசம் செய்துவிடுவான்.

சு. 4. பரிபூரண கலைகளைப் பெற்ற சந்திரன் மித்துரு க்ஷேத்திரம் மித்துரு நவாம்சம் இவைகளிலிருந்து சுக்கிரனுடைய பூர்ண திருஷ்டியைப் பெற்றிருந்தால் வாதசமனத்திற்கு வஸ்திபோல அரிஷ்டத்தைப் போக்குகிறதற்கு மிகவும் சிரேஷ்டனாகின்றான்.

சு. 5. சந்திரன் தனது பரமோச்சத்திலிருந்து சுக்கிரனால் பார்க்கப்பட்டிருந்தால் ஜாதிக்காயும் ஜாதிபத்திரியும் சேர்த்துவைத்த கஷாயம் கடினமான அதிசாரத்தை நிவர்த்திப்பதுபோல அரிஷ்டத்தை நீக்கிவிடுகின்றான்.

சு. 6. சந்திரனிருக்கின்ற ராசிக்கு 6-ஆமிடத்திலும் 8-ஆமிடத்திலும் 7-ஆமிடத்திலும் பாபிகளுடைய சேர்க்கையில்லாமல் சுபக்கிரகங்கள் மட்டிலுமிருந்தால் கல்யாண கிருதம் உன்மாதத்தைப் போக்குவதுபோல சகல அரிஷ்டத்தையும் விலக்குகின்றானென்பர்.

சு. 7. சந்திரன் சுபபலத்தைக் கொடுக்கின்ற எந்தக் கிரகத்தோடு சேர்ந்திருந்தாலும், அந்தக் கிரகத்தினுடைய திரேக்காணத்தி

விருந்தாலும் உப்பு ஜலம் காதுவலியை நீக்குவதுபோல அரிஷ்ட பலத்தை அதஞ்செய்வான்.

சு. 8. சந்திரன் க்ஷீணனானாலும் சுபக்கிரகத்தினுடைய ஷட்வர்க்கத்தில் இருந்து சுபக்கிரகங்களால் பார்க்கப்பட்டிருந்தால், வமன விரேசனங்கள் (வாந்தி எடுத்தல் பேதியாதல்) கப பித்தங்களுடைய தோஷத்தை நீக்குவதுபோல அரிஷ்டபலத்தைப் போக்கடிக்கின்றான்.

சு. 9. பூர்ண கலைகளோடு கூடிய சந்திரன் துவாதசாம்சகத்தில் சுபக்கிரகத்தின் வீட்டில் இருந்தால், மோர் மூலரோகத்தை நீக்குவதுபோல அரிஷ்டத்தை நாசஞ் செய்துவிடுகின்றான்.

சு. 10. சந்திரன் இலக்கினாதிபதியின் திருஷ்டியைப் பெற்று மற்றக் கிரகங்களால் பார்க்கப்படாமல் சுபக்கிரகங்களுடைய ராசியில் எவ்விடத்திலிருந்தாலும் குலஸ்திரீதோஷ களங்கமற்றவளாய்த் தன்னுடைய வம்சத்தைக் காப்பாற்றுவதுபோல அரிஷ்டங்களை நாசமாக்கிச் சுபத்தையே செய்வான்.

சு. 11. சந்திரன் பாபிகளின் வீட்டிலிருந்து அந்த ராசியாதிபனுடைய பார்வை பெற்றோ அல்லது அவனது வர்க்கமேறியோ இருந்தால் கிருபணன் தன் முயற்சியினால் தனத்தைக் காப்பாற்றுகின்றது போல குழந்தையை அரிஷ்டங்களிலிருந்து நீக்கி விடுகின்றான்.

சு. 12. மித்துருக் கிரகங்களாலும் சுபக்கிரகங்களாலும்பார்க்கப்பட்டுப் பலவானான சந்திர ராசியாதிபனான கிரகம் படைக்களத்தில் சென்ற பீருபோல (வெல்லுங்காலமும் இடமும் அறிந்த வீரன்) அரிஷ்டபங்கத்தைச்செய்து காப்பாற்றுகின்றது.

சு. 13. சந்திர ராசியாதிபனான கிரகம் எல்லாக்கிரகங்களாலும் பார்க்கப்பட்டு இலக்கினத்திலிருந்தால் நல்ல மிளகும் சரக் கொன்றையும் அரைத்து உண்டாக்குகின்றமை (கண்ணில் எழுதுகின்ற ஔடதம்) வெள்ளெழுத்தென்ற நேத்திர ரோகத்தை நிர்மூலப்படுத்துவதுபோல அரிஷ்டத்தை நாசஞ்செய்து குழந்தையைக் காப்பாற்றுகின்றது.

சு. 14. சந்திரன் தனது உச்சத்திலோ மூலத் திரிகோணத்திலோ தனது க்ஷேத்திரத்திலோ மித்துரு கிரக க்ஷேத்திரத்திலோ சுபக்கிரகங்களுடைய க்ஷேத்திரத்திலோ அவர்களுடைய ஷட்வர்க்கத்திலோ தனது ஷட்வர்க்கத்திலோ இருந்து சத்துரு கிரகங்களுடைய பார்வை யில்லாமலும் பாபர்களுடைய சேர்க்கை யில்லாமலும் பாபரால் பார்க்கப்படாமலும் சுபக்கிரகங்களுடன் சேர்ந்தோ

அல்லது பார்க்கப்பட்டோ யிருந்தால் சூரியன் பனிக்கூட்டத்தை நிவர்த்திப்பது போல கடினமான அரிஷ்டத்தை நிர்மூலம் செய்வன்.

சு. 15. சந்திரனிருக்கும் இராசிக்குப் பன்னிரண்டாமிடத்தில் சுக்கிரன் புதன் இவர்களும் பதினோராமிடத்தில் பாபக்கிரகங்களும் பத்தாமிடத்தில் குருவும் இருக்கின் அகத்திப் பூவின் ரசத்தினால் செய்த நசியம் நான்காமுறை ஜ்வரத்தை நாசம் செய்வதுபோல அரிஷ்டத்தை நாசமாக்கிவிடும்.

சு. 16. சந்திரன், லக்கினாதிபனிருக்கின்ற ராசிக்கு 6-ஆமிடத்திலோ 3-ஆமிடத்திலோ 10-ஆமிடத்திலோ 11-ஆமிடத்திலோ 4-ஆமிடத்திலோ இருந்து சுபக்கிரக வீக்ஷண்யத்தைப் பெற்றிருந்தால் எல்லா அரிஷ்டங்களையும் ராஜத்திரோதம் (தடை) போல சீக்கிரத்தில் நாசஞ்செய்து விடுவன்.

சு. 17. சந்திரராசியாதிபனான கிரகம், சுபக்கிரகங்களால் பார்க்கப்பட்டுப் பூரணமான பலத்தை யடைந்திருந்தால் ஒரு வேடன் காட்டில் மதங்கொண்டு திரிகின்ற அதிகமான மிருகங்களைக் கொல்வதுபோல் சந்திரனால் ஏற்படும் சகல அரிஷ்டங்களையும் நிவர்த்தி செய்துவிடுகின்றது.

பதினோராவது அத்தியாயம் முற்றிற்று.

## பன்னிரண்டாவது அத்தியாயம்.

# அரிஷ்டபங்க சாமான்ய லட்சணம்.

சு. 1. மற்ற கிரகங்களைக் காட்டிலும் அதிகமான பலத்தோடும் விருத்தியாயிருக்கின்ற ரஸ்மிகளோடும் இலக்கினத்திலிருக்கின்ற குரு பகவான் பக்தியுடன் பண்ணின ஸ்ரீமந் நாராயண நமஸ்காரம் பிறவிப் பெருங்கடலை நீக்குவது போலத் தாண்டுதற்கரிதான எல்லாத் தோஷங்களையும் போக்கி விடுவார்.

சு. 2. சுபக்கிரகங்கள் மிகவும் பலவந்தர்களாகவும் பாபக்கிரகங்கள் பலங் குறைந்தவர்களாயு மிருந்து இலக்கினம் சுபக்கிரகங்களுடைய ராசியாகிச் சுபக்கிரகங்களால் பார்க்கப்பட்டும் இருப்பின் கிரகங்களுடைய பூஜையைச் செய்கிறவன் துக்கத்தில் நின்று விடுபடுகிறதைப் போல எல்லா ஆபத்துக்களிலு மிருந்து குழந்தையைக் காப்பாற்றும்.

சு. 3. அரிஷ்டத்தைச் செய்கின்ற கிரகங்கள், பாபக் கிரகங்களாகி சுப ஷட்வர்க்கத்திலிருந்து சுப ஷட்வர்க்கத்திலிருக்கின்ற சுபர்களால் பார்க்கப்பட்டால் காதலற்ற யுவதியானவள் கணவனைக் காப்பாற்றுவதுபோல அப்போது ஏற்பட்ட அரிஷ்டத்தை நாசஞ் செய்வார்கள்.

சு. 4. இலக்கினத்திற்கு 3, 6, 11-இல் இருக்கின்ற ராகு, சுபர்களால் பார்க்கப்பட்டால் பெருங் காற்றினால் பஞ்சுப்பொதி நிர்மூலமாவது போல எல்லாவிதமான அரிஷ்டங்களும் அதமாகும்.

சு. 5. ஜனனகாலத்தில் எல்லாக்கிரகங்களும் * சீர்ஷோதய ராசிகளில் வக்கிரம் அஸ்தமனம் முதலான தோஷங்க ளற்றவர்களாயிருந்தால் நெருப்பிலிட்ட நெய்போல அரிஷ்டம் நீங்கிவிடும்.

சு. 6. ஜனனகாலத்தில் சுபக்கிரகமானது ஒரு சுபக்கிரகத்தின் பார்வையைப் பெற்று யுத்தத்தில் ஜயமுள்ளதாய் இருந்தால் பெருங் காற்று மரங்களை அடியோடு வீழ்த்துவது போல எல்லா அரிஷ்டங்களையும் நாசம் செய்துவிடும்.

---

* சிம்மம், கன்னி, துலாம், கும்பம், விருச்சிகம் இவை சீர்ஷோதய விராசிகளாம். இதனையே சிரோதய விராசிகள் எனக் கூறுவாருமுளர்.

சு. 7. பாபர்களால் பார்க்கப்பட்ட ஒரு கிரகம் பரிவேடத்தோடு கூடியிருக்குமேயானால் சூரிய கிரகண புண்ணிய காலத்தில் செய்கின்ற புண்ணிய தீர்த்த ஸ்நாநம் நற்பலனைத் தருவது போல அரிஷ்டத்தை உடனே போக்கடித்து நன்மை பயக்குமென்க.

சு. 8. ஆகாச மண்டலம் சாந்தமாய் மேகங்களோடும் நிர்மலமாக மிருதுவானதாயுள்ள வாயுக்களோடும் சேர்ந்து இருக்க எல்லாக் கிரகங்களும் நல்லஸ்தானங்களிலும் தத்தம் ஸ்தானங்களிலும் சிரேஷ்டமான நிலையோடு இருந்தால் அப்போது ஜனித்தவன் வர்ஷதாரை (மழை) தூசியை நீக்குதல்போல அரிஷ்டங்களை அதம் செய்தோனவன்.

சு. 9. * அகஸ்திய மகருஷி மரீசி ஆங்கிரஸ் முதலிய † சப்தரிஷிகளுடைய உதய காலத்தில் ஜனித்தவனுக்குளவாகிய அரிஷ்டம் சூரியோதய காலத்தைக் கண்ட இருட்டானது ஒழியுமாறு போல சீக்கிரத்தில் நாசமாகும்.

சு. 10. மேடமாவது இடபமாவது கடகமாவது இலக்கினமாக ஏற்பட்டு அந்த லக்கினத்தில் இராகு இருந்துவிட்டால் சந்தோஷத்தை அடைந்த அரசனானவன் தண்டிக்கத்தக்க அபராதியை மன்னித்து விடுவதுபோல குழந்தையை சகல பீடைகளினின்றும் விலக்கி இரட்சிப்பரென்க.

சு. 11. மேற்சொன்ன யோகத்தில் இலக்கினத்தை யடைந்த இராகு, ரட்சிக்கின்றான் என்பதை சமமான பிரதேசத்தில் சஞ்சரிக்கும் ஒந்திபோன்ற சிலர் உடன்படாமலிருப்பது ஆச்சரியப்படத் தக்கதாகும்.

சு. 12. அவ்விடத்திலும் சுபபலத்தைக் கொடுக்கக் கூடியவர்களான கிரகங்கள் பலருண்டென்றால் அரிஷ்டம் கொஞ்சம் நீங்குகின்றதாகின்றது. சூரியனிருக்கின்ற இராசிக்கு ஐந்தாமிடத்திலோ ஒன்பதாமிடத்திலோ சந்திரனிருந்தால் ராஜாவின் தர்சனத்தினால் குற்றவாளி விடுதலையடைவதுபோல அரிஷ்டம் நாசமாகுமென்ப.

சு. 13. இலக்கினத்திலோ நான்காமிடத்திலோ ஏழாமிடத்திலோ பத்தாமிடத்திலோ குருவும் சுக்கிரனுமிருந்தால் பரமாயுளாகிய (100) நூறு வருடம் வரையில் பிழைத்திருப்பது மல்லாமல் மற்றக் கிரகங்களினாலும் சந்திரனாலும் உண்டாகின்ற சகல அரிஷ்டங்களுமில்லாமல் இருப்பனெனப் பெரியோர்கள் கூறுகின்றார்கள்.

* அகஸ்திய மகருஷி உதயகாலமானது :—மிதுனராசி உதயம்.

† சப்தரிஷி உதய காலமானது :—சிம்மராசி உதயம்.

சு. 14. பூரண சந்திரனும் குருவும் ஒன்று சேர்ந்து கடகத்தி லிருந்து அந்தக் கடகமானது நான்காமிடமாகவோ பத்தாமிட மாகவோ ஏழாமிடமாகவோ ஆகி துலாத்தில் சுக்கிரன் புதன் இவர்கள் இருந்து மற்ற கிரகங்களான சனி செவ்வாய் சூரியன் இவர்கள் பதினோராமிடத்திலோ மூன்றாமிடத்திலோ ஆறாமிடத்திலோ இருப் பார்களாயின் முடிவில்லாத ஆயுள் உண்டாகும் என்க.

சு. 15. இவ்விதமாகப் பூர்வ சாஸ்திரோக்தங்களும் அநுபவ மாகக் கண்ட பலன்களும் ஆகிய இவ்வித அரிஷ்ட பங்கங்கள் என்றால் இங்கு கூறப்பட்டுள்ளன. தைவக்ஞர்கள் இவைகளைப் பகீரத பிரயத்தனம்போல் விடாமுயற்சியால் அறிந்து கூறுவார் களாயின் ராஜாக்களுக்கும் பிரியமுள்ளவராவரென்க.

பன்னிரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

# பதின்மூன்ருவது அத்தியாயம்.

## சுனபா அனபா துருதுரா யோகங்களின் பலங்கள்.

இப்போது சுனபா அனபா துருதுரா என்ற மூன்று பிரதான மான சாந்திர யோகங்களைச் சொல்லுகிருர்.

சு. 1. சூரியன் சந்திரன் நீங்கலாக செவ்வாய் புதன் குரு சுக்கி ரன் சனி என்ற ஐந்து தாராக் கிரகங்களில் ஒருவரோ இருவரோ அல்லது அதிகமானவர்களோ சந்திரனிருக்கும் இராசிக்கு இரண்டு பன்னிரண்டு அல்லது இந்த இரண்டு ஸ்தானங்கள் ஆகிய இவை களிலிருந்தால் முறையே சுனபா அனபா துருதுரா எனப்படும் மூன்று யோகங்களேற்படுகின்றன.

சந்திரனுக்கு இரண்டா மிடத்திலிருக்கின்ற கிரகத்தைக் கொண்டு சுனபா யோகத்தையும், பன்னிரண்டாமிடத்திலிருக்கும் கிரகத்தைக் கொண்டு அனபா யோகத்தையும், இரண்டாமிடத்திலும் பன்னிரண்டாமிடத்திலும் இருக்கின்ற கிரகத்தைக் கொண்டு துருதுரா யோகத்தையும் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதாம். ஒருவ ருடைய ஜாதகத்தில் மூன்று யோகங்களில் ஏதாவதொன்று மட்டி லுமே சம்பவிக்கும்.

சு. 2. இவ்விதம் மூன்று யோகங்களும் ஜாதக மூலமில்லை யெனில் கேமத்துரும யோக லட்சணமுண்டு. ஆனுலும் சந்திரனே குஜாதி பஞ்சக்கிரகங்களோ லக்கின கேந்திரங்களில் இராமலும் சந்தி ரனுக்கு ஒரு கிரகங்களுடைய திருஷ்டியு மில்லாமலு மிருந்தால் மிகவும் கஷ்டமாகிய கேமத்துருமம் பூர்ணமாகவே ஏற்படுமென்க.

குறிப்பு: சந்திரனுக்கு நான்காமிடத்தில் குஜாதி கிரகங்கள் இருந்தால் சுனபையும், பத்தாமிடத்தில் இருந்தால் அனபையும், இந்த இரண்டு இடங்களிலு மிருந்தால் துருதுராவும் உண்டாகு மென்று சிலர் அபிப்பிராயப் படுகின்றனர்.

சு. 3. இந்த மூன்று யோகங்களுள் சுனபையும் அனபையும் தனித்தனி 31 வகைப்படும். துருதுரா 180 வகைப்படும். அவ் வகைகள் இங்கு காண்பிக்கப்படுகின்றன.

குஜாதி பஞ்சக் கிரகங்களுள் ஒவ்வொன்று சந்திரனுக்கு 2-ஆமி டத்திலிருந்தால் அவற்ருல் ஐந்தும், இரண்டிரண்டு கிரகங்களிருந்

தால் பத்தும், மும்மூன்று கிரகங்களிருந்தால் பத்தும், நன்னான்கு கிரகங்களிருந்தால் ஐந்தும், ஐந்துகிரகங்களிருந்தால் ஒன்றும் ஆக சுனபா யோகம் 31 விதமாம். இங்ஙனமே அனபா யோகத்திற்குங் கண்டு கொள்க. இவ்விரண்டு யோகங்களும் சேர்ந்ததே துருதுரா யோகமாம். அது 180-விதமாகும். இதன் விரிவைக் கணிதத்தினால் கண்டு கொள்க. விரிவஞ்சி விடுத்தாம்.

சு. 4. சுனபா யோகத்தில் பிறந்தவன் ஸ்ரீமானும், தனது கைகளைக் கொண்டு தொழில் செய்து சம்பாதித்த திரவியங்களுடையவனும், தர்மம் செய்பவனும், சாஸ்திரங்களின் பொருள்களைத் தெரிந்தவனும், மிகவும் கீர்த்தியுள்ளவனும், சத்குணத்தினால் எல்லாரையும் சந்தோஷப்படுத்துகின்றவனும், அழகுள்ளவனும், சுகமுள்ளவனும், புத்திசத்தியுள்ள ராஜனும் அல்லது ராஜசமானனும் அல்லது ராஜ மந்திரியாயும் இருப்பான்.

சு. 5. அனபா யோகத்தில் பிறந்தவன் வாக்கு சாதுர்யமுள்ளவனாகவும், பிரபுவாகவும், தனவானாகவும், ஆரோக்கியமுள்ளவனாகவும், நல்ல சுபாவ முள்ளவனாகவும், அன்னபானாதி போஜ்ய சாதனங்கள் சுகந்த புஷ்பங்கள் விசேட வஸ்திரங்கள் சிரேஷ்டமான ஸ்திரீகள் ஆகிய இவைகளினால் உண்டாகும் சுகங்களை அநுபவிக்கின்றவனாகவும், பிரசித்தனாகவும், குணவானாகவும், மனச்சுகமுடையானாகவும், வஸ்திராலங்காராதி வேஷ சம்பந்தங்களுள்ளவனாகவும் இருப்பான்.

சு. 6. துருதுரா யோகத்தில் ஜனித்தவன் வாக்கினாலும் புத்தியினாலும் பராக்கிரமத்தினாலும் குணங்களினாலும் பூமியில் மிகவும் பிரசித்தனாகவும், தன்னிஷ்ட முள்ளவனாகவும், சுகம் தனம் வாகனம் போகம் இவைகளோடு கூடினவனாகவும், தானம் செய்கின்றவனாகவும், குடும்ப ஜனத்தையும் குடும்பத்தையும் பரிபாலிக்கின்றதால் அநேக துக்கம் அநுபவிக்கின்றவனாகவும், நல்ல சுபாவத்தோடு கூடினவனாகவும், மேன்மை பொருந்திய ஸ்தானத்திலிருப்பவனாகவும் இருப்பான்.

சு. 7. அரசவம்சத்தில் பிறந்திருந்தாலும் கேமத்துரும யோகத்தில் ஜனித்தவன் பார்யா சுகமில்லாதவனாகவும், நல்ல அன்னபானாதிகள் இல்லாதவனாகவும், குடும்ப சுகமற்றவனாகவும், வஸ்திராலங்காரமில்லாதவனாகவும், சிநேகிதர்கள் இல்லாதவனாகவும், சம்பத்திருந்தாலும் தாரித்திரதுக்கத்தை யநுபவித்து யாசிக்கின்றவனாகவும், ரோக பீடிதனாகவும், எப்போதும் துக்கத்தை யநுபவிக்கின்றவனாகவும், மலினனாகவும், (சுகமில்லாதவன்) பாபியாகவும், குலஹீனமான

தொழில்களைச் செய்பவனுகவும், கெட்ட சுபாவமுள்ளவனுகவும், எல்லா ஜனங்கட்கும் பகையை உண்டுபண்ணுகின்ற தொழிலுள்ள வனுகவும் இருப்பான்.

சு. 8. சந்திரனுக்கு கேந்திராதி ராசிகளிலிருக்கின்ற கிரகங் களைக்கொண்டும், சந்திரனுக்கும் கிரகங்களுக்கும் உரிய பலாபலத் தைக்கொண்டும் அனபாதி யோகங்களுக்குப் பலன்களைத் தீர்மானித் துக் கொள்ளவேண்டும்.

சு. 9. யோக கர்த்தாக்களாகிய குஜாதி கிரகங்களுடைய பலத் தையும் காலதேச அவஸ்தைகளையும் பிறந்தவனுடைய காலத்தையும் வித்துவானுகிய தைவக்ஞன் முறையாக நன்கறிந்து சுனபாதி யோகங் களுடைய பலத்தைச் சொல்லவேண்டும்.

சு. 10. மேற்சொன்னவைகளெல்லாம் சுனபாதி யோகங்களு டைய சாமான்ய பலன்களாம். குஜாதி கிரகங்களில் ஒவ்வொரு கிரகங் களைக்கொண்டும் உண்டாகின்ற யோகங்களுடைய பலன்கள் பல வகைப்படுதலால் அவைகளை முறையாக அறிய வேண்டும். இனி மேல் அவைகளைத் தெரிவிக்கின்றுர்.

சந்திரனுக்கு 2-ஆமிடத்தில் செவ்வாய் சுனபாயோக கர்த்தா வானுல் அப்போது ஜெனித்தவன் பராக்கிரமத்தோடு தொழி லைச் செய்கின்றவனுகவும், கொடுமையான வாக்குள்ளவனுகவும், சேனைத்தலைவனுகவும், குரூர சுபாவமுள்ளவனுகவும், ஹிம்சைசெய்பவ னுகவும், கர்வமுள்ளவனுகவும், விரோதமுள்ளவனுகவும் இருப்பான்.

சு. 11. புதன் சுனபாயோக கர்த்தாவானுல், வேத சாஸ்திரங் களிலும் சங்கீதத்திலும் சாமர்த்திய முள்ளவனுகவும், தர்மிஷ்டனுக வும், காவியங்கள் செய்பவனுகவும், நல்ல மனதுடையவனுகவும், யாவர்க்கும் இஷ்டனுகவும், அழகுள்ளவனுகவும் இருப்பான்.

சு. 12. குரு சுனபாயோக கர்த்தாவானுல் பலவித வித்தைகளை உபதேசிக்கிறவனுகவும், பிரசித்தனுகவும், ராஜாவோ ராஜாவிற்குச் சமானனுகவோ இருப்பவனுகவும், நல்ல குடும்பமுடையவனுகவும் நல்ல சம்பத்துடையவனுகவும் இருப்பான்.

சு. 13. சுக்கிரன் சுனபா யோககர்த்தாவானுல் ஸ்திரீபோகம் பயிர்த்தொழில்செய்யும் பூமிகள் சம்பத்து இவையுள்ளவனுகவும், பசு காளை முதலிய நாற்கால் பிராணிகளுடையவனுகவும், பராக்கிரம முள்ளவனுகவும், ராஜாவினுல் சத்கரிக்கப்பட்டவனுகவும், மிகவும் தீரனுகவும், வித்வானுகவும், சமர்த்தனுகவும் இருப்பான்.

சு. 14. சனி சுனபாயோக கர்த்தாவானல் புத்தி சாமர்த்திய முள்ளவனுகவும், கிராம ஜனங்களாலும் நகரஜனங்களாலும் பூஜிக்கப் படுகின்றவனுகவும், அதிக சம்பத்துள்ளவனுகவும், ரகஸ்யமாக கார் யங்களைச் செய்பவனுகவும், தீரனுகவும் இருப்பான்.

சு. 15. இனிமேல் குஜாதிகிரகங்கள் ஒவ்வொருவராலும் தனித் தனியே உண்டாகும் அனபா யோக பலன்களைச் சொல்லுகிருர்.

சேவ்வாய் அனபா யோக கர்த்தாவானல் (சந்திரனுக்கு 12-இல் இருந்தால்) கள்ளர்களுக்குத் தலைவனுகவும், துஷ்டனுகவும், ஸ்வாதந்திரிய முள்ளவனுகவும், அபிமானியாகவும், யுத்தத்தில் சமர்த்தனுகவும், கோபமுள்ளவனுகவும், சிரேஷ்ட முடையவ னுகவும், மற்றவர்களுடைய புகழுக்குப் பாத்ரமாகின்றவனுகவும், அழகிய சரீர முடையவனுகவும், கர்வத்தோடு கூடினவனுகவும் இருப்பான்.

சு. 16. புதன் அனபாயோக கர்த்தாவானல் சங்கீதத்திலும் சித்திரம் எழுதுவதிலும் சாமர்த்தியமுள்ளவனுகவும், கவியாகயும் நன்கு பேசுபவனுகவும், அரசனிடமிருந்து கிடைக்கப்பட்ட சன் மானத்தோடு கூடினவனுகவும், சௌந்தர்யமும் சௌபாக்கியமும் உள்ளவனுகவும், மேன்மையான பிரவிருத்தியைக்கொண்டு பிரசித்தி பெற்றவனுகவும் இருப்பான்.

சு. 17. குரு அனபாயோக கர்த்தாவானல் காம்பீர்யமும் பராக் கிரமமும் தாரணுசக்தியோடு கூடிய புத்தியுமுடையவனுகவும், காரியா லோசனைச் சபையில் தலைவனுகவும், புத்திமானுகவும், அரசனிட மிருந்து கிடைத்த கீர்த்தி முதலாகிய குணங்களுள்ளவனுகவும், நல்ல கவியாகவும் இருப்பான்.

சு. 18. சுக்கிரன் அனபாயோக கர்த்தாவானல் சௌபாக்கி யம் முதலிய குணங்களால் யௌவனத்தோடுள்ள ஸ்திரீகளுக்குப் பிரியமுள்ளவனும், அரசசிநேகமுள்ளவனும், மிகவும் பசுக்களைக் காப்பாற்றுபவனும், பிரசித்தியுள்ளவனும், அழகுள்ளவனும், சுவர்னம் முதலிய தனங்கள் நிறைந்திருப்பவனும் இருப்பான்.

சு. 19. சனி அனபாயோக கர்த்தாவானல் அகன்ற புஜ முள்ளவனும், தலைமையுள்ளவனும், கிருஹீத வாக்கியனு யும் அஃதாவது பிறர் கூறும் வசனங்களைக் கிரகிக்கக் கூடியவனும், நாற்கால் மிருகங்கள் உள்ளவனும், துஷ்டஸ்திரீகளிடத்தில் அன் புள்ளவனும் இருப்பான்.

இனிமேல் குஜாதி பஞ்சக்கிரகங்களில் இரண்டிரண்டு கிரகங்களாகச் சந்திரனுக்கு இருபுறத்திலுமிருப்பதாலுண்டாகும் துருதுரா யோகத்தின் விசேட பலன்களைச் சொல்லுகின்றார்.

சு. 20. சந்திரனுக்கு இருபுறமும் இருக்கும் செவ்வாயினாலும் புதனாலும் உண்டாகின்ற துருதுரா யோகத்தில் ஜனித்தவன் சத்தியமில்லாதவனும், மிகவும் தனமுள்ளவனும், நிபுணனும், அதிக துஷ்டனும், மிகவும் குணவானும், பொறுமையுள்ளவனும்,வயோதிக துஷ்டஸ்திரீகளிடத்தில் பிரியமுள்ளவனும், குல சிரேஷ்டனும் இருப்பான்.

சு. 21. செவ்வாயும் குருவும் துருதுரா யோககர்த்தாவானால் தொழில்களில் பிரசித்தனாகவும், பணமுள்ளவனாகவும், மிகவும் ஜனங்களுக்கு விரோதியாகவும், கோபமுள்ளவனாகவும், சந்துஷ்டியுள்ளவனாகவும், வம்சத்தைக் காப்பாற்றுகின்றவனாகவும், சங்கிரக சீலனாகவும் இருப்பான்.

சு. 22. செவ்வாயும் சுக்கிரனும் துருதுராயோககர்த்தாவானால் சிரேஷ்டமான பாரியைகளோடு கூடினவனாகவும், சுபகனாகவும், (நல்ல அதிருஷ்டமுள்ளவன்) வியவகாரத்தில் பிரியம் உள்ளவனாகவும், சுத்தமுள்ளவனாகவும், திறமை வாய்ந்தவனாகவும், தேகாப்பியாசத்தைச் செய்கின்றவனாகவும், யுத்தத்தில் சூரத்துவமுள்ளவனாகவும் இருப்பான்.

சு. 23. செவ்வாயும் சனியும் துருதுரா யோககர்த்தாவானால் கெட்ட நடத்தையுள்ள ஸ்திரிகளோடு கூடியவனாகவும், சஞ்சார சீலனாகவும், அதிகம் சம்பாதிக்கின்றவனாகவும் எப்போதும் வியசனித்துக் கொண்டிருக்கின்றவனாகவும், கோபமுள்ளவனாகவும், கோள் சொல்லுகின்றவனாகவும், அல்லது துஷ்டனாகவும், சத்துருக்களுள்ளவனாகவும் இருப்பான்.

சு. 24. புதனும் குருவும் துருதுராயோக கர்த்தாவானால் தர்மங்களில் பிரியமுள்ளவனாகவும், சாஸ்திரக்ஞனாகவும், மதுரமான வாக்குடையவனாகவும், நல்லபுலவனாகவும், தனவானாகவும், தானசீலனாகவும், பிரசித்தனாகவும் இருப்பான்.

சு. 25. புத சுக்கிரர்கள் துருதுரா யோககர்த்தாவானால் பிரியமான வார்த்தைகளைப் பேசுகின்றவனும், நல்ல அதிருஷ்டமுள்ளவனும், அழகுள்ளவனும், நடனம் பாட்டு நாடகம் கொட்டு

முதலியவைகளில் பிரியமுள்ளவனும், பலரால் சேவிக்கப்படுவோனு யும், சூரனும், மந்திரியாயும் இருப்பான்.

சு. 26. புதன் சனி இவர்கள் துருதுராயோக கர்த்தாவானல் தனலாபத்தைக்கருதி ஒவ்வொரு தேசங்களிலும் சஞ்சரிக்கின்றவனு கவும், அதிக வித்தையில்லாதவனுகவும், சுற்றத்தாருக்கு விரோதி யாகவும் அந்நியர்களுக்குப் பூஜ்யனுகவும் இருப்பான்.

சு. 27. குரு சுக்கிரன் இவர்கள் துருதுராயோககர்த்தாவானல் தைரியம் தாரணுபுத்தி சௌர்யம் இவைகளோடு கூடினவனுய் நீதி சாஸ்திரத்தை அறிகின்றவனுய் அதிகமான தனங்களும் இரத்தினங் களும் உள்ளவனுய் பிரசித்தனுய் ராஜாவினுடைய செய்கை போன்ற செய்கையோ அல்லது ராஜகாரியத்தையோ செய்கின்றவனுய் இருப்பான்.

சு. 28. குரு சனி இவர்கள் துருதுரா யோககர்த்தாவானல், சுக மும் நயமும் நல்ல அறிவும் உள்ளவனுகவும், பிரியமான வார்த்தை களைச் சொல்கின்றவனுகவும், வித்வானுகவும், பாரத்தை (சுமக்கத் தக்க காரியங்களை) வகிக்கின்றவனுகவும், பூஜ்ஜியனுகவும் சாந்த சுபாவ முள்ளவனுகவும், தனவானுகவும் அழகுள்ளவனுகவும் இருப்பான்.

சு. 29. சுக்கிரன் சனி இவர்கள் துருதுரா யோககர்த்தாவா னல் கிழவர்கள் போலுள்ள நடவடிக்கையுள்ளவனுகவும், தன்னு டைய வம்சத்திற்குத் தலைவனுகவும், நிபுணனுகவும், ஸ்திரீ ஜனங் களுக்குப் பிரியமுள்ளவனுகவும், ராஜாவினல் சன்மானிக்கப்பட்டவ னுகவும், அதிக தனமுள்ளவனுகவும் இருப்பான்.

இப் பலன்களைப் போலவே இரண்டு அல்லது அதிக கிரகங் களினல் ஏற்படும் பலன்களையும் நன்கு அறிந்துகொள்ளவேண்டும். இந்த யோககர்த்தாக்களாகிய கிரகங்கள் சந்திரபாவ மத்தியத்தில் பூர்ண பலத்தோடிருந்தால் அந்தக்கிரகங்களைக் கொண்டு சொல்லும் பலன்கள் பூரணமாகச் சம்பவிக்கும்.

கிரகங்களுக்கோ சந்திரனுக்கோ இராகு கேதுக்களுடைய யோகமோ மௌட்டியமோ நீச ஸ்திதியோ பலஹானியோ சந்தியின் ஸ்திதி முதலானவைகளோ உண்டாயிருந்தால் மேலே சொன்ன பலன்கள் சம்பவிக்காமல் போய்விடும்.

சு. 30 சூரியனிருக்குமிடத்திற்குக் கேந்திரமான 1-4-7-10-இல் சந்திரனிருந்தால் தனம் புத்தி கௌசலம் க்ஞானம் விநயம் இவை நான்கும் சுவல்பமாக இருக்கும். அவைபோலவே பணபரமான

2-5-8-11-இல் சந்திரனிருந்தால் மேற்சொன்ன தனம் முதலிய வைகள் மத்தியமாயிருக்கும். அவைபோலவே ஆபோக்லிபமான 3-6-9-12-இல் சந்திரனிருந்தால் அவை பரிபூர்ணமாய் இருக்கும்.

சு. 31. கிருஷ்ணபட்சராத்திரியில் சந்திரன் *அதிரிசி யார்த்தத் தில் இருந்தால் மிகவும் அசுப பலத்தைக் கொடுப்பான். அப்போது ஜனித்தவன் தாரித்திரம் முதலியவைகளால் பீடிக்கப் பட்டவனுய் இருப்பான்.

பகலில் அந்தச் சந்திரன் *திரிசியார்த்தத்திலிருந்தால் பயம் சோகம் முதலாகிய அசுபத்தைச் செய்வான். சுக்கிலபட்ச சந்திரன் இரவில் சுபனுகின்ருன். அந்தச் சந்திரன் *திரிசியார்த்தத்திலிருப்பவ ேனுடு கூடினுல் மிகவும் சுபபலத்தையே கொடுப்பான். கிருஷ்ணபட்ச சந்திரன் பகலில் சுபனுகின்ருன். அவன் *அதிரிசியார்த்தத்தில் இருப்பவனேடு கூடினுல் கொஞ்சம் சுபத்தைச் செய்பவனுவன்.

சந்திரன், கிருஷ்ண பட்சப் பகலில் *அதிரிசியார்த்தத்தில் இருப் பது சுபம். சுக்கில பட்சத்தில் இராத்திரியில் *திரிசியார்த்தத்தி லிருப்பது சுபம். பெரும்பாலும் கிருஷ்ண பட்ச சந்திரன் அசுப னும், சுக்கிலபட்ச சந்திரன் சுபனும் ஆகின்ருர்கள். இவ்விதம் சொன்னகிரமத்தினுல் அதிசுபத்துவம் - சுபத்துவம் - சமத்துவம் - அசுபத்துவம் - அதி அசுபத்துவம் என்கிற இந்தப் பேதங்களேயும் நிரூபித்துக்கொள்ள வேண்டும்.

சு. 32. இலக்கினத்திற்கு உபசயராசிகளில் (3-6-10-11-இல்) இருக்கும் எல்லாச் சுபக்கிரகங்களும் (புதன் குரு சுக்கிரன்) ஜாதகனே அதிக தனமுள்ளவனுக்குவிக்கும். இவர்களில் இரண்டு சுபக்கிரகங் கள் உபசயஸ்தானத்தில் எதிலிருந்தாலும் மத்திய சம்பத்து உள்ளவ னுகச் செய்கின்றன. ஒரு சுபக்கிரகம் மட்டிலும் உபசயத்திலிருந் தால் கொஞ்ச தனமுள்ளவனுகச் செய்கிறது. இவ்விதம் சொன்ன பிரகாரமே சந்திரனிருக்கு மிராசிக்கு உபசயஸ்தானங்களில் இருக் கின்ற சுபக்கிரகங்களேக் கொண்டும் தனத்தினுடைய அதிகம் - குறைவு - சமம் என்ற பாகுபாடுகளே அறிந்துகொள்ள வேண்டும்.

இலக்கினத்திற்கு உபசயத்திலிருக்கும் சுபக் கிரகங்களேக் கொண்டு சொல்லப்பட்ட பலத்திற்கு, சந்திரனுக்கு உபசயத்திலிருக் கும் சுபக்கிரகங்களேக் கொண்டு கூறப்பெறும் பலன்கள் சிறிது குறைந்தவை யென்றே அறிந்துகொள்ள வேண்டும்.

---

* ஒன்பதாவது அத்தியாயம் 20-ஆம் சுலோகத்தில் கூறப்பட்டுள்ளது.

இலக்கினத்திற்கும் சந்திரனுக்கும் உபசயத்தில் ஒரு சுபக்கிரகங்களுமில்லாமலிருந்தால் ஜாதகன் தனஹீனனும் தரித்திரனும் ஆவனென்றறிக. கேமத்துருமாதி தாரித்திர யோக முண்டாயிருந்தாலும் இந்த உபசயத்திலிருக்கும் சுபக்கிரகங்கள் தனயோகபலத்தை கொடுக்கின்றது.

சு. 33. சந்திர யோகங்களாகிய சுனபாதி யோகங்களை விவரிக்கின்ற இந்த அத்தியாயத்தில் அதியோகம் முதலியவைகளாகிய மற்ற யோகங்களைக் குறித்து இப்போது ஒன்றும் சொல்லவில்லை. அந்த அதியோகாதிகள் ராஜயோகங்களாகின்றனவாகலின். அவ்வித யோகங்கள் யாவும் ராஜயோகாத்தியாயத்தில் சொல்லப்படும்.

பதின்மூன்றாவது அத்தியாயம் முற்றிற்று.

## பதினன்காவது அத்தியாயம்.

# வேசி வாசி உபயசரியோகமும் அவற்றின் பலன்களும்.

சந்திரனைக் கொண்டு சுனபா-அனபா-துருதுரா யோகங்களைச் சொன்னதுபோல இந்த அத்தியாயத்தில் சூரியனைக் கொண்டு வேசி-வாசி-உபயசரி என்ற யோகங்களையும் சொல்லுகின்றார்.

சு. 1. சந்திரனைத் தவிர்த்து குஜாதி பஞ்சக்கிரகங்களில் ஒருவர் சூரியனுக்கு 2-ஆமிடத்திலிருந்தால் வேசியோகமும், 12-ஆமிடத்திலிருந்தால் வாசியோகமும், 2-ஆமிடத்திலும் 12-ஆமிடத்திலும் இருந்தால் உபயசரி யோகமும் உண்டாகும். இனி இவற்றின் பலன்கள் கீழே சொல்லப்படுகின்றன.

சு. 2. வேசியோகத்தில் பிறந்தவன் மெதுவாய் நடக்கின்றவனாகவும், ஸ்திரமான வாக்குள்ளவனாகவும், பரிசிரமிக்கின்ற காரியங்களில் தோல்வியடைகின்றவனாகவும், இடுப்பின் மேல்பாகம் வளைந்திருக்கின்றவனாகவும், கீழ்ப்பார்வை யுடையவனாகவும் இருப்பான் என்று யவனாசாரியர் கூறுகின்றார்.

இனி ஒவ்வொரு கிரகங்களினாலும் பிரத்தியேகமா யுண்டாகின்ற வேசியாதி யோகபலத்தைச் சொல்லுகிறார்.

சு. 3. குரு வேசியோக கர்த்தாவாயின் (சூரியனுக்கு இரண்டாமிடத்திலிருந்தால்) அதிக தனங்களுள்ளவனாகவும் பந்துக்களோடும் சிநேகிதர்களோடும் சேர்ந்தவனாகவும் இருப்பான்.

சுக்கிரன் வேசியோக கர்த்தாவாயின் தைரியமில்லாதவனும், காரியங்களில் பிரமித்துக் கொண்டிருப்பவனும், அல்ப வியாபாரத்தோடு கூடியவனும், பராதீனனும் இருப்பான்.

சு. 4. புதன் வேசியோக கர்த்தாவாயின் உடம்பைத் தேய்த்துக் கழுவித் துடைக்கும் தொழிலைச் செய்கின்றவனாகவும், தரித்திரனாகவும், மிருதுவான குணமுள்ளவனாகவும் விநயமுள்ளவனாகவும் லஜ்ஜை யுள்ளவனாகவும் இருப்பான்.

செவ்வாய் வேசியோக கர்த்தாவாயின் வேகமாய் வழி நடப்பான். அன்னியர்களுக்குத் துன்பத்தை விளைவிப்பான்.

பதினொன்காவது அத்தியாயம்.

## வேசி வாசி உபயசரியோகமும் அவற்றின் பலன்களும்.

சந்திரனைக் கொண்டு சுனபா-அனபா-துருதுரா யோகங்களைச் சொன்னதுபோல இந்த அத்தியாயத்தில் சூரியனைக் கொண்டு வேசி-வாசி-உபயசரி என்ற யோகங்களையும் சொல்லுகின்றார்.

சு. 1. சந்திரனைத் தவிர்த்து குஜாதி பஞ்சக்கிரகங்களில் ஒருவர் சூரியனுக்கு 2-ஆமிடத்திலிருந்தால் வேசியோகமும், 12-ஆமிடத்திலிருந்தால் வாசியோகமும், 2-ஆமிடத்திலும் 12-ஆமிடத்திலும் இருந்தால் உபயசரி யோகமும் உண்டாகும். இனி இவற்றின் பலன்கள் கீழே சொல்லப்படுகின்றன.

சு. 2. வேசியோகத்தில் பிறந்தவன் மெதுவாய் நடக்கின்றவனாகவும், ஸ்திரமான வாக்குள்ளவனாகவும், பரிசிரமிக்கின்ற காரியங்களில் தோல்வியடைகின்றவனாகவும், இடுப்பின் மேல்பாகம் வளைந்திருக்கின்றவனாகவும், கீழ்ப்பார்வை யுடையவனாகவும் இருப்பான் என்று யவனாசாரியர் கூறுகின்றார்.

இனி ஒவ்வொரு கிரகங்களினாலும் பிரத்தியேகமா யுண்டாகின்ற வேசியாதி யோகபலத்தைச் சொல்லுகிறார்.

சு. 3. குரு வேசியோக கர்த்தாவாயின் (சூரியனுக்கு இரண்டாமிடத்திலிருந்தால்) அதிக தனங்களுள்ளவனாகவும் பந்துக்களோடும் சிநேகிதர்களோடும் சேர்ந்தவனாகவும் இருப்பான்.

சுக்கிரன் வேசியோக கர்த்தாவாயின் தைரியமில்லாதவனும், காரியங்களில் பிரமித்துக் கொண்டிருப்பவனும், அல்ப வியாபாரத்தோடு கூடியவனும், பராதீனனும் இருப்பான்.

சு. 4. புதன் வேசியோக கர்த்தாவாயின் உடம்பைத் தேய்த்துக் கழுவித் துடைக்கும் தொழிலைச் செய்கின்றவனாகவும், தரித்திரனாகவும், மிருதுவான குணமுள்ளவனாகவும் விநயமுள்ளவனாகவும் லஜ்ஜை யுள்ளவனாகவும் இருப்பான்.

செவ்வாய் வேசியோக கர்த்தாவாயின் வேகமாய் வழி நடப்பான். அன்னியர்களுக்குத் துன்பத்தை விளைவிப்பான்.

தக்கவாறு சூரியனுடைய பாவமத்தியிலுள்ள ஸ்திதிக்கு ஏற்க அநு ரூபமாக எல்லாப் பலன்களேயும் அறிந்து சொல்ல வேண்டும்.

சு. **11-12.** உபயசரி யோகத்திற் பிறந்தவன் சர்வத்தையும் சகிக்கின்றவனுகவும், எல்லாரையும் ஒரே ரீதியில் காணுகின்றவனுக வும், அதிகம் தடித்தோ மெலிந்தோ இல்லாதவனுகவும், மிகவும் ஸ்திரமும் பராக்கிரமும் உள்ளவனுகவும், அதிக உயரமில்லாதவனுக வும், பரிபூர்ணம் உள்ளவனுகவும், சிங்கத்தின் கழுத்துபோன்ற கழுத்தையுடையவனுகவும், நல்ல அதிருஷ்டவானுகவும், அதிகமான வேலேயாட்களும் சம்பத்துக்களு முள்ளவனுகவும், பந்துக்களுக்கு ஆச்சர்யமுள்ளவனுகவும், ராஜசமானனுகவும், நித்தியம் உத்சாக சீலனுகவும், சந்துஷ்டியுள்ளவனுகவும், போகங்களே அநுபவிக்கின்றவ னுகவும் இருப்பான்.

இங்குத் துருதுரா யோகத்திற்குச் சொன்னது போலவே உபய சரி யோகத்திற்குக் கிரகங்களுடைய பலங்களேப் பிரத்தியேகமாய்ச் சொல்லவில்லே யாகையால் வேசி வாசி யோகங்களுக்குச் சொன்ன பலங்களேயே உசிதத்தின்படி யோசித்து உபயசரியோகத்திற்கும் சொல்ல வேண்டும்.

பதினுன்காவது அத்தியாயம் முற்றிற்று.

## பதினைந்தாவது அத்தியாயம்.

## துவிக்கிரக யோகபலம்.

சு. 1. சூரியன் முதல் சனி இறுதியான ஏழுகிரகங்களில் இரண்டு கிரகங்கள் வீதம் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் அவைகளுக்கெல்லாம் தனித்தனி பலன்கள் விருத்தயவனாசாரியர்களால் சொல்லப்பட்டிருக்கின்றன வெனினும், அவ்விதமுள்ள அந்தத் துவிக்கிரக யோகங்களின் பலன்களை யெல்லாம் நான் விரோதமில்லாமல் இங்குக் கூறுகின்றேன்.

சு. 2. சூரியனும் சந்திரனும் சேர்ந்துள்ள துவிக்கிரகயோகத்தில் ஜனித்தவன் ஸ்திரீகளுக்கு வசப்பட்டவனாவன். அழகில்லாதவனாவன். கபடகிருத்தியங்களைச் செய்கின்றவனாவன். மிகவும்தனமுள்ளவனாவன். சாராயம் முதலிய லாகிரி வஸ்துக்களை விற்பனை செய்பவனாவன். காரியங்களில் நிபுணத்தன்மை உள்ளவனாவன்.

சு. 3. சூரியனும் சேவ்வாயும் சேர்ந்துள்ள துவிக்கிரக யோகத்தில் ஜனித்தவன் ஓஜஸ் உள்ளவனாகவும், சாகச கர்மத்தைச் செய்கின்றவனாகவும், அறிவில்லாதவனாகவும், பலமும் பராக்கிரமுமுள்ளவனாகவும், பொய் பேசுகின்றவனாகவும், பாபபுத்தியுள்ளவனாகவும், கொல்லுதல் முதலிய துஷ்கிருத்தியங்களிற் பிரியமுள்ளவனாகவும், மிகுந்த குரூரத்தன்மையுடையவனாகவும் இருப்பான்.

சு. 4. சூரியனும் புதனும் சேர்ந்திருந்தால் சேவகாவிருத்தியுள்ளவனாகவும், ஸ்திரமில்லாத தனத்தோடு கூடியவனாகவும், இஷ்டமாகிய வார்த்தைகளைப் பேசுகின்றவனாகவும், கீர்த்தியை ஆக்ரஹிக்கிறவனாகவும், பூஜ்யனாகவும், ராஜாவிற்கும் சத்ஜனங்களுக்கும் இஷ்டனாகவும், பலம் சௌந்தர்யம் வித்தை இவைகளுடையவனாகவும் இருப்பான்.

சு. 5. சூரியனும் குருவும் சேர்ந்திருந்தால் மிகவும் தர்மங்களைச் செய்கின்றவனாகவும், ராஜாவிற்கு மந்திரியாகவும், சமிருத்தியோடு கூடினவனாகவும், பந்துக்களைத் தழுவி அவர்களினால் கிடைக்கப்பட்ட தனலாபமுடையவனாகவும், உபாத்தியாயன் என்ற பெயரை வகிக்கின்றவனாகவும் இருப்பான்.

சு. 6. சூரியனும் சுக்கிரனும் சேர்ந்திருந்தால் ஆயுதங்களைப் பிரயோகிக்கும் சமர்த்தனாகவும், பலவானாகவும், வயோதிகத்தில்

கண்ணிற்குப் பார்வை குறைந்திருக்கின்றவனாகவும், போர்க்களத்திற் பிரயோகிக்கும் வித்தைகளில் (மல்யுத்தம் முதலானவை) நிபுணனாகவும், ஸ்திரீ சங்கத்தினால் உண்டான பந்துக்களோடும் தனங்களோடும் கூடினவனாகவும் இருப்பான்.

சு. 7. சூரியனும் சனியும் சேர்ந்திருந்தால் * தாது விஷயங்களாகிய கர்மங்களில் சாமர்த்திய முள்ளவனும், தர்ம ஸ்வபாவமுடையவனும், தன்னுடைய கர்மத்தில் பிரியமுள்ளவனும், பத்தினிக்கும் புத்திரர்களுக்கும் பீடை (நாசம்) சம்பவிக்குங் காலத்தில் பீடிதனும், தனது வம்சத்திற்குத்தக்க குணங்களினால் சுத்தவானும், அற்ப சீலனும் இருப்பான்.

சு. 8. சந்திரனும் செவ்வாயும் சேர்ந்திருந்தால் சூரனாகவும், யுத்தத்தில் பிரதாப சக்தியுள்ளவனாகவும், மல்யுத்தத்தில் (முஷ்டி யுத்தத்தில்) சமர்த்தனாகவும், இரத்த சம்பந்தமான வேதனையால் பீடிக்கப்பட்ட சரீரமுள்ளவனாகவும், மண்தோல் தாதுக்கள் இவைகளினாலே சித்திரப் பணிகளைச் செய்கின்றவனாகவும், மாரணம் உச்சாடனம் முதலாகிய பிரயோகத்தில் சமர்த்தனாகவும் இருப்பான்.

சு. 9. சந்திரனும் புதனும் சேர்ந்திருந்தால் காவியம் கதை இவைகளில் அதிக சாமர்த்திய முள்ளவனாகவும், தனவானாகவும், ஸ்திரீகளுக்குச் சம்மத முள்ளவனாகவும், ரூபகுணத்தை யுடையவனாகவும், பிரசன்ன முகனாகவும், தர்ம காரியங்களில் பிரீதியுள்ளவனாகவும், விசிஷ்டங்களாகிய குணங்களோடு கூடியவனாகவும் ஆவன்.

சு. 10. சந்திரனும் குருவும் சேர்ந்திருந்தால் திருடமாகிய பந்துக்களுடையவனாகவும், தன்னுடைய சுற்றத்தாருக்கு சகாயத்தையும் சன்மானத்தையும் செய்கின்றவனாகவும், தனங்களுக்கு நாதனாகவும், அல்பசீல முள்ளவனாகவும், தேவர்கள் பிராமணர்கள் இவர்களுடைய இஷ்டத்தை அநுசரிக்கின்றவனாகவும் இருப்பான்.

சு. 11. சந்திரனும் சுக்கிரனும் சேர்ந்திருந்தால் நல்ல மாலைகள் வெண்மையான வஸ்திரங்கள் இவைகளைத் தரிக்கின்றவனாகவும், கிரியைகளையும் விதிகளையும் அறிகின்றவனாகவும், கவிகளில் பிரியமுள்ளவனாகவும், மிகவும் சோம்பலுள்ளவனாகவும், கிரய விக்கிரயங்

* தாது என்றதற்கு இங்குச் சுவர்ணம் வெள்ளி செம்பு ஈயம் இவைகளோ கல் காவி மண் முதலானவைகளோ அல்லது இவைகளைக்கொண்டு உண்டாகிற மற்ற சாதனங்களோ என்ற அர்த்தத்தைக் கிரகித்துக் கொள்ளவேண்டும்.

களில் (கொடுக்கல் வாங்கல் அல்லது வியாபாரத்தில்) திறமையுள்ள வனுகவும் இருப்பான்.

சு. 12. சந்திரனும் சனியும் சேர்ந்திருந்தால் வயோதிகம் வாய்ந்த மனைவியோடு கூடியவனுகவும், யானைகளையும் குதிரைகளையும் காப்பாற்றுகின்றவனுகவும், கெட்ட சுபாவமுள்ளவனுகவும், எல்லாருக்கும் அதீனனுகவும், பணமில்லாதவனுகவும், கள்ளபுருடனின் புத்திரனுகவும் இருப்பான்.

சு. 13. செவ்வாயும் புதனும் சேர்ந்திருந்தால் ஸ்திரீகளுக்குப் பிரியமில்லாதவனுகவும், ஆனல் துஷ்ட ஸ்திரீகளுக்கும் விதவைகளுக்கும் பிரியமுள்ளவனுகவும், கொஞ்சம் தனம் மாத்திரம் உள்ளவனுகவும், சுவர்ணம் இரும்பு முதலானவைகளைக் கொண்டு தொழில் செய்கின்றவனுகவும், ஔஷதங்களைச் செய்கின்றவனுகவும், அதைக் கிரயம் செய்வதில் சாமர்த்தியவானுகவும் இருப்பான்.

சு. 14. செவ்வாயும் குருவும் சேர்ந்திருந்தால் சிற்ப வித்தையிலும் வேதத்திலும் சாஸ்திரத்திலும் அறிவுள்ளவனுகவும், தாரணு புத்தியுள்ளவனுகவும், வாக்கு சாமர்த்திய முள்ளவனுகவும், புத்திமானுகவும் அஸ்திரப் பிரயோகத்தில் பிரீதியுடையவனுகவும், பிரதானியாகவும் இருப்பான்.

சு. 15. செவ்வாயும் சுக்கிரனும் சேர்ந்திருந்தால் பூஜ்ஜியனுகவும், சங்கத் தலைவனுகவும், கணித சாஸ்திரத்தை அறிகின்றவனுகவும், பரஸ்திரீகளை அடைகின்றவனுகவும், துர்க்குண முள்ளவனுகவும், சூது விளையாடுகின்றவனுகவும், பொய் பேசுகின்றவனுகவும், கபட தந்திரமுள்ளவனுகவும் இருப்பான்.

சு. 16. செவ்வாயும் சனியும் சேர்ந்திருந்தால் தாது விஷயங்களாகிய கர்மங்களிலும் இந்திர ஜாலவித்தையிலும் மோஷணத் தொழிலிலும் (திருட்டுத் தொழில்) சாமர்த்திய முள்ளவனுகவும், மிகவும் வஞ்சன சீலனுகவும், தர்ம மில்லாதவனுகவும், விஷவித்தையைக் கொண்டு அல்லது விஷப்பிரயோகத்தாலும் ஆயுதப் பிரயோகத்தாலும் தனலாபம் அடைந்தவனுகவும், கலகப்பிரியனுகவும் இருப்பான்.

சு. 17. புதனும் குருவும் சேர்ந்திருந்தால் நடனம் கீதம் முதலாகிய நிருத்தப் பிரயோகத்தில் நிபுணனுகவும், அறிவுள்ளவனுகவும், சங்கீத சாஸ்திரத்தில் பழக்க முள்ளவனுகவும், புத்திமானுகவும், சுகமுள்ளவனுகவும் இருப்பான்.

சு. 18. புதனும் சுக்கிரனும் சேர்ந்திருந்தால் மிகவும் தனமுள்ளவனாகவும், நீதி சாஸ்திரம் அறிந்தவனாகவும், பலதாரத்திலுள்ள சித்திர வேலைகளைச் செய்கின்றவனாகவும், வேதம் அறிந்தவனாகவும், நல்ல வாக்குள்ளவனாகவும், சங்கீதத்தை அறிகின்றவனாகவும், ஹாஸ்யரசத்தில் பிரியமுள்ளவனாகவும், சுகந்த திரவியங்களிலும் புஷ்பமாலைகளிலும் பிரீதியுள்ளவனாகவும் இருப்பான்.

சு. 19. புதனும் சனியும் சேர்ந்திருந்தால் குணவானாகவும், டாம்பீகனாகவும், மிகவும் வஞ்சிக்கின்ற சுபாவமுள்ளவனாகவும், சத்கவியாகவும், சாஸ்திரீயங்களாயும் லௌகிகங்களாயும் உள்ள வியாபாரங்களை மீறுகின்ற சீலமுள்ளவனாகவும், நிபுணனாகவும், நல்ல வாக்குள்ளவனாகவும் இருப்பான்.

சு. 20. குருவும் சுக்கிரனும் சேர்ந்திருந்தால் வித்தைகளினால் வாதப் பிரதிவாதங்களைச் செய்கின்றவனாகவும், மேன்மையான தர்மங்களைக் காப்பாற்றுகின்றவனாகவும், மரியாதையோடு கூடியவனாகவும், சிறந்த மனையாளோடும் தனத்தோடும் சௌர்யத்தோடும் உதாரத்தோடும் கூடிய அநேக குணங்களையுடையவனாகவும் இருப்பான்.

சு. 21. குருவும் சனியும் சேர்ந்திருந்தால் சூரனாகவும், தனசம்விருத்தியுடையவனாகவும், நகரம் தன் சுற்றத்தார் சபை கிராமம் சங்கம் இவைகளுக்குத் தலைவனாகவும், மிகுந்த சுகியாகவும், யஜஸு. உள்ளவனாகவும் இருப்பான்.

சு. 22. சுக்கிரனும் சனியும் சேர்ந்திருந்தால் மரங்களையறுத்துத் தொழில் செய்யும் வியாபாரத்தில் சமர்த்தனாகவும், க்ஷௌரகர்மத்தைச் செய்கின்றவனாகவும், சித்திரம் எழுதுவதில் நிபுணனாகவும், கல்பணியில் பழக்கமுள்ளவனாகவும், மண்சம்பந்தமான வேலை செய்பவனாகவும், மல்யுத்தத்தில் சமர்த்தனாகவும், சஞ்சாரியாகவும், பசுக்கூட்டங்களை ரக்ஷிக்கின்றவனாகவும் இருப்பான்.

சு. 23. துவிக்கிரக யோகங்களில் சூரியாதி கிரகங்கள் பலவந்தர்களாகிப் பரஸ்பரவர்க்க பந்தத்தோடு கூடியிருந்தால் மேற்கூறப்பட்ட பலன்களைப் பூர்ணமாகவே கொடுப்பார்கள். அவர்கள் பலஹீனர்களாகி இராகு கேது முதலியவர் சம்பந்தத்தோடு இருந்தால் அந்தப் பலன்கள் குறைவாகவோ அல்லது வேறு விதத்திலோ சம்பவிக்கும்படி செய்வார்கள்.

பதினைந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

# பதினெருவது அத்தியாயம்.

## திரிக்கிரகயோக பலம்.

இந்த அத்தியாயத்தில் ஏழு கிரகங்களுள் மூன்று கிரகங்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருக்குங்கால் விளையும் பலனைச் சொல்லுகின்றார்.

சு. 1. சூரியன் சந்திரன் செவ்வாய் இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருக்கும்போது பிறந்தவன் லஜ்ஜையில்லாதவனும், பாபகர்மங்களில் பிரியமுள்ளவனும், பல்வகை யந்திரங்களை உண்டாக்கும் சாமர்த்தியம் உள்ளவனும், மாரணகர்மங்களினால் சத்துருக்களை நாசம் செய்யும் திறமையுள்ளவனும், கல்பணி முதலாய கர்மங்களைச் செய்கின்றதில் மிகவும் சாமர்த்தியம் வாய்ந்தவனும் ஆவன்.

சு. 2. சூரியன் சந்திரன் புதன் இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் தேஜசு உள்ளவனாய், புத்திசாமர்த்திய முள்ளவனாய், சாஸ்திரங்களிலும் கலா வித்தைகளிலும் சாராயம் முதலிய லாகிரி வஸ்துக்கள் சாப்பிடுவதிலும் பிரியமுள்ளவனாய், ராஜாவினுடைய செய்கையைச் செய்கின்றவனாய்த் தீரனாய் இருப்பான்.

சு. 3. சூரியன் சந்திரன் குரு இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருப்பின் : அதிக கோபமுள்ளவனாகவும், கபட கிருத்தியங்களில் சாமர்த்தியனாகவும், பிறரைச் சேவித்து வசீகரிக்கத்தக்க திறமையுள்ளவனாகவும், விதேச சஞ்சாரத்தில் சந்தோஷமுள்ளவனாகவும், தாரணா புத்தியுள்ளவனாகவும், ஸ்திரபுத்தியுடையவனாகவும் இருப்பான்.

சு. 4. சூரியன் சந்திரன் சுக்கிரன் இவர்கள் ஒருமித்து ஒரு ராசியிலிருப்பின் பிறர் திரவியத்தைக் கைக்கொள்ளுவதில் சமர்த்தனாகவும், பரஸ்திரீகளை அடைகின்றவனாகவும், சாஸ்திரங்களில் நிபுணனாகவும் இருப்பான்.

சு. 5. சூரியன் சந்திரன் சனி இவர்கள்கூடி ஒருராசியில் இருந்தால் காம சம்பந்தமாகவோ காமசாஸ்திர சம்பந்தமாகவோ உள்ள விவாதத்தில், திறமையுடையவனாகவும், அறிவில்லாதவனாகவும், அன்னியர்களுடைய ஆதீனத்தில் ஜீவிக்கின்றவனாகவும், தரித்திரனாகவும் இருப்பான்.

சு. 6. சூரியன் செவ்வாய் புதன் இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருப்பின் பிரசித்தனாகவும், மல்யுத்தத்தைச் செய்கின்றவனாகவும், விசாரமில்லாது இருக்கின்றவனாகவும், குரூரனாகவும், லஜ்ஜையில்லாதவனாகவும், சம்பத்து மனைவி புத்திரன் இவைகள் இல்லாதவனாகவும் இருப்பான்.

சு. 7. சூரியன் செவ்வாய் குரு இவர்களொருமித்து ஒரு ராசியிலிருந்தால் வாக்கு சாமர்த்தியமுடையவனாகவும், அதிகமான சம்பத்துக்களுடையவனாகவும், ராஜாவிற்கு மந்திரியாகவோ சேனாநாயகனாகவோ இருக்கத்தக்கவனாகவும், சத்தியமான வார்த்தையைப் பேசுகின்றவனாகவும், மிகவும் குரூரனாகவும் இருப்பான்.

சு. 8. சூரியன் செவ்வாய் சுக்கிரன் இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியில் இருந்தால் கண்ரோகமுள்ளவனாகவும், குலசிரேஷ்டனாகவும், சௌபாக்கிய யுக்தனாகவும், வாக்கு சல்லாபத்தோடு கூடினவனாகவும், தனம் முதலிய சம்பத்துக்கள் உடையவனாகவும் இருப்பான்.

சு. 9. சூரியன் செவ்வாய் சனி இவர்கள் ஒன்று கூடி ஒரு ராசியில் இருந்தால் அங்கக் குறைவுள்ளவனும், தனமில்லாதவனும், எப்போதும் வியாதியால் இம்சைப்படுகின்றவனும், பந்துக்கள் இல்லாதவனும், மிகவும் அறிவில்லாதவனுமாவன்.

சு. 10. சூரியன் புதன் குரு இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் நேத்திர ரோகமுள்ளவனும், அதிகமான சம்பத்தையுடையவனும், சாஸ்திரங்களிலும் கலாவித்தைகளிலும் கத்திய பத்தியங்களாகிய காவியங்களிலும் சபையிலும் சிற்பவேலைகளிலும் நிபுணத்தன்மையுள்ளவனும், எழுத்து வேலைகளிலும் எழுதுவதிலும் சமர்த்தனும் ஆவன்.

சு. 11. சூரியன் புதன் சுக்கிரன் இவர்கள் ஒருமித்து ஒரு ராசியிலிருப்பின் மிகவும் துன்பமுள்ளவனாகவும், அதிகம் நிந்திக்கத்தக்க வார்த்தைகளைப் பேசுகின்றவனாகவும், பல திக்குகளிலும் சஞ்சாரம் செய்பவனாகவும், குருக்கள்மாரோடு வேறுபட்டவனாகவும், ஸ்திரீ நிமித்தம் துக்கிக்கின்றவனாகவும் இருப்பான்.

சு. 12. சூரியன் புதன் சனி இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் நபும்சகத் தன்மையுள்ளவனாகவும், (அஃதாவது புருஷனாயின் பௌருஷ மில்லாதவனாகவும், ஸ்திரீயாயின் ஸ்திரீ தன்மையில்லாதவளாகவும்) எல்லோருக்கும் விரோதியாகவும், எல்லோராலும்

ஜெயிக்கப் படுகின்றவனாகவும், பந்துக்களால் தள்ளிவிடப்பட்டவனாக வும் இருப்பான்.

சு. 13. சூரியன் குரு சுக்கிரன் இவர்கள் ஒரு ராசியில் ஒன்று சேர்ந்திருப்பின் நேத்திரத்தில் சக்தியில்லாதவனாகவும், சூரனாகவும், அறிவுள்ளவனாகவும், தரித்திரனாகவும், ராஜாவுக்கு மந்திரியாகவும், பிறர் காரியங்களில் பிரியமுள்ளவனாகவும் இருப்பான்.

சு. 14. சூரியன் குரு சனி இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் சமமில்லாத சரீரத்தை யுடையவனாகவும், பூஜிக்கத்தக்க யோக்கிய முடையவனாகவும், சொந்த ஜனங்களுக்கு விரோதியாகவும், நல்ல மனைவியும் புத்திரனும் பந்துக்களு முள்ளவனாகவும், ராஜப் பிரியனாகவும், பயமில்லாதவனாகவும் இருப்பான்.

சு. 15. சூரியன் சுக்கிரன் சனி இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் சத்துருக்களின் பயத்தால் பீடிக்கப்பட்டவனாகவும், மானமில்லாதவனாகவும், கலாவித்தைகள் காவியங்கள் இவைகளில் ஞானமில்லாதவனாகவும், நிந்திய சரிதனாகவும், குஷ்டரோகியாகவும் இருப்பான்.

சு. 16. சந்திரனும் செவ்வாயும் புதனும் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் பாபத்தொழிலைச் செய்கின்றவனாகவும், நீசர்களுடைய ஆசாரம் ஆச்ரயிக்கின்றவனாகவும், பந்துக்களும் சொந்த ஜனங்களுமில்லாதவனாகவும், ஆஜீவியாகவும் இருப்பான்.

ஆஜீவி என்பதற்கு ஏகதண்டிகள் என்பது பொருள். இவர்கள் பரிவ்ராஜகர்களில் ஒருவகையார். இதனை மேல் பரிவ்ரஜ்யாத்தியாயத்தில் தெளிவாய்க் கூறுவோம்.

சு. 17. சந்திரன் செவ்வாய் குரு இவர்கள் ஒருமித்து ஒரு ராசியிலிருந்தால் விரணமான சரீரத்தோடு கூடியவனும், ஸ்திரீலோலனும், கள்ளனும், அழகுள்ளவனும், ஸ்திரீகளுக்குச் சம்மத முள்ளவனும், அதிகக் கடினமான கோபத்தோடு கூடினவனும் ஆவன்.

சு. 18. சந்திரன் செவ்வாய் சுக்கிரன் இவர்கள் ஒருமித்து ஒரு ராசியிலிருந்தால் எப்பொழுதும் துச்சீலமுள்ள தாயையும் மனைவியையும் உடையவனாகவும், நிலைத்து ஓரிடத்திலும் இருக்காதவனாகவும், அல்லது சஞ்சாரியாகவும், குளிர்ச்சியை யுத்தேசித்து அதிகபயமுள்ளவனாகவும் (குளிர்தாங்காதவன்) இருப்பான்.

சு. 19. சந்திரன் செவ்வாய் சனி இவர்கள் சேர்ந்து ஒருராசியிலிருப்பின் பாலியத்திலேயே தாயைப் பறிகொடுத்தவனும், சூரா

னும், அதமனும், அல்பனும், விஷம சீலனும், ஜனங்களால் துவேஷிக்கப்படுகின்றவனும் ஆவன்.

சு. 20. சந்திரன் புதன் குரு இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் தனவானும், சமர்த்தனும், அல்லது ஆரோக்கியமுள்ளவனும், சொல்விற்பன்னனும், தேஜசுள்ளவனும், பிரசித்திமானும், வலிதான கீர்த்தியை உடையவனும், அதிக புத்திரர்களும் சகோதரர்களும் பந்துக்களுமுள்ளவனும் ஆவன்.

சு. 21. சந்திரன் புதன் சுக்கிரன் இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் வித்தியாப்பியாசத்தினால், நல்ல புத்தியுடையவனாயிருந்த போதிலும் நீசர்களைப்போல் ஆசாரத்தை அனுஷ்டிக்கின்றவனாகவும், பொறாமையுள்ள(அஃதாவது பிறருடைய உயர்வை சகிக்காதவன்)வனாகவும், தன விஷயத்தில் அதிக பேராசையுள்ளவனாகவும் இருப்பான்.

சு. 22. சந்திரன் புதன் சனி இவர்களொருமித்து ஒரு ராசியிலிருந்தால் ஸ்வாதந்திரியமில்லாதவனாகவும், அங்கக்குறைவுள்ளவனாகவும், வித்வானாகவும், வாக்கு சாமர்த்தியமுள்ளவனாகவும், அதிகம் பூஜிதனாகவும், ராஜாவாகவோ ராஜசமானனாகவோ இருப்பவனாகவும் இருப்பான்.

சு. 23. சந்திரன் குரு சுக்கிரன் இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் பதிவிரதையான தாயையுடையவனாகவும், அறிவுள்ளவனாகவும், கலாவித்தைகளில் சமர்த்தனாகவும், அதிக சாஸ்திரங்களில் பழக்கமுள்ளவனாகவும், சஜ்ஜன சுவபாவமுள்ளவனாகவும், சீலனாகவும் இருப்பான்.

சு. 24. சந்திரன் குரு சனி இவர்கள் ஒருமித்து ஒரு ராசியிலிருந்தால் சாஸ்திரங்களுடைய சூட்சுமார்த்தத்தை அறிகின்றவனாகவும், விருத்த ஸ்திரீகளையடைகின்றவனாகவும், ரோகம் அல்லது கோபம் இல்லாதவனாகவும், கிராமம் சங்கம் இவைகளுக்குத் தலைவனாகவும் இருப்பான்.

சு. 25. சந்திரன் சுக்கிரன் சனி இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் புண்ணியத்தின் காரணமாக எழுத்துக்காரனாகவும், கிரந்தகர்த்தாவாகவும், இலட்சண வாசகங்களையுண்டாக்குகின்றவனாகவும், புரோகிதனாகவும்; தைவக்ஞனாகவும் இருப்பான்.

சு. 26. சேவ்வாய் புதன் குரு இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருப்பின் நல்ல கவியாகவும், ராஜாவாகவோ ராஜசமான

ஞகவோ ஆருபவனுகவும், குணவதியும் யௌவனமுமுடைய மனைவி யோடு கூடினவனுகவும், பிறருடைய காரியத்தில் மிகவும் உத்சாக முள்ளவனுகவும், சங்கீத சாஸ்திரத்தில் சமர்த்தனுகவும் இருப்பான்.

சு. 27. செவ்வாய் புதன் சுக்கிரன் இவர்கள் ஒருமித்து ஒரு ராசியிலிருந்தால் குலசிரேஷ்டமில்லாதவனுகவும், அங்கக்குறைவு உள்ளவனுகவும், சபலனுகவும், துஷ்டனுகவும், நன்ருகவும் அதிகமாக வும் பேசுந்திறமையுடையவனுகவும், உத்சாகசீலனுகவும் இருப்பான்.

சு. 28. செவ்வாய் புதன் சனி இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருப்பின் சேவகத் தொழிலைச் செய்கின்றவனுகவும், கருங் கண்ணனுகவும், வேறு தேசத்தில் வசிக்கின்றவனுகவும், முக ரோகியாகவும், பிரஹஸனத்தில் (நேரம் போக்கும் விநோதம் பலிதம் இவைகள்) பிரியமுள்ளவர்களுடன் ஒருமித்து விளையாடுகின்றவனுக வும் இருப்பான்.

சு. 29. செவ்வாய் குரு சுக்கிரன் இவர்கள் ஒருமித்து ஒரு ராசியிலிருந்தால் ராஜாவிற்கு இஷ்டனுகவும், நல்ல புத்திரர்களோடு கூடினவனுகவும், எப்போதும் அழகிய ஸதிரீகளோடு கூடி அதிக மான சுகங்களை அனுபவிக்கின்றவனுகவும், எல்லா ஜனங்களுக்கும் ஆனந்தங்களை யுண்டுபண்ணுகின்றவனுகவும் இருப்பான்.

சு. 30. செவ்வாய் குரு சனி இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் ராஜாவிற்குச் சமமானவனுகவும், தேகத்தில் விகார மான முறிவோ விரணமோ இவற்றில் ஏதாவதொன்று உள்ளவனுக வும், நீசர்களுடைய ஆசாரத்தைச் செய்கின்றவனுகவும், பந்துக்களால் நிந்திக்கப்பட்டவனுகவும், தயையில்லாதவனுகவும் இருப்பான்.

சு. 31. செவ்வாய் சுக்கிரன் சனி இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் பதிவிரதையாகாத அதமாவதமி புத்திரனுகவும், வியபிசாரிணியான பார்யையோடு கூடினவனுகவும், ஒரு சிறிதும் சுக மநுபவிக்காதவனுகவும், எப்பொழுதும் வேறு தேசங்களில் வசிக் கின்றவனுகவும் இருப்பான்.

சு. 32. புதன் குரு சுக்கிரன் இவர்கள் ஒருமித்து ஒரு ராசியில் இருந்தால் வளைவுள்ள சரீரத்தை யுடையவனுகவும், சகல சத்துருக் களையும் பிரயாசையின்றி ஜெயிக்கின்றவனுகவும், ராஜாவாகவோ ராஜ துல்லியனுகவோ ஆருபவனுகவும், சௌபாக்கியமுள்ளவனுகவும், வலி தான புகழோடு கூடினவனுகவும், சத்திய வாக்குள்ளவனுகவும் இருப்பான்.

சு. 33. புதன் குரு சனி இவர்கள் ஒருமித்து ஒரு ராசியிலிருப்பின் கிருகம் முதலான ஸ்தானங்கள் தனம் ஐசுவரியம் இவைகளுள்ளவனாகவும், வித்வானாகவும், அதிகமான போகங்களும் சுகங்களுமுள்ளவனாகவும், தனது மனைவியிடத்தில் மிகவும் பிரீதியுடையவனாகவும், தைரியம் உள்ளவனாகவும், மிகுந்த சுகியாகவும், நல்ல அதிருஷ்டமுள்ளவனாகவும் இருப்பான்.

சு. 34. புதன் சுக்கிரன் சனி இவர்கள் ஒன்றுகூடி ஒரு ராசியில் இருந்தால் அதிகமாகப் பேசுகின்றவனும், துர்க்குணமுள்ளவனும், பொய் பேசுகின்றவனும், பர ஸ்திரீகளிடத்தில் பிரீதியுடையவனும், விஷம ஸ்வபாவியாயும், கலா வித்தைகளில் நிபுணனும், சொந்த தேசத்திலேயே வசிக்கின்றவனும் இருப்பான்.

சு. 35. குரு சுக்கிரன் சனி இவர்கள் ஒன்றுகூடி ஓரிடத்திலிருக்குங் காலத்தில் ஜனித்தோன் நீச குலத்தில் பிறந்தவனாய் இருந்தாலும் எல்லாவிடங்களிலும் பரவி யிருக்கின்ற கீர்த்தியோடு கூடின அரசனாகவும், மிகவும் நல்ல சுபாவ குணமுள்ளவனாகவும் இருப்பான்.

இவ்விதமாகவே சூரியாதி கிரகங்களினால் உண்டாகும் மூன்று கிரக யோகங்களும் அவற்றின் பலன்களும் இந்த 35 சுலோகங்களால் கூறப்பட்டன. பலன் கூறும்பொழுது மற்றவைகளுக்கு உபதேசித்துள்ளனவும் ஆராய்ந்து நோக்கா நோக்கம்போல் பலாபலன் உரைத்திடுக.

சு. 36. சந்திரன் எல்லாப் பாபர்களோடும் சேர்ந்திருந்தால் மாதா இல்லாதவனென்றே சொல்ல வேண்டும். அவைபோல சூரியன் எல்லாப் பாபிகளோடும் கூடியிருந்தால் தகப்பன் இல்லாதவனென்றே சொல்ல வேண்டும். சூரியனோ சந்திரனோ எல்லாச் சுபர்களோடும் கூடியிருந்தால் மாதாவிற்கும் பிதாவிற்கும் சுப பலனே ஏற்படும். இந்தச் சந்திர சூரியர்களுக்குச் சில பாபிகளோடும் சில சுபர்களோடும் சேர்க்கை யுண்டானால் தாய் தந்தையர்களுக்கு அதிக அசுபத்தையும் அதிக சுபத்தையும் சொல்லக்கூடாது. எல்லாவற்றையும் பலாபலத்திற்குத் தக்கவாறு கவனித்துச் சொல்ல வேண்டும்.

சு. 37. அநேக சுபக்கிரகங்கள் சேர்ந்து ஒரு ராசியிலிருக்கும் போது ஜனித்தவன் சம்பத்தும், ஐசுவரியமும், யஜுஸும் உள்ளவனாகவும், ராஜ சமானனாகவும், பூமண்டலத்தில் ஒரு அலங்காரமான பிரதானியாகவும், சிரேஷ்டனாகவும் இருப்பான்.

சு. 38. மேற்சொன்ன விதமே எல்லாப் பாபர்களும் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருக்கும்போது ஜனித்தவன் மிகவும் துர்பகனாகவும், (தரித்திரன்) நீங்கொணாத தாரித்திரம் முதலிய துக்கத்தினால் பீடிக்கப்பட்டவனாகவும், விரூபனாகவும், விநயம் முதலிய குணங்களற்றவனாகவும் இருப்பான்.

எல்லாச் சுபர்களும் ஒருமித்து ஓரிடத்திலிருந்தால் அந்தப் பாவத்திற்குச் சுபமென்றும், பாபர் அவ்விதமிருப்பின் அசுபமென்றும் சாமான்யமாக அறிந்துகொள்ள வேண்டும்.

**பதினாறவது அத்தியாயம் முற்றிற்று.**

# பதினேழாவது அத்தியாயம்.

## சதுர்க்கிரக யோகபலம்.

இப்பொழுது இந்த அத்தியாயத்தில் சதுர்க்கிரக யோகத்தையும் அதனால் ஏற்படும் பலனையும் சொல்லுகிறார்.

சு. 1. சூரியன் சந்திரன் செவ்வாய் புதன் இவர்கள் ஒன்றுகூடி ஒரு ராசியிலிருந்தால் எழுத்துக்காரனாகவும், களவு செய்கின்றவனாக வும், தாராளமான வார்த்தை பேசுகின்றவனாகவும், ரோகியாகவும், கபடவித்தை (செப்படி இந்திர ஜாலம் மகேந்திர ஜாலம் இவை)களை விஸ்தரித்துக் காண்பிக்கின்றதில் சாமர்த்தியமுள்ளவனாகவும், அல்லது பிறரை ஏமாற்றி வஞ்சிப்பதில் சாமர்த்திய முள்ளவனாகவும் இருப்பான்.

சு. 2. சூரியன் சந்திரன் செவ்வாய் குரு இவர்கள் ஒருமித்து ஒரு ராசியிலிருந்தால் தனவானாகவும், ஸ்திரீகளுக்கு இஷ்டமில்லாதவனாகவும், தேஜசு உள்ளவனாகவும், நீதிமானாகவும், துக்கமில்லாதவனாகவும், கர்மங்களில் சாமர்த்தியம் உள்ளவனாகவும், நிபுணனாகவும் இருப்பான்.

சு. 3. சூரியன் சந்திரன் செவ்வாய் சுக்கிரன் இவர்கள் ஒருமித்து ஒருராசியிலிருப்பின் சிரேஷ்டர்களுக்கு உசிதமான வார்த்தையைப் பேசுகின்றவனாகவும், சுகமுள்ளவனாகவும், சமர்த்தனாகவும், தனத்தைச் சம்பாதிக்கிறதில் உத்சாகமுள்ளவனாகவும், வித்தை புருஷசந்ததி களத்திரம் முதலியவைகளோடு கூடினவனாகவும் இருப்பான்.

சு. 4. சூரியன் சந்திரன் செவ்வாய் சனி இவர்கள் ஒன்றுகூடி ஒருராசியிலிருந்தால், சமமில்லாத சரீரத்தை (ஒவ்வொரு அங்கத்தின் பிரமாணங் குறைந்தும் கூடியுமிருக்கும்) யுடையவனாகவும், உயரம் குறைந்தவனாகவும், தாரித்திரனாகவும், யாசகம் செய்து சாப்பிடுகின்றவனாகவும், வித்தையில்லாதவனாகவும், எல்லாருக்கும் அதீனனாகவும் இருப்பான்.

சு. 5. சூரியன் சந்திரன் புதன் குரு இவர்கள் ஒன்றுகூடி ஒரு ராசியிலிருந்தால் சுவர்ணமயமான வேலைகளைச் செய்பவனாகவும், நீராடின கண்களை யுடையவனாகவும், சிற்பவேலைகளைச் செய்கின்ற

வனாகவும், தனவானாகவும், தீரனாகவும், ஆரோக்கியமுள்ள சரீரத்தை யுடையவனாகவும் இருப்பான்.

சு. 6. சூரியன் சந்திரன் புதன் சுக்கிரன் இவர்கள் ஒருமித்து ஒருராசியிலிருந்தால் அங்கக் குறைவு உள்ளவனாகவும், சௌபாக்கிய முள்ளவனாகவும், வாக்சாமர்த்தியம் உள்ளவனாகவும், நீளம் (உயரம்) குறைந்தவனாகவும், ராஜாவிற்குச் சம்மதமுள்ளவனாகவும் இருப்பான்.

சு. 7. சூரியன் சந்திரன் புதன் சனி இவர்கள் ஒன்று சேர்ந்து ஒருராசியிலிருந்தால், தாய்தந்தையர்களோடு வேறுபட்டவனாகவும், தனமும் சுகமுமில்லாதவனாகவும், எப்பொழுதும் சஞ்சரித்துக் கொண்டிருக்கின்றவனாகவும், பிச்சை எடுத்து (யாசித்து)ச் சாப்பிடு கின்றவனாகவும், உண்மையில்லாத வார்த்தை பேசுகின்றவனாகவும் இருப்பான்.

சு. 8. சூரியன் சந்திரன் குரு சுக்கிரன் இவர்கள் ஒருமித்து ஒரு ராசியிலிருப்பின் ஜலாசயங்கள் மிருகங்களுள்ள காடுகள் இவைகளில் ஆதிபத்தியம் வகிக்கின்றவனாகவும், சுகத்தோடு கூடினவனாகவும், ராஜ பூச்சியனாகவும், நிபுணத்தன்மை யுள்ளவனாகவும் இருப்பான்.

சு. 9. சூரியன் சந்திரன் குரு சனி இவர்கள் ஒன்றுகூடி ஒரு ராசியிலிருந்தால் நேத்திரரோக முடையவனாகவும், கூர்மையுடைய வனாகவும், அதிக புத்திரர்களும் தனமும் உள்ளவனாகவும், சிரேஷ்ட முள்ள ஸ்திரீகளையுடையவனாகவும், சௌபாக்கிய முள்ளவனாகவும் இருப்பான்.

சு. 10. சூரியன் சந்திரன் சுக்கிரன் சனி இவர்கள் ஒன்றுசேர்ந்து ஒருராசியிலிருந்தால் ஸ்திரீகளைப்போன்ற நடவடிக்கை யுள்ளவனாக வும், முன்னால் நடக்கின்றவனாகவும், மிகவும் பலமில்லாத சரீரத்தை யுடையவனாகவும், எல்லாவிடத்திலும் பயமுள்ளவனாகவும் இருப்பான்.

சு. 11. சூரியன் செவ்வாய் புதன் குரு இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் சூரனாகவும், சூத்திரங்களை (பாணினீய சூத்தி ரம் முதலியவற்றைப் போன்ற விஷயங்களைச் சங்கிரகிக்கின்ற வாக் கியங்களை) உண்டாக்குகின்றவனாகவும், மனையாளும் தனமும் இல் லாதவனாகவும், மிகவும் துக்க மநுபவிக்கின்றவனாகவும், தேச சஞ்சா ரம் செய்கின்றவனாகவும் இருப்பான்.

சு. 12. சூரியன் செவ்வாய் புதன் சுக்கிரன் இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியில் இருந்தால் அப்போது பிறந்தவன் பரஸ்திரீகளி டத்தில் பிரியமுள்ளவனாகவும், திருடுகின்றவனாகவும், ஒற்றுமையற்ற

அவயவங்கள் உள்ள (ஒன்று போலில்லாத) வனாகவும், துர்ச்சன சுபாவ முள்ளவனாகவும், பாரக்கிரம மில்லாதவனாகவும் இருப்பான்.

சு. 13. சூரியன் செவ்வாய் புதன் சனி இவர்கள் ஒன்றுசேர்ந்து ஒரு ராசியில் இருந்தால் யுத்தம் செய்கின்றவனாகவும், வித்வானாக வும், குரூரனாகவும், நீசர்களைப்போன்ற நடவடிக்கைகளை யுடையவனாகவும், கவிகளில் முக்கியனாகவும், ராஜாவோ அல்லது மந்திரியாகவோ இருக்கத்தக்கவனாகவும் இருப்பான்.

சு. 14. சூரியன் செவ்வாய் குரு சுக்கிரன் இவர்கள் ஒன்றுசேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் சௌபாக்கிய முள்ளவனாகவும், லோகத்தில் எல்லோராலும் பூசிக்கப்பட்டவனாகவும், தனவானாகவும், ராஜாவிற்குச் சம்மத முள்ளவனாகவும், மிகவும் பிரசித்தனாகவும், நீதி சாஸ்திரத்தின்படி நடக்கின்றவனாகவும் இருப்பான்.

சு. 15. சூரியன் செவ்வாய் குரு சனி இவர்கள் ஒன்றுகூடி ஒரு ராசியிலிருந்தால் உன்மத்தம் (வெறி கவன மின்மை) உள்ளவனாகவும், சத்சங்கத்தால் வெகுமானிக்கப்படும் யோக்கியதையை யுடையவனாகவும், எல்லாக் காரியங்களையும் தன்னிஷ்டம்போல் சாதிக்கின்றவனாகவும், எப்போதும் பந்துக்களோடும் சிநேகிதர்களோடும் சேர்ந்திருக்கின்றவனாகவும், ராஜாவிற்கு இஷ்டமுள்ளவனாகவும் இருப்பான்.

சு. 16. சூரியன் செவ்வாய் சுக்கிரன் சனி இவர்கள் ஒன்றுசேர்ந்து ஒருராசியிலிருந்தால் அங்கக் குறைவுள்ளவனாகவும், நீச நடவடிக்கைகளோடு கூடினவனாகவும், இரண்டு கண்களும் ஒன்றுபோலில்லாமலிருப்பவனாகவும், பந்துக்களால் விரோதத்தை அடைபவனாகவும், ஆரம்பிக்கின்ற எல்லாக் காரியங்களிலும் தோல்வியடைகின்றவனாகவும் இருப்பான்.

சு. 17. சூரியன் புதன் குரு சுக்கிரன் இவர்கள் ஒன்றுகூடி ஒரு ராசியிலிருந்தால் தனவானாகவும், அதிக சுகம் அநுபவிக்கின்றவனாகவும், உத்கிருஷ்டனாகவும், விசாரிக்கின்ற காரியங்களை இஷ்டம்போல் சாதிக்கின்றவனாகவும், பந்துக்களுள்ளவனாகவும் இருப்பான்.

சு. 18. சூரியன் புதன் குரு சனி இவர்கள் ஒருமித்து ஒருராசியிலிருந்தால் புருஷத்தன்மை யில்லாதவனாகவும், அபிமானியாகவும், கலகப் பிரியனாகவும், சகோதரர்களுடையவனாகவும், உத்சாக மில்லாதவனாகவும் இருப்பான்.

சு. 19. சூரியன் புதன் சுக்கிரன் சனி இவர்கள் ஒன்றுகூடி ஒரு ராசியிலிருந்தால் அதிகமாகப் பேசுகின்றவனாகவும், சௌபாக்கிய

வானுகவும், அறிவுள்ளவனுகவும், மிகவும் சௌக்கியத்தோடு கூடினவனுகவும், பராக்கிரமமும் சுத்தமும் உள்ளவனுகவும், தீரனுகவும், பந்து சகாய முள்ளவனுகவும் இருப்பான்.

சு. 20. சூரியன் குரு சுக்கிரன் சனி இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் பேராசையுள்ளவனுகவும், கவியாகவும், பிரா தானியனுகவும், தொழிலாளர்கட்கும் நீச ஜனங்களுக்கும் நாதனுகவும், (எஜமான்) ராஜாவிற்கு இஷ்டனுகவும் இருப்பான்.

சு. 21. சந்திரன் சேவ்வாய் புதன் குரு இவர்கள் ஒருமித்து ஒரு ராசியிலிருந்தால் எல்லாச் சாஸ்திரங்களிலும் நிபுணனுகவும், மகோந்நதங்களாகிய மந்திரங்களில் அதிக சாமர்த்தியமுள்ளவனுகவும், மிகவும் புத்தி சத்தியுள்ளவனுகவும் இருப்பான்.

சு. 22. சந்திரன் சேவ்வாய் புதன் சுக்கிரன் இவர்கள் ஒன்றுகூடி ஒரு ராசியிலிருந்தால் கலகப் பிரியனுகவும், எப்போதும் உறங்கிக் கொண்டிருப்பவனுகவும், நீசனுகவும், வியபிசாரியான ஸ்திரீயின் கணவனுகவும், அதிக கஷ்டமுள்ளவனுகவும், பந்துக்களைத் துவேஷிக்கின்றவனுகவும், சுகமில்லாதவனுகவும் இருப்பான்.

சு. 23. சந்திரன் சேவ்வாய் புதன் சனி இவர்கள் ஒன்றுசேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் சூரனுகவும், மாதாவுக்கும் பிதாவுக்கும் ஹானி செய்யக்கூடியவனுகவும், துஷ்ட வம்சத்தில் ஜனித்தவனுகவும், அதிகமான புத்திரர்களும் மனைவிகளும் பந்துக்களும் உள்ளவனுகவும், சிரேஷ்டங்களாகிய கர்மங்களைச் செய்கின்றவனுகவும் இருப்பான்.

சு. 24. சந்திரன் சேவ்வாய் குரு சுக்கிரன் இவர்கள் ஒன்றுகூடி ஒரு ராசியிலிருந்தால் அங்க விகல்பமுள்ளவனுகவும், நல்ல மனைவியோடு கூடினவனுகவும், எல்லாத் துக்கங்களையும் சகிக்கின்றவனுகவும், மிகவும் அபிமானியாகவும், வித்வானுகவும், அதிக பந்துக்களும் சுகமுமுள்ளவனுகவும் இருப்பான்.

சு. 25. சந்திரன் சேவ்வாய் குரு சனி இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் காது கேட்காதவனுகவும், (செவிடன்) தனவானுகவும், சூரனுகவும், உன்மத்தமுள்ளவனுகவும், வாக்கு சாமர்த்தியமுள்ளவனுகவும், நிலைமையுள்ளவனுகவும், புத்திமானுகவும், உதார புத்தியுடையவனுகவும் இருப்பான்.

சு. 26. சந்திரன் சேவ்வாய் சுக்கிரன் சனி இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியில் இருந்தால் கற்பில்லாத ஸ்திரீயினுடைய புருஷனுகவும், பிரகாசமுள்ளவனுகவும், சர்ப்ப திருஷ்டி (பாம்பைப்

போன்ற கொடிய பார்வை) உள்ளவனாகவும், எல்லாச் சமயமும் சம்பிரமத்தோடு கூடினவனாகவும் இருப்பான்.

சு. 27. சந்திரன் புதன் குரு சுக்கிரன் இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் வித்வானாகவும், மாதா பிதாக்களில்லாதவனாகவும், நல்ல ரூபத்தை யுடையவனாகவும், சௌபாக்கியத்தோடு கூடினவனாகவும், தனவானாகவும், சத்துருக்களில்லாதவனாகவும் இருப்பான்.

சு. 28. சந்திரன் புதன் குரு சனி இவர்கள் ஒருமித்து ஒரு ராசியிலிருந்தால் கிரமம்போல் தர்மங்களைச் செய்வதில் மிகவும் யசஸ் உடையவனாகவும், சிரேஷ்டனாகவும், தேஜசு உள்ளவனாகவும், பந்துக்களுக்குப் பிரியமுள்ளவனாகவும், புத்திமானாகவும், ராஜாவுக்கு மந்திரியாகவும், கவி சிரேஷ்டனாகவும் இருப்பான்.

சு. 29. சந்திரன் புதன் சுக்கிரன் சனி இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் அந்நிய ஸ்திரீகளை அடைகின்றவனாகவும், கெட்ட நடத்தையுள்ள மனையாளை யுடையவனாகவும், பந்துக்கள் இல்லாதவனாகவும், அறிவுள்ளவனாகவும், ஜனங்களால் துவேஷிக்கப் படுகின்றவனாகவும் இருப்பான்.

சு. 30. சந்திரன் குரு சுக்கிரன் சனி இவர்கள் ஒன்றுகூடி ஒரு ராசியில் இருந்தால் பிறந்த சிலநாளில் தாயை இழந்தவனும், சௌபாக்கியம் தோலில் தோஷம் (சொறி சிரங்கு கஷ்டம்) மீளாத் துக்கம் ஓயாத சஞ்சாரம் அதிகமாகப் பேசுந்தன்மை சத்ய நிஷ்டம் ஆகிய இவைகளை யுடையவனும் இருப்பான்.

சு. 31. செவ்வாய் புதன் குரு சுக்கிரன் இவர்கள் ஒன்று கூடி ஒரு ராசியிலிருந்தால் ஸ்திரீகளோடு கலகம் செய்கின்றவனாகவும், தனவானாகவும், லோகத்தில் பூஜ்யனாகவும், நல்ல சுபாவத்தோடு கூடினவனாகவும், சரீரத்தில் ரோகமில்லாதவனாகவும் இருப்பான்.

சு. 32. செவ்வாய் புதன் குரு சனி இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியில் இருந்தால் சூரனாகவும், வித்வானாகவும், வாக்கு சாமர்த்தியமுள்ளவனாகவும், தனமில்லாதவனாகவும், சத்தியமும் சுத்தமும் உள்ளவனாகவும், நன்கு பேசுகின்றவனாகவும், சுகம் துக்கம் முதலானவைகளைச் சகிக்கின்றவனாகவும், புத்திமானாகவும் இருப்பான்.

சு. 33. செவ்வாய் புதன் சுக்கிரன் சனி இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியில் இருந்தால் மல் யுத்தம் செய்பவனாகவும், பிறரால் வளர்க்கப்பட்டவனாகவும், திரண்ட பலமுள்ள அவயவங்களையுடையவனாகவும், யுத்தத்தின்கண் அகங்காரமுள்ளவனாகவும், பிரசித்தனாக

வும், நாய்களோடு சேர்ந்து விளையாடுபவனாகவும் (வேட்டையாடு பவன்) இருப்பான்.

சு. 34. செவ்வாய் குரு சுக்கிரன் சனி இவர்கள் ஒன்றுசேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் தேஜசு பிரதாபம் உள்ளவனாகவும், தனவானாகவும், ஸ்திரீகளிடத்தில் அதிகமான ஆக்ரகமுள்ளவனாகவும், சாகச கர்மங்களைச் செய்கின்றவனாகவும், சபலனாகவும், துர்க்குணமுள்ளவனாகவும் இருப்பான்.

சு. 35. புதன் குரு சுக்கிரன் சனி இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் தாரணாபுத்தியுள்ளவனாகவும், சிரார்த்தப் பிரியனாகவும், (அஃதாவது சிரார்த்தக்காரர்கள் வீட்டில் உணவருந்தும் பிரியம்) ஸ்திரீகளிடத்தில் மிகவும் அன்புள்ளவனாகவும், சுவாதீனமுள்ள வேலையாட்களையுடையவனாகவும் இருப்பான்.

பதினேழாவது அத்தியாயம் முற்றிற்று.

# பதினெட்டாவது அத்தியாயம்.

## * பஞ்சக்கிரக யோக பலம்.

இப்போழுது இந்த அத்தியாயத்தில் சூரியன் முதலாகிய ஏழு கிரகங்களில் ஐந்து கிரகங்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருப்பதினு லுண்டாகும் பலன்களைச் சொல்லுகின்றார்.

சு. 1. சூரியன் சந்திரன் சேவ்வாய் புதன் குரு இவர் கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் எப்பொழுதும் துக்கிக் கின்றவனுகவும், அதிகமான காரியங்களைச் செய்கின்றவனுகவும், மனைவியை விட்டுப் பிரிந்ததினால் எப்போதும் பீடிக்கப்பட்டவனுக வும் இருப்பான்.

---

* இந்நூலாசிரியர் துவிக்கிரக-திரிக்கிரக-சதுர்க்கிரக-பஞ்சக்கிரக-ஷட் கிரக யோகங்களின் பலன்களைப் பூர்வாசிரியர்கள் கூறியவாறு கூறுகின்றே னெனத் தொடங்கி இலக்கினுதி பாவகம் பற்றிக் கூருது அப்பலன்களை உய்த்துணருமாறு பொதுவாய்க் கூறியுள்ளார்.

சந்திராபரண ஹோரை முதலிய முன்னூல்களுள் லக்கினுதிபாவம் பற்றிச் சிறப்பாகக் கூறும் பலன்களை ஆண்டு கண்டு கொள்க.

**இலக்கினுதிபாவத்தின் பஞ்சக்கிரக யோக பலன்கள் மட்டும் ஈண்டு காட்டப்படுகின்றன.**

**இலக்கினத்தில்** சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு இவர்கள் ஒன்று சேர்ந்திருந்தால் அதிக தனமுள்ளவனும், அநேக சாஸ்திரங்களில் விற்பத்தியுள்ளவனும், சத்ஜனப் பிரியனும், பிள்ளை சொற்படி கேட்கும் குணமுடையவனும் இருப்பான்.

**இரண்டாமிடத்தில்** சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு இவர்கள் ஒன்று சேர்ந்திருந்தால் கிலேசத்தை அடைந்தவனும், சூரத்தனம் வாய்ந்தவ னும், கர்வியாயும் அறிவில்லாதவனும், குறைந்த காத்திர முள்ளவனும் இருப்பான்.

**மூன்றமிடத்தில்** சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு இவர்கள் ஒன்று சேர்ந்திருந்தால் அதிக தனவந்தனும், பிள்ளைகளுடன் கூடினவனும், ரூபத்தில் சிறந்தவனும், ஸ்திரீகளுக்குப் பிரியமுள்ளவனும், நல்ல மன துடையவனும் இருப்பான்.

**நான்காமிடத்தில்** இருந்தால் கெட்ட எண்ணமுள்ளவனும், மர்மஸ்தா னங்களில் ரோகமுள்ளவனும், நன்றி கெட்டவனும், தொங்கும் உதடு உடையவனும், மீசை யில்லாதவனும் இருப்பான்.

சு. 2. சூரியன் சந்திரன் செவ்வாய் புதன் சுக்கிரன் இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் பிறருடைய காரியங்களைச் செய்வதில் பிரியமுள்ளவனாகவும், பந்துக்கள் சிநேகிதர்கள் முதலானவர்களால் பராக்கிரமம் இழக்கப்பெற்றவனாகவும், நபும்சகர்களோடு (பௌருஷமற்றவர்கள்) சிநேகம் செய்கின்றவனாகவும் இருப்பான்.

சு. 3. சூரியன் சந்திரன் செவ்வாய் புதன் சனி இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் அற்ப வாழ்நாள், பந்தனம், (காராக்கிரகம் = சிறைச்சாலை) தாரித்திரம், எவ்வித சௌக்கியமும், மனைவியும் புத்திரர்களும் சம்பத்துமில்லாமை முதலியன உடையோனாவான்.

சு. 4. சூரிய சந்திரன் செவ்வாய் குரு சுக்கிரன் இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் பிறவிக்குருடனாகவும், அதிகமான துக்கங்களை அனுபவிக்கின்றவனாகவும், தாய் தந்தையர்களால் உபேட்சிக்கப்பட்டவனாகவும், சங்கீதப் பிரியனாகவும் இருப்பான்.

---

**ஐந்தாமிடத்தில்** இருந்தால் குரூபியாயும், அழகில்லாத சரீரமுடையவனாயும், சந்தானமில்லாதவனாயும், அதிக தோஷமுள்ளவனாயும் இருப்பான்.

**ஆறாமிடத்தில்** இருந்தால் குரூபியாயும், விநயமில்லாதவனாயும், பிறரால் ஜெயிக்கப்பட்டவனாயும், பலரையும் வஞ்சிக்கின்றவனாயும் இருப்பான்.

**ஏழாமிடத்தில்** இருந்தால் அலியாயும், குரூபியாயும், கெட்ட புத்தியுள்ளவனாயும், தரித்திரத்தினால் பீடிக்கப்பட்டவனாயும், கடினமான சுபாவமுள்ளவனாயும் இருப்பான்.

**எட்டாமிடத்தில்** இருந்தால் தன தானிய சௌக்கிய முடையவனாயும், ஆசார சீலனாயும், சுருதிகளையும் தர்மங்களையும் அறிந்தவனாயும், தேவர் பிராமணர் குரு இவர்களைப் பூசிக்கின்றவனாயும் இருப்பான்.

**ஒன்பதாமிடத்தில்** இருந்தால் பிரதாபமுடையவனாயும், புத்தியில்லாதவனாயும், உக்கிரனாயும் இருப்பான்.

**பத்தாமிடத்தில்** இருந்தால் கீர்த்திமானாயும், நீதிவானாயும், நல்ல காத்திரமுடையவனாயும் இருப்பான்.

**பதினோராமிடத்தில்** இருந்தால் சீல குணமுள்ளவனாயும், உத்சாகம் நிறைந்தவனாயும், அதிக தனமுள்ளவனாயும் இருப்பான்.

**பன்னிரண்டாமிடத்தில்** இருந்தால் நல்ல வஸ்திரமில்லாதவனாயும், கம்பீரமில்லாதவனாயும், சத்துருவினால் பீடிக்கப்பட்டவனாயும் நிலையற்ற செயலுள்ளவனாயும் இருப்பான்.

இங்ஙனமே ஏனைய பஞ்சக்கிரக யோகங்களின் பலன்களையும் துவிக்கிரக முதலான மற்ற யோகங்களின் இலக்கினாதி பாவ பலன்களையும் கண்டுகொள்க

சு. 5. சூரியன் சந்திரன் செவ்வாய் குரு சனி இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் யுத்த சாமர்த்திய முள்ளவனாகவும், காரியங்களில் நிபுணத்துவ முள்ளவனாகவும், பிறர் திரவியத்தை அபகரிக்கின்றவனாகவும், அன்னியர்களைச் சங்கடப் படுத்துகின்றவனாகவும், பிசுன (துஷ்டன் உலோபன் கோளன்)னாக வும் இருப்பான்.

சு. 6. சூரியன் சந்திரன் செவ்வாய் சுக்கிரன் சனி இவர்கள் ஒன்று சேர்ந்து ஒருராசியிலிருப்பின் மானம் தனம் சுகம் முதலிய அநு பவங்களில்லாதவனாகவும், இழிவான நடவடிக்கையோடு கூடியவனாக வும், பரஸ்திரீகளைக் கருதுகின்றவனாகவும் இருப்பான்.

சு. 7. சூரியன் சந்திரன் புதன் குரு சுக்கிரன் இவர்கள் ஒன்று கூடி ஒரு ராசியிலிருந்தால் யந்திரங்களை உண்டாக்கக்கூடியவனாக வும், அதிகமான சம்பத்தை யுடையவனாகவும், ராஜாவினிடம் மந் திரத்துவம் அல்லது சேனாபதித்துவம் உள்ளவனாகவும், நல்ல புகழ் உடையவனாகவும், பிரசித்தியுடையவனாகவும் இருப்பான்.

சு. 8. சூரியன் சந்திரன் புதன் குரு சனி இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் பயங்கொண்டிருப்பவனாகவும், பந் துக்களால் உபேட்சிக்கப்பட்டவனாகவும், வெறி பிடித்தவனாகவும், அதிக கபட சாமர்த்தியமுள்ளவனாகவும், பயங்கரனாகவும், பரான் னத்தில் உபஜீவனம் செய்கின்றவனாகவும் இருப்பான்.

சு. 9. சூரியன் சந்திரன் புதன் சுக்கிரன் சனி இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால், உயரமான சரீரத்தை யுடையவனாக வும், ரோமங்கள் நிறைந்துள்ள சரீரமுடையவனாகவும், இறப்பதற்கு மிகவும் உற்சாகமுள்ளவனாகவும், சுகமும் சம்பத்தும் புத்திரனும் இல்லாதவனாகவும் இருப்பான்.

சு. 10. சூரியன் சந்திரன் குரு சுக்கிரன் சனி இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் நன்றாகப் பேசுபவனாகவும், இந்திர ஜாலவித்தையில் சமர்த்தனாகவும், ஸ்திரமில்லாத மனதுடையவனாக வும், ஸ்திரீகளிடத்தில் பிரியமுள்ளவனாகவும், புத்திமானாகவும், அதிக சத்துருக்களுள்ளவனாகவும், பயம் இல்லாதவனாகவும் இருப் பான்.

சு. 11. சூரியன் செவ்வாய் புதன் குரு சுக்கிரன் இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் காமமுள்ளவனாகவும், அதிக குதிரை களோடும் மனிதர்களோடும் கூடினவனாகவும், சேனா நாயகனாகவும்,

துக்கமில்லாதவனாகவும், ராஜாவிற்கு இஷ்டமுள்ளவனாகவும், அதிகம் அதிருஷ்டமுள்ளவனாகவும் இருப்பான்.

சு. 12. சூரியன் செவ்வாய் புதன் குரு சனி இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் துக்கம் முதலியவைகளால் சதா பீடிக்கப்பட்டவனாகவும், ரோகியாகவும், ஒவ்வொரு வீடுகளிலும் சென்று பிச்சை வாங்கி ஜீவிக்கின்றவனாகவும், கிழிந்ததும் அழுக்கடைந்ததுமான வஸ்திரத்தைத் தரிக்கின்றவனாகவும் இருப்பான்.

சு. 13. சந்திரன் செவ்வாய் புதன் சுக்கிரன் சனி இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் ரோகம் பந்தனம் வதம் இவைகளால் மிகவும் துக்கமடைந்தவனாகவும், வித்வானாகவும், ஜனங்களால் கிரமமாக வெகுமானிக்கப்பட்டவனாகவும், தனமில்லாதவனாகவும், அங்கக்குறைவு உள்ளவனாகவும் இருப்பான்.

சு. 14. சூரியன் செவ்வாய் புதன் சுக்கிரன் சனி இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் பலவிதமான ரோகங்களாலும் சத்துருக்களாலும் பாதிக்கப்பட்டவனாகவும், தனது கிருகத்திலிருந்தோ சுவதேசத்திலிருந்தோ குலமரியாதையிலிருந்தோ விலகினவனாகவும், எப்பொழுதும் துக்கியாகவும், மனது கலங்கிச் சுற்றிச் சஞ்சரிக்கின்றவனாகவும் இருப்பான்.

சு. 15. சூரியன் புதன் குரு சுக்கிரன் சனி இவர்கள் ஒன்று கூடி ஒரு ராசியிலிருந்தால் அநேக சாஸ்திரங்களை வாசித்து அதில் மிகவும் அறிவு ஏற்பட்டுள்ளவனாகவும், பந்துக்களுக்கு இஷ்டனாகவும், குரு ஜனங்களுக்குச் சம்மதமுள்ளவனாகவும், தர்மிஷ்டனாகவும், தயாசீலமுள்ளவனாகவும் ஆவான்.

சு. 16. சூரியன் செவ்வாய் குரு சுக்கிரன் சனி இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் ஜலயந்திரங்களைக் கண்டு பிடிப்பவனாயும், சுவர்ணம் வெள்ளி முதலியவைகளை நீற்றுகின்றவனாயும், அவைகளை உண்டாக்குகின்றவனாயும் (ரசவாதம் முதலியன) ரசதந்திரத்திலும் கிழத்தனம் மரணம் அற்றவர்களால் உபயோகிக்கின்ற ரசாயனங்களை (ஔடத விசேஷம்) உண்டாக்குகின்றதிலும் மிகவும் சாமர்த்தியமுள்ளவனாயும், இவ்வித கர்மங்களில் அதிக யஜசும் ஜனசம்மதமும் உள்ளவனாயும் இருப்பான்.

சு. 17. சந்திரன் செவ்வாய் புதன் குரு சுக்கிரன் இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் சத்சுபாவியாகவும், ஆரோக்கியமுள்ள சரீரமுடையவனாகவும், வித்தை தனம் சத்தியம் சுகம்

இவைகள் மிகுந்தவனாகவும், பந்துக்களுள்ளவனுக்வும், பந்துக்களுக்கு இஷ்டமுடையவனாகவும் இருப்பான்.

சு. 18. சந்திரன் சேவ்வாய் புதன் குரு சனி இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் திமிரம் என்னும் நேத்திரரோக முள்ளவனாகவும், தரித்திரத்தினால் எப்போதும் பரான்னத்தை யாசித்து ஜீவிக்கின்றவனாகவும், பந்துவர்க்கத்தை மலினப்படுத்து கின்றவனாகவும் இருப்பான்.

சு. 19. சந்திரன் சேவ்வாய் குரு சுக்கிரன் சனி இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியில் இருந்தால் மந்திரியாகவும், ராஜதுல்லியனாக வும், சங்கத்திற்கு நாயகனாகவும், எல்லா ஜனங்களாலும் பூஜிக்கப்படுப வனாகவும், யோக்கியனாகவும் இருப்பான்.

சு. 20. சந்திரன் சேவ்வாய் புதன் சுக்கிரன் சனி இவர்கள் ஒன்றுகூடி ஒரு ராசியில் இருந்தால் அதிகமான சத்துருக்களுள்ளவ னாகவும், பந்துக்களுக்குச் சகாயமுள்ளவனாகவும், பிறர்களினுடைய காரியத்தில் சகாயம் செய்கின்றவனாகவும், விஷமப்பிரகிருதியாகவும் மிகவும் மானமுள்ளவனாகவும் இருப்பான்.

சு. 21. சந்திரன் புதன் குரு சுக்கிரன் சனி இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் ராஜமந்திரியாயும், அல்லது அரச னுக்குப் பிரதிநிதியாயும், அல்லது அரசனுக்குச் சமமான மரியாதை யுள்ளவனாயும் வாழ்வன். ஜனசமூகத்திற்குத் தலைவனாயும், சகல சனங்களாலும் பூசிக்கப்பட்டவனாயும் இருப்பான்.

சு. 22. சேவ்வாய் புதன் குரு சுக்கிரன் சனி இவர்கள் ஒரு மித்து ஒரு ராசியிலிருந்தால் அரசர்களுக்கு இஷ்டமுள்ளவனாகவும் வெறிபிடித்தவனாகவும், பெருந்தூக்கம் தூங்குகின்றவனாகவும் ஒரு விதத்திலும் துக்கமில்லாதவனாகவும் தனஹீனனாகவும் நல்ல மன துடையவனாகவும் இருப்பான்.

சு. 23-24-25. இவ்வத்தியாயம் 25 சுலோகங்களென வரை யறுக்கப்பட்டுள்ளது. ஆனால் எமக்குக் கிடைத்த மூல ஏட்டில் மூன்று சுலோகங்கள் அதிக மிருத்தலின் அதன்படி மொழி பெயர்க் கப்பட்டுள்ளது.

விருத்தயவனாசாரியார் சந்திராபரண ஹோரையில் கூறியவாறு யாம் பஞ்சக்கிரக யோகங்களைக் கூறினோம் என்னும் முடிவுப் பொரு ளைக் கூறும் சுலோகத்தையும் சேர்த்து 25 என்னும் வரையரைக்குப் பொருத்தமெனக் காட்டுவர். இவர் 13-ஆம் சுலோகப் பொருளும்

20-ஆம் சுலோகப் பொருளும் வெவ்வேறெனக் கொள்ளும் கருத்துடையார்.

13-ம் சுலோகத்தில் கூறப்படும் யோகப்பலனே 20-ஆம் சுலோகத்திலும் விரித்துக் கூறப்பட்டுளதென்பதும், அது 13-ஆம் சுலோகத்தினை அடுத்து நிற்கவேண்டுவது, முறை பிறழ்ந்து 20-ஆம் எண்ணுமுறைக்கண் நின்றதென்பதும் எமது கருத்து. இவைகள் எல்லாம் தக்காரால் ஆராயத்தக்கன.

பதினெட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

# பத்தொன்பதாவது அத்தியாயம்.

## ஷட்கிரக யோகபலம்.

இந்த அத்தியாயத்தில் சூரியாதி ஏழு கிரகங்களில் ஆறு கிரகங்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருப்பதினாலுண்டாகும் பலனைக் கூறுகின்றார்.

சு. 1 சூரியன் சந்திரன் சேவ்வாய் புதன் குரு சுக்கிரன் இவர்கள் ஒன்றுசேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் வித்தையிலும் தனத்திலும் தர்மத்திலும் பிரிய உள்ளவனாகவும், அழிகிறவனாகவும், அதிகம் பேசுகின்றவனாகவும், நீச புத்தியுடையவனாகவும், இருப்பான்.

சு. 2. சூரியன் சந்திரன் சேவ்வாய் புதன் குரு சனி இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் தனங்களைக் கொடுக்கின்றவனாகவும், ஸ்திர சுபாவ மில்லாதவனாகவும், பிறர்காரியங்களுக்காக கட்டுப்படுகின்றவனாகவும், பரிசுத்த மனதுள்ளவனாகவும், யோகம் செய்வதை முன்னிட்டு ஜனமில்லாத விடத்தை நோக்குபவனாகவும் இருப்பான்.

சு. 3. சூரியன் சந்திரன் சேவ்வாய் புதன் சுக்கிரன் சனி இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் திருடனாகவும், பரஸ்திரீகளையடைகின்றவனாகவும், குஷ்டரோகியாகவும், சுவ ஜனங்களால் தள்ளப்பட்டவனாகவும், அறிவில்லாதவனாகவும் ஸ்தானத்திலிருந்து பெயர்ந்தவனாகவும், குழந்தை யில்லாதவனாகவும் இருப்பான்.

சு. 4. சூரியன் சந்திரன் சேவ்வாய் குரு சுக்கிரன் சனி இவர்கள் ஒருமித்து ஒரு ராசியிலிருப்பின் நீசனாகவும், பிறருடைய தொழிலில் பிரியமுள்ளவனாகவும், க்ஷய ரோகியாகவும், சுவாச காசரோகத்தினால் பீடிக்கப்பட்டனாகவும், பந்துக்களுக்கு நிந்தியனாகவும் இருப்பான்.

சு. 5. சூரியன் சந்திரன் புதன் குரு சுக்கிரன் சனி இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருப்பின் ராஜாவின் மந்திரியாகவும், சௌபாக்கிய முள்ளவனாகவும், பொறுமையுள்ளவனாகவும், துக்கங்களினால் பீடிக்கப்பட்டவனாகவும், மனைவி யுள்ளவனாகவும், தனமில்லாதவனாகவும் இருப்பான்.

சு. 6. சூரியன் சேவ்வாய் புதன் குரு சுக்கிரன் சனி இவர்கள் ஒன்று கூடி ஒருராசியிலிருந்தால் கங்கை முதலிய புண்ணிய தீர்த்

தங்களில் ஸ்நானம் முதலியவைகளைச் செய்கின்றவனாகவும், புத்திரர்களும் பொருளும் இல்லாதவனாகவும், காடு மலை இவைகளில் வசிக்கின்றவனாகவும் இருப்பான்.

சு. 7. சந்திரன் செவ்வாய் புதன் குரு சுக்கிரன் சனி இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் எப்போதும் சுத்தமாக உள்ளவனாகவும், பிரதாப சக்தியுள்ளவனாகவும், அதிகமான ஸ்திரீகளுடன் கூடி விளையாடுகின்றவனாகவும், ராஜாவின் மந்திரியாகவோ அல்லது இஷ்டனாகவோ ஆகின்றவனாகவும், பொருளும் புத்திரர்களும் சௌபாக்கியங்களும் உள்ளவனாகவும் இருப்பான்.

சு. 8. சூரியன் முதலிய ஏழு கிரகங்களில் ஐந்தோ அல்லது ஆறோ ஒருமித்து ஒரு ராசியிலிருந்தால் அப்போது ஜனிக்கின்றவன் தரித்திரனாகவும், அநேக விதமான துக்கங்களை அநுபவிக்கின்றவனாகவும், அறிவில்லாதவனாகவும் இருப்பனென்று பூர்வாசாரியர்கள் கூறுகின்றார்கள்.

சு. 9. 10. சூரியன் முதலான ஏழு கிரகங்களும் ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் அதற்குக் கோள யோகம் என்று பெயர். இந்த யோகத்தின் பலன் மேலே சொல்லப்போகும் நாபச யோகத்தில் தெளிவாய்க் கூறப்படும். இதன் விசேஷம் இங்கு சொல்லப்படுகின்றது. இந்த 7-கிரகங்களும் ஒன்று சேர்ந்து இலக்கினத்திலிருந்தால் அல்பாயுசு உடையவனும், கெட்டபுத்தியுடையவனும், தரித்திரனும், அன்னிய தேசத்தில் வசிக்கின்றவனும், இழிவான சிற்பத் தொழிலைச் செய்கின்றவனும், அதமனும், நிந்தை பேசுகிறவனும் இருப்பான். ஏழுகிரகங்களும் ஒருமித்து இவ்விதமே இரண்டாமிடத்திலிருந்தால் பொருளும் புத்தியும் நேத்திரமுமில்லாதவனாவான்.

சு. 11. ஏழுகிரகங்களும் ஒருமித்து மூன்றாமிடத்தில் இருந்தால் சகோதரர்களில்லாதவனும், துர்ப்புத்தியுள்ளவனும், காது கேளாதவனும் ஆவன். இவ்விதம் நான்காமிடத்திலிருந்தால் மாதாவும் பந்துக்களும் சுகமும் இல்லாதவனும் இருப்பான்.

சு. 12. ஏழுகிரகங்களும் கூடி ஐந்தாமிடத்திலிருந்தால் புத்திரர்களில்லாதவனும், உன்மாதபுத்தியுள்ளவனும் இருப்பான். இவ்விதம் ஆறுமிடத்திலிருந்தால் சத்துருக்களால் பீடிக்கப்பட்டவனும், அநேக ரோகங்கள் உள்ளவனும், உடம்பில் விரணதழும்பு உள்ளவனும் துக்கியாயும் இருப்பான்.

சு. 13. ஏழு கிரகங்கள் ஒருமித்து ஏழாமிடத்திலிருந்தால் மனைவிக்கும் அவள் சம்பந்தமான சுகாநுபவத்திற்கும் நாசம் உண்டாகும். இவ்விதமே எட்டாமிடத்திலிருந்தால் ஆயுளும் சுகமும் அன்னபாநாதி சாதனங்களும் கெடும்.

சு. 14. ஏழு கிரகங்களும் ஒன்றுகூடி ஒன்பதாமிடத்திலிருந்தால் குரு ஜனங்கள் இல்லாதவனாகவும், குருபத்தினியை அடைகின்றவனாகவும், தகப்பனை இழந்தவனாகவும் இருப்பான். இவ்விதமே பத்தாமிடத்திலிருந்தால் ஒரு தொழிலு மில்லாதவனாகவும், எல்லா ஜனங்களாலும் நிந்திக்கப்பட்டவனாகவும் இருப்பான்.

சு. 15. ஏழு கிரகங்கள் ஒன்று சேர்ந்து பதினோராமிடத்திலிருந்தால் அதிக தன முண்டாகு மென்றாலும் அந்த லாபத்திற்குமேல் அதிகமான பொருள் நாசத்தை அடைகின்றவனாகவும் இருப்பான். இவ்விதம் பன்னிரண்டாமிடத்திலிருந்தால் துர்மார்க்கங்களில் பிரவேசிக்கின்றவனாகவும், தரித்திரனாகவும், அதிக பாபியாகவும், நரகங்களை அநுபவிக்கின்றவனாகவும் இருப்பான்.

பத்தொன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

# இருபதாவது அத்தியாயம்.

## பிரவிரஜ்யா யோக லட்சணம்.

சு. 1. இந்த அத்தியாயத்தில் பிரவிரஜ்யா யோகத்தைக் கூறுகின்றார். நான்கு அல்லது அவற்றிற்கு அதிகமான கிரகங்கள் ஒருமித்து ஒரு ராசியிலிருப்பின் தபோவிருத்தியை அடைகின்றார்கள். ஆகையால், பூர்வாசாரியர்களால் விஸ்தாரமாகக் கூறப்பட்டுள்ள பிரவிரஜ்யா யோக லட்சணத்தை நான் இங்கு சவிஸ்தாரமாகச் சொல்லுகின்றேன்.

சு. 2. சூரியன் சந்திரன் செவ்வாய் குரு சுக்கிரன் ஆகிய இந்த ஐந்து கிரகங்களுமாவது, சூரியன் சந்திரன் செவ்வாய் புதன் ஆகிய இந்த நான்கு கிரகங்களுமாவது, சூரியன் செவ்வாய் புதன் சுக்கிரன் சனி ஆகிய இந்த ஐந்து கிரகங்களுமாவது ஒரு ராசியில் எந்தப் பாவத்தில் பலமுள்ளவர்களா யிருப்பினும் அப்போது ஜனித்த ஜாதகர்கள், லௌகிக வியாபாரங்களை விட்டு தபோ விருத்தி யுடையவராகின்றார்கள். (இதில் யோகம் மூன்று.)

சு. 3. சூரியன் சந்திரன் செவ்வாய் புதன் குரு ஆகிய இவ்வைந்து கிரகங்களுமாவது, சூரியன் சந்திரன் புதன் சனி ஆகிய இந்நான்கு கிரகங்களுமாவது, சூரியன் சந்திரன் செவ்வாய் சனி ஆகிய இந்நான்கு கிரகங்களுமாவது, ஒருமித்து ஒரு ராசியிலிருப்பின் குடும்பத்தையும் தனத்தையும் இழந்து சன்னியாசியாக சஞ்சரிக்கின்றவர்களாக ஆவார்கள். (இதில் யோகம் மூன்று.)

சு. 4. சூரியன் புதன் குரு சனி ஆகிய இந்நான்கு கிரகங்களாவது, சூரியன் செவ்வாய் புதன் குரு ஆகிய இந்நான்கு கிரகங்களாவது ஒருமித்து ஒரு ராசியிலிருந்தால் அப்போது ஜனிக்கும் ஜாதகன் தபசு செய்கின்றவனாய் இருப்பான். (இதில் யோகம் இரண்டு.)

சு. 5. சூரியன் செவ்வாய் சுக்கிரன் சனி ஆகிய நான்கு கிரகங்களாவது, சூரியன் செவ்வாய் குரு சனி ஆகிய நான்கு கிரகங்களாவது, சந்திரன் செவ்வாய் குரு சனி ஆகிய நான்கு கிரகங்களாவது பலமுள்ளவர்களாக ஒரு ராசியில் இருப்பின் தபசு செய்கின்றவர்களாய் இருப்பார்கள் ( இதில் யோகம் மூன்று.)

சு. 6. செவ்வாய் புதன் குரு சனி ஆகிய நான்கு கிரகங்களாவது, சூரியன் செவ்வாய் புதன் சுக்கிரன் சனி ஆகிய ஐந்து கிரகங்களாவது, சூரியன் சந்திரன் செவ்வாய் சுக்கிரன் சனி ஆகிய ஐந்து கிரகங்களாவது ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருப்பின் சாந்திராயணாதி விரதங்களை யநுஷ்டித்து தபசு செய்கின்றவர்களாயிருப்பார்கள். (இதில் யோகம் மூன்று.)

சு. 7. சூரியன் செவ்வாய் குரு சுக்கிரன் சனி ஆகிய ஐந்து கிரகங்களாவது, சந்திரன் செவ்வாய் புதன் குரு சனி ஆகிய ஐந்து கிரகங்களாவது, சந்திரன் செவ்வாய் புதன் சுக்கிரன் சனி ஆகிய ஐந்து கிரகங்களாவது ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருப்பின் காடுகளிலும் மலைகளிலும் சஞ்சரித்து தபசு செய்யும்படியான யோகமுண்டாகும். (இதில் யோகம் மூன்று.)

சு. 8. சூரியன் சந்திரன் செவ்வாய் புதன் குரு ஆகிய ஐந்து கிரகங்களாவது. சூரியன் சந்திரன் செவ்வாய் புதன் சுக்கிரன் ஆகிய ஐந்து கிரகங்களாவது ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் ஜாதகன் மௌன விருத்தியுடையவனும் தபசு செய்கின்றவனும் இருப்பான். (இதில் யோகம் இரண்டு.)

சு. 9. சூரியன சந்திரன் செவ்வாய் புதன் குரு சுக்கிரன் ஆகிய இந்த ஆறு கிரகங்களாவது, சூரியன் சந்திரன் செவ்வாய் புதன் குரு சனி ஆகிய இந்த ஆறு கிரகங்களாவது, சூரியன் சந்திரன் செவ்வாய் புதன் சுக்கிரன் ஆகிய இந்த ஐந்து கிரகங்களாவது ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருப்பன் சாந்திராயணாதி விருதங்களை அநுஷ்டித்துத் தபசு செய்கின்றவனாய் இருப்பான். (இதில் யோகம் மூன்று.)

சு. 10. சூரியன் சந்திரன் செவ்வாய் குரு சுக்கிரன் சனி ஆகிய இந்த ஆறு கிரகங்களாவது, சூரியன் சந்திரன் செவ்வாய் புதன் சுக்கிரன் சனி ஆகிய இந்த ஆறு கிரகங்களாவது ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருப்பின் ஜாதகன் யஜஸ்விகளாயிருக்கும் முனிவர்களாவன். (இதில் யோகம் இரண்டு.)

சு. 11. சூரியன் செவ்வாய் புதன் குரு சுக்கிரன் சனி ஆகிய இந்த ஆறு கிரகங்களாவது, சந்திரன் செவ்வாய் புதன் குரு சுக்கிரன் சனி ஆகிய இந்த ஆறு கிரகங்களாவது ஒன்று சேர்ந்து பலம் பெற்று ஒரு ராசியிலிருந்தால் அப்போது ஜனித்தவன் தபஞ்செய்து விருத்தியடையவனாய் இருப்பான். (இதில் யோகம் இரண்டு.)

சு. 12. சூரியன் சந்திரன் குரு சனி ஆகிய நான்கு கிரகங்களாவது, சூரியன் சந்திரன் சுக்கிரன் சனி ஆகிய இந்த நான்கு கிரகங்களாவது, சூரியன் சந்திரன் செவ்வாய் குரு ஆகிய இந்த நான்கு கிரகங்களாவது ஒருமித்து ஒரு ராசியிலிருந்தால், அப்போது ஜனித்தவன் பல மூலாதிகளைமட்டும் அருந்தி தபசு செய்கின்றவனாய் இருப்பான். (இதில் யோகம் மூன்று)

சு. 13. சூரியன் செவ்வாய் புதன் சுக்கிரன் ஆகிய நான்கு கிரகங்களாவது, சந்திரன் செவ்வாய் புதன் குரு ஆகிய இந்த நான்கு கிரகங்களாவது, ஒருமித்து ஒரு ராசியிலிருந்தால், அப்போது பிறந்தவன் மரவுரி யுடுத்து விரதாநுஷ்டானத்தோடு தபசு செய்கின்றவனாவான். (இதில் யோகம் இரண்டு.)

சு. 14. சந்திரன் செவ்வாய் புதன் சனி ஆகிய இந்த நான்கு கிரகங்களாவது, செவ்வாய் புதன் குரு சனி ஆகிய இந்த நான்கு கிரகங்களாவது ஒன்றுகூடி ஒரு ராசியிலிருந்தால்: ஜாதகன் சமகுணமுள்ள தபசு செய்கின்றவனாய் இருப்பான். (இதில் யோகம் இரண்டு.)

சு. 15. சூரியன் சந்திரன் புதன் சுக்கிரன் ஆகிய இந்த நான்கு கிரகங்களாவது, சந்திரன் செவ்வாய் சுக்கிரன் சனி ஆகிய இந்த நான்கு கிரகங்களாவது, சந்திரன் குரு சுக்கிரன் சனி ஆகிய இந்த நான்கு கிரகங்களாவது ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால், ஆகாரத்தை உபேட்சித்து பல மூலாதிகளை மட்டும் புசித்து சன்னியாசியாக விருப்பான். (இதில் யோகம் மூன்று.)

சு. 16. சூரியன் சந்திரன் செவ்வாய் சுக்கிரன் ஆகிய இந்த நான்கு கிரகங்களாவது, சூரியன் சந்திரன் செவ்வாய் புதன் ஆகிய இந்த நான்கு கிரகங்களாவது, சூரியன் குரு சுக்கிரன் சனி ஆகிய இந்த நான்கு கிரகங்களாவது, சந்திரன் செவ்வாய் குரு சுக்கிரன் ஆகிய இந்த நான்கு கிரகங்களாவது, சந்திரன் செவ்வாய் புதன் சுக்கிரன் ஆகிய இந்த நான்கு கிரகங்களாவது ஒருமித்து ஒரு ராசியிலிருக்கும் சமயம் ஜனித்தவன்; வனங்களிலும் மலைகளிலும் வசிக்கின்றவனாயும், எல்லா ஜனங்களாலும் நமஸ்கரிக்கத் தக்க யோக்கியதையுடைய தபசியாயும் இருப்பான். (இதில் யோகம் ஐந்து.)

சு. 17. சந்திரன் செவ்வாய் குரு சுக்கிரன் சனி ஆகிய இந்த ஐந்து கிரகங்களாவது, சந்திரன் செவ்வாய் புதன் குரு சுக்கிரன் ஆகிய இந்த ஐந்து கிரகங்களாவது, சூரியன் சந்திரன் செவ்வாய் புதன் குரு ஆகிய இந்த ஐந்துகிரகங்களாவது ஒருமித்து ஒருஇராசியிலிருப்பின்

தனமில்லாதவனும், துக்கிதனும், இருக்கின்ற யதியாக (ஜிதேந்திரிய சன்னியாசி) ஆகின்றான். (இதில் யோகம் மூன்று.)

சு. 18. சேவ்வாய் புதன் குரு சுக்கிரன் சனி ஆகிய இந்த ஐந்து கிரகங்களாவது, சூரியன் சந்திரன் சேவ்வாய் புதன் சனி ஆகிய இந்த ஐந்து கிரகங்களாவது ஒன்றுசேர்ந்து பலமுள்ளவர்களாக ஒரு ராசியிலிருப்பின் ஜடையும் மரவுரியும் தரிக்கின்ற சன்னியாசியாய் இருப்பான்.(இதில் யோகம் இரண்டு.)

சு. 19. சூரியன் சந்திரன் சேவ்வாய் புதன் குரு சுக்கிரன் ஆகிய இந்த ஆறுகிரகங்களாவது, சூரியன் சந்திரன் சேவ்வாய் குரு சுக்கிரன் சனி ஆகிய இந்த ஆறு கிரகங்களாவது ஒன்று சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால், நிச்சயமாக தபசு செய்கின்ற ரூபத்தை அடைகின்றவனாவான். இவ்விதம் நான்கு முதலான கிரகங்கள் ஒரு ராசியிலிருக்கும் தன்மையினால் 48 விதமாக பிரவிரஜ்யா யோகம் சொல்லப்பட்டுளது.

சு. 20. மேற்கூறியவாறு பிரவிரஜ்யா யோக கர்த்தாக்களான கிரகங்களுக்கு அஸ்தமன முண்டாயின் பிரவிரஜ்யா யோகமில்லை யென்ப. அவ்விதம் அஸ்தமன மடைந்த கிரகங்களுக்கு மற்ற பலங்களுண்டாயிருப்பின் பிரவிரஜ்யை அடைந்த சன்னியாசிகளிடத்தில் பக்தி யுள்ளவனாக மாத்திரம் ஆவன். கிரகயுத்தம் மௌட்டியம் முதலியவைகளோடு கூடாமல் பரிபூர்ண பலத்தோடு கூடி கிரகங்களிருப்பின் மேற்சொன்ன பிரவிரஜ்யா யோகம் நிச்சயமாக உண்டாகும்.

மேற்சொன்ன யோக கர்த்தாக்களான கிரகங்கள் கிரகயுத்தத்தில் தோல்வி யடைந்தால் பிரவிரஜ்யா யோகம் அடைந்த பிறகு அதிலிருந்து தள்ளப்பட்டவனாவன். பல கிரகங்கள் மிகவும் பலமுள்ளவைகளா யிருந்தால் அவைகளின் பலங்களின் ஏற்றத் தாழ்விற்குத் தக்கவாறு முறையே பிரவிரஜை உண்டாகும். அந்தந்தக் கிரகங்களுக்குச் சமத்துவமாகவே பல மிருந்தால் மிசிரரூபமாகிய பிரவிரஜை உண்டாகுமென்று சொல்லுப.

சு. 21. பிரவிரஜ்யா யோகத்திற்கு நாதனாகிய கிரகம் அஸ்தமனம் அடைந்தாலும் இதர கிரகங்களால் பார்க்கப்பட்டாலும் தீட்சையில் (சன்னியாசத்தில்) விருப்பமட்டும் உண்டாகும் என்றும், பிரவிரஜை கிடைப்பது துர்லபம் என்றும் யவனாசாரியார் சொல்லுகின்றார்.

சு. 22. சந்திரன் சனியின் திரேக்காணத்திலிருந்து சேவ்வாய் சனி இவர்களின் திருஷ்டியைப் பெற்று இருப்பின் தபசு செய்பவ

ளுய் இருப்பான். அதுபோல சந்திரன் நவாம்சத்தில் செவ்வாய் க்ஷேத்திரமான மேட விருச்சிகத்தில் இருந்து சனியால் பார்க்கப் பட்டு மற்ற கிரகங்களால் பார்க்கப்படாமலிருப்பின் தபசு செய்பவளு வான். இவ்விரண்டு யோகங்கட்கும் சனிக்குச் சொல்லப்பட்டிருக் கின்ற பிரவிரஜ்யா யோகம் சம்பவிக்கு மென்ப.

சு. 23. ஜனன காலத்தில் சந்திரனிருக்கின்ற ராசியின் அதிப ஞன கிரகம் சனியினுல் பார்க்கப்பட்டு மற்ற கிரகங்களினுல் பார்க்கப் படாமலிருப்பின், நிச்சயமாக பிரவிரஜ்யா யோகம் ஏற்படுகின்றது. முன்பு சொன்ன யோகத்தையும் இங்கு அறிந்து சொல்ல வேண்டும்.

சு. 24. சந்திரனிருக்கின்ற ராசிக்கதிபஞன கிரகம் பலஹீனளுய்க் கேந்திரத்தில் பலம் பெற்றிருக்கும் சனியைப் பார்க்கின், அப்போது ஜனித்தவன் பாக்கிய ஹீனளுய்ப் பிரவிரஜ்யா யோகத்தை அடை கிருன். இங்கு சனிக்குக் கேந்திரஸ்திதி வேண்டுமென்ற நியதியில்லை யென சில ஆசிரியர்கள் கூறுகின்ருர்கள். இவ்விதம் சொன்ன யோகங் கள் சனியின் தசையிலோ புத்தியிலோ அவசியம் உண்டாகும்.

சு. 25. குரு சந்திரன் சூரியன் இவர்களி லொருபர் பலஹீன ராய் லக்கினத்திலோ பத்தாமிடத்திலோ பன்னிரண்டா மிடத் திலோ இருந்து பூரண பலத்தோடு கூடிய சனியால் பார்க்கப்பட் டால் ஜாதகன் மிகுந்த துக்கங்களை யநுபவித்துத் தபசு செய்கின்ற வளுக இருப்பான்.

சு. 26. நவாம்சத்தில் சுபக்கிரகங்களுடைய இராசியில் எங் கேனு மிருக்கின்ற சந்திரனையும் தங்கள் தங்கள் உச்சஸ்தானத்தி லிருக்கின்ற மற்றக் கிரகங்களையும் பலம் பெற்ற சனி பார்ப்பாளுயின் ஜாதகன் அரசளுயிருந்தாலும் சுவாதந்திரியத்தோடு பிரவிரஜையை அடைவான்.

சு. 27. சுக்கில பட்சத்தில் விருத்தி கலைகளோடும் சர்வ பலங் களோடும் இருக்கின்ற சந்திரன் மிகவும் பலஹீனஞன லக்கினுதி பனைப் பார்த்தால் ஜாதகன் துக்கங்களையும் கிலேசங்களையும் அநுப வித்துத் தனம் பந்துக்களில்லாமல் அன்னபாளுதிகள் சமயத்திற்குக் கிடைக்காமல் தபசு செய்கின்றவளுவான்.

சு. 28. சனி சுபக்கிரகங்களுடைய ராசியிலோ அல்லது சுபக் கிரகங்களுடைய அம்சத்திலோ இருந்து கும்ப நவாம்சத்திலிருக் கின்ற மற்ற எல்லாக்கிரகங்களையும் சந்திரனையும் பார்த்தால் ஜாத கன் தீட்சாயுக்தஞன தபசியாவன்.

சு. 29. சந்திரனிருக்கும் ராசிக்கதிபன் ஒரு ராசியில் ஒன்று சேர்ந்திருக்கின்ற ஆறு கிரகங்களால் பார்க்கப் பெறின் தீட்சா பிரவிரஜ்யா யோகம் கிடைக்குமென பூர்வாச்சாரியர்கள் தெளிவுபடக் கூறியுள்ளார்கள். இவ்விதமாக 48 பிரவிரஜ்யா யோகங்களும் இதர யோகங்களும் இங்கு விவரிக்கப்பெற்றுள்ளன. இனிமேல் சூரியாதி கிரகங்களுடைய பிரவிரஜ்யாஸ்வரூபத்தை நன்கு தெரிவிக்கின்றார்.

சு. 30. *மூன்று வகையான அக்கினி காரியத்தைச் செய்தல். மலையின் சமீபத்திலும் நதிதீரத்திலும் ஆசிரம முண்டாக்கி அதில் வசித்து தவசு செய்தல். சூரிய உபாசனை செய்தல். கணபதி உபாசனை செய்தல். பார்வதியுபாசனை செய்தல். பக்தர்களாயிருத்தல். காயத்திரி யுபாசனை செய்தல். வனத்தில் வாசம் செய்து இந்திரிய நிக்கிரகத்தோடு யோகத்தைப் பழகுதல். கங்கை முதலிய நதிகளில் ஸ்நாநம் செய்தல். †கௌமாரவிரதம் அநுஷ்டித்தல் ஆகிய இந்தப் பிர்விரஜையை சூரியன் பிரவிரஜ்யா யோக கர்த்தாவாயின் ஜாதகன் அடைவன் என்ப.

சு. 31. சந்திரன் பிரவிரஜ்யா யோக கர்த்தாவாயின் விருத்த சிராவகர்களாகவும் (காபாலிகர்கள்) சரீரம் முழுவதும் பஸ்மம் அணிந்து கொள்கின்றவர்களாகவும், சைவ விரதங்களை அநுஷ்டிக்கின்றவர்களாகவும், பாபத்திற்குப் பயந்து சஞ்சரிக்கின்றவர்களாகவும், பெண் தெய்வங்களிடத்தில் பக்தியுள்ளவர்களாகவும், சர்வ சங்கங்களையும் விலக்கியவர்களாகவும், சோம சித்தாந்தத்தை யநுசரிக்கின்றவர்களாகவும், கபாலதாரிகர்களாகவும், குரூரத்தன்மையுள்ளவர்களாகவும், கட்வாங்கம் முதலிய (நுனியில் எலும்புடன் கூடிய யோகிகளுடைய தடி) அடையாளங்களைத் தரிக்கின்றவர்களாகவும் இருப்பார்கள்.

சு. 32. செவ்வாய் பிரவிரஜ்யா யோக கர்த்தாவாயின் இருபத்து நான்கு வகையினருள் ஏதாவதொரு புத்தயோகியை அநுவர்த்தித்திருக்கின்றவராகவும், துர்மந்திரங்களை உபாசிக்கின்றவராகவும், சிகையில்லாதவராகவும், பாண்டர பிக்ஷுக்களாகவும், (ஒரு வகை புத்த சன்னியாசி) நல்ல வஸ்திரங்களைத் தரிக்கின்றவராகவும், ரக்தபடர்களாகவும், (புத்த மதத்திலேயுள்ள சன்னியாசபேதம்) ஜிதேந்திரியர்களாகவும் ஆகின்றார்கள்.

---

* தட்சிணைக்கினி-காருகபத்தினியாக்கினி-ஆகவனீயாக்கினி ஹோமபூஜை முதலிய கர்மங்கள்.

† சுப்பிரமண்ய கல்போக்தமாகிய உபாசனை முதலியவைகள்.

சு. 33. புதன் பிரவிரஜ்யா யோக கர்த்தாவாயின் ஆஜீவிகள் என்ற ஜைனமதத்தைச் சார்ந்த சன்னியாசி ரூபத்தை யடைந்தவ ராகவும், அல்லது ஏகதண்டியென்று சொல்லப்பட்டவராகவும், உப ஜீவனார்த்தம் சன்னியாசி வேஷத்தைத் தரிக்கின்றவராகவும், பிரதிக் ஞையோடு கூடி தாடியும் முடியும் வளர்த்து தீட்சிதர்களானவர்களாக வும், காருட தந்திரத்திலும் மாயூரதந்திரத்திலும் ராக்ஷஸ தந்திரத்தி லும் நம்பிக்கையுள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

சு. 34. குரு பிரவிரஜ்யா யோக கர்த்தாவாயின் ஏகதண்டி திரி தண்டி யென்ற பேதத்தினால் ஒன்று அல்லது மூன்று தண்டுகளைத் தரிக்கின்றவராகவும், காவி வஸ்திரம் தரிக்கின்றவராகவும், ஜலமும் காய் கனிகளும் சாப்பிடு கின்றவர்களாகவும், சன்னியாசிகளாக கிரகத் திலிருந்து தபசு செய்கின்றவர்களாகவும், பிரம்மசரிய விரதத்தோடு கூடினவர்களாகவும், கங்காதி புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நாநம் செய்கின்றவர்களாகவும் இருப்பார்கள்.

சு. 35. சுக்கிரன் பிரவிரஜ்யா யோக் கர்த்தாவாயின் பாசுபதர் களுக்கும், யாகம் தீட்சை விருதம் இவைகளைக்கிரமமாய்ச்செய்கின்ற வர்களுக்கும், வைஷ்ணவாகமங்களை யனுசரித்துள்ளவர்களுக்கும், சக் கிர முத்திராதிகளைத் தரித்து யோகாப்பியாசம் செய்து சிகிச்சையில் நிபுணத்துவ மடைந்திருக்கின்றவர்களுக்கும் தலைவர்களாக இருப்பார் கள்.

சு. 36. சனி பிரவிரஜ்யா யோக கர்த்தாவாயின் பாஷண்டர் களுக்கும், (வேத விருத்த சித்தாந்திகளாகிய பௌத்த சமணாதிகள்) அவதூதர்களாகிய சன்னியாசிகளுக்கும், வர்ணாசிரமங்களை விட்டுத் தனது இச்சையின்படி சஞ்சரிக்கின்றவர்களுக்கும், விருட்சத்தினடி யில் இருந்து கடினமான தபசு செய்கின்றவர்களுக்கும் தலைவர்களாக இருப்பார்கள். இங்கு சூரியாதி சப்த கிரகங்களுடைய பிரவிரஜ்யா லட்சணத்தைத் தெரிவித்தார். எல்லாப் பிரவிரஜைகளுக்கும் சாதாரணதர்மம் ஜன்மபூமி நிரபேக்ஷத்துவமாகையால் உசிதத்திற் குத் தக்கவாறு இந்த யோகங்களுடைய பலன்களைச் சிந்தித்துச் சொல்லவேண்டும்.

சு. 37. மேற்கூறப் பெற்றுள்ள பிரவிரஜ்யா யோகத்தில் இனி மேல் சொல்லப்போகின்ற ராஜயோகம் ஏற்படுமானால் எல்லா அசுப பலன்களையும் பயனில்லாமல் செய்து அந்த அரசனும் பின்னால் சர்வ சங்கங்களையும் விட்டு பிரவிரஜ்யயையடைந்து சகல அரசர்களாலும் எப்போதும் சாஷ்டாங்கமாக நமஸ்கரிக்கத்தக்கவனாகச் செய்கின்றது.

இருபதாவது அத்தியாயம் முற்றிற்று.

# இருபத்தோராவது அத்தியாயம்.

## நாபஸ யோக பலம்.

சு. 1. இந்த அத்தியாயத்தில் நாபஸயோகமும் அதன் பலன்களும் மிகத்தெளிவாய்ச் சொல்லப்படுகின்றன. யவனசாரியர்களான பூர்வாசாரியர்கள் நாபஸயோகத்தைப் பலவிதமாக விரித்துக் கூறியுள்ளார்கள். அவ்யோகங்கள் 1800 ஆகின்றன. அவைகளுள் 32 யோகங்களே இங்கு சொல்லப்படுகின்றன.

சு-2-3. நாபஸ யோகம்: 1. ஔ யோகம், 2. சத்திர யோகம், 3. கூடயோகம், 4. கார்முக யோகம், 5. சிருங்காடக யோகம், 6. வஜ்ஜிர யோகம், 7. தாமனி யோகம், 8. பாச யோகம், 9. வீணை யோகம், 10. ஸரோஜ யோகம், 11. முஸல யோகம், 12. வாபி யோகம், 13. ஹல யோகம், 14. சர யோகம், 15. சமுத்ர யோகம், 16. சக்கர யோகம், 17. மாலா யோகம், 18. ஸர்ப்ப யோகம், 19. அர்த்தேந்து யோகம், 20. யவ யோகம், 21. கேதார யோகம், 22. கெதா யோகம், 23. விஹக யோகம், 24. யூப யோகம், 25. யுகயோகம், 26. சகட யோகம், 27. சூல யோகம், 28. தெண்ட யோகம், 29. ரஜ்ஜு யோகம், 30. சக்தி யோகம், 31. நள யோகம், 32. கோள யோகம் என 32 வகைப்படும்.

சு. 4-5-6. ஸ்தாவர சங்கம வடிவமாகிய இவ்வுலகத்தில் மேற்கூறிய யோகங்களைக் கொண்டு ஜனனம் ஏற்படுகின்றது. இங்கு நாபஸ யோகம் முப்பத்திரண்டனுள் 29. ரஜ்ஜு, 11. முஸலம், 31. நளம் இந்த மூன்று யோகங்களையும் ஆசிரய யோகமென்று மணித்தர் சொல்கின்றனர். 32. கோளம், 25. யுகம், 27. சூலம், 8. பாசம், 9, வீணை, 21. கேதாரம், 7. தாமனி இந்த ஏழு யோகங்களைச் சங்கியா யோகமென்று பூர்வா சாரியர்கள் கூறுகின்றார்கள். 18. சர்ப்பம், 17. மாலா இந்த இரண்டு யோகங்களைத் தெல யோகமென்று பராசரர் கூறுகின்றார். பாக்கியுள்ள இருபது யோகங்கள் ஆகிருதியோகமெனப் பெயர் பெறுகின்றன. அப்போது நாபச யோகம் முப்பத்திரண்டனுள் ஆசிரயோகம் மூன்று. சங்கியா யோகம் ஏழு. தெல யோகம் இரண்டு. ஆகிருதி யோகம் இருபது. இவ்விதம் யோகங்களுடைய வேறுபாட்டையறிக.

சு. 7. மற்றொன்றோடு கலந்திராத ஆசிர யோகத்தில் ஜனித்தவன், சுகம் தனலாபம் முதலிய குணபலங்களோடு கூடியவனுவான். இந்த யோகம் அன்யோன்யமாகக் கலந்திருந்தால் அந்த யோக பலத்தைக் கொடுக்கின்றதில்லையென அறிந்து கொள்க.

சு. 8. ஆகிருதியோகங்களில் ஜனித்தவர்கள் தங்களுடைய பாக்கியத்தினுல் சந்தோஷிப்பவராகவும், அரசர்களுக்கு இஷ்டமித்திரராகவும், அரசனுல் கொடுக்கப்பட்ட தனத்தோடு கூடியவராகவும், பிரசித்தியுள்ளவராகவும், அதிக சுகமனுபவிப்பவர்களாகவும் இருப்பார்கள்.

சு. 9. சங்கியா யோகங்களில் ஜனித்தவர்கள் பிறருடைய பாக்கியத்தினுல் சுகமனுபவிக்கின்றவர்களாகவும், தனம் பாக்கியம் இவைகளோடு கூடியவராகவும், எல்லாவிடத்திலும் காரியாதிகளில் குழப்பம் உள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

சு. 10. தேலயோகத்தில் ஜனித்தவர்கள் சிலகாலம் தங்களுடைய பாக்கியத்தினுலும் சில காலம் மற்றுமுள்ளவர்களுடைய பாக்கியத்தினுலும் சில காலம் அரசனுடைய கருணையினுலும் ஜீவிக்கின்றவராகவும், சிலசமயம் சுகமும் சிலசமயம் துக்கமும் ஆகிய மிசிரபலன்களை அநுபவிக்கின்றவராகவும் இருப்பார்கள்.

சு. 11. சூரியாதி ஏழு கிரகங்களும் இலக்கின முதல் ஏழுராசிகள் வரையில் இருந்தால் நௌயோகம். நான்காமிட முதல் பத்தாமிடம் வரையில் ஏழு ராசிகளில் ஏழு கிரகங்களும் இருந்தால் சத்திர யோகம். ஏழாமிட முதல் இலக்கினம் வரையுமுள்ள ஏழு ராசிகளில் ஏழு கிரகங்களும் இருந்தால் கூடயோகம். பத்தாமிட முதல் நான்காமிடம் வரையுமுள்ள ஏழு ராசிகளில் ஏழு கிரகங்களும் இருந்தால் கார்முக யோகம் என யவனுசாரியர்கள் கூறுகின்றூர்கள். சத்தியாசாரியர் நான்காமிட முதல் ஏழு ராசிகளில் இருந்தால் கூட யோகமென்றும், ஏழாமிட முதல் ஏழு ராசிகளில் இருந்தால் சத்திர யோகமென்றும் கூறுகின்றூர். இதனை வராகமிஹிரரும் அங்கீகரிக்கின்றனர்.

சு. 12. சூரியன் முதல் ஏழு கிரகங்களும் இலக்கினம் முதல் நான்காமிடம் வரையுமுள்ள நான்கு ராசிகளில் இருப்பின் யூப யோகம். நான்காமிட முதல் ஏழாமிட வரையுமுள்ள நான்கு ராசிகளில் இருப்பின் சரயோகம். ஏழாமிட முதல் பத்தாமிடம் வரையுமுள்ள நான்கு ராசிகளில் இருப்பின் சக்தி யோகம். பத்தாமிட முதல் இலக்கினம் வரையுமுள்ள நான்கு ராசிகளில் இருப்பின்

தண்ட யோகம். இந்த நான்கு யோகங்களும் சத்தியாசாரியார் கொள்கைக்கு ஒத்தனவே.

சு. 13. 2-5-8-11 ஆகிய பணபரஸ்தானத்திலிருந்தோ 3-6-9-12 ஆகிய ஆபோக்கிலீப ஸ்தானத்திலிருந்தோ சூரியன் முதல் ஏழு கிரகங்களும் ஏழு இராசிகளிலிருந்தால் எட்டுவிதமான அர்த்த சந்திர யோகம் சம்பவிக்கும். அடுத்த இரண்டு கேந்திரராசிகளில் ஏழு கிரகங்களுமிருந்தால் நான்கு விதமான கேதா யோகம் சம்பவிக்கும். (ஏழு கிரகங்களும் லக்கினத்திலும் நான்காமிடத்திலும், நான்காமிடத்திலும் ஏழாமிடத்திலும், ஏழாமிடத்திலும் பத்தாமிடத்திலும், பத்தாமிடத்திலும் இலக்கினத்திலும் இருத்தலால் கெதாயோகம் நான்கு வகைப்படும்.)

சு. 14. சந்திரன் புதன் குரு சுக்கிரன் ஆகிய இந்தச் சுபக்கிரகங்கள் இலக்கினத்திலும் ஏழாமிடத்திலும், சூரியன் சனி செவ்வாய் இந்தப் பாபக்கிரகங்கள் நான்காமிடத்திலும் பத்தாமிடத்திலும் இருந்தால் வஜ்ஜிர யோகமாகும். இதற்கு விபரீதமாயிருப்பின் யவ யோகமாகும். [இலக்கின சப்தமங்களில் பாபக்கிரகங்களும் சதுர்த்த தசமங்களில் சுபக்கிரகங்களுமிருப்பது] இலக்கினம் நான்கு ஏழு பத்து இந்தப் பாவங்களில் ஏழு கிரகங்களும் [சுபர்களும் அசுபர்களும்] இருப்பின் சரோஜ யோகம். (தாமரையோகம்) எல்லாக் கிரகங்களும் 2-5-8-11 ஆகிய பணபரஸ்தானங்களிலோ 3-6-9-12 ஆகிய ஆபோக்கிலீப ஸ்தானங்களிலோ இருப்பின் வாபி யோகம்.

சு. 15. ஏழு கிரகங்களும் இலக்கினத்திலும் ஏழாமிடத்திலும் இருந்தால் சகட யோகம். நான்காமிடத்திலும் பத்தாமிடத்திலுமிருப்பின் விஹக யோகம். இலக்கினத்திலும் ஐந்தாமிடத்திலும் ஒன்பதாமிடத்திலும் இருப்பின் சிருங்காட யோகம். இலக்கினந்தவிர துவிதீயாதிபாவங்களிலும் அவற்றின் திரிகோணங்களிலு மிருப்பின் ஹலயோகம். இது மூன்று விதமாம். [எல்லாக்கிரகங்களும் 2-6-10 இன்று மூன்று பாவங்களிலோ, 3-7-11 இந்த மூன்று பாவங்களிலோ, 4-8-12 இந்த மூன்று பாவங்களிலோ இருப்பது.]

சு. 16. சூரியன் முதலிய ஏழு கிரகங்களும் லச்கினம் 3-5-7-9-11 இந்த ஒற்றித்த ராசிகளிலிருப்பின் சக்கர யோகம். இது போலவே 2-4-6-8-10-12 இந்த இரட்டித்த ராசிகளிலிருப்பின் சமுத்திர யோகம்.

சு. 17. மேற்கூறியவாறு இருபது வகையாயுள்ள ஆகிருதியோகங்களை இங்கு விவரித்து இனி விருத்தகார்க்கியருடைய மதத்தைத் தழுவி ஆசிரய யோகங்களைச் சொல்லுகின்றார்.

சு. 18. சூரியன் முதலிய ஏழு கிரகங்களும் உபயராசிகளிலிருந்தால் நள யோகம். ஸ்திர ராசிகளிலிருந்தால் முஸல யோகம். சரராசிகளிலிருந்தால் ரஜ்ஜு யோகம் இவை மூன்றும் ஆசிரயயோகமெனப்படும்.

இனிமேல் இரண்டுவிதமாயுள்ள தேலயோகத்தைச் சொல்லுகின்றார். கேந்திர ராசிகளாகிய 1-4-7-10 இவைகளில் மூன்று ஸ்தானத்தில் புதன் குரு சுக்கிரர்களாகிய சுபக்கிரகங்களிருந்தால் மாலா யோகம். அந்த கேந்திரத்திலே பாபக்கிரகங்களிருந்தால் சர்ப்ப யோகம். [பூரண சந்திரன் சுபனாகையால் அந்தச் சந்திரனை மாலாயோகத்திற்கு நாதனாகவும், க்ஷீண சந்திரன் பாபியாகையால் சர்ப்ப யோகத்திற்கு நாதனாகவும் அறிந்துகொள்க.]

சு. 19. இனி சங்கியா யோகத்தின் ஏழு வகைகளும் சொல்லப்படும். சூரியன் முதலிய ஏழு கிரகங்களும் ஏழு ராசிகளிலிருப்பின் வீணா யோகமாம். ஆறு ராசிகளிலிருப்பின் தாமனீ யோகமாம். ஐந்து ராசிகளிலிருப்பின் பாச யோகமாம். நான்கு ராசிகளிலிருப்பின் கேதார யோகமாம். மூன்று ராசிகளிலிருப்பின் சூல யோகமாம். இரண்டு ராசிகளிலிருப்பின் யுக யோகமாம். ஒரு ராசியிலிருப்பின் கோள யோகமாம் என்று பெரியோர்கள் கூறுகின்றனர்.

சு. 20. மேற்கூறப் பெற்ற 32 நாபச யோகங்களின் பலன்கள் கிரமப்படி சொல்லப்படுகின்றன. இந்தயோகங்களுடைய பலன்கள் நியதங்கள் ஆகையால் தசாபேதமில்லாமல் எக்காலங்களிலும் ஒன்றுபோல் அனுபவிக்கத்தக்கனவென்று அறிந்துகொள்க.

சு. 21. நளயோகத்தில் ஜனித்தவன் ஜலத்திலிருந்து கிடைக்கப்பட்ட திரவியங்களைக் கொண்டு ஜீவிப்பவனாயும், அதிக லாபத்தோடு கூடினவனாயும், யஜசு உள்ளவனாயும், கிருபணனாயும், பலமுள்ளவனாயும், அதிக ஆசையுள்ளவனாயும், ஸ்திரமில்லாதவனாயும் இருப்பான்.

சு. 22. கூடயோகத்தில் ஜனித்தவன் பொய்யாகவும் கபடமாகவும் பேசுந்தன்மையுள்ளவனாயும், சூது விளையாடுகின்றவனாயும், பந்தனத்தைக் [காராக்கிருகம் முதலியவற்றை] காவல் புரிகின்றவனாயும், ஒரு திரவியமுமில்லாதவனாயும், அன்யோன்ய விருத்தங்களான

மனோவாக்கு கர்மங்களோடு கூடினவனும், குரூரனும், மலைகளி லும் காடுகளிலும் வசிக்கின்றவனும் இருப்பான்.

சு. 23. சத்திர யோகத்தில் ஜனித்தவன் ஸ்வ ஜனங்களைக் காப் பாற்று கின்றவனும், தயை யுள்ளவனும், தானம் செய்கின்றவனு யும், அரசர்களுக்குப் பிரியமுள்ளவனும், மேன்மையான புத்தியுள் ளவனும் வயோதிகத்தில் சுகத்தையும் பாக்கியத்தையும் அநுபவிக் கின்றவனும், வெண் குடையைத் தரிக்கின்றவனும் இருப்பான்.

சு. 24. கார்முக யோகத்தில் ஜனித்தவன் பொய் பேசுகின்றவ னும், காராக்கிருகத்தைக் காவல் புரிகின்றவனும், திருடனும், போக்கிரித்தன முள்ளவனும், வனத்தில் வாசம் செய்கின்றவனும், பால்யத்திலும் வயோதிகத்திலும் சுக முடையவனும், யௌவனத் தில் அநேக துக்கத்தை யநுபவிக்கின்றவனும் இருப்பான்.

சு. 25. அர்த்த சந்திர யோகத்தில் ஜனித்தவன் எல்லாச் சனங் களுக்கும் பிரியமுள்ளவனும், சேனா நாயகனும், ரூபலாவண்ணிய முடையவனும், அரசனுக்குப் பிரிய முள்ளவனும், பலவானும், இரத்தினம் சுவர்ணம் ஆபரணம் இவைகளோடு கூடியவனும் இருப் பான்.

சு. 26. வஜ்ஜிர யோகத்தில் ஜனித்தவன் பால்யத்திலும் வார்த்திகத்திலும் சுகம் அநுபவிக்கின்றவனும், யுத்த சாமர்த்திய முள்ளவனும், சௌபாக்கிய யுக்தனும், தேகாரோக்கிய முள்ளவ னும், பாக்கிய ஹீனனும், சுவ ஜனத்துவேஷ முள்ளவனும் இருப்பான்.

சு. 27. யவ யோகத்தில் ஜனித்தவன் சாந்திராயனம் ஏகாதசி முதலிய விரதங்களை யநுஷ்டிப்பவனும், நியமத்தோடிருப்பவனும் மங்களகரமான காரியங்களில் பிரியமுள்ளவனும், யௌவன காலத் தில் சுகம் சம்பத்து இவைகளை யநுபவிக்கின்றவனும், தான சீல முள்ளவனும், ஊக்கமான மனதுடையவனும் இருப்பான்.

சு. 28. கமல யோகத்தில் ஜனித்தவன் அகன்ற விருத்தியான யஜஸையுடையவனும், வித்தை சௌரியம் முதலிய குணங்களோடு கூடினவனும், ஆயுர்ப்பலம் உள்ளவனும், சமஸ்த ஜனங்களாலும் புகழப்படுகின்ற கீர்த்தியை யுடையவனும், சௌந்தர்யம் (சர்வ ஜனங்களுக்குப் பிரியம்) உள்ளவனும், யஜஸ்விகளாகிய அரசனாக வோ அரச துல்லியனாகவோ இருப்பான்,

சு. 29. வாபி யோகத்தில் ஜனித்தவன் அதிகமான திரவியங்களைச் சேகரித்து ஒப்படைத்து வைத்திருக்கின்றவனும், ஸ்திரமான சம்பத்தும் சுகமும் உடையவனும், அதிக பொறுமை யுள்ளவனும், கோள் சொல்லுபவனும், சகல ஜனங்களுக்கும் தர்சனீயனும் இருப்பான்.

சு. 30. சகடயோகத்தில் ஜனித்தவன் ரோகமுள்ளவனும், குணமில்லாத மனைவியாளை யுடையவனும், அறிவில்லாதவனும், வண்டிகளினால் ஜீவிக்கப்பட்டவனும், பந்துக்களும் ஸ்வஜனங்களுமில்லாதவனும் இருப்பான்.

சு. 31. விஹக யோகத்தில் ஜனித்தவன் எப்பொழுதும் பிரயாணம் செய்பவனும், இழிவானவனும் பிறர்களுடைய சேவகத் தொழிலைச் செய்கின்றவனும், சூத நிமித்தம் ஜீவனம் செய்து கொண்டிருப்பவனும், வெட்கமில்லாதவனும், சதா கலகப்பிரியனும் இருப்பான்.

சு. 32. கேதா யோகத்தில் ஜனித்தவன் எப்பொழுதும் யானமுள்ளவனும், பணம் சம்பாதிப்பதில் பிரிய முள்ளவனும், யாகம் செய்கின்றவனும், சாஸ்திராப்பியாசம் செய்வதிலும் யோகாப்பியாசம் செய்வதிலும் நிபுணத்துவம் உள்ளவனும், தனம் தானியம் முதலிய சம்பத்துக்கள் சுவர்ணங்கள் ரத்தினங்கள் ஆகிய இத்தியாதி ஐசுவரியத்தோடு கூடியுள்ளவனும் இருப்பான்.

சு. 33. சிருங்காடக யோகத்தில் ஜனித்தவன் கலகத்திலும் யுத்தத்திலும் சாகச கர்மங்களிலும் பிரியமுள்ளவனும், சுகம் அநுபவிக்கின்றவனும், அரசனுக்கு அநுகூலத்தைச் செய்கின்றவனும், சௌபாக்கியமுள்ள மனைவியோடு கூடினவனும், பிரபுத்தன்மையோடு கூடினவனும், ஸ்திரீகளால் துவேஷிக்கப்படுகின்றவனும் இருப்பான்.

சு. 34. ஹலயோகத்தில் ஜனித்தவன் அதிகமாகச் சாப்பிடுகின்றவனும், (எந்த ஆகாரத்தையும் கணக்கில்லாமல் சாப்பிடுகின்றவன்) தரித்திரனும், பயிர்த்தொழில் செய்து ஜீவிக்கின்றவனும், துக்க முடையவனும், ஓரிடத்திலும் நிலைத்திருக்காதவனும், பந்துக்களாலும் சிநேகிதர்களாலும் நீக்கப்பட்டவனும், அடிமை வேலை செய்கின்றவனும் இருப்பான்.

சு. 35. சக்கரயோகத்தில் ஜனித்தவன் தலைகுனிந்து வணங்குகின்ற சகல ராஜாக்களுடைய கிரீடங்களிலுள்ள ரத்னங்களின் பிர

காசங்களால் வியாபிக்கப்பட்ட பாதங்களோடு கூடியவனுயிருக்கின்ற அரசனுவான். அல்லது தபோக் ஞானம் முதலிய யோக சக்தியினுல் அரசர்களால் வணங்கப்பட்டவனுக இருப்பான்.

சு. 36. சமுத்திரயோகத்தில் ஜனித்தவன் அதிகமான தனங்களும் இரத்தினங்களும் உள்ள அரசனுகவோ அரச சமானனுகவோ இருந்து சுகமும் பொருளும் உடையவனும், சகல ஜனங்களுக்குப் பிரியமுள்ளவனும், மன ஊக்கமும் பராக்கிரமமும் உள்ளவனும் இருப்பான்.

சு. 37. யூபயோகத்தில் ஜனித்தவன் ஆன்ம ரட்சையைச்செய்கின்றவனும், தான சீலனும், தனசமிருத்தியும் சுகசமிருத்தியும் உள்ளவனும், யாக தீட்சை முதலிய விருதங்களையும் நியமங்களையும் உடையவனும், சத்தியசீலனும், யாகாதி புண்ணிய கர்மங்களினுல் சிறப்புள்ளவனும் இருப்பான்.

சு. 38. சரயோகத்தில் ஜனித்தவன் அம்புகளைச் செய்வதிலும், திருடர்களைப் பிடிப்பதிலும் வேட்டை யாடுவதிலும், வனங்களில் சஞ்சரிப்பதிலும், மிகவும் இளகி யிருக்கின்ற மனதோடு கூடி யிருப்பதிலும், இம்சை செய்வதிலும், இழிவான சிற்பப்பணிகளைச் செய்வதிலும் பிரியமுள்ளவனுய் இருப்பான்.

சு. 39. சக்தியோகத்தில் ஜனித்தவன் தனமில்லாதவனும், அங்கக்குறைவு உள்ளவனும், துக்கிதனும், நீசத்தனமும் சோம்பலும் உள்ளவனும், அற்பாயுசு உள்ளவனும், யுத்தத்திலும் கலகத்திலும் சாமர்த்திய முள்ளவனும், ஊக்கமுள்ளவனும், சௌபாக்கியத்தோடு கூடினவனும் இருப்பான்.

சு. 40. தேண்டயோகத்தில் ஜனித்தவன் புத்திர நாசமும் பாரியை நாசமும் அடைந்தவனும், தரித்திரனும், எல்லாச் சனங்களாலும் கீழ்மைப் படுத்தப்பட்டவனும், சுய ஜனங்களை விட்டுப் பிரிந்தவனும், துக்கம் உள்ளவனும், நீசாசார முள்ளவனும், அடிமைத்தொழில் செய்பவனும் இருப்பான்.

சு. 41. மாலா யோகத்தில் ஜனித்தவன் எப்பொழுதும் சுகத்தை அநுபவிக்கின்றவனும், அனேகவிதமான வாகனங்கள் விசேஷ வஸ்திரீங்கள் சுவர்ணம் முதலிய தனங்கள் சயனம் ஆசனம் முதலிய சுகோபகரண சாமான்களுள்ளவனும், மிகவும் சௌந்தரிய முள்ளவனும், அதிக ஸ்திரீகளை யுடையவனும் இருப்பான்.

சு. 42. சர்ப்ப யோகத்தில் ஜனித்தவன் விஷமனுயும், குரூரனுயும், பந்துக்களை விட்டுப் பிரிந்தவனுயும், சதா துக்கமுள்ளவனுயும், மிகவும் தரித்திரனுயும், பரான்னங்கொண்டு ஜீவிக்கின்றவனுயும், பாப கர்மங்களிலும் துராசாரங்களிலும் சிரத்தை யுள்ளவனுயும் இருப்பான்.

சு. 43. ரஜ்ஜு யோகத்தில் ஜனித்தவன் எப்பொழுதும் வழி நடக்கின்றவனுயும், அழகுள்ள அங்க முடையவனுயும், அன்னிய தேசத்திலிருந்து பொருளைச் சம்பாதிக்கின்றவனுயும், குரூரனுயும், பிறர்களுடைய பொருளில் பேராசை யுடையவனுகி அவர்களைத் தம்மோடு கூட்டுறவு செய்துகொள்ளுபவனுயும் இருப்பான்.

சு. 44. முஸலயோகத்தில் ஜனித்தவன் அபிமானம் தனம் ஞானம் இவைகளுள்ளவனுயும், எல்லா கர்மங்களிலும் ஊக்கமுள்ளவனுயும், ராஜப்பிரியனுயும், பிரசித்தி யுள்ளவனுயும், ஸ்திர புத்தி யுள்ளவனுயும், சூரனுயும் இருப்பான்.

சு. 45. நளயோகத்தில் ஜனித்தவன் சரீராங்கங்களில் கூடுதல் குறைதல் உள்ளவனுயும், அதிகமாய்த் தனங்களைச் சம்பாதிக்கின்றவனுயும், காரியங்களில் மிகவும் சாமர்த்தியம் உள்ளவனுயும், பந்து குண முள்ளவனுயும், ரூபலாவண்ய முள்ளவனுயும் இருப்பான்.

சு. 46. கோள யோகத்தில் ஜனித்தவன் தாரித்திரமும் சோம்பலுமுள்ளவனுயும், வித்தையோ அது சம்பந்தமான ஞானமோ அபிமானமோ இல்லாதவனுயும், அழுக்கான சரீரத்தோடு கூடியவனுயும், எப்போதும் துக்கித்து அலைந்து நடக்கின்றவனுயும், பல விதத்திலும் கிலேசத்தை அநுபவிக்கின்றவனுயும் இருப்பான்.

சு. 47. யுகயோகத்தில் ஜனித்தவன் வேத விருத்த சித்தாந்திகளாகிய பௌத்த சமணுதிகளுடைய மதத்தை அடைந்தவனுயும், தரித்திரனுயும், மற்ற ஜனங்களால் விலக்கப்பட்டவனுயும், புத்திரனும் அபிமானமும் ஸ்வதர்மானுஷ்டானமும் இல்லாதவனுயும் இருப்பான்.

சு. 48. சூல யோகத்தில் ஜனித்தவன் குரூரனுயும், சோம்பேறித்தன முள்ளவனுயும், தரித்திரனுயும், இமிசையைச் செய்வதில் (கொல்லுதல்) பிரியமுள்ளவனுயும், மற்ற ஜனங்களால் பஹிஷ்கரிக்கப் பட்டவனுயும், யுத்த சாமர்த்திய முள்ளவனுயும், அதனுல் பிரசித்தி யடைந்தவனுயும், பயங்கர முடையவனுயும் இருப்பான்.

சு. 49. கேதார யோகத்தில் ஜனித்தவன் பல ஜனங்களுக்கு மிகவும் உபகாரம் செய்பவனும், எல்லாக் கர்மங்களையும் செய்கின்றவனும், உண்மை பேசுகின்றவனும், எல்லாச் சுகங்களும் அநுபவிக்கின்றவனும், ஸ்திரமில்லாத சுபாவத்தோடு கூடியவனும், தனவானும் இருப்பான்.

சு. 50. பாச யோகத்தில் ஜனித்தவன் கட்டுப்படுதலுள்ளவனும், காரிய உற்சாக முள்ளவனும், கபடம் உள்ளவனும், அதிகமாய்ப் பேசுகின்றவனும், சீல (சுபாவ) குணம் இல்லாதவனும், அதிக வேலையாட்களோடு கூடினவனும் இருப்பான்.

சு. 51. தாமனி யோகத்தில் ஜனித்தவன் எல்லாருக்கும் உபகாரியாயும், அதிக பசுக்கள் உள்ளவனும், தனத்திற்கு நாதனும், பிரசித்தி யுள்ளவனும், அதிக புத்திரர்களும் இரத்தினம் முதலிய சம்பத்துக்களும் உள்ளவனும், தைரியசாலியாயும், வித்வானும் இருப்பான்.

சு. 52. வீணை யோகத்தில் ஜனித்தவன் பந்துக்களுள்ளவனும், நல்ல வார்த்தைகளைப் பேசுகின்றவனும், சாஸ்திரங்களை அறிகின்றவனும், சங்கீதத்திலும் வாத்தியங்களிலும் நல்ல ஞானமுள்ளவனும், அநேக சுகங்களையநுபவிக்கின்றவனும் அதிகமான வேலையாட்களை யுடையவனும் இருப்பான்.

**இருபத்தோராவது அத்தியாயம் முற்றிற்று.**

# இருபத்திரண்டாவது அத்தியாயம்.

## சூரியாஸ்ரய ராசிபலமும் திருஷ்டிபலமும்.

சு. 1. ஜாதகரீதியாக மேடம் முதலாய 12 இராசிகளிலும் சூரியாதி கிரகங்களிருப்பதினுலுள்ள பலன்களையும், அந்தக் கிரகங்களை மற்ற கிரகங்கள் பார்ப்பதினுலுண்டாகும் பலன்களையும், எல்லாரும் எக்காலத்திலும் அறிந்துகொள்ள வேண்டிய தவசியமாகையால், அவ்வித ஆசிரய பலன்களையும், திருஷ்டி பலன்களையும் பூர்வாசாரியர்கள் கூறியுள்ளார்கள். அதை யநுசரித்து அவைகள் இங்கு தெளிவாய்ச் சொல்லப்படுகின்றன. இந்த அத்தியாயத்தில் சூரியன் மேஷாதிராசிகளிலிருக்கும் பலன்களையும் அந்தச் சூரியனை மற்றக் கிரகங்கள் பார்ப்பதனுலுண்டாகும் பலன்களையும் அடுத்த சுலோகமுதல் சொல்லுகின்றேன்.

சு. 2-3. சூரியன் மேடத்திலிருக்கும்போது ஜனித்தவன் சாஸ்திர சம்பந்தமான பிரவிருத்திகளில் பிரசித்தியுள்ளவனும், யுத்த காரியங்களில் பிரியமும் உற்சாகமும் சூரத்தன்மையும் உள்ளவனும், மிகவும் குரூரனும்,சஞ்சாரம்செய்பவனும், தேகபலம் அஸ்திபலம் நல்ல ஊக்கம் இவைகள் உள்ளவனும் இருப்பான். மேட விராசியில் பரமோச்ச பாகையான 10-ஆம் பாகையில் சூரியன் இருப்பின் பின் தொடர்ந்து வருபவர்களான அநேக சேனைகளோடு கூடியவனும், அல்லது தண்டனை செய்கின்றவனும், அல்லது தண்டிக்கத் தக்க காரியங்களைச் செய்கின்றவனும் ஆவன். அன்றியும் பித்தம் ரத்தம் இவைகள் சம்பந்தமான வியாதிகளை யுடையவனும், அதிகமான பிரகாசமும் பராக்கிரமமும் கூடியுள்ளவனும், அரசனும், அல்லது அரச சமானனும், அல்லது பிரபுத்தன்மையுள்ளவனும் இருப்பான்.

சு. 4. சந்திரனின் திருஷ்டியோடு கூடிய சூரியன் மேடத்திலாவது விருச்சிகத்திலாவது இருப்பின் தான தர்மங்களைச் செய்கின்றவனும், அதிகமான வேலையாட்களோடு கூடினவனும், அழகுள்ள சுபாவத்தை யுடையவனும், யௌவனத்தோடு கூடிய ஸ்திரீகளுக்குப் பிரியமுள்ளவனும், மிருதுவான சரீரமுடையவனும் இருப்பான்.

சு. 5. செவ்வாயின் திருஷ்டியோடு கூடிய சூரியன் மேடத்திலாவது விருச்சிகத்திலாவது இருப்பின் யுத்த காரியங்களில் அதிகமான சக்தியும் சாமர்த்தியமு முள்ளவனும்,குரூரனும்,நன்கு பேசுபவனும், சௌந்தரியத்தோடு கூடிய நேத்திர முள்ளவனும், அழகான கைகால்களை யுடையவனும், பிரதாபமும் சக்தியுமுள்ளவனும் இருப்பான்.

சு. 6. புதனின் திருஷ்டியோடு கூடிய சூரியன் மேடத்திலாவது விருச்சிகத்திலாவது இருப்பின் பிறர்களுடைய சேவகத் தொழிலையும் கூலி வேலையையும் செய்கின்றவனும், சொற்பதன முள்ளவனும், பராக்கிரம மில்லாதவனும், அதிகமாய்த் துக்கத்தை அநுபவிக்கின்றவனும், சுத்தமில்லாத சரீரத்தை யுடையவனும் இருப்பான்.

சு. 7. குருவின் திருஷ்டியோடு கூடிய சூரியன் மேடத்திலாவது விருச்சிகத்திலாவது இருப்பின் அதிக திரவியங்களுள்ளவனும், தான சீல முள்ளவனும், மந்திரியோ சேனபதியோ ஆகின்றவனும், எல்லா விடங்களிலும் சிரேஷ்டமடைபவனும் இருப்பான்.

சு. 8. சுக்கிரனின் திருஷ்டியோடுகூடிய சூரியன் மேடத்திலாவது விருச்சிகத்திலாவது இருப்பின் துர் நடத்தையுள்ள ஸ்திரீயினிடம் அன்புள்ளவனும், அதிக சத்துருக்களுள்ளவனும், பந்துக்களில்லாதவனும், தைன்யம் (தாரித்திரம் துக்கம்) உள்ளவனும் குஷ்டரோக முள்ளவனும் இருப்பான்.

சு. 9. சனியின் திருஷ்டியோடு கூடிய சூரியன் மேடத்திலாவது விருச்சிகத்திலாவது இருப்பின் பலவித துக்கங்களினல் தேகக்கிலேச முள்ளவனும், காரியங்களில் கவன மில்லாதவனும், மூடபுத்தி யுடையவனும், அறிவில்லாதவனும் இருப்பான்.

சு. 10-11. சூரியன் இடபத்தில் இருக்கும்போது ஜனித்தவன் முகம் நேத்திரம் இவைகளில் ஏற்படும் ரோகத்தினல் பீடிக்கப்பட்டவனும், ஒரு துக்கமும் சகிக்க சக்தி யில்லாதவனும், அதிக சத்துருக்களை யுடையவனும், புத்திமானும், வியவகாரியாயும், ஸ்திரீ போகத்தில் பிரிய முள்ளவனும், ஸ்திரீகளைத் துவேஷிக்கின்றவனும், சுகமான பட்சணத் திரவியங்கள் மாலைகள் விசேட வஸ்திரங்கள் கஸ்தூரி முதலிய சுகந்த திரவியங்கள் ஆகிய இவைகளைச் சம்பாதிக்கின்றவனும், ஆட்டம் பாட்டு கூத்து வாத்தியம் இவைகளில் பழக்க முள்ளவனும், ஜலத்தில் அதிக பயமுள்ளவனும் இருப்பான்.

சு. 12. சந்திரனின் திருஷ்டியோடு கூடிய சூரியன் இடபத்திலாவது துலாத்திலாவது இருப்பின் வேசிகளான ஸ்திரீகளோடு கூடி விளையாடுகின்றவனும், மிதமாகவும் மெதுவாகவும் பேசக்கூடியவனும், யௌவனமான அநேகஸ்திரீகளோடு கூடியவனும், ஜலத்தில் ஜீவிக்கப்பட்டவனும் இருப்பான். ஜலசம்பந்தமான தொழிலினால் ஜீவிப்பான் என்பது சாரம்.

சு. 13. செவ்வாயின் திருஷ்டியோடு கூடிய சூரியன் இடபத்திலாவது துலாத்திலாவது இருப்பின் சூரனாகவும், யுத்தத்தில் பிரியமுள்ளவனும், தேஜசு உள்ளவனும், சாகசத்தினால் கிடைக்கப்பட்ட பொருளும் கீர்த்தியும் உள்ளவனும், அங்கபேதமுள்ளவனும் இருப்பான்.

சு. 14. புதனின் திருஷ்டியோடு கூடிய சூரியன் இடபத்திலாவது துலாத்திலாவது இருப்பின் எழுத்திலும் சித்திரம் முதலியவைகளிலும் காவியக்கிரந்தங்களிலும் சங்கீதத்திலும் கவிதையிலும் அதிக சமர்த்துள்ள புத்தியுள்ளவனும், நல்ல சரீரமுள்ளவனும் இருப்பான்.

சு. 15. குருவின் திருஷ்டியோடு கூடிய சூரியன் இடபத்திலாவது துலாத்திலாவது இருப்பின் அதிக சத்துருக்களுள்ளவனும், பந்துக்களுடைய சகாயமுள்ளவனும், அரசனாகவோ மந்திரியாகவோ ஆகின்றவனும், சௌந்தரியமுள்ள கண்களோடு கூடியவனும், தர்சனீயமான சோபாவிசேஷத்தோடு கூடியவனும், அதிக சந்தோஷமுடையவனும் இருப்பான்.

சு. 16. சுக்கிரனின் திருஷ்டியோடு கூடிய சூரியன் இடபத்திலாவது துலாத்திலாவது இருப்பின் அரசனாகவோ மந்திரியாகவோ ஆகின்றவனும், அதிகஸ்திரீகளும் தனங்களும் போகங்களும் உள்ளவனும், புத்திமானும், தைரியமில்லாதவனும் இருப்பான்.

சு. 17. சனியின் திருஷ்டியோடு கூடிய சூரியன் இடபத்திலாவது துலாத்திலாவது இருப்பின் குலத்திற்கு உசிதமில்லாத நீசத்தொழில்களைச் செய்கின்றவனும், சோம்பலுள்ளவனும், தாரித்திரமுள்ளவனும், வயோதிகமான ஸ்திரீகளினிடத்தில் பிரவேசிக்கின்றவனும், ஒருவிதத்திலும் கட்டுப்படாத துஷ்ட சுபாவமுள்ளவனும், ரோகத்தினால் பீடிக்கப்பட்டவனும் இருப்பான்.

சு. 18-19. சூரியன் மிதுனத்தில் இருக்கும்போது ஜனித்தவன் தாரணா புத்தியோடு கூடியவனும், மதுரமான வாக்கோடு கூடினவ

னும், தயை சந்தோஷம் ஆகிய குணங்களோடு கூடியவனும், சாஸ்திரத்தின்படி நடக்கின்றவனும், சிற்ப சாஸ்திரங்களிலும் வியாகரண சாஸ்திரங்களிலும் சமர்த்தனும், மிகவுந் தனவானும், மேன்மையாகிய வியாபாரத்தை யுடையவனும், சாமர்த்தியசாலியாயும், ஜோதிஷ சாஸ்திரத்தில் திறமையுடையவனும், மெலிவும் தடிப்பும் அழகும் அழகின்மையும் இல்லாத சம ரூபமுடைய சரீரத்தை யுடையவனும், இரண்டு தாய்களுள்ளவனும், சௌபாக்கியமுள்ளவனும், எல்லா விஷயத்திலும் அப்பியாச குணமுள்ளவனும் இருப்பான்.

சு. 20. சந்திரனின் திருஷ்டியோடு கூடிய சூரியன் மிதுனத்திலோ கன்னியிலோ இருப்பின் சத்துருக்களின் மூலமாயும் பந்துக்களின் மூலமாயும் துக்கத்தை யநுபவிக்கின்றவனும், பிற தேச சஞ்சாரத்தினால் அதிக கிலேசத்தையடைபவனும், அதிக சங்கடப்படுகின்றவனும் இருப்பான்.

சு. 21. செவ்வாயின் திருஷ்டியோடு கூடிய சூரியன் மிதுனத்திலோ கன்னியிலோ இருப்பின் சத்துருக்களின்மூலம் பயப்படுகின்றவனும், கலகம் யுத்தம் நிந்தனை தனநஷ்டம் ஆகிய இவைகளால் துக்கிக்கின்றவனும், தரித்திரனும், லஜ்ஜையுள்ளவனும் இருப்பான்.

சு. 22. புதனின் திருஷ்டியோடு கூடிய சூரியன் மிதுனத்திலாவது கன்னியிலாவது இருப்பின் அரசனைப்போன்ற செய்கையுள்ளவனும், பிரசித்தனும், பந்துக்களுள்ளவனும், சத்துருக்களால் தள்ளப்பட்டவனும், நேத்திர ரோகமுள்ளவனும் இருப்பான்.

சு. 23. குருவின் திருஷ்டியோடு கூடிய சூரியன் மிதுனத்திலாவது கன்னியிலாவது இருப்பின் அநேக சாஸ்திரங்களை நன்றாய் வாசித்து உண்மைகளை அறிந்தவனும், சொல்வன்மை உள்ளவனும், அரசனுக்குத் தூதனும், அன்னிய தேசத்தில் சஞ்சரிக்கின்றவனும், மிகுந்த கோபியாயும், புத்திப்பிரமம் உள்ளவனும் இருப்பான்.

சு. 24. சுக்கிரனின் திருஷ்டியோடு கூடிய சூரியன் மிதுனத்திலாவது கன்னியிலாவது இருப்பின் சம்பத்தும் பாரியையும் புத்திரரும் உள்ளவனும், சிநேக குணம் குறைந்திருக்கின்றவனும், ஒரு ரோகங்களுமில்லாதவனும், சௌபாக்கியம் (சர்வஜனப் பிரியத்துவம்) உள்ளவனும் இருப்பான்.

சு. 25. சனியின் திருஷ்டியோடு கூடிய சூரியன் மிதுனத்தி லாவது கன்னியிலாவது இருப்பின் அதிக வேலையாட்களுள்ளவனு யும், பயந்த மனத்தோடு கூடியவனும், தன்னுடைய பந்து வர்க்கங் களுக்கெல்லாம் ஆகார வஸ்திராதிகள் கொடுத்துக் காப்பாற்றுகின்ற தில் பிரியமுள்ளவனும், சூது விளையாடுபவனும் இருப்பான்.

சு. 26-27. சூரியன் கடகத்திலிருக்கும் போது ஜனித்தவன் ஒரு தொழிலிலும் ஸ்திரமில்லாதவனும், அரசனைப்போன்று பிரசித்தனும், தன்னைச் சார்ந்தவனைத் துவேஷிக்கின்ற வனும், ஸ்திரீகளுக்குப் பிரியமில்லாதவனும், தேககாந்தியுள்ள வனும், கபம் பித்தம் இவைகளால் பீடிக்கப்பட்டவனும், வழி நடத்தல் முதலாகிய கிலேசங்களினால் துக்கிக்கின்றவனும், சாராயம் சாப்பிடுகின்றவனும், சமமான தர்மம் உள்ளவனும், சிரேஷ்டமான வாக்கியங்களையும் திக்கு தேசம் காலம் முதலிய அவஸ்தைகளையும் அறிகின்றவனும், அதிகமரியாதையுள்ளவனும், தகப்பன் பாட்டன் முதலிய எல்லோரையும் துவேஷிக்கின்றவனு யும் இருப்பான்.

சு. 28. சந்திரனின் திருஷ்டியோடு கூடிய சூரியன் கடகத்தி லிருப்பின் அரசனாகவோ அரசதுல்லியனாகவோ ஆகின்றவனும், ஜலமார்க்கத்தினால் (கப்பல் பிரயாணம் முதலியன) திரவியங்களை வாங்கி விற்றலால் கிடைத்த தனத்தோடு கூடியவனும், ஸ்திர முள்ளவனும் குரூரனும் இருப்பான்.

சு. 29. செவ்வாயின் திருஷ்டியோடு கூடிய சூரியன் கடகத்தி லிருப்பின் க்ஷயம் பகந்தரம் என்னும் வியாதிகளினால் மிகவும் பீடிக் கப்பட்டவனும், பந்துக்களோடு பற்றில்லாதவனும், துர்ச்சன சுபாவமுள்ளவனும் இருப்பான்.

சு. 30. புதனின் திருஷ்டியோடு கூடிய சூரியன் கடகத்திலிருப் பின் வித்தை மானம் கீர்த்தி இவைகளில் பிரசித்தமுள்ளவனும், அரசனுக்குப் பிரியமுள்ளவனும், காரியங்களில் சாமர்த்திய முள்ள வனும், சத்துருக்களில்லாதவனும் இருப்பான்.

சு. 31. குருவின் திருஷ்டியோடு கூடிய சூரியன் கடகத்திலிருப் பின் சிரேஷ்டமானவனும், மந்திரியாகவோ சேனைத் தலைவனாகவோ ஆகின்றவனும், அதிக பிரசித்தியடைந்தவனும், எல்லா வித் தையிலும் ஞானமுள்ளவனும் இருப்பான்.

சு. 32. சுக்கிரனின் திருஷ்டியோடு கூடிய சூரியன் கடகத்திலிருப்பின் ஸ்திரீகளைச் சார்ந்திருப்பவனும், அவர்கள் மூலமாய்க் கிடைக்கப்பட்ட தனத்தோடு கூடினவனும், பிறர்காரியத்தில் பிரியமுள்ளவனும், யுத்த வீரனும், பிரியமான வார்த்தையைப் பேசுகின்றவனும் இருப்பான்.

சு. 33. சனியின் திருஷ்டியோடு கூடிய சூரியன் கடகத்திலிருப்பின் கபம் வாதம் (வாயு) இவைகளினால் உண்டாகும் ரோகங்களினால் பீடிக்கப்பட்டவனும், பரதிரவியத்தை அபகரிக்கின்றவனும் விபரீதமாக விசாரித்தலும் பிரவர்த்தித்தலும் ஆகிய இவைகளைச் செய்கின்றவனும், துஷ்ட சுபாவமுள்ளவனும் இருப்பான்,

சு. 34-35. சூரியன் சிம்மத்திலிருக்கும்போது ஜனித்தவன் சத்துருக்களை நாசம் செய்கின்றவனும், அதிகமான கோபத்தோடு கூடினவனும், சிறந்த தொழில்களைச் செய்கின்றவனும், காட்டிலும் பர்வதத்திலும் பிரவேசிக்கக் கூடாத மற்ற தேசங்களிலும் சஞ்சரிக்கின்றவனும், உத்சாகமுள்ளவனும், நல்ல சூரத்தனமுள்ளவனும், தேஜஸ்வியாயும் மாமிசபட்சணம் செய்பவனும், குரூரமும் காம்பீரமும் உள்ளவனும், சோர்வில்லாத பராக்கிரமத்தை யுடையவனும், தாராளமாகப் பேசுகின்றவனும், அரசனாகவோ அரசசமானனாகவோ அல்லது தனபுஷ்டியுள்ளவனாகவோ ஆகின்றவனும் இருப்பான்.

சு. 36. சந்திரனின் திருஷ்டியோடு கூடிய சூரியன் சிம்மத்திலிருப்பின் மேதாவியாயும், நல்ல மனைவியையுடையவனும், அரசனுக்கிஷ்டனும், கபத்தினால் சம்பவிக்கும் ரோகத்தால் பீடிக்கப்பட்டவனும் இருப்பான்.

சு. 37. செவ்வாயின் திஷ்டியோடு கூடிய சூரியன் சிம்மத்திலிருப்பின் பரஸ்திரீகளைச் சேருகின்றவனும், யுத்தகளத்தில் தன்னுடைய சாமர்த்தியத்தைக் காண்பிக்கின்றவனும், சாகசகர்மங்களைச் செய்கின்றவனும், காரியங்களில் ஊக்கமுடையவனும், லஜ்ஜையில்லாதவனும், முக்கியவானும் இருப்பான்.

சு. 38. புதனின் திருஷ்டியோடு கூடிய சூரியன் சிம்மத்திலிருப்பின் வித்துவானும், எழுத்து சம்பந்தமான காரியங்களைச் செய்கின்றவனும், சூதுவிளையாடுபவனை ஆசிரயிக்கின்றவனும், ஒன்றுமில்லாதவனாக சஞ்சரிக்கின்றவனும், அதிகமான பராக்கிரமமில்லாதவனும் இருப்பான்.

சு. 39. குருவின் திருஷ்டியோடு கூடிய சூரியன் சிம்மத்திலிருப்பின் தேவாலயங்கள் சிருங்காரவனங்கள் கிணறு குளம் முதலாகிய ஜலாசயங்களை உண்டாக்குகின்றவனும், அதிகமான உற்சாகமுள்ளவனும், யோகம் செய்வதை முன்னிட்டு ஜனங்களில்லாத விடத்தை நோக்குபவனும், மிகவும் புத்தியுள்ளவனும் இருப்பான்.

சு. 40. சுக்கிரனின் திருஷ்டியோடு கூடிய சூரியன் சிம்மத்திலிருப்பின் மூலரோகம் குஷ்டம் என்கிற இந்த ரோகங்களால் பீடிக்கப்பட்டவனும், தயையும் லஜ்ஜையுமில்லாதவனும் இருப்பான்.

சு. 41. சனியின் திருஷ்டியோடு கூடிய சூரியன் சிம்மத்திலிருப்பின் சகல காரியங்களையும் நாசம் செய்கின்றதில் சாமர்த்தியமுள்ளவனும், பௌருஷமில்லாதவனும், பிறர்களைப் பீடிப்பவனும் இருப்பான்.

சு. 42-43. சூரியன் கன்னியிலிருக்கும்போது ஜனித்தவன் ஸ்திரீகளின் சரீரம்போன்ற சரீரமுடையவனும், லஜ்ஜையுள்ளவனும், எழுத்து விஷயத்தில் சமர்த்தனும், பலஹீனனும், நல்ல கதைகளைச் சொல்பவனும், தாரண புத்தியுடையவனும், குறைந்த பராக்கிரமமுடையவனும், வித்துவானும், தேவர்களையும் குருக்களையும் பூஜிக்கின்றவனும், கால் முறிவுகளைச் சிகிச்சித்தல் முதலிய கர்மங்களில் சமர்த்தனும், வேத சாஸ்திரங்கள் சங்கீதம் வீணை வாத்தியங்கள் முதலியவைகளில் பிரியமுள்ளவனும், மெதுவாயும் தீனமாயும் பேசுகின்றவனும் இருப்பான்.

சு. 44-45. சூரியன் துலாத்திலிருக்கும்போது ஜனித்தவன் தோல்வியும் நாசமும் அதிகமான செலவும் உள்ளவனும், தன நஷ்டத்தினால் துக்கிக்கின்றவனும், அன்னிய தேசங்களிலும் வழியிலும் நடக்கின்றவனும், விரோதிக்கப்பட்டவனும், இழிவான கர்மத்தைச் செய்கின்றவனும், சுவர்ணம் இரும்பு முதலான லோகங்களை விற்று ஜீவனம் செய்பவனும், துவேஷிக்கத்தக்கவனும், பிறர் தொழிலைச் செய்கின்றவனும், பரஸ்திரீகளைச் சேருகின்றவனும், அழுக்குள்ளவனும், அகங்காரியாயும் அரசனால் உபத்திரவத்தை அடைந்தவனும் இருப்பான்.

சு. 46-47. சூரியன் விருச்சிகத்திலிருக்கும்போது ஜனித்தவன் எதிரியினால் ஜெயிக்க முடியாத யுத்த வேகத்தை யுடையவனும், வேதோக்தமான கர்மங்களை வெறுக்கின்றவனும், அசத்தியமான

வார்த்தை பேசுகின்றவனும், அறிவில்லாதவனும், கோபமுள்ளவனும், மனைவிக்கு நாசமோ தோஷமோ செய்பவனும், குரூரனும், துஷ்ட ஸ்திரீகளிடத்தில் பிரியமுள்ளவனும், கெட்ட நடத்தையுடையவனும், லோபியாயும், கலகப்பிரியனும், கபடமான வாக்குள்ளவனும், ஆயுதம் அக்கினி விஷம் இவைகளால் பீடிக்கப்பட்டவனும், தாய்தந்தையர்களுக்கு இஷ்டமில்லாதவனும் இருப்பான்.

சு. 48-49. சூரியன் தநுசிலிருக்கும்போது ஜனித்தவன் எல்லாத் திரவியங்களுமுள்ளவனும், அரசனுக்குப் பிரியனும், வித்வானும், தேவர் பிராம்மணர் இவர்களைப் பூஜிக்கின்றவனும், ஆயுதப் பிரயோகம் அம்புகளின் பிரயோகம் யானைகளைப் பழக்குதல் முதலியவைகளில் சாமர்த்தியம் உள்ளவனும், எல்லா வியவகார காரியங்களையும் அறிகின்றவனும், சத்ஜனங்களுக்குப் பூஜ்ஜியனும், மிகவும் சாந்தம் உள்ளவனும், தனவானும், பெருத்து உயர்ந்திருக்கின்ற சரீரத்தையுடையவனும், பந்துக்களுக்கு இஷ்டமான காரியங்களைச் செய்கின்றவனும், சத்தியத்தைக் காப்பாற்றுகின்றவனும் இருப்பான்.

சு. 50. சந்திரனின் திருஷ்டியோடு கூடிய சூரியன் தநுசிலாவது மீனத்திலாவது இருப்பின் நல்ல வார்த்தையும் புத்தியும் புத்திரரும் சம்பத்தும் உள்ளவனும், அரச சமானனும், துக்கமில்லாதவனும், நல்ல சரீரமுள்ளவனும் இருப்பான்.

சு. 51. செவ்வாயின் திருஷ்டியோடு கூடிய சூரியன் தநுசிலாவது மீனத்திலாவது இருப்பின் யுத்த விஷயத்தில் கிடைக்கப்பெற்ற கீர்த்தியோடு கூடினவனும், ஸ்பஷ்டமான வார்த்தையைப் பேசுகின்றவனும், அதிகமான சுகம்சம்பத்து இவைகளை யுடையவனும், மிகுந்த கோபத்தன்மை யுள்ளவனும் இருப்பான்.

சு. 52. புதனின் திருஷ்டியோடுகூடிய சூரியன் தநுசிலாவது மீனத்திலாவது இருப்பின் மதுரமான வார்த்தைகளைப் பேசுகின்றவனும், எழுத்துவேலை செய்பவனும், காவ்யம் கலாவித்தை இவைகளில் நிபுணத்துவம் உள்ளவனும், சதஸில் வெகுமானிக்கப்படுகின்றவனும், வாகனப் பழக்கமுள்ளவனும், தாதுக்களை (சப்தோத்பத்திக்கு ஹேதுக்களாகிய தா ஏத ஸ்பர்த்த இவைகளை) அறிகின்றவனும், (வியாகரணமறிந்தவன்) வெகுஜன சம்மதமுள்ளவனும் இருப்பான்.

சு. 53. குருவின் திருஷ்டியோடுகூடிய சூரியன் தநுசிலாவது மீனத்திலாவது இருப்பின் ராஜகிருகங்களில் சஞ்சரிக்கின்ற

வனுகவோ அல்லது ராஜனுகவோ ஆகின்றவனும், யானை குதிரை மூலமாகத் தனங்களையுடையவனும், வித்வானும் இருப்பான்.

சு. 54. சுக்கிரனின் திருஷ்டியோடுகூடிய சூரியன் தநுசிலாவது மீனத்திலாவது இருப்பின் திவ்வியமான ஸ்திரீகளின் போக சுகங்களை அனுபவிக்கின்றவனும், நல்ல வாசனையுள்ள மாலைகள் முதலியன உடையவனும், மிகுந்த சாந்தகுணமுள்ளவனும் இருப்பான்.

சு. 55. சனியின் திருஷ்டியோடுகூடிய சூரியன் தநுசிலாவது மீனத்திலாவது இருப்பின் சுத்தமில்லாதவனும், பரான்னத்தினுல் ஜீவிக்கப்பட்டவனும், இழிகுலத்தவர்களின் நடத்தையை யுடையவனும், பசு மிருகாதிகளினிடத்தில் கிரீடை செய்கின்றவனும் இருப்பான்.

சு. 56 - 57. சூரியன் மகரத்திலிருக்கும்போது ஜனித்தவன் பேராசையுள்ளவனும், துஷ்ட ஸ்திரீகளினிடத்தில் பிரியமுள்ளவனும், நித்திய கர்மங்களை வர்த்தித்தவனும், அதிக ஆசையுள்ளவனும், வெகு கர்மங்களைச் செய்கின்றவனும், பந்துக்களில்லாதவனும், ஸ்திரமில்லாத சுபாவத்தையுடையவனும், சதா சஞ்சாரியாயும், பராக்கிரமமில்லாதவனும், தன்னைச் சார்ந்தவர்கள் சிநேகிதர்கள் பந்துக்கள் மூலமாய் சகல திரவியங்களையும் இழந்தவனும், மிதமில்லாமல் சாப்பிடுகின்றவனும் இருப்பான்.

சு. 58. சந்திரனின் திருஷ்டியோடு கூடிய சூரியன் மகரத்திலாவது கும்பத்திலாவது இருப்பின் கபடம் வஞ்சனை முதலியவைகளில் சமர்த்தனும், மன ஊக்கமில்லாதவனும், ஸ்திரீ சங்கமத்தினுல் தனம் சுகம் இவைகளை இழந்தவனும் இருப்பான்.

சு. 59. செவ்வாயின் திருஷ்டியோடு கூடிய சூரியன், மகரத்திலாவது கும்பத்திலாவது இருப்பின் ரோகத்தினுல் பீடிக்கப்பட்டவனும், சத்துருக்களால் உபத்திரவிக்கப்பட்டவனும், யுத்தத்தில் சத்துருக்களின் ஆயுதங்களினுல் வெட்டப்பட்ட அவயவங்களையுடையவனும், அங்க பேதமுள்ளவனும் இருப்பான்.

சு. 60. புதனின் திருஷ்டியோடுகூடிய சூரியன், மகரத்திலாவது கும்பத்திலாவது இருப்பின் யுத்தத்தில் சாமர்த்தியமுள்ளவனும், பௌருஷமில்லாத சுபாவத்தை யுடையவனும், பர திரவியத்தை அபகரிக்கின்றவனும், பலமில்லாத அங்கங்களை யுடையவனும் இருப்பான்.

சு. 61. குருவின் திருஷ்டியோடு கூடிய சூரியன் மகரத்திலாவது கும்பத்திலாவது இருப்பின் நல்ல காரியங்களைச் செய்கின்றவனும், புத்திமானும், எல்லோரையும் காப்பாற்றுபவனும், மகத்தான யஜசு உள்ளவனும், நல்ல மனது உடையவனும் இருப்பான்.

சு. 62. சுக்கிரனின் திருஷ்டியோடு கூடிய சூரியன், மகரத்திலாவது கும்பத்திலாவது இருப்பின் சங்கு பவளம் முதலான சிரேஷ்ட வஸ்துக்களினால் கிடைக்கின்ற தனத்தினால் ஜீவனம் செய்கின்றவனும், வேசிய ஸ்திரீயோடு கூடினவனும், மிகவும் தனவானும், சுகமுள்ளவனும் இருப்பான்.

சு. 63. சனியின் திருஷ்டியோடு கூடிய சூரியன் மகரத்திலாவது கும்பத்திலாவது இருப்பின் சத்துருக்களின் கூட்டத்தை அழிப்பவனும், அரசனிடமிருந்து கிடைக்கப்பெற்ற சன்மானத்தினால் மனது சமாதான மடைபவனும், மிகுந்த சுகங்களை யடைகின்றவனும் இருப்பான்.

சு. 64-65. சூரியன் கும்பத்திலிருக்கும்போது ஜனித்தவன் ஹிருதய ரோகம் உள்ளவனும், வெகு சத்துவகுணமுள்ளவனும், சுத்ஜனங்களுக்கு நிந்தியனும், மிக்க கோபியாயும், பிறர்மனைவிகளிடம் இஷ்டமுள்ளவனும், எல்லாக் கர்மங்களிலும் ஊக்க முள்ளவனும், மிகவும் துக்கத்தை அநுபவிக்கின்றவனும், சொற்பதனம் உள்ளவனும், சினேகத்திற்குப் பிரியமில்லாதவனும், அழுக்குள்ள சரீரத்தை யுடையவனும், நிந்திக்குமாறு அர்த்தமில்லாமல் பேசுந் தன்மையுள்ளவனும் இருப்பான்.

சு. 66-67. சூரியன் மீனத்திலிருக்கும்போது ஜனித்தவன் பந்துக்களைச் சம்பாதிப்பதில் சாமர்த்திய முள்ளவனும், ஸ்திரீகளுடைய சந்தோஷத்தினால் சுக சாதனங்களான சாமக்கிரியைகளைச் சம்பாதிக்கின்றவனும், வித்வானும், மிகவும் சத்துருக்களை நாசம் செய்கின்றவனும், க்ஷயமும் விருத்தியும் உள்ளவனும், தனம் யஜசு இவைகளுள்ளவனும், நல்லபுத்திரர்களினாலும் வேலையாட்களினாலும் கிடைக்கப்பட்ட கீர்த்தியையுடையவனும், ஜலத்திலிருந்து உண்டாகின்ற திரவியங்களை (முத்து முதலானவை) விற்று ஜீவிக்கின்றவனும், நன்றாகவும் தந்திரமாகவும் உள்ள வார்த்தைகளைப் பேசுகின்றவனும், கடினமான பகந்தரரோகம் உள்ளவனும், அதிகமான சகோதரர்கள் உள்ளவனும் இருப்பான்.

கிரகங்களுடைய பூர்ண திருஷ்டியினுல் பலன்கள் பூர்ணமாய்ச் சம்பவிக்கும். சூரியனிருக்கின்ற ராசிக்கு மூன்றும் ராசியில் புதனும், நான்கா மிராசியில் சுக்கிரனும் கணிதப் பிரகாரம் நிற்கமாட்டார்கள். சூரியஸ்புடத்தின் முன்பின் 27-பாகைக்குப் பின் புதனும், 47 பாகைக்குப்பின் சுக்கிரனும் வருவார்களென்பதற்குப் பிரமாண மில்லை. இதனுல் சூரியனுக்குப் புத திருஷ்டியும் சுக்கிர திருஷ்டியும் எவ்விதம் சம்பவிக்கும் என்ற ஒரு கேள்வி எழுதற்கிடமுண்டெனில், (திருச்யே திருஷ்ட்ரு விவர்ஜிதே) என்ற ஸ்ரீபதி பத்த திவசனப் பிரகாரம் சூரியனுக்குச் சுக்கிர திருஷ்டி கொஞ்சம் சம்பவிக்குமென்றுலும், புத திருஷ்டி கொஞ்சங்கூட சம்பவிக்க மாட்டாது. நாபஸ யோகத்தில் கூறப்பட்ட வஜ்ஜிராதி யோகங்களுக்கும் இதைப்போல் அசாங்கத்தியம் உள்ளதாகின்றது. ஆனுல் தபஸ் சக்தியும் தைவானுக்கிரகமும் உள்ள பூர்வாசாரியர்களான மகருஷிகள் ஒருக்காலத்திலும் இல்லாததொன்றைச் சொல்லார்கள். ஆனதால் சூரியனிருக்குமிடத்திலிருந்து புத சுக்கிரர்கள் மேற்கூறிய பாகைகளைத் தாண்டி முன்னொரு கற்பத்தில் சஞ்சரித்தார்களென்றும், அதுபோலவே பின்னொரு கற்பத்தில் சஞ்சரிப்பார்களென்றும் பெறப்படுகின்றது. ஆனதால் எழுதற்கிடமின்று. மேற்சொன்ன பலன்கள் நிரூபிக்கத் தக்கதாகுமென்றும், சோதிட சாஸ்திர கிரந்தங்களிலிருந்தே இஃது அநுமானிக்கத் தக்கதென்றும் தெளிவுபடுத்தி இவ்விருபத்திரண்டாவது அத்தியாயத்தைச் சமாப்தி செய்கின்றுர்.

இருபத்திரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

# இருபத்துமூன்றுவது அத்தியாயம்.

## சந்திராஸ்ரய ராசிபலமும் திருஷ்டி பலமும்.

சு. 1. மேடாதி ராசிகளில் சந்திரன் இருப்பதினுல் உண்டாகும் பலனேயும் மற்றக் கிரகங்களின் திருஷ்டியினுல் உண்டாகும் பலனேயும் தெளிவாய்க் கூறுகின்றுர்.

சந்திரன்-மேடவி ராசியிலிருக்கச் சனித்தவன் பிறர்களே ஆராதிப்பதில் சாமர்த்திய முள்ளவனும், அதிக தனமில்லாதவனும், சகோதரர்களே விட்டுப் பிரிந்தவனும், சாகசப் பிரவிருத்தியைச் செய்கின்றவனும், சுபமில்லாதவனும், காமபீடையுள்ளவனும், மாமிசமில்லாமல் மெலிந்திருக்கின்ற முழங்காலேயும் கெட்ட நகத்தையும் சரீரத்தையும் சிரோரோமங்களேயும் உடையவனும், ஸ்திரமில்லாதவனும், கவுரவத்தோடு கூடினவனும், தாமரைப்போன்ற மிருதுவானதும் அழகுள்ளதுமான கைகால்களுடையவனும், அதிக புத்திரர்களுடையவனும், கொஞ்சம் சிவந்து வட்டமாயிருக்கின்ற நேத்திரங்களுடையவனும், எல்லாரிடத்திலும் சந்தோஷமுடையவனும், ஜலத்திற்குப் பயமுள்ளவனும், புண்முதலியவைகளால் விருபமோ அடையாளமோ உள்ள சிரசோடு கூடினவனும், ஸ்திரீகளுக்கு அதீனனும் இருப்பான்.

சு. 2. சந்திரன் மேடத்திலிருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் அதிக குரூர முள்ளவனும், அரசனே அரசசமானனே ஆகின்றவனும், தன்னே ஆசிரயித்துப் பாதத்தில் வீழ்ந்து வணங்குகின்றவர்களிடத்தில் தயவுள்ளவனும், தீரத்தன்மையுள்ளவனும், யுத்தத்தில் பிரியமுள்ளவனும் இருப்பான்.

சு. 3. சந்திரன்-மேடத்திலிருந்து செவ்வாயின் திருஷ்டியைப் பெறின் பல் நேத்திரம் இவைகளில் ரோகமுள்ளவனும், விஷம் அக்கினி வாதம் ஆயுதம் இவைகளினுல் சரீரத்திற்குத் தோஷம் சம்பவித்தவனும், மண்டலாதிபதியாயும், மூத்திரக் கிரிச்சரம் என்னும் ரோகத்தால் கஷ்டப்படுபவனும் இருப்பான்.

சு. 4. சந்திரன் மேடத்திலிருந்து புதனின் திருஷ்டியைப் பெறின் பல வித்தைகளே உபதேசிக்கும் ஆசார்யனும், வேண்டிய

வாறு பேசுகின்றவனும், தைரியமில்லாமல் சபலமாயிருக்கும் மனசுடையவனும், நல்லகவிதனும், மகத்தான யஜசு உள்ளவனும் இருப்பான்.

சு. 5. சந்திரன் மேடத்திலிருந்து குருவின் திருஷ்டியைப் பெறின் அதிக வேலையாட்களும் தனமும் நிறைந்தவனும், அரச மந்திரியாகவோ சேனாநாயகனாகவோ ஆகின்றவனும் இருப்பான்.

சு. 6. சந்திரன் மேடத்திலிருந்து சுக்கிரனின் திருஷ்டியைப் பெறின் எல்லாருக்கும் ஆனந்தத்தை விளைவிக்கும் அழகான சரீரமும் புத்திரர்களும் தனங்களும் உள்ளவனும், சிரேஷ்டமும் யௌவனமுமான ஸ்திரீகளையுடையவனும், மிதமாகச் சாப்பிடுகின்றவனும் இருப்பான்.

சு. 7. சந்திரன் மேடத்திலிருந்து சனியின் திருஷ்டியைப்பெறின் எல்லாருடைய விரோதத்தையடைபவனும், அதிக துக்கமுள்ளவனும், தரித்திரத்தால் பீடிக்கப்பட்டவனும், தேகமும் வேஷமும் சுத்தமில்லாதவனும், பொய் பேசுகின்றவனும் இருப்பான்.

சு. 8. சந்திரன் இடபவிராசியிலிருக்கச் சனித்தவன் விஸ்தாரமான பார்வையுடையவனும், அதிக தானம் செய்கின்றவனும், கறுத்து சுருண்டிருக்கின்ற ரோமங்களையுடையவனும், காமசீலமுள்ளவனும், கீர்த்திமானும், சௌந்தரிய முள்ளவனும், புருஷசந்தானங்கள் குறைந்து ஸ்திரீ சந்தானங்கள் அதிகமுடையவனும், விருஷபத்தின் நேத்திரம் போன்ற நேத்திரங்களையுடையவனும், அன்னப்பட்சியைப் போன்ற விசாலமுள்ள சஞ்சாரத்தை யுடையவனும், யௌவனத்திலும் வயோதிகத்திலும் ஒன்றுபோல அதிக சுகத்தையநுபவிக்கின்றவனும், தடித்திருக்கின்ற கை கால்கள் தோள்கள் முழங்கால்கள் கணுக்கால்கள் முகம் இவைகளுள்ளவனும், பார்சுவத்திலும் முகத்திலும் பின்பாகத்திலும் அடையாளங்களுள்ளவனும், ககுதம் (திமில்) உடையவனும், அதிருஷ்டமுள்ளவனும், பொறுமையுள்ளவனும் இருப்பான்.

சு. 9. சந்திரன் இடபத்திலிருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் பயிர்த்தொழில் உள்ளவனும், எல்லாக் கர்மங்களிலும் அதிக உத்சாகமும் சாமர்த்தியமும் உள்ளவனும், நாற்கால் மிருகங்களை (பசு காளை எருமை கழுதை குதிரை ஒட்டகம்) உடையவனும், சேவகத்தொழில் செய்யும் ஜனங்களை உடையவனும், தனவானும், பிரயோகங்களை அறிகின்றவனும் இருப்பான்.

சு. 10. சந்திரன் இடபத்திலிருந்து செவ்வாயின் திருஷ்டியைப் பெறின் அதிக காமியாயும், ஸ்திரீயின் மூலம் பலமும் பந்து ஜனங்களும் நசித்தவனும், ஸ்திரீகளின் மனதை மிகவும் கவருகின்றவனும், தாய்க்கு இஷ்டமில்லாதவனும் இருப்பான்.

சு. 11. சந்திரன் இடபத்திலிருந்து புதனின் திருஷ்டியைப் பெறின் கர்த்துரு கர்மாதிகாரங்களோடு கூடிய பதசமூகத்தைச் சமயோசிதமாய் யோசித்துப் பேசுவதில் சாமர்த்தியமுள்ளவனும், சந்துஷ்டனும், சகல ஜீவர்கட்கும் இஷ்டனும், ஒன்றுபோலில்லாத அநேக குணங்கள் உள்ளவனும் இருப்பான்.

சு. 12. சந்திரன் இடபத்திலிருந்து குருவின் திருஷ்டியைப் பெறின் ஸ்திரமான புத்திரர்களும் மனைவிகளும் பந்துக்களும் உள்ளவனும், தாய் தந்தையர்களிடம் பக்தியுள்ளவனும், அதிக நிபுணனும், தர்மகாரியங்களைச் செய்கின்றவனும், மிகவும் பிரசித்தனும் இருப்பான்.

சு. 13. சந்திரன் இடபத்திலிருந்து சுக்கிரனின் திருஷ்டியைப் பெறின் விசேஷமான ஆபரணங்கள் வாகனங்கள் வீடுகள் கட்டில்கள் மெத்தைகள் பீடங்கள் பாய்கள் சுகந்த திரவியங்கள் மாலைகள் வஸ்திரங்கள் முதலானவைகளைச் சம்பாதிக்கின்றவனும், அவைகளால் சுகங்களை அநுபவிக்கின்றவனும் இருப்பான்.

சு. 14-15. சந்திரன் இடபத்திலிருந்து சனியின் திருஷ்டியைப் பெறின் பொருளில்லாதவனும், எல்லார்க்கும் அனிஷ்டத்தைச் செய்கின்றவனும், ஸ்திரீகளுக்கு இஷ்டமில்லாதவனும், புத்திரர்களும் பந்துக்களும் சிநேகிதர்களும் உள்ளவனும் இருப்பான். இடபராசியின் முற்பாதியில் சந்திரன் இருப்பின் மாதாவிற்கும், பிற்பாதியில் இருப்பின் பிதாவிற்கும் உடனே மரணம் உண்டாகும்.

சு. 16. சந்திரன் மிதுன விராசியிலிருக்கச் சனித்தவன் உயர்ந்த மூக்கும் கருமை நிறமுமுள்ள நேத்திரங்களுமுடையவனும், அதிகமான விதிகளையும் கலைகளையும் காவியங்களையும் உண்டாக்குகின்றவனும், சுகாநுபவமுடையவனும், அஸ்தத்தில் மச்ச ரேகையுள்ளவனும், விஷய சுகத்தில் பிரியமுள்ளவனும், புத்தி சாமர்த்தியமுள்ளவனும், சரீரத்தில் சிறு நரம்புகள் உள்ளவனும், தர்சனீயனும், சௌபாக்கிய முள்ளவனும், ஹாஸ்யமாகவும் பிரியமாகவும் இருக்கின்றவார்த்தைகளைப் பேசுகின்றவனும், ஸ்திரீகளுக்கு அதீனனும், நீண்ட சரீர முள்ளவனும், புருஷத்துவமில்லாதவர்க

ளோடு சேர்க்கையில்லாதவனும், சந்தோஷ சீலமுள்ளவனும், இரண்டு தாய்களால் வளர்க்கப்பட்டவனும் இருப்பான்.

சு. 17. சந்திரன் மிதுனத்திலிருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் புத்திமானும், சௌந்தர்ய முள்ளவனும், மிகவும்தர் மிஷ்டனும், அதிக துக்கத்தை யுடையவனும், அதிக தனமில்லா தவனும் இருப்பான்.

சு. 18. சந்திரன் மிதுனத்திலிருந்து சேவ்வாயின் திருஷ்டியைப் பெறின் வெகு சூரனும், அறிவுள்ளவனும், சுகம் வாகனம் தனம் சௌந்தரியம் ஆகிய இவைகள் உள்ளவனும் இருப்பான்.

சு. 19. சந்திரன் மிதுனத்திலிருந்து புதனின் திருஷ்டியைப் பெறின் தனம் முதலிய சப்பத்துக்களைச் சம்பாதிப்பதில் சாமர்த்தியம் உள் ளவனும், ஒரு காரியத்திலும் தோல்வி யடையாதவனும், மிகவும் தீரம் உள்ளவனும், அரசனாகவாவது அல்லது அரச சமானனாக வாவது ஆகின்றவனும், பிறரால் அறியப்படாததும் மாறுபாடில் லாததுமான சக்தியை உடையவனும் இருப்பான்.

சு. 20. சந்திரன் மிதுனத்திலிருந்து குருவின் திருஷ்டியைப் பெறின் எல்லா வித்தைகளையும் சாஸ்திரங்களையும் உபதேசிக்கும் ஆசிரியனும், பிரசித்தியுள்ளவனும், உண்மையைச் சொல்பவ னும், சௌந்தரிய முடையவனும், எல்லா விஷயத்திலும் வெகு மானிக்கப்படும் யோக்கியதை யுள்ளவனும், நல்ல வாக்கு சாமர்த் திய முடையவனும் இருப்பான்.

சு. 21. சந்திரன் மிதுனத்திலிருந்து சுக்கிரனின் திருஷ்டியைப் பெறின் சிரேஷ்டமும் யௌவனமுமுடைய ஸ்திரீகள் மாலைகள் விசேட வஸ்திரங்கள் உத்தம வாகனங்கள் கட்டில்கள் மெத்தைகள் சுவர்ண முதலிய ஆபரணங்கள் இரத்தினங்கள் ஆகிய இவைகளையுடையவ னும், இவைகளினால் சுகத்தை அடைபவனும் இருப்பான்.

சு. 22. சந்திரன் மிதுனத்திலிருந்து சனியின் திருஷ்டியைப் பெறின் பந்துக்களை விட்டுப் பிரிந்தவனும், பாரியை சுகம் தனம் ஆகிய ஐசுவரியங்கள் இல்லாதவனும், ஜனங்களால் துவேஷிக்கப் படுகின்றவனும் இருப்பான்.

சு. 23. சந்திரன் கடக விராசியிலிருக்கச் சனித்தவன் சௌபாக் கியமும் தைரியமும் உள்ளவனும், அதிக பந்துக்களோடும் கிருகங் களோடும் கூடினவனும், எப்போதும் சஞ்சரிக்கின்றவனும், ஜோதிஷ சாஸ்திரத்தை அறிகின்றவனும், மிகவும் காமனும், உப

கார ஸ்மரணையுள்ளவனும், மந்திரியாயும், அதிக சாஸ்திரங்களை அறிகின்றவனும், பிறதேசத்தில் வாசஞ்செய்கின்றவனும், உன்மாத சுபாவத்தையுடையவனும், கிலேசங்களைச் சகிக்கின்றவனும், ஜலத்திலும் புஷ்பத்திலும் பிரியமுள்ளவனும், சந்திரனைப் போன்று குறைவும் விருத்தியுமுள்ள தனமுடையவனும், பிராசாதங்களிலும் (மாளிகை ராஜகிருகம்) நந்தவனங்களிலும் ஜலாசயங்களிலும் வசிக்கவும் விளையாடவும் அவைகளை யுண்டாக்கவும் பிரியமுள்ளவனும், தடித்த கழுத்தோடு கூடினவனும் இருப்பான்.

சு. 24. சந்திரன் கடகத்திலிருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் அரசனின் போர்வீரனும், திருப்தியில்லாதவனும், தரித்திர முடையவனும், பிறருக்குக் கிலேசங்களை யுண்டாக்குகின்றவனும், வனங்களையோ கோட்டைகளையோ காத்துரக்ஷிக்கின்றவனும் இருப்பான்.

சு. 25. சந்திரன் கடகத்திலிருந்து செவ்வாயின் திருஷ்டியைப் பெறின் யுத்த சாமர்த்திய முடையவனும், அங்கக்குறைவு உள்ளவனும், தாய்க்குக் கெடுதியை உண்டாக்குகின்றவனும், எல்லாருக்கும் பிரியமுள்ளவனும், காரியாதிகளில் சாமர்த்திய முள்ளவனும் இருப்பான்.

சு. 26. சந்திரன் கடகத்திலிருந்து புதனின் திருஷ்டியைப்பெறின் புத்தி சத்தியுள்ளவனும், நயமுள்ளவனும், தனமும் புத்திரர்களும் உள்ளவனும், மந்திரியாயும் இருப்பான்.

சு. 27. சந்திரன் கடகத்திலிருந்து குருவின் திருஷ்டியைப்பெறின் அரசனாகவோ அரச சமானனாகவோ ஆகின்றவனும், நயம் விநயம் பராக்கிரமம் ஆகிய இவைகளையுடையவனும், சுகம் அநுபவிக்கின்றவனும், நல்ல மனையாளை உடையவனும் இருப்பான்.

சு. 28. சந்திரன் கடகத்திலிருந்து சுக்கிரனின் திருஷ்டியைப் பெறின் அதிக தனங்களும் சுவர்ணங்களும் வஸ்திரங்களும் ஸ்திரீகளும் இரத்தினங்களும் உள்ளவனும், வேசியாதி ஜனங்களுக்கு நாயகத்துவம் வகிக்கின்றவனும், சுந்தரனும் இருப்பான்.

சு. 29. சந்திரன் கடகத்திலிருந்து சனியின் திருஷ்டியைப் பெறின் எப்போதும் சஞ்சரிக்கின்றவனும், சுகமும் தனமும் இல்லாதவனும், தாய்க்கு இஷ்டமில்லாதவனும், பொய் பேசுவதிலும் கபடஞ்செய்வதிலும் பிரியமுள்ளவனும், பாபமுடையவனும், உசித மில்லாத இழிவான காரியங்களைச் செய்கின்றவனும் இருப்பான்.

சு. 30. சந்திரன் சிம்மவிராசியிலிருக்கச் சனித்தவன் புஷ்டியான எலும்புகளையுடையவனும், ரோமங்கள் குறைந்தவனும், பெருத்த கழுத்து முகம் இவைகளோடு கூடினவனும், சிறுத்து ஆழ்ந்து சிவப்பு கலந்த நேத்திரங்களையுடையவனும், ஸ்திரீகளைத் துவேஷிக்கின்றவனும், அதிகமான பசியும் தாகமும் உள்ளவனும், பற்களிலும் வயிற்றிலும் உண்டாகும் ரோகத்தால் பீடிக்கப்பட்டவனும், மாமிசம் உண்பவனும், தான சீல முள்ளவனும், அதிக கோபியாயும், குறைந்த புத்திரர்கள் உடையவனும், மலைகளிலும் வனங்களிலும் சஞ்சரிக்கின்றவனும், மாதாவுக்கு வசியப்பட்டவனும், அழகான பாரியை யுடையவனும், சூரனும், காரியமின்றிக் கோபிப்பவனும் இருப்பான்.

சு. 31. சந்திரன் சிம்மத்திலிருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் அரசனுக்குச் சத்துருவாயும், மிகவும் மேன்மையான குணங்களை யுடையவனும், பெருஞ் சப்தத்துடன் பேசுபவனும், தீரமுள்ளவனும், (சூரன் எனவும் பாடமுளது) பாபகர்மங்களைச் செய்கின்றவனும், பிரசித்தனும் இருப்பான்.

சு. 32. சந்திரன் சிம்மத்திலிருந்து செவ்வாயின் திருஷ்டியைப் பெறின் சேனாதிபதியாயும், அதிக கோபத்தை யுடையவனும், அதிகமான மனுஷ்யர்கள் ஸ்திரீகள் புத்திரர்கள் தனங்கள் வாகனங்கள் இவைகளை யுடையவனும், சிரேஷ்டமான புருஷனும் இருப்பான்.

சு. 33. சந்திரன் சிம்மத்திலிருந்து புதனின் திருஷ்டியைப்பெறின் ஸ்திரீகளைப்போல் சபலமும் சேஷ்டைகளும் விலாசங்களும் உள்ளவனும், ஸ்திரீகளுக்கு வசப்பட்டவனும் ,ஸ்திரீகளைத் தழுவியிருக்கின்றவனும், தனம் சுகம் போகம் இவைகள் உள்ளவனும் இருப்பான்.

சு. 34. சந்திரன் சிம்மத்திலிருந்து குருவின் திருஷ்டியைப்பெறின் சிரேஷ்டமான வம்ச பரம்பரையில் உதித்தவனும், தன்னுடைய குலத்தில் பிறந்த புத்திரர்களை யுடையவனும், அதிக சாஸ்திரங்களை அப்பியசித்தவனும், பிரசித்தியுள்ளவனும், குணம் நிறைந்தவனும், அரசசமானனும் இருப்பான்.

சு. 35. சந்திரன் சிம்மத்திலிருந்து சுக்கிரனின் திருஷ்டியைப் பெறின் ஸ்திரீகள் சம்பத்துக்கள் இவைகளோடு கூடினவனும், ரோகியாயும், ஸ்திரீகளை ஆசிரயிக்கின்றவனும், சுரத விதிகளை (காம

சாஸ்திரத்தை) அறிந்தவனும், வித்வத்தன்மையுள்ளவனும் இருப்பான்.

சு. 36. சந்திரன் சிம்மத்திலிருந்து சனியின் திருஷ்டியைப் பெறின் பயிர்த்தொழில் செய்பவனும், தனமில்லாதவனும், பொய் பேசுகின்றவனும், காடுகளையும் கோட்டைகளையும் காவல் புரிகின்றவனும், சுகமில்லாத பாரியை யுடையவனும், சாரமில்லாதவனும் இருப்பான்.

சு. 37. சந்திரன் கன்னியா விராசியிலிருக்கச் சனித்தவன் ஸ்திரீ லோலனும், தாழ்ந்திருக்கின்ற தோள்களையும் கைகளையும் உடையவனும், அழகுள்ள சரீரம் முகம் உள்ளவனும், அழகான பற்களும் கண்களும் காதுகளும் உள்ளவனும், வித்துவானும், பூஜ்யனும், நல்ல தர்மங்களைச் செய்கின்றவனும், இஷ்டமான வார்த்தையைப் பேசுகின்றவனும், சத்தியம் சுகம் உள்ளவனும், தீரமுள்ளவனும், எல்லா ஜீவராசிகளிடத்திலும் தயையுள்ளவனும், பிறர் திரவியங்களும் கிருகங்களும் கிடைக்கும் யோகமுள்ளவனும், அன்னிய தேசத்தில் வாசம்செய்கின்றவனும், பொறுமையோடு கூடினவனும், சௌபாக்கிய முள்ளவனும், அதிக ஸ்திரீ சந்தானங்களை யுடையவனும், சம்போகத்தில் அதிக பிரிய முள்ளவனும் இருப்பான்.

சு. 38. சந்திரன் கன்னியிலிருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் அரசனுடைய பொக்கிஷ சம்பந்தமான தொழிலை யுடையவனும், பிரசித்தனும் கர்த்துரு கர்மாதி வியாகரண நியமம் அநுசரித்துள்ள வாக்கியங்களுடைய சமூகத்தைக் கிரகிக்கின்றவனும், பிரசித்த கர்மங்களைச் செய்கின்றவனும், மனையாளில்லாதவனும் இருப்பான்.

சு. 39. சந்திரன் கன்னியிலிருந்து செவ்வாயின் திருஷ்டியைப் பெறின் சிற்ப வித்தையை உபதேசிக்கின்றவனும், பிரசித்தனும், தனவானும், எல்லா விஷயங்களிலும் நன்ருகப் பழகினவனும், மிகவும் தீரனும், மாதாவிற்குத் துக்கத்தைச் செய்கின்றவனும் இருப்பான்.

சு. 40. சந்திரன் கன்னியிலிருந்து புதனின் திருஷ்டியைப் பெறின் சோதிட சாஸ்திரங்களையும் காவியங்களையும் விதிகளையும் அறிகின்றவனும், வியவகாரம் கலகம் இவைகளில் ஜயம் அடைபவனும், சௌபாக்கிய முடையவனும், அதிக நிபுணனும் இருப்பான்.

சு. 41. சந்திரன் கன்னியிலிருந்து குருவின் திருஷ்டியைப்பெறின் பந்து ஜனங்களோடு கூடியவனும், சுகமனுபவிக்கின்றவனும், அரசனுடைய நடவடிக்கைகளைச் செய்கின்றவனும், வாக்கியங்களைக் கிரகிக்கின்றவனும், தனவானும் இருப்பான்.

சு. 42. சந்திரன் கன்னியிலிருந்து சுக்கிரனின் திருஷ்டியைப் பெறின் அதிக மனையாளை யுடையவனும், பலவிதமான அலங்கார சாதனங்களைத் தரிக்கின்றவனும், பிரபுத்துவ முள்ளவனும், எப்போதும் ஊர்ஜ்ஜிதனும், சந்தோஷ முள்ளவனும் இருப்பான்.

சு. 43. சந்திரன் கன்னியிலிருந்து சனியின் திருஷ்டியைப்பெறின் ஒற்றுமை யில்லாதவனும், தரித்திரனும், ஒரு சுகமுமில்லாதவனும், மாதாவோடு வேறுபட்டவனும், ஸ்திரீகளுக்கு அதீனனும், ஸ்திரீமூலம் கிடைக்கப்பட்ட பொருளும் பாக்கியமும் உள்ளவனும் இருப்பான்.

சு. 44. சந்திரன் துலாவிராசியிலிருக்கச் சனித்தவன் உயர்ந்த மூக்கும் நீண்டிருக்கும் கண்களும் புஷ்டியில்லாத முகமும் பெருத்து உயரமாயிருக்கின்ற சரீரமும் உடையவனும், வெகுமனைவியை யுடையவனும், சுகிருத முள்ளவனும், காளையின் குஹ்பம் விருஷணங்கள் (ஆண்குறி பீஜம்) போல குஹ்ப விருஷணங்களை உடையவனும், சுத்தம் (பிறர் திரவியங்களில் அபேட்சை யில்லாதவன்) உள்ளவனும், விக்கிரமனும், கிரியைகளுக்கு நாயகனும், தேவர்களிடத்திலும் பிராமணர்களிடத்திலும் பக்தியுள்ளவனும், அங்கஹீனனும், வெகுசம்பத்தை யுடையவனும், பெண் சொற் கேட்பவனும், தானியங்களைச் சம்பாதிப்பதில் பிரியமுள்ளவனும், பந்து வர்க்கங்களுக்கு உபகாரங்களைச் செய்கின்றவனும் இருப்பான்.

சு. 45. சந்திரன் துலாத்திலிருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் தனஹீனனும், ரோகபீடிதனும், வழிநடப்பதில் பிரியமுள்ளவனும், காரியங்களில் தோல்வியடைபவனும், சுகானுபவமில்லாதவனும், புத்திரர்கள் பலம் இவைகளில்லாதவனும் இருப்பான்.

சு. 46. சந்திரன் துலாத்திலிருந்து செவ்வாயின் திருஷ்டியைப் பெறின் கோபசீலனும், திருடுகின்றவனும், க்ஷுத்திரனும், (அல்பன் நிஸ்ஸாரன் லுத்தன்) பரஸ்திரீகளும் சுகந்த திரவியங்களும் மாலைகளும் உள்ளவனும், நேத்திர ரோகமுள்ளவனும், புத்திமானும் இருப்பான்.

சு. 47. சந்திரன் துலாத்திலிருந்து புதனின் திருஷ்டியைப் பெறின் கலாவித்தைகளில் திறமைவாய்ந்தவனும், அதிக தனங்களும் தானியங்களுமுள்ளவனும், நல்ல வார்த்தைகளைப் பேசுகின்றவனும், வித்வானும், தேசப் பிரசித்தனும் இருப்பான்.

சு. 48. சந்திரன் துலாத்திலிருந்து குருவின் திருஷ்டியைப் பெறின் எல்லாவிடத்திலும் பூசிக்கப்படுகின்றவனும், கிரய விக்கிரயங்களில் சாமர்த்தியமுள்ளவனும், இரத்தினதி திரவியங்களையும் மண்முதலான பாத்திரங்களையும் வியாபாரங்கள் செய்வதில் சமர்த்தனும் இருப்பான்.

சு. 49. சந்திரன் துலாத்திலிருந்து சுக்கிரனின் திருஷ்டியைப் பெறின் அழகுவாய்ந்தவனும், ரோகமில்லாதவனும், அதிர்ஷ்டமுள்ளவனும், எல்லாருக்கும் பார்க்கத்தகுந்தவனும், பூர்ணமான அங்கமுள்ளவனும், தனவானும், வித்வானும், பலவிதமான உபாயங்களைப் பிரயோகிக்கின்றவனும் இருப்பான்.

சு. 50. சந்திரன் துலாத்திலிருந்து சனியின் திருஷ்டியைப் பெறின் மிகவும் தனவானும், சந்தோஷகரமான வார்த்தைகளைப் பேசுகின்றவனும், வாகனங்களுடையவனும், விஷயங்களில் (இந்திரிய விஷயங்களில்) பிரியமுள்ளவனும், சுகமில்லாதவனும், மாதாவிற்குப் பிரியமுள்ளவனும் இருப்பான்.

சு. 51. சந்திரன் விருச்சிகத்திலிருக்கச் சனித்தவன் பேராசையுள்ளவனும், பெருத்து உருண்டையாயிருக்கின்ற தொடைகளும் கணுக்கால்களும் உடையவனும், மிகவும் கடினமான சரீரத்தையுடையவனும், நாஸ்திகனும், குரூரமான வியாபாரங்களையுடையவனும், திருட்டுத் தொழில் செய்கின்றவனும், பால்யத்தில் ரோக பீடிதனும், மேல்வாயும் நகமும் குறைந்திருக்கின்றவனும், சௌந்தர்யமும் சோபையும் உள்ள கண்களையுடையவனும், சமிருத்தியுள்ளவனும், கர்மங்களில் உத்சாகமுள்ளவனும், மிகவும் சாமர்த்தியசாலியாயும், பரஸ்திரீகளைக் காமிக்கின்றவனும், மாதா பிதா முதலிய பந்துக்களோடு வேறுபட்டவனும், மிகவும் அகங்காரியாயும், அதிக கோபமுடையவனும், அரசனால் தனநாசமுடையவனும், பெரிய வயிறும் தலையும் உள்ளவனும் இருப்பான்.

சு. 52. சந்திரன் விருச்சிகத்திலிருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் ஜனங்களால் நிந்திக்கப்பட்டவனும், அறிவுள்ளவனும், சஞ்சாரியாயும், தனவானும், சுகமில்லாதவனும் இருப்பான்.

சு. 53. சந்திரன் விருச்சிகத்திலிருந்து சேவ்வாயின் திருஷ்டியைப் பெறின் ஒன்றுபோல் தைரியமில்லாதவனும், அரசனுக்குச் சமானனும், ஐசுவரியமுள்ளவனும், யுத்தத்தில் சூரத்தனம் உள்ளவனும், பிறரால் ஜயிக்கப்படாதவனும், அதிகமாய்ச் சாப்பிடுகின்றவனும் இருப்பான்.

சு. 54. சந்திரன் விருச்சிகத்திலிருந்து புதனின் திருஷ்டியைப் பெறின் சாமர்த்தியமில்லாதவனும், அழகில்லாமல் தனக்குத் தோன்றிய விதம் பேசுகின்றவனும், இரட்டைக் குழந்தையாய்ப் பிறந்தவனும், யுக்தி மந்தனும் கூடகர்மங்களைச் செய்கின்றவனும், சங்கீதத்தில் பிரியமுள்ளவனும் இருப்பான். (கூடகர்மம் = பொய் கபடம் வஞ்சனை முதலியன.)

சு. 55. சந்திரன் விருச்சிகத்திலிருந்து குருவின் திருஷ்டியைப் பெறின் கர்மங்களில் பிரியமுள்ளவனும், ஜனங்களால் துவேஷிக்கப்படுகின்றவனும், தனவானும், சௌந்தர்யமுள்ளவனும் இருப்பான்.

சு. 56. சந்திரன் விருச்சிகத்திலிருந்து சுக்கிரனின் திருஷ்டியைப் பெறின் மதமுள்ளவனும், அதிக சௌபாக்கியமுள்ளவனும், தனங்கள் வாகனங்கள் போகங்கள் விலாசங்கள் இவைகளோடு கூடினவனும், ஸ்திரீகளால் தனம் பலம் முதலியவைகள் நாசமடைபவனும் இருப்பான்.

சு. 57. சந்திரன் விருச்சிகத்திலிருந்து சனியின் திருஷ்டியைப் பெறின் சந்தானங்களற்றவனும், பேராசையுள்ளவனும், ரோக பீடிதனும், தரித்திரனும், சத்திய மில்லாதவனும், சஞ்சாரம் செய்கின்றவனும் இருப்பான்.

சு. 58. சந்திரன் தநுசிலிருக்கச் சனித்தவன் வளைந்த தோளையும் வட்டமான கண்களையும் விஸ்தாரமான மார்பையும் பெருத்த இடையையும் உடையவனும், மாமிச புஷ்டியுள்ள கைகளையுடையவனும், வாக்கு சாமர்த்தியமுள்ளவனும், அகலமான முகமும் கழுத்தும் உடையவனும், ஜலசமீபத்தில் வாசஞ் செய்கின்றவனும், சிற்ப முறைகளை நன்கு அறிகின்றவனும், மறைந்திருக்கின்றகணுக் கால்களையுடையவனும், யுத்த சாமர்த்திய முடையவனும், கடினமான எலும்புள்ளவனும், எல்லா விடங்களிலும் வியாபித்த பலமுள்ளவனும், தடித்திருக்கும் கழுத்து உதடு மூக்கு இவைகளையுடையவனும், பந்துக்களைச் சிநேகிக்கின்றவனும், உபகார

ஸ்மரணையுள்ளவனும், பெருத்த பாதத்தையுடையவனும், கோவி யாயும் இருப்பான்.

சு. 59. சந்திரன் தநுசிலிருந்து சூரியனின் திருஷ்டியைப்பெறின் அரசனாகவாவது அரசதுல்லியனாகவாவது அல்லது பிரபுவாக வாவது ஆகின்றவனும், சூரனும், பிரசித்தமான பௌருஷ கர்மத்தை யுடையவனும், சுகமும் வாகனங்களும் உடையவனும் இருப்பான்.

சு. 60. சந்திரன் தநுசிலிருந்து செவ்வாயின் திருஷ்டியைப் பெறின் சேனாநாயகனும், சமிருத்தியுள்ளவனும், அதிருஷ்டமுள் ளவனும், பிரசித்தியுள்ள பௌருஷத்தையுடையவனும், நல்ல வேலையாட்களில்லாதவனும் இருப்பான்.

சு. 61. சந்திரன் தநுசிலிருந்து புதனின் திருஷ்டியைப்பெறின் அதிகவேலையாட்களை உடையவனும், கடினமான தோலையுடையவ னும், ஜோதிஷம் சித்திரம் கணிதம் வைத்தியம் முதலியவைகளில் சமர்த்தனும், கதை கூத்து நாடகம் ஆட்டம் கொட்டு முதலியவை களை உபதேசிக்கின்றவனும் இருப்பான்.

சு. 62. சந்திரன் தநுசிலிருந்து குருவின் திருஷ்டியைப் பெறின் நல்ல சரீரமுள்ளவனும், மந்திரியாயும், தனம் தர்மம் சுகம் ஆகிய இவைகளையுடையவனும் இருப்பான்.

சு. 63. சந்திரன் தநுசிலிருந்து சுக்கிரனின் திருஷ்டியைப் பெறின் சுகமுள்ளவனும், மிகவும் சௌந்தரியமும் அழகும் உள்ளவ னும், சௌபாக்கியம் புத்திரர் தனம் காமம் ஆகிய இவைகளோடு கூடினவனும், நல்ல பந்துக்களையும் பாரியையும் உடையவனும் இருப்பான்.

சு. 64. சந்திரன் தநுசிலிருந்து சனியின் திருஷ்டியைப்பெறின் இஷ்டமான வார்த்தையைப் பேசுகின்றவனும், நல்ல வாக்கியத்தை (கர்த்துரு கர்மாதி வியாகரண நியமம் அநுசரித்துள்ள வாக் சமூ கத்தை) வேண்டிய விதம் பிரயோகம் செய்கின்றவனும், அநேக சாஸ்திரங்களை அறிகின்றவனும், உண்மை பேசுகின்றவனும், சௌமியமுடையவனும், குல சிரேஷ்டமுள்ளவனும், அரச புருஷ னும் இருப்பான்.

சு. 65. சந்திரன் மகரத்திலிருக்கச் சனித்தவன் சங்கீதத்தை அறிகின்றவனும், குளிர்ச்சியைச் சகிக்காதவனும், மிகவும் புஷ்டி

யான சிரசோடு கூடினவனும், சத்தியத்தையும் தர்மத்தையும் அநுசரிக்கின்றவனும், உயர்ந்த பிரசித்தியுள்ளவனும், கோபம் குறைந்தவனும், மனோபயமுள்ளவனும், தயாசீலமும் லஜ்ஜையு மில்லாதவனும், நல்ல கண்களையுடையவனும், தேகபுஷ்டியில்லா தவனும், குரு பத்தினிமார் முதலிய ஸ்திரீகளை ரமிக்கின்றவனும், நல்ல கவியாயும், விருத்தமான கணுக்கால்களை யுடையவனும், உத்சாகம் குறைந்தவனும், அதிக பேராசையுள்ளவனும், நீண்டு புஷ்டியாயிருக்கின்ற கழுத்து செவி இவைகளையுடையவனும் இருப்பான்.

சு. 66. சந்திரன் மகரத்திலிருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் தனஹீனனும், துக்கிதனும், சஞ்சாரியாயும், பிறர்களுக்காக வேலை செய்கின்றவனும், அழுக்குள்ளவனும், கெட்ட தேசங்களுக்கு நாதனும், புத்தி சக்தி குறைந்திருக்கின்றவனும் இருப்பான்.

சு. 67. சந்திரன் மகரத்திலிருந்து செவ்வாயின் திருஷ்டியைப் பெறின் அதிக தனவானும், தானசீல முள்ளவனும், சுபகனும், எப்போதும் கையிற்றனமுடையவனும், யானை குதிரை முதலிய வாகனங்களுள்ளவனும், அதிகுரூரனும் இருப்பான். (சுபகன் = அதிஷ்ட முள்ளவன்.)

சு. 68. சந்திரன் மகரத்திலிருந்து புதனின் திருஷ்டியைப் பெறின் அறிவில்லாதவனும், பிறதேச வாசமுள்ளவனும், களத்திரத்தை விட்டுப் பிரிந்தவனும், சபலனும், ஒரு சுகமில்லாதவனும், தீக்ஷணனும், கோபமில்லாதவனும், தனமில்லாதவனும் இருப்பான்.

சு. 69 சந்திரன் மகரத்திலிருந்து குருவின் திருஷ்டியைப் பெறின் மேன்மை யுள்ளவனும், அரசனும், அல்லது அரசனுக்குச் சமான குணங்களையுடையவனும், அதிக களத்திரங்களும் புத்திரர்களும் பந்துக்களு முடையவனும் இருப்பான்.

சு. 70. சந்திரன் மகரத்திலிருந்து சுக்கிரனின் திருஷ்டியைப் பெறின் பரஸ்த்ரீகளோடு கூடினவனும், (சிரேஷ்டமான ஸ்திரீகளோடு என்றும் பாடபேதமுண்டு) தனம் ஆபரணம் யானை குதிரை சகடம் (வண்டி) முதலான வாகனங்களுள்ளவனும், இரத்தினமாலைகள் புஷ்பமாலைகள் முதலியவைகளைத் தரித்தவனும், நிந்தையுள்ளவனும் புத்திரர்கள் இல்லாதவனும் இருப்பான்.

சு. 71. சந்திரன் மகரத்திலிருந்து சனியின் திருஷ்டியைப் பெறின் சோம்பலுள்ளவனும், அழுக்குள்ளவனும், தனவானும், காம

பீடிதனும், பரஸ்திரீகளை அடைகின்றவனும், உண்மையில்லாதவனும் இருப்பான்.

சு. 72. சந்திரன் கும்பத்திலிருக்கச் சனித்தவன் உயர்ந்த மூக்குடையவனும், மெலிந்த சரீரமுடையவனும், பெருத்திருக்கின்ற கைகால்களையுடையவனும், கள் சாராயம் குடிப்பதில் பிரியமுள்ளவனும், சத் ஜனங்களால் துவேஷிக்கப்படுகின்றவனும், தர்மஹீனனும், வேறு புத்திரர்களுக்குத் (அன்னியபுத்ரர்) தகப்பனும், பெரிதான சிரசை யுடையவனும், அழகில்லாத கண்களையுடையவனும், துஷ்டத்தனத்தினாலும் சோம்பலினாலும் பீடிக்கப்பட்டவனும், விஸ்தாரமான முகமும் இடுப்பும் உள்ளவனும், சிற்பவித்தையை அறிகின்றவனும், கெட்ட சுபாவமுள்ளவனும், அநேக துக்கங்களால் பீடிக்கப்பட்டவனும், தரித்திரனும் இருப்பான்.

சு. 73. சந்திரன் கும்பத்திலிருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் மிகவும் அழுக்குள்ளவனும், சூரனும், அரசனைப்போலுள்ள ரூபசம்பத்தோடு கூடினவனும், தர்மிஷ்டனும், கிருஷிகளுடைய கர்த்தாவாயும் இருப்பான்.

சு. 74. சந்திரன் கும்பத்திலிருந்து செவ்வாயின் திருஷ்டியைப் பெறின் சத்தியமான வார்த்தையைப் பேசுகின்றனும், மாதா குரு இவர்களை விட்டுப் பிரிந்தவனும், தனமிழந்தவனும், சோம்பேறியாயும், விஷம சீலனும், பிறர் காரியங்களில் பிரீதியுள்ளவனும் இருப்பான்.

சு. 75. சந்திரன் கும்பத்திலிருந்து புதனின் திருஷ்டியைப் பெறின் படுக்கைக்குள்ள சுகசாதனங்களைச் சம்பாதிக்கின்றவனும், சங்கீத முறைகளை அறிகின்றவனும், ஸ்திரீகளுக்குப் பிரியமுள்ளவனும், அற்ப தனத்தையும் சுகத்தையும் உடையவனும் இருப்பான்.

சு. 76. சந்திரன் கும்பத்திலிருந்து குருவின் திருஷ்டியைப் பெறின் கிராமங்கள் க்ஷேத்திரங்கள் விருக்ஷங்கள் சிரேஷ்டமான கிருகங்கள் ஸ்திரீகள் இவைகளினால் தனத்தையும் சுகத்தையும் அடைகின்றவனும், பூச்சியனும், நல்ல குணமுள்ளவனும் இருப்பான்.

சு. 77. சந்திரன் கும்பத்திலிருந்து சுக்கிரனின் திருஷ்டியைப் பெறின் நீசனும், புத்திரர்களும் பந்துக்களும் இல்லாதவனும், தைரியமில்லாதவனும், தகாதவர்களுக்கு வித்தையை உபதேசிப்பதால் நிந்திக்கப்பட்டவனும், பாபமுள்ளவனும், கெட்ட மனைவியையுடையவனும், குறைந்த சுகத்தை யுடையவனும் இருப்பான்.

சு. 78. சந்திரன் கும்பத்திலிருந்து சனியின் திருஷ்டியைப் பெறின் வளர்ந்த ரோமங்களையும் நகங்களையும் உடையவனும், சுத்தமில்லாதவனும், பரஸ்திரீகளினிடத்தில் பிரியமுள்ளவனும், துர்ச்சன சுபாவமுடையவனும், தர்மமில்லாதவனும், ஸ்தாவர வஸ்துக்கள் உள்ளவனும், பிரபுவாயும் இருப்பான்.

சு. 79. சந்திரன் மீனத்திலிருக்கச் சனித்தவன் சிற்பவேலையினால் கிடைக்கப்பெற்ற அதிகாரத்தை யுடையவனும், எல்லாக் காரியங்களிலும் இஷ்டம்போல் ஜெயம் அடைபவனும், சாஸ்திர மறிந்தவனும், அழகுள்ள சரீரத்தை யுடையவனும், சங்கீதத்தில் பழக்க முள்ளவனும், தர்ம காரியங்களில் ஊக்க முள்ளவனும், அதிக ஸ்திரீகளோடு கூடி விளையாடுகின்றவனும், மதுரமாயும் சாந்தமாயும் சம்பாஷணை செய்கின்றவனும், ராஜசேவகனும், கோபம் குறைந்தவனும், பெரிதான தலையுள்ளவனும், சுகமும் சம்பத்தும் உடையவனும், புதையல் எடுப்பவனும், ஸ்திரீகளுக்கு அதீனனும், நல்ல சுபாவமுள்ளவனும், கப்பல் ஏறி (சமுத்திரம் தாண்டி) சஞ்சரிக்கின்றவனும், தானம் செய்கின்றவனும் இருப்பான்.

சு. 80. சந்திரன் மீனத்திலிருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் அதிக காமபீடையுள்ளவனும், தேஜசு உள்ளவனும், சுகமும் தனமும் சம்பத்தும் உள்ளவனும், சேனு நாயகனும், மிகவும் சந்தோஷமுள்ள மனைவியை யுடையவனும் இருப்பான்.

சு. 81. சந்திரன் மீனத்திலிருந்து சேவ்வாயின் திருஷ்டியைப் பெறின் காரியாதிகளில் தோல்வியுள்ளவனும், ஒரு சுகமுமில்லாதவனும், வியபிசாரிணியான தாயின் புத்திரனும் பாபகர்மங்களைச் செய்கின்றவனும், சூரனும் இருப்பான்.

சு. 82. சந்திரன் மீனத்திலிருந்து புதனின் திருஷ்டியைப் பெறின் அரசனாகவோ அரச சமானனாகவோ ஆகின்றவனும், மிகவும் சுகமுள்ளவனும், உத்தமஸ்திரீகளையுடையவனும், எல்லாருக்கும் அதீனனும் இருப்பான்.

சு. 83. சந்திரன் மீனத்திலிருந்து குருவின் திருஷ்டியைப் பெறின் அழகான சுபாவத்தையுடையவனும், மண்டலாதிபனும், பிரபுவாயும், கோமளனும், அதிக ஸ்திரீகளையுடையவனும் இருப்பான்.

சு. 84. சந்திரன் மீனத்திலிருந்து சுக்கிரனின் திருஷ்டியைப் பெறின் நற்சுபாவமுள்ளவனும், இன்ப சுகத்தையுடையவனும்,

நடனம் கூத்து வாத்தியம் இவைகளில் பிரீதியுள்ளவனும், சுந்தரிகளான ஸ்திரீகளின் மனதை மிகவும் கவருகின்றவனும் இருப்பான்.

சு. 85. சந்திரன் மீனத்திலிருந்து சனியின் திருஷ்டியைப் பெறின் அங்கக்குறைவு உள்ளவனும், மாதாவிற்குப் பிரியத்தைச் செய்யாதவனும், காமபீடிதனும், மனைவிமக்கள் இல்லாதவனும், புத்தியில்லாதவனும், நீசகுலத்தில் பிறந்தவளும் அழகில்லாதவளுமான ஸ்திரீயை இச்சிப்பவனும் இருப்பான்.

சு. 86. மேற்கூறியவாறு மேட முதலான விராசிகளில் சந்திரன் இருப்பதால் உண்டாகும் பலன்களைக் கீழே சொல்லியவாறு தீர்மானித்துக் கொள்ளவேண்டும். சந்திரனுக்கும் சந்திரனிருக்கும் இராசிக்கும் அந்தராசியினதிபனை கிரகத்திற்கும் பூர்ணபல முண்டாயின் ராசிபலன் முழுவதும் பூர்ணமாக உண்டாகும். அவ்விதம் பலமில்லையெனில் எல்லாப் பலன்களும் பூர்ணமாக உண்டாவதில்லை. இரண்டிற்குப் பலமில்லாமல் ஒன்றிற்குப் பலமுண்டாயின் அற்பபலம் உண்டாகும். மூன்றிற்கும் பலமில்லையெனில் ராசிபலன்கள் மிகவும் அற்பமாகவோ சொற்பனமாகவோ நிகழுமென்ப. ராசிபல நிர்ணயத்தில் உச்சம் நீசம் முதலிய பேதங்களை யறிந்து அதற்குத் தக்கவாறு பலன்களையும் அறிந்து கொள்ளவேண்டும்.

இருபத்துமூன்றுவது அத்தியாயம் முற்றிற்று.

# இருபத்துநான்காவது அத்தியாயம்

## சந்திர நவாம்ச திருஷ்டிபலம்.

சு 1-2-3. இந்த அத்தியாயத்தில் நவாம்சத்தில் மேடாதி இராசிகளில் இருக்கின்ற சந்திரனைச் சூரியாதி கிரகங்கள் பார்ப்பதினால் உண்டாகும் பலனைக் கூறுகின்றார்.

செவ்வாயின் அம்சமகான மேட விருச்சிகத்தில் இருக்கின்ற சந்திரன் செவ்வாயின் திருஷ்டியைப் பெறின் வதை முதலிய குரூர கிருத்தியங்களைச் செய்வதில் பிரியமுள்ளவனும், மிகக் குரூர சுபாவமுள்ளவனும் இருப்பான். சனியின் திருஷ்டியைப் பெறின் இந்திர ஜால முதலிய கபட வித்தைகளையுடையவனும், வஞ்சனையைச் செய்கின்றவனும், கலககர்த்தாவாயும் இருப்பான். சூரியனின் திருஷ்டியைப் பெறின் திருடர்களை நாசம் செய்கின்றவனும், ரக்ஷாதிகாரனும், சூரனும் இருப்பான். குருவின் திருஷ்டியைப் பெறின் அரசனும், பிரசித்தனும், வித்வான்களால் பூஜிக்கப்படுகின்றவனும் இருப்பான். சுக்கிரனின் திருஷ்டியைப் பெறின் மந்திரியாயும், தனவானும், ஸ்திரீகளிடத்திலும் தைலம் பூசுவதிலும் பிரியமுள்ளவனும் இருப்பான். புதனின் திருஷ்டியைப் பெறின் ஆலைச்சலையுடையவனும், அதிக வேகமாய்ப் பேசுபவனும் இருப்பான்.

சு. 4-5-6. சுக்கிரனின் அம்சகமான இடப துலாத்தில் இருக்கின்ற சந்திரன் சுக்கிரனின் திருஷ்டியைப் பெறின் ஸ்திரீகளும் வஸ்திரங்களும் அன்னபானங்களும் தனமும் சுகமும் உள்ளவனாய் இருப்பான். புதனின் திருஷ்டியைப் பெறின் கொட்டு பாட்டு நடனம் ஆட்டம் முதலிய வித்தைகளை யறிகின்றவனும் இருப்பான். குருவின் திருஷ்டியைப் பெறின் கவிசிரேஷ்டனும், நீதி சாஸ்திரம் அறிந்தவனும், மந்திரியாயும் இருப்பான். செவ்வாயின் திருஷ்டியைப் பெறின் பரஸ்திரீகளை அடைகின்றவனும், காமியாயும், அதிகமான வேலையாட்களை உடையவனும் இருப்பான். சூரியனின் திருஷ்டியைப் பெறின் சிறிதும் வித்தையை அறியாதவனும், இஷ்டம்போல் பேசுபவனும், எப்போதும் அன்னபானங்களை இச்சிக்கின்றவனும் இருப்பான். சனியின் திருஷ்டியைப்

பெறின் பந்துக்களில்லாதவனும், பரஸ்திரீகளைக் காமிக்கின்றவனும் இருப்பான்.

சு. 7-8-9. புதனின் அம்சகமான மிதுன கன்னியில் இருக்கின்ற சந்திரன் புதனின் திருஷ்டியைப் பெறின் சிற்ப வித்தையை உபதேசிக்கும் ஆசிரியனும், கவீஸ்வரனும் இருப்பான். சுக்கிரனின் திருஷ்டியைப் பெறின், மகத்துவ முள்ளவனும், சங்கீத சாஸ்திரங்களை அறிந்தவனும், முக்கிய வசனங்களை அறிகின்றவனும் இருப்பான். குருவின் திருஷ்டியைப் பெறின், அரச மந்திரியாயும், குணவானும், ஸ்திரமுள்ளவனும், சுந்தரனும் இருப்பான். செவ்வாயின் திருஷ்டியைப் பெறின் வஞ்சிதான திருட்டுத் தொழிலைச் செய்கின்றவனும், வியவகாரங்களில் சாமர்த்திய முள்ளவனும், குரூரனும் இருப்பான். சனியின் திருஷ்டியைப் பெறின், சாஸ்திரார்த்தங்களையும் காவியங்களையும் அறிகின்றவனும், வித்துவானும், சிற்ப வேலையில் பழக்கமுள்ளவனும் இருப்பான். சூரியனின் திருஷ்டியைப் பெறின் மல்யுத்தம் முதலிய யுத்த முறைகளை யறிந்தவனும், பிரசித்தனும் இருப்பான்.

சு. 10-11-12. சந்திரனின் அம்சகமான கடகத்தில் இருக்கின்ற சந்திரன் சூரியனின் திருஷ்டியைப் பெறின் மெலிந்த சரீரமுடையவனும், தேகத்தில் முறிவும் விரணமும் உள்ளவனும் இருப்பான். செவ்வாயின் திருஷ்டியைப் பெறின் பிறர் பொருளைக் கைப்பற்றுவதில் அதிக சாமர்த்திய முள்ளவனும், அதிக பேராசைக்காரனும் இருப்பான். சனியின் திருஷ்டியைப் பெறின் அகிருத்தியங்களைச் செய்கின்றவனும், கொலைப்பாதகம் ஜெயில்வாசம் வியவகாரம் இவைகளினால் பீடிக்கப்பட்டவனும் இருப்பான். சுக்கிரனின் திருஷ்டியைப் பெறின் ஸ்திரீகளுக்கு இஷ்டமில்லாதவனாகவோ அல்லது நபும்சகனாகவோ இருப்பான். குருவின் திருஷ்டியைப் பெறின் அரசனாகவாவது அரச சமானனாகவாவது இருப்பான். புதனின் திருஷ்டியைப் பெறின் தர்மஹீனனும், அதிக நித்திரையுள்ளவனும் ஞானமில்லாதவனும் இருப்பான்.

சு. 13-14-15. சூரியனின் அம்சகமான சிம்மத்தில் இருக்கும் சந்திரன் சூரியனின் திருஷ்டியைப் பெறின் அதிகமான கோபமுடையவனும், தனமும் யஜசும் உள்ளவனும் இருப்பான். சனியின் திருஷ்டியைப் பெறின் பாப முடையவனும், தயையில்லாதவனும், பிராணிகளை இம்சிக்கின்றவனும் இருப்பான். செவ்வாயின் திருஷ்டியைப் பெறின் தங்கம் உண்டாக்குகின்றவனாக

வாவது, சுவர்ண வியாபாரியாகவாவது, சுவர்ணம் முதலிய தன முள்ளவனாகவாவது ஆகின்றவனும், பிரசித்தனும், அரசனால் மரியாதை அடைபவனும், குரூரனும் இருப்பான். குருவின் திருஷ்டியைப் பெறின் அரசன் அல்லது அரச சமானனாய் இருப்பான். சுக்கிரனின் திருஷ்டியைப் பெறின் சந்தானம் உண்டாவதற்கு வேண்டிய பிரார்த்தனை செய்கின்றவனாகவாவது அல்லது இறந்து போகும் புத்திரனை யுடையவனாகவாவது இருப்பான். புதனின் திருஷ்டியைப் பெறின் தைவ விசார (ஜோதிஷ) முள்ளவனும், இதிகாசங்களில் (புராண கதைகளில்) பிரீதியுடையவனும், புதை பொருள் எடுப்பவனும் இருப்பான்.

சு. 16-17-18. குருவின் அம்சகமான தநுசு மீனத்தில் இருக்கின்ற சந்திரன் குருவின் திருஷ்டியைப் பெறின் பலாஹித னும் (பலங்குறைந்தவன்) அரசனுக்கிஷ்டனும், அதிக புகழுடையவனும் இருப்பான். சுக்கிரனின் திருஷ்டியைப் பெறின் மிகவும் ஸ்திரீ போகமும் சுகமும் உள்ளவனாய் இருப்பான். புதனின் திருஷ்டியைப் பெறின் ஹாஸ்யகர முள்ளவனும் (பரிகாசம்) அரசனுக்கிஷ்ட முள்ளவனும், சேனா நாயகனும் இருப்பான். செவ்வாயின் திருஷ்டியைப் பெறின் ஆயுதப் பிரயோகங்களையும் யுத்த கிரமங்களையும் உபதேசிக்கின்றவனும், எல்லா விடங்களிலும் பிரசித்தி யுடையவனும் இருப்பான். சூரியனின் திருஷ்டியைப் பெறின் பலவிதமான தோஷங்களினால் பிரசித்தி யுள்ளவனும், மரியாதை அநுசரித்திருக்கின்றவனும் இருப்பான். சனியின் திருஷ்டியைப் பெறின் பெரியவர்களுடைய சுபாவம் (தர்ம புத்தி) உள்ளவனும், பலவான்களான ஜனங்களால் தள்ளப்பட்டவனும், அதமனும் இருப்பான்.

சு. 19-20-21. சனியின் அம்சகமான மகரகும்பத்தில் இருக்கின்ற சந்திரன் சனியின் திருஷ்டியைப் பெறின் கிருபணனும் ரோகியாயும், புத்திரசோகம் அடைகின்றவனும் இருப்பான். சூரியனின் திருஷ்டியைப் பெறின் புத்திர தோஷம் உடையவனும், ரோகமுடையவனும், விரூபமான சரீரத்தை யுடையவனும் இருப்பான். செவ்வாயின் திருஷ்டியைப் பெறின் அரசசமானனும், அதிக தனமுள்ளவனும், ஸ்திரீகளுக்கு விருப்பமில்லாதவனும், சுக மில்லாதவனும் இருப்பான். சுக்கிரனின் திருஷ்டியைப் பெறின் கெட்டசுபாவமுள்ளவனும், ஸ்திரீகளால் அவமதிக்கப்பட்டவனும், தீரனும் இருப்பான். புதனின் திருஷ்டியைப் பெறின் பாபியாயும்,

கெட்ட நடத்தையுடைவனும் இருப்பான். குருவின் திருஷ்டியைப் பெறின் தனது கர்மங்களை வேண்டியவாறு செய்கின்றவனும், உயரமில்லாதவனும் இருப்பான். (இவ்விதமாக நவாம்சத்தில் மேஷாதி ராசிகளிலிருக்கின்ற சந்திரனைச் சூரியாதி கிரகங்கள் பார்ப்பதினுலுண்டாகும் பலன்களை அறிந்துகொள்க.) மேற் கூறியவைகளுக்கு உத்தம மத்தியம அதம முதலிய பேதங்களைச் சொல்கின்றனர்.

சு. 22. சந்திரன் வர்க்கோத்தம நவாம்சத்தில் இருந்து மேற் கூறிய திருஷ்டி பலம் சுபமாக இருப்பின் பலன் உத்தமம். சந்திரன், நவாம்சத்தில் ஸ்வக்ஷேத்திரத்திலிருந்து திருஷ்டிபலன் சுபமாயின் பலன் மத்தியமம். சந்திரன் மற்ற நவாம்சங்களிலிருந்து சுபமான திருஷ்டிபலன் சுபமாயின் பலன் அதமம். (அல்பம்) திருஷ்டி பலன் அசுபமாயின் இதற்கு மாருகக் கொள்க! இது கீழே விளக்கமாகக் கூறப்படுகின்றது.

சந்திரன் வர்க்கோத்த மாம்சத்திலிருந்து திருஷ்டிபலன் அசுபமாயின் பலம் அற்பம், ஸ்வக்ஷேத்திர நவாம்சத்திலிருந்து திருஷ்டி பலம் அசுபமாயின் பலம் மத்தியமம். இதர நவாம்சத்திலிருந்து திருஷ்டிபலம் அசுபமாயின் பலம் உத்தமம் என்றறிந்து கொள்க.

சு 23. சந்திரனிருக்கும் நவாம்சராசிக்கதிபனுன கிரகம் பலவானுயின் முன் அத்தியாயத்தில் கூறப்பெற்றுள்ள மேடம் முதலிய ராசி திருஷ்டி பலத்தைக் கொடாமல் அம்சகத்தினுடைய திருஷ்டி பலத்தையே கொடுக்கின்றது. அம்சாதிபனுன கிரகம் பலம் பெருவிடின் ராசி திருஷ்டி பலமும் அம்ச திருஷ்டி பலமும் ஒன்று போலவே கொள்ளவேண்டும்.

சு. 24. சந்திரனுடைய நவாம்சராசிக்கதிபதி சந்திரன் இவர்களின் பலத்திற்குத் தக்கவாறு மேற்கூறப்பட்ட திருஷ்டி பலன்கள் தார தம்மியம் அடையும். இதனையறிந்து பலன் சொல்ல வேண்டுமென யவன விருத்தர்கள் நிர்ணயித்துள்ளார்கள்.

இருபத்துநான்காவது அத்தியாயம் முற்றிற்று.

## இருபத்தைந்தாவது அத்தியாயம்.

## குஜாஸ்ரய ராசி பலமும் திருஷ்டிபலமும்.

சு. 1-2. இந்த அத்தியாயத்தில் செவ்வாய் மேடாதி இராசிகளில் இருக்கும் பலனும் சூரியாதிகிரகங்கள் பார்ப்பதினால் ஏற்படும் பலனும் தெளிவாய்க் கூறப்படுகின்றன. முதலில் இராசியில் இருக்கும் பலனையே கூறுகின்றார்.

செவ்வாய் மேடத்திலிருக்கும்போது ஜனித்தவன் தேஜசு உள்ளவனும், உண்மையைப் பேசுகின்றவனும், சூரனும், அல்லது அரசனும், யுத்தகாரியங்களில் சாமர்த்தியமுள்ளவனும், சாகச கர்மங்களைச் செய்கின்றவனும், சேனை நகரம் கிராமம் சங்கம் இவைகளுக்கு நாதனும், வேகமாய் நடப்பவனும், தானம் செய்வதில் மனமுடையவனும், அதிக பசுக்களும் காளைகளும் ஆடுகளும் செம்மறியாடுகளும் நெல்களும் ஜனங்களும் ஆகிய இவைகளை உடையவனும், மிகவும் குரூரனும், யௌவனமான அனேக ஸ்திரீகளையுடையவனும் இருப்பான்.

சு. 3-4. செவ்வாய் இடபத்திலிருக்கும்போது ஜனித்தவன் பதிவிரதையானஸ்திரீகளைக் கெடுக்கின்றவனும், அதிக ஆகாரம் சாப்பிடுகின்றவனும், அற்பபுத்திரர்களும் தனமும் உள்ளவனும், நிந்தியனும், பலவிதமான சுவையுடையவனும், விசுவாசமும் மரியாதையும் இல்லாதவனும், பலவிதவேஷமும் கிரீடையும் உடையவனும், கெடுதியாய்ப் பேசுகின்றவனும், சங்கீதத்தில் பிரியனும், பாபமுள்ளவனும், பந்துவிரோதமுள்ளவனும், தன்குலத்தை நாசம் செய்பவனும் இருப்பான்.

சு. 5-6. செவ்வாய் மிதுனத்திலிருக்கும்போது ஜனித்தவன் அழகிய சரீரமுள்ளவனும், எல்லாத் துன்பங்களையும் சகிக்கின்றவனும், சாஸ்திரங்களிலும் காவியங்களிலும் சமர்த்தனும், எழுத்து சித்திரம் கீதம் வாத்தியம் முதலான எல்லாச் சிற்பக் கலைகளிலும் நிபுணனும், பல அன்னிய தேசங்களில் சஞ்சாரம் செய்கின்றவனும், தர்மகாரியங்களில் சிரத்தையுடையவனும், புத்தி சாமர்த்தியமுள்ளவனும், புத்திரர்களிடத்திலும் பந்துக்களிடத்திலும் ஹிதமாகவும் அநுகூலமாகவும் இருக்கின்றவனும், அதிக கர்மங்களில் ஈடுபடுபவனும் இருப்பான்.

சு. 7-8. செவ்வாய் கடகத்திலிருக்கும்போது ஜனித்தவன் பிறர் கிருகத்தில் வசிக்கின்றவனும், பலவிதரோகங்களால் பீடிக்கப் பட்டவனும், கிருஷியிலிருந்து கிடைக்கப்பெற்ற தனத்தையுடைய வனும், பால்யத்திலோ யௌவனத்திலோ அரசர்களிடமிருந்து அன்னவஸ்திரங்களையடைபவனும், பிறர்கிருகத்தில் உண்ணுபவனு யும், கப்பல்யாத்திரையிலிருந்து கிடைக்கப் பெற்றதனத்தையுடைய வனும், மீண்டும் மீண்டும் உண்டாகும் குடல் வேதனையால் மிகவும் மெலிபவனும், மிகவும் துன்பமுள்ளவனும் இருப்பான்.

சு. 9-10. செவ்வாய் சிம்மத்திலிருக்கும்போது ஜனித்தவன் தேஜஸ்வியாயும் கொடுமையும் சூரத்தன்மையும் உள்ளவனும், பிறர் களின் தனத்தையும் சந்தானத்தையும் கெடுப்பவனும், வனவாசியா யும், பசுக்களை ரட்சிக்கின்றவனும், மாமிசத்தில் பிரியமுள்ளவனு யும், முதல் மனைவி இறந்தவனும், யானை மான் சர்ப்பம் ஆகிய இவைகளைப்பிடிக்கின்றவனும், சற்புத்திரர்களில்லாதவனும், தர்ம பலத்தை யுடையவனும், அர்தர்ப்பலமுள்ளவனும், காரியங்களில் உத்சாகியாயும், நல்ல சரீரத்தையுடையவனும் இருப்பான்.

சு. 11-12. செவ்வாய் கன்னியிலிருக்கும் போது ஜனித்தவன் பூசிக்கப்பட்டவனும், அதிக தனவானும், ஸ்திரீசுகத்தையும் சங்கீ தத்தையும் உடையவனும், பிரியமாயும் மெதுவாயும் பேசுகின்றவ னும், பலவித செலவுள்ளவனும், சௌரியம் குறைந்திருக்கின்றவ னும், வித்வானும், சத்துருக்களுக்குப் பயப்படுகின்றவனும், வேதங்களிலும் ஸ்மிருதிகளிலும் சொல்லப்பட்ட தர்மங்களை ஆசிர யிக்கின்றவனும், அக்கினியோடுகூடினவனும், பலவிதத்திலுள்ள சிற்பவேலைகளைச் செய்வதில் நல்ல பழக்க முள்ளவனும், ஸ்நாநம் செய்து பொட்டுகள் (திலதம்) இட்டு அலங்கரித்துக் கொள்ளுபவனு யும், சௌந்தரிய முள்ளவனும் இருப்பான்.

சு. 131. 14. செவ்வாய் துலாத்திலிருக்கும்போது ஜனித்தவன் வழி நடப்பதில் பிரியமுள்ளவனும், கெட்ட திரவியங்களை விற்றலி லும் வாங்குவதிலும் பிரியமுள்ளவனும், பொருளற்ற வார்த்தை களை வேண்டியவிதம் சேர்த்து பேசுகின்றவனும், தர்சனீய னும், அங்கக் குறைவுள்ளவனும், சுவல்ப ஜனத்தையுடைய வனும், யுத்தத்தை விரும்புகின்றவனும், பிறர்களாற் கிடைக் கும் உபபோகத்தோடு கூடியவனும், ஸ்திரீகள் புத்திரர்கள் குருக் கள் இவர்களின் மனதை ரஞ்சிப்பிக்கின்றவனும், முதல் மனைவி இறந்தவனும், சாராய வியாபாரிகளினாலோ சாராய சம்பந்தமான

மற்ற காரணங்களினாலோ வேசியர்கள் மூலமாகவோ நாச மடைப வனும் இருப்பான்.

சு. 151. 16. செவ்வாய் விருச்சிகத்திலிருக்கும்போது ஜனித்த வன் எல்லாக் காரியங்களிலும் நிச்சயமும் சத்தியமும் உள்ளவனு யும், திருடர் கூட்டத்திற்குத் தலைவனும், கர்மங்களில் நிபுண முள்ளவனும், யுத்தத்தில் உத்சாகியாயும். அதிக பாபியாயும். பெருங்குற்ற முடையவனும், விரோதத்தினால் துஷ்டனும், பிறர் களைத் துரோகம் செய்வதிலும் இம்சை செய்வதிலும் பிரியமுள்ள வனும், பிறருக்கு ஆசை யுண்டாக்குகின்றவனும், பூமிகளுக்கும் புத்திரர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் தலைவனும், விஷம் அக்கினி ஆயு தம் இவைகளினால் தேகத்தில் வெட்டோ ஹானியோ உள்ளவனும் இருப்பான்.

சு. 171. 18. செவ்வாய் தநுசில் இருக்கும்போது ஜனித்தவன் பலவித காயத்தினாலோ வெட்டுக்களினாலோ மெலிந்த அவயவங் களை யுடையவனும், கொடுமையானவார்த்தைகளைப் பேசுகின்றவனு யும், கெட்ட சுபாவ முள்ளவனும், பராதீனனும், தேர் யானை குதிரை சைன்யம் இவைகளோடு சேர்ந்து சத்துருக்களை யுத்தத்தில் நாசஞ் செய்கின்றவனும், பலவித சிரமங்களினால் மிகத் தளர்ந்தவ னும், அன்யோன்யமுள்ள கோபத்தினால் சுகமும் தனமும் நாச மடைந்தவனும், குரு ஜனங்களிடத்தில் அசத்தியத்தைப் பேசு கின்றவனும் இருப்பான்.

சு. 19-20. செவ்வாய் மகரத்திலிருக்கும்போது ஜனித்தவன் செல்வமுள்ளவனும், பலாத்காரமாகத் தனத்தைச் சம்பாதிக்கின்ற வனும், சுகம் போகம் ஆரோக்கியம் ஆகிய இவைகள் உள்ளவனும், சிரேஷ்டபுத்திமானும், யஜசுள்ளவனும், சேனாதிபதியாகவோ அரச னாகவோ ஆகின்றவனும், சத்துருக்களை ஜெயிக்கின்றவனும், தன் னுடைய பந்துக்களுடைய தேசத்தில் வசிக்கின்றவனும், அல்லது பந்துக்களுடைய காரியத்தில் சிரத்தையுள்ளவனும், ஸ்வாதந்திரிய முள்ளவனும், காவல் செய்பவனும், சுபாவகுணமுள்ளவனும், பல வித உபசாரங்களில் பிரியமுள்ளவனும் இருப்பான்.

சு. 21-22. செவ்வாய் கும்பத்திலிருக்கும்போது ஜனித்தவன் விநயமும் சுத்தமும் இல்லாதவனும், ஜரை நரை முதலாகிய விருத்த லட்சணங்கள் உள்ளவனும், மரணகாலத்தில் அதிக கிலேசமும் பிறகு நரகமும் அநுபவிக்கின்றவனும், விரோதம் அசூயா

(பொறுமை குறைகூறுதல் கோபம் மனஸ்தாபம்) பொய் வாக்கு தோஷம் இவைகளால் அதிக கஷ்டநஷ்டங்களை அடைபவனும், சரீரத்தில் அதிக ரோமங்களுள்ளவனும், அழகில்லாத சரீர முடையவனும், சூது முதலிய துஷ்கிருத்தியங்களால் அதிக தன நஷ்டம் அடைபவனும், வஸ்திராபரணங்களான வேஷங்களை வெறுக்கின்றவனும், ஜீவிதகாலம் பெரும்பாலும் கிலேசகரமாய் அநுபவிக்கின்றவனும், சாராயம் முதலிய மதுவைச் சாப்பிடுகின்றவனும், துரதிருஷ்டமுள்ளவனும் இருப்பான்.

சு. 23-24. செவ்வாய் மீனத்திலிருக்கும்போது ஜனித்தவன் ரோகபீடிதனும், அற்பபுத்திரனுள்ளவனும், பிரதேசவாசியாயும், தன் சுற்றத்தாரால் பீடிக்கப்பட்டவனும், கபடம் வஞ்சனை முதலான தோஷங்களால் எல்லாம் இழந்தவனும், எப்போதும் துக்கிக்கின்றவனும், வளைவுள்ளவனும், மிகக்கொடிய துக்கமுடையவனும், குருக்களையும் பிராம்மணர்களையும் நிந்திக்கின்றவனும், அதமனும், பிறர்களுடைய மனதை அறிகின்றவனும், எல்லாக் காரியங்களிலும் ஞானமுள்ளவனும், வேதங்களில் பிரியமுள்ளவனும், பிரசித்தனும் இருப்பான்.

இனி மேடாதி ராசிகளில் இருக்கும் செவ்வாயை சூரியாதி கிரகங்கள் பார்ப்பதினாலுண்டாகும் பலனைத் தெளிவாய்ச் சொல்லுகின்றார்.

சு. 25. செவ்வாய் மேடத்திலாவது விருச்சிகத்திலாவது இருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் தனம் பார்யை புத்திரர்கள் ஆகிய இவைகளை உடையவனும், அரசனாகவோ மந்திரியாகவோ சேனாநாயகனாகவோ ஆகின்றவனும், பிரசித்தனும், மகத்துவமுள்ளவனும், அல்லது தாதாவாயும் இருப்பான்.

சு. 26. செவ்வாய் மேடத்திலாவது விருச்சிகத்திலாவது இருந்து சந்திரனின் திருஷ்டியைப் பெறின் தாயில்லாதவனும், அல்லது தாயைவிட்டுப் பிரிந்தவனும், தேகத்தில் முறிவோ காயமோ உள்ளவனும், சொந்த ஜனங்களால் துவேஷிக்கப்பட்டவனும், பந்துக்களில்லாதவனும், பொறுமையுடையவனும், ஸ்திரீ சந்தானங்கள் அதிகமும் புருடசந்தானங்கள் குறைந்தும் இருக்கின்றவனும் இருப்பான்.

சு. 27. செவ்வாய் மேடத்திலாவது விருச்சிகத்திலாவது இருந்து புதனின் திருஷ்டியைப் பெறின் பரதனத்தை அபகரிப்

பதில் சாமர்த்தியமுள்ளவனும், பொய்யுள்ளவனும், காமதேவனை ஆராதிக்கின்றவனும், நிந்தியனும், வேசியாநாயகனும் இருப்பான்.

சு. 28. செவ்வாய் மேடத்திலாவது விருச்சிகத்திலாவது இருந்து குருவின் திருஷ்டியைப் பெறின் அறிவுள்ளவனும், சௌந்தர்யமும் சௌபாக்கியமும் உள்ளவனும், தாய்தந்தையர்களுக்கு இஷ்டனும், அதிக தனவானும், தனக்கு நிகரில்லாதவனும், எல்லார்க்கும் நாயகனும், சிரேஷ்டமுள்ளவனும் இருப்பான்.

சு. 29. செவ்வாய் மேடத்திலாவது விருச்சிகத்திலாவது இருந்து சுக்கிரனின் திருஷ்டியைப் பெறின் ஒரே விதமாகவோ பலவிதமாகவோ சம்பாதித்த திரவியம் முழுவதும் ஸ்திரீயினால் நாசஞ்செய்பவனும், ஸ்திரீயினால் பந்தனம் (ஜெயில் வாசம்) அநுபவிக்கின்றவனும் இருப்பான்.

சு. 30. செவ்வாய் மேடத்திலாவது விருச்சிகத்திலாவது இருந்து சனியின் திருஷ்டியைப் பெறின் திருடர்களைக் கொல்லுகின்றவனும், அதிக பலமில்லாதவனும், ஸ்வஜனங்களைவிட்டுப் பிரிந்தவனும், பரதாரங்களை அனுபவிப்பவனும் இருப்பான்.

சு. 31. செவ்வாய் இடபத்திலாவது துலாத்திலாவது இருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் வனங்களிலும் மலைகளிலும் கிரீடிக்கின்றவனும், மனைவியால் துவேஷிக்கப்பட்டவனும், அதிக சத்துருக்களுள்ளவனும், மிகவும் கடினமான கோபமுடையவனும், தைரியமுள்ளவனும் இருப்பான்.

சு. 32. செவ்வாய் இடபத்திலாவது துலாத்திலாவது இருந்து சந்திரனின் திருஷ்டியைப் பெறின் மாதாவிற்கு இஷ்டமில்லாதவனும், கெட்ட சுபாவமுள்ளவனும், அதிக மனைவிகளையுடையவனும், அதிகமாக ஸ்திரீகளுக்கு இஷ்டமுள்ளவனும், யுத்தத்தில் பயமுள்ளவனும் இருப்பான்.

சு. 33. செவ்வாய் இடபத்திலாவது துலாத்திலாவது இருந்து புதனின் திருஷ்டியைப் பெறின் கலகப் பிரியனும், சாந்தமாகப் பேசுபவனும், மிருதுவான அவயவங்களையுடையவனும், அற்ப புத்திரரும் அற்பதனமும் உள்ளவனும், சாஸ்திரமறிந்தவனும், இருப்பான்.

சு. 34. செவ்வாய் இடபத்திலாவது துலாத்திலாவது இருந்து குருவின் திருஷ்டியைப் பெறின் சங்கீத வாத்தியங்களில் இலக்

கணங்களை நன்கு அறிந்தவனும், சௌபாக்கியத்தோடு கூடினவனு யும், தன்னுடைய பந்துக்களுக்குப் பிரியமுள்ளவனும், பெருத்த சரீரமுடையவனும் இருப்பான்.

சு. 35. செவ்வாய் இடபத்திலாவது துலாத்திலாவது இருந்து சுக்கிரனின் திருஷ்டியைப் பெறின் மந்திரியாயும், அரசனுக்கு இஷ்ட னும், சேனு நாயகனும், பிரசித்தியான பெயரையுடையவனும், சுகமனுபவிக்கின்றவனும் இருப்பான்.

சு. 36. செவ்வாய் இடபத்திலாவது துலாத்திலாவது இருந்து சனியின் திருஷ்டியைப் பெறின் சுகமுள்ளவனும், பிரசித்தனும், தனவானும், பந்துக்களும் ஸ்வஜனங்களும் உள்ளவனும், வித்வா னும், சங்கம் நகரம் கிராமம் இவைகளுக்கு நாதனும் இருப்பான்.

சு. 37. செவ்வாய் மிதுனத்திலாவது கன்னியிலாவது இருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் வித்தை சௌரியம் தனம் உள்ளவ னும், வனங்களிலும் பர்வதங்களிலும் கோட்டைகளிலும் மற்றப் பிரதேசங்களிலும் வசிக்கப் பிரியமுள்ளவனும், மிகவும் நிர்விகாரி யாயும் இருப்பான்.

சு. 38. செவ்வாய் மிதுனத்திலாவது கன்னியிலாவது இருந்து சந்திரனின் திருஷ்டியைப் பெறின் கன்னிகையின் கிருகத்தை ரட்சிக் கின்றவனும், யௌவனமுடைய ஸ்திரீக்கு நாதனும், நல்ல சிக்ஷா சாமர்த்தியமுள்ளவனும், மிகவும் சௌபாக்கிய யுக்தனும், இராச கிருகத்திற்குக் கர்த்தாவாயும் இருப்பான்.

சு. 39. செவ்வாய் மிதுனத்திலாவது கன்னியிலாவது இருந்து புதனின் திருஷ்டியைப் பெறின் எழுத்து கணிதம் காவியம் இவைக ளில் நிபுணத்துவமுள்ளவனும், அதிகமாய்ப் பேசுகின்றவனும், கபட சாமர்த்தியமாயும் மதுரமாயுமிருக்கின்ற வார்த்தைகளையுடையவ னும், அதிகதுக்கங்களைச் சகிக்கின்றவனும், தூதனும் இருப்பான்.

சு. 40. செவ்வாய் மிதுனத்திலாவது கன்னியிலாவது இருந்து குருவின் திருஷ்டியைப் பெறின் அரசனின் வேலையாளாயும், பிரசித்த னும், தௌத்தியம் (அதாவது திருமுகம் முதலியன எழுதும் பத்தி ரத்தைக் கொண்டுபோதல் முதலிய தூதுத் தொழில்) கொண்டு பிற தேசங்களுக்குப் போகின்றவனும், சகல கிரியைகளிலும் நிபுணத் தன்மையுள்ளவனும், தலைவனும் இருப்பான்.

சு. 41. செவ்வாய் மிதுனத்திலாவது கன்னியிலாவது இருந்து சுக்கிரனின் திருஷ்டியைப் பெறின் ஸ்திரீகளுக்குரிய பிரவிருத்தி

யைச் செய்கின்றவனும், சம்பத்தும் சௌபாக்கியமும் உள்ளவனும், வஸ்திரங்களையும் பட்சணங்களையும் பருகுதற்குரிய உணவுப் பொருளையும் அடைபவனுமாய் இருப்பான்.

சு. 42. செவ்வாய் மிதுனத்திலாவது கன்னியிலாவது இருந்து சனியின் திருஷ்டியைப் பெறின் சுவர்ணம் முதலியன விளைகின்ற பூமிகளிலும் பர்வதங்களிலும் கோட்டைகளிலும் சஞ்சரிக்கின்றவனும், பயிரிடுபவனும், அதிக துக்கம் உள்ளவனும், மிகவும் குரூரபுத்தி யுள்ளவனும், அழுக்குள்ளவனும், தனம் முதலிய உபகாரணங்கள் சிறிது மில்லாதவனும் இருப்பான்.

சு. 43. செவ்வாய் கடகத்திலிருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் பித்தரோகத்தால் பாதிக்கப்பட்ட சரீரத்தை யுடையவனும், தேஜசு உள்ளவனும், சேனா நாயகனும், தீரனும் இருப்பான்.

சு. 44. செவ்வாய் கடகத்திலிருந்து சந்திரனின் திருஷ்டியைப் பெறின் பலவித ரோகங்களால் பீடிக்கப்பட்டவனும், இழிவான ஆசாரத்தையுடையவனும், விரூபமான அங்கங்களை யுடையவனும், மிகவும் துக்கமுடையவனும் இருப்பான்.

சு. 45. செவ்வாய் கடகத்திலிருந்து புதனின் திருஷ்டியைப் பெறின் மலினனும், (அழுக்குள்ளவன்) பாபகரமான ஆசாரத்தைக் கொள்ளுகின்றவனும், தாரித்திரமுள்ள குடும்பத்தை யுடையவனும், ஸ்வஜனங்களால் தள்ளப்பட்டவனும், வெட்கமில்லாதவனும் இருப்பான்.

சு. 46. செவ்வாய் கடகத்திலிருந்து குருவின் திருஷ்டியைப் பெறின் பிரசித்தனும், அரசமந்திரியாயும், வித்வானும், தியாக புத்தியுடையவனும், திருப்தி யடைந்தவனும், போகானுபவ மற்றவனும் இருப்பான்.

சு. 47. செவ்வாய் கடகத்திலிருந்து சுக்கிரனின் திருஷ்டியைப் பெறின் ஸ்திரீ சங்கத்தால் மிகவும் பீடிதனும், ஸ்திரீ தோஷங்களினால் தோல்வியடைந்தவனும், சகல திரவியங்களையும் நாசம் செய்பவனும் இருப்பான்.

சு. 48. செவ்வாய் கடகத்திலிருந்து சனியின் திருஷ்டியைப் பெறின் ஜலமார்க்கத்தில் (கப்பலிலோ தோணியிலோ) சஞ்சரிக்கின்றவனும், தனமில்லாதவனும், அழகிய வியாபாரத்தால் அரசசமானனும், அல்லது அரசனது செய்கை போன்ற செய்கையுடையவனும், சௌந்தர்யமுள்ளவனும் இருப்பான்.

சு. 49. செவ்வாய் சிம்மத்திலிருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் தன்னை ஆசிரயிக்கின்றவர்களுக்கு ஹிதத்தைச் செய்ப வனும், பந்துக்களும் ஸ்வஜனங்களும் உள்ளவனும், அதிக கோப முடையவனும், கோகுலங்களிலும் பர்வதங்களிலும் சஞ்சரிக்கின்றவ னும் இருப்பான்.

சு. 50. செவ்வாய் சிம்மத்திலிருந்து சந்திரனின் திருஷ்டி யைப் பெறின் தாய்க்கு அசுபபலத்தைச் செய்கின்றவனும், புத்திமானும், ஊக்கமும் பலமும் உள்ள சரீரத்தையுடையவனு யும், அதிகமான கீர்த்தியுடையவனும், ஸ்திரீகளினால் சம்பத் தையடைபவனும் இருப்பான்.

சு. 51. செவ்வாய் சிம்மத்திலிருந்து புதனின் திருஷ்டியைப் பெறின் பலவிதமான சிற்பவேலையில் அறிவுள்ளவனும், லுப்த னும், (லோபி) காவியங்களிலும் கலாவித்தைகளிலும் மிகவும் பிரீதி உள்ளவனும், கெட்ட சுபாவியாயும், மிகவும் சமர்த்தனும் இருப்பான்.

சு. 52. செவ்வாய் சிம்மத்திலிருந்து குருவின் திருஷ்டியைப் பெறின் அரசர்களின் சமீபத்தில் இருக்கின்றவனும், வித்தைகளைப் போதிப்பவனும், நிர்மலமான புத்தியையுடையவனும், சேனை களின் நாதனும் இருப்பான்.

சு. 53. செவ்வாய் சிம்மத்திலிருந்து சுக்கிரனின் திருஷ்டி யைப் பெறின் பலவிதத்தினால் ஸ்திரீ சுகம் அநுபவிக்கின்றவனும், ஸ்திரீகட்குத் தர்சனீயனும், நித்திய யௌவனத்தையுடையவனு யும், சந்தோஷமுள்ளவனும் இருப்பான்.

சு. 54. செவ்வாய் சிம்மத்திலிருந்து சனியின் திருஷ்டியைப் பெறின் விருத்தலட்சணமுடையவனும், (கிழவனைப் போன்று நரைதிரையுள்ள லட்சணமுள்ளவன்) தரித்திரனும், பிறர் கிருகத் தில் அலைவதில் பிரியமுள்ளவனும், துக்கமுள்ளவனும் இருப் பான்.

சு. 55. செவ்வாய் தநுசிலாவது மீனத்திலாவது இருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் ஜனங்களால் நமஸ்கரிக்கப்படுகின் றவனும், சௌந்தர்யமுள்ளவனும், வனங்களிலோ பர்வதங்க ளிலோ அவைபோல செல்லக்கூடாத பிரதேசங்களிலோ கிருகம் உண்டுபண்ணி அதில் வசிக்கின்றவனும், குரூரனும் இருப் பான்.

சு. 56. செவ்வாய் தநுசிலாவது மீனத்திலாவது இருந்து சந்திரனின் திருஷ்டியைப் பெறின் குறைவான அங்கமுள்ளவனு யும், கலகத்தை யுண்டாக்குகின்றவனும் வித்துவானும், அரசனு டைய விரோதத்தால் பீடிக்கப்பட்டவனும் இருப்பான்.

சு. 57. செவ்வாய் தநுசிலாவது மீனத்திலாவது இருந்து புதனின் திருஷ்டியைப் பெறின் தாரணபுத்தியுள்ளவனும், மிகவும் சாமர்த்தியசாலியாயும், சிற்பவேலையை உபதேசிப்பவனும், வித்வானும்இருப்பான்.

சு. 58. செவ்வாய் தநுசிலாவது மீனத்திலாவது இருந்து குருவின் திருஷ்டியைப்பெறின் மனைவியில்லாதவனும், சுகமில்லாத வனும், சத்துருக்களுக்கு ஒருவிதத்திலும் பயப்படாதவனும், தன வானும், தேகாப்பியாசமுடையவனும் இருப்பான்.

சு. 59. செவ்வாய் தநுசிலாவது மீனத்திலாவது இருந்து சுக்கிரனின் திருஷ்டியைப் பெறின் கன்னிகைகளிடம் அதிக பிரீதி யுள்ளவனும், பலவித அலங்காரமுடையவனும், மேன்மைஅல்லது தானசீலம் உள்ளவனும், விஷயங்களில் பிரியம் உள்ளவனும், சௌபாக்கியத்தோடு கூடினவனும் இருப்பான்.

சு. 60. செவ்வாய் தநுசிலாவது மீனத்திலாவது இருந்து சனியின் திருஷ்டியைப் பெறின் அழகில்லாத சரீரத்தை யுடைய வனும், யுத்தத்தில் சாமர்த்திய முள்ளவனும், பாபனும், சஞ்சாரியாயும், சுகமும் தனமும் இல்லாதவனும், பிறருடைய தர்மங் களை அநுஷ்டிக்கின்றவனும் இருப்பான்.

சு. 61. செவ்வாய் மகரத்திலாவது கும்பத்திலாவது இருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் மிகவும் கறுத்த சரீரமுள்ளவனு யும், சூரனும், அதிக மனைவிகள் சந்தானங்கள் தனங்கள் உள்ளவனு யும், அதிக குரூரனும் இருப்பான்.

சு. 62. செவ்வாய் மகரத்திலாவது கும்பத்திலாவது இருந்து சந்திரனின் திருஷ்டியைப் பெறின் ஸ்திரமில்லாதவனும், மாதாவுக் குப் பிரியமில்லாதவனும், அலங்காரமுடையவனும், உதார முள்ள வனும், ஸ்திரமில்லாத சிநேகிதர்களை யுடையவனும், தனவானு யும் இருப்பான்.

சு. 63. செவ்வாய் மகரத்திலாவது கும்பத்திலாவது இருந்து புதனின் திருஷ்டியைப் பெறின் மிருதுவானவனும், அலைந்து திரிப வனும், தனமில்லாதவனும், மனது சுகமும் சத்வம் என்ற அங்

தார்ப்பலம் இல்லாதவனும், கபடகிருத்தியங்களைச் செய்கின்றவனு யும், தர்மமில்லாதவனும் இருப்பான்.

சு. 64. செவ்வாய் மகரத்திலாவது கும்பத்திலாவது இருந்து குருவின் திருஷ்டியைப் பெறின் அதிக சௌந்தர்யமுள்ளவனும், அரசனுக்குச் சமத்துவமான குணங்களுள்ளவனும், ஸ்திரமான காரியாரம்ப முள்ளவனும், தீர்க்காயுளுள்ளவனும், பந்து சிநேகித னும் இருப்பான்.

சு. 65. செவ்வாய் மகரத்திலாவது கும்பத்திலாவது இருந்து சுக்கிரனின் திருஷ்டியைப் பெறின் பலவித சுகசந்தானங்களை யுடைய வனும், தனவானும், மனைவியை அல்லது அவள் போன்ற மற்ற ஸ்திரீகளைப் போகிப்பதில் மிகவும் பிரியமுள்ளவனும், கலகப் பிரிய முள்ளவனும் இருப்பான்.

சு. 66 செவ்வாய் மகரத்திலாவது கும்பத்திலாவது இருந்து சனியின் திருஷ்டியைப் பெறின் அரசனாகவோ அல்லது அரச சமான னாகவோ ஆகின்றவனும், அதிக தனமுள்ளவனும், ஸ்திரீகளால் (மனைவிகளால்) நிந்திக்கப்படுகின்றவனும், அதிக சந்தானங் களை யுடையவனும், அறிவுள்ளவனும், சுகமில்லாதவனும், யுத்த சாமர்த்திய முள்ளவனும் இருப்பான்.

இருபத்தைந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

## இருபத்தாருவது அத்தியாயம்.

## புதாஸ்ரய ராசி பலமும் திருஷ்டி பலமும்.

சு. 1-2. இந்த அத்தியாயத்தில் புதாஸ்ரய ராசி பலமும் திருஷ்டி பலமும் தெளிவாய்க் கூறப்பட்டிருக்கின்றன.

புதன் மேடத்திலிருக்கும்போது ஜனித்தவன் கலகப்பிரியனும், அறிவுள்ளவனும், ஆசிரியனும், காமுகன் தூர்க்குணன் இவர்களைப் போன்ற செய்கையுடையவனும், மெலிந்த சரீரத்தையுடையவனும், பாட்டிலும் நடனத்திலும் பிரியமுள்ளவனும், பொய் பேசுகின்றவனும், ஸ்திரீ சுகத்தில் பிரியமுள்ளவனும், எழுத்து விஷயமாக சாமர்த்தியத்தைக் காண்பிக்கின்றவனும், வஞ்சனைகளைச் செய்கின்றவனும், அதிகம் உண்ணுகின்றவனும், பலவித தொழில்களால் ஈட்டிய தனத்தை நாசம் செய்கின்றவனும், பலவித கடன்களினால் ஜெயில்வாசம் அநுபவிக்கின்றவனும், ஸ்திரமில்லாதவனும், சாராயம் சாப்பிடுதல், சூதாடுதல் முதலிய அகிருத்தியங்களைச் செய்பவனும் இருப்பான்.

சு. 3-4. புதன் இடபத்திலிருக்கும்போது ஜனித்தவன் சாமர்த்தியமுள்ளவனும், அதிக தானம் செய்கின்றவனும், பிரசித்தனும், வேதங்கள் சாஸ்திரங்கள் இவைகளுடைய அர்த்தத்தை அறிபவனும், தேகாப்பியாசத்திலும் வஸ்திராலங்காரத்திலும் மற்ற ஆபரணங்களைத் தரிக்கின்றதிலும் புஷ்பம் மாலை முதலான சாதனங்களிலும் பிரியமுள்ளவனும், ஊக்கமான சுபாவத்தையுடையவனும், அதிக தனமும் மனைவிகளும் உள்ளவனும், இஷ்ட கரங்களும் மனோகரங்களுமான கதைகளைச் சொல்லுகின்றவனும், வாக்கியங்களைக் கிரகிக்கின்றவனும், சங்கீதத்திலும் ஹாஸ்ய ரஸத்திலும் (அதாவது பொழுது போக்குவதிலும்) விலாசத்திலும் ஸ்திரீ போகத்திலும் அதிகமான பிரியமுள்ளவனும் இருப்பான்.

சு. 5-6. புதன் மிதுனத்திலிருக்கும்போது ஜனித்தவன் வஸ்திராலங்கார முதலிய நல்ல வேஷத்தையுடையவனும், இஷ்டமாகப் பேசுகின்றவனும், பிரசித்தமுடையவனும், வாக்கு சமர்த்தனும், அபிமானியாயும், சுயேச்சை யில்லாதவனும், இன்பசுகங் குறைந்திருக்கின்றவனும், இரண்டு தாய்களுள்ளவனும், வியவகாரியாயும், வேதங்கள் சாஸ்திரங்கள் கலா வித்தைகள்

இவைகளில் சாமர்த்தியமுள்ளவனும், கவிதையுள்ளவனும், ஸ்வாதந்திரிய சீலனும், அதிக தானம் செய்கின்றவனும், எல்லார்க்கும் இஷ்டனும், கிரம சத்தியுள்ளவனும், அதிக பந்துக்களும் புத்திரர்களும் உள்ளவனும் இருப்பான்.

சு. 7-8. புதன் கடகத்திலிருக்கும்போது ஜனித்தவன் வித்துவானும், அன்னிய தேசத்தில் வசிக்கின்றவனும், ஸ்திரீ சுகத்திலும் சங்கீதத்திலும் நடனத்திலும் பிரீதியுள்ளவனும், ஸ்திரமில்லாதவனும், சபலனும், அதிகமாய்ப் பேசுகின்றவனும், தன்னுடைய பந்துக்களோடு விரோதம் உள்ளவனும், வியவகாரியாயும், ஸ்திரீயின் விரோதத்தால் தனநாசமடைபவனும், தோஷ சுபாவமுள்ளவனும், கர்மங்களில் அதிக பிரியமுள்ளவனும், நல்ல கவியாயும், தன்னுடைய குலத்தில் கீர்த்தியினால் பிரசித்தனும் இருப்பான்.

சு. 9-10. புதன் சிம்மத்திலிருக்கும்போது ஜனித்தவன் ஓர் அறிவும் இல்லாதவனும், லோகப் பிரசித்தியுள்ளவனும், உண்மை பேசாதவனும், ஒற்றுமை இல்லாதவனும், தனவானும், பராக்கிரமமில்லாதவனும், சகோதரர்களுக்குச் சத்துருவாயும், ஸ்திரீகளுக்கிஷ்டமில்லாதவனும், ஸ்வாதந்திர முள்ளவனும், இழிவானதும் நிந்திக்கத்தக்கதுமான கர்மங்களைச் செய்கின்றவனும், ஸ்திரீகளைப் போன்ற ரூபத்தை யுடையவனும், பிறர்களுக்குச் சேவை செய்கின்றவனும், புத்திரர்களில்லாதவனும், சுவஜன விரோதியாயும், பிற ஜனங்களுக்கு நல்லவனும் இருப்பான்.

சு. 11-12. புதன் கன்னியிலிருக்கும்போது ஜனித்தவன் எல்லா தர்மங்களிலும் பிரியமுள்ளவனும், அதிக வாக்கு சாமர்த்தியத்தை யுடையவனும், சாமர்த்திய சாலியாயும், எழுத்து காவியங்கள் சிற்ப சாஸ்திரங்கள் கலா வித்தைகள் இவைகளில் ஞான முள்ளவனும், ஸ்திரீகளுக்கு இஷ்ட முள்ளவனும், வீரியம் குறைந்தவனும், மற்றுமுள்ளவர்களைக் காட்டிலும் மேன்மையுள்ளவனும், பந்துக்களால் பூஜிக்கப்படுகின்றவனும், அபிமானியாயும், விநயம் சத்கார சீலம் உதாரத்துவம் உள்ளவனும், மேன்மையான அநேக குணங்களினால் பிரசித்தி உடையவனும், மகத்துவமுள்ளவனும், பலமுள்ளவனும் இருப்பான்.

சு. 13-14. புதன் துலாத்திலிருக்கும்போது ஜனித்தவன் சிற்ப வித்தையிலும் வியவகாரத்திலும் சமர்த்தனும், வாக்கு சாமர்த்திய முள்ளவனும், தனலாபத்தின் மூலம் பல விதத்திலுள்ள செலவு

கள் செய்கின்றவனும், பல திக்குகளிலும் வியாபாரம் செய்கின்றவனும், பிராமணர்கள் அதிதிகள் தேவர்கள் குருஜனங்கள் ஆகிய இவர்களிடத்தில் பக்தியுள்ளவனும், போலியான மரியாதையிலும் சம்பாவனையிலும் சாமர்த்தியமுள்ளவனும், அதிக சந்துஷ்டியடைபவனும், தேவபூஜையில் பிரியமுள்ளவனும், துர்ச்சன சுபாவமுள்ளவனும், சீக்கிரமாகக் கோபமும் சந்தோஷமும் உண்டாகின்றவனும் இருப்பான்.

சு. 15-16. புதன் விருச்சிகத்திலிருக்கும்போது ஜனித்தவன் சக்திக்குத் தக்கவாறு தொழில்களைச் செய்கின்றவனும், துக்கிதனுயும், அனர்த்தங்களை யுண்டாக்குகின்றவனும், சத்ஜனங்களால் துவேஷிக்கப்படுகின்றவனும், மிகவும் லஜ்ஜையும் தர்மமும் உள்ளவனும், அறிவில்லாதவனும், சத்சுபாவ மில்லாதவனும், பேராசையுள்ளவனும், துஷ்ட ஸ்திரீகளோடு கூடி விளையாடுகின்றவனும், கொடூர முள்ளவனும், பிறர்களைத் தண்டிக்கின்றதில் பிரியமுள்ளவனும், கபட கர்மங்களைச் செய்கின்றவனும், விரோத காரியங்களில் வெறுப்புள்ளவனும், கடனால் பாதிக்கப்பட்டவனும், நீசர்களிடத்தில் பிரியமுள்ளவனும், பரதிரவியத்தைக் கவருகிறவனும் இருப்பான்.

சு. 17-18. புதன் தநுசிலிருக்கும்போது ஜனித்தவன் பிரசித்தியும் மேன்மையும் வாய்ந்த குணங்களுள்ளவனும், வேதத்திலும் சிற்ப சாஸ்திரத்திலும் ஆயுதப் பிரயோகத்திலும் சூரத்தன்மையிலும் சாமர்த்திய முள்ளவனும், மந்திரியாகவோ பௌரோகிதனாகவோ இருப்பவனும், குல சிரேஷ்டனும், மகத்துவ முள்ளவனும், யாகம் செய்கின்றவனும், வித்தை உபதேசிக்கின்றவனும், தாரண புத்தியுள்ளவனும், வாக்மியாயும், விரதங்களை யநுஷ்டிக்கின்றவனும், தானம் செய்கின்றவனும், எழுத்திலும் சித்திரத்திலும் சப்த சாஸ்திரத்திலும் (வியாகரணம்) சாமர்த்திய முள்ளவனும் இருப்பான்.

சு. 19-20. புதன் மகரத்திலிருக்கும்போது ஜனித்தவன் உசிதமில்லாத கர்மங்களைச் செய்கின்றவனும், மூடனும், நபும்சகப் பிரகிருதியாயும், பிறர்களுக்கு வேண்டிய காரியங்களைச் செய்கின்றவனும், குலோசிதமான ஒரு குணங்களுமில்லாதவனும், அநேக துக்கங்களை யநுபவிப்பவனும், சதா நித்திரை செய்பவனும், கோள் சொல்லுபவனும், சத்தியமான பிரவிருத்தியைச் செய்யாதவனும், பந்துக்களால் தள்ளி வைக்கப்பட்டவனும், ஊக்கமில்லாத மனதை

யுடையவனும், அழுக்குள்ளவனும், பயத்தோடு சஞ்சல முடையவனும், துர்அதிருஷ்டமுள்ளவனும் இருப்பான்.

சு. 21-22. புதன் கும்பத்திலிருக்கும்போது ஜனித்தவன் வாக்கும் (வித்தை) புத்தியும் பிரவிருத்தியும் இல்லாதவனும், தர்மத்தையும் அர்த்தத்தையுமொழித்து மற்ற வீண் காரியங்களைச் செய்கின்றவனும், சத்துருக்களால் பீடிக்கப்பட்டவனும், சுத்த மில்லாதவனும், துஸ்சுபாவியாயும், மூடனும், அதிக துஷ்டனும், மனைவிக்குச் சத்துருவாயும், ஒருவித சுகமுமில்லாதவனும், பேசுவதில் சிறிதும் சாமர்த்தியமில்லாதவனும், கெட்ட அதிருஷ்டமுள்ளவனும், தைரியமோ தனமோ அதிகமில்லாதவனும், நபும்சகப் பிரகிருதியாயும், அழுக்குள்ளவனும், பிறர்க்கு அதீனனும் இருப்பான்.

சு. 23-24. புதன் மீனத்திலிருக்கும்போது ஜனித்தவன் ஆசாரம் சுத்தம் இவைகள் உள்ளவனும், பிரதேச சஞ்சாரியாயும், சந்தான குணமில்லாதவனும், தரித்திரனும், நல்ல மனைவியுள்ளவனும், வித்வான்களுக்கு நல்லவனும், சஜ்ஜனங்களுக்கு மான்யனும், விரோத தர்மங்களைச் செய்கின்றவனும், சூஸ்யம் முதலான நீச கர்மங்களைச் செய்கின்றவனும், அறிவு வித்தை சாமர்த்தியம் இவைகள் இல்லாதவனும், பிறர்களுடைய தனத்தைக் காப்பாற்றுவதில் சமர்த்தனும், சம்பத்தில்லாதவனும், மேன்மையுள்ளவனும் இருப்பான். சூஸ்யம் = அறிவித்தல். இரகசியங்களைக் கூறுதல் உறவான காலத்து தெரிந்து கொண்டதை விரோத காலத்துச் சொல்லுதல் முதலியன. இது நீச கர்மம். இதனைத் திருவள்ளுவ நாயனர்,

" அறைபறை யன்னர் கயவர்தாங் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான் "

என விளக்கிக் கூறியுள்ளார்.

சு. 25. புதன் மேடத்திலாவது விருச்சிகத்திலாவது இருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் உண்மை பேசுகின்றவனும், சுகமுள்ளவனும், அரசனின் சத்காரத்தால் வெகுமானம் அடைபவனும், பந்து ஜனங்களினிடத்தில் மிகவும் பொறுமையுள்ளவனும், இருப்பான்.

சு. 26. புதன் மேடத்திலாவது விருச்சிகத்திலாவது இருந்து சந்திரனின் திருஷ்டியைப் பெறின் ஸ்திரீகளுக்குப் பிரியனும், நன்ருக சேவை செய்பவனும், சுத்தமில்லாதவனும், சுபாவ குணமில்லாதவனும் இருப்பான்.

சு. 27. புதன் மேடத்திலாவது விருச்சிகத்திலாவது இருந்து செவ்வாயின் திருஷ்டியைப் பெறின் பொய்யான விஷயங்களில் பிரியமுள்ளவனும், சுபமான வாக்கியத்தையுடையவனும், கலக முள்ளவனும், பண்டிதனும், அதிக தனமுள்ளவனும், அரச னுக்கு இஷ்டமுள்ளவனும், சூரனும் இருப்பான்.

சு. 28. புதன் மேடத்திலாவது விருச்சிகத்திலாவது இருந்து குருவின் திருஷ்டியைப் பெறின் சுகமுள்ளவனும், பிரகாசமுள்ள சரீரத்தோடு கூடினவனும், அதிக ரோமங்களையும் நல்ல சிரோ ரோமங்களையும் உடையவனும், அதிக தனவானும், ஆக்ஞையை நடத்துகின்றவனும், பாபனும் இருப்பான்.

சு. 29. புதன் மேடத்திலாவது விருச்சி கத்திலாவது இருந்து சுக்கிரனின் திருஷ்டியைப் பெறின் ராஜ கிருத்தியங்களைச் செய்கின்ற வனும், அதிருஷ்ட முடையவனும், சமூகத்திற்கும் நகரத்திற்கும் அதிபனும், சாதுர்யமாக வார்த்தைகளைப் பேசுகின்றவனும், பிரத் யம் (சத்யம் அல்லது விசுவாசம்) உள்ளவனும், மனைவியோடு கூடிய வனும் இருப்பான்.

சு. 30. புதன் மேடத்திலாவது விருச்சிகத்திலாவது இருந்து சனியின் திருஷ்டியைப் பெறின் மற்றவர்களுக்குப் பயம் உண்டாக் கும் கொடூர முள்ளவனும், இமிசை முதலிய துஷ்காரியங்களைச் செய்கின்றவனும், சொந்த ஜனங்களில்லாதவனும், அதிக துக்க முள்ளவனும் இருப்பான்.

சு. 31. புதன் இடபத்திலாவது துலாத்திலாவது இருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் தாரித்திரதுக்கத்தால் பீடிக்கப் பட்டவனும், அநேக ரோகங்களால் துன்ப மடைந்தவனும், பிறர் களை மரியாதை செய்வதில் சமர்த்தனும் ஜனங்களால் அவமதிக்கப் பட்டவனும் இருப்பான்.

சு. 32. புதன் இடபத்திலாவது துலாத்திலாவது இருந்து சந்தி ரனின் திருஷ்டியைப் பெறின் விசுவாசம் சத்தியம் சம்பத்து ஆகிய இவைகள் உள்ளவனும், மிகவும் பக்தனும், ரோக மில்லாதவனு யும், குடும்ப புஷ்டியுள்ளவனும், பிரசித்தனும், ராஜ மந்திரியாயும் இருப்பான்.

சு. 33. புதன் இடபத்திலாவது துலாத்திலாவது இருந்து செவ்வாயின் திருஷ்டியைப் பெறின் ரோகங்களினாலும் சத்துருக் களின் உபத்திரவத்தினாலும் பீடிக்கப்பட்டவனும், துக்கியாயும்,

அரசனாலுண்டாகும் அவமானத்தால் வியாகூல மடைந்தவனும், எல்லாத் தேசங்களிலும் திரஸ்கரிக்கப் பட்டவனும் இருப்பான். திரஸ்காரம் = நிந்தனை.

சு. 34. புதன் இடபத்திலாவது துலாத்திலாவது இருந்து குருவின் திருஷ்டியைப் பெறின் வித்வானும், வாக்கியங்களைக் கிரகிக்கின்றவனும், தேசத்திற்கும் நகரத்திற்கும் சமூகத்திற்கும் தலைவனும், பிரசித்தனும் இருப்பான்.

சு. 35. புதன் இடபத்திலாவது துலாத்திலாவது இருந்து சுக்கிரனின் திருஷ்டியைப் பெறின் சௌபாக்கியம் சுகம் விலாசம் ஆகிய இவைகள் உள்ளவனும், நல்லவஸ்திரங்களைத்தரித்துக் கொள்வதிலும் அலங்காரத்திலும் போகம் அநுபவிப்பதிலிலும் பிரீதியுடையவனும், கன்னிகைகளுடைய மனதை அபகரிக்கின்றவனும் இருப்பான்.

சு. 36. புதன் இடபத்திலாவது துலாத்திலாவது இருந்து சனியின் திருஷ்டியைப் பெறின் சுகம் சிறிது மில்லாதவனும், பந்துக்களின் துக்கத்தால் கிலேசிக்கின்றவனும், ரோகியாயும், அதிக அனர்த்தங்களும் சுத்த மின்மையும் உடையவனும் இருப்பான்.

சு. 37. புதன் மிதுனத்திலாவது கன்னியிலாவது இருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் சத்தியம் பேசுகின்றவனும், (உண்மை பேசுதல்) சுந்தரனும், அரசனுக்கு இஷ்டமுள்ளவனும், எல்லா விடத்திற்கும் நாதனும், எதையும் விசதத்தோடு (அழகு) செய்கின்றவனும், எல்லோருக்கும் சம்மதமுள்ளவனும் இருப்பான்.

சு. 38. புதன் மிதுனத்திலாவது கன்னியிலாவது இருந்து சந்திரனின் திருஷ்டியைப் பெறின் அதிக சௌமியனும், மிகவும் நித்திக்கும்படி பேசுகின்றவனும், கலகப் பிரியனும், சாஸ்திரங்களில் பிரியமுள்ளவனும், நல்ல ஊக்கமும் திடமுமுள்ளவனும், எல்லாக் காரியங்களிலும் சுபம் உள்ளவனும் இருப்பான்.

சு. 39. புதன் மிதுனத்திலாவது கன்னியிலாவது இருந்து செவ்வாயின் திருஷ்டியைப் பெறின் வெட்டோ காயமோ மற்றவைகல்யமோ (குறைவு அல்லது சோர்வு) உள்ள அங்கங்களையுடையவனும், சுத்தமில்லாதவனும், பிரதிபா என்னும் (சமயத்திற்கேற்றவாறு புதிது புதிதாய்த்தோன்றும் நல்ல அறிவின்) சக்தியுள்ளவனும், அரசனின் வேலைக்காரனும், பிரதானியாயும் இருப்பான்.

சு. 40. புதன் மிதுனத்திலாவது கன்னியிலாவது இருந்து குருவின் திருஷ்டியைப்பெறின் ராஜமந்திரியாயும், பூச்சியனாயும், உத்கிருஷ்டமான (மேன்மையான) சம்பத்தும் பரிஜனங்களு முடையவனாயும், யுத்தத்தில் பயமில்லாதவனாயும், அரசனுக்குப் பிரதிநிதியாயும் இருப்பான்.

சு. 41. புதன் மிதுனத்திலாவது கன்னியிலாவது இருந்து சுக்கிரனின் திருஷ்டியைப்பெறின் வித்வானாயும், அரசனிடம் வேலையாளாயாவது அல்லது தூதனாகவாவது இருப்பவனாயும், சத்துருக்களோடு சமாதானமா யிருக்கின்றவனாயும், ஸ்திரீகளினிடத்தில் பிரியமுள்ளவனாயும் இருப்பான்.

சு. 42. புதன் மிதுனத்திலாவது கன்னியிலாவது இருந்து சனியின் திருஷ்டியைப்பெறின் எப்பொழுதும் உற்சாகமுள்ளவனாயும், நன்கு போதிக்கும் திறமையுடையவனாயும், ஆரம்பிக்கின்ற காரியங்களில் * சாபல்யத்தை அடைகின்றவனாயும், அதிக சம்பத்து உபகரணம் ஆகிய இவைகள் உள்ளவனாயும் இருப்பான்.

சு. 43. புதன் கடகத்தில் இருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் வண்ணானுடைய பிரவிருத்தியை (தொழிலை)ச் செய்கின்றவனாயும், மாலைகளைக் கட்டுபவனாயும், ஜோதிஷ சாஸ்திரம் கிருகவாஸ்து (மனை சம்பந்தமான) சாஸ்திரம் அறிந்தவனாயும், இரத்தினங்களினால் பணிகள் செய்கின்றவனாயும் இருப்பான்.

சு. 44. புதன் கடகத்தில் இருந்து சந்திரனின் திருஷ்டியைப் பெறின் ஸ்திரீகளால் பலக்குறைவு அடைந்தவனாயும், அவர்களால் மிகவும் சரீர பீடையை அநுபவிக்கின்றவனாயும், ஒரு சுகமும் இல்லாதவனாயும் இருப்பான்.

சு. 45. புதன் கடகத்தில் இருந்து செவ்வாயின் திருஷ்டியைப் பெறின் சொற்பமாக சாஸ்திரப் பழக்கம் உள்ளவனாயும், மிகவும் சௌந்தரிய சாலியாயும், பொய்யில் பிரியமுள்ளவனாயும், கபடகர்மங்களைச் (செப்படி ஜாலவித்தை யந்திர நிர்மாணம் க்ஷுத்திர கர்மம் முதலானவை) செய்கின்றவனாயும், திருடுகின்றவனாயும், பிரியமாகப் பேசுகின்றவனாயும் இருப்பான்.

சு. 46. புதன் கடகத்திலிருந்து குருவின் திருஷ்டியைப்பெறின் விசேஷபுத்தி யுடையவனாயும், எல்லார்க்கும் பிரியமுள்ளவனாயும்,

* சாபல்யம் = அநுகூலம்.

பாக்கியவானும், அரசனுக்குப் பிரியமுள்ளவனும், பூர்ணமான வித்தைகளை யுடையவனும் இருப்பான்.

சு. 47. புதன் கடகத்தில் இருந்து சுக்கிரனின் திருஷ்டியைப் பெறின் காமதேவனைப்போன்ற சௌந்தரியமுள்ளவனும், சந்தோஷகரமான வார்த்தைகளைப் பேசுகின்றவனும், பாட்டிலும் வாத்தியம் வாசிப்பதிலும் நிபுணத்தன்மை யுள்ளவனும், ஸ்ரீமானும், விலாஸியாயும் இருப்பான்.

சு. 48. புதன் கடகத்தில் இருந்து சனியின் திருஷ்டியைப் பெறின் அதிக டம்பமுள்ளவனும், பாப கர்மங்களில் பிரியமுள்ளவனும், பந்தனத்தை (காராக்கிருகம் முதலியவை) அநுபவிக்கின்றவயும், ஒரு குணங்களு மில்லாதவனும், சகோதரர்களாலும் குரு ஜனங்களாலும் துவேஷிக்கப் படுகின்றவனும் இருப்பான்.

சு. 49. புதன் சிம்மத்திலிருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் பிறர்களால் சேவிக்கத் தக்கவனும், அதிக தனமும் குணமும் உள்ளவனும், பிறருக்கு உபத்திரவம் இம்சை முதலானவைகளைச் செய்கின்றவனும், லுப்தனுகவோ நிஸ்ஸாரனுகவோ ஆகின்றவனும், சஞ்சலமான பாக்கிய முள்ளவனும், லஜ்ஜையில்லாதவனும் இருப்பான்.

சு. 50. புதன் சிம்மத்திலிருந்து சந்திரன் திருஷ்டியைப் பெறின் மிகவும் சௌந்தரியமும் சாமர்த்தியமும் உள்ளவனும், காவியங்களிலும் கலா வித்தைகளிலும் பாட்டிலும் நடனத்திலும் சமர்த்தனும், தனவானும், நல்ல சுபாவமும் நல்ல அலங்காரமும் உள்ளவனும் இருப்பான்.

சு. 51. புதன் சிம்மத்திலிருந்து செவ்வாயின் திருஷ்டியைப் பெறின் குலோசிதமில்லாத கர்மங்களைச் செய்கின்றவனும், அநேக துக்கங்களால் பீடிக்கப்பட்டவனும், தேகத்தில் காயமுள்ளவனும், சௌந்தரியமோ விரூபமோ அல்லது காத்திரமோ மெலிவோ அதிகமில்லாதவனும், கிரீடா சாமர்த்திய மில்லாத மனைவியை யுடையவனும், பௌருஷ மில்லாதவனும் இருப்பான்.

சு. 52. புதன் சிம்மத்திலிருந்து குருவின் திருஷ்டியைப்பெறின் மிகவும் அழகுள்ளவனும், நல்ல அறிவுள்ளவனும், அதிகமான வாக்கு சாமர்த்தியத்தை யுடையவனும், அதிக பிரசித்தியுள்ளவனும், வேலையாட்களும் வாகனங்களும் உள்ளவனும் இருப்பான்.

சு. 53. புதன் சிம்மத்திலிருந்து சுக்கிரனின் திருஷ்டியைப் பெறின் சௌந்தரியமும் விலாசமும் உள்ளவனும், இஷ்டத்திற்குத் தக்கவாறு பேசுகின்றவனும், வாகனங்களுள்ளவனும், மிகவும் தீரனும், அரசனாகவோ மந்திரியாகவோ ஆகின்றவனும் இருப்பான்.

சு. 54. புதன் சிம்மத்திலிருந்து சனியின் திருஷ்டியைப் பெறின் அதிகம் நீண்டு மெலிவில்லாமல் விரூபமடைந்து வியர்வையால் துர்நாற்றமுள்ள சரீரத்தை யுடையவனும், குரூரனும், மிகவும் துக்கிதனும், சுகமில்லாதவனும் இருப்பான்.

சு. 55. புதன் தநுசிலாவது மீனத்திலாவது இருந்து சூரியனின் திருஷ்டியைப்பெறின் சூரனும், பிரமேகம் மூத்திரக்கிரிச்சுரம் என்னும் ரோகங்களால் பீடிக்கப்பட்டவனும், ரோகியாயும், சாந்த சீலனும் இருப்பான்.

சு. 56. புதன் தநுசிலாவது மீனத்திலாவது இருந்து சந்திரனின் திருஷ்டியைப்பெறின் நன்கு எழுதுபவனும், அதிக அழகுள்ளவனும், விசுவாச முடையவனும், சம்மதனும், சுகமநுபவிக்கின்றவனும், மிகவும் தனமுள்ளவனும் இருப்பான்.

சு. 57. புதன் தநுசிலாவது மீனத்திலாவது இருந்து செவ்வாயின் திருஷ்டியைப்பெறின் சங்க போஷணம் நகரம் திருடர் வேடர் வனவாசிகள் ஆகிய இவர்களுக்குத் தலைவனும்,எழுதுவதில் சமர்த்தனும் இருப்பான்.

சு. 58. புதன் தநுசிலாவது மீனத்திலாவது இருந்து குருவின் திருஷ்டியைப் பெறின் ஓரே நிலையும் புத்தியும் வம்சகுணமும் உள்ளவனும், பிரதி புருஷனும், (தலைமைக்கு அடுத்த தானமுள்ளவன்) சிரேஷ்டமான விசேடஞான முள்ளவனும், அரசனின் மந்திரி சபைக்கோ பொக்கிஷ ஸ்தானத்திற்கோ அதிபனும், எழுதுவதில் சமர்த்தனும் இருப்பான்.

சு. 59. புதன் தநுசிலாவது மீனத்திலாவது இருந்து சுக்கிரனின் திருஷ்டியைப் பெறின் எல்லாக் குழந்தைகளுக்கும் எழுத்து கற்பிக்கின்றவனும், தனவானும், அதிக அழகுள்ளவனும், சௌரிய முள்ளவனும் இருப்பான்.

சு. 60. புதன் தநுசிலாவது மீனத்திலாவது இருந்து சனியின் திருஷ்டியைப் பெறின் கோட்டை, காடு இவைகளில் வசிக்கப் பிரிய முள்ளவனும், அதிகம் உண்பவனும், கெட்ட சுபாவமுள்ளவ

யும், சுத்தமில்லாதவனும், சகல காரியங்களிலும் அபஜெயமடைப வனும் இருப்பான்.

சு. 61. புதன் மகரத்திலாவது கும்பத்திலாவது இருந்து சூரிய னின் திருஷ்டியைப் பெறின் மல்யுத்தத்தில் சமர்த்தனும், அதிக பலவானும், அதிகமாய் உண்பவனும், குரூரனும், இஷ்டப்போல் பேசுகின்றவனும், பிரசித்தனும் இருப்பான்.

சு. 62. புதன் மகரத்திலாவது கும்பத்திலாவது இருந்து சந்திர னின் திருஷ்டியைப் பெறின் ஜலசம்பந்தமான பிரவிருத்தியைக் கொண்டோ ஜலத்திலுற்பத்தியான திரவியங்களைக் கொண்டோ ஜீவிக்கின்றவனும், தனவானும், புஷ்பம் சாராயம் கிழங்கு முதலி யவைகளை விற்பனை செய்பவனும், தைரியமில்லாதவனும், ஸ்திர முள்ளவனும் இருப்பான்.

சு. 63. புதன் மகரத்திலாவது கும்பத்திலாவது இருந்து செவ் வாயின் திருஷ்டியைப் பெறின் சபலமான வார்த்தை பேசுகின்றவனு யும், மிகவும் நல்ல சுகமுள்ளவனும், லஜ்ஜையினால் அதிக சோம்ப லுள்ளவனும், சுகத்திற்கு இருப்பிடமானவனும் இருப்பான்.

சு. 64. புதன் மகரத்திலாவது கும்பத்திலாவது இருந்து குரு வின் திருஷ்டியைப் பெறின் அதிகமான தனதானியங்களினால் விருத் தியடைந்தவனும், கிராமம் நகரம் சங்கம் இவைகளில் பூஜிக்கப்படு கின்றவனும், சுகவானும், பிரசித்த முள்ளவனும் இருப்பான்.

சு. 65. புதன் மகரத்திலாவது கும்பத்திலாவது இருந்து சுக்கிர னின் திருஷ்டியைப் பெறின் நீசஸ்திரீயின் பர்த்தாவாயும், விரூபனு யும், புத்திஹீனனும், அதிக காமமுள்ளவனும், அதிக புத்திரர் களை யுடையவனும் இருப்பான்.

சு. 66. புதன் மகரத்திலாவது கும்பத்திலாவது இருந்து சனி யின் திருஷ்டியைப் பெறின் அதிக பாபங்களைச் செய்கின்றவனும், மிகவும் தரித்திரனும், தனத்திற்காக எப்போதும் பிரவிருத்தி செய் கின்றவனும், அதிக துக்கமும் தீனமும் உள்ளவனும் இருப்பான்.

(இருபத்தாறுவது அத்தியாயம் முற்றிற்று.)

## இருபத்தேழாவது அத்தியாயம்.

# ஜீவாஸ்ரய ராசிபலமும் திருஷ்டி பலமும்.

சு. 1-2. குரு மேடத்திலிருக்கும்போது ஜனித்தவன் வாதிப் போர்களுக்குரிய குணங்களால் பிரபலனும், அதிக பிரயத்தனத்தை யுடையவனும், இரத்தினபரணம் உடையவனும், பெரியோர் கூட்டத்தில் சேருபவனும், விகாரமில்லாத மன சக்தியோடு கூடியவனும், தனமும் பலமும் உள்ளவனும், சுபமும் கீர்த்தியுமுள்ள பிரவிருத்திகளைச் செய்பவனும், பிரகாசமுள்ளவனும், அதிக சத்துருவும் அதிக பணச் செலவும் உள்ளவனும், வெட்டினலாவது புண்ணினலாவது அடையாளமுள்ள சரீரத்தோடு கூடியவனும், பராக்கிரமமும் பலமுமுள்ள சேனைகளுக்குத் தலைவனும் இருப்பான்.

சு. 3-4. குரு இடபத்திலிருக்கும் போது ஜனித்தவன் பருத்து அகலமுள்ள மார்போடு கூடியவனும், தேவர் பிராம்மணர் பசு இவர்களிடம் பக்தியுள்ளவனும், அழகோடும் குணத்தோடும் கூடினவனும், களத்திரத்தினிடம் பிரியமுள்ளவனும், வஸ்திராதி அலங்காரங்களில் பிரியமுள்ளவனும், விவசாயம் பசு காலை தனம் தானியம் ஆபரணம் ஆகிய இவைகளோடு கூடினவனும், நல்ல புத்தி வாக்கு குணம் நீதி சாஸ்திர அப்பியாசம் இவைகளோடு கூடினவனும், வைத்திய சாஸ்திரத்தில் அதிக தேர்ச்சியுள்ளவனும் இருப்பான்.

சு. 5-6. குரு மிதுனத்திலிருக்கும்போது ஜனித்தவன் புத்திசாலியாயும், ஞானம், சிற்பசாஸ்திரம் இவைகளில் தேர்ச்சியடைந்தவனும், பிரகாசம் பொருந்திய நேத்திரம் வாக்கு சாமர்த்தியம் தாட்சண்யம் சிறந்த தர்மம் குரு பந்து வெகுமானம் அலங்காரம் மங்களம் நல்ல வார்த்தை கீர்த்தி சந்தோஷம் இவைகளோடு கூடினவனும், வித்வத்தன்மையும் தனமும் உள்ளவனும் இருப்பான்.

சு. 7-8 குரு கடகத்திலிருக்கும் போது ஜனித்தவன் வித்தை அழகு புத்தி தர்மம் சத்குணம் பலம் கீர்த்தி தனதானியாபிவிருத்தி பிரபுத்துவம் சத்தியம் ஒரே நிலைமையுள்ள மனம் புத்திரர் ஜன சன்மானம் பந்துப் பிரியம் ஆகியவைகளோடு கூடினவனும், அரசனும், அல்லது அரசசமானனும் இருப்பான்.

சு. 9-10. குரு சிம்மத்திலிருக்கும்போது ஜனித்தவன் திடபல வைராக்கியத்தோடும் மனோபல தைரியத்தோடும் பந்து ஜனப் பிரி

யத்தோடும் வித்தை தனம் முதலியவற்றோடும் கூடினவனும், நல்ல குடும்பத்தில் ஜனித்தவனும், சபைகளில் கீர்த்தியுள்ளவனும், அதிக கோபத்தோடு சத்துருக்களைச் ஜெயிக்கின்றவனும், பலமும் பராக்கிரமமும் உள்ளவனும், மலை காடு கோட்டை இவைகளில்வசிப் பவனும், அரசனாகவோ அரசசமானனாகவோ ஆகின்றவனும் இருப்பான்.

சு. 11-12. குரு கன்னியிலிருக்கும்போது ஜனித்தவன் புத்தி சாலியாயும், தர்மத்தில் பிரியமுள்ளவனும், தர்மசாலியாயும், பிர விருத்திகளில் சாமர்த்திய முள்ளவனும், நல்ல வஸ்திரம் வாசனா திரவியம் புஷ்பம் இவைகளில் பிரியமுள்ளவனும், காரியங்களில் பலமும் வைராக்கியமும் உள்ளவனும், சாஸ்திரீக பிரவிருத்திக ளாலும் சிற்ப கர்மங்களாலும் தனப் பிராப்தியை யுடையவனும், தாதாவாயும், சத்சுபாவ முள்ளவனும், சாமர்த்தியவானும், சித்திரம் எழுதுவதிலும் அக்ஷர சம்பந்தமான காரியங்களிலும் பழக்கமுள் ளவனும், தன அபிவிருத்தியுடையவனும் இருப்பான்.

சு. 13-14. குரு துலாத்திலிருக்கும்போது ஜனித்தவன் மிகவும் தாரணா புத்தியோடு கூடினவனும், அநேக புத்திரர்களோடு கூடி னவனும், அன்னிய தேச சஞ்சாரத்தினால் தன சம்பாத்தியம் உள்ளவனும், அலங்காரப் பிரியனும், விநயமுள்ளவனும், நாட காதிகளில் பணம் சம்பாதிக்கின்றவனும், அழகுள்ளவனும், சாஸ் திரங்களில் தேர்ச்சியுள்ளவனும், பிரசித்தனும், தேவபூஜை அதிதி சத்காரம் இவைகளில் பிரியனும், வித்துவானும் இருப்பான்.

சு. 15-16. குரு விருச்சிகத்திலிருக்கும்போது ஜனித்தவன் அநேக சாஸ்திரங்களில் சமர்த்தனும், அரச சமானனும், வியாக்கியானங் களைச் செய்கின்றவனும், ஆலயாதி நகர நிர்மிதவானும், நல்ல களத்திரத்தையுடையவனும், சுவல்ப புத்திரர் உள்ளவனும், பீடை கள் உள்ளவனும், அதிக சிரமம் உடையவனும், குருவினிடம் குற்றஞ் சாட்டுபவனும், தம்பதி சமேதராக தர்மம் செய்பவனும், நிந்திக்கத் தகுந்த ஆசாரத்தையுடையவனும் இருப்பான்.

சு. 17-18. குரு தநுசில் இருக்கும்போது ஜனித்தவன் வேதம் விரதம் யாகாதி கர்மம் வேதமந்திர தீட்சாதிகாரம் இவைகளோடு கூடிய ஆசார்யனும், தன சம்பாத்திய முள்ளவனும், உதாரகுண முள்ளவனும், பந்துப் பிரியனும், அன்னியர்களிடமிருந்து பெறும் சன்மான தனப்பிரியனும், சாஸ்திரக்ஞனும், அரசனாகவாவது

மந்திரியாகவாவது ஆகுபவனும், பலநகரம் தேசம் ஆள் சஞ்சார மில்லாதவிடம் புண்ணிய தீர்த்தம் ஆலயம் ஆகிய இவைகளைச் சென்று தரிசிப்பவனும் இருப்பான்.

சு. 19-20. குரு மகரத்திலிருக்கும்போது ஜனித்தவன் பலம் குறைந்தவனும், பலவித கஷ்ட முள்ளவனும், குலத்திற்குப் பொருத்தமில்லாத நடவடிக்கையுள்ளவனும், தரித்திரவானும், கூலிவேலைசெய்பவனும், மங்களம் தயை ஆசாரம் பந்து சந்தோஷம் தர்மம் ஆகிய இவைகள் ஒன்றும் இல்லாதவனும், சரீரபலமாவது குணமாவது இல்லாதவனும், பயமுள்ளவனும், அன்னிய தேச வாசம் செய்பவனும், சதா துக்கமுடையவனும், அறிவில்லாதவனும் இருப்பான்.

சு. 21-22. குரு கும்பத்திலிருக்கும்போது ஜனித்தவன் துஷ்டனும், கோள் சொல்பவனும், துர்ப்புத்தியுள்ளவனும், வேசியர் பிரியனும், ஜலத்திலும் வீட்டிலும் உள்ள பிரவிருத்திகளில் உற்சாகனும், சங்கத்தில் முக்கியனும், நீச ஜனப்பிரியனும், குரூரனும், பிசுக்கனும் (அழுக்குள்ளவன்) பீடையுள்ளவனும், தன்வார்த்தையினால் தன நஷ்டமடைபவனும், புத்தி கல்வி அறிவு நற்குணம் முதலியவைகள் ஒன்றுமில்லாதவனும், குருபத்தினியைச் சேருபவனும் இருப்பான்.

சு. 23-24. குரு மீனத்தில் இருக்கும்போது ஜனித்தவன் வேதம் சாஸ்திரம் இவைகளைத் தெரிந்து கொள்ளுபவனும், பந்துக்களாலும் சத்ஜனங்களாலும் பூஜிக்கப்படுபவனும், அரசனின் சேனாநாயகனும், கீர்த்திமானும், தனவானும், எல்லாராலும் வணங்கப்பட்டவனும், அதிகமான கர்வத்தோடு கூடியவனும், திடமான பிரவிருத்திகளைச்செய்பவனும், அரசனுடைய நீதி நியாய சிக்ஷாக்கிரமம் விவகார சம்பிரதாயம் யுத்தக்கிரமம் இவைகளைத் தெரிந்து கொள்ளுபவனும், சாந்தத்தோடு பிரவிருத்திகளைச் செய்பவனும், ஸ்திரமான பராக்கிரமத்தோடு கூடினவனும் இருப்பான்.

சு. 25. குரு மேடத்திலாவது விருச்சிகத்திலாவது இருந்து சூரியனின் திருஷ்டியைப்பெறின் தர்மசாலியாயும், பொய்களவு இல்லாதவனும், கீர்த்திமானான புத்திரனோடு கூடினவனும் பாக்கிய சாலியாயும், தேகத்தில் அதிக ரோமங்களுள்ளவனும் இருப்பான்.

சு. 26. குரு மேடத்திலாவது விருச்சிகத்திலாவது இருந்து சந்திரனின் திருஷ்டியைப் பெறின் இராமாயண முதலான இதிகாச

புராணங்களிலும் காவியங்களிலும் வித்வானும், மாணிக்கம் முத்து பவளம் முதலான இரத்தினங்களை யுடையவனும், ஸ்திரீகளுக்குப் பிரியமுள்ளவனும், அரசனாகவோ அரச சமானனாகவோ ஆகின்றவனும், வித்வானும் இருப்பான்.

சு. 27. குரு மேடத்திலாவது விருச்சிகத்திலாவது இருந்து செவ்வாயின் திருஷ்டியைப் பெறின் அரசனின் ஆளாகவும், தைரிய பராக்கிரமசாலியாகவும், நீதி வணக்கம் தனம் இவைகளுள்ளவனாகவும், அடங்காதகளத்திரத்தையும் வேலையாட்களையு முடையவனாகவும் இருப்பான்.

சு. 28. குரு மேடத்திலாவது விருச்சிகத்திலாவது இருந்து புதனின் திருஷ்டியைப் பெறின் களவு துரோகங்களால் பாபமுள்ளவனும், அன்னியர்களை உபத்திரவிக்கவோ அல்லது அவர்களின் குற்றங்களைக் கண்டு பிடிக்கவோ சாமர்த்தியமுள்ளவனும், அன்னியர்களைப் புகழ்கின்றவனும், விநய உபகார எண்ணங்களுள்ளவனும், கபடப் பிரவிருத்தியுள்ளவனும் இருப்பான்.

சு. 29. குரு மேடத்திலாவது விருச்சிகத்திலாவது இருந்து சுக்கிரனின் திருஷ்டியைப் பெறின் நூதன கிரகங்களை மனோகரமாகச் செய்கின்றவனும், தன் தேக சுகத்திற்காக மெத்தை கட்டில் வஸ்திரம் முதலியவைகளை உடையவனும், வாசனா திரவியங்களையும் புஷ்பங்களையும் அலங்காரமான ஆபரணங்களையும் அணிந்து கொள்ளுபவனும், யௌவனாதிகளான ஸ்திரீகளினிடத்தில் அதிக பிரியமுள்ளவனும், தனதானியாபிவிருத்தியுள்ளவனும், கொஞ்சங்கூட தைரியமில்லாதவனும் இருப்பான்.

சு. 30. குரு மேடத்திலாவது விருச்சிகத்திலாவது இருந்து சனியின் திருஷ்டியைப் பெறின் அதிக கெடுதல் செய்பவனும், லோபியாயும், பரபரப்பும் பகுத்தறிவும் ஆராய்ச்சியுமில்லாதவனும், சம்மதமுள்ளவனும், சன்னத்தனும், சிநேகிதர்களுக்கும் சந்தானங்களுக்கும் ஸ்திரமில்லாதவனும் இருப்பான்.

சு. 31. குரு இடபத்திலாவது துலாத்திலாவது இருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் பந்து ஜனங்களோடு கூடியவனும், பசு கன்று காலி முதலிய ஜீவராசிகள் உள்ளவனும், தனவானும், நீண்டதேகமுள்ளவனும், வித்வானும் அரச மந்திரியாயும் இருப்பான்.

சு. 32. குரு இடபத்திலாவது துலாத்திலாவது இருந்து சந்திரனின் திருஷ்டியைப் பெறின் தனம் சம்பத்து சௌந்தரியம்

இவைகளுள்ளவனும், மாதாவின் சொற்படி நடப்பவனும், ஸ்திரீகளுக்குப்பிரியனும், நிரம்ப அனுபவ சுகமுள்ளவனும் இருப்பான்.

சு. 33. குரு இடபத்திலாவது துலாத்திலாவது இருந்து செவ்வாயின் திருஷ்டியைப் பெறின் யௌவன ஸ்திரீகளின் புருஷனும், அறிவுள்ளவனும், சூரனும், நிறைந்த சம்பத்து சுகம் இவைகளோடு கூடினவனும், அரச சிநேகனும் இருப்பான்.

சு. 34. குரு இடபத்திலாவது துலாத்திலாவது இருந்து புதனின் திருஷ்டியைப் பெறின் கல்வி சாமர்த்தியம் பாக்கியம் சம்பத்து உருசி இவைகளோடு கூடியவனும், நல்ல குணமும் சுபாவமும் அழகும் உள்ளவனும் இருப்பான்.

சு. 35. குரு இடபத்திலாவது துலாத்திலாவது இருந்து சுக்கிரனின் திருஷ்டியைப் பெறின் அதிக சாம்பிரதாய முள்ளவனும், சம்பத்துள்ளவனும், அன்னியருடைய அலங்கார சாமான்களால் அலங்கரித்துக் கொள்பவனும், எப்போதும் எல்லாச் சாமான்களையும் சுத்தமாக வைத்துக்கொண்டிருப்பவனும், நல்ல படுக்கை வஸ்திரங்கள் உள்ளவனும் இருப்பான்.

சு. 36. குரு இடபத்திலாவது துலாத்திலாவது இருந்து சனியின் திருஷ்டியைப் பெறின் நல்ல அறிவுள்ளவனும், தனதானியாதி அபிவிருத்தியுள்ளவனும், கிராமம் தேசம் நகரம் இவைகளில் பிரதானியாயும், ஆசாரமில்லாதவனும், அழகில்லாதவனும், களத்திரத்தோடு விரோதம் உடையவனும் இருப்பான்.

சு. 37. குரு மிதுனத்திலாவது கன்னியிலாவது இருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் சிரேஷ்ட குலத்தில் ஜனித்தவனும், கிராமத்திலுள்ள ஜனங்களுக்குப் பிரதானியாயும், (சிரேஷ்டனும்) குடும்பத்திற்குச் சிரேஷ்ட முள்ளவனும், களத்திரம் புத்திரர்தனம் ஆகிய இவைகள் நிறைந்தவனும் இருப்பான்.

சு. 38. குரு மிதுனத்திலாவது கன்னியிலாவது இருந்து சந்திரனின் திருஷ்டியைப் பெறின் தனவானும், மாதாவுக்குப் பிரீதியுள்ளவனும், நன்றியுள்ளவனும், சுகம் களத்திரம் புத்திரர் இவர்களோடு கூடினவனும், கல்வி சௌந்தர்யம் உள்ளவனும், துல்லியமில்லாதவனும் இருப்பான்.

சு. 39. குரு மிதுனத்திலாவது கன்னியிலாவது இருந்து செவ்வாயின் திருஷ்டியைப் பெறின் நீடித்து மங்களகரமாகவுள்ள ஜெயத்தை அடைகின்றவனும், தேகத்தில் காய அடையாளமுள்ளவ

ணும், தனவானும், ஜனங்களுக்குப் பிரியமுள்ளவனும் இருப்பான்.

சு. 40. குரு மிதுனத்திலாவது கன்னியிலாவது இருந்து புதனின் திருஷ்டியைப் பெறின் ஜோதிஷத்தில் வல்லவனும், அதிக புத்திரர்களும் களத்திரமும் உள்ளவனும், சூத்திரங்களை (பாணினியைப்போல்) உண்டு பண்ணுபவனும், அதிக சௌந்தரியமுள்ளவனும், விஸ்தாரமான பேச்சுடையவனும் இருப்பான்.

சு. 41. குரு மிதுனத்திலாவது கன்னியிலாவது இருந்து சுக்கிரனின் திருஷ்டியைப் பெறின் தேவாலய சம்பந்தமான பிர விருத்திகளைச் செய்பவனும், வேசையான ஸ்திரீயின் சுகத்தை அநுபவிக்கின்றவனும், ஸ்திரீகளின் மனதைக் கவருகின்றவனும் இருப்பான்.

சு. 42. குரு மிதுனத்திலாவது கன்னியிலாவது இருந்து சனியின் திருஷ்டியைப் பெறின் பந்தி சங்கம் ராச்சியம் கிராமம் நகரம் ஆகிய இவைகளில் பிரதமஸ்தானத்தை வகிக்கின்றவனும், காந்தியுள்ள சரீரத்தோடு கூடியவனும் இருப்பான்.

சு. 43. குரு கடகத்திலிருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் சங்கத்தலைவனும், ஆரம்பத்தில் சுகமும் தனமும் களத்திரமும் இல்லாதவனும், பின் தனாதிபதியாயும் இருப்பான்.

சு. 44. குரு கடகத்திலிருந்து சந்திரனின் திருஷ்டியைப் பெறின் நிரம்ப தனமும் காந்தியும் உள்ளவனும், அரசனாகவாவது அல்லது அரசசமானனாகவாவது ஆகின்றவனும், பொக்கிஷசாலை வாகனங்கள் அதிக முள்ளவனும், கீர்த்தியுள்ள களத்திர புத்திரரோடு கூடினவனும் இருப்பான்.

சு. 45. குரு கடகத்திலிருந்து செவ்வாயின் திருஷ்டியைப் பெறின் கௌமாராவஸ்தையுள்ள களத்திரத்தை யுள்ளவனும், தனம் ஆபரணம் வித்துவத்தன்மை ஆகிய இவைகள் உள்ளவனும், சூரனும், காய அடையாளமுள்ளவனும் இருப்பான்.

சு. 46. குரு கடகத்திலிருந்து புதனின் திருஷ்டியைப்பெறின் தாய் பந்து இவர்கள் மூலம் தனம் அடைபவனும், கலகமுடையவனும், பாபமில்லாதவனும், அரச மந்திரிகளுக்கு விசுவாச முள்ளவனும் இருப்பான்.

சு. 47. குரு கடகத்திலிருந்து சுக்கிரனின் திருஷ்டியைப் பெறின் அதிக களத்திரமும் அதிக சம்பத்தும் உள்ளவனும், பல

விதமாய் அலங்கரித்துக் கொள்ளுபவனும், சுகத்தையும் சோபனத்தையும் உடையவனும் இருப்பான்.

சு. 48. குரு கடகத்திலிருந்து சனியின் திருஷ்டியைப்பெறின் கிராமம் நகரம் சேனை இவைகளுக்கு நாயகனும், நிரம்ப நிந்தியதையுள்ளவனும், சம்பத்தோடு கூடினவனும், வயோதிகத்தில் சுகம் அநுபவிக்கின்றவனும் இருப்பான்.

சு. 49. குரு சிம்மத்திலிருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் கீர்த்திமானும், சத்ஜனங்களுக்குப் பிரியனும், அரசனாகவாவது பிரபுவாகவாவது ஆகின்றவனும், சம்பத்து சமிருத்திகளோடு கூடினவனும், நல்ல சுபாவமுள்ளவனும் இருப்பான்.

சு. 50. குரு சிம்மத்திலிருந்து சந்திரனின் திருஷ்டியைப் பெறின் மங்களகாமுடையவனும், பலமுள்ளவனும், களத்திர சம்பத்துகளைக்கொண்டு விருத்திசெய்யப்பட்ட சம்பத்தோடு கூடினவனும், பிரபுவாயும் இந்திரியாதிகளைச் ஜெயித்தவனும் இருப்பான்.

சு. 51. குரு சிம்மத்திலிருந்து செவ்வாயின் திருஷ்டியைப் பெறின் சத்ஜனங்களுக்கும் குருக்களுக்கும் விசுவாசமுடையவனும், விசேஷபிரவிருத்திகளைச் செய்கின்றவனும், கீர்த்திமானும், சமர்த்தனும், ஆசாரம் சூரத்துவம் பராக்கிரமம் ஆகிய இவைகள் உள்ளவனும் இருப்பான்.

சு. 52. குரு சிம்மத்திலிருந்து புதனின் திருஷ்டியைப்பெறின் சிற்பசாஸ்திரவிஷயமான எல்லாக் காரியத்திலும் வாஸ்துவை நிதானப்படுத்துவதிலும் பழக்கமுள்ளவனும், நல்லசொற்களைச் சொல்பவனும், பிரதான மந்திரியாயும் இருப்பான்.

சு. 53. குரு சிம்மத்திலிருந்து சுக்கிரனின் திருஷ்டியைப்பெறின் ஸ்திரீகளுக்குப் பிரியமுள்ளவனும், சுபகனும், அரச சன்மானம் தனம் வஸ்திரம் இவைகளோடு கூடினவனும், ஒருக்காலும் விகாரத்தை யடையாதவனும், அதிக மனோபல விசேஷத்தோடு கூடினவனும் இருப்பான்.

சு. 54. குரு சிம்மத்திலிருந்து சனியின் திருஷ்டியைப் பெறின் அதிக விஸ்தாரமாயும் அழகாயும் பேசுகின்றவனும், ஒரு சுகமுமில்லாதவனும், சித்திரங்களை வரைபவனும், தீட்சண்ய முள்ளவனும், தேவஸ்திரீபோக சமான சுகபோக முள்ளவனும் இருப்பான்.

சூ. 55. குரு தநுசிலாவது மீனத்திலாவது இருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் அரச விரோத முள்ளவனும், கஷ்டமடைபவனும் தனம் பந்து இவைகள் இல்லாதவனும் இருப்பான்.

சூ. 56. குரு தநுசிலாவது மீனத்திலாவது இருந்து சந்திரனின் திருஷ்டியைப் பெறின் பலவித சுகமுள்ளவனும், ஸ்திரீகளுக்குக் காமத்தை உண்டாக்கு கின்றவனும், மானம் தனம் ஐசுவரியம் இவைகளால் கர்வம் அடைந்தவனும் இருப்பான்.

சூ. 57. குரு தநுசிலாவது மீனத்திலாவது இருந்து செவ்வாயின் திருஷ்டியைப் பெறின் சண்டை காரணமாக அங்கத்தில் விரூபமுள்ளவனும், குரூரனும், வதம் செய்கின்றவனும், அன்னியரை இம்சிப்பவனும், நாஸ்தியடைகின்ற பரிஜனத்தோடு கூடியவனும் இருப்பான்.

சூ. 58. குரு தநுசிலாவது மீனத்திலாவது இருந்து புதனின் திருஷ்டியைப் பெறின் அரசனாகவாவது அல்லது மந்திரியாகவாவது ஆகின்றவனும், புத்திரர் தனம் சுகம் சௌபாக்கியம் ஆகிய இவைகள் அதிகமுள்ளவனும், எல்லாருக்கும் சந்தோஷத்தைச் செய்பவனும் இருப்பான்.

சூ. 59 குரு தநுசிலாவது மீனத்திலாவது இருந்து சுக்கிரனின் திருஷ்டியைப் பெறின் அறிவு சுகம் தனம் இவைகள் உள்ளவனும், எல்லாத் தோஷங்களிலிருந்து விடுபட்டவனும், தீர்க்காயுளுள்ளவனும், மங்களகர முடையவனும், இலட்சுமீகடாக்ஷ முள்ளவனும் இருப்பான்.

சூ. 60. குரு தநுசிலாவது மீனத்திலாவது இருந்து சனியின் திருஷ்டியைப் பெறின் விருத்திஹீனனும், பயமுள்ளவனும், கிராமம் நகரம் சங்கம் இவைகளிலிருந்து நீக்கப்பட்டவனும், தரித்திரனும், சுகம் போகம் தர்மம் ஆகிய இவைகள் இல்லாதவனும் இருப்பான்.

சூ. 61. குரு மகரத்திலாவது கும்பத்திலாவது இருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் வித்வானும், அரசனும், பிரகிருதி குணமுள்ளவனும், அநேக போகங்களுள்ளவனும், சூரத்துவமுள்ளவனும் இருப்பான்.

சூ. 62. குரு மகரத்திலாவது கும்பத்திலாவது இருந்து சந்திரனின் திருஷ்டியைப் பெறின் தாய் தந்தையர்களிடம் பக்தியுள்ளவனு

யும், சிரேஷ்டனும், சத் குடும்பத்தில் பிறந்தவனும், தனவானும், சத்குண முள்ளவனும், தர்மத்தில் சிறந்தவனும் இருப்பான்.

சு. 63. குரு மகரத்திலாவது கும்பத்திலாவது இருந்து செவ்வாயின் திருஷ்டியைப் பெறின் பராக்கிரம முள்ளவனும், அரசனின் சேனு நாயகனும், கர்வியாயும், பிரகாச முள்ளவனும், நல்ல வேஷத்தோடு கூடியவனும், கீர்த்திமானும், சத் ஜனங்களால் புகழப்பட்டவனும் இருப்பான்.

சு. 64. குரு மகரத்திலாவது கும்பத்திலாவது இருந்து புதனின் திருஷ்டியைப் பெறின் காமாக்கிரகமுள்ளவனும், பிரதான குணங்கள் நிறைந்தவனும், வியாபாரியாயும், தனவானும், பிரசித்தனும், சத் ஜனங்களால் வெகுமானிக்கப்பட்டவனும், அதிக பந்துக்களுள்ளவனும் இருப்பான்.

சு. 65. குரு மகரத்திலாவது கும்பத்திலாவது இருந்து சுக்கிரனின் திருஷ்டியைப் பெறின் பலவிதமான பழங்கள் பலகாரங்கள் அன்னம் பால் மோர் முதலான சுக போசன முள்ளவனும், வேறு வீட்டில் வாசமும் படுக்கையுமுள்ளவனும், உத்தம ஸ்திரீயோடு கூடியவனும், நல்ல ஆபரண வஸ்திரங்களைத் தரித்துக்கொள்பவனும் இருப்பான்.

சு. 66. குரு மகரத்திலாவது கும்பத்திலாவது இருந்து சனியின் திருஷ்டியைப் பெறின் கல்வி கேள்விகளில் தேர்ச்சி யுள்ளவனும், மகானும், தேசநாதனும், அபிவிருத்தியான ஜனங்களையும் பசு முதலிய நாற்கால் ஜீவன்களையும் உடையவனும், போக சுகங்களை அநுபவிக்கின்றவனும் இருப்பான்.

இருபத்தேழாவது அத்தியாயம் முற்றிற்று.

## இருபத்தெட்டாவது அத்தியாயம்.

## சுக்கிராஸ்ரய ராசிபலமும் திருஷ்டி பலமும்.

சு. 1-2. சுக்கிரன் மேடத்திலிருக்கும்போது ஜனித்தவன் இராவில் நேத்திரத்திற்குப் பிரகாச மில்லாதவனும், அதிகமாய்ப் பேசுகின்றவனும், விரோத குண முள்ளவனும், அன்னிய ஸ்திரீயைக் கைவசப்படுத்துகின்றவனும், வேசைகளினிடத்தில் பிரியமுள்ளவனும், காடுமலைகளில் சஞ்சரிப்பவனும், ஸ்திரீகளினால் சிறைவாசமடைபவனும், லோபியாயும், பெருங்களவுகளைச் செய்பவனும் சேனை நகரம் சங்கம் சமுதாயம் ஆகியவைகளுக்கு நாதனும், விசுவாச யோக்கியமில்லாதவனும், பிரகாசத்தோடு கூடி யிருப்பவனும் இருப்பான்.

சு. 3-4. சுக்கிரன் இடபத்திலிருக்கும்போது ஜனித்தவன் அநேக ஸ்திரீகளோடும் இரத்தினம் முதலிய வஸ்துக்களோடும் கூடியிருப்பவனும், விவசாயம் செய்பவனும், வாசனைத் திரவியம் வஸ்திரம் மாலை முதலியவைகளை அணிகின்றவனும், பசு காளை இவைகளினால் தனசுகங்களை அநுபவிக்கின்றவனும், தானம் செய்கின்றவனும், தன் பந்துக்களை ஆதரிக்கின்றவனும், சத்குணம் தனம் இவைகளோடு கூடினவனும், அதிக கல்வி தேர்ச்சியுள்ளவனும், கெம்பீரமுள்ளவனும், எல்லாச் சீவராசிகளுக்கும் உபகாரத்தைச் செய்பவனும், முக்கிய குணங்களுள்ளவனும், பரோபகாரியாயும் இருப்பான்.

சு. 5-6. சுக்கிரன் மிதுனத்திலிருக்கும்போது ஜனித்தவன் சிற்பசாஸ்திரம் கலாவித்தை வியாகரண சாஸ்திரம் இவைகளினால் கீர்த்தியைச் சம்பாதித்தவனும், சத்தியவானும், வாக்கு சாதுரியனும் சித்திரம் எழுத்து சம்பந்தப்பட்ட வேறு காரியங்களில் பிரியமுள்ளவனும், பத்திய கத்திய வடிவமான காவியம் இயற்றுபவனும், பிரிய வசனங்களைச் சொல்பவனும், நல்லவனும், பாட்டு நாடகாதிகளில் சாமர்த்திய முள்ளவனும், தன் ஜனங்கள் மூலமாக தனமடைபவனும், தேவப் பிராமண பக்தனும், நல்ல சிநேகமுள்ளவனும் இருப்பான்.

சு. 7-8. சுக்கிரன் கடகத்திலிருக்கும் போது ஜனித்தவன் சம்போகப் பிரியனும், அறிவும் பலமும் குணசிரேஷ்டமும் உள்ளவ

னும், இச்சையுள்ள எல்லாச் சுகசாதனங்களோடு கூடினவனும், எல்லாருக்கும் தர்சனீயனும், நல்லநீதியுள்ளவனும், ஸ்திரீயினால் கொடுக்கப்பட்ட * உணவாகிய ஜலம் சோறு கள் இவைகளினாலுண்டான வியாதிகளால் அதிக பீடைகளுள்ளவனும், தன்னாலாவது தன் வம்சத்தினாலாவது உண்டான தோஷத்தினால் துக்கிக்கின்றவனும் இருப்பான்.

சு 9-10. சுக்கிரன் சிம்மத்திலிருக்கும்போது ஜனித்தவன் ஸ்திரீகளைச் சேவிக்கின்றதால் கிடைக்கின்ற சுகம் சம்பத்து சந்தோஷம் முதலியவைகளோடு கூடியவனும், மனதைரியமில்லாதவனும், இஷ்ட பந்துக்களோடு கூடியவனும், பலவித சுகமுள்ளவனும், துக்கியாயும், பரோபகாரியாயும், குரு பிராமணர் ஆசிரியர்கள் சொற்படி நடப்பவனும், பலவித ஆலோசனைகளால் வியாகூலமுள்ளவனும் இருப்பான்.

சு. 11-12. சுக்கிரன் கன்னியிலிருக்கும்போது ஜனித்தவன் புத்தி குறைந்தவனும், சாமர்த்தியமில்லாதவனும், அடுத்தவர்களைக் கொண்டு சகாயத்தைத் தேடுபவனும், கலாவித்தைகளின் சம்பிரதாயத்தைத் தெரிகின்றவனும், ஸ்திரீகளுடன் பேசுவதற்குத் தகுந்தவனும், சினேகம் கணக்கு இவைகளில் பிரயாசையுடையவனும், பொது மகளை ஆக்கிரமிக்கின்றவனும், தரித்திரனும், சுகமும் போகமுமில்லாதவனும், சாஸ்திரசபைகளில் பண்டிதனும் இருப்பான்.

சு. 13-14. சுக்கிரன் துலாத்திலிருக்கும்போது ஜனித்தவன் பிரயாசைப்பட்டு பணம் தேடுகின்றவனும், வீரனும், பலமாதிரியான நல்ல மாலைகள் வஸ்திரங்கள் அணிபவனும், அடுத்த தேசத்தில் வாசம் செய்பவனும், தன் சாமர்த்தியத்தைக் காப்பாற்றுபவனும், இயலாதகாரியத்தில் சபலனும், தனவானும், அதிக புண்ணியசாலியாயும், தேவர் பிராமணர் இவர்களைப் பூசிப்பதால் கிடைத்த கீர்த்தியுள்ளவனும், பண்டிதனும், சௌபாக்கியமுள்ளவனும் இருப்பான்.

சு. 15-16. சுக்கிரன் விருச்சிகத்திலிருக்கும்போது ஜனித்தவன் விரோதபுத்தியுள்ளவனும், துஷ்டனும், தர்மங்களைவிட்டவனும், காரியமில்லாமல் அதிகமாய்ப் பேசுபவனும், மூடனும், சகோதர பிரியமில்லாதவனும், நன்றியில்லாதவனும், சத்துருக்களைக்கொல்

* நஞ்சுகலந்த உணவு முதலியன.

னுபவனும், பாபியாயும், சிரேஷ்டனும், வேசிகளைத் துவேஷிக்கின்றவனும், கொலை முதலிய கெட்ட காரியங்களைச் செய்பவனும், அதிக கடனுள்ளவனும், தரித்திரனும், கெட்ட குணமுள்ளவனும், மூலரோகம் பகந்தரம் முதலான குஹ்யரோகங்களுள்ளவனும் இருப்பான்.

சு. 17-18. சுக்கிரன் தநுசிலிருக்கும்போது ஜனித்தவன் நல்ல தர்மங்களினாலும் சத்பிரவிருத்திகளினாலும் உண்டான தனத்தோடும் அதன் பலனோடுங் கூடினவனும், எல்லாருக்கும் பிரியமுள்ளவனும், சுந்தரனும், சிரேஷ்டனும், குலப்பிரசித்தியையுண்டாக்குகின்றவனும், வித்வானும், பசு காளைகள் உள்ளவனும், அலங்கரித்துக் கொள்வதில் பிரியமுள்ளவனும், நல்ல சம்பத்து களத்திரம் சௌபாக்கியம் ஆகிய இவைகள் உள்ளவனும், அரச மந்திரியாயும், அதிக சாமர்த்தியமுள்ளவனும், பெருத்து நீண்ட சரீரத்துடன் கூடியவனும், சத்ஜன சமூகத்தினால் பூஜ்யதையுள்ளவனும் இருப்பான்.

சு. 19-20. சுக்கிரன் மகரத்திலிருக்கும்போது ஜனித்தவன் அதிக செலவும் பயமும் சத்துருக்களால் துக்கமும் அடைபவனும், துர்ப்பலமுள்ளவனும், விருத்தஸ்திரீகளைக் காமிக்கின்றவனும், ஹிருதயரோக முள்ளவனும், பணவிஷயத்தில் லோபியாயும், அதிக ஆசை பொய் கெடுதல் இவைகளுள்ளவனும், சாமர்த்தியவானும், நபும்சகப் பிரகிருதியாயும், சிறிதும் பிரவிர்த்திக்காதவனும், அடுத்தவர்களுக்காக எல்லாம் செய்பவனும், அதிகம் துக்கிப்பவனும், அறிவில்லாதவனும், எல்லாத் துக்கங்களையும்சகிப்பவனும் இருப்பான்.

சு. 21-22. சுக்கிரன் கும்பத்திலிருக்கும்போது ஜனித்தவன் சம்பிரமத்தினாலும் ரோகத்தினாலும் துக்கிதனும், பிரயோசன மில்லாத பிரவிருத்திகளில் சதா பிரியமுள்ளவனும், அன்னிய ஸ்திரீகளை அடைகின்றவனும், தர்மம் இல்லாதவனும், குருவினாலும் புத்திரனாலும் விரோதிக்கப்பட்டவனும், ஸ்நாநம் சமய அடையாளங்கள் அநுபவம் அலங்காரம் வஸ்திரதாரணம் முதலியவைகளில் சிரத்தையில்லாதவனும், விருத்தி ஹீனனும் இருப்பான்.

சு. 23-24. சுக்கிரன் மீனத்திலிருக்கும்போது ஜனித்தவன் யாசகர்களுடைய மனம்போல் தானம் கொடுப்பவனும், அதிக பணம் உள்ளவனும், சகல சத்துருக்களையும் பிரயாசை யில்லாமல் அடக்குகின்றவனும், உலகப் பிரசித்தனும், சிரேஷ்டனும், எல்

லாப் பிரவிருத்திகளிலும் மேன்மையுள்ளவனும், அரச சினேகிதனு யும், வாக்கு புத்தி கம்பீரம் உள்ளவனும், சத்ஜனங்களால் கிடைக்கப் பட்ட சம்பத்து வெகுமானம் இவைகளோடு கூடினவனும், அன் னியரால் கிரகிக்கத் தகுந்த மேன்மையோடுகூடிய வாக்குள்ளவனும், வம்சகர்த்தாவாயும், ஞானமுள்ளவனும் இருப்பான்.

சு. 25. சுக்கிரன் மேடத்திலாவது விருச்சிகத்திலாவது இருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் ஸ்திரீயினால் அதிக துக்கமுள்ள வனும், அதனால் சுகமும் தனமும் நஷ்டமடைந்தவனும், அரசனாக வாவது அரச சமானனாகவாவது ஆகின்றவனும், வித்துவானும் இருப்பான்.

சு. 26. சுக்கிரன் மேடத்திலாவது விருச்சிகத்திலாவது இருந்து சந்திரனின் திருஷ்டியைப் பெறின் பந்தனத்திற்பட்டவனும், ஸ்திர மில்லாதவனும், காமாக்கிரக முள்ளவனும், நீசஸ்திரீயான களத் திரத்தோடு கூடியவனும் இருப்பான்.

சு. 27. சுக்கிரன் மேடத்திலாவது விருச்சிகத்திலாவது இருந்து செவ்வாயின் திருஷ்டியைப் பெறின் சுகம் தனம் அபிமானம் இவை கள் இல்லாதவனும், அன்னியர்களிடம் கூலிவேலை செய்பவனும், கெட்ட பிரவிருத்திகளைச் செய்பவனும் இருப்பான்.

சு. 28. சுக்கிரன் மேடத்திலாவது விருச்சிகத்திலாவது இருந்து புதனின் திருஷ்டியைப் பெறின் அறிவு மானம் பூஜ்ஜியதை இல்லாத வனும், அபவாதம் செய்கின்றவனும், விநயமில்லாதவனும், கள்ளனும், குரூரனும், மதிப்பில்லாதவனும் இருப்பான்.

சு. 29. சுக்கிரன் மேடத்திலாவது விருச்சிகத்திலாவது இருந்து குருவின் திருஷ்டியைப் பெறின் நல்ல நேத்திரங்களையுடையவனு யும், மேன்மை பொருந்திய களத்திரத்தோடு கூடியுள்ளவனும், உயரமான நல்ல சரீரமுள்ளவனும், அதிக புத்திரசமிருத்தியோடு கூடினவனும் இருப்பான்.

சு. 30. சுக்கிரன் மேடத்திலாவது விருச்சிகத்திலாவது இருந்து சனியின் திருஷ்டியைப் பெறின் விருத்தி ஹீனனும், மடியனாகவா வது அல்லது துர்ப்பலனாகவாவது இருக்கின்றவனும், சஞ்சார முள்ளவனும், தனஹீனனும், பிரியமுள்ள ஜனங்களைச் சேவிக் கின்றவனும் இருப்பான்.

சு. 31. சுக்கிரன் இடபத்திலாவது துலாத்திலாவது இருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் மேன்மையுள்ள களத்திரத்தோடு

கூடி சுகமநுபவிக்கின்றவனும், அதிக சம்பத்தோடு கூடியவனும், அடுத்தவர்களைப் பார்க்கிலும் உத்தமனும், ஸ்திரீயால் பயப்படு பவனும் இருப்பான்.

சு. 32. சுக்கிரன் இடபத்திலாவது துலாத்திலாவது இருந்து சந்திரனின் திருஷ்டியைப் பெறின் சிரேஷ்டமான குடும்பத்தில் பிறந்தவனும், சுகம் தனம் மானம் புத்திரர் ஆகியவைகளோடு கூடி யுள்ளவனும், பூஜ்ஜியனும், அதிக அழகுள்ளவனும் இருப்பான்.

சு. 33. சுக்கிரன் இடபத்திலாவது துலாத்திலாவது இருந்து செவ்வாயின் திருஷ்டியைப் பெறின் கெட்ட பழக்கமுள்ள களத் திரத்தோடு கூடினவனும், ஸ்திரீயால் நசிக்கப்பட்ட கிருகத்தோடும் களத்திரத்தோடும் கூடியவனும், காம பீடிதனும் இருப்பான்.

சு. 34. சுக்கிரன் இடபத்திலாவது துலாத்திலாவது இருந்து புதனின் திருஷ்டியைப் பெறின் அழகு மதுரம் சௌபாக்கியம் சுகம் தைரியம் புத்தி இவைகளோடு கூடியுள்ளவனும், சம்பத்திலும் ஆபத்திலும் ஒரு விதத்திலும் விகாரம் அடையாத சத்துவம் என்ற மனோ சக்தி விசேஷத்தோடு கூடியவனும் இருப்பான்.

சு. 35. சுக்கிரன் இடபத்திலாவது துலாத்திலாவது இருந்து குருவின் திருஷ்டியைப் பெறின் களத்திரம் புத்திரர் நல்ல கிருகம் பல்லக்கு யானை குதிரை வண்டி தேர் ஆகிய இவைகளோடு கூடின வனும், பிரியமான வியாபாரங்களைச் செய்பவனும் இருப்பான்.

சு. 36. சுக்கிரன் இடபத்திலாவது துலாத்திலாவது இருந்து சனியின் திருஷ்டியைப் பெறின் சுகமும் தனமும் குறைவுள்ளவனு யும், கெட்ட நடத்தையுடையவனும், வியபிசாரியான ஸ்திரீயோடு கூடினவனும், ரோக பீடிதனும் இருப்பான்.

சு. 37. சுக்கிரன் மிதுனத்திலாவது கன்னியிலாவது இருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் அரசன் தாய் ஸ்திரீ இவர்களுக் குத் தொண்டு செய்பவனும், பண்டிதனும், தனவானும், சுகாநு பவ முள்ளவனும் இருப்பான்.

சு. 38. சுக்கிரன் மிதுனத்திலாவது கன்னியிலாவது இருந்து சந்திரனின் திருஷ்டியைப் பெறின் கறுப்பு நிறமுள்ள கண்களோ டும் நல்ல அழகுள்ள தலை முடிகளோடும் கூடியவனும், படுக்கை இருப்பு இவைகளுக்குள்ள சாமான்களும் வாகனங்களும் உள்ளவனும், அதிக சுந்தரனும், கோமளனும், சௌபாக்கியவானும் இருப்பான்.

சு. 39. சுக்கிரன் மிதுனத்திலாவது கன்னியிலாவது இருந்து செவ்வாயின் திருஷ்டியைப் பெறின் அதி சௌபாக்கிய முள்ளவனும் காமபீடிதனும், ஸ்திரீ விஷயத்தில் பணத்தை விரயம் செய்பவனு யும், இருப்பான்.

சு. 40. சுக்கிரன் மிதுனத்திலாவது கன்னியிலாவது இருந்து புதனின் திருஷ்டியைப்பெறின் வித்துவானும், சுந்தரனும், தனவா னும், வாகனம் பரிஜனங்கள் உள்ளவனும், சௌபாக்கியயுக்தனும், சங்கத்திற்கு அதிபனும், பிரபுவாயும் இருப்பான்.

சு. 41. சுக்கிரன் மிதுனத்திலாவது கன்னியிலாவது இருந்து குருவின் திருஷ்டியைப்பெறின் அதிக சுக முள்ளவனும், பலவிதத் தில் தாரித்திரத்தை அநுபவிப்பவனும், பிரதிரூபத்தை (உருவம்) உண்டாக்குகின்றவனும், வித்துவானும், வேதவித்தியாதிகளை உப தேசிக்கின்றவனும் இருப்பான்.

சு. 42. சுக்கிரன் மிதுனத்திலாவது கன்னியிலாவது இருந்து சனியின் திருஷ்டியைப் பெறின் மிகத்துக்கிக்கின்றவனும், காரியங் களில் தோல்வியுள்ளவனும், ஸ்திரமில்லாதவனும், மற்றவர்களால் தள்ளப்பட்டவனும், அறிவில்லாதவனும் இருப்பான்.

சு. 43. சுக்கிரன் கடகத்திலிருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் எல்லாக்காரியங்களிலும் உற்சாகமுடையவனும் அதிக அழ குள்ளவனும் கோபமுள்ளவனும் அதிக திரவியமுள்ளவனும் அரச புத்திரியுமான களத்திரத்தோடு கூடினவனாய் இருப்பான்.

சு. 44. சுக்கிரன் கடகத்திலிருந்து சந்திரனின் திருஷ்டியைப் பெறின் மறுமணம் செய்து கொள்ளும் பிதாவையுடையவனும், (மாற்றாந்தாயுடையவன்) முதலில் பெண்குழந்தை பெறுபவனும், பின்னிட்டு அதிக புத்திரர்களும் சுகமும் சௌபாக்கியமும் கூடினவ னும், அழகுள்ளவனும் இருப்பான்.

சு. 45. சுக்கிரன் கடகத்திலிருந்து செவ்வாயின் திருஷ்டியைப் பெறின் கலாவிருத்திகளில் நல்ல அறிவுள்ளவனும், மந்திரியாயும், தனவானும், ஸ்திரீயினால் துக்கிக்கின்றவனும், சுபகனும், பந்து வர்க்கத்திற்கு அபிவிருத்தியைச் செய்பவனும் இருப்பான்.

சு. 46. சுக்கிரன் கடகத்திலிருந்து புதனின் திருஷ்டியைப் பெறின் பண்டிதனும், மேன்மையுள்ளகளத்திரத்தோடு கூடியவனு யும், பந்துக்களால் எப்போதும் துக்கிக்கின்றவனும், சுகமும் சம் பத்தும் உள்ளவனும்; அறிவுள்ளவனும் இருப்பான்.

சு. 47. சுக்கிரன் கடகத்திலிருந்து குருவின் திருஷ்டியைப் பெறின் வேலையாட்களும் தனதானியங்களும் புத்திரரும் வாகனங்களும் பந்துக்களும் சிநேகிதர்களும் சுகமும் உள்ளவனும், அரசனுக்குப் பிரியனும் இருப்பான்.

சு. 48. சுக்கிரன் கடகத்திலிருந்து சனியின் திருஷ்டியைப் பெறின் ஸ்திரீஜிதனும், (ஸ்திரீகளுக்குப் பயப்படுவன்) தரித்திரனும், குலத்திலிருந்து தள்ளப்பட்டவனும், ஸ்திரமில்லாதவனும், ஒரு சுகமுமில்லாதவனும் இருப்பான்.

சு. 49. சுக்கிரன் சிம்மத்திலிருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் வைராக்கிய முள்ளவனும், கன்னிகைகளுக்கு இஷ்டனும், காமபீடிதனும், களத்திரத்தினுலாவது அன்னியஸ்திரீகளினுலாவது தனம் அடைபவனும், ஒட்டகங்கள் உள்ளவனும் இருப்பான்.

சு. 50. சுக்கிரன் சிம்மத்திலிருந்துசந்திரனின் திருஷ்டியைப் பெறின் மறுமணம் செய்து கொள்ளும் தகப்பனையுடையவனும், ஸ்திரீயினுல் துக்கமடைபவனும், தனவானும், பலவிதமான பல விஷயங்களில் ஆலோசனையுள்ளவனும் இருப்பான்.

சு. 51. சுக்கிரன் சிம்மத்திலிருந்து செவ்வாயின் திருஷ்டியைப் பெறின் அரசனுடையவேலையாளாயும், பிரசித்தனும், ஸ்த்ரீகளுக்கு இஷ்டனும், அதிகதனதானியங்களுள்ளவனும், சௌபாக்கியசாலியாயும், அன்னியகளத்திரப்பிரியனும் இருப்பான்.

சு. 52. சுக்கிரன் சிம்மத்திலிருந்து புதனின் திருஷ்டியைப் பெறின் தனங்களைச் சம்பாதித்து சூழ்ச்சிக்கின்றவனும், (தந்திரம்) லோபியாயும், ஸ்திரீகளினிடத்தில் பிரியமுள்ளவனும், அன்னிய களத்திரத்தை அடைபவனும், யுத்தத்தில் பயமேயில்லாதவனும், துஷ்டனும், அசத்தியம் உள்ளவனும், தனவானும் இருப்பான்.

சு. 53. சுக்கிரன் சிம்மத்திலிருந்து குருவின் திருஷ்டியைப் பெறின் வாகனங்களும் தனமும் வேலையாட்களும் உள்ளவனும், அநேக களத்திரத்தோடு கூடியவனும், மந்திரியாயும் இருப்பான்,

சு. 54. சுக்கிரன் சிம்மத்திலிருந்து சனியின் திருஷ்டியைப் பெறின் அரசனுகவாவது அரசசமானனுகவாவது ஆகின்றவனும், பிரசித்தனும், பொக்கிஷங்கள் வாகனங்கள் உள்ளவனும், சோர ஸ்திரீக்குப் புருஷனும், சுந்தரனும், துக்கம் அநுபவிக்கின்றவனும் இருப்பான்.

சு. 55. சுக்கிரன் தநுசிலாவது மீனத்திலாவது இருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் அதிக கடூரமுள்ளவனும், அதிக சௌர்யம் (சூரத்தன்மை) உள்ளவனும், புத்தியும் அறிவும் சம்பத்தும் உள்ளவனும், எல்லாருக்கும் பிரியமுள்ளவனும், அன்னிய தேசங்களில் சஞ்சரிக்கின்றவனும் இருப்பான்.

சு. 56. சுக்கிரன் தநுசிலாவது மீனத்திலாவது இருந்து சந்திரனின் திருஷ்டியைப் பெறின் கீர்த்திமானும், அரச புருஷனும், அநேக போகங்களும் பட்சணோபகரணங்களும், உள்ளவனும், அளவிடாத பலத்தோடு கூடியவனும் இருப்பான்.

சு. 57. சுக்கிரன் தநுசிலாவது மீனத்திலாவது இருந்து செவ்வாயின் திருஷ்டியைப் பெறின் ஸ்திரீகளுக்குக் கொஞ்சமும் பிரியமில்லாதவனும், பலவிதத்திலும் சுகத்தோடும் துக்கத்தோடும் கூடியிருப்பவனும், தனவானும், அதிகம் பசு காளைகள் உள்ளவனும், கீர்த்திமானும் இருப்பான்.

சு. 58. சுக்கிரன் தநுசிலாவது மீனத்திலாவது இருந்து புதனின் திருஷ்டியைப் பெறின் ஆடையாபரண அலங்கார சாமான்களும், அனேகவித பட்சண சாமான்களும் பானம் செய்வதற்குரிய சாமான்களும் உள்ளவனும், அதிக தனம் வாகனம் இவைகளோடு கூடினவனும் இருப்பான்.

சு. 59. சுக்கிரன் தநுசிலாவது மீனத்திலாவது இருந்து குருவின் திருஷ்டியைப் பெறின் யானை குதிரை முதலான வாகனங்களுள்ளவனும், அதிக பணமுள்ளவனும், அதிக களத்திரமும் புத்திரரும் உள்ளவனும், அதிக சுகமுள்ளவனும், அதிகமான வைபவங்களோடு கூடினவனும் இருப்பான்.

சு. 60. சுக்கிரன் தநுசிலாவது மீனத்திலாவது இருந்து சனியின் திருஷ்டியைப் பெறின் தினந்தோறும் தனலாப முள்ளவனும், சுகமுள்ளவனும், போகசமிருத்தி தனசமிருத்தி உள்ளவனும், சௌபாக்கிய யுக்தனும் இருப்பான்.

சு. 61. சுக்கிரன் மகரத்திலாவது கும்பத்திலாவது இருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் ஸ்திரம் உள்ளவனும், ஸ்திரீகளுக்குச் சிரேஷ்டனும், அதிகமான பணம் சத்தியம் சுகம் ஆகிய இவைகள் உள்ளவனும், சூரனும் இருப்பான்.

சு. 62. சுக்கிரன் மகரத்திலாவது கும்பத்திலாவது இருந்து சந்திரனின் திருஷ்டியைப் பெறின் பிரகாசம் அதிக சூரத்வம் அல்

லது சௌந்தர்யம் உள்ளவனும், சரீர புஷ்டியும் சௌபாக்கியமும் தனமும் உள்ளவனும், அதிக அழகுள்ளவனும் இருப்பான்.

சு. 63. சுக்கிரன் மகரத்திலாவது கும்பத்திலாவது இருந்து செவ்வாயின் திருஷ்டியைப் பெறின் களத்திர நாசத்திற்குக் காரணவானும், அதிக கெடுதலும் ரோகமும் உள்ளவனும், அநேக சிரமங்களால் பீடிதனும்; பிறகு சுக மநுபவிக்கின்றவனும் இருப்பான்.

சு. 64. சுக்கிரன் மகரத்திலாவது கும்பத்திலாவது இருந்து புதனின் திருஷ்டியைப் பெறின் புத்தியும் அறிவும் உள்ளவனும், தனத்திலும் தனம் சம்பாதிப்பதிலும், பிரியமுள்ளவனும், மகா வித்துவானும், சத்தியமும் சுகமும் உள்ளவனும் இருப்பான்.

சு. 65. சுக்கிரன் மகரத்திலாவது கும்பத்திலாவது இருந்து குருவின் திருஷ்டியைப் பெறின் வஸ்திரங்களிலும் மாலைகளிலும், சுகந்த திரவியங்களிலும் பிரியமுள்ளவனும், அதிக கோமளனும், பாட்டு வாத்தியம் இவைகளின் கிரமங்களை அறிகின்றவனும், நல்ல களத்திரத்தோடு கூடியவனும் இருப்பான்.

சு. 66. சுக்கிரன் மகரத்திலாவது கும்பத்திலாவது இருந்து சனியின் திருஷ்டியைப் பெறின் உத்தமமான வாகனங்களும் திரவியமும் போகமும் உள்ளவனும், சஞ்சல வேஷத்தோடு கூடியவனும், கறுத்த சரீரமுள்ளவனும், சரீர புஷ்டியும் பிரகாசமும் உள்ளவனும் இருப்பான்.

இருபத்தெட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

# இருபத்தொன்பதாவது அத்தியாயம்.

## மந்தாஸ்ரய ராசி பலமும் திருஷ்டி பலமும்.

சு. 1-2. சனி மேடத்தி லிருக்கும்போது ஜனித்தவன் பல வித துன்பங்களாலும் அதிக சிரமத்தாலும் பீடிக்கப் பட்டவனும், அதிக குரூர சுபாவ முள்ளவனும், தன் பந்துக்களை வெறுப்பவனையும், கடினமாகவும் மான மில்லாமலும் பேசுபவனும், நிந்திதனும், தரித்திரனும், க்ஷீணமுள்ள வேஷத்தோடு கூடியவனும், அதிக கோப முள்ளவனும், நீசப்பிரவிருத்திகளைச் செய்பவனும், அனேக தோஷ முடையவனும், விரோத சுபாவமுள்ளவனும், மாறுன நடையுள்ளவனும், குரூரனும், கொல்லுபவனும், அரூயை யுள்ளவனும், பாபமுள்ளவனும் இருப்பான்.

சு. 3-4. சனி இடபத்திலிருக்கும்போது ஜனித்தவன் தன ஹீனனும், வேலைக்காரனும், உசிதமில்லாத பேச்சுக்களுள்ளவனையும், அசத்திய பிரவிருத்தியைச் செய்பவனும், வயதான ஸ்திரீகளின் மனதைக் கவருபவனும், நல்ல பந்துக்களில்லாதவனும், ஸ்திரீயால் கஷ்டப் படுகின்றவனும், அன்னிய ஸ்திரீகளுடைய வேலைகளைச் செய்பவனும், நல்ல நடத்தை யில்லாதவனும், பல காரியங்களில் உட்படுபவனும், அறிவில்லாதவனும் இருப்பன்.

சு. 5-6. சனி மிதுனத்தி லிருக்கும்போது ஜனித்தவன் அதிக கடனால் ஜெயிலில் இருந்து சங்கடப் படுபவனும், பிரயாசைப் படுவனும், கெர்வியாயும், அந்தரங்கமாய்ப் பேசுபவனும், அறியாமையால் அன்னியரால் தள்ளப்பட்வனும், எப்போதும் மறைவாய் இருப்பவனும், காமபைத்தியம் உள்ளவனும், கபடம்செய்பவனும், துக்கத்தினால் கெட்டவனும், எல்லாப் பிரவிருத்திகளையும் பார்த்துச் சந்தோஷிக்கின்றவனும், அலங்கார வேஷமான சிற்பவேலையோடு கூடினவனும், விளையாட்டுகளில் பிரியமுள்ளவனும் இருப்பான்.

சு. 7-8. சனி கடகத்திலிருக்கும்போது ஜனித்தவன் அழகுள்ளவனும், தரித்திரனும், பாலியத்தில் ரோகமுள்ளவனும், வித்துவானும், தாயைவிட்டுப் பிரிந்தவனும், அதிகமிருதுத்துவமுள்ளவனும், சுகமாயும் * சதுர்வித உணவுகளில் பிரியமுள்ளவனும், பா

* உண்ணல்-தின்றல்-நக்கல்-பருகல். சோறு முதலிய வுண்ணல், கறி முதலிய தின்றல், தேன் முதலிய நக்கல், நீர் முதலிய பருகல்.

வசனும், அன்னியர்களைச் சங்கடப்படுத்துபவனும், விசிஷ்டனு யும், பந்துக்களோடு விரோதமுள்ளவனும், கெட்ட நடத்தையுள்ள வனும், மத்தியகாலத்தில் அரசனுக்குச் சமானமானவனும், சுக சாதனங்கள் அதிக முள்ளவனும் இருப்பான்.

சு. 9-10. சனி சிங்கத்திலிருக்கும்போது ஜனித்தவன் எழுதப் படிக்க ஆசையுள்ளவனும், வித்வானும், நிந்திதனும், சுபாவகுண மில்லாதவனும், களத்திரவியோகமுள்ளவனும், சம்பளம் வாங்கிக் காலட்சேபம் செய்பவனும், பந்து நண்பன் சந்தோஷம் இவைகள் இல்லாதவனும், நீசப்பிரவிருத்திகளில் சாமர்த்திய முள்ளவனும், அதிக விரோதமுள்ளவனும், அநேக மனோகற்பனைகளைக் கொண்டு மனோசந்தோஷம் அடைபவனும், சுமையெடுத்தல் வழிநடத்தல் முதலிய தொந்தரவால் பீடிக்கப்பட்டவனும் இருப்பான்.

சு. 11-12. சனி கன்னியிலிருக்கும்போது ஜனித்தவன் நபும்சக னும், மூடத்தன்மையுள்ளவனும் பரான்னத்திலும் வேசியாதிகளி டத்திலும் அதிக ஆசையுள்ளவனும், மந்திரபலமில்லாதவனும், சிற்பகதைகளை அறியாதவனும், தன்பிரவிருத்திகளைச் செய்பவனு யும், புத்திரரும் பணமும் உள்ளவனும், தரித்திரம் அநுபவிக்கின்ற வனும், அன்னியர்களுக்கு உபகாரத்தைச் செய்பவனும், கன்னி கைகளைக் கெடுப்பவனும், பிரவிருத்திகளில் உற்சாகமுள்ளவனும், ஆலோசனையின்மேல் பிரவிருத்திக்கின்றவனும் இருப்பான்.

சு. 13-14. சனி துலாத்திலிருக்கும் போது ஜனித்தவன் பணத் தில் ஆசையுள்ளவனும், அழகான பேச்சுள்ளவனும், அன்னிய நாடுகளில் சம்பாதித்த தனம் மானம் இவைகளுள்ளவனும், அரச னவது அரசசமானனுவது ஆகின்றவனும், எங்கும் பிரசித்தியுள்ள வனும், தன் ஆலோசனையை மறைத்துவைப்பவனும், அழியாத பணத்தோடு கூடினவனும், சமுதாயம் சங்கம் இவைகளில் முக்கிய னும், வயதினால் கிடைக்கப்பட்ட பிரதானஸ்தானத்தை உடையவ னும், சத்ஜனங்களோடுகூடி யிருப்பவனும், விபசாரி தாசி தேவடி யாள் இவர்களோடுகூடி ரமிக்கின்றவனும் இருப்பான்.

சு. 15-16. சனி விருச்சிகத்திலிருக்கும் போது ஜனித்தவன் விரோத சீலனும், அதிக கெட்ட குணம் உள்ளவனும், விஷத்தி னலோ ஆயுதத்தினலோ பீடிக்கப்பட்டவனும், அதிக கடினமான கோபத்தோடு கூடியவனும், அதிககர்வமுள்ளவனும், லோபியா யும், தனவானும், அன்னியர்களுடைய பணங்களை அபகரிப்பதில் சமர்த்துள்ளவனும், மங்களவாத்தியங்களோடு கூடாதவனும்,

குரூரபிரவிருத்தியைச் செய்பவனும், பலவித மனோதுக்க முடைய வனும், க்ஷயம் வியம் வியாதி இவைகளால் துக்கிக்கின்றவனும் இருப்பான்.

சு. 17-18. சனி தநுசிலிருக்கும்போது ஜனித்தவன் விவகாரம் அறிவு சிட்சை (அப்பியாசம்) சாஸ்திரார்த்தம் வித்தை இவைகளில் அதிக பழக்க முள்ளவனும், புத்திரர்களுடைய குணத்தால் பிர சித்தனும், ஸ்வதர்மாநுஷ்டானம் சத்சரித்திரம் சத்சுபாவம் ஆகிய குணங்களோடு கூடியுள்ளவனும், வயோதிகத்தில் மேன்மையான ஐசுவரியத்தை அநுபவிக்கின்றவனும், சம்பத்துள்ளவனும், கணக் காகப் பேசுகின்றவனும், அதிக தெளிவான புத்தியுடையவனும், மிருதுவானவனும் இருப்பான்.

சு. 19-20. சனி மகரத்திலிருக்கும்போது ஜனித்தவன் அன்னிய ஸ்திரீகளுக்கும் அன்னியர்களுடைய சொத்துகளுக்கும் நாயக னும், வேத குணங்களோடு கூடியவனும், பலவிதமான கைத் தொழில் உள்ளவனும், ஸ்நாநம் அலங்காரம் இவைகளில் சமர்த்தனு யும், கிரியைகளையும் கலாவித்தைகளையும் அறிகின்றவனும், அன் னிய நாட்டில் இருப்பவனும், சிரேஷ்டனும், தன் குலத்திலுள்ள வர்களால் பூஜிக்கப்படுகிறவனும், அன்னிய சங்கத்தால் வெகு மானிக்கப் படுகின்றவனும், பிரசித்தனும், சௌரிய சத்கார (உப சார) பழக்கமுள்ளவனும் இருப்பான்.

சு. 21-22. சனி கும்பத்தி லிருக்கும்போது ஜனித்தவன் அசத் திய முள்ளவனும், மகானும், கள் குடிப்பவனும், ஸ்திரீகளினிடம் விருப்ப முள்ளவனும், வியசனம் அடைபவனும், சூது விளையாடு பவனும், மோசடி செய்வதில் சமர்த்தனும், அலங்காரத்திற்காகப் பந்துக்களைக் கொள்ளுபவனும், அதிக தைரியம் கடினம் கோப பழக்கம் ஆகிய இவைகள் உள்ளவனும், அறிவில்லாத வனும், சொல்லில் நினைவு இல்லாதவனும், அன்னிய ஸ்திரீகளோடும் அன்னியர் பொருள்களோடும் கூடினவனும், அதிக கடினமாகப் பேசுகின்றவனும், அநேக காரியங்களைப் பிரயத்தனம் செய்பவனும் இருப்பான்.

சு. 23-24. சனி மீனத்திலிருக்கும்போது ஜனித்தவன் யாகாதி கர்மங்களிலும் சிற்ப வித்தைகளிலும் பிரிய முள்ளவனும், தன்னு டைய பந்துக்களுக்கும் சிநேகிதர்களுக்கும் பிரதானியாயும், சாந்த குணமுடையவனும், திரண்ட தனமுடையவனும், நல்ல நீதியோடு கூடினவனும், இரத்தினங்களுடைய குணங்களைப் பரீக்ஷித்துத்

தெரிந்து கொள்ளப் பிரயத்தனம் செய்பவனும், தர்ம விவகாரத்தில் சமர்த்தனும், நல்ல பழக்க சுபாவத்தோடு கூடியவனும், அநேக குணங்களோடு கூடியுள்ளவனும், பின் நடைபெறும் அபிப்பிராயத்திற்குக் காரண பூதனும் இருப்பான்.

சு. 25. சனி மேடத்திலாவது விருச்சிகத்திலாவது இருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் விவசாயப் பிரவிருத்தியில் பிரியமுள்ளவனும், தனவானும், பசு எருமை ஆடு கம்பள ஆடுகள் இவைகளுள்ளவனும் இருப்பான்.

சு. 26. சனி மேடத்திலாவது விருச்சிகத்திலாவது இருந்து சந்திரனின் திருஷ்டியைப் பெறின் ஸ்திரமில்லாதவனும், நீச சுபாவமுள்ளவனும், நீசகுலத்தில் பிறந்தவளும் பார்வைக்கு அழகில்லாதவளுமான ஸ்திரீயினிடம் பிரியமுள்ளவனும், சுகமும் தனமும் இல்லாதவனும் இருப்பான்.

சு. 27. சனி மேடத்திலாவது விருச்சிகத்திலாவது இருந்து செவ்வாயின் திருஷ்டியைப் பெறின் பிராணிகளைக் கொல்கின்றவனும், கள்ளர்களுக்கு நாயகனும், அதிகப் பிரசித்தனும், யௌவன வயதுடைய ஸ்திரீகளினிடத்திலும் மாம்ச ஆகாரங்களிலும் கள் முதலிய லாகிரி வஸ்துக்களிலும் பிரியமுள்ளவனும் இருப்பான்.

சு. 28. சனி மேடத்திலாவது விருச்சிகத்திலாவது இருந்து புதனின் திருஷ்டியைப் பெறின் கபடம் உள்ளவனும், தர்ம ஹீனனும், அதிக ஆசையுள்ளவனும், களவு செய்பவனும், பிரசித்தியுள்ளவனும், சுகமும் விபவமும் இல்லாதவனும் இருப்பான்.

சு. 29. சனி மேடத்திலாவது விருச்சிகத்திலாவது இருந்து குருவின் திருஷ்டியைப் பெறின் சுகமும் தனமும் சௌபாக்கியமும் உள்ளவனும், அரசமந்திரியாயும், அரச ஐக்கியர்களில் முக்கியனும் இருப்பான்.

சு. 30. சனி மேடத்திலாவது விருச்சிகத்திலாவது இருந்து சுக்கிரனின் திருஷ்டியைப் பெறின் மிகுதியான நல்ல குணமும் மிக அழகும் இல்லாதவனும், பெண்களையும் பிறர் மனைவியையும் இச்சிப்பவனும், போகங்கள் ஒன்றுமில்லாதவனும் இருப்பான்.

சு. 31. சனி இடபத்திலாவது துலாத்திலாவது இருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் தெளிவாய்ப் பேசுகின்றவனும், தனநஷ்டம் அடைபவனும், வித்வானும், பிறவீடுகளில் ஆகாரம் செய்பவனும் கிருஷிகனும் இருப்பான்.

சூ. 32. சனி இடபத்திலாவது துலாத்திலாவது இருந்து சந்திரனின் திருஷ்டியைப் பெறின் ஸ்திரீகளால் உண்டாகும் கீர்த்தியோடு கூடியவனும், அரச மந்திரிகளால் பூஜிக்கப்பட்டவனும், ஸ்திரீகளுக்கு நல்லவனும், நல்ல வஸ்திரங்களும் ஆகார சாதனங்களும் புஷ்பங்களும் பரிஜனங்களும் ஆகிய இவைகள் உள்ளவனும் இருப்பான்.

சூ. 33. சனி இடபத்திலாவது துலாத்திலாவது இருந்து செவ்வாயின் திருஷ்டியைப் பெறின் யுத்த சம்பந்தமான கதைகளில் நிபுணனும், யுத்த பூமியிலிருந்து போர் நிமித்தமாகப் பயந்து ஓடுகின்றவனும், நல்ல வார்த்தைகளை அதிகமாகப் பேசுகின்றவனும், ஜனங்களும் தனமும் அதிகமாக உள்ளவனும் இருப்பான்.

சூ. 34. சனி இடபத்திலாவது துலாத்திலாவது இருந்து புதனின் திருஷ்டியைப் பெறின் எப்போதும் சிரித்துக்கொண்டிருக்கும் சுபாவமுள்ளவனும், நபும்சகத்தன்மையுள்ளவனும், ஸ்திரீகளுடைய சேவையைச் செய்பவனும் இருப்பான்.

சூ. 35. சனி இடபத்திலாவது துலாத்திலாவது இருந்து குருவின் திருஷ்டியைப் பெறின் பிறர் காரணமாக சுகதுக்கங்களை அநுபவிக்கின்றவனும், பிறர்களுடைய காரியத்தில் பிரியமுள்ளவனும், ஜனங்களுக்கு இஷ்டனும், தானம் செய்கின்றவனும், உற்சாகப் பிரியனும் இருப்பான்.

சூ. 36. சனி இடபத்திலாவது துலாத்திலாவது இருந்து சுக்கிரனின் திருஷ்டியைப் பெறின் கள் குடிப்பதிலும் ஸ்திரீ சேவையிலும் சுகமுள்ளவனும், பல சிரேஷ்ட வஸ்துக்களுக்கு இருப்பிடமானவனும், மேன்மையான பராக்கிரமம் உள்ளவனும், அரசப் பிரியனும் இருப்பான்.

சூ. 37. சனி மிதுனத்திலாவது கன்னியிலாவது இருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் சுகமும் தனமும் கொஞ்சமும் இல்லாதவனும், தர்மிஷ்டனும், கோபமில்லாதவனும், துக்கங்களைச் சகிக்கின்றவனும், தீரனும் இருப்பான்.

சூ. 38. சனி மிதுனத்திலாவது கன்னியிலாவது இருந்து சந்திரனின் திருஷ்டியைப் பெறின் அரசனுக்குச் சமானனும், பிரகாசமுள்ள சரீரத்தோடு கூடினவனும், ஸ்திரீகளினால் தனமும் கீர்த்தியுமடைந்தவனும், அல்லது ஸ்திரீகளுக்குரிய வேலைகளைச் செய்பவனும் இருப்பான்.

சு. 39. சனி மிதுனத்திலாவது கன்னியிலாவது இருந்து செவ்வாயின் திருஷ்டியைப் பெறின் பிரசித்தனும், சண்டைக்குக் காரணனும், மயக்கத்தோடு கூடியவனும், அதிக பளுவுள்ள சாமான்களைச் சுமப்பவனும், அழகில்லாத சரீரத்தோடு கூடியவனும் இருப்பான்.

சு. 40. சனி மிதுனத்திலாவது கன்னியிலாவது இருந்து புதனின் திருஷ்டியைப் பெறின் தனவானும், மல்யுத்தத்தில் சமர்த்தனும், ஆடல் பாடல்களுக்குக் குருவாயும், பாட்டில் சமர்த்தனும், சிற்ப வித்தையுள்ளவனும், அதிக சமர்த்தனும் இருப்பான்.

சு. 41. சனி மிதுனத்திலாவது கன்னியிலாவது இருந்து குருவின் திருஷ்டியைப் பெறின் அரச கிருகங்களில் நம்பிக்கையுள்ளவனும், எல்லாக் குணங்களும் நிரம்பியுள்ளவனும், சத்ஜனங்களுக்கு இஷ்டனும், இலட்சண வகைபற்றி ஒருங்கு சேர்த்து வைக்கப்பட்ட திரவியத்தை யுடையவனும் இருப்பான்.

சு. 42. சனி மிதுனத்திலாவது கன்னியிலாவது இருந்து சுக்கிரனின் திருஷ்டியைப்பெறின் ஸ்திரீகளுக்கு அலங்கரிப்பதில் சமர்த்தனும், அவர்களிடத்தில் விருப்பமுள்ளவனும், யோக வித்தியையினுடைய உபதேஷ்டாவாயும், அல்லது யோகியாயும் இருப்பான்.

சு. 43. சனி கடகத்திலிருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் பாலியத்தில் தகப்பனை விட்டுப் பிரிந்தவனும், தனமும் சுகமும் களத்திரமும் இல்லாதவனும், பாபியாயும், கெட்ட ஆகாரங்களால் சந்தோஷ மடைபவனும் இருப்பான்.

சு. 44. சனி கடகத்திலிருந்து சந்திரனின் திருஷ்டியைப் பெறின் லோபியாயும், தாய்க்குப் பிரியமில்லாமல் நடப்பவனும், தனவானும், சகோதரரால் பீடிக்கப்பட்டவனும் இருப்பான்.

சு. 45. சனி கடகத்திலிருந்து செவ்வாயின் திருஷ்டியைப் பெறின் அரசனால் கிடைக்கப்பட்ட தனத்தோடு கூடியவனும், அங்கக் குறைவு உள்ளவனும், தங்கம் இரத்தினம் பரிஜனம் இவைகள் உள்ளவனும், நிந்தனை யுடைய பந்துக்களிடத்திலும் நிந்தனையுடைய களத்திரத்தினிடத்திலும் பிரியமுள்ளவனும் இருப்பான்.

சு. 46. சனி கடகத்திலிருந்து புதனின் திருஷ்டியைப் பெறின் அதிக குரூரனும், அழகாய்ப் பேசுகின்றவனும், சத்துருக்களை அடக்குகின்றவனும், டம்பம் உள்ளவனும், உத்தம பிரவிருத்தியைச் செய்பவனும் இருப்பான்.

சு. 47. சனி கடகத்திலிருந்து குருவின் திருஷ்டியைப் பெறின் நன்செய் புன்செய் வீடு பந்து புத்திரர் தனம் இரத்தினம் களத்திரம் ஆகிய இவைகளோடு கூடினவனாய் இருப்பான்.

சு. 48. சனி கடகத்திலிருந்து சுக்கிரனின் திருஷ்டியைப்பெறின் மேன்மையான குலத்தில் பிறந்த வனாயும், சௌந்தர்யம் பிரகாசம் சுகம் இவைகள் சிறிதும் இல்லாதவனாயும் இருப்பான்.

சு. 49. சனி சிம்மத்திலிருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் சுகம் தனம் பூச்சியதை சத்தியம் ஆகிய இவைகள் சிறிது மில்லாதவனாயும், கள் குடியனாயும் பார்வைக்கு அழகில்லாதவனாயும், அடிமை வேலை செய்பவனாயும், துக்க முள்ளவனாயும், சகாய மில்லாத வனாயும் இருப்பான்.

சு. 50. சனி சிம்மத்திலிருந்து சந்திரனின் திருஷ்டியைப்பெறின் பலவிதமான ரத்தினங்களையும் தனங்களையும் யௌவன வயதுள்ள ஸ்திரீகளையும் அடைபவனாயும், எல்லாவிடங்களிலும் வியாபித்துள்ள கீர்த்தியோடு கூடியவனாயும், அரசனுக்கு இஷ்டமுள்ளவனாயும் இருப்பான்.

சு. 51. சனி சிம்மத்திலிருந்து செவ்வாயின் திருஷ்டியைப் பெறின் எம்பொழுதும் சஞ்சரித்துக்கொண் டிருப்பவனாயும், நன்றியறிவில்லாதவனாயும், கள்ளனாயும், காடுகளிலும் மலைகளிலும் கோட்டைகளிலும் வசிக்கின்றவனாயும், பிரயோசனமில்லாதவனாயும், களத்திரம் புத்திரர் இல்லாதவனாயும் இருப்பான்.

சு 52. சனி சிம்மத்திலிருந்து புதனின் திருஷ்டியைப் பெறின் முறையான வழி தவறி நடப்பவனாயும், தரித்திரனாயும், சோம்பேறியாயும், ஸ்திரீகளுக்கு அடிமை வேலை செய்பவனாயும், அழுக்குள்ளவனாயும், துக்கம் உடையவனாயும் இருப்பான்.

சு. 53. சனி சிம்மத்திலிருந்து குருவின் திருஷ்டியைப் பெறின் கிராமம் நகரம் சங்கம் இவைகளுக்குத் தலைவனாயும், புத்திரரும் தனமும் உள்ளவனாயும், நன்றியுள்ளவனாயும், சத்தியவானாயும், சத்சுபாவியாயும் இருப்பான்.

சு. 54. சனி சிம்மத்திலிருந்து சுக்கிரனின் திருஷ்டியைப்பெறின் ஸ்திரீகளால் துவேஷிக்கப்படுபவனாயும், சுந்தரனாயும், ஸ்திரமில்லாத சுகத்தோடு கூடினவனாயும், அதிக தனம் நிறைந்துள்ளவனாயும், அந்திய காலத்தில் சுகமுடையவனாயும் இருப்பான்.

சு. 55. சனி தநுசிலாவது மீனத்திலாவது இருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் அன்னியர்களுக்குப் பிறந்த புத்திரர்களுக்குப் பிதுர் ஸ்தானத்தை வகிக்கின்றவனும், அவர்கள் மூலமாய் சம்பத்து கீர்த்தி பெயர் முதலியவைகளை அடைபவனும், தானம் செய்பவனும் இருப்பான்.

சு. 56. சனி தநுசிலாவது மீனத்திலாவது இருந்து சந்திரனின் திருஷ்டியைப் பெறின் தாயை விட்டுப் பிரிந்தவனும், சுபாவ குணமுள்ளவனும், தாய் தந்தையர்களா விடப்பட்ட பெயரேயன்றி காரணத்தினால் வேறு பெயர்களை யுடையவனும், களத்திரம் புத்திரர் தனம் ஆகிய இவைகள் உள்ளவனும் இருப்பான்.

சு. 57. சனி தநுசிலாவது மீனத்திலாவது இருந்து சேவ்வாயின் திருஷ்டியைப் பெறின் வாதரோக பீடிதனும், ஜனங்களால் துவேஷிக்கப்பட்டவனும், அன்னியதேச வாச முள்ளவனும் தாரித்திர முள்ளவனும், லோபியாயும், நிந்திய சுபாவ முள்ளவனும் இருப்பான்.

சு. 58. சனி தநுசிலாவது மீனத்திலாவது இருந்து புதனின் திருஷ்டியைப் பெறின் அரசனுக்குச் சமானனும், சுகமுள்ளவனும், வித்தைகளை உபதேசிக்கின்றவனும், மானியாயும், தனவானும், பிரகாசமான சௌபாக்கியம் உள்ளவனும் இருப்பான்.

சு. 59. சனி தநுசிலாவது மீனத்திலாவது இருந்து குருவின் திருஷ்டியைப் பெறின் அரசனாகவாவது, அரசசமானனாகவாவது மந்திரியாகவாவது அல்லது சேனைத் தலைவனாகவாவது ஆகின்றவனும், ஆபத்து என்பதே இல்லாதவனும் இருப்பான்.

சு. 60. சனி தநுசிலாவது மீனத்திலாவது இருந்து சுக்கிரனின் திருஷ்டியைப் பெறின் சுவீகாரம் போவதினாலோ ரட்சிக்கப்படுவதினாலோ இரண்டு தாய் தந்தையர்களை யுடையவனும், காடு மலைகளில் ஜீவிக்கின்றவனும், பலவித சுபாவத்தோடு கூடியவனும், கர்ம புஷ்டி யுள்ளவனும் இருப்பான்.

சு. 61. சனி மகரத்திலாவது கும்பத்திலாவது இருந்து சூரியனின் திருஷ்டியைப் பெறின் ரோக முள்ளவனும், ரூப லட்சணமில்லாத களத்திரத்தோடு கூடினவனும், பரான்னத்தால் ஜீவிப்பவனும், அதிகதுக்கங்களைச் சகிக்கின்றவனும், சஞ்சார சோம்பல் இல்லாதவனும், சுமை எடுப்பவனும் இருப்பான்.

சு. 62. சனி மகரத்திலாவது கும்பத்திலாவது இருந்து சந்திரனின் திருஷ்டியைப் பெறின் ஸ்திர மில்லாதவனும், சத்திய மில்லாதவனும், பாப முள்ளவனும், தாய்க்குப் பிரியமில்லாதவனும் கபடமுள்ளவனும், நல்ல தனவானும் வழி நடப்பதினாலுள்ள துக்கத்தோடு கூடினவனும் இருப்பான்.

சு. 63. சனி மகரத்திலாது கும்பத்திலாவது இருந்து செவ்வாயின் திருஷ்டியைப் பெறின் அதிக சூரத்துவமும் பராக்கிரமத்துவமும் உள்ளவனும், உலகப் பிரசித்தமான குணங்களோடு கூடினவனும், மகாஜனங்களில் பிரதானியாயும், ஆலோசனை சாகஸம் இவைகளில் சமர்த்தனும் இருப்பான்.

சு. 64. சனி மகரத்திலாவது கும்பத்திலாவது இருந்து புதனின் திருஷ்டியைப் பெறின் சுமைகளைச் சுமப்பவனும், தமோ குண முள்ளவனும், நல்லவனும், சஞ்சார சமர்த்தனும், குறைந்த தன முள்ளவனும், நன்றியுள்ளவனும் இருப்பான்.

சு. 65. சனி மகரத்திலாவது கும்பத்திலாவது இருந்து குருவின் திருஷ்டியைப் பெறின் நல்ல குணவானும், அரசனாகவோ அரச சமானனாகவோ ஆகின்றவனும், அரசவம்ச அதிகாரியாயும், தீர்க்காயுசு ஆரோக்கியம் ஆகிய இவைகள் உள்ளவனும் இருப்பான்.

சு. 66. சனி மகரத்திலாவது கும்பத்திலாவது இருந்து சுக்கிரனின் திருஷ்டியைப் பெறின் அன்னியர் களத்திரங்களில் ஆசை யுள்ளவனும், சுகம் சௌபாக்கியம் சம்பத்து ஆகிய இவைகள் உள்ளவனும், அன்ன பானாதிகளோடு கூடியவனும் இருப்பான்.

இருபத்தோன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

## முப்பதாவது அத்தியாயம்.

## சூரியாதி கிரகஸ்திதி பாவபலம்.

சு. 1. இலக்கிஞதி பாவங்களில் சூரியாதி கிரகங்கள் இருப்பதின் பலன்கள் இவ்வத்தியாயத்தில் தெளிவாய்ச் சொல்லப்படுகின்றன.

*சரீரம் குடும்பம் சகோதரன் முதலிய பாவங்களின் சுபாசுபம் எந்தெந்த கிரகங்களின் ஸ்திதியால் உண்டாகின்றதோ அந்தந்த கிரகங்களின் ஸ்திதி பலன்கள் இங்கு விவரிக்கப்படுகின்றன.*

சு. 2. இலக்கினத்தில் சூரியனிருப்பின் சிரோரோமக்குறைவும் பிரவிருத்திகளில் மந்தமும் கோபமும் குரூரமும் பரிகசிகப்படுதலும் உள்ளவனும், அபிமானியாயும், குரூரமான கண்களுடையவனும், கடின சரீரம் சூரத்துவம் உள்ளவனும், பொறுமை தயவு இல்லாதவனும் இருப்பான்.

விசேஷபலம் இலக்கினம் கடகமாய் அதில் சூரியனிருப்பின் முன் வந்த கண்களுடையவனும், இலக்கினம் மேடமாய் அதில் சூரியனிருப்பின் திமிர நோயுடைய கண்களையுடையவனும், இலக்கினம் சிம்மமாய் அதில் சூரியனிருப்பின் மாலைக் கண்ணனும், இலக்கினம் துலாமாய் அதில் சூரியனிருப்பின் தரித்திரம் புத்திர நாசம்ஆகிய இவைகளையுடையவனும் இருப்பான்.

சு. 3. இரண்டாமிடத்தில் சூரியனிருப்பின் அதிக ஆட்களும் கன்று காலிகளும் உள்ளவனும், முகரோகம் உள்ளவனும், விபவ சௌக்கியங்கள் இல்லாதவனும், அரசர்களிஞலாவது திருடர்களிஞலாவது உபத்திரவமும் தனநாசமும் அடைபவனும் இருப்பான்.

சு. 4. மூன்ருமிடத்தில் சூரியனிருப்பின் பராக்கிரமம் உள்ளவனும், சகோதரர்களுக்குக் கெடுதியைச் செய்பவனும், சௌந்தர்யாதி குணங்கள் உள்ளவனும், வித்வானும், துர்ஜனங்களை அடக்குகின்றவனும் இருப்பான்.

சு. 5. நான்காமிடத்தில் சூரியனிருப்பின் வாகனமும் பந்துவும் இல்லாதவனும், மனோதுக்கமுள்ளவனும், பிதாவிற்கும் தனத்திற்கும் கிருகத்திற்கும் நாசத்தைச் செய்பவனும், துஷ்டஞன அரசனைச் சேவிக்கின்றவனும் இருப்பான்.

சு. 6. ஐந்தாமிடத்தில் சூரியனிருப்பின் சுகம் புத்திரர் பந்து இவர்கள் இல்லாதவனும், காடுமலைகளில் சஞ்சாரமும் விவசாயமும் உள்ளவனும், ஸ்திரமில்லாதவனும், அதிக தாரணா புத்தியுள்ளவனும், அற்பாயிசு உள்ளவனும் இருப்பான்.

சு. 7. ஆறுமிடத்தில் சூரியனிருப்பின் அதிக காம பரவசனும் ஜடராக்கினி பலமுள்ளவனும், ஸ்ரீமானும், பிரசித்த குணங்களோடு கூடினவனும், அரசனாகவோ அரசசமானனாகவோ சேனா நாயகனாகவோ ஆகின்றவனும் இருப்பான்.

சு. 8. ஏழாமிடத்தில் சூரியனிருப்பின் இலட்சுமீ கடாக்ஷ மில்லாதவனும், பிரவிருத்திகளில் தோல்வியுள்ளவனும், அசுத்த சரீரியாயும், ரோகியாயும், அரசனால் ஜெயிலில் வைக்கப்பட்டவனும், துக்கிதனும், சஞ்சாரியாயும், ஸ்திரீகளை துவேஷிக்கின்றவனும் இருப்பான்.

சு. 9. எட்டாமிடத்தில் சூரியனிருப்பின் நேத்திரவைகல்லியமுள்ளவனும், புத்திரரும் தனமும் நஷ்ட மடைபவனும், அல்பாயிசு உள்ளவனும், சினேகிதர்கள் அல்லது பந்துக்கள் இவர்களின் பிரிவு அல்லது மரணங்களால் பீடிக்கப் பட்டவனும் இருப்பான்.

சு. 10. ஒன்பதாமிடத்தில் சூரியனிருப்பின் தனமும் புத்திரரும் பந்துக்களும் உள்ளவனும், தேவப் பிராம்மண பூஜையில் சிறந்தவனும், பிதுரு ஜனங்களையும் ஸ்திரீகளையும் துவேஷிக்கின்றவனும், அதிக தாகம் உள்ளவனும் இருப்பான்.

சு. 11. பத்தாமிடத்தில் சூரியனிருப்பின் அதிக புத்தியும் விபவமும் பலமும் தனமும் வாகனமும் பந்துவும் புத்திரரும் உள்ளவனும், ஆரம்பிக்கின்ற பிரவிருத்திகளுக்குச் சாபல்லியம் சூரத்துவம் எவர்களாலும் அடைய முடியாத பிரதாபம் பிரசித்தி ஆகிய இவைகளோடு கூடினவனும் இருப்பான்.

சு. 12. பதினோராமிடத்தில் சூரியனிருப்பின் அதிக பணம் சம்பாதிக்கின்றவனும், பலவானும், துவேஷமுள்ளவனும், அடிமைக்காரனும், உபகாரமுள்ள அடிமைகளோடு கூடினவனும், இஷ்டமில்லாதவனும், நியமித்த பிரவிருத்தியைச் சாதிப்பவனும் இருப்பான்.

சு. 13. பன்னிரண்டாமிடத்தில் சூரியனிருப்பின் அங்கக் குறைவு உள்ளவனும், ஒருகண்ணிற்குக் கெடுதலுள்ளவனும்,

பதிதத்துவம் (தாழ்மையுடையவன்) உடையவனும், குழந்தை பிறக்காத ஸ்திரீயின் பர்த்தாவாயும், பிதாவிற்குச் சத்துருவாயும், பலஹீனனும், அல்பனும் இருப்பான்.

சு. 14. இலக்கினம் கடகம் மேடம் இடபம் இவைகளிலொன்ருகி அதில் சந்திரன் பலம் பெற்றிருப்பின் தாட்சண்யம் (அன்னியர்களுடைய மனதை அறிவது) உள்ளவனும், சௌந்தர்யம் சம்பத்து அநுபோகமாதிய குணங்களால் பிரதானியாயும் இருப்பான். க்ஷீண சந்திரனுயின் முற்கூறிய பலன்கள் குறைவுபடும். இதரராசிகள் லக்கினமாகி அவைகளில் சந்திரனிருப்பின் பித்தனுகவோ நீசனுகவோ அங்க ஈனனுகவோ குருடு செவிடு ஊமைகளாகவோ இருப்பான். அமரபக்கச் சந்திரனு யிருந்து பலங் குறைந்தவனுயின் மேற்சொன்ன பலம் நிச்சயமாக உண்டாகும்.

சு. 15. இரண்டாமிடத்தில் சந்திரனிருப்பின் சாஸ்வதமான சுகமும் பந்துவும் சம்பத்தும் உள்ளவனும், அர்த்த மில்லாமல் வீணுகப் பேசுகின்றவனும், பூரணசந்திரனுயின் நிறைந்த தனபுஷ்டியுள்ளவனும், வாக்கு வியவகாரத்தில் சமர்த்தனும் இருப்பான்.

சு 16. மூன்றுமிடத்தில் சந்திரனிருப்பின் பிராதுரு ஜனங்களால் ஆசிரயிக்கப்படுகின்றவனும், சந்தோஷ முள்ளவனும், சூரனுயும், கல்வி வஸ்திரம் ஆகார சாமான்கள் முதலியவைகளைத் தேடுகிற பழக்க முள்ளவனும் இருப்பான். சந்திரன் பலவானுயின் இந்தப் பலங்கள் பூரணமாக உண்டாகும்.

சு. 17. நான்காமிடத்தில் சந்திரனிருப்பின் பந்துக்களும் கிரகோபகரணசாமான்களும் வாகனங்களும் உள்ளவனும், தானம் செய்கின்றவனும், ஸ்திரீகளின் மனதை அநுசரிக்கின்றவனும், அதிகமான சுகமும் துக்கமும் இல்லாதவனும் இருப்பான்.

சு. 18. ஐந்தாமிடத்தில் சந்திரனிருப்பின் அதிக புத்திரரும் பந்துக்களும் சுகமும் உள்ளவனும், புத்திமானும், சௌமியனும், கல்வி வஸ்திரம் அன்னபானுதிகள் ஆகிய இவைகளைச் சம்பாதிக்கின்ற பழக்க முள்ளவனும் இருப்பான்.

சு. 19. ஆறுமிடத்தில் சந்திரனிருப்பின் அதிகமான சத்துருக்கள் உள்ளவனும், கடினனும், ஜாடராக்கினி பலங் குறைந்தவனுயும், காமபரவசனும், உதர வியாதியால் பீடிக்கப்பட்டவனும் இருப்பான். க்ஷீண சந்திரனுயின் அல்பாயுளுள்ளவனும் இருப்பான்.

சு. 20. ஏழாமிடத்தில் சந்திரன் இருப்பின் செளமியனும், அப்பிராப்பியனும், (அடையத்தகாதது) சுகம் அநுபவிக்கின்றவனு யும், நல்ல சரீரத்தோடு கூடியவனும், காமமுள்ளவனும், க்ஷீண சந்திரனுயின் தரித்திரத்தையும் காமக் குரோத லோபாதிகளினுல் பீடிதத்தையும் அடைபவனும் இருப்பான்.

சு. 21. எட்டாமிடத்தில் பலம் பெற்ற சந்திரனிருப்பின் அதிக புத்தி சத்தியும் பிரகாசமும் உள்ளவனும், ரோகமும் துக்கமும் உள்ளவனும், தேகத்தில் அடையாள முள்ளவனும் இருப்பான். க்ஷீண சந்திரனுயின் அல்பாயுசுள்ளவனுப் இருப்பான்.

சு. 22. ஒன்பதாமிடத்தில் சந்திரனிருப்பின் தேவ காரியத்தி லும் பிதுரு காரியத்திலும் தற்பரனும், தனமும் புத்தியும் பந்துக் களும் புத்திரரும் உள்ளவனும், ஸ்திரீகளுக்குத் தர்சனீயனும், எல்லாருக்கும் பிரியமுள்ளவனும் இருப்பான்.

சு. 23. பத்தாமிடத்தில் சந்திரனிருப்பின் ஒருபோதும் துக்க மில்லாதவனும், எப்போதும் ஒரேகாரியத்தில் பிரவிருத்தி செய்ப வனும், ஆரம்பிக்கின்ற காரியங்கள் அப்போதைக் கப்போது பூர்த்தி செய்பவனும், தனசமிருத்தியுள்ளவனும், விருத்தியுள்ளவனும், அதிக பலமுள்ளவனும், சூரனும், உதார குணமுள்ளவனும் இருப்பான்.

சு. 24. பதினோராமிடத்தில் சந்திரனிருப்பின் தனவானும், அதிக புத்திரர்களுள்ளவனும், தீர்க்காயிசு உள்ளவனும், அநு கூலம் செய்யும் வேலையாட்களையுடையவனும், மன சுவாதந்திரம் உள் ளவனும், தீட்சணமும் சூரத்துவமும் பிரசித்தியும் உள்ளவனும் இருப்பான்.

சு. 25. பன்னிரண்டாமிடத்தில் சந்திரனிருப்பின் துவேஷிக் கப்படுகின்றவனும், பதிதத்துவம் (தாழ்ந்த தன்மை) உள்ள வனும், லோபியோ நிஸ்ஸாரனே ஆகின்றவனும், நேத்திர ரோக முள்ளவனும், ஒன்றிலும் பிரிய மில்லாதவனும், அங்கக் குறைவு உள்ளவனும், அன்னியனுடைய புத்திரனும், தினமும் காரிய பங் கம் முதலியவைகளால் பீடிக்கப்பட்டவனும் இருப்பான்.

சு. 26. இலக்கினத்தில் செவ்வாயிருப்பின் குரூரனும், சாகச கர்மங்களைச் செய்கின்றவனும், இரக்க மில்லாதவனும், தனமும் அபிமானமும் தைரியமும் உள்ளவனும் ரூப குணமில்லாத சரீரியா

யும், சரீரத்தில் புண்ணோ அல்லது முறிவோ உள்ளவனும், சபலத்துவமுள்ளவனும் இருப்பான்.

சு. 27. இரண்டாமிடத்தில் செவ்வாயிருப்பின் தனஹீனனும், விருத்தியும் சுசியும் இல்லாத ஆகாரத்தினால் திருப்தியடைபவனும், விரூப முகத்தோடு கூடியிருப்பவனும், துர்ஜனங்களை ஆசிரயிக்கின்றவனும், கல்வியில்லாதவனும் இருப்பான்.

சு. 28. மூன்றாமிடத்தில் செவ்வாயிருப்பின் சூரனும், அன்னியர்களால் எதிர்க்கப்படாதவனும், சகோதர நாசமுடையவனும், சதா சந்தோஷ முள்ளவனும், அநேக குணங்களுக்கு இருப்பிடமானவனும், பிரசித்தனும் இருப்பான்.

சு. 29. நான்காமிடத்தில் செவ்வாயிருப்பின் பந்துக்களும் கிரகோப கரண சாதனங்களும் சம்பத்தும் வாகனங்களும் இல்லாதவனும், அதிக துக்கங்களால் பீடிக்கப்பட்டவனும், குடும்பத்தை விட்டு அன்னிய கிருகத்தில் இருப்பவனும் இருப்பான்.

சு. 30. ஐந்தாமிடத்தில் செவ்வா யிருப்பின் சுகமும் தனமும் புத்திரர்களும் இல்லாதவனும், ஸ்திரமில்லாதவனும், லோபியாயும், துஷ்டனும், எப்போதும் நீங்காத கெடுதல்களை உடையவனும், அங்கக் குறைவு உள்ளவனும், நீசத்தன்மை யுள்ளவனும், இருப்பான்.

சு. 31. ஆறாமிடத்தில் செவ்வாயிருப்பின் அதிக காம பீடிதனும், அதிக உஷ்ணமுள்ளவனும், நல்ல உயரமான சரீரமும் மும் பலமும் உள்ளவனும், தன் பந்துக்களை ஜெயிக்கின்றவனும், பிரதானியாயும் இருப்பான்.

சு. 32. ஏழாமிடத்தில் செவ்வாயிருப்பின் களத்திர மரணம் உள்ளவனும், அல்லது களத்திர விரஹம் அநுபவிக்கின்றவனும், ரோகபீடிதனும், சஞ்சார முள்ளவனும், பலவிதமான துக்கத்தை யுடையவனும், பாப முள்ளவனும், இலட்சுமீ கடாக்ஷ மில்லாதவனும், துன்பம் உள்ளவனும், இளைத்த சரீரத்தோடு கூடியவனும், இருப்பான்.

சு. 33. எட்டாமிடத்தில் செவ்வாயிருப்பின் ரோகங்களால் பீடிக்கப்பட்டவனும், அல்பாயுசுள்ளவனும், கெட்ட சரீரியாயும், குலத்திற்குப் பொருந்தாத தொழிலைச் செய்கின்றவனும், பலவிதமான துக்கங்களால் பீடிக்கப்பட்டவனும் இருப்பான்.

சு. 34. ஒன்பதாமிடத்தில் செவ்வாயிருப்பின் மங்கள மில்லாத காரியத்தைச் செய்பவனும், யாவருக்கும் பிரியமில்லாதவனும், ஜீவஹிம்சையில் பிரியமுள்ளவனும், தர்மம் இல்லாதவனும், அதிக பாப முள்ளவனும், அரசனால் கிடைத்த கௌரவ முடையவனும் இருப்பான்.

சு. 35. பத்தாமிடத்தில் செவ்வா யிருப்பின் எல்லாக் காரியங் களிலும் சந்தோஷ முள்ளவனும், சூரனும், அடுத்தவனால் எதிர்க் கப்படாதவனும், பிரதான ஜனங்களைச் சேருபவனும், புத்திரர் சுகம் ஆகிய இவைகள் உள்ளவனும், அதிக பிரதாபசாலியாயும் இருப்பான்.

சு. 36. பதினோராமிடத்தில் செவ்வா யிருப்பின் அதிக தன மும் லாபமும் உள்ளவனும், சிநேகிதர்களும் சுகமும் உள்ளவனு யும், சூரனும், புத்திரர் தானியம், தனம் ஆகிய இவைகளை எப்போ தும் உடையவனும், துக்க மில்லாதவனும் இருப்பான்.

சு. 37. பன்னிரண்டாமிடத்தில் செவ்வா யிருப்பின் நேத்திர ரோகமாவது கெடுதலாவது உள்ளவனும், பதிதனும், (தள்ளப் பட்டவன்) ஸ்திரீயைக் கொல்லுபவனும், சிநேகித்து பின் விரோ திக்கின்றவனும், பயங்கரனும், காரியாதிகளில் தோல்வி யுள்ளவ னும், ஜெயில்வாச முள்ளவனும் இருப்பான்.

சு. 38. இலக்கினத்தில் புதனிருப்பின் ஒருபோதும் கெடுத லில்லாத தேகபல முள்ளவனும், புத்தியும் சத்தியும் உள்ளவனும், காலம் தேசம் அவஸ்தை குலாசாரக்கிரமம் ஞான மார்க்கம் காவியம் கணிதம் இவைகளை அறிபவனும், அதிக மதுரமும் சாதுர்யமும் உள்ளபேச்சுகளைப் பேசுகின்றவனும், தீர்க்காயுசு உள்ளவனும் இருப்பான்.

சு. 39. இரண்டாமிடத்தில் புதனிருப்பின் தன் புத்தியால் ஈட்டிய தனங்களோடு கூடியவனும், அன்னபானாதி சுக முள்ளவ னும், நல்ல சொற்களைச் சொல்லுபவனும், அடக்கமும் அறிவும், உள்ளவனும் இருப்பான்.

சு. 40. மூன்றாமிடத்தில் புதனிருப்பின் பல விதத்திலும் துன்பம் அடைபவனும் தீனனும், (தரித்திரன்) சாமர்த்திய முள் ளவனும், சகோதரர்களோடு கூடினவனும், பலவிதமான கபடம் பொய்கள் உள்ளவனும், சபலனும், (பயந்தவன்) இருப்பான்.

சு. 41. நான்காமிடத்தில் புதனிருப்பின் பண்டிதப் பிரதானியாயும், செளபாக்கிய முள்ளவனும், வாகனங்களோடு கூடினவனும், பலவித உபகரணங்களும் பந்துக்களும் உள்ளவனும், தினந்தோறும் விருத்தியடைகின்றவனும் இருப்பான்.

சு. 42. ஐந்தாமிடத்தில் புதனிருப்பின் மந்திரங்களினுலும் ஆபிசாரம் முதலிய மாயமந்திர ஜெபங்களினுலும் சாமர்த்திய முள்ளவனும், அதிக புத்திரரோடு கூடினவனும், வித்தை சுகம், பிரதாபம் சதா ஆனந்தம் முதலியவைகளோடு கூடினவனும் இருப்பான்.

சு. 43. ஆறுமிடத்தில் புதனிருப்பின் வாதங்களிலும் விவகாரங்களிலும் கலகத்திலும் எப்போதும் ஜயிக்கின்றவனும், ரோகியாயும், சோம்பேறியாயும், கோபமில்லாதவனும், கடினமாகப் பேசுகின்றவனும், அதிக தோல்வி யுள்ளவனும் இருப்பான்.

சு. 44. ஏழாமிடத்தில் புதனிருப்பின் அறிவு புத்தி உள்ளவனும், செளந்தர்யமும் நல்ல அலங்காரமும் உள்ளவளும் அதிக சிரேஷ்ட மில்லாத வம்சத்தில் பிறந்தவளும் கலகத்தில் பிரிய முள்ளவளும் அதிக பணமுள்ளவளும் ஆன களத்திரமும் மேன்மையும் உடையவனும் இருப்பான்.

சு. 45. எட்டாமிடத்தில் புதனிருப்பின் வியாபித்த கீர்த்திமானும், பல முள்ளவனும், தீர்க்காயுளுள்ளவனும், வம்ச கர்த்தனும், அரசனுகவாவது அரச சமானனுகவாவது சேனுநாயகனுகவாவது ஆகின்றவனும் இருப்பான்.

சு. 46. ஒன்பதாமிடத்தில் புதனிருப்பின் அதிக தனமும் கல்வியும் உள்ளவனும், நல்ல ஆசார முள்ளவனும், சாதுரியமாய்ப் பேசுகின்றவனும், அதிக சமர்த்தனும், தர்மிஷ்டனும் இருப்பான்.

சு. 47. பத்தாமிடத்தில் புதனிருப்பின் அதிக சிரேஷ்ட புத்தியுள்ளவனும், காரியாதிகளில் பிரவிருத்திக்கின்றவனும், ஆரம்பிக்கும் காரியத்தைப் பூர்த்தி செய்பவனும், அறிவுள்ளவனும், தீரனும், சத்திய முள்ளவனும், பலவிதமாக அலங்கரித்துக் கொள்ளுவதில் பிரிய முள்ள வனும், செளரியம் உள்ளவனும் இருப்பான்.

சு. 48. பதினேராமிடத்தில் புதனிருப்பின் தனவானும், தனக்குக் கட்டுப்பட்டுள்ள வேலை யாட்களை யுடையவனும், புத்தி

யானும், அதிக சுகபோகங்கள் உள்ளவனும், தீர்க்காயுளுள்ளவனும், பிரசித்தனும் இருப்பான்.

சு. 49. பன்னிரண்டாமிடத்தில் புதனிருப்பின் நன்றாகத் தெளிந்த வாக்கியங்களை யுடையவனும், *மடியனும், தோல்வி யுள்ளவனும், வாக்கு சாதுரிய முள்ளவனும், வித்துவானும், அநேக துக்கங்களுள்ளவனும் இருப்பான்.

சு. 50. இலக்கினத்தில் குருவிருப்பின் சோபனமான சரீரத்தோடு கூடினவனும், அதிபலவானும், அதிக தீர்க்காயுளுள்ளவனும், நன்றாக ஆராய்ந்து காரியங்களைச் செய்பவனும், புத்தியும் கல்வியும் அறிவும் தீரமும் உள்ளவனும், பூச்சியனும் இருப்பான்.

சு. 51. இரண்டா மிடத்தில் குருவிருப்பின் தனவானும், உருசியறிந்து சாப்பிடுகின்றவனும், வாக்கு சாமர்த்திய முள்ளவனும், நல்ல சரீரமும், நல்ல வாக்கும் அதிக அழகுள்ள முகமு முள்ளவனும், லட்சணம் பொருந்திய சரீரத்தோடு கூடினவனும், தானம் செய்பவனும், பிரசன்ன முள்ளவனும் இருப்பான்.

சு. 52. மூன்றாமிடத்தில் குரு விருப்பின் காரியாதிகளில் ஜெயமில்லாதவனும், லோபியாயும், சகோதரரால் ஜெயிக்கப்பட்டவனும், † அக்கினிமாந்த முள்ளவனும், ‡ஸ்திரீஜிதனும், பாப கர்மத்தைச் செய்பவனும் இருப்பான்.

சு. 53. நான்காமிடத்தில் குருவிருப்பின் பந்துக்களும், கிரகோபகரண சாதனங்களும் வாகனங்களும் சுகமும் புத்தியும் அநுபவசுகமும் சம்பத்தும் உள்ளவனும், சிரேஷ்டனும், சத்துருக்களை ஜெயிக்கின்றவனும் இருப்பான்.

சு. 54. ஐந்தாமிடத்தில் குருவிருப்பின் சுகம் புத்திரர் பந்து இவைகள் அதிக முள்ளவனும், புத்தி அறிவு தாரணை தைரியம் இவைகளுள்ளவனும், பிரயோசனமான வைபவங்களோடு கூடினவனும், எவ்விடத்திலும் சுகமுள்ளவனும் இருப்பான்.

சு. 55. ஆறாமிடத்தில் குருவிருப்பின் மந்திரங்களிலும் வெகுமானங்களிலும் சமர்த்தனும், தோல்வி யடைந்தவனும், பலஹீனனும், மடியனும், ஸ்திரீகளுக்குப் பயப்பட்டவனும், சத்துருக்களை ஜெயிக்கின்றவனும், அதிக பிரசித்தனும் இருப்பான்.

---

* மடி = கேடு சோம்பல் நோய் முதலியன.

† ஜாடராக்கினி குறைதலினாலுண்டாகும் நோய்.

‡ ஸ்திரீகளுக்குப் பயப்பட்டவன்.

சூ. 56. ஏழாமிடத்தில் குருவிருப்பின் சௌபாக்கியமும் சௌந்தர்யமுமுள்ள களத்திரத்தோடு கூடினவனும், பிதாவை விட குணவானும், நன்றாய்ப் பேசுபவனும் * கவியாயும், பிரதானியாயும், †வித்துவானும், அதிகபிரசித்தனும் இருப்பான்.

சூ. 57. எட்டாமிடத்தில் குருவிருப்பின் காரியாதிகளில் தோல்வியுள்ளவனும், தீர்க்காயுளுள்ளவனும், வேலைக்காரனாகவோ அடிமைக்காரனாகவோ இருப்பவனும், சொந்த ஜனங்கள் சொல்வதைக் கேட்பவனும், தரித்திரனும், அழுக்குள்ள ஸ்திரீகளின் போகத்தை இச்சிக்கின்றவனும் இருப்பான்.

சூ. 58. ஒன்பதாமிடத்தில் குருவிருப்பின் தேவகாரியத்திலும் பிதுரு காரியத்திலும் பிரியமுள்ளவனும், வித்வானும், சௌபாக்கிய முள்ளவனும், மந்திரியோ சேனா நாயகனோ ஆகின்றவனும் பிரதானியாயும் இருப்பான்.

சூ. 59. பத்தாமிடத்தில் குருவிருப்பின் ஆரம்பிக்கின்ற காரியங்களை இஷ்டம்போல் பூர்த்திசெய்பவனும், மானியாயும், எல்லா உபாயங்களோடு கூடினவனும், அதிக க்ஷேமம் உள்ளவனும், சுகமும் தனமும் ஜனங்களும் போகமும் வாகனங்களும் கீர்த்திகளும் உள்ளவனும் இருப்பான்.

சூ. 60. பதினோராமிடத்தில் குருவிருப்பின் அதிக தன வரவிற்குப் பலவித காரணங்களுடையவனும், அதிக வாகனங்களும் வேலையாட்களும் உள்ளவனும், வெகுமானமடைபவனும், அதிக கல்வி புத்திரர் ஆகிய இவைகள் இல்லாதவனும் இருப்பான்.

சூ. 61. பன்னிரண்டாமிடத்தில் குருவிருப்பின் சோம்பேறியாயும், ஜனங்களால் தள்ளப்பட்டவனும், எல்லாரையும் தூஷிப்பவனும், கண்டித்துப் பேசுபவனும், எல்லா விடத்திலும் சேவை செய்பவனும் இருப்பான்.

சூ. 62. இலக்கினத்தில் சுக்கிரனிருப்பின் அழகுள்ள கண்களும் முகமும் சரீரமும் உள்ளவனும், சுகமுள்ளவனும், தீர்க்காயுளுடையவனும், தைரியமில்லாதவனும், ஸ்திரீகளுடைய நேத்திரங்களுக்கு அமிர்தமழை பொழிபவனும் இருப்பான்.

சூ. 63. இரண்டாமிடத்தில் சுக்கிரனிருப்பின் அதிக அன்னபான சாதனங்களோடும் விபவங்களோடும் சிரேஷ்டமான லீலைகளோடும்

---

* கவி—நாற்கவிகளில் வல்லமை. †வித்வான்—புலவன்.

கூடினவனும், நல்ல வாக்கியங்களை அறிபவனும், அதிக பணமுள்ள வனும், நல்ல வித்துவானும் இருப்பான்.

சு. 64. மூன்றாமிடத்தில் சுக்கிரனிருப்பின் சுகமும் தனமும் உள்ளவனும், ஸ்திரீகளுக்குப் பயப்பட்டவனும், லோபியாயும், சந்தோஷமில்லாதவனும், சௌபாக்கியமும் கிரகோபகரணங்களும் அதிகமாயுள்ளவனும் இருப்பான்.

சு. 65. நான்காமிடத்தில் சுக்கிரனிருப்பின் பந்துக்களும் சினேகிதர்களும் உள்ளவனும், தர்சனீயனும், வாகனங்களும் கிரகோபகரணங்களும் உள்ளவனும், விலாச முள்ளவனும், தாரித்திரமில்லாதவனும், சுபகனும் (அதிருஷ்டவான்) இருப்பான்.

சு. 66. ஐந்தாமிடத்தில் சுக்கிரனிருப்பின் விருத்தியான சுகமும் புத்திரர்களும் சினேகிதர்களும் உள்ளவனும், காமக்கிரீடையில் சமர்த்தனும், அதிகதனவானும், ஒன்றிலும் நடுநிலைமை யில்லாதவனும், அரசனுடைய மந்திரியாகவோ சேனாநாயகனாகவோ ஆகின்றவனும் இருப்பான்.

சு. 67. ஆறாமிடத்தில் சுக்கிரனிருப்பின் ஸ்திரீகளுக்குப் பிரியமில்லாதவனும், அதிக சத்துருக்களுள்ளவனும், ஒரு வைபவங்களுமில்லாதவனும், துக்கிதனும், அதிக நீசனும் இருப்பான்.

சு. 68. ஏழாமிடத்தில் சுக்கிரனிருப்பின் அதிக சௌந்தர்யமுள்ள களத்திர சுகம் அநுபவிக்கின்றவனும், அதிக சுந்தரனும், கலக மில்லாதவனும், சௌபாக்கியங்களுள்ளவனும் இருப்பான்.

குறிப்பு: இடப துலாம் 7 ஆமிடமாகி அதில் சுக்கிரன் ஆட்சியாய் இருப்பின் என்னுங் கருத்து பற்றிக் கூறியதாகலின் காரகர்கள் பாவத்தில் நின்றால் பாவங்கெடு மென்னும் வசனம் முரணாதெனவறிக. இங்ஙனமே மற்றவர்களுக்குங் கொள்க.

சு. 69. எட்டாமிடத்தில் சுக்கிரனிருப்பின் தீர்க்காயுளுள்ளவனும், அநுபவ சுக முள்ளவனும், அதிக தனவானும், அரச சமானனும், அடிக்கடி சந்தோஷம் அடைபவனும் இருப்பான்.

சு. 70. ஒன்பதாமிடத்தில் சுக்கிர னிருப்பின் சாமுத்திரிகா லட்சணமுள்ள சரீர முள்ளவனும், வரவும் செலவும் சமமாயிருப்பவனும், களத்திரம், ஸ்திரீசுகம் பந்து ஆகிய இவைகள் உள்ளவனும், தேவர்களையும் அதிதிகளையும் குருவையும் பூசிக்கின்றவனும் இருப்பான்.

சு. 71. பத்தாமிடத்தில் சுக்கிரனிருப்பின் கௌரவத்தாலும் விவகாரத்தாலும் சம்பாதிக்கப்பட்ட சுகமும் களத்திர சுகமும் அபிமானமும் கீர்த்தியும் புத்திரரும் உள்ளவனும், புத்திசாலியாயும் பிரசித்தனும் இருப்பான்.

சு. 72. பதினோராமிடத்தில் சுக்கிரனிருப்பின் சௌந்தரியமுள்ள களத்திரமும் வேலையாட்களும் உள்ளவனும், அதிக தனவரவுள்ளவனும், எல்லாச் சுகமும் உள்ளவனும் இருப்பான்.

சு. 73. பன்னிரண்டாமிடத்தில் சுக்கிரனிருப்பின் காரியாதிகளில் சோம்பேறியாயும் சுகம் அநுபவிக்கின்றவனும், பதிதனும் (தள்ளப்பட்டவன்) தடித்தவனும், சதுர்வித வைபவங்களோடு கூடியவனும், பலகாரங்கள் தின்பவனும், கட்டில் மெத்தை முதலான நல்ல படுக்கை சாமான்களை சேகரிப்பவனும் ஸ்திரீஜிதனும் (ஸ்திரீகளுக்குப் பயப்பட்டவன்) இருப்பான்.

சு. 74. இலக்கினம், துலாம் மகரம் கும்பம் இவ்விராசிகளிலொன்றாகி அதில் சனியிருப்பின் அரசனுக்குச் சமானனாகவாவது தேசம் அல்லது பட்டினத்திற்கு பிரதானிபாகவாவது இருப்பான். மற்ற விராசிகளி லொன்று இலக்கினமாகி அதில் சனி யிருப்பின் பால்யத்தில் ரோகங்களினாலும் தாரித்திராதி துக்கங்களினாலும் அதிக பீடித முடையவனும், காமாதிக்கிய முள்ளவனும், அழுக்குள்ளவனும், சோம்பேறியாயும் இருப்பான். தநுசு மீனம் இவ்விராசிகளிலொன்று லக்கினமாகி அதில் சனியிருப்பின் சுப பலம் அநுபவிப்பான்.

சு. 75. இரண்டாமிடத்தில் சனியிருப்பின் விகிருதமான முகத்தோடு கூடியவனும், தனங்களை அநுபவிக்கின்றவனும், ஜனங்களை விட்டுப் பிரிந்தவனும், அனியாயம் செய்பவனும், குடும்பத்தை விட்டவனும், ஜனங்களும் வாகனங்களும் போகங்களும் உள்ளவனும் இருப்பான்.

சு. 76. மூன்றாமிடத்தில் சனியிருப்பின் அழுக்குடையவனும், அங்கங்களை விருத்தியாக்குகின்றவனும், குலத்திற்குப் பொருந்தாத காரியத்தைச் செய்பவனும், சோம்பேறிகளோடு கூடினவனும், சூரனும், தானம் செய்பவனும் அதிக புத்தியுள்ளவனும் இருப்பான்.

சு. 77. நான்காமிடத்தில் சனி யிருப்பின் மனோ துக்க முள்ளவனும், பந்துக்களும் வாகனங்களும் தனமும் புத்தியும் சுகமும்

இல்லாதவனும், பால்யத்தில் வியாதிகளால் பீடிக்கப்பட்டவனும், நகங்களையும் ரோமங்களையும் வளர்ப்பவனும் இருப்பான்.

சு. 78. ஐந்தாமிடத்தில் சனியிருப்பின் சுகமும் புத்திரரும் பந்துக்களும் இல்லாதவனும், புத்தியில்லாதவனும், மானமில்லாதவனும், பைத்தியமுள்ளவனும், தரித்திரமுள்ளவனும் இருப்பான்.

சு. 79. ஆறுமிடத்தில் சனியிருப்பின் அதிக காம முள்ளவனும், நல்ல சரீரத்தோடு கூடினவனும், சூரனும், அதிகமாகச் சாப்பிடுபவனும், கெட்ட சுபாவ முள்ளவனும், பலவிதத்தில் சத்துருக்களைக் கொல்பவனும் இருப்பான்.

சு. 80. ஏழாமிடத்தில் சனியிருப்பின் ஒரு சிறிதும் ஆரோக்கியமும் சுகமும் இல்லாதவனும், களத்திர மரணம் உடையவனும், தனமில்லாதவனும், கெட்ட அலங்காரத்தோடு கூடினவனும், பாபியாயும், நீசகர்மங்களைப் (குலத்திற்கு அடுக்காத தொழில்) பலவிதத்திலும் செய்பவனும் இருப்பான்.

சு. 81. எட்டாமிடத்தில் சனியிருப்பின் குஷ்டம் பகந்தரம் அர்சஸ் முதலான பிருஷ்டரோகங்களினால் பீடிக்கப்பட்டவனும், அற்பாயுசு உள்ளவனும், ஒரு காரியங்களையும் ஆரம்பிக்கச் சக்தியில்லாதவனும் இருப்பான். அர்சஸ் = மூலம்

சு. 82. ஒன்பதாமிடத்தில் சனியிருப்பின் தன் தர்மத்தையும் இதர தர்மத்தையும் செய்யாதவனும், சொற்ப திரவியமுள்ளவனும், புத்திரரும் சகோதரரும் இல்லாதவனும், ஒரு சுகமும் இல்லாதவனும், அன்னியர்களைத் துன்பப் படுத்துகின்றவனும் இருப்பான்.

சு. 83. பத்தாமிடத்தில் சனி யிருப்பின் தனவானும், வித்துவானும், பராக்கிரம முள்ளவனும், மந்திரியாகவாவது சேனாயகனாகவாவது அல்லது சங்கம் நகரம் தேசம் கிராமம் இவைகளுக்கு நாதனாகவாவது இருப்பான்.

சு. 84. பதினோராமிடத்தில் சனி யிருப்பின் தீர்க்காயுளுள்ளவனும், சலனம் (கலக்கம் சஞ்சலம்) இல்லாதவனும், வைபவங்களோடு கூடினவனும், சூரனும், சிற்ப பிரவிருத்திகளைச் செய்பவனும், ஆரோக்கிய முள்ளவனும், தனமும் சம்பத்தும் ஜனங்களும் உள்ளவனும் இருப்பான்.

சு. 85. பன்னிரண்டாமிடத்தில் சனி யிருப்பின் அங்கக் குறைவு உள்ளவனும், பதிதனும், (தள்ளப்பட்டவன்) அதிகமாகப் பேசுகின்றவனும், ஒரே விதமான கண்கள் இல்லாதவனும், தய வில்லாதவனும், லஜ்ஜையில்லாதவனும், அனுவசியமாய் அதிக பணத்தைச் செலவு செய்பவனும், அதிக மனக் குழப்பம் உள்ள வனும் இருப்பான்.

சு. 86. பாபக்கிரகங்கள் இலக்கின முதலான பாவங்களிலிருந் தால் அந்தப் பாவங்களின் பலன் கெடும். சுபக்கிரகங்கள் அந்தப் பாவங்களிலிருந்தால் அந்தப் பாவங்களுக்குப் பலம் உண்டாகும். சுபக்கிரகமும் பாபக்கிரகமும் சேர்ந்து ஒரு பாவத்திலிருப்பின் அவ ரவர்களின் பலாபலத்திற்குத் தக்கபடி நன்மையோ கெடுதலோ உண் டாகும். அல்லது சமபலம் பெறின் நல்லதும் கெட்டதும் கலந்து நடக்கும். 6-8-12 இந்தப் பாவங்களில் இருப்பின் பலம் மாறுத லடையும். அதாவது 6-8-12-ல் பாபக்கிரக மிருப்பின் சுப பலமும், சுபக்கிரக மிருப்பின் அசுபபலமும் உண்டென்று சொல்ப.

சு. 87. இலக்கினாதிகளான பன்னிரண்டு பாவங்களில் ஒவ் வொரு பாவத்திலும் ஒன்றுக்கு மேற்பட்ட கிரகங்களின் சம்பந்தம் மேஷாதி ராசிகளுடைய பலன்கள் பாவ பலன்கள் சுபக்கிரகங்க ளுடைய திருஷ்டி மித்துருகிரகங்களுடைய திருஷ்டி சத்துருகிரகங்க ளுடைய திருஷ்டி பாவத்தில் நிற்கின்ற கிரகத்தின் உச்சம் ஸ்வக்ஷேத் திரம் மித்துரு க்ஷேத்திரம் நீச க்ஷேத்திரம் சத்துரு க்ஷேத்திரம் அஸ்தமனம் முதலிய பல லட்சணங்களைக் கொண்டு பாவத்தின் சுபா சுப பலானுபவத்தை நிச்சயித்துச் சொல்லவேண்டும்.

முப்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

## முப்பத்தோராவது அத்தியாயம்.

# கேந்திரங்களில் இரண்டிரண்டு கிரகங்கள் இருப்பதின் பலன்கள்.

சு. 1. இலக்கினம் நான்காமிடம் ஏழாமிடம் பத்தாமிடம் என்னும் நான்கு கேந்திர ஸ்தானங்களில் சூரியாதி சப்த கிரகங்களில் இரண்டிரண்டு கிரகங்கள் சேர்ந்திருப்பதினுலுண்டான பலங்களை இந்த அத்திடாயத்தில் தெளிவாய்க் கூறுகின்றார்.

சு. 2. இலக்கினத்தில் சூரியனும் சந்திரனும் சேர்ந்திருக்குங் காலையிற் பிறந்தவன் தாய் தந்தையர் வியோகத்தால் பீடிதனுகவும், அபிமானம் புத்திரர் பணம் இல்லாதவனுகவும், காரியாதிகளில் ஜெயமில்லாதவனுகவும் துக்க முள்ளவனுகவும் இருப்பான்.

சு. 3. நான்காமிடத்தில் சூரியனும் சந்திரனு மிருந்தால் பந்து சுகம் புத்திரர் இவைகள் இல்லாதவனுகவும், தரித்திர முள்ளவனுகவும், ஜட (மந்த)ப் பிரவிருத்தி யுள்ளவனுகவும் இருப்பான்.

சு. 4. ஏழாமிடத்தில் சூரியனும் சந்திரனு மிருந்தால் பந்துக்களும் புத்திரர்களும் சுகமும் இல்லாதவனுகவும், ஸ்திரீகளால் தோல்வி யடைந்தவனுகவும், தரித்திரனுகவும் இருப்பன்.

சு. 5. பத்தாமிடத்தில் சூரியனும் சந்திரனு மிருந்தால் நல்ல சரீரத்தோடு கூடினவனுகவும், சேனு நாயகனுகவும், ராஜ குண முள்ளவனுகவும், தயவில்லாதவனுகவும், கெட்ட சுபாவ முள்ளவனுகவும், சத்துருக்களை ஜெயிக்கின்றவனுகவும் இருப்பன்.

சு. 6. இலக்கினத்தில் சூரியனும் செவ்வாயும் இருந்தால் பித்தரோகியாகவும், பெரிய யுத்தங்களில் அதிக பராக்கிரம முள்ளவனுகவும், கோப முள்ளவனுகவும், தேகத்தில் வெட்டோ காயமோ உள்ளவனுகவும், குரூரமும் கடினமும் மூடத்துவமும் உள்ளவனுகவும் இருப்பன்.

சு. 7. நான்காமிடத்தில் சூரியனும் செவ்வாயு மிருந்தால் பந்துக்கள் தனம் அற்றவனுய் ஒரு சுகமும் இல்லாதவனுய் அதிக கோப முள்ளவனுய் எல்லா விடத்திலும் தள்ளப்பட்டவனுய் இருப்பன்.

சு. 8. ஏழாமிடத்தில் சூரியனும் செவ்வாயும் இருந்தால் களத்திர மரணமோ விரகமோ உள்ளவனும், காரணத்தினுல் அதிக துக்க

முள்ளவனும், ஸ்திரீயினுல் எப்போதும் அவமதிப்பு அடைபவனும், அந்நிய நாடுகளில் தாமதிக்கின்றவனும் ஆவன்.

சு. 9. பத்தாமிடத்தில் சூரியனும் செவ்வாயும் இருந்தால் ஆரம்பிக்கின்ற காரியங்களில் பலத்தை அடையாதவனும், அடிமை வேலை செய்பவனும், எப்போதும் பிரமிக்கின்ற சீல முள்ளவனும், முக்கியமாக ராஜாவை சேவிக்கின்றவனும், விகல்ப முள்ளவனும் ஆவன்.

சு. 10. இலக்கினத்தில் சூரியனும் புதனும் இருந்தால் வித்துவானும், காரியமில்லாமல் அதிகம் பேசுகின்றவனும், அங்க பல முள்ளவனும், சூரர்களுடைய பிரதானியும் புத்திமானும் தீர்க்காயுளுள்ளவனும் ஆவன்.

சு. 11. நான்காமிடத்தில் சூரியனும் புதனும் இருந்தால் ராஜ சமானனுகவும், பிரசித்தனுகவும், காவியங்களைத் தெரிகின்றவனுகவும், குபேரனுக்குச் சமமான சம்பத்து உள்ளவனுகவும், தடித்த சரீரமும் வளைந்த மூக்கும் உள்ளவனுகவும் இருப்பன்.

சு. 12. ஏழாமிடத்தில் சூரியனும் புதனும் இருந்தால் கொலைப்பாதகம் சிறைச்சாலை வாசம் முதலானவைகளால் மரணத்தை அநுபவிக்கின்றவனுகவும், கிரகிக்கத் தகுந்த வார்த்தையை யுடையவனுகவும், அதிகமாகப் பணத்தில் பிரிய மில்லாதவனுகவும், ஸ்திரீ போகம் குறைந்திருப்பவனுகவும் களவு செய்பவனுகவும் இருப்பன்.

சு. 13, பத்தாமிடத்தில் சூரியனும் புதனுமிருந்தால் மூன்று லோகங்களிலும் பிரசித்தனுகவும், யானை குதிரை இவைகளுக்கு நாதனுகவும், பூமிக்கு அதிப (ராஜா அல்லது ராஜ சமானன்) னுகவும் இருப்பன். சூரியனுவது புதனுவது நீசமில்லாம லிருந்தால் மேற்சொன்ன பலன் நடக்கும். நீசமானுல் மேற் சொன்ன பலன் நடைபெருது.

சு. 14. இலக்கினத்தில் சூரியனும் குருவும் இருந்தால் குணவானுகவும், மந்திரி அல்லது சேனு நாயகனுகவும், பூச்சியனுகவும், கல்வி தனம் போகம் இவை யுள்ளவனுகவும், பிரசித்தனுகவும் இருப்பன்.

சு. 15. நான்காமிடத்தில் சூரியனும் குருவுமிருந்தால் வேதத்திலும் நீதி சாஸ்திரத்திலும் காவியத்திலும் அறிவு உள்ளவனுகவும், சுப முள்ளவனுகவும், ஜன சம்மதனுகவும், பிரியமாகப் பேசுகின்றவனுகவும், ஆசார முள்ளவனுகவும் இருப்பன்.

சு. 16. ஏழாமிடத்தில் சூரியனும் குருவும் இருந்தால் காம வசனுகவும், ஸ்திரீகளால் ஜெயிக்கப்பட்டவனுகவும், தகப்பனைக் குற்றப்படுத்துகின்றவனுகவும், சுவர்ணம் வெள்ளி ரத்தினங்கள் முத்துக்கள் இவைகள்உள்ளவனுகவும், நல்ல சரீரமுள்ளவனுகவும் இருப்பன்.

சு. 17. பத்தாமிடத்தில் சூரியனும் குருவுமிருந்தால் நிந்தைக்கிடமான குடும்பத்தில் பிறந்தாலும் கீர்த்தி சுகம் மானம் சம்பத்து இவைகளுள்ள அரசனுக இருப்பன்.

சு. 18. இலக்கினத்தில் சூரியனும் சுக்கிரனுமிருந்தால் கலகத்தில் பிரியமுள்ளவனுகவும், விநயமில்லாதவனுகவும், கெட்ட நடவடிக்கை யுள்ளவனுகவும், அதிக துக்கிதனுகவும், நீசனுகவும், களத்திரத்தினுல் அதிகமாகத் தள்ளப்பட்டவனுகவும் இருப்பன்.

சு. 19. நான்காமிடத்தில் சூரியனும் சுக்கிரனு மிருந்தால் அன்னியர்களுக்கு வேலைக்காரனுகவும், ஒவ்வொரு விதமான துக்கங்களினுல் பீடிக்கப்பட்டவனுகவும், ஜனங்களால் தள்ளப்படுகின்றவனுகவும், தரித்திரனுகவும் இருப்பன்.

சு. 20. ஏழாமிடத்தில் சூரியனும் சுக்கிரனு மிருந்தால் ஸ்திரீகளால் அதிகம் அவமதிக்கப்பட்டவனுகவும், தனமில்லாதவனுகவும், தடித்த சரீர முள்ளவனுகவும், காடு மலைகளில் சஞ்சரிக்கின்றவனுகவும், ஜனங்களால் துவேஷிக்கப் படுகின்றவனுகவும் இருப்பன்.

சு. 21. பத்தாமிடத்தில் சூரியனும் சுக்கிரனு மிருந்தால் வியவகாரத்தில் பிரியமுள்ளவனுகவும், ராஜாவின் மந்திரியாகவும், சாஸ்திரங்களினும் நிருத்தம் கீதை முதலிய கலாவித்தைகளினும் சாமர்த்திய முள்ளவனுகவும், அதிக வாகனம் தனம் சுகம் இவைகளுள்ளவனுகவும் இருப்பான்.

சு. 22. இலக்கினத்தில் சூரியனும் சனியு மிருந்தால் நிந்திதை (தள்ளப்பட்ட)யான ஸ்திரீயின் புத்திரனுகவும், கெட்ட ஜீவனமுள்ளவனுகவும், அழுக்கடைந்த புத்தியுள்ளவனுகவும்,பாப ஆசார முள்ளவனுகவும் இருப்பன்.

சு. 23. நான்காமிடத்தில் சூரியனும் சனியு மிருந்தால் தனக்குத்தகாத பிரவிருத்தியைச் செய்பவனுகவும், தரித்திரனுகவும், தன்னுடைய பந்துக்களால் பீடிக்கப்பட்டவனுகவும் இருப்பன்.

சு. 24. ஏழா மிடத்தில் சூரியனும் சனியு மிருந்தால் ஒரு பிரவிருத்திக்கும் தகாதவனுகவும் சோம்பேறியாகவும் பாக்கியக் குறை

வுள்ளவனாகவும், களத்திரம் சுகம் தனம் இவையில்லாதவனாகவும், வேட்டை யாடுபவனாகவும், அறிவில்லாதவனாகவும் இருப்பன்.

சு. 25. பத்தா மிடத்தில் சூரியனும் சனியு மிருந்தால் அடிமை வேலை செய்து பிழைப்பவனாய், அன்னிய தேசத்தில் வசிப்பவனாய், ஒரு வேளை ராஜாவினாலோ, அல்லது கள்வர்களாலோ கிடைத்த தனமுடையவனாய் இருப்பன்.

சு. 26. இலக்கினத்தில் சந்திரனும் செவ்வாயு மிருந்தால் ரத்தம் அக்கினி பித்தம் இவைகளால் பீடிக்கப்பட்டு ராஜாவாகவாவது ராஜ சமானனாகவாவது இருந்து குரூரசுபாவ முள்ளவனாய் இருப்பன்.

சு. 27. நான்கா மிடத்தில் சந்திரனும் செவ்வாயு மிருந்தால் அநேக கிலேசங்களோடு தரித்திரம் உள்ளவனாகவும், சுகம் புத்திரர் சம்பத்து இவை யில்லாதவனாகவும், அங்கக் குறைவு உள்ளவனாகவும் இருப்பன்.

சு. 28. ஏழா மிடத்தில் சந்திரனும் செவ்வாயு மிருந்தால் மதிப்பில்லாதவனாகவும், அன்னியர்களுடைய பொருளில் ஆசைவுள்ளவனாகவும், விருதாவாய்ப் பொய் பேசுகின்றவனாகவும், வைராக்கிய முள்ளவனாகவும் இருப்பன்.

சு. 29. பத்தா மிடத்தில் சந்திரனும் செவ்வாயும் இருந்தால் யானை குதிரை காலாள் இவைகள் விருத்தியுள்ளவனாகவும், பராக்கிரம முள்ளவனாகவும் இருப்பன்.

சு. 30. இலக்கினத்தில் சந்திரனும் புதனு மிருந்தால் சுகம் புத்தி சத்துவம் உள்ளவனாகவும், சௌபாக்கியவானாகவும், விரும்பத் தக்கவனாகவும், அதிகமாய்ப் பேசுகின்றவனாகவும், அதிக சாமர்த்திய முள்ளவனாகவும் இருப்பன்.

சு. 31. நான்கா மிடத்தில் சந்திரனும் புதனு மிருந்தால் பந்துக்கள் சிநேகிதர்கள் புத்திரர் சுகம் பிரதாபம் தங்கம் குதிரை ரத்தினம் இவைகளுள்ளவன் ஆவன்.

சு. 32. ஏழா மிடத்தில் சந்திரனும் புதனு மிருந்தால் பிரதாப முள்ளவனாகவும், ராஜனுக்குப் பிரியமுள்ளவனாகவும் இருப்பன். அன்றியும் அழககான ராஜனாகவோ பிரசித்தனாகவோ நல்ல வித்துவானாகவோ இருப்பான்.

சு. 33. பத்தா மிடத்தில் சந்திரனும் புதனு மிருந்தால் மானமும் தனமும் உள்ளவனாகவும், அதிகப் பிரசித்தியுள்ளவனாகவும்,

ராஜாவினுடைய மந்திரியாகவும், வயோதிகத்தில் துக்கிக்கின்ற வனுக வும், பந்துக்களிலிருந்து பிரிந்தவனுகவும் இருப்பன்.

சு. 34. இலக்கினத்தில் சந்திரனும் குருவு மிருந்தால் ராஜாவாகவாவது ராஜ சமானனுகவாவது ஆகின்றவனும், பரந்து தடித்த மார்புள்ளவனும், அதிக புத்திரரும் பந்துக்களும் சிநேகிதர்களும் களத்திரமும் உள்ளவனும், நல்ல சரீர முள்ளவ னும் இருப்பன்.

சு. 35. நான்கா மிடத்தில் சந்திரனும் குருவுமிருந்தால் ராஜா வினுடைய மந்திரியாகவோ ராஜ சமானனுகவோ ஆகின்றவனும், நல்ல பந்துக்கள் உள்ளவனும், வைபவசமிருத்தி உள்ளவனும், புத்தி சத்தியால் எல்லா சாஸ்திரங்களையும் அறிகின்றவனும் இருப் பன்.

சு. 36. ஏழா மிடத்தில் சந்திரனும் குருவுமிருந்தால் அதிக கல்வியும் அறிவும் உள்ளவனுகவும், ராஜாவிற்குச் சிநேகித முள்ளவ னுக ஆகின்றவனுகவும், கலா வித்தைகளில் சமர்த்தனுகவும், வியா பாரியாகவும், பண சமிருத்தி யுள்ளவனுகவும் இருப்பன்.

சு. 37. பத்தா மிடத்தில் சந்திரனும் குருவுமிருந்தால் கல்வி யும் உதார குணமும் சம்பத்தும் அபிமானமும் கீர்த்தியும் உள்ள வனுகவும், சுந்தரனுகவும், முட்டுவரை நீண்ட கைகளுள்ளவனும் எல்லாராலும் நமஸ்கரிக்கப்படுபவனுகவு மிருப்பன்.

சு. 38. இலக்கினத்தில் சந்திரனும் சுக்கிரனு மிருந்தால் வேசி களின் சுக மநுபவிப்பவனுகவும், அழகான சரீரத்துடன் கூடியவனுகவும், குருக்களுக்குச் சம்மத முள்ளவனுகவும், மாலை பட்டு வாசனு வஸ்துக்கள் இவைகளால் அலங்கரித்துக் கொள்பவனுகவும் இருப்பன்.

சு. 39. நான்காமிடத்தில் சந்திரனும் சுக்கிரனு மிருந்தால் ஸ்திரீ ஜனங்களும் சுகமும் உள்ளவனுகவும், கப்பல்களிலிருந்து கிடைத்த பணத்தோடு கூடியவனுகவும், ஜனங்களுக்குப் பிரிய முள்ளவனுகவும், போகங்களை அநுபவிக்கின்றவனுகவும் இருப்பன்.

சு. 40. ஏழாமிடத்தில் சந்திரனும் சுக்கிரனுமிருந்தால் அதிக ஸ்திரீகளுள்ளவனும், சுகமுள்ளவனும், அதிக புத்திரரும் தனமும் இல்லாதவனும், பெண் குழந்தைகள் அதிக முள்ளவனும், அதிக புத்திசாலியாயும், ராஜாவைப் போல பிரவிர்த்திக்கின்றவனும் இருப்பன்.

சு. 41. பத்தாமிடத்தில் சந்திரனும் சுக்கிரனு மிருந்தால் அபிமானமும் ஏவுதலும் (உத்தரவு கொடுத்தல்) சம்பத்தும் உள்ளவனும், ராஜாவின் மந்திரியாயும், அதிக அடக்கம் ஒடுக்கம் உள்ளவனும், அநேக ஜனங்களுள்ளவனும் இருப்பன்.

சு. 42. இலக்கினத்தில் சந்திரனும் சனியுமிருந்தால் அடிமை வேலை செய்பவனும், கெட்டகுண முள்ளவனும், அதிக குரூரனும், லோபியும், மேன்மை யில்லாதவனும், தூங்குகின்றவனும், பாபம் செய்பவனு மாவன்.

சு. 43. நான்காமிடத்தில் சந்திரனும் சனியுமிருந்தால் ஜலமும் கப்பலும் சம்பந்தமான பிரவிருத்திகளினுலும் முத்து மணிகளினுலும் முழுகுதல் முதலிய தொழில்களாலும் காலக்ஷேபம் செய்கின்றவனுயும், சிரேஷ்டனுயும், ஜன சம்மதம் உள்ளவனுயும் இருப்பான். (முழுகுதல் = ஜலத்தில் முழுகி முத்து முதலிய சிப்பிகள் எடுத்தல் முதலியவைகள்)

சு. 44. ஏழாமிடத்தில் சந்திரனும் சனியு மிருந்தால் நகரம். கிராமம் தேசம் முதலான இடங்களில் சிரேஷ்ட முள்ளவனுயும், ராஜாவினுல் வெகுமானிக்கப் படுகின்றவனுயும், களத்திரமோ களத்திர சுகமோ இல்லாதவனுயும் இருப்பன்.

சு 45. பத்தாமிடத்தில் சந்திரனும் சனியுமிருந்தால் அதிக குதிரை சைந்நியங்களுள்ளவனுயும், சத்துருக்களை ஜெயிக்கின்றவனுயும், பிரசித்தனுயும், கெட்ட நடத்தை யுள்ள ஸ்திரீயின் புத்திரனுயும், ராஜாவாகவோ ராஜ சமானனுகவோ ஆகின்றவனுயும் இருப்பன்.

சு. 46. சுபக்கிரகத்துடன் இருக்கின்ற சந்திரன் அதிகமான சுபபலனைச்செய்பவனும், செவ்வாயுடனுவது சனியுடனுவது சேர்ந்த சந்திரன் அதிகமான நல்ல பலனைச் செய்யாதவனுமாவன். ஆனுல் அந்தச் சந்திரன் பத்தாமிடத்தி லிருந்தால் சேனுதிபத்தியத்தைக் கொடுப்பன்.

சு. 47. இலக்கினத்தில் செவ்வாயும் புதனுமிருந்தால் இம்சிக்கின்ற பழக்க முள்ளவனுயும், அக்கினி சம்பந்தமான கர்மங்களில் சமர்த்தனுகவும், ரச வாதத்தில் சிரம ஜீவியம் செய்பவனுயும், தூது போவோனுயும், சிறைச்சாலை யதிகாரியாயும் இருப்பன்.

சு. 48. நான்காமிடத்தில் செவ்வாயும் புதனுமிருந்தால் பந்துக்களை விட்டுப் பிரிந்து சிநேகிதர்களுடன் சேர்ந்து இருப்பவனு

யும், பணம் பட்சணம் போகம் வாகனம் இவைகளோடு கூடினவனு யும், ஸ்வ ஜனங்களினுல் நிந்திக்கப்பட்டவனுயும் இருப்பன்.

சு. 49. ஏழாமிடத்தில் செவ்வாயும் புதனு மிருந்தால் ஒவ்வொரு தேசங்களிலும் சஞ்சரிக்கின்றவனுயும், அந்நியர்களுக்கு வேலை செய்து சம்பளம் வாங்குகின்றவனுயும், நீசர்களால் சங்கட முள்ள வனுயும், நன்ருக வியவகாரம் பேசுகின்றவனுயும், முதல் தாரம் இழந்து விடுபவனுயும் இருப்பன்.

சு. 50. பத்தாமிடத்தில் செவ்வாயும் புதனு மிருந்தால் சேனு நாயகனுகவும், சூரனுகவும், கெட்ட ஜன பழக்க முள்ளவனுகவும், அதிக குரூரனுகவும், ராஜனுக்குச் சமானனுகவும், தீரனுகவும் இருப் பன்.

சு. 51. இலக்கினத்தில் செவ்வாயும் குருவு மிருந்தால் மந்திரி யாயும், முக்கிய குணங்களுள்ளவனுயும், எல்லாத் தர்ம ஆலயங்களி லும் அதிக கீர்த்தியோடு கூடினவனுயும், எந்தச் சமயமும் உற்சாகப் பிரியனுயும் இருப்பன்.

சு. 52. நான்காமிடத்தில் செவ்வாயும் குருவுமிருந்தால் பந் துக்களும் சிநேகிதர்களும் உடையவனுய் அவர்களினுல் சம்ருத்தி (நிறை செல்வம்) கடின மனம் சுகம் ராஜசேவை தெய்வபக்தி குரு பக்தி இவைகளை யுடையனுவன்.

சு. 53. ஏழாமிடத்தில் செவ்வாயும் குருவு மிருந்தால் மலை யிலும் கோட்டையிலும் ஜலத்திலும் காட்டிலும் சஞ்சரிக்கின்ற பழக்க முள்ளவனுயும், நல்ல பந்துக்களுள்ளவனுயும், சூரனுயும், களத்திரத்தை விட்டுப் பிரிந்தவனுயும் இருப்பன்.

சு. 54. பத்தாமிடத்தில் செவ்வாயும் குருவுமிருந்தால் ராஜா வாகவோ ராஜ சமானனுகவோ இருப்பன். அன்றியும் அதிக கீர்த்தி அதிக தனம் ஜனங்கள் பரிவாரங்கள் அதிக பிரவிருத்தி இவற்ருல் சமர்த்தனும் ஆவன்.

சு. 55. இலக்கினத்தில் செவ்வாயும் சுக்கிரனு மிருந்தால் வேசியாஸ்திரீகளி னிடத்தில் அதிக பிரியமுள்ளவனுயும், நிந்திய சுபாவ முடையவனுயும், நிந்திய கர்மத்தைச் செய்பவனுயும், ஸ்திரீ களால் தன நஷ்ட முள்ளவனுயும், தீர்க்காயுள் இல்லாதவனுயும் இருப்பன்.

சு. 56. நான்காமிடத்தில் செவ்வாயும் சுக்கிரனு மிருந்தால் பந்துக்கள் புத்திரர்கள் சிநேகிதர்கள் இல்லாதவனும், மன பீடைகளால் அதிக துக்க முள்ளவனும், அநேக விதமான துக்கங்களால் தபிக்கின்றவனும் இருப்பன்.

சு. 57. ஏழாமிடத்தில் செவ்வாயும் சுக்கிரனு மிருந்தால் அதிக ஸ்திரீகளிடத்தில் பிரியமுள்ளவனும், கெட்ட செய்கையுள்ளவனும், நன்னடை யில்லாதவனும், ஸ்திரீகளால் அதிக துக்கங்களை அநுபவிப்பவனும் ஆவன்.

சு. 58. பத்தாமிடத்தில் செவ்வாயும் சுக்கிரனு மிருந்தால் அஸ்திரப் பிரயோக வித்தையை உபதேசிக்கின்றவனும், புத்திமானும், கல்வி தனம் வஸ்திரம் மாலை இவைகளுள்ளவனும், பிரசித்தனும், ராஜாவினுடைய மந்திரியும் ஆவன்.

சு. 59. இலக்கினத்தில் செவ்வாயும் சனியுமிருந்தால் யுத்தத்தில் ஜெயம் அடைகின்றவனும், தாயினால் விரோதிக்கப்பட்டவனும், அற்பாயுளுள்ளவனும், பாக்கியம் குறைந்தவனும் ஆவன்.

சு. 60. நான்காமிடத்தில் செவ்வாயும் சனியுமிருந்தால் அன்ன பானாதிகளான ஒரு சுகமு மில்லாதவனும், ஸ்வ ஜனங்களாலும் பந்துக்களாலும் உபேட்சிக்கப்பட்டவனும் பாபியும் ஆவன்.

சு. 61. ஏழாமிடத்தில் செவ்வாயும் சனியு மிருந்தால் களத்திர சுகமோ புத்திரரோ அல்லது புத்திர சுகமோ இல்லாதவனும், தரித்திரத்தாலும் வியாதியாலும் பீடிக்கப்பட்டவனும், துக்க சுபாவ முள்ளவனும், ஜனங்களால் பீடிக்கப்பட்டவனும், லோபியாயும் இருப்பன்.

சு. 62. பத்தாமிடத்தில் செவ்வாயும் சனியு மிருந்தால் ராஜாவினிடத்திலிருந்து தனலாபம் பெறுபவனும், பெரிய குற்றத்தினால் ராஜதண்டனை யடைபவனும், பொய் சொல்லுபவனுமாயுமிருப்பன்.

சு. 63. இலக்கினத்தில் புதனும் குருவு மிருந்தால் நல்ல சரீரம் நல்ல சுபாவம் உள்ளவனும், வித்துவானும், ராஜாவினால் வெகுமானிக்கப்பட்டவனும், தேசத்தின் நாதனும், வாகனம் சுகம் போகம் ஆகிய இவைகள் உள்ளவனுமாவன்.

சு. 64. நான்காமிடத்தில் புதனும் குருவு மிருந்தால் பந்து சிநேகிதர் சுகம் உள்ளவனாகவும், ஸ்திரீ தனமும் சௌபாக்கியமும்

சம்பத்து முள்ளவனுகவும், காரியங்களில் சமர்த்தனுகவும், ராஜ மானசனுகவும் இருப்பன்.

சு. 65. ஏழாமிடத்தில் புதனும் குருவுமிருந்தால் சத்துருக்களை நாசம் செய்கின்றவனும், நல்ல களத்திர முள்ளவனும், அதிக ஜனங்கள் பந்துக்கள் தனம் பராக்கிரமம் முதலியன கூடியவனும், தகப்பனைப் பார்க்கிலும் குணவானும் ஆவன்.

சு. 66. பத்தாமிடத்தில் புதனும் குருவு மிருந்தால் ராஜாவாகவோ ராஜமந்திரியாகவோ இருப்பன். அல்லாமலும் மானம் ஆக்ஞாபலம் கீர்த்தி வைதீக காரியங்களில் அதிக நிபுணத்துவம் வினயாதி குணங்கள் ஆகிய இவைகள் உள்ளவனும் ஆவன்.

சு. 67. இலக்கினத்தில் புதனும் சுக்கிரனும் மிருந்தால் நல்ல சௌந்தர்யாதி குணங்களுள்ள சரீர முள்ளவனும், வித்வானும் சத்ஜன சம்மதனும், சௌபாக்கிய யுக்தனும், ராஜாவினுல் வெகு மானிக்கப்படுகின்றவனும், அதிக நன்றியுள்ளவனும், தேவப் பிராம்மண பக்தனும், பிரசித்தனும் இருப்பன்.

சு. 68. நான்காமிடத்தில் புதனும்சுக்கிரனு மிருந்தால் புத்திரரும் சிநேகிதரும் பந்துக்களும் உள்ளவனும் அதிக சௌபாக்கிய முள்ளவனும், ராஜாவாகவோ ராஜ மந்திரியாகவோ இருப்பவனும், அதிக மங்களங்களுள்ளவனும் இருப்பன்.

சு. 69. ஏழாமிடத்தில் புதனும் சுக்கிரனு மிருந்தால் நற்குணமும் யௌவனமும் பொருந்திய அநேக ஸ்திரீகளால் சூழப்பட்டவனும், போகம் தனம் ஐஸ்வரியம் சுகம் ஆகிய இவைகள் உள்ளவனும். ராஜாவின் சிநேகிதனும் இருப்பன்.

சு. 70. பத்தாமிடத்தில் புதனும் சுக்கிரனு மிருந்தால் நீதி சாஸ்திரங்களில் சமர்த்தனும், ராஜாவாகவோ ராஜசமானனகவோ ஆகின்றவனும், பூஜ்ஜியனும், நீசர்களைச் சேராதவனும், தனவானும், கர்ம சாபல்லியம் சாமர்த்தியம் உள்ளவனுகவும் இருப்பன்.

சு. 71. இலக்கினத்தில் புதனும் சனியுமிருந்தால் இளைத்த சரீர முள்ளவனும், பாபமுள்ளவனும், கல்வி தனம் வாகனம் இவைகளில்லாதவனும், ஆயுசும் பாக்கியமும் குறைந்தவனும் இருப்பன்.

சு. 72. நான்காமிடத்தில் புதனும் சனியு மிருந்தால் அன்ன பானுதி வஸ்துக்களும் பந்துக்களும் இல்லாதவனும், ஸ்வஜனங்களி

லிருந்து தள்ளப்பட்டவனும், அறிவில்லாதவனும், சிநேகிதர்க ளில்லாதவனும், பாப முள்ளவனும் இருப்பன்.

சு. 73. ஏழாமிடத்தில் புதனும் சனியுமிருந்தால் பிரபுவின் வேலைக்காரனாகவும், மூர்க்கத்தனமுள்ளவனாகவும், பரோபகாரியாக வும், சத்ஜனமில்லாதவனாகவும், அதிக அழுக்குள்ளவனாகவும், பொய் சொல்லுபவனாகவும் இருப்பன்.

சு. 74. பத்தாமிடத்தில் புதனும் சனியுமிருந்தால் சகல சத் துருக்களையும் ஜெயிக்கின்றவனாகவும், ஸ்வஜனங்களும் பந்து ஜனங்க ளும் வாகனங்களும் கிரகோபகரணங்களும் சம்பத்துக்களும் உள்ளவ னாகவும், பிராமணர் குருக்கள் தேவர் இவர்களைப் பூசிப்பவனாகவும் இருப்பன்.

சு. 75. இலக்கினத்தில் குருவும் சுக்கிரனும் இருந்தால் குரு வின் உபதேசமுள்ளவனாகவும், ராஜாவாகவும் (பிராமணகுலத்தில் ஜனித்தவனாயிருந்தாலும்) ராஜசமான குணங்களோடு கூடியவனாகவும், அநுகூலனாகவும் இருப்பன்.

சு. 76. நான்காமிடத்தில் குருவும் சுக்கிரனும் இருந்தால் சகல சத்துருக்களையும் ஜெயிக்கின்றவனும், ஸ்வஜனங்களும் பந்துக்களும் வாகனங்களும் அர்த்தங்களும் தனமும் உள்ளவனும், பிராம்மணர் களையும் தேவர்களையும் குருக்களையும் பூசிக்கின்றவனும் இருப்பன்.

சு. 77. ஏழாமிடத்தில் குருவும் சுக்கிரனும் இருந்தால் நல்ல களத்திரமும், இரத்தினாதி சிரேஷ்ட வஸ்துக்களும் கிரகோப கர ணாதிகளான தனாதியும், ஸ்திரீ சந்தானங்களும், சுகமும், கீர்த்தி யும், நல்ல வாகனமும், போகாதி அநுபவசுகமும் உள்ளவன் ஆவன்.

சு. 78. பத்தாமிடத்தில் குருவும் சுக்கிரனும் இருந்தால் அதிக உத்கிருஷ்ட மனதுடையவனாகவும், தன்னுடைய ஆக்ஞையை நடத்துகின்றவனாகவும், சகல வைபவங்களோடு கூடியவனாகவும், ராஜாவாகவும், அதிக வேலையாளும் சம்பத்தும் உள்ளவனாகவும், சத் விருத்தியுள்ளவனாகவும் இருப்பன்.

சு. 79. இலக்கினத்தில் குருவும் சனியுமிருந்தால் மகோன் மத்தனாகவும், நிஷ்டூரனாகவும், சிரேஷ்ட குலத்தில் பிறந்தவனாகவும், வித்துவானாகவும், தனங்களும் அற்பசுகமும் உள்ளவனாகவும், துஷ்ட னாகவும் இருப்பன்.

சு. 80. நான்காமிடத்தில் குருவும் சனியுமிருந்தால் ராஜ மந்திரி யாகவும், ஆரோக்கியமுள்ளவனாகவும், பந்துக்கள் சிநேகிதர்கள் இவர்

களால் ஜயம் அடைந்தவனுகவும், சந்தோஷமும் சம்பத்தும் சுகமும் உள்ளவனுகவும் இருப்பன்.

சு. 81. ஏழாமிடத்தில் குருவும் சனியுமிருந்தால் ஸ்திரீ விரோத நிமித்தமாக தனநஷ்ட மடைந்தவனுகவும், சூரனுகவும், வியசனமும் மூடத்துவமும் உள்ளவனுகவும், கெட்ட சரீரத்தோடு கூடியவனுக வும், பிதாவின் தனத்தில் ஆசைப்படுகின்றவனுகவும், அறிவில்லா தவனுகவும் இருப்பன்.

சு. 82. பத்தாமிடத்தில் குருவும் சனியுமிருந்தால் ராஜாவின் சிநேகிதனுகவோ ராஜாவாகவோ இருப்பதுமன்றி அற்பசந்தானம் ஸ்திரபுத்தி திரண்ட பசுக்கள் வாகனம் தனம் ஆகிய இவைகள் உள் ளவனுகவும் இருப்பன்.

சு. 83. இலக்கினத்தில் சுக்கிரனும் சனியுமிருந்தால் அதிக ஸ்திரீகளோடு ரமிக்கின்றவனும், சுந்தர சரீரனும், சுகமும் தன மும் போகமும் உள்ளவனும், அதிக வேலையாட்களுள்ளவனும், துக்கமுள்ளவனும் இருப்பான்.

சு. 84. நான்காமிடத்தில் சுக்கிரனும் சனியுமிருந்தால் சிநேகிதர் களால் தனமும் பந்துக்களால் வெகுமானமும், அரசர்களால் பிரீதி யும் உள்ளவன் ஆவன்.

சு. 85. ஏழாமிடத்தில் சுக்கிரனும் சனியுமிருந்தால் ஸ்திரீகளும், ரத்தினங்களும், பலவித சுகங்களும், சம்பத்துக்களும், கீர்த்தி யும், எல்லாவித ஐசுவரியங்களும் அடைபவனுகவும், தேசலாப முள்ளவனுகவும் இருப்பன்.

சு. 86. பத்தாமிடத்தில் சுக்கிரனும் சனியுமிருந்தால் சுகதுக் காதிகளிலிருந்து பிரிந்தவனும், லோகப் பிரசித்தியுள்ளவனும், விசேஷகர்மங்களைச் செய்கின்றவனும், ராஜமந்திரியாயும், உத்கிருஷ் டனும் இருப்பன்.

சு. 87. இந்தப்பிரகாரமிலக்கினுதிகேந்திரங்களில் இரண்டிரண்டு கிரகங்களிருப்பதின் பலன் சொல்லப்பட்டது. இதுபோல மூன்று நான்கு ஐந்து ஆறு ஏழு கிரகங்கள் சேர்ந்திருந்தாலும் ஆலோசித்து நிதானமாய்ப் பலன்களைச் சொல்லவேண்டும். எப்படியென்றுல் லக் கினத்தில் சூரியன் சந்திரன் செவ்வாய் இவர்கள் ஒன்று சேர்ந்திருந் தால் சூரியன் சந்திரன், சந்திரன் செவ்வாய், சூரியன் செவ்வாய் இவர் கள் சேர்ந்திருந்தபலன் மூன்றும் சேர்த்துச் சொல்லவேண்டும். இதைப்போலவே மற்றுமுள்ள கிரகங்களுக்கும் பலன்களை நிதானித் துச் சொல்லவேண்டும்.

முப்பத்தோராவது அத்தியாயம் முற்றிற்று.

# முப்பத்திரண்டாவது அத்தியாயம்.

## பாக்கியபாவ சிந்தை.

சு. 1. சர்வ ஜீவர்களுக்கும் சுக துக்கங்களின் பிரதான ஸ்தானம் பாக்கியமாகும். அதனுல் மற்ற லக்கினம் முதலுள்ள மற்றப் பாவங்களைத் தள்ளினுலும் பாக்கிய பாவத்தைப்பற்றி விசேஷமாய்த் தெரிந்து கொள்ள வேண்டியதா யிருக்கின்றது. ஏனென்ருல் பாக்கியமின்றேனில் உலகத்தில் மேன்மை ஒன்றுமில்லை யாதலால் இந்தப் பாக்கியா பாக்கிய பாவம் இந்த அத்தியாயத்தில் சோல்லலப்படுகின்றது என்றறிக.

சு. 2. ஜன்மலக்கினத்திலிருந்தோ சந்திரா லக்கினத்திலிருந்தோ ஒன்பதாவது இராசி பாக்கிய ஸ்தானமாகும். ஜாதகத்தின்படி லக்கினத்திற்கோ சந்திரனுக்கோ பலம் கூடுதல் என்று தெரிந்து அதனுடைய ஒன்பதாவது ராசியைப் பாக்கிய பாவமாகத் தெரிந்துகொள்ள வேண்டியது. எனவே, இனி அந்தப் பாக்கிய பாவத்தைக்கொண்டு தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்களைக் கீழே வருவனவற்ருலறிந்துகாள்க.

சு. 3. ஒன்பதாம் பாவாதிபன் ஏதாவதொரு ஸ்தானத்தில் இருந்தாலும், ஒன்பதாமிடத்திலிருக்கின்ற கிரகம் பலம் அல்லது அற்பபலம் உள்ளவனுக இருந்தாலும், அந்தக் கிரகம் ஒன்பதாம் பாவாதிபனுடைய காரகனுகின்ருன் என்றே அறியவேண்டியது.

சு. 4. ஒன்பதாம் பாவாதிபனுன கிரகம் அவ்வீட்டையே பார்க்கினும், அல்லது அதில் இருப்பினும், சுதேசத்தில் பாக்கியம் கிடைக்கும். மற்றக் கிரகங்கள் பார்ப்பினும், அவ்வொன்பதா மிடத்திலே இருப்பினும், அன்னிய தேசத்தில் பாக்கிய பலம் இருக்கின்றதாகக் கொள்ளவேண்டும்.

சு. 5. இலக்கினம் ஐந்தாமிடம், மூன்ருமிடம் இவைகளில் பலமுள்ள கிரகங்கள் இருந்தாலும் அவர்கள் பார்த்தாலும் ஜாதகன் எப்பொழுதும் சிரேஷ்டனுகவே இருப்பன்.

சு. 6, 7. குரு பலவானுக ஒன்பதாமிடத்திலிருந்தால் அரசனுடைய அமைச்சனுகவும், அந்தக் குருவைச் சூரியன் பார்க்கில் அரசனேடு சமமானவனுகவும், சந்திரன் பார்க்கில் அழகும் போகமும்

உடையவனுகவும், சேவ்வாய் பார்க்கில் சுவர்ணலாபம் கிடைப்பவனுக வும், புதன் பார்க்கில் அதிக செல்வமுடையவனுகவும், சுக்கிரன் பார்க் கில் பசு வாகனம் பணம் இவையுடையவனுகவும், சனி பார்க்கில் பூமி யாதி ஸ்தாவரப் பொருள்களும் கழுதை எருமை முதலிய மிருகங் களும் உள்ளவனுகவும் இருப்பன்.

சு. 8. ஒன்பதாமிடத்திலிருக்கின்ற குருவைச் சூரியனும் சேவ்வாயும் சேர்ந்து பார்க்கில் ஐசுவரியமும் ரத்தினங்களும் சுவர் ணங்களும் உள்ளவனுகவும், சாகசப் பிரவிருத்திகளைச் செய்கின்றவ னுகவும், பலத்தினுல் சாமர்த்தியவானுகவும், வாகனங்கள் பரிவாரங்கள் உடையவனுகவும் இருப்பன்.

சு. 9. ஒன்பதில் இருக்கின்ற குருவைச் சூரியனும் சந்திரனும் சேர்ந்து பார்க்கில் எப்பொழுதும் சமிருத்தியுள்ளவனுகவும், மாதா பிதாவிற்கு விருப்பமுள்ளவனுகவும், பிரசித்தி பெற்றவனுகவும், ராஜ சமானமானவனுகவும், நிரம்ப மனைவியோடு கூடியவனுகவும் இருப் பன்.

சு. 10. சூரியனும் புதனும் கூடி ஒன்பதாமிடத்திலிருக்கின்ற குருவைப் பார்க்கில் அழகும் விரும்பத்தக்கதுமான சௌபாக்கிய முள்ளவனுகவும், விசேஷமான ஸ்திரீகள் அலங்காரம் தனம் இவை கள் உள்ளவனுகவும், காவ்யம் கலை வித்தைகளில் அறிவு சாமர்த்தியம் புத்தி இவை யுள்ளவனுகவும் இருப்பன்.

சு. 11. சூரியனும் சுக்கிரனும் கூடி ஒன்பதாமிடத்திலிருக் கின்ற குருவைப் பார்க்கில் திருநாட்கள் சங்கம் இவைகளுக்குப் போகின்றவனும், பந்துக்கள் எருமைகள் ஆடுகள் யானைகள் இவை யுள்ளவனும், தள்ளப்பட்டவனும் இருப்பன்.

சு. 12. சூரியன் சனி இவர்களிருவரும் ஒன்றுகூடி ஒன்பதா மிடத்திலிருக்கின்ற குருவைப் பார்க்கில் தேசம் நகரம் சமூகம் சமுதாயம் இவைகளில் ஒன்றிற்குத் தலைவனுகவும், பிரசித்தி வித்தை குணம் தனம் இவையுள்ளவனுகவும், நிதிகளுக்கு அதிபதியாகவும், பணங்களைச் சம்பாதிக்கின்றவனுகவும் இருப்பான்.

சு. 13. சந்திரனும் சேவ்வாயும் கூடி ஒன்பதாமிடத்திலிருக் கின்ற குருவைப் பார்க்கில் சேனுதிபதியாகவும், சிரேஷ்டனுகவும் அரச அமைச்சனுகவும், பலவித சுகமுள்ளவனுகவும், சௌபாக்கிய முள்ளவனுகவும் இருப்பன்.

சு. 14. சந்திரனும் புதனும் கூடி ஒன்பதாமிடத்திலிருக்கின்ற குருவைப் பார்க்கில் உத்தம கிருகமும் படுக்கைச் சாமான்களும் உள்ளவனாகவும், தேஜசு உள்ளவனாகவும், ராஜசமத்துவனாகவும், எப்பொழுதும் புத்தி உணர்ச்சி உள்ளவனாகவும் இருப்பான்.

சு. 15. சந்திரனும் சுக்கிரனும் கூடி ஒன்பதாமிடத்திலிருக்கின்ற குருவைப்பார்க்கில் தனவானாகவும், காரியங்களில் ஊக்கமுள்ளவனாகவும், பராக்கிரமசாலியாகவும், பரதாரங்களைச் சேர்ந்தவனாகவும், சந்ததியற்றவனாகவும் இருப்பன்.

சு. 16. சந்திரனும் சனியும் கூடி ஒன்பதாமிடத்திலிருக்கின்ற குருவைப்பார்க்கில் நிரம்ப மதமுள்ளவனாகவும், அதிக தைரியத்தோடு வாழ்கின்றவனாகவும், அன்னிய தேசங்களில் சஞ்சரிப்பவனாகவும், விவகாரியாகவும், பொய் சொல்லுகின்றவனாகவும், ஒருகுணமும் இல்லாதவனாகவும் இருப்பன்.

சு. 17. செவ்வாயும் புதனும் கூடி ஒன்பதாமிடத்திலிருக்கும் குருவைப் பார்க்கில் எப்பொழுதும் அறிவுள்ளவனாகவும், நிரம்பிய நல்ல சுபாவத்தோடு கூடினவனாகவும், நல்ல குணங்களும் கல்வியும் வாக்கிய ஞானங்களும் உள்ளவனாகவும், மனரஞ்சிப்பான வேட ஆடம்பரங்களோடு கூடினவனாகவும் இருப்பன்.

சு. 18. செவ்வாயும் சுக்கிரனும் கூடி ஒன்பதாமிடத்திலிருக்கும் குருவைப்பார்க்கில் தனம் கல்வியுள்ளவனாகவும், அந்நிய தேசம் செல்கின்றவனாகவும், சத்துவகுணப் பிரதானியாகவும், நிரம்ப சாமர்த்தியவானாகவும், குரூரமுள்ளவனாகவும் இருப்பன்.

சு. 19. செவ்வாயும் சனியும் கூடி ஒன்பதாமிடத்திலிருக்கும் குருவைப்பார்க்கில் குலவிரோத செயல்கள் புரிபவனாகவும், விபரமின்றிப் பேசுகின்றவனாகவும், கெட்ட சுபாவமுள்ளவனாகவும், அன்னிய தேசத்தில் வசிக்கின்றவனாகவும், நிலையில்லாத மனிதனோடு சேர்ந்தவனாகவும் இருப்பன்.

சு. 20. புதனும் சுக்கிரனும் கூடி ஒன்பதாமிடத்திலிருக்கும் குருவைப்பார்க்கில் சிறப்பக்கல்வி தெரிகின்றவனும், நல்ல சுபாவமுள்ளவனும், வித்வானும், அழகுள்ளவனும், வாக்கியங்களை மனத்தினால் கிரகிக்கின்றவனும், நல்ல வேடப் பொருத்தமுள்ளவனும் இருப்பன்.

சு. 21. புதனும் சனியும் கூடி ஒன்பதாமிடத்திலிருக்கும் குருவைப்பார்க்கில் அதிருஷ்டமும் கல்வியும் வாக்குச் சாமர்த்திய

மும் அழகும் பராக்கிரமும் சுகமும் சிக்ஷாகுணமும் விநயமுமுள்ளவனாய் இருப்பன்.

சு. 22. சுக்கிரனும் சனியும் கூடி ஒன்பதாமிடத்திலிருக்கும் குருவைப்பார்க்கில் அரசர் பிரபுக்கள் இவர்களது அரசாங்கப் பிரதானியாகவும், நிரம்பப் பெருகிய சம்பத்தோடு கூடினவனாகவும் இருப்பன்.

சு. 23. ஒன்பதாமிடத்திலிருக்கின்ற குருவை அவ்வொன்பதாம் பாவாதிபனான கிரகம் பார்க்கில் பாக்கிய விருத்தி முதலிய குணங்கள் விசேஷமாயுண்டாகும். மேற்சொன்னபடி பாவாதிபன் பார்வை ஒன்பதாமிடத்திற்கு இல்லாவிடின் பூர்ணமாக உண்டாகாது என்க.

சு. 24. ஒன்பதாமிடத்தில் குருவிருந்து அதை மற்ற ஆறு கிரகங்கள் பார்க்கின் சிரேஷ்டமான ரூபம், நல்ல பலம், தேஜசு, நிரம்ப சம்பத்து, இவற்றோடு கூடிய அரசனாய் இருப்பன்.

சு. 25. ஒன்பதாமிடத்தில் பூர்ண சந்திரன் அல்லது சுபக்கிரகமான புதன் சுக்கிரன் குரு இவர்களில் ஒருவனோ பலரோ அல்லது எல்லாருமோ பூர்ணபலத்தோடிருப்பின் ராஜ்யம் பூமி இவைகளின் லாபமும், தனதான்யாபி விருத்தியும், தீர்க்காயுசும், தர்மமும், புஷ்டியும், மேலும் மேலும் அதிகமாய் அடையத்தக்கவனாய் இருப்பன்.

சு. 26. எல்லாப் பாபக்கிரகங்களும் ஒன்பதாமிடமான நீசத்திலோ சத்துருக்ஷேத்திரத்திலோ சுபர்களின் சம்பந்தம் பார்வை இல்லாமலிருந்தால் பலஹீனனாயும், தரித்திரனாயும் அபகீர்த்தியுள்ளவனாயும், அழுக்குள்ளவனாயும் இருப்பன். புத்திசாலியான தைவக்ஞன் ஒன்பதாமிடத்தின் ஆதிக்கியத்தையும் கெடுதலையும் நன்கறிந்து இப்பலன்களுக்கு நிறையுந்தன்மையையோ குறையுந்தன்மையையோ அறிந்து சொல்ல வேண்டும்.

சு. 27. பாபக்கிரகங்கள் தங்களுக்கு ஸ்வக்ஷேத்திரம் அல்லது மூலத்திரிகோண க்ஷேத்திரத்திரமாயுள்ள ஒன்பதாமிடத்தில் சுபக்கிரக பார்வையோடுகூடி இருப்பின் உத்தம குணங்களோடு பலவித சௌகரியமும் உடையவனாய்ச் சுகமாய் வாழ்வன்.

சு. 28. ஒன்பதாமிடத்தில் பூர்ண சந்திரன் இருப்பினும், அவ்விடத்தில் உச்சபலம் சேஷ்டாபலம் முதலிய முக்கிய பலத்தோடு

சனி செவ்வாய் புதன் இவர்கள் யாவருமோ சிலர் மாத்திரமோ இருப்பினும் ராஜயோகம் கிடைக்குமென்றறிக.

சு. 29. சூரியன் முதலான ஏழுகிரகங்களில் ஒருவர் உச்சராசியான ஒன்பதாமிடத்திலிருந்தால் சுவர்ணம் முதல் அநேக தனங்களோடு சிரேஷ்ட முள்ளவனாக இருப்பன். அவ்வொன்பதா மிடத்திற்குப் பலபராக்கிரம கிரகங்களான சுபக்கிரகங்களுடைய பார்வை ஏற்படின் சகல எதிரிகளையும் ஜெயிப்பவனாகவும், நல்ல கீர்த்தி நல்ல தேஜசு உள்ளவனாகவும் இருப்பன்.

சு. 30. ஒன்பதாமிடத்தில் இரண்டு கிரகங்கள் இருப்பதின் யோகம் சொல்லப்படுகின்றது.

ஒன்பதாமிடத்தில் சூரியனும் சந்திரனும் கூடி இருந்தால் அற்பாயுசுள்ளவனாகவும், நேத்திர வியாதியுள்ளவனாகவும், பணமும் சௌக்கியமும் உள்ளவனாகவும், கலகப் பிரியனாகவும் இருப்பன்.

சு. 31. ஒன்பதாமிடத்தில் சூரியனும் செவ்வாயுங்கூடி இருந்தால் நிரம்ப துக்கமுள்ளவனாகவும், கலகப்பிரியனாகவும், நிரம்ப கோபமுள்ளவனாகவும், அரசப்பிரியனாகவும், தைரியமுள்ளவனாகவும், சாமர்த்தியமுள்ளவனாகவும் இருப்பன்.

சு. 32. ஒன்பதாமிடத்தில் சூரியனும் புதனுங்கூடி இருப்பின் நிபுணத்துவமுடையவனாகவும், துக்கத்துடன் அதிக எதிரிகளுள்ளவனாகவும், பலவிதவியாதிகளால் இம்சையடைபவனாகவும் இருப்பன்.

சு. 33. ஒன்பதாமிடத்தில் சூரியனும் குருவுங் கூடியிருப்பின் தனவானாயும், தனசமிருத்தியுள்ள தகப்பனோடு கூடினவனாயும், தீர்க்காயுசுள்ளவனாயும், பூசிக்கப்படுகின்றவனாயும், நிரம்ப தைரிய சாலியாயும் இருப்பன்.

சு. 34. ஒன்பதாமிடத்தில் சூரியனும் சுக்கிரனுங் கூடியிருப்பின் வியாதியஸ்தனாயும், தன்னிஷ்டப்படி சுகந்த திரவியங்களும் மாலைகளும் ஆபரணங்களும் ஆடைகளும் அடைபவனாயும் இருப்பன்.

சு. 35. ஒன்பதாமிடத்தில் சூரியனும் சனியுங்கூடி இருப்பின் தனவானாயும், நேத்திரரோகமுள்ளவனாயும், தகப்பனுக்கு வியாதி அரிஷ்டம் இவை உண்டாக்குகின்றவனாயும், அற்பாயுசுடையவனாயும் இருப்பன்.

சு. 36. ஒன்பதாமிடத்தில் சந்திரனும் செவ்வாயுங்கூடி இருப்பின் மாதாவுக்கு நாசமுண்டு பண்ணுகின்றவனாயும், அங்கக் குறைவு

உள்ளவனும், சம்பத்து உள்ளவனும், சரீரத்தில் புண் காயம் உள்ளவனும் இருப்பன்.

சு. 37. ஒன்பதாமிடத்தில் சந்திரனும் புதனுங்கூடியிருப்பின் சாஸ்திரங்களில் தேர்ச்சி பெற்ற பண்டிதனும், அங்கக் குறைவு உள்ளவனும், மனிதரில் சிரேஷ்டமுள்ளவனும், பலவிதம் பேசுகின்றவனும், கேள்வி ஞானமுடையவனுமாயிருப்பன்.

சு. 38. ஒன்பதாமிடத்தில் சந்திரனும் குருவுங்கூடியிருப்பின் நிரம்ப சிரேஷ்டனும், கூடுதலான சௌபாக்கியங்களுள்ளவனும், அதிக சம்பத்து உள்ளவனும், எல்லாவிடத்திலும் சுகம் அநுபவிக்கின்றவனும், தீரனும் இருப்பன்.

சு. 39. ஒன்பதாமிடத்தில் சந்திரனும் சுக்கிரனுங்கூடியிருப்பின் வியாதியஸ்தனும், கெட்டசுபாவமுள்ள பெண்களின் புருஷனும், விருத்தியடைகின்றவனும், தகப்பனுடைய மாற்றூந் தாரத்திற்குப் பிறந்தவனும், மந்திரியின் அதீதனும் இருப்பன்.

சு. 40. ஒன்பதாமிடத்தில் சந்திரனும் சனியுங்கூடி இருப்பின் தர்மமில்லாதவனும், பாபமுள்ளவனும், ஜாதிப்பிரஷ்டம் செய்யப்பட்ட தாயையுடையவனும் இருப்பன்.

சு. 41. ஒன்பதாமிடத்தில் செவ்வாயும் புதனுங்கூடி இருப்பின் பிரதானியாகவும், சதா சம்பிரம முள்ளவனாகவும், சௌபாக்கியம் போகம் சாஸ்திர சாமர்த்தியம் இவைகள் உள்ளவனாகவும் இருப்பன்.

சு. 42. ஒன்பதாமிடத்தில் செவ்வாயும் குருவுங்கூடி இருப்பின் தனதானியங்களோடு கூடினவனும், பூசிக்கப்படுகின்றவனும், வியாதியஸ்தனும், கிலேசம் அடைபவனும், புண்களால் கஷ்டப்படுபவனுமாயிருப்பான்.

சு. 43. ஒன்பதாமிடத்தில் செவ்வாயும் சுக்கிரனுங்கூடி இருப்பின் அன்னியதேச சஞ்சார முள்ளவனும், விவகாரியாயும், குரூரனும், பெண்களைத் துவேஷிக்கின்றவனும், உபகாரச்சிந்தனையற்றவனும், பொய்யையே பிரதானமாய்க் கொள்பவனுமிருப்பன்.

சு. 44. ஒன்பதாமிடத்தில் செவ்வாயும் சனியுங்கூடியிருப்பின் பாபமுள்ளவனும், விருத்திஹீனமான ஆசாரங்களோடு கூடியவனும், பரஸ்திரீகளின் பிரஸ்தாப முள்ளவனும், தனம் சுகம் பந்துக்கள் சேர்க்கை இவைகளில்லாதவனும் இருப்பன்.

சு. 45. ஒன்பதாமிடத்தில் புதனும் குருவுங்கூடி யிருப்பின் சாஸ்திர அறிவுள்ளவனாகவும், பண்டிதனாகவும் தனவிருத்தியுடைய வனாகவும், இஷ்டப்படி பேசுகிறவனாகவும், கலைகளில் சாமர்த்திய வானாகவும், அநேக சக்தியுள்ளவனாகவும், மஹத்துவமுள்ளவனாகவும் இருப்பன்.

சு. 46. ஒன்பதாமிடத்தில் புதனும் சுக்கிரனுங்கூடியிருப்பின் பிரசித்திபெற்றவனும், நல்ல பாண்டித்தியம் தீரம் சௌபாக்கியம் விரும்பத்தக்கவாக்கு சாமர்த்தியம் நீதிசாஸ்திரங்களில் பிரியம் ஆகிய இவைகள் உள்ளவனும் இருப்பன்.

சு. 47. ஒன்பதாமிடத்தில் புதனும் சனியுங்கூடி இருப்பின் வியாதி அணுகுதல் தனம் களத்திராதி இஷ்டவஸ்துக்கள் சாமர்த்தியம் இவையில்லாதவனும், சஜ்ஜனங்களால் நிந்திக்கப்பட்டவனும், அநேக இதிகாசங்கள் (கதைகள்) தெரிகின்றவனும் இருப்பன்.

சு. 48. ஒன்பதாமிடத்தில் குருவும் சுக்கிரனுங்கூடி இருப்பின் அரசன் அல்லது அரசசமானமுள்ளவனும், தீர்க்காயுளுள்ளவனும், கர்த்துரு கர்மாதிகாரங்களோடு வேண்டியவிதம் பேசுகின்றவனும், பலவிதத்தினால் சுகசமிருத்தியடைந்தவனும் இருப்பன்.

சு. 49. ஒன்பதாமிடத்தில் குருவும் சனியுங்கூடி இருப்பின் தனம் ரத்தினம் உள்ளவனும், பூஜிக்கப்படுதல் வியாதியடைதல் சுபஜனங்களைப்பிரிந்திருத்தல் ஆகிய இவைகள் அடைபவனும் இருப்பன்.

சு. 50. ஒன்பதாமிடத்தில் சுக்கிரனும் சனியுங் கூடியிருப்பின் வியாதியுள்ளவனும், அநேக குழந்தைகள் அரசப்பிரீதி கீர்த்தி அநேக நல்ல சுபாவங்கள் ஆகிய இவையுள்ளவனும் இருப்பன்.

சு. 51. ஒன்பதாம் பாவத்தில் அப்பாவாதிபன் இருத்தலும் பார்த்தலும் அங்குள்ள கிரகங்களின் பலமும் ஆகிய இவைகளை நன் கறிந்து புத்திமானான சோதிடன் பலனைச் சொல்ல வேண்டும்.

சு. 52. இனி ஒன்பதாமிடத்தில் மூன்று கிரகங்கள் இருப்பதின் பலன் சொல்லப்படுகின்றது.

ஒன்பதாமிடத்தில் சூரியனும் சந்திரனும் செவ்வாயும் கூடி இருப்பின் உடம்பில் புண் உள்ளவனும், அழகின்மை இளமையில் மாதா பிதாவை இழத்தல் மதிப்பின்மை அந்நியரால் நீக்கப்படுதல் துன்புறுத்தும் குணம் ஆகிய இவை உள்ளவனும் இருப்பன்.

சு. 53. ஒன்பதாமிடத்தில் சூரியனும் சந்திரனும் புதனுங்கூடி இருப்பின் புருஷத்துவமில்லாதவனும், நிரம்ப துக்கமும் ஜனங்களுக்கு விருப்பமின்மையும், பராக்கிரமம் இன்மையும், உண்மையுரையாமையும் பொய் பேசுதலும் உடையவனும் இருப்பன்.

சு. 54. ஒன்பதாமிடத்தில் சூரியனும் சந்திரனும் குருவும் கூடியிருப்பின் உத்தம புருடனும், வாகனம் தனம் சுகம் இவையுள்ளவனும் இருப்பன்.

சு. 55. ஒன்பதாமிடத்தில் சூரியனும் சந்திரனும் சுக்கிரனும் கூடி இருப்பின் பெண்களின் பொருட்டு சகல சுகங்களையும் இழந்தவனவன். பின்னர் "ஊக்கம் உயர்விக்கும்" என்பதை அநுசரித்து மீண்டும் அவைகளைப் பெறுபவனும் அரசனால்தனநிவெகுமதி சந்தோஷம் அறிமுகம் பிரிய சம்பாஷணம் இவைகளையுடையவனுமாவன்.

சு. 56. ஒன்பதாமிடத்தில் சூரியன் சந்திரன் சனி இவர்கள் கூடியிருப்பின் அதிக பலம் குரூர ஆசாரம் இவையுள்ளவனும், அடுத்தவருக்காக அடிமை வேலை செய்பவனும், ஜனங்களால் பொறுமைப் படத்தக்கவனும் இருப்பன்.

சு. 57. ஒன்பதாமிடத்தில் சூரியன் செவ்வாய் புதன் இவர்கள் கூடி இருப்பின் விருப்பத்தோடு பேசுகின்றவனும், சர்ப்பத்தையொத்த அதிக கோபமுள்ளவனும், யுத்தத்தில் பிரியமுள்ளவனும், குரூரனும், அந்நிய நாட்டில் தாமதித்து வசிப்பவனும் இருப்பன்.

சு. 58. ஒன்பதாமிடத்தில் சூரியன் செவ்வாய் குரு இவர்கள் கூடியிருப்பின் சதா உத்சாக முள்ளவனும், தேவர்கள் பிதுருக்கள் இவர்களைப் பூசிப்பவனும், வம்சாபிவிருத்தியான மனைவியோடு கூடினவனும், நல்ல குணமுள்ளவனும் இருப்பான்.

சு. 59. ஒன்பதாமிடத்தில் சூரியன் செவ்வாய் சுக்கிரன் இவர்கள் கூடி இருப்பின் கலகப் பிரியனும், நற்குலத்தில் ஜனித்தவனும் கன்னிகைகளால் நிந்திக்கப்படுகின்றவனும், நிச்சய மில்லாதவனும், அவமதிக்கப்படுபவனும் இருப்பன்.

சு. 60. ஒன்பதாமிடத்தில் சூரியன் செவ்வாய் சனி இவர்கள் கூடியிருப்பின் சஹஜமான செயல் புரிபவனும், கொஞ்சமும் பிரயோசன மில்லாதவனும், ஜனங்களால் பொறுமைப் படத்தக்கவனும்

அசத்தியம் கபடம் இவைகளில் விருப்ப முள்ளவனும், குரூரனும், இளமையிலேயே தகப்பனைவிட்டுப் பிரிந்தவனும் இருப்பன்.

சு. 61. ஒன்பதாமிடத்தில் சூரியன் புதன் குரு இவர்கள் கூடியிருப்பின் பாக்கியம், தனம், சௌபாக்கியம், அரச அநுகூலம், ஆடை முதலிய அலங்காரம், நல்லவேடம், நிரம்பதீரம், ஆகிய இவைகள் உள்ளவனும் இருப்பன்.

சு. 62: ஒன்பதாமிடத்தில் சூரியன் புதன் சுக்கிரன் இவர்கள் கூடியிருப்பின் பிரசித்தி, அழகு, எதிரிக்கூட்டத்தை நாசமாக்குதல், அரச சமம், பலம் ஆகிய இவைகளுள்ளவனும் இருப்பன்.

சு. 63. ஒன்பதாமிடத்தில் சூரியன் புதன் சனி இவர்கள் கூடியிருப்பின் பரஸ்திரீகளின் விருப்பம், பாபம், அன்னிய தேசவாசம், சாமர்த்தியம், கொஞ்சமும் லஜ்ஜையின்மை, கபடம், தெய்வபக்தியின்மை ஆகிய இவைகளுள்ளவனும் இருப்பன்.

சு. 64. ஒன்பதாமிடத்தில் சூரியன்குரு சுக்கிரன் இவர்கள் கூடியிருப்பின் நல்ல பாண்டித்தியம், தேககாந்தி, வீரத்தனம், நல்ல புத்தி, அறிவு ஆகிய இவைகள் உள்ளவனாகவும், அநேக தேசாதிபதியாகவும் இருப்பன்.

சு. 65. ஒன்பதாமிடத்தில் சூரியன் குரு சனி இவர்கள் கூடி இருப்பின் சிரேஷ்ட பலம், அரச பதவி, அநேக குணங்கள், தன சமிருத்தி ஆகிய இவைகள் உள்ளவனுயிருப்பன்.

சு. 66. ஒன்பதாமிடத்தில் சூரியன் சுக்கிரன் சனி இவர்கள் கூடியிருப்பின் தேக காந்தியின்மை, அதற்கு எதிரான அழுக்குடைமை, அரச தண்டனை யடைதல், திரவியமின்மை, மூர்க்கத் தன்மை ஆகிய இவை யுள்ளவனும் இருப்பன்.

சு. 67. ஒன்பதாமிடத்தில் சந்திரன் செவ்வாய் புதன் இவர்கள் கூடி யிருப்பின் பணம், சுவர்ணம், ரத்னம், இளமையில் பலவித நாசத்தின் பொருட்டுத் துக்கம் ஆகிய இவைகள் உள்ளவனும் இருப்பன்.

சு. 68. ஒன்பதாமிடத்தில் சந்திரன் செவ்வாய் குரு இவர்கள் கூடியிருப்பின் இந்திரிய ஜயம், அறிவு, தேவர், குரு இவர்களிடத்தில் பக்தி, சம்பத்து, சௌபாக்கியம் ஆகிய இவைகள் உள்ளவனும் இருப்பன்.

சு. 69. ஒன்பதாமிடத்தில் சந்திரன் செவ்வாய் சுக்கிரன் இவர்கள் கூடியிருப்பின் உடம்பிற்புண், அழகின்மை, நிரம்பப் புசித்தல், ஸ்திரீகள் விருப்பங்கொள்ளுந்தன்மை, ஸ்திரீகளுக்கு உட்பட்டு நடத்தல், ஸ்திரீகளினால் திரவிய நஷ்டமடைதல் ஆகிய இவைகள் உடையவனாய் இருப்பன்.

சு. 70. ஒன்பதாமிடத்தில் சந்திரன் செவ்வாய் சனி இவர்கள் கூடியிருப்பின் இளமையில் தாயாரால் தள்ளப்படுதல், பிரயோசனமில்லாத தன்மை, தாய் குலத்திற்குத் தோஷம் செய்தல், மனிதர்கள் நிந்திக்கத்தக்கபடி பணிபுரிதல் ஆகிய இவைகள் உடையவனாய் இருப்பன்.

சு. 71. ஒன்பதாமிடத்தில் சந்திரன் புதன் குரு இவர்கள் கூடியிருப்பின் குலம் குடும்பம் இவைகளை மேன்மைப்படுத்தல், பலவிதமான கலைகளைக் கற்பித்தல், பந்துக்களோடு கூடியிருத்தல், அரச பதவி, ஆகிய இவைகளோடு கூடிய அநேக சாதனங்கள் உள்ளவனாய் இருப்பன்.

சு. 72. ஒன்பதாமிடத்தில் சந்திரன் புதன் சுக்கிரன் இவர்கள் கூடியிருப்பின் தந்தை இரண்டாம் மணம் புரிவர். இவன் சந்தோஷம் சிறந்த மனமுடையானாவன். அநேக உறவினர் நல்லுரையுரைப்பர்.

சு. 73. ஒன்பதாமிடத்தில் சந்திரன் புதன் சனி இவர்கள் கூடியிருப்பின் குரூரச் செயல் புரிதல், அதிக பராக்கிரமம், அழுக்கு, நிந்திக்கும் சுபாவம், யுத்தத்தில் அபஜெயப்படுதல் ஆகிய இவையுள்ளவனாய் இருப்பன்.

சு. 74. ஒன்பதாமிடத்தில் சந்திரன் குரு சுக்கிரன் இவர்கள் கூடியிருப்பின் அரச சமம் பெறுவன். அரச குலத்தில் பிறந்திருப்பின் கட்டாயம் அரச பதவியும் அடைவன்.

சு. 75. ஒன்பதாமிடத்தில் சந்திரன் குரு சனி இவர்கள் கூடியிருப்பின் இஷ்ட அநுசரணைப்படி பேசுதல், சத்தியம் காப்பாற்றல், சுபாவ குணம், பிரசித்தி, எல்லாச் சாஸ்திரங்களிலும் சாமர்த்தியம் ஆகிய இவைகளையடைவான்.

சு. 76. ஒன்பதாமிடத்தில் சந்திரன் சுக்கிரன் சனி இவர்கள் கூடியிருப்பின் விவசாயங்கொண்டு வாழ்க்கை நடத்தல், கெட்ட பிரவிருத்தியில் விருப்பம், பாபமின்மை, அரசனை யொப்பச் செயல்கள் புரிதல், லோகப்பிரசித்தி ஆகிய இவைகள் உள்ளவனாய் இருப்பன்.

சு. 77. ஒன்பதாமிடத்தில் செவ்வாய் புதன் குரு இவர்கள் கூடியிருப்பின் அழகு, ஒருவித துக்கங்களின்மை, வித்துவத்தன்மை, வாக்குறுதி, நல்லவர் தன்மை இவைகளும், மண்டலாதிபத்தியமும் உடையானுவன்.

சு. 78. ஒன்பதாமிடத்தில் செவ்வாய் புதன் சுக்கிரன் இவர்கள் கூடியிருப்பின் அநேக தேசாதிபதியாயும், பிரசித்தனுயும், அரசனால் சன்மானம் தானம் இவைகள் பெறுபவனுயும், குரூரனுயும், சஜ்ஜனங்களால் பாமார்த்திக (உண்மை) மென்று அறியும்படி யானவனுமாயும் இருப்பன்.

சு. 79. ஒன்பதாமிடத்தில் செவ்வாய் புதன் சனி இவர்கள் கூடியிருப்பின் அந்நியரை வஞ்சித்தலில் சாமர்த்தியம், நிரம்ப ஞானசூனியத்தன்மை ஒரு சாஸ்திரத்திலும் பயிற்சியின்மை, அந்நியர்களுக்குட்படுதல், ஒருவகையிலும் கிரம மில்லாத தன்மை, மூர்க்கத்தன்மை ஆகிய இக்குணங்களுள்ளவனுய் இருப்பன்.

சு. 80. ஒன்பதாமிடத்தில் புதன் குரு சுக்கிரன் இவர்கள் கூடியிருப்பின் தேவர்கள் சமம், பற்றற்றதன்மை, (நிர்மலம்) பிரசித்தி, அரசபதவி, அரச சமப்பதவி, வித்துவத்தன்மை, தர்மம் ஆகிய இவைகள் உள்ளவனுய் இருப்பன்.

சு. 81. ஒன்பதாமிடத்தில் புதன் சுக்கிரன் சனி இவர்கள் கூடியிருப்பின் நிரம்ப நற்புத்தி, பிரசித்தி, நிரம்ப மனோஹரமாய் உரையாடுந்தன்மை, சுகம் ஆகிய இவைகள் உடையவனுய் இருப்பன்.

சு. 82. ஒன்பதாமிடத்தில் குரு சுக்கிரன் சனி இவர்கள் கூடியிருப்பின் அன்னபானுதி சாதனங்கள் சம்பத்து இவைகளின் சமிருத்தி யுள்ளவனுகவும், சௌபாக்கியம் சுகம் நல்லவடிவம் ஆகிய இவையுள்ளவனுகவும் இருப்பன்.

சு. 83. இனி ஒன்பதாமிடத்தில் நான்கு கிரகங்கள் கூடியிருப்பதின் பலன் சொல்லப்படுகின்றது.

சூரியன் சந்திரன் செவ்வாய் புதன் இவர்கள் கூடி ஒன்பதாமிடத்திலிருப்பின் தனம், வேதமுதலான கலைகளில் பிரியம், நிபுணத்துவம், சௌபாக்கியம், அரசனுல் விருப்பப்படுதல் ஆகிய இவையுண்டாம்.

சு. 84. ஒன்பதாமிடத்தில் சூரியன் சந்திரன் புதன் குரு இவர்கள் கூடியிருப்பின் சமபதவி, நிலைப்பான தன்மை, அரச பூஜிதம் சந்தோஷம் ஆகிய இவைகளுள்ளவனுய் இருப்பன்.

சு. 85. ஒன்பதாமிடத்தில் சூரியன் சந்திரன் செவ்வாய் சுக்கிரன் இவர்கள் கூடியிருப்பின் கபட சாமர்த்தியம், தன் மனைவியின் மூலம் சந்தோஷித்தல், அநேக விதத்தில் நீசச் செயல் புரிதல் ஆகிய இவை யுள்ளவனாய் இருப்பன்.

சு. 86. ஒன்பதாமிடத்தில் சூரியன் சந்திரன் புதன் சுக்கிரன் இவர்கள் கூடி யிருப்பின் நிரம்ப தனமும் ஐசுவரியமும் தர்மமும் ஆகிய இவையுடையவனும், தன்னிஷ்டப்படி பேசுகின்றவனும், சாந்தமுள்ளவனும் இருப்பன்.

சு. 87. ஒன்பதாமிடத்தில் சூரியன் சந்திரன் புதன் சனி இவர்கள் கூடி யிருப்பின் தனம் சுகம் இல்லாதவனும், தரித்திரம் பாக்கியக்குறைவு அந்நியதேச வாசம் ஆகிய இவையுள்ளவனும் இருப்பன்.

சு. 88. ஒன்பதாமிடத்தில் சூரியன் செவ்வாய் புதன் குரு இவர்கள் கூடியிருப்பின் தேவபூஜை பிதுருபூஜை இவைகளில் பிரியம், தனம், திரவியமுள்ள மனைவி, குணம் ஆகிய இவைகளையுடையவனவன்.

சு. 89. ஒன்பதாமிடத்தில் சூரியன் செவ்வாய் புதன் சுக்கிரன் இவர்கள் கூடியிருப்பின் குரூரம், சௌபாக்கியம், யோசனையின்றி எச்செயலும் புரிதல், வறுமை, எதிரிகளால் நசுக்கப்படுந் தன்மை ஆகிய இவைகளையுடையவனவன்.

சு. 90. ஒன்பதாமிடத்தில் சூரியன் செவ்வாய் புதன் சனி இவர்கள் கூடியிருப்பின் பரஸ்திரீ பிரியனும், சகல சம்பாத்தியங்களையும் நாசம் செய்து அழித்தவனும், வறுமையுள்ளவனும் இருப்பன்.

சு. 91. ஒன்பதாமிடத்தில் சூரியன் செவ்வாய் குரு சுக்கிரன் இவர்கள் கூடியிருப்பின் உலகத்தாரால் நிந்திக்கப்படுதல், தன் தாக நிமித்தம் நிரம்ப பீடிக்கப்படுதல், கன்னிகைகளை நிந்தித்தல், மன ஒருமை இல்லாமலிருத்தல், அல்லது " ஒறுத்தார்க்கொரு நாளை யின்பம் பொறுத்தார்க்குப் பொன்றுந் துணையும் புகழ் " என்னும் வள்ளுவனார் வாக்குக்கு நேர்மாற்றமான மன ஒறுப்பின்மை ஆகிய இவைகளை யுடையவனாய் இருப்பான்.

சு. 92. ஒன்பதாமிடத்தில் சூரியன் செவ்வாய் குரு சனி இவர்கள் கூடியிருப்பின் சுகமின்மை, எச்சமயமும் உற்சாக குணம்,

குரூரம், பராக்கிரமம், அதிகமான சௌர்யம் ஆகிய இவைகளுள்ளவனாய் இருப்பன்.

சு. 93. ஒன்பதாமிடத்தில் சூரியன் புதன் குரு சுக்கிரன் இவர்கள் கூடியிருப்பின் உத்தம புருடத்துவம், சுவர்ணாதி தனங்கள், ஐசுவரியங்கள் ஆகிய இவைகள் உடையவனாய் இருப்பன்.

சு. 94. ஒன்பதாமிடத்தில் சூரியன் புதன் குரு சனி இவர்கள் கூடியிருப்பின் வறுமை, பாபம், பரஸ்திரீ விருப்பம், அவமானம், நீசச் செயல் புரிதல் ஆகிய இவைகள் உள்ளவனாய் இருப்பன்.

சு. 95. ஒன்பதாமிடத்தில் சூரியன் புதன் சுக்கிரன் சனி இவர்கள் கூடியிருப்பின் சௌபாக்கியம், சம்பத்து, உண்மையுரைத்தல், உலகப்பிரசித்தி ஆகிய இவையுள்ளவனாய் இருப்பன்.

சு. 96. ஒன்பதாமிடத்தில் சூரியன் குரு சுக்கிரன் சனி இவர்கள் கூடியிருப்பின் உண்மையுடையவனா யிருப்பதோடு நற்சொற்களையுடையவனாயும், குரு அந்தணர் விருந்தினர் அதிதி இவர்கள் பக்தனாயும் இருப்பன்.

சு. 97. ஒன்பதாமிடத்தில் சந்திரன் செவ்வாய் புதன் குரு இவர்கள் கூடியிருப்பின் வாழ்க்கை உபயோகத்துக்குரிய சாமான்கள் உள்ளவனாயும், இளமையில் தாயை விட்டுப் பிரிந்தவனாயும், தனமுள்ளவனாயும் இருப்பன்.

சு. 98. ஒன்பதாமிடத்தில் சந்திரன் செவ்வாய் புதன் சுக்கிரன் இவர்கள் கூடியிருப்பின் தவஞ் செய்தல், பிரசித்தி, வாக்குச் சாதுரியம், அநேக தானஞ் செய்தல், அறிவு, குடும்ப வாழ்க்கையை வெறுத்துப் பரலோக கதி விருப்பம் இவைகளுள்ளவனாய் இருப்பன்.

சு. 99. ஒன்பதாமிடத்தில் சந்திரன் செவ்வாய் புதன் சனி இவர்கள் கூடியிருப்பின் காரியாதிகளில் பிரியமில்லாதவனாயும், வறுமை லோபித்தனம் கபடவித்தை சாமர்த்தியம் பரஸ்திரீ விருப்பம் ஆகிய இவைகளுடையவனாயும் இருப்பன்.

சு. 100. ஒன்பதாமிடத்தில் சந்திரன் செவ்வாய் குரு சுக்கிரன் இவர்கள் கூடியிருப்பின் ராஜவம்ச கர்த்தாவாயும், பிரதானித்துவம், நிரம்ப பராக்கிரம சாலித்தன்மை, நிரம்பப் பெருகிய கல்வி, பணம், பிரசித்தி, பகுஜன சம்மதம் ஆகிய இக்குணங்களுடையவனாய் இருப்பன்.

சு. 101. ஒன்பதாமிடத்தில் சந்திரன் செவ்வாய் குரு சனி இவர்கள் கூடியிருப்பின் அதிகமான தண்ணீர்த்தாகம், கலகப்பிரியம், கணக்கற்ற சௌபாக்கியம், வீட்டிற்குவேண்டிய சாமான்கள் ஆகிய இவைகள் உள்ளவனுய் இருப்பன்.

சு. 102. ஒன்பதாமிடத்தில் சந்திரன் செவ்வாய் சுக்கிரன் சனி இவர்கள் கூடியிருப்பின் குரூரம், பாபம், இந்திர ஜாலாதி கபட வித்தை அறிதல், சுத்தம், ஆசார மரியாதைகளின்மை ஆகிய இவைகளுடையவனுயும் இருப்பன்.

சு. 103. ஒன்பதாமிடத்தில் சந்திரன் புதன் குரு சுக்கிரன் இவர்கள் கூடியிருப்பின் தனம், தர்மகாரிய சிந்தனை, எல்லாக் கலைகளிலும் சாமர்த்தியம், நல்ல படிப்பு, பிரசித்தி, சம்பாத்தியம் ஆகிய இவைகள் உள்ளவனுய் இருப்பன்.

சு. 104-105. ஒன்பதாமிடத்தில் சந்திரன் புதன் குரு சுக்கிரன் இவர்கள் கூடியிருப்பதினுலுண்டான பலன்கள் முன் 103-ஆம் சுலோகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன எனினும் இச்சுலோகத்திலும் திரும்பவும் சொல்லப்படுகின்றன. சுபக்கிரகங்கள் நால்வரும்கூடி ஒன்பதாமிடத்திலிருப்பது எல்லாவிதத்திலும் நன்மையாகும். இச்சுலோகங்களுடைய சாரம்கீழ் சொல்லப்படும்.

ஒன்பதாமிடத்தில் சந்திரன் புதன் குரு சுக்கிரன் இவர்கள் கூடியிருப்பின் அறிவு, நற்புத்தி, அரச பதவி, குலசிரேஷ்டம், கெட்டிக்காரத்தனம், நிரம்பதனம், அழகு, நிரம்பப் பிரசித்தி இவைகளுண்டாமென்பதே 104-ஆம் சுலோகத்தின் தாத்பரியமாம்.

இந்த நான்கு கிரகங்களும் கூடி ஒன்பதாமிடத்தில் இருப்பின் சர்வ பாக்கியங்களும் நிறைந்தவனுயும், மக்களில் அதிக உத்தமனுயும் இருப்பானென்பதே 105-ஆம் சுலோகத்தின் தாத்பரியமாம்.

சு. 106. ஒன்பதாமிடத்தில் சந்திரன் புதன் குரு சனி இவர்கள் கூடியிருப்பின் நல்லநயம், சமிருத்தி, நீதிகளின் அறிவு கூடுதல், வஸ்திராதி அலங்காரங்கொண்டு நல்லவேடம் புனைதல் ஆகிய இவையுள்ளவனுய் இருப்பன்.

சு. 107. ஒன்பதாமிடத்தில் சந்திரன் புதன் சுக்கிரன் சனி இவர்கள் கூடியிருப்பின் அதிக புத்தியுள்ளவனுயும், நிரம்ப குரூரத்தன்மையுடையவனுயும், ஜனங்களுடைய நீதிகளில் சாமர்த்தியமும் திருப்தியு முடையவனுயும், அதிக செல்வமுடையவனுயு மிருப்பன்.

சு. 108. ஒன்பதாமிடத்தில் சந்திரன் குரு சுக்கிரன் சனி இவர்கள் கூடியிருப்பின் அநேக மாய்கைகளுடன் (கபடவித்தை) கூடினவனும், நிரம்ப குரூர முள்ளவனும், ஒருவராலும் ஜயிக்க முடியாததன்மையுள்ளவனும், தீரனும் இருப்பன்.

சு. 109. ஒன்பதாமிடத்தில் சந்திரன் புதன் குரு சனி இவர்கள் கூடியிருப்பின் சத்துரு சமூக ஜெயம், யுத்த விஷயத்தில் நிரம்பிய குரூரம் அதிகமான தீரம் இவைகள் உள்ளவனுமிருப்பன்.

சு. 110. ஒன்பதாமிடத்தில் சந்திரன் புதன் சுக்கிரன் சனி இவர்கள் கூடியிருப்பின் உடன் பிறந்தவர்களுள்ளவனும், நல்ல சுபாவமுடையவனும், தனவானும், பக்தியுள்ளவனும் இருப்பன்.

சு. 111. ஒன்பதாமிடத்தில் சந்திரன் குரு சுக்கிரன் சனி இவர்கள் கூடியிருப்பின் பண மின்மை, பிரயோசனமின்மை, தயையின்மை, விசாரமின்மை, சௌகரிய மின்மை, தைரிய மின்மை ஆகிய இவைகளில்லாதவனாய் இருப்பன்.

சு. 112. பாவாத்தியாயத்தில் சூரியன் முதல் ஒவ்வொரு கிரகமும் ஒன்பாதாமிடத்திலிருந்த பலன் சொல்லப்பட்டிருக்கின்றது. எனினும் 2, 3, 4 கிரகங்கள் 9 ஆமிடத்தில் சேர்ந்திருந்த பலன்களையும் இவ்வத்தியாயத்தில் சொல்லியுள்ளார். ஐந்துகிரகங்களின் சேர்க்கையிருந்தால் சங்கியாயோகத்தின் சூலயோகாதி தோஷம் வரும். அவ்வாறாயின் அந்தப்பலன் பாக்கியத்திற்குக் குறைவையுண்டாக்கும். புதன் 3, 4, 5, 6, 7 கிரகங்களோடு சேர்ந்து ஒன்பதாமிடத்திலிருப்பின் விசுவாசமுள்ளவனாகவும், தனம் அரசசமத்துவம் இவைகள் உள்ளவனாகவு மிருப்பன்.

சு. 113. குருவோடாவது புதனோடாவது சேராமல் ஒன்பதாமிடத்தில் இருக்கின்ற மூன்று முதலிய கூட்டுக்கிரகங்களால் வியாதி வடிவுபங்கம் ஜனங்களின் பிரிவு பந்துக்களால் பீடித்தல் வறுமை இவைகளுண்டாமென்க.

சு. 114. பாதராயணாதி பூர்வாசாரியர்களால் சொல்லப்பட்ட ஒன்பதாம் பாவத்தைப் பற்றியுள்ள பல பேதங்கள் இங்கு சொல்லப்பட்டிருக்கின்றன. இதிற் சொல்லாத பாவங்களை புத்திமான்களான தைவக்ஞர்கள் (ஜோதிடர்கள்) பாவம் பாவாதிபன் கிரகங்களின் சம்பந்தம் பார்வை இவைகளைக் கொண்டு நன்கு ஆராய்ந்து சொல்ல வேண்டும்.

இருபத்திரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

# முப்பத்து மூன்ருவது அத்தியாயம்.

## கர்ம பாக்கிய பாவ சிந்தை.

சூ. 1. இலக்கினத்திற்குப் பத்தாமிடம் கர்மஸ்தானமாகும். அவ்விராசியைக்கொண்டும், அவ்வதிபனைக்கொண்டும், அவ்விடம் இருக்கின்றதும் பார்ப்பதுமான கிரகங்களைக்கொண்டும், பெரியோர்களான மகருஷிகள் கர்ம பலன்களை விஸ்தரித்துச் சொல்லியுள்ளதை நான் இங்கு தெளிவாய்ச் சொல்லுகின்றேன்.

சூ. 2. ஜனன சமயம் இலக்கினம் சந்திரலக்கினம் இவற்றுள் எதற்குப் பல மிருக்கின்றதெதென வறிந்து அவற்றிற்குப் பத்தாமிராசி கர்மஸ்தானமென்றும், அதனுடைய சுபாவத்தைப் போன்ற கர்ம பலனை அநுபவிக்க வேண்டுமென்றும் அறிக. அப்பத்தாம் பாவாதிபதி பலஹீனனுயின் கர்மஹானியும், பலாதிக்கியமாயின் கர்மபுஷ்டியும் உண்டாகு மென்ப.

சூ. 3, 4, 5. ஜனனகாலத்தில் உதய லக்கினத்திற்குப் பத்தாமிராசி எதுவென்று அறிந்து அதைக்கொண்டு ஜாதகனின் கர்மப் பிராப்தியைச் சொல்லவேண்டும். 10-ஆமிராசி ஜாங்கலமோ-ஆநூபமோ-சாதாரணமோ-கிராம்யமோ-ஆரண்யமோ-சுபவிராசியோ - பாபவிராசியோ - துவிபாதவிராசியோ - சதுஷ்பாதவிராசியோ-சர-ஸ்திர-உபயவிராசியோ என இவற்றின் பேதத்தையும் அவ்வவற்றின் வடிவம் சுபாவம் அவஸ்தை ஆகிருதி பிரகிருதி முதலியவைகளையும் நன்கு நிச்சயித்து அவ்வவற்றின் துல்லியமான ஸ்தலத்துக்கும் தேசத்திற்கும் தக்கபடி கர்மப்பிராப்தி சம்பவிக்குமென்றுசொல்லவேண்டும். இராசிவடிவங்கள் சமக்ஞா அத்தியாயத்தில் தெளிவாய்க் கூறப்பெற்றுள்ளன. ஆங்குக் கண்டுகொள்க.

அதிக காற்றும்-அதியுஷ்ணமும்-நீரில்லாத வனபர்வதங்களும்-பூகம்பமும்-அக்கினி மலையும் முதலானவைகளுள்ள கிழக்குப் பிரதேசங்கள் ஜாங்கலம் எனவும், சமுத்திரம் குளம் ஏரி ஜலசமிருத்தி குளிர்ச்சி சீதளம் சீதளக்காற்று பனிக்கட்டி முதலானவையுள்ள பிரதேசங்கள் ஆநூபமெனவும் பெயர் பெறும். இவ்வகை யிலக்கணங்களின் ஆதிக்கியம் சாமான்யத்துவம் அல்பத்துவம் இவைகளைக் கொண்டு மேற்சொன்ன ஜாங்கலாநுபவங்கள் மூன்ருகப் பிரிக்கப்படு

கின்றன. ஜாங்கலாநுபவ லட்சணங்களுக்கு மத்தியிலுள்ள நாடுகள் சாதாரணம் என்று சொல்லப்படுகின்றன.

சு. 6. இலக்கினம் சந்திர லக்கினம் இவைகளின் 10-வது ராசி பாவங்கொண்டு கர்மத்தின் சித்தியையும் உபஜீவன மார்க்கத்தையும் சொல்லவேண்டு மென்ப.

சு. 7. முன் 31-ஆம் அத்தியாயத்தில் 10 ஆமிடத்திலிருக்கின்ற கிரகங்களின் பலன்கள் சொல்லப்பெற்றுள்ளன. இப்பொழுதும் கர்மத்தினுடைய சித்தியை நிர்ணயிக்க வேண்டியதின் நிமித்தம் இவ்வத்தியாயத்தில் சந்திரனுக்கு 10-ஆமிடத்திலிருக்கின்ற கிரகங்களின் விசேட பலன்கள் தெளிவாய்ச் சொல்லப்படுகின்றன.

சு. 8. ஜனனகாலத்தில் சந்திரன் இருக்கும் ராசிக்குப் பத்தாமிடத்தில் சூரியன் இருப்பின் ஆரம்பிக்கும் காரியத்திற்கு அநுகூலமும், தனசமிருத்தி, சௌரிய விசேஷம், அரசபதவி, சிரேஷ்டத்துவம், அநேக ஜனங்களை யநுசரிக்குந் தன்மை, புஷ்டி, ஆகிய இவைகள் உள்ளவனாய் இருப்பான்.

சு. 9. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் செவ்வாய் இருப்பின் படையெடுத்தல், முதலிய பலாத்காரத் தொழில் செய்தல், மிலேச்ச பூமியில் வசித்தல், விஷயங்களில் பிரியம், குரூரத்தன்மை, நீசர்களின் செய்கை ஆகிய இவைகளுள்ளவனாய் இருப்பான்.

சு. 10. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் புதன் இருப்பின் வித்வத்தன்மை, அதிக பணம், சாஸ்திரப்பயிற்சி, அரசசேனாதிபதித்துவம், பிரசித்தி, பலவிதமான சிற்பக்கலைகளின் ஆராய்ச்சி ஆகிய இவைகளுள்ளவனாயும், புத்திமானாயும் இருப்பான்.

சு. 11. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் குரு இருப்பின் காரியங்களை நிரம்பச்செய்தல், தார்மிஷ்டத்துவம், நிரம்பதன புஷ்டி, நல்லபிரவிருத்தி, பிரசித்தியான குணம், அரச அமைச்ச பதவி ஆகிய இவைகளுள்ளவனாய் இருப்பான்.

சு. 12. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் சுக்கிரன் இருப்பின் சௌபாக்கியம், அழகு, காரியாரம்பம் செய்தல், பிரபு பதவி, ராஜபூச்சியம் ஆகிய இவைகளுள்ளவனாய் இருப்பான்.

சு. 13. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் சனி இருப்பின் வியாதிகளோடு கூடிய சரீரம், பணமின்மை, சதாதுக்கம், சந்ததியின்மை,

காரியங்களில் எப்போதும் பிரமிப்பு ஆகிய இவைகளுள்ளவனுய் இருப்பான்.

சு. 14. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் சூரியனும் செவ்வாயும் கூடி இருப்பின் தொழில் செய்து கூலிபெறுதல், காசம் க்ஷயம் முதலிய ரோகங்களடைதல், ஜோதிஷ சாஸ்திர ஞானம், இலக்கணம் சொல்லுதல், சித்தாந்தம் அறிதல் ஆகிய இவைகளுள்ளவனுய் இருப்பான்.

சு. 15. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் சூரியனும் புதனும் கூடி இருப்பின் ஆடையாபரணம், வியாபாரம், ஜலமூலமாசத் திரவியத்தையடைந்து [போட்டு கப்பல் தோணி இவைகள் மூலமாயாவது அல்லது உப்பு விளைவிப்பதின் மூலமாயாவது முத்து எடுத்தல் இவைகள் மூலமாயாவது கிடைக்கும் திரவியம்] வாழ்க்கை நடத்துகின்றவனுய் இருப்பான். முத்து = முத்துச்சிப்பிகளிலிருந்து எடுக்கும் உயரியமுத்து.

சு. 16. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் சூரியனும் குருவும் கூடியிருப்பின் ஆரம்பிக்கின்ற எல்லாக்காரியங்களையும் சாதித்தல், அரச வெகுமதி, சூரத்தன்மை, வீரத்தன்மை, நிரம்பப் பிரசித்தி ஆகிய இவைகள் உள்ளவனுய் இருப்பான்.

சு. 17. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் சூரியனும் சுக்கிரனும் கூடியிருப்பின் பந்துஜனங்களை விரும்புபவனுயும், பெண்கள் * மக்கள் இவர்களின் பிரியத்தால் திருப்தி யடைபவனுயும், சௌபாக்கியம் அரசர்கள் நேசம் ஆகிய இவைகளோடுகூடினவனுயும் இருப்பான்.

சு. 18. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் சூரியனும் சனியும் கூடி இருப்பின் வதம் பந்தனம் இவைகளோடு கூடினவனுயும், கூலிவேலை செய்தல், வறுமை, கோள் சொல்லுதல், பொருள் படாது பேசுந்தன்மை ஆகிய இவைகள் உள்ளவனுய் இருப்பான். இவன் பொருள்கள் திருடர்களால் திருடப்படும்.

சு. 19. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் செவ்வாயும் புதனும் கூடியிருப்பின் அதிகசத்துருக்கள், அஸ்திரப்பிரயோகங்கள், தனது புத்தி சாமர்த்தியங்கொண்டு வாழ்க்கை நடத்தல், அதிக பராக்கிரமம் ஆகிய இவைகள் உள்ளவனுய் இருப்பான்.

---

*மக்கள் ஜனங்கள் குழந்தைகள் எனச் சந்தர்ப்பத்திற் கேற்றபடி சொல்க.

சு. 20. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் செவ்வாயும் குருவும் கூடியிருப்பின் சேனுதிபதி பதவி, நண்பர்கள் மூலியமாய்ப் பணம் கிடைத்தல், அவர்களை விரும்பி ஜீவித்தல், செய்ந்நன்றி யறிதல் ஆகிய இவைகள் உள்ளவனுய் இருப்பான்.

சு. 21. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் செவ்வாயும் சுக்கிரனும் கூடியிருப்பின் சுவர்ண ரத்தினங்களைக்கொண்டு வியாபாரஞ்செய்தல், அல்லது ஸ்திரீகளை விரும்பி ஜீவித்தல், அன்னியதேச சஞ்சாரம் செய்தல் ஆகிய இவைகளோடு கூடினவனுய் இருப்பான்.

சு. 22. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் செவ்வாயும் சனியும் கூடி இருப்பின் சாகசப்பிரவிருத்தி செய்யும் சுபாவம், அற்பத்தனம், ஒரு கர்மங்களும் செய்யாமலிருத்தல், ரோகம் அடைதல் ஆகிய இவைகள் உள்ளவனுய் இருப்பான்.

சு. 23. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் புதனும் குருவும் கூடி இருப்பின் தனம், அரசனுல் வெகுமானம், தர்மிஷ்டத்துவம், சமூகத்தலைமை, பிரசித்தி ஆகிய இவைகள் உள்ளவனுய் இருப்பான்.

சு. 24. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் புதனும் சுக்கிரனும் கூடி இருப்பின் பந்து ஜனங்களோடு சேர்ந்திருத்தல், கல்வி, பெண் தனம், சுகம், அமைச்ச பதவி, அல்லது தேசத்தலைமை ஆகிய இவைகள் உள்ளவனுய் இருப்பான்.

சு. 25. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் புதனும் சனியும் கூடி இருப்பின் மண்முதலியவற்ருல் பாத்திரங்கள் உண்டாக்கல், பிரசித்தி வித்தைகற்றல், எழுத்து கிரந்தம் சித்திரவேலை முதலியவை சம்பந்தமான தொழில் ஆகிய இவைகள் உள்ளவனுய் இருப்பான்.

சு. 26. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் குருவும் சுக்கிரனும் கூடி இருப்பின் அரசனிடமிருந்து நல்ல சம்பளம் பெறும் பதவி, அந்தணர்க்குத் தலைமை, துக்கமின்மை, கலைகளையுபதேசித்தல், சாமர்த்தியம் ஆகிய இவைகள் உள்ளவனுய் இருப்பான்.

சு. 27. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் குருவும் சனியும் கூடி இருப்பின் பரோபகாரச் செய்கை, (பிறருக்குச் செய்கின்ற உபகாரம்) நீசகர்மம், எக்காரியத்திலும் முற்படல், கடினமான செய்கை, ஆஸ்பதம், நிரம்பஸ்திரமாயுள்ள காரியாரம்பம் ஆகிய இவைகளோடு கூடினவனுய் இருப்பான்.

சு. 28. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் சுக்கிரனும் சனியும் கூடி இருப்பின் சித்திரம் வரைதல், சுகந்த திரவியம், பொடி; மை, சாயம் முதலானவைகளைச் செய்தல், அல்லது விற்றல் இவைகளைக் கொண்டு ஜீவித்தல், வைத்தியம் செய்தல் ஆகிய இவைகளோடு கூடினவனாய் இருப்பான்.

சு. 29. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் சூரியன் செவ்வாய் புதன் இவர்கள் கூடி இருப்பின் கிருதார்த்தம், புருடார்த்தம், அரச சமம், யாவராலுங் கொண்டாடப்படல் ஆகிய இவைகள் உள்ளவனாய் இருப்பான்.

சு. 30. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் சூரியன் செவ்வாய் குரு இவர்கள் கூடி இருப்பின் சௌபாக்கியம், சத்துரு ஜெயம், சமிருத்தி ஆகிய இவைகள் உள்ளவனாய் இருப்பான்.

சு. 31. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் சூரியன் செவ்வாய் சுக்கிரன் இவர்கள் கூடி இருப்பின் குரூரத்தனம், சாகசகர்மங்களைச் செய்தல், அந்நியருடைய தனத்தைத் தன் வசமாக்கல், நிரம்ப புத்தி சாதுரியம் ஆகிய இவைகள் உள்ளவனாய் இருப்பான்.

சு. 32. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் சூரியன் செவ்வாய் சனி இவர்கள் கூடி இருப்பின் கடுமையான பிரவிருத்திகளைச்செய்தல், ஓரறிவுமில்லாமலிருக்குந்தன்மை, பாபச்செயல், துராசாரம் ஆகிய இவைகள் உள்ளவனாய் இருப்பான்.

சு. 33. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் சூரியன் புதன் குரு இவர்கள் கூடி இருப்பின் கல்வி, அழகு, தர்மிஷ்டத்துவம், உறவினர்களுக்குப்பிரியம் ஆகிய இவைகள் உள்ளவனாய் இருப்பான்.

சு. 34. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் சூரியன் புதன் சுக்கிரன் இவர்கள் கூடி இருப்பின் அழகு, தர்ம சீலம், கோபமின்மை, ஒன்றிலும் தோல்வியின்மை, ஜபம், சௌபாக்கியம், கிருகோபகரணசம் விருத்தி [கிருகத்திற்கு வேண்டியவைகள் நிரம்பி யிருத்தல்) ஆகிய இவைகள் உள்ளவனாய் இருப்பான்.

சு. 35. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் சூரியன் புதன் சனி இவர்கள் கூடி இருப்பின் சுவாதீனமின்மை, அஸ்திரத்துவம், துஸ்சுபாவம், ஆயுதம் அல்லது அக்கினியினால் திரேகத்தில் பீடை ஆகிய இவைகள் உள்ளவனாய் இருப்பான்.

சு. 36. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் சூரியன் குரு சுக்கிரன் இவர்கள் கூடி இருப்பின் சௌபாக்கியம், கல்வி கொண்டு பணம் சம்பாதித்தல், தர்ம காரிய விருப்பம், எப்போதும் போகசாதனங்களோடு கூடியிருத்தல் ஆகிய இவைகள் உள்ளவனுய் இருப்பான்.

சு. 37. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் சூரியன் குரு சனி இவர்கள் கூடி இருப்பின் ஜனங்களால் புகழப்படுதல், நடத்தைக் குறைவு, தீரம் ஆகிய இவைகள் உள்ளவனுய் இருப்பான்.

சு. 38. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் சூரியன் சுக்கிரன் சனி இவர்கள் கூடி இருப்பின் அதிக ஆசை, சகல ஜனங்களினிடத்திலும் அன்பின்மை, நிரம்ப அஸ்திரத்தன்மை ஆகிய இவைகள் உள்ளவனுய் இருப்பான்.

சு. 39. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் செவ்வாய் புதன் குரு இவர்கள் கூடி இருப்பின் அநேக குடும்பம், பரிவாரங்கள், வித்துவப் பதவி, தனம், தர்மிஷ்டத்தன்மை ஆகிய இவைகள் உள்ளவனுய் இருப்பான்.

சு. 40. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் செவ்வாய் புதன் சுக்கிரன் இவர்கள் கூடி இருப்பின் நல்ல சிற்பத் தொழில்களில் பழக்கம், மாலைகட்டல், பொன் வேலையில் சாமர்த்தியம், எல்லா ஜனங்களுக்கும் பிரியமாய் இருத்தல் ஆகிய இவைகள் உள்ளவனுய் இருப்பான்.

சு. 41. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் செவ்வாய் புதன் சனி இவர்கள் கூடி இருப்பின் தர்ம சீலமின்மை, அதிக தூக்கம், நிரம்ப துஷ்டத்தனம், மலினத்தன்மை (அழுக்கு) ஆகிய இவைகள் உள்ளவனுய் இருப்பான்.

சு. 42. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் செவ்வாய் குரு சுக்கிரன் இவர்கள் கூடி இருப்பின் தனம், சூரத்தன்மை, தேவபூஜை, பிராமண பூஜை இவைகளில் பிரியம் ஆகிய இவைகள் உள்ளவனுய் இருப்பான்.

சு. 43. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் செவ்வாய் குரு சனி இவர்கள் கூடி இருப்பின் கெட்ட நடத்தை, சுகமின்மை, அங்கக் குறைவு, நீசத்தன்மை ஆகிய இவைகள் உள்ளவனுய் இருப்பான்.

சு. 44. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் செவ்வாய் சுக்கிரன் சனி இவர்கள் கூடி இருப்பின் சிரேஷ்டமான தர்மங்களைச் செய்தல், தனம், பல தொழில்களைச் செய்து கூலிவாங்கி ஜீவனம் செய்தல் ஆகிய இவைகள் உள்ளவனுய் இருப்பான்.

சு. 45. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் புதன் குரு சுக்கிரன் இவர்கள் இடபம் அல்லது துலாம் இவ்விடங்களில் கூடி இருப்பின் பலவிதமான அபீஷ்ட சித்தியைப் பெறுவன். இதர விராசிகளில் இருப்பின் வியாதியோடு கூடினவனாய் துன்பத்தோடு இருப்பான்.

சு. 46. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் புதன் குரு சனி இவர்கள் கூடி இருப்பின் எழுத்து, கிரந்தமியற்றல், காவ்யம் இவைகளில் மேன்மையடைதல், தனம் அநேக விதமான வேலையாட்கள், சஞ்சார விருப்பம், அழகு ஆகிய இவைகள் உள்ளவனாய் இருப்பான்.

சு. 47. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் புதன் சுக்கிரன் சனி இவர்கள் கூடி இருப்பின் சிற்பக்கலையில் நிபுணத்துவம், மல்குஸ்தி முதலிய யுத்தப் பயிற்சி, சாமர்த்தியம், அன்னிய நாடுகளில் சஞ்சாரம், காரிய உத்சாகம், பொறுமை ஆகிய இவைகள் உள்ளவனாய் இருப்பான்.

சு. 48. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் குரு சுக்கிரன் சனி இவர்கள் கூடி இருப்பின் வித்வத்தன்மை, தர்மசிரத்தை, எல்லாரிடத்திலும் தயவுள்ளவனாய் இருத்தல், சத்தியம் ஆகிய இவைகள் உள்ளவனாய் இருப்பான்.

சு. 49. முப்பத்தோராவது அத்தியாயத்தில் இலக்கினத்திற்கு 10 ஆமிடங்கொண்டு துவிகிரகயோக மாத்திரம் கூறியுள்ளோம். திரிகிரகயோகங்களையும் அப்படியே சிந்தித்துப் பலனைச் சொல்ல வேண்டும். சந்திரனுக்குப் 10 ஆமிடங்கொண்டு இங்கே சொன்ன திரிகிரகயோக பலங்கொண்டு சதுர் கிரகாதியோகங்களையும் உசிதப்படி யோசித்து சொல்லவேண்டு மென்ப. சதுர்கிரகாதியோக பலன்களின் விசேடங்கள் இங்கு விவரித்துச் சொல்லப் பெறுகின்றன.

சு. 50. சந்திரனுக்குப் 10 ஆமிடத்தில் சூரியன் செவ்வாய் புதன் குரு இவர்கள் இருப்பின் சூரத்தன்மை, சரீரத்தில் முறிவு ஏற்படல், வியாதி, தானம் செய்தல் முதலிய எல்லாச் செயல்களிலும் மேன்மையடைதல் ஆகிய இவைகள் உள்ளவனாய் இருப்பான்.

சு. 51. சந்திரனுக்குப் 10 ஆமிடத்தில் சூரியன் செவ்வாய் புதன் சுக்கிரன் இவர்கள் இருப்பின் மாலை கட்டுதல், சிற்பவேலை செய்தல், இவைகளோடு எழுத்துவேலை செய்பவனாயும் இருப்பான்.

சு. 52. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் சூரியன் செவ்வாய் புதன் சனி இவர்கள் இருப்பின் தனதானிய சம்பத்து, கஜதுரகாதி வாகனங்கள் இவைகள் உள்ளவனுய் இருப்பான்.

சு. 53. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் சூரியன் புதன் குரு சுக்கிரன் இவர்கள் இருப்பின் சௌம்மியதை, (சாந்தகுணம்) அருவருப்போடு கூடிய கெட்ட பிரவிருத்தி, சிரேஷ்ட புத்திரப் பேறு, விவசாய காரியம் ஆகிய இவைகள் உள்ளவனுய் இருப்பான்.

சு. 54. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் சூரியன் புதன் குரு சனி இவர்கள் இருப்பின் இந்திர ஜாலங்களான கபட வித்தைகளில் மிக சாமர்த்தியம், குரூரத்தனம், அந்நியரை வஞ்சித்தல் ஆகிய இவைகள் உள்ளவனுய் இருப்பான்.

சு. 55. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் சூரியன் புதன் சுக்கிரன் சனி இவர்கள் இருப்பின் சுவாதீனமின்மை, சுபகத்தன்மை, வாக்மித்தன்மை, விவசாய காரியங்களில் பிரியம் ஆகிய இவைகள் உள்ளவனுய் இருப்பான்.

சு. 56. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் சூரியன் குரு சுக்கிரன் சனி இவர்கள் இருப்பின் அன்னிய தேசவாசம், சேஷ்டை (குணங்கெட்ட செய்கை) இவைகள் உள்ளவனுய் இருப்பான்.

சு. 57. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் செவ்வாய் புதன் குரு சுக்கிரன் இவர்கள் இருப்பின் நிபுணத்தன்மை, சாதுரியம், சூரத்தன்மை, யுத்தங்களில் ஒருவராலும் ஜெயிக்க முடியாத்தன்மை ஆகிய இவைகள் உள்ளவனுய் இருப்பான்.

சு. 58. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் செவ்வாய் புதன் குரு சனி இவர்கள் இருப்பின் மலிதை (அழுக்கு), எப்போதும் உத்சாக சீலம், யுத்தத்தில் சத்துருவை நாசஞ் செய்தல் ஆகிய இவைகள் உள்ளவனுய் இருப்பான்.

சு. 59. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் செவ்வாய் புதன் சுக்கிரன் சனி இவர்கள் இருப்பின் நிரம்பகல்வி, பராக்கிரமம், புஷ்டியுள்ள சரீரம் ஆகிய இவைகளோடு கூடினவனுய் இருப்பான்.

சு. 60. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் செவ்வாய் குரு சுக்கிரன் சனி இவர்கள் இருப்பின் தீரத்தன்மை, நல்ல குடும்பம், பணம் ஆகிய இவைகள் உள்ளவனுய் இருப்பான்.

சூ. 61. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் புதன் குரு சுக்கிரன் சனி இவர்கள் இருப்பின் சாந்தமனம், நல்லபுத்தி, சாமர்த்தியம், ஜனங்களுக்கு விருப்பம் ஆகிய இவைகள் உள்ளவனாய் இருப்பான்.

சூ. 62. சந்திரனுக்கு 10 ஆமிடத்தில் பாபக்கிரகங்கள் இருந்து அவைகளைச் சுபக்கிரகங்கள் பார்ப்பின் வைத்தியம் அல்லது புரோகிதம், கணிதகாரபதவி, கோபத்தன்மை, அந்நியரை வஞ்சித்தல் ஆகிய இவைகள் உள்ளவனாய் இருப்பான்.

சூ. 63. மேற்சொன்ன எல்லா யோகங்களிலும் யோக கர்த்தாக்களாகிய கிரகங்களுக்குச் சுபக்கிரகங்களின் பார்வை யுண்டாயின் சுகாநுபவம் உண்டாகும். பாபக்கிரகங்களின் பார்வையிருப்பின் சுகாநுபவம் உண்டாகின்றதில்லை.

சூ. 64. இலக்கினம் சந்திரன் இவைகளுக்கு 3 ஆமிடத்திலும் 6 ஆமிடத்திலும் பாபக்கிரகங்களிருப்பின் சுப முண்டாகும். அஷ்டமத்திலும் 12-லும் பாபக்கிரகங்களிருப்பின் அசுபமுண்டாகும். விசேஷமாக லக்கினத்தில் பாபக்கிரகமிருப்பின் மிகுந்த அசுபம் உண்டாகும்.

சூ. 65. ஜனன ஜாதகத்தில் லக்கினம் சந்திரலக்கினம் இவைகளில் எதற்குப் பல மிருக்கின்றதெனவறிந்து அவ்விராசியினுடைய 10 ஆமிடத்தைக் கொண்டு உப ஜீவனமார்க்கத்தைக் கண்டுகொள்ள வேண்டுமென்ப. 10-ஆம் பாவத்தில் பலவானான கிரகங்கள் இருப்பின் அக்கிரகத்தைக்கொண்டு பலன்களைச் சொல்லவேண்டும். கிரகமில்லாவிடில் 10-ஆம் பாவத்திற்குள்ள இராசியினுடைய பலன்களைத் தெரிந்து அவைகளுக்கேற்ற விருத்தியைச் சொல்லவேண்டும்.

சூ. 66. இலக்கினம் சந்திரலக்கினம் இவைகளுக்கு 10 ஆமிடம் மேட விராசியாயின் பூங்காவனங்கள், புத்திரர்கள், பிரபுக்களையடுத்து அவர்களிடம் சேவகம் செய்தல், விவசாயம், ரசவியாபார சம்பந்தமான பிரவிருத்தி, சூதாட்டம், பூதகாரியம், (உண்மைக் காரியம்) இவைகளைக்கொண்டு தனலாபம் அல்லது அதன் மூலமாய் உபஜீவனம் உண்டாகு மென்ப. இங்கு மேடனம் என்று சொல்லியிருப்பதால் அவ்விராசியினுடைய ஹோரா, திரேக்காணம், நவாம்சம், துவாதசாம்சம், திரிம்சாம்சம் என்ற இவ்வர்க்கங்களையும் கொண்டு பலன்களைத் தெரிந்து சொல்க. மேலே சொல்லப்போகும் இடப விராசி முதலானவைகளுக்கும் இவைகளைக்கொண்டு சொல்லுக.

சு. 67. இடப விராசியாவது அதன் வர்க்கங்களாவது 10 ஆம் பாவமாகவரின் பட்சிகள் வண்டிகள் பசு காளை எருமை மான் ஆகிய மிருகங்கள் மூலமாயும், நெல் முதலான தான்ய மூலமாயும் சம்பாத்யம் செய்து உபஜீவனம் செய்வன். கர்ம பிராப்தி முக்கியமாக ஜாங்கல தேசத்திலேயே உண்டாகும். ஜாங்கல தேச விவரம் இவ்வத்தியாயத்தின் 3, 4, 5-ஆம் சுலோகங்களில் கூறப்பெற்றுளது.

சு. 68. மிதுன விராசியாவது அதன் வர்க்கங்களாவது 10 ஆம் பாவமாகவரின் கப்பல் வியாபாரத்தினும், முத்துக்கள் இரத்தினங்கள் சங்குகள் பவளங்கள் பாத்திரங்கள் முதலியவற்ருலும், கணிதம்சித்திரவேலை இவைகளினுலும் தனலாபமும் உபஜீவனமும் உண்டாகும்.

சு. 69. கடக விராசியாவது அதன் வர்க்கங்களாவது 10 ஆம் பாவமாகவரின் ஆயுதங்கள், அக்கினி சம்பந்தமான காரியங்கள், யோனி போஷணம், (ஒரு மாதிரியான விட விருத்தி) முத்து, மணிகள், சல்லிய தந்திரம், நாயைக்கொண்டு வேட்டையாடல் இவைகளினல் உபஜீவனம் உண்டாகும்.

சு. 70. சிம்ம விராசியாவது அதன் வர்க்கங்களாவது 10 ஆம் பாவமாகவரின் நவமணிகள், சுவர்ணங்கள், வெள்ளிமுதலானவைகளாலான யந்திரங்கள், சிலைகள், விவசாயம், பசு காளை வியாபாரம், நெல் வியாபாரம் ஆகிய இவைகளால் விருத்தியும் தனலாபமும் உபஜீவனமும் உண்டாகும்.

சு. 71. கன்னியா விராசியாவது அதன் வர்க்கங்களாவது 10 ஆம் பாவமாகவரின் வண்டிகள் சம்பந்தமான பிரவிருத்திகளாலும், இரத்தினங்கள் சுவர்ணங்கள் சுகந்த திரவியங்கள் ஆகிய இவைகளின் வியாபாரங்களாலும், சங்கீதம் சித்திரவேலை எழுத்து இவைகளாலும் தனலாபமும் உப ஜீவனமும் உண்டாகும்.

சு. 72, 73, 74. துலா விராசியாவது அதன் வர்க்கங்களாவது 10 ஆம் பாவமாகவரின் பிரயோக சம்பந்தம், உபதேச விருத்தி, வித்தை, சுவர்ணுதி தனங்களைக் கைமாற்றம் செய்தல், பந்துக்களின் பலவித விவகாரங்கள், வியாபாரஸ்தலம் இவைகளின் மூலமாகவும், பசு காளை எருமை நெல் முத்து சங்கு மச்சம் தனதானியங்கள் கிழங்குகள் இவைகளின் வியாபார மூலமாகவும், பல மூல சாமான்களை விவசாயம் செய்வதின் மூலமாகவும் தன ஆதாயமும் உண்டாகும்.

சு. 75, 76. விருச்சிக விராசியாவது அதன் வர்க்கங்களாவது 10 ஆம் பாவமாகவரின் ஸ்திரீகளின் சம்சர்க்கம் (சேர்க்கை)விவசாய காரியங்கள், எல்லாச் சமயங்களிலுமுள்ள உத்சாகம், மோஷணம், (களவு) அரச சேவகம், சிகிச்சை, இரும்பு வியாபாரம், பாபகர்மம், பலவித தானியங்கள் இவைகளால் தனலாபமும் உப ஜீவனமும் உண்டாகும்.

சு. 77. தநுரிராசியாவது அதன் வர்க்கங்களாவது 10 ஆம் பாவமாகவரின் அரச அமைச்ச பதவிகள், கோட்டைகளைக் காத்து ரட்சித்தல், பசு காளைகளை வியாபாரம் செய்தல், குதிரை, விறகு, தடி பறவைகள், பலவிதத்திலுள்ள யந்திர சாமான்கள், கணக்கு, ஜோதிஷம் சிகிச்சை ஆகிய இவைகளால் தனலாபமும் உபஜீவனமும் உண்டாகும்.

சு. 78. மகர விராசியாவது அதன் வர்க்கங்களாவது 10 ஆம் பாவமாகவரின் தண்ணீரிலிருந்து உற்பத்தியான வஸ்துக்களை விற்றல் கட்டில் பூங்காவனம் இவைகளை உற்பத்தி செய்தல், (ரட்சித்தல்) ரசாயனப் பிரயோகங்கள் ஆகிய இவைகளால் தனலாபமும் உபஜீவனமும் உண்டாகும்.

சு. 79. கும்ப விராசியாவது அதன் வர்க்கங்களாவது 10 ஆம் பாவமாகவரின் ஆயுதங்கள், அன்னிய சம்பந்தமான பிரயோகங்கள், மோஷணம் (களவு) வெட்டல் குழித்தல், (அதாவது பூமியை வெட்டி பண்படுத்தல்) சுமையெடுத்தல், பாரங்களைத் தாங்கல் ஆகிய இவைகளாலும், கைப்பலங்களாலும் தனலாபமும் உப ஜீவனம் உண்டாகும்.

சு. 80. மீன விராசியாவது அதன் வர்க்கங்களாவது 10-ஆம் பாவமாகவரின் ஆயுதங்கள் தண்ணீர் இவைகளாலும், யோனி போஷணம் என்ற விட சம்பிரதாயத்தாலும், குதிரைகளை விற்றலாலும், தனலாபமும் உபஜீவனமும் உண்டாகும்.

சு. 81. *இலக்கினம் சந்திரன் இவர்களுக்கு 10-ஆமிடத்தில் சூரியாதி கிரகங்களிருப்பின் கிரமமாக தந்தை, தாய், சத்துரு, பந்து, மனைவி, சகோதரி, வேலையாள் இவர்கள் மூலமாக தனலாபம் கிடைக்கும்.

---

* பிருகத் ஜாதகம் கர்மாஜீவாத்தியாயம் கூறுமாறு: ஜன்மலக்கின சந்திரர்களுக்கு 10-ஆம் இடத்திலிருக்கிற சூரியாதிகிரகங்களைக் கொண்டு

சு. 82. இலக்கினத்திலும் 2 ஆமிடத்திலும் 11-ஆமிடத்திலும் உள்ள பலவான்களாயுள்ள கிரகங்களைக்கொண்டு தனமுதலான அநேகவிதமான லாபத்தையும் புஷ்டியையும் சொல்லவேண்டுமென்று

---

கிரமமாய் பிதுரு, மாதுரு, சத்துரு, மித்துரு, சகோதரன், ஸ்திரீ, வேலைக்காரர் இவர்களால் தனப்பிராப்தி கூறவேண்டியது.

ஜன்மலக்கினத்திற்காவது ஜன்மகால சந்திரனுக்காவது 10-ஆம் இடத்தில் சூரியன் நிற்பின் பிதுருவினுலும், சந்திரன் நிற்பின் மாதுருவினுலும், செவ்வாய் நிற்பின் சத்துருவினுலும், புதன் நிற்பின் மித்துருவினுலும், குரு நிற்கின் உடன் பிறந்தவர்களாலும், சுக்கிரன் நிற்பின் ஸ்திரீயினுலும், சனி நிற்கின் ஊழியர்களாலும் தனப்பிராப்தி கூறவேண்டும்.

இலக்கினத்திற்குப் பத்தாமிடத்தில் ஒரு கிரகமும் சந்திரனுக்குப் பத்தாமிடத்தில் ஒரு கிரகமும் இருந்தால் அவ்விரண்டுகிரகங்களும் தங்கள்தங்கள் தசாகாலத்தில் மேற்சொன்ன கிரகங்களுக்குரிய தனலாபத்தை யுண்டுபண்ணுவர்.

இலக்கினத்திற்கும் சந்திரனுக்கும் 10-ஆம் இடத்தில் அநேக கிரகங்கள் இருப்பின் அவற்றின் புத்திகளில் மேற்சொன்னபடி தனலாப முண்டென்ப. இவ்விதம் இலக்கினம் சந்திரன் ஆகிய இவர்களுக்கு 10-ஆம் இடத்தில் ஒரு கிரகமாவது இல்லாவிடின், இலக்கினம், சந்திரன், சூரியன் இவர்களுக்கு 10-ஆம் இடத்தின் அதிபர்கள் எந்த நவாம்சத்திலிருக்கின்ருர்களோ அந்த நவாம்சத்திற் கதிபர்களின் விருத்தியானும், வேலைகளானும் தனப்பிராப்தியுண்டென்க.

சூரியன், சந்திரன், இலக்கினம் இவர்களுக்கு 10-ஆம் இடத்தில் அநேக கிரகங்களிருந்தால் அவரவர்களின் *தசையில் தனலாபம் தருவார்கள்.

இலக்கினம், சூரியன், சந்திரன் இவர்களுக்கு 10-ஆம் இடத்ததிபர் இருக்கும் நவாம்சாதிபதி ஜனனகாலத்தில் மித்துரு க்ஷேத்திரத்திலிருந்தால் நண்பர்களாலும், சத்துரு க்ஷேத்திரத்திலிருந்தால் சத்துருக்களாலும், ஸ்வ க்ஷேத்திரத்தில் இருந்தால் ஸ்வ ஜனங்களாலும் தனப்பிராப்தி யுண்டாகுமென்ப.

ஜனனகாலத்தில் முன் கூறியபடி சூரியன் பலிஷ்டனுய் உச்சமான மேஷத்திலிருந்தால் தனது வியாபகத்தினுலே தனப்பிராப்தியாம்.

இலக்கினம் 2-11-இவ்விடங்களிற் சுபக்கிரகங்கள் உச்சம் முதலாய † சமஸ்த பலத்தோடு கூடியிருந்தால் அனேகவிதமான தனப்பிராப்தி யுண்டாம். எவ்விதம் தனம் சம்பாதிக்க வேண்டுமென்று விரும்புவானே அவ்விதமே அச்சாதகன் தனப்பிராப்தியை யடைவனென்க.

---

* ஷட் பலத்தில் பலிஷ்டமானுர் தசையில் என்றும் பாடம்.

† உச்சபல-சப்தவர்க்கஜபல-யுக்மபாம்சகதபல-கண்டாதிபல-பாந்தமத்தியமுகபல-ஸ்தானபல-திக்குபல-தினராத்திரிபல-பட்சபல - அன்ஹஸ்திருபாகபல-வருஷபல-மாசபல-தினபல - ஹோராபல-அயனபல - சேஷ்டாபல - கிரக

பூர்வாசாரியர்கள் சொல்லுகின்றார்கள். பிருகஜ்ஜாதக ஹோரா தந்திரத்தில் இவ்விடங்களிலிருக்கின்ற சுபக்கிரகங்களைக்கொண்டு அநேகவிதமான பொருள்களை நிதானிக்க வேண்டுமெனச் சொல்லப்பட்டுளது.

**முப்பத்து மூன்றவது அத்தியாயம் முற்றிற்று.**

---

கிராந்திபல - ஸ்புட கிராந்திபல-யுத்தபல - நைஸர்க்கிகபல - திருக்பலமாதியே **சமஸ்தபலமா** மென்று கூறுவர் பெரியார்.

குறிப்பு:—இதன் முழு விவரமும் அறிய விரும்புவார் யான் அச்சிட்டுள்ள **ஸ்ரீபதி ஜாதககர்ம பத்ததி** 3-ஆம் அத்தியாயத்தே மிகத்தெளிவாய்க்காண்க.

ஸ்தான பலம் திக்கு பலம் முதலியவைகளின் பலன்களை யான் அச்சிட்டுள்ள மந்திரேஸ்வரீய மென்னும் பல தீபிகை நான்காவது அத்தியாயத்துட் கண்டுகொள்க.

# முப்பத்து நான்காவது அத்தியாயம்.

## இலக்கினாதி பாவசிந்தை.

சு. 1. இந்த அத்தியாயத்தில் சூரியாதி கிரகங்கள் இலக்கினத்தைப் பார்ப்பதினாலேற்படும் பலன்கள் சொல்லப்படுகின்றன.

சூரியனுடைய பார்வை இலக்கினத்திற் கேற்படின் பராக்கிரமம், ஸ்திரீகளோடுகோபம், குரூரத்தனம், பிதாவினால் திரவியங்களை யடைதல், அரசனைச் சேவித்தல் ஆகிய இவைகளை உடையவனாவன்.

சு. 2. சந்திரனுடைய பார்வை இலக்கினத்துக் குண்டாயின் சௌபாக்கியம், அந்நியர் குணமறிந்து நடக்கத்தக்க மனோபாவம், தாட்சண்யத்திற் கிருப்பிடம், நிரம்ப திரவிய சம்பாத்தியம், மிருது சுபாவம், தண்ணீரிலுண்டாகிற பொருள்கள் இரத்தினாதி மற்ற வஸ்துக்கள், கிரயம் விற்கிரயம் செய்தல் ஆகிய இவைகளை உடையவனாயிருப்பன்.

சு. 3. அங்காரகனுடைய பார்வை இலக்கினத்துக்கிருப்பின் சாகச கர்மம், யுத்தத்தில்விருப்பம், மிகுதியான கோபம், பந்து குணம், தர்மிஷ்டம், பெருத்துள்ள ஆண்குறி ஆகிய இவைகள் உள்ளவனாய் இருப்பன்.

சு. 4. புதனுடைய பார்வை இலக்கினத்திற்கு உண்டாயின் சிற்பம் கலாசாஸ்திரம் இவைகளில் பூர்ணபாண்டித்தியம், நிரம்ப புத்தி சாமர்த்தியம், புகழ் அடைதல், நாணம் ஆகிய இவைகளை உடையவனாய் இருப்பன்.

சு. 5. குருவின் வீட்சண்யம் இலக்கினத்திற் கிருப்பின் சஜ்ஜனங்கள் குருஜனங்கள் விருந்தினர் இவர்களோடு கூடியிருத்தல், யாகாதி புண்ணியங்கள் செய்தல், சாந்திராயணாதி விரதங்கள், மற்ற குல உசிதமான அநுஷ்டானங்கள் செய்தல், அரசனால் பூஜிக்கத்தக்க யோக்கியதை அடைதல், பிரசித்தகீர்த்தி ஆகிய இவைகளை உடையவனாய் இருப்பன்.

சு. 6. சுக்கிரனின் திருஷ்டி இலக்கினத்திற் குண்டானால் வேசியாதி ஸ்திரீகளினிடம் பிரியமுள்ளவனாயும், சௌபாக்கியம் யௌவ

னம் அநேக போகங்கள் சுகம் தனம் நல்ல ரூப குணம் ஆகிய இவைகளை உடையவனாயுமிருப்பன்.

சு. 7. சனியின் பார்வை இலக்கினத்திற் கேற்படின் பாரமான சுமைகளை எடுத்தல், வழிநடத்தல், வியாதிகளினால் துன்பம் அடைதல், கோபம், விருத்தஸ்திரீகளோடு ரமித்தல், (சம்பந்தப்படுதல்) ஒரு சுக்முமில்லாதிருத்தல், மலினதை, (பாபத்தன்மை) அறிவின்மை ஆகிய இவைகளை உடையவனாய் இருப்பன்.

சு. 8. இலக்கினாதிபனான கிரகம் இலக்கினத்தைப்பார்ப்பின் எல்லாச் சுகமும் உண்டாவதோடு திரவியம் அதிகரித்தல், கூடியவரை இராஜானுகூலம் ஆகிய இவைகள் உண்டாகும். இலக்கினாதிபன் பாபியாயின் பாபபலத்தையும், சுபனாயின் சுபபலத்தையும் கொடுப்பன்.

சு. 9. இலக்கினத்திற்கு ஒரு கிரகங்களின் பார்வையும் இல்லாதிருப்பின் மேலே சொன்ன குணலட்சணங்களும் இல்லை. ஆனால் அவ்விராசிக்குண்டான சுபாவத்தை நிதானித்து பலங்களைச் சொல்ல வேண்டும். (இராசியின் சுபாவங்கள் யாவும் சம்க்ஞாத்தியாயத்தில் விரிவாய்ச் சொல்லப் பெற்றிருக்கின்றன. ஆங்கு கண்டு கொள்க.)

சு. 10. பலவானான சூரியாதி சப்தகிரகங்களின் பார்வை இலக்கினத்திற் குண்டாயின் பலவிதமான எல்லாச் சுபங்களும் உடையவனாய் (பயம் முதலான ஒரு விவகாரமுமில்லாமல்) தீர்க்காயுளோடு அரசன் அல்லது அரச சமபதவியைப் பெற்று வாழ்வன். இங்கே சொல்லிய கிரக பார்வையை சப்தம திருஷ்டியை மாத்திரம் கணித்துச் சொல்லக் கூடாது. திரிதசாதி திருஷ்டிகளையும் விசேஷதிருஷ்டிகளையும் (ஸ்ரீபதி ஜாதக கர்மபத்ததியிற் கூறப் பெற்றுள்ள பிரகாரம்) கணித்து நிதானித்து பலன் சொல்ல வேண்டியது. "த்ருச்யே திருஷ்டிரு விவர்ஜிதே என்ற முறையின் பிரகாரம் திருஷ்டியைக் கணித்துக் கொள்க.

சு. 11. இலக்கினத்திற்கு இரண்டு அல்லது மூன்று அல்லது அதிகமான கிரகங்களின் பார்வையிருப்பின், அந்த லக்கினம் சுபபலத்தைச் சந்தேகமில்லாமல் கொடுக்கும். பாபிகளோடு கூடாமல் ஒரு சுபனாகினும் இலக்கினத்தைப் பார்ப்பது (பூரணமாக) மிகுந்த சுபத்தைக் கொடுக்கும். சுபக்கிரகங்களும் பாபக்கிரகங்களும் கூடிப் பார்ப்பின் அவரவர்களின் பலாபலத்திற்குத் தக்கவண்ணம் பலாபலங்களை அறிந்து சொல்லவேண்டும்.

சு. 12. பாபக்கிரகங்களோடு சேராமல் மூன்று சுபக்கிரகங்கள் பலவானுய் இலக்கினத்திலிருப்பின் துக்கமில்லாமல் எல்லாச் சுகங்களோடும், அரசன் அல்லது அரச சமானனுக இருப்பன். இது போலவே மூன்று பாபக்கிரகங்கள் இலக்கினத்திலிருப்பின் சோகம் துக்கம் பயம் ரோகம் ஸ்தானபங்கம் வறுமை துன்பம் இவைகளின் நிமித்தம் கஷ்டப்படுகின்றவனும், அதிகமாய்ச் சாப்பிடுகின்றவனும், எல்லாச் சனங்களாலும் நிந்திக்கப்படுபவனும் இருப்பன். சுபக்கிரகங்களும் பாபக்கிரகங்களும் இங்கு சொல்லிய பிரகாரம் இல்லாமல் குறைந்திருப்பின் அதற்குத் தக்கவாறு பலன்களும் குறைந்திருக்கும். சுபக்கிரகமும் பாபக்கிரகமும் கூடி லக்கினத்திலிருப்பின் பலனும் கலந்திருக்கும் என்ப.

சு. 13. குரு புதன் சுக்கிரன் ஆகிய இம் மூன்று கிரகங்களும் இலக்கினத்திற்கு 6-ஆமிடத்திலும் 7-ஆமிடத்திலும் 8-ஆமிடத்திலும் இருப்பார்களேயானுல் அதியோகம் உண்டு. இந்த அதியோகத்தில் ஜனித்தவன் அரசனுகவாவது, அல்லது மந்திரியாகவாவது, அல்லது சேனு நாயகனுகவாவது ஆவதுடன் தீர்க்காயுசு ஆரோக்கியம் அதிக மனைவிமார்கள் பயமின்மை நல்லசுபாவம் சுகம் இவைகளை யடைவனென்று யவன ராஜன் கூறுகின்றுர்.

இந்த யோக கர்த்தாக்களான சுபக்கிரகங்களுக்கு மற்ற பாபக்கிரகங்களின் சேர்க்கையோ திருஷ்டியோ உண்டாயின் இந்த யோகத்திற்குப் பங்கம் உண்டாவதோடு நியாயமான பலமும் உண்டாக மாட்டாது. ஷை சுபக்கிரகங்கள் மூன்றும் ஆறிலோ, ஏழிலோ, எட்டிலோ, ஆறிலும் ஏழிலுமோ, ஏழிலும் எட்டிலுமோ, ஆறிலும் எட்டிலுமோ, ஆறிலும் ஏழிலும் எட்டிலுமோ இருப்பினும் ஏழு விதமாக அதியோகம் உண்டாகுமென்று பிரமாணுந்தா முள்ளதாகையால் அப்பக்ஷமும் அங்கீகரிக்கத்தக்கதே. இவை இலக்கினுதி யோகம் என்று கூறுவர் பெரியார். சந்திரலக்கின ரீதியாக இந்த யோகம் ஏற்படின் சந்திராதி யோகம் என்று கூறுவர்.

சு. 14. அதியோக கர்த்தாக்களான சுபக்கிரகங்களுக்கு ஸ்வக்ஷேத்திரம், மூலக்ஷேத்திரம், உச்சக்ஷேத்திரம், மித்துருக்ஷேத்திரம் சுபகிரகங்களுடைய ஷட்வர்க்கம் முதலான பலங்கள் உண்டாயிருப்பின் அதியோகபலம் சம்பூரணமாய் உண்டாகும். இந்த அதியோக கர்த்தாக்களான சுபக்கிரகங்களுக்கு சத்துரு க்ஷேத்திரம், நீசக்ஷேத்திரம், பாபஷட்வர்க்கம் முதலான பலஹீனங்களுண்டாயின்

யோகம் பங்கமடையுமென பூர்வாசாரியர்களான ருஷி சிரேஷ்டர்கள் கூறுகின்றார்கள். இவ்விதம் இலக்கினபாவம் நிர்ணயிக்கப்பெற்றது. இனி துதீயபாவம் சொல்லப்படுகின்றது.

சு. 15. சூரியன் செவ்வாய் சனி இவர்கள் கூடி இரண்டாமிடத்திலிருந்தாலும் இரண்டாமிடத்தைப் பார்த்தாலும் பணத்திற்கும் குடும்பத்திற்கும் குறைவு உண்டாகும். க்ஷீண சந்திரன் இரண்டாமிடத்தைப் பார்ப்பின் விசேஷமாக தனநாசம் உண்டாகும்.

சு. 16. சூரியனும் செவ்வாயும் இரண்டாமிடத்தில் இருந்தால் சொறி சிரங்கு குஷ்டம் முதலான சர்மரோகங்களும் வறுமையுமுண்டாகும். சனி மட்டும் 2-இல் இருந்து புதன் திருஷ்டியுண்டாயின் அநேக தனங்களோடு கூடி வாழ்வன்.

சு. 17. சூரியன், சனியினுடைய பார்வையைப் பெற்று 2-ஆமிடத்திலிருப்பின் அதிக வறுமை யுண்டாகும். மற்ற இதர கிரகங்களின் பார்வையோடு கூடி சூரியன் 2-இல் இருப்பின் அதிகமாய்த் தனலாபமுண்டாகும், எல்லாச் சுபக்கிரகங்களும் 2-ஆமிடத்திலிருப்பின் பலவிதமான தனலாபம் கிடைக்கும்.

சு. 18. புதனுடைய பார்வையோடு கூடின குரு 2-ஆமிடத்திலிருப்பின் வறுமையும் தனஹீனமும் உண்டாம். புதன் சந்திரனுடைய பார்வையோடு கூடி 2-ஆமிடத்தி லிருப்பின் தனநாசம் உண்டாகும்.

சு. 19. க்ஷீண சந்திரன் பலஹீனனாகி புதனுடைய பார்வையோடு கூடி 2-ஆமிடத்தி னிற்பின் முன்னோர்கள் தேடிவைத்ததிரவியங்கள் நாச மடைவதுடன் மேல் வரும் தனலாபத்திற்கும் கெடுதி நேரிடுமென்று பெரியோர்கள் கூறுகின்றார்கள்.

சு. 20. சுக்கிரன் சந்திரனுடைய பார்வையோடு கூடி இரண்டாமிடத்தில் நிற்பின் அதிக திரவியம் கிடைக்கும். மற்ற சுபக்கிரகங்களின் பார்வை 2 ஆமிடத்தி லிருக்கும் சுக்கிரனுக்கு உண்டாயிருப்பினும் தனலாபம் உண்டாகுமென்று அறிந்து கொள்க.

சு. 21. மூன்றாமிடம் பாபக்கிரகங்களுடைய இராசியானாலும் அந்தஸ்தானத்திற்கு எல்லாப் பாபக்கிரகங்களுடைய சேர்க்கை யுண்டானாலும் எல்லாச் சகோதரர்களுக்கும் நாசம் உண்டாகும். இதற்கு விபரீதமாயின் சகோதர சுகமும் குணமும் உண்டாகும். எப்படி யெனில் மூன்றாமிடம் சுபக்கிரகங்களுடைய இராசி

யாகவும் சுபக்கிரக சேர்க்கை யுள்ளதாயுமிருப்பின் சகோதரர்களுக்குச் சுபமுண்டாகும். மூன்றுமிடம் சுபர் பாபர் ஆகிய இவர்களது சேர்க்கையும் பார்வையும் உடையதாயின் சில சகோதரர்களுக்கு நாசமும், சில சகோதரர்களுக்கு சௌக்கியமும் உண்டாகும். இவ்விதலட்சணங்களை பலாபலத்திற்குத் தக்கபடி நிர்ணயித்துச் சொல்ல வேண்டும்.

சு. 22. மூன்றும் பாவத்தில் எத்தனை நவாம்சங்கள் சென்றிருக்கின்றனவோ அத்தனை சகோதரர்கள் உண்டென்ப. 3-ஆமிடத்தில் எத்தனை கிரகங்களுடைய திருஷ்டா திருஷ்டியம்சங்களுண்டோ அத்தனைச் சகோதரர்கள் உண்டென்றும் சொல்லலாம். சத்துரு க்ஷேத்திரத்திலும் நீச க்ஷேத்திரத்திலுமுள்ள நவாம்சங்களுக்கு ஹானியும், மித்துரு க்ஷேத்திரம் ஸ்வக்ஷேத்திரம் உச்சக்ஷேத்திரம் முதலிய நவாம்சங்களுக்கு புஷ்டியும் உண்டாகும். ஸ்வக்ஷேத்திர நவாம்சத்தை இரட்டிப்பித்தும் உச்சநவாம்சத்தை 3-இல் பெருக்கியும் கொள்ள வேண்டு மென்று பக்ஷாந்தரமுமுண்டு. மூன்றும் பாவாதி பதியினுடையவோ செவ்வாயினுடையவோ நவாம்ச சங்கியையின் அளவோ அல்லது கிரணத்தின் சங்கியை அளவோ சகோதரர்கள் உண்டென்றும் சொல்ப. செவ்வாயின் அஷ்டவர்க்கங்கொண்டும் சகோதரபாவம் நிர்ணயிக்க வேண்டுமென்ப.

சு. 23. செவ்வாயின் பார்வையோடு கூடின சனி 3-ஆம் பாவத்தில் இருப்பின் உண்டாகின்ற சகோதரர்களெல்லோரும் மரணமடைவர். அங்கு குருவின் பார்வையோடு கூடி சுக்கிரன் இருப்பின் அதிகமாய்ச் சகோதரர்கள் உண்டாவார்கள். அவர்களும் தீர்க்காயுளுடையவர்களாகவும் இருப்பார்கள்.

சு. 24. செவ்வாயின் பார்வையோடு கூடிய புதன் 3-ஆமிடத்திலிருந்தால் சகோதரர்களுக்கு நாசமுண்டாகும். பாவாத்தியாயத்தில் சொல்லியபடி மற்ற இதர கிரகங்களைக் கொண்டும் சகோதர்களின் சுபா சுபங்களை நிர்ணயித்துச் சொல்லவேண்டும்.

சு. 25. ஐந்தாம் பாவம் சுபராசியாயும் அதில் சுபக்கிரகங்கள் இருந்தாலும் பார்த்தாலும் புத்திர சித்தி யுண்டாகும். இதற்கு விபரீதமாயின் புத்திர தோஷ முண்டாகும். 5-ஆம் பாவம் பாப க்ஷேத்திரமாயும், பாபக்கிரகங்களுடைய சேர்க்கையும் திருஷ்டியுமுடையதாயின் புத்திரனில்லையென்ப.

சு. 26. இலக்கினமோ சந்திர லக்கினமோ பலமென்பதை யறிந்து அதற்கு 5ஆமிடம் சுபராசியாகவும் அதற்குக் குருவினுடைய திரேஷ்காணாதி ஷட்வர்க்கங்களில் ஏதாவதொன்றுண்டானாலும் ஔரசபுத்திரன் (தன் சொந்த ஜாதி மனைவியின் வயிற்றில் தனக்குப் பிறக்கின்ற குமாரன்) உண்டாவன். பலவானான மற்ற சுபக்கிரகங்களுடைய பார்வை யுண்டானாலும் ஔரச புத்திரன் உண்டாவானென்று சொல்லுக.

சு. 27. 5ஆம் பாவாதிபனின் நவாம்ச எண்ணின் அளவுப்படி சந்தானங்கள் உண்டாகும். அதில் சுபர் திருஷ்டியோடும் சுபர் சேர்க்கையோடும் சுபக்ஷேத்திர ஸ்திதியோடும் கூடிவருகின்ற அம்சகத்தினுடைய எண்ணின் அளவான சந்தானங்களுக்குப் புஷ்டியும், பாப க்ஷேத்திரத்தில் பாபர்திருஷ்டியோடும் பாபர் சேர்க்கையோடும் கூடி வருகின்ற அம்சகத்தினுடைய எண்ணின் அளவான சந்தானங்களுக்கு ஹானியும் சம்பவிக்கும். சுபக்ஷேத்திரத்தின் அம்சகத்திற்குப் பலவானான சுபக்கிரகங்களுடைய பார்வையுண்டானால் அதை இரட்டிக்கவும். ஓஜராசி அம்சகங்களைக் கொண்டும் புருஷ கிரகங்களின் சேர்க்கை திருஷ்டிகளைக் கொண்டும் புருஷ சந்தானத்தையும் யுக்ம ராசி அம்சங்களைக் கொண்டும், ஸ்திரீ கிரகங்களுடைய சேர்க்கை திருஷ்டிகளைக் கொண்டும் ஸ்திரீ சந்தானத்தையும் சொல்லவேண்டும். 5-ஆம் பாவாதிபன் சத்துரு க்ஷேத்திரத்திலும் அதி நீசத்திலும் (பரமநீசம்) மௌட்யத்திலும் (அஸ்தமனம் அல்லது மூடம்) இருந்து பாபசம்பந்தம்பாபதிருஷ்டி முதலிய தோஷங்களையடைந்து சுபர் சம்பந்தமும் சுபர் பார்வைகளும் இருப்பின் சந்தானசித்தி அரிதாகவும் இருக்கும்.

சு. 28. 5-ஆம் பாவம் மகரமாகவோ கும்பமாகவோ அல்லது சனியின் வர்க்கமாகவோ இருந்து புதனது திருஷ்டி பெற்று சூரியன் செவ்வாய் குரு இவர்களின் பார்வை இல்லாமலிருப்பின், * க்ஷேத்திரஜன் ஆன புத்திரன் உண்டாவன். 5-ஆ மிடம் மிதுனமோ கன்னியோ அல்லது புதனின் வர்க்கங்களாகவோ ஆகி சனியின் திருஷ்டி பெற்று சூரியன் செவ்வாய் குரு இவர்களின் திருஷ்டியில்லாமலிருப்பின் க்ஷேத்திரஜனான புத்திரன் உண்டாவன்.

---

* தன்னுடைய புத்ரோத்பத்திக்கு நபும்சகத்தனம் ஏற்பட்டு வியாதிகளால் வீர்யாதிகள் குறைந்து புத்திரோத்பத்திக்கு அசமர்த்தனமாயுள்ள புருஷன், சம்மதத்தின் பேரில் தன் தர்ம பத்தினி வயற்றில் அன்னியர்களால் உற்பத்தியான புத்திரன் க்ஷேத்திர ஜன் எனப்படுவான்.

சு. 29. ஐந்தாமிடம் மகர கும்பமாகி அதில் சனியிருந்து அந்தச் சனியைச் சந்திரன் பார்த்தால் சுவீகார புத்திரனுண்டாவன். மேற்சொன்னவாறு 5-ஆ மிடம் புதக்ஷேத்திரமாகி அதில் புதனிருந்து அந்தப் புதனைச் சந்திரன் பார்த்தால் கிரீதனென புத்திரன் உண்டாவன். விதிப்படிதத்துகொண்டு ஸ்வீகரிக்கின்ற புத்திரனைச் சுவீகார புத்திரனென்றும், தனக்குச் சமமோ சமமில்லாதவனோ எனப்பாராமல் குழந்தையின் தாய் தகப்பன்மார்களுக்கு விலை கொடுத்து சுவீகரிக்கப்பட்ட புத்திரன் கிரீத புத்திரனும்.

சு. 30. ஏழாம் பாவம் மேடம் விருச்சிகமாகி 5-ஆமிடத்தில் சனியிருந்து வேறு கிரகங்களின் திருஷ்டியில்லாமலிருப்பின் கிரித்திரிம புத்திரன் உண்டாவன். ஒரு புத்திரனுக்கு வேண்டிய சகல குணங்களும் உண்டென்று கண்டு வாத்சல்யத்தினால் தானாகவே சுவீகரிக்கப்படுகிற சிசு கிருத்திரிம புத்திரன் என்ப. அஃதாவது பெற்றோர் சம்மதமின்றி சுவீகாரம் சென்றவன் கிரித்திரிமன்.

சு. 31. 5-ஆமிடம் சிம்ம விராசியாகி அதில் செவ்வாயின் திருஷ்டியோடு கூடிய சூரியன் இருந்தால் அதம குலத்தில் பிறந்த புத்திரன் சம்பவிக்குமென்ப.

சு. 32. சந்திரன் மேட விருச்சிகங்களில் இருந்து 5-ஆமிடத்தில் உள்ள சனியின் திருஷ்டி சந்திரனுக்கு ஏற்பட்டு மற்ற கிரகங்களின் திருஷ்டி யில்லாமலிருப்பின் கருடோற்பன்னனென புத்திரன் உண்டாவன். கருப்ப உற்பத்தி செய்தது இன்னாரென நிச்சயமாய்த் தெரியாவிடினும் தன்னுடைய கிருகத்தில் உண்டாகின்ற புத்திரன் கருடோற்பன்னனென புத்திர னென்றறிக.

சு. 33. 5-ஆம் பாவம் மகர கும்பமாகி அதில் செவ்வாயிருந்து அதைச் சூரியன் பார்த்தால் அபவித்தனென புத்திரனுண்டாவன். தாய் தந்தையர்களால் தள்ளப்பட்டுள்ள சிசுவை வேறொருவர் வளர்க்க அப்படி வளர்ந்த சிசு வளர்த்தவர்களுக்கு அபவித்த புத்திரனவனென்க.

சு. 34. சந்திரன் மகர கும்பம் இவைகளிலாவது அல்லது சனியினுடைய மற்றவர்க்கங்களிலாவது இருந்து 5-ஆம் பாவத்தில் இருக்கின்ற சனியைச் சூரியனும் சுக்கிரனும் சேர்ந்து பார்த்தால் பௌனர்ப்பவனென புத்திரன் உண்டாவன். பர்த்தாவினால் நீக்கப்பட்டவளோ விதவையோ ஆன ஒரு ஸ்திரீ தன்னிஷ்டம்போல் வேறொருவரைக் கொண்டு ஒரு புத்திரனை உற்பத்தி செய்து கொள்ளின் அந்த

சிசு அவளுடைய புருடனுக்கு பௌனர்ப்ப புத்திரன் என்று சொல்லப்படுவன்.

சு. 35. சந்திரன் மிகவும் குறைந்த ரச்மிகளோடு கூடி க்ஷீணனாகி மௌட்யத்துடன் (அஸ்தமனம் அல்லது மூடம்) கூடி ஏதாவதொரு ஸ்தானங்களிலிருந்து 5-ஆமிடத்திற்குச் சூரியனின் சம்பந்தமோ திருஷ்டியோ ஏற்படின் கானீனனென புத்திரன் உண்டாவன். திருமணம் செய்வதற்கு முன்பே கருப்பம் உண்டாய் மணமான பின்பு கருப்பத்திலிருக்கும் சிசுவையே மணமகனுக்கு கானீன புத்திரன் என்று சொல்லுவர் பெரியார்.

சு. 36. 5-ஆமிடம் கடக சிம்மமாகவோ அல்லது சந்திரன் சூரியன் இவர்களுடைய வர்க்கங்களாகவோ ஆகி அதில் சூரியன் சந்திரன் இவர்களிருந்து அவர்களுக்குச் சுக்கிரனுடைய திருஷ்டியுண்டாயிருப்பின் சகோடனென புத்திரன் உண்டாவன். கருப்ப உற்பத்தி செய்ததுதான் அல்லது அன்னியன் என்பது நிச்சயமில்லாவிடினும் பும்சவனாதி கிரியைகளைக் கொண்டு ஸமஸ்கிருதயான ஸ்வ பாரியாளிடத்துச் சந்தேகமாக உண்டாகும் புத்திரனைச் சகோடன் என்று பெரியார் கூறுப.

சு. 37. 5-ஆம்பாவம் பாபர்களுடைய இராசியாகவும் அதில் பலமுள்ளவர்களான பாபக்கிரகங்களிலிருந்து அவர்களைச் சுபக் கிரகங்கள் பார்க்காவிடின் புத்திரன் உண்டாக மாட்டான். சுபக்கிரக திருஷ்டி யுண்டானால் பிராயச் சித்தஞ் செய்யின் சந்தானோற்பத்தி யுண்டாகும்.

சு. 38. 5-ஆம் பாவம் சுக்கிர நவாம்சத்தோடும் சுக்கிரனுடைய திருஷ்டியோடும் கூடியிருப்பின் தாசியாதி மனைவி வர்க்கங்களில் சந்தான முண்டாகும். இந்த யோகம் சந்திராலக்கினத்தினுடைய 5-ஆம் பாவங்கொண்டும் நிர்ணயிக்கலாமென சில ஆசாரியார்கள் அபிப்பிராயப் படுகின்றனர். சந்திரனுக்குப் பலமிருப்பின் மேற் சொன்னவாறு சந்தான முண்டாகும் என்ப. இவனையே தாசீபிரபவன் என்று கூறுப.

சு. 39. 5-ஆம் பாவம் இடபம் கடகம் துலாம் இந்த ராசிகளாகி சந்திரன் சுக்கிரன் இவர்களுடைய வர்க்கங்களோடு கூடி அதற்குச் சந்திரன் சுக்கிரன் இவர்களின் சம்பந்தமாவது திருஷ்டியாவது இருப்பின் கூடியவரை பெண் சந்ததிகளே யுண்டாம். 5-ஆமிடம் யுக்மராசியாயும், சந்திர சுக்கிரர்கள் யுக்மராசி ஸ்திதி யம்சங்களோடு

கூடியவராயு மிருப்பின் மேற்சொன்ன பலன் பூர்ணமாயிருக்கும். 5-ஆம் பாவம் ஓஜராசியாயும், சந்திர சுக்கிரர்கள் ஓஜ ராசிஸ்திதியம்சங்களோடு கூடியவராயு மிருப்பின் புருஷ சந்ததிகளே யுண்டாம். இங்கே சொன்ன யோகங்களுக்கெல்லாம் மற்ற கிரகங்களின் சம்பந்தம் திருஷ்டி யுண்டானால் பலன்களும் வேறுபடும். ஆதலால் நிதானித்துச் சொல்லவேண்டும். (இந்த பலன்களை ஸ்தானத்திற்குத் தக்கபடியே சொல்க.)

சு. 40. இலக்கினத்திற்குப் பத்தாம் பாவத்தில் சந்திரனும் ஏழாம் பாவத்தில் சுக்கிரனும் நான்காம்பாவத்தில் பாபர்களு மிருப்பின் வம்ச நாச கர்த்தாவாவன். இவனோடு இவன் குலமும் நசித்துவிடுமென்ப.

சு. 41. 5-ஆமிடத்தில் செவ்வா யிருப்பின் உண்டாகின்ற எல்லாப் புத்திரர்களும் அப்பொழுதே மரண மடைவர். குரு பலவானாகி 5-ஆமிடத்தையோ 5-இல் இருக்கின்ற செவ்வாயையோ பார்த்தால் முதலில் உண்டாகும் புத்திரர்களுக்கு மரணமும், பின் உண்டாகும் புத்திரர்களுக்குச் சுகமும் உண்டாகும். சுக்கிரனுடைய திருஷ்டியோ அல்லது இதர கிரகங்களுடைய திருஷ்டியோ இருப்பின் இப்பலன் நிர்ணயமாய்ச் சொல்ல முடியாது. செவ்வாய் லக்கினாதிபனாகவோ 5-ஆம் பாவாதிபனாகவோ ஆகி 5-இல் இருந்தால் புத்திர உற்பத்தியாகும்.

சு. 42. எல்லாப் பாபக்கிரகங்களும் கூடி 5-ஆமிடத்திலிருப்பின் *வைகல்யம் உள்ளவனும், அங்கு சனி மட்டும் தனித்திருப்பின் வியாதிகளை அநுபவிக்கின்றவனும் இருப்பன். குரு சுக்கிரன் புதன் இவர்கள் சேர்ந்து 5-ஆமிடத்தி லிருப்பின் சௌக்கியமும் சம்பத்தும் தனமும் உள்ளவனு யுமிருப்பன்.

சு. 43. சனியின் திருஷ்டியோடு கூடிய செவ்வாய் ஆறாமிடத்தி லிருப்பின் சத்ருக்களினால் உபத்திரவத்தை யடைவன். அந்தச் செவ்வாய்க்குச் சுபக்கிரகத்தின் சம்பந்தமோ திருஷ்டியோ உண்டாயிருப்பின் சத்ருக்களினால் அதிகமான பயம் உண்டாவதில்லை.

சு. 44. ஆறும் பாவாதிபனான கிரகத்தினுடைய அம்சக எண்ணின் அளவு சத்துருக்கள் உண்டென்று புத்தியுள்ள தைவக்ஞ

* வைகல்யம் = கலக்கம்—குறைவு—சூனியம்—தகுதியின்மை.

ஞன ஜோதிஷன் நிர்ணயித்துச் சொல்லக்கடவன். முன்பாவாத்தியாயத்தில் விஸ்தரித்துச்சொல்லிய பிரகாரம் 6-ஆம் பாவத்திற்குள்ள மற்ற பலன்களையும் தெரிந்து சொல்லவேண்டும்.

சு. 45. பூர்ணசந்திரன் புதன் குரு சுக்கிரன் ஆகிய இந்நான்கு கிரகங்களுமோ அல்லது இவர்களில் மூன்றோ இரண்டோ ஒன்றோ ஏழாம்பாவத்தைப் பார்த்தாலும் அல்லது அதில் இருந்தாலும், அல்லது இவர்களுடைய இராசி சம்பந்தம் வர்க்கம் பாவம் இவைகளோடு கூடி சுபலட்சணங்களு முண்டாயிருந்தாலும் அந்த ராசிகள் அதன் வர்க்கங்கள் அதிபதிகள் இவைகளுக்கேற்ற ஆகிருதி பிரகிருதிகளோடு கூடியுள்ள மனைவியர்கள் உண்டாவார்கள்.

சு. 46. பாபக்கிரகங்கள் ஏழாமிடத்திலிருந்தாலும் பார்த்தாலும் அவர்களுடைய ராசியாவது வர்க்கங்களாவது 7-ஆமிடத்திற்கு அமைதல் முதலான அசுபலட்சணங்கள் அச்சப்தம பாவத்திற்குண்டாயிருந்தாலும் அந்த கிரகங்களுடைய சுபாவத்தை யொத்த ஸ்திரீகள் உண்டாகிறதோடு களத்திர நாசமும் உண்டாகும். இலக்கினம் அல்லது சந்திரலக்கினம் இவைகளின் பலாதிக்கியத்துக்குத் தகுந்தபடி இப்பலன்களை ஜன்மலக்கினத்திற்காவது சந்திரலக்கினத்திற்காவது ஏழாமிடத்தைக்கொண்டு சொல்லவேண்டுமென்ப. புருஷ ஜாதகத்தில் சந்திரனும் சனியும் ஏழாமிடத்திலிருப்பின் முன் வேறொருவனுக்கு கல்யாணம் செய்யப்பட்ட பெண் இவனுக்கு மணம் செய்யப்படுவாள்.

சு. 47. ஏழாம்பாவாதிபனுன கிரகத்தினுடைய நவாம்ச எண்ணின்படியும் ஏழாம்பாவத்திற்கேற்படும் திருஷ்டியின் எண்ணின்படியும் பாரியை உண்டாவாள். 7-ஆம் பாவம் சூரியன் செவ்வாய் குரு புதன் இவர்களின் ராசி யம்சங்களோடு கூடியதா யிருப்பின் ஒரே மனைவி மட்டும் உண்டு.

சு. 48. ஏழாம்பாவம், சந்திரன் சுக்கிரன் இவர்களுடைய ராசியாகவோ வர்க்கங்களாகவோ ஆகி அதற்குச் சந்திரன் சுக்கிரன் இவர்களுடைய சம்பந்தமோ திருஷ்டியோ உண்டாயின் அநேக மனைவியர்கள் உண்டாவர். சந்திரனைக்காட்டிலும் சுக்கிரனுக்கு வெகு மனைவியர்கள் உண்டாவார்கள் என்று கூறுப.

சு. 49. ஏழாம்பாவம், குரு சுக்கிரர்களுடைய ராசி யம்சங்களோடும் இவர்களின் சம்பந்த திருஷ்டிகளோடும் கூடியிருப்பின் சொந்த ஜாதியிலும், சூரியன் செவ்வாய் சந்திரன் சனி இவர்களுடைய

ராசி யம்சகஸ்திதி திருஷ்டி சம்பந்தங்களோடு கூடியிருப்பின் தாழ்ந்த குலத்திலும் சுக்கிரன் சந்திரன் இவர்களின் ராசியாதி பத்தியங்களால் வேசியா சாம்யம் உள்ள குலத்திலும் மனைவியர்களை மணப்பன்.

சு. 50. ஏழாம்பாவத்தில் செவ்வாயிருப்பின் மனைவியோடிருக்கத்தக்க காமக்கிழத்தி யுண்டாவள். அந்தச் செவ்வாய்க்கு சனியின் திருஷ்டி யேற்பட்டு இதர கிரகங்களின் திருஷ்டியில்லாம லிருப்பின் நிச்சயமாய் மனைவி இறந்து விடுவாள்.

சு. 51 செவ்வாயும் சுக்கிரனும் சேர்ந்து ஏழாமிடத்திலோ ஐந்தாமிடத் லோ 9-ஆமிடத்திலோ இருந்தால் அங்கஹீனமுள்ள மனைவியோடு கூடியவனு யிருப்பானென்று அறிவுடையோர்கள் நிச்சயித்திருக்கின்றார்கள். சூரியனும் சுக்கிரனும் கூடி மேற்சொன்ன பாவத்தில் இருப்பினும் மனைவி அங்கஹீன முள்ளவளாவள் என்பது மதாந்தரம்.

சு. 52. புருஷனுடைய லக்கினத்திற்கு 12-ல் சந்திரனும் 6-ல் சூரியனும் இருந்தாலும், அல்லது 12-ல் சூரியனும் 6-ல் சந்திரனும் இருந்தாலும் அந்த ஜாதகன் ஒற்றைக்கண்ணுடையனு யிருப்பன். அவனுக்கு வாய்க்கும் மனைவியும் ஒற்றைக்கண்ணுடையளாய் வாய்ப்பளென்று எல்லா மகரிஷிகளும் திடமாகக் கூறியுள்ளார்கள்.

சு. 53. இலக்கினத்தில் சனியும் 7-ஆம் பாவம் கடகம் விருச்சிகம் மீனம் ஆகிய இவற்றுள் ஒரு ராசியாகி அதில் அந்திய நவாம்சத்தில் சுக்கிரனும் இருப்பின் அவனுடைய மனைவி மலடியாயிருப்பாள். 5-ஆமிடத்தில் சுபக்கிரகம் இருப்பின் மேற்சொன்ன மலட்டுத் தோஷம் உண்டாவதில்லை.

சு. 54. இலக்கினம்-10-12-இம் மூன்றிடங்களிலாவது அல்லது இரண்டிடங்களிலாவது அல்லது ஒரேயிடத்திலாவது சூரியன் செவ்வாய் இவர்கள்இருந்து க்ஷீணசந்திரன் 5-ஆம் பாவத்திலுமிருப்பின் அந்த ஜாதகனுக்கு மனைவியும் புத்திரர்களும் கிடையா.

சு. 55. ஏழாம் பாவம், சனி செவ்வாய் இவர்களுடைய இராசிகளாகவோ வர்க்கங்களாகவோ ஆகி அவ்விடத்தில் செவ்வாய் சனி இவர்கள் திருஷ்டியோடு கூடிய சுக்கிரனிருப்பின் அப்புருடனும் அவனுடைய மனைவியும் விபசாரம் செய்பவர்களாயிருப்பார்கள். இதுவிஷயமாய் வராகமிகிராசாரியார் பக்ஷத்தில் சிறிது பேதம்

உண்டு. அஃதாவது மேற்சொன்ன யோகத்தில் புருடன் பரஸ்திரீ கமனனுயிருப்பானென்பதும், செவ்வாயும் சனியும் சந்திரனும் கூடி 7-ஆமிடத்தில் இருந்து மேற்சொன்ன ராசிவர்க்கங்களில் நிற்கின்ற சுக்கிரனைப் பார்த்தால் தம்பதிகள் இருவரும் விபசாரம் செய்பவரா யிருப்பார்கள் என்பதுமாம்.

சு. 56. சந்திரனும் சுக்கிரனும் கூடி ஒரேயிடத்திலும் செவ்வாய் சனி இவர்கள் ஏழாமிடத்திலும் இருந்தால் மனைவி புத்திர இவர்களோடு கூடாதவனுயிருப்பான். ஏழாம்பாவத்திற்குச் சுபக்கிரகங்களுடைய திருஷ்டியிருப்பின் விருத்தாப்பிய காலத்தில் மனைவி லாபமுண்டாகும்.

சு. 57. சுக்கிரன், குரு, புதன், சந்திரன் என்ற இக்கிரகங்களில் ஒன்ருே இரண்டோ மூன்ருே நான்கோ ஏழாமிடத்திலிருந்தாலும் பார்த்தாலும் புருஷனுக்கு மேலும் மேலும் களத்திரம் குணவதியாயும், அநேக ஐஸ்வரியங்களுடையவளாயும் இருப்பள்.

சு. 58. 11-ஆமிடத்தில் சூரியன் இருந்தாலும் பார்த்தாலும் அல்லது சூரியன் வர்க்கமாய் இருந்தாலும் ராஜாக்கள் மூலமாயும், யுத்தாதி கிருத்தியங்கள் மூலமாயும், திருடர்கள் மூலமாயும், வனப்பிரதேசங்களில் சஞ்சரிக்கும் ஆடு பசு காளை யானை முதலான நாற்கால் வர்க்கங்களின் மூலமாயும் நிச்சயமாய்த் தனலாபம் உண்டாகும்.

சு. 59. 11-ஆம் பாவத்திற்குச் சந்திரனுடைய சம்பந்தமோ வர்க்கமோ திருஷ்டியோ உண்டானல் ஸ்திரீகள் ஜல சம்பந்தமான காரியங்கள் யானைகள் இவைகள் மூலமாக தனலாபமுண்டாகும். க்ஷீண சந்திரனுயின் லாபத்தில் குறைவும், பூர்ண சந்திரனுயின் புஷ்டியும் உண்டாகும்.

சு. 60. 11-ஆம் பாவத்திற்குச் சேவ்வாயின் வர்க்கம் திருஷ்டி இவைகள் உண்டாயின் சுவர்ணம் ஆபரணம் பவளம்மாணிக்கம் இவைகளினுல் லாபம் உண்டாகும். அல்லது இவைகள் நிமித்தமாயுள்ள லாபம் உண்டாகும். அல்லாமலும் சாகசகர்மங்கள் சஞ்சாரம் அக்கினி ஆயுதம் ஆகிய இவைகளினுலும் லாபம் உண்டாகும்.

சு. 61. 11-ஆம் பாவத்திற்குப் புதனுடைய சம்பந்தமோ வர்க்கமோ திருஷ்டியோ உண்டாயின் சித்திர வேலைகள் சித்திர எழுத்து கிரந்தம் எழுதல் காவ்ய மியற்றல் காவ்யங்கள் படித்தல்

படிப்பித்தல் இவைகளாலும், ஓட்டுப் பாத்திரங்களாலும் திரவிய லாபம் உண்டாகும்.

சு. 62. 11-ஆம் பாவமானது குருவின் ராசி வர்க்கம் திருஷ்டி சம்பந்தம் இவைகளைப் பெற்றால் நகரவாசிகள் விமானாதிகள் வாகனங்கள் இயம நியமாதி யோகங்கள் யாகம் முதலான விசிஷ்ட புண்ணிய கர்மங்கள் இவைகளால் சுவர்ணாதி தனலாபமும், குதிரை முதலானவைகளுடைய அபிவிருத்தியும் உண்டாகும்.

சு. 63. 11-ஆம் பாவமானது சுக்கிரனுடைய ராசிவர்க்கம் திருஷ்டி இவைகளைப் பெற்றால் தாசிகளின் சகவாசங்களாலும், சமனாகமனங்களான சஞ்சாரத்தாலும், முத்து ரத்னம் வெள்ளி இவைகளினாலும் தனலாபம் உண்டாகும்.

சு. 64. 11-ஆம் பாவம் சனியினுடைய சம்பந்தமோ திருஷ்டியோ வர்க்கமோ உள்ளதாயிருப்பின் நகரம் பட்டணம் சமூகம் இவை சம்பந்தமான பிரவிருத்திகளாலும், பூமி முதலான தாவரங்கள் சம்பந்தமான விவசாய கர்மங்களாலும், இரும்பு கழுதை எருமை இவைகளாலும் தனலாபம் உண்டாகும்.

சு. 65. 11-ஆம் பாவத்தில் இருக்கும் கிரகங்களைக் கொண்டாவது, அல்லது பார்க்கும் கிரகங்களைக் கொண்டாவது, இரண்டும் இல்லாவிடில் ராசியாதி வர்க்க சம்பந்தமுள்ள கிரகங்களைக்கொண்டாவது, மேல்விவரித்தபடி தீர்மானித்துச் சொல்ல வேண்டியது. 11-ஆமிடத்திற்குச் சுபக்கிரகங்களுடைய பார்வையுண்டாயிருப்பின் இப்பலன்கள் விசேஷமாய்க் கிடைக்கும். பாபக்கிரகங்களின் பார்வையுண்டாயிருப்பின் பலன்களுக்குக் குறைவு உண்டாகும். சுபரும் பாபரும் கூடிப் பார்ப்பின் பலன்கள் குறைவாக உண்டாகும்.

சு. 66. 11-ஆமிடத்திற்குப் பலகிரகங்களுடைய சம்பந்தமும் திருஷ்டியுமுண்டாயின் அந்தந்த கிரகங்களுக்குச் சொல்லிய பிரகாரம் பலவிதமாய பலன்கள் உண்டாகும். பலம் பெற்ற கிரகங்களின் பலன்தான் பிரதானமாய் உண்டாகும்.

சு. 67. 11-ஆம் பாவத்தில் நிற்கின்ற கிரகம் ஸ்வக்ஷேத்திரம் பெறின் முக்கால்பலமும், மித்துருக்ஷேத்திரம்பெறின் அரைப்பலமும், உச்சத்திலிருப்பின் முழுபலமும், நீசத்திலிருப்பின் சொற்ப பலமும், சத்துரு க்ஷேத்திரத்திலிருப்பின் காற்பலமும் கொடுக்கின்றது. இங்ஙனம் ப் பலம் தான் இருக்கும் ஸ்தானத்திற்குத் தக்கபடி நிர்ணயிக்கப்

படுகின்றது. பலஹீனனுன கிரகத்தினுடைய பலன்கள் சிலசமயம் சொர்ப்பனத்தைப் போலவோ மனோராஜ்யத்தைப் போலவோ முடிகிறதென்று ஆசாரியார்கள் தீர்மானம் செய்திருக்கின்றார்கள்.

சு. 68. சாதாரண ஜனங்களுக்கு ஜனனகாலமுதல் இன்னின்ன விதத்தில் தனலாபம் உண்டாகுமென்பதை விருத்த யவனுசாரியர்கள் நிச்சயித்திருக்கின்றார்கள். அரசர்கள் நாட்டில் வசிக்கின்றவர்கள் பிரபுக்கள் முதலானவர்களுக்கு தனலாபம் கூடுதலாகுமென்று லோகாக்ஷன் சொல்கிறார். அரச குலத்தில் பிறந்த ஒருவனுக்கு ராஜயோகம் ஜாதகப்படி இல்லையெனின் அவன் அக்குல அம்சத்தையுடையவனுயிருப்பான். கூடுதலான மகாத்மியம் கிடைக்கமாட்டாது. வறுமைக் குடியில் பிறந்த ஒருவனுக்கு ராஜயோகாதிகள் உண்டாயின் அவன் அக்குடும்பத்தை மேன்மையாக்கி தனம் முதலானவைகளைச் சம்பாதித்து மற்றவர்களால் அபிமானிக்கப்படுபவனுய் இருப்பன். இத்தியாதி பேதங்களை வராகமிகிராசாரியாரும் பிருகஜ் ஜாதகத்தில் நன்கு தெரிவித்திருக்கின்றார். மேற்சொன்ன பலன்களை காலம் தேசம் குலம் முதலான அவஸ்தைகளை யநுசரித்து சாஸ்திர தத்துவத்தை விடாமல் புத்தியைக் கொண்டு யோசித்துச் சொல்லவேண்டும்.

சு. 69. சூரியனே பலஹீனனுன சந்திரனே 12-ஆமிடத்தில் இருப்பின் அரசன் நிமித்தம் தனத்திற்கு நாசம் உண்டாகும். புதன் திருஷ்டியோடு கூடிய செவ்வாய் 12-ல் இருப்பின் பலவிதத்திலும் திரவியத்திற்கு நாசம் உண்டாகும்.

சு. 70. குரு சந்திரன் சுக்கிரன் ஆகிய இக்கிரகங்கள் செவ்வாயின் பார்வையோடுகூடி 12-ஆமிடத்தில் இருப்பின் தனவிருத்தியுண்டாகும். செவ்வாயின் திருஷ்டியில்லாதிருப்பன் தனத்திற்கு நாசமுண்டாகும். 12-ஆமிடத்தில் சுக்கிரன் இருப்பின் தனம் விருத்தியாகும். 12-ஆமிடத்தில் குரு இருப்பின் தனநாசமுண்டாவதோடு வறுமையு முண்டாகுமென்று பிரமாண மிருந்தாலும் செவ்வாய் திருஷ்டியோடுள்ள குரு இருப்பின் தன நாசத்தைச் செய்யவே மாட்டான் என்று மேற்சொன்ன சுலோக மூலமாய் ஏற்படுகின்றது.

சு. 71. இலக்கினம் புதன் திரேக்காணமாயிருக்கினும், அல்லது லக்கின திரேக்காணத்தில் புதன் இருக்கினும், கேந்திரத்திலுள்ள சனி அவைகளைப்பார்த்தாலும் அரச குலத்தில் பிறந்தவனுயிருப்பினும் அத்தனையும் நசித்து சிற்பவேலைசெய்து ஜீவிப்பான் என்று மகருஷிகள் நிச்சயம் செய்துள்ளார்கள்.

சு. 72. நவாம்சகத்தில் சுக்கிரன், கன்னி மகரம் கும்பம் ஆகிய இந்த ராசிகளில் இருந்து அது 12-ஆம் பாவமாய் சனியின் திருஷ்டியைப் பெற்று சூரிய சந்திரர்கள் 7-ஆமிடத்தில் இருப்பின் உத்கிருஷ்டமான குலத்தில் ஜனித்தவளா யிருந்தாலும் ஜாதகனின் தாய் அடிமைத் தொழில் செய்பவள் ஆவள்.

சு. 73. இலக்கினத்திற்குப் பத்தாமிடத்தில் சந்திரனும், 7-ஆமிடத்தில் செவ்வாயும் சூரியனிருக்கு மிராசிக்கு 2-ஆமிடத்தில் சனியும் இருப்பின் ஜாதகன் அங்கக் குறைவுள்ளவனுய் இருப்பான்.

சு. 74. சந்திரன், இரண்டு பாபர்களுக்கு மத்தியில் ஏதாவதொரு ராசியிலிருந்து சூரியன் மகர விராசியில் இருப்பின் சுவாசம் க்ஷயம் வித்திரதி (கட்டி) குன்மம் பீலிகை (வயிற்றிலுண்டாகும் கட்டி) இத்தியாதி ரோகங்களால் கஷ்டப்படுபவனுய் இருப்பான்.

சு. 75. இராசியில் சந்திரன் சிம்மத்திலும் சூரியன் கடகத்திலும் இருந்தாலும் அல்லது நவாம்சத்தில் மேற்சொன்ன பிரகாரமிருந்தாலும் க்ஷயரோக முள்ளவனுயிருப்பன். சூரிய சந்திரர்கள் ஒன்று கூடி ஒரு ராசியில் இருப்பின் சரீரத்தில் கொஞ்சங் கூட பலமில்லாதவனு யிருப்பான்.

சு. 76. சூரியன் சந்திரன் செவ்வாய் சனி இவர்கள் கிரமமாய் 8-6-2-12 இந்த ஸ்தானங்களில் இருப்பின் இரண்டு நேத்திரத்திற்கும் நாச முண்டாகும். இங்கு சூரியாதி கிரகங்கள் அஷ்டமாதிகளான பாவங்களில் நிற்பதற்கு முறையில்லை. இந் நான்கு கிரகங்கள் இந் நான்கு பாவங்களில் எவ்விடங்களில் நிற்பினும் 2-லும் 8-லும் மாத்திரம் கிரகங்கள் நிற்பின் வலது நேத்திரத்திற்கும், 6-லும் 12-லும் மாத்திரம் கிரகங்கள் நிற்பின் இடது நேத்திரத்திற்கும் நாசம் சொல்லவேண்டும். யோக கர்த்தாக்களான இந் நான்கு கிரகங்களில் பலவானுன கிரகத்திற்கு முன் சம்க்ஞா அத்தியாயத்தில் சொல்லியபடி வாதாதி தோஷ கோபங் கொண்டு நேத்திர ஹானிக்குள்ள காரணத்தையும் நிரூபித்துச் சொல்லவேண்டும் என்க.

சு. 77. பாபக் கிரகங்கள் (மேற்சொன்ன சூரியன் சந்திரன் செவ்வாய் சனி இவர்கள்) கிரமமாய் 9-11-3-5 இப்பாவத்தில் இருந்து சுபர்களின் திருஷ்டியில்லாமலிருக்கின் காது கேட்காத செவிடனுயிருப்பான். 9-லும் 3-லும் இருக்கும் பாபர்களைக் கொண்டு வலது செவிக்கும், 11-லும் 5-லும் இருக்கும் பாபர்களைக் கொண்டு இடது

செவிக்கும் நாசம் சொல்லவேண்டும். மேற்சொன்ன பாபக்கிரகங்கள் லக்கினத்திற்கு 7-ஆம் பாவத்தில் இருப்பின் பல்லிற்குக் கெடுதலுண்டாகும். தந்த சுகங் கொண்டு நாக்கு உதடு முதலானவைகளையும் சொல்லவேண்டும்.

ஐந்திலோ ஏழிலோ ஒன்பதிலோ செவ்வாயும் இலக்கினத்தில் சனியு மிருப்பின் உன்மாதரோகம் (பைத்தியம்) உள்ளவனு யிருப்பான். சந்திரன் க்ஷீணனுகி சனியோடு சேர்ந்து 12-ஆமிடத்தில் நிற்பினும் மேற்சொன்ன உன்மாதரோகம் உண்டாகு மென்று ஜோதிட வித்வான்கள் கூறுகின்றார்கள்.

முப்பத்துநான்காவது அத்தியாயம் முற்றிற்று.

# முப்பத்தைந்தாவது அத்தியாயம்.

## இராஜ யோகம்.

சு. 1. எல்லா யோகங்களைப் பார்க்கிலும் ராஜயோகத்திற்கு விசேஷத்துவம் உண்டு. ஆனதால் அந்த ராஜயோகம் ஒவ்வொரு ஜாதகத்திற்கும் அவசியம் நிர்ணயிக்க வேண்டியதாய் இருக்கின்றது. ஆகவே, அவ்வித ராஜயோகம் இந்த அத்தியாயத்தில் சொல்லப்படுகின்றது.

சு. 2. மூன்று அல்லது நான்கு கிரகங்கள் தங்கள் தங்களுடைய உச்ச இராசியிலாவது, மூலத்திரிகோண இராசியிலாவது, சர்வ பலத்தோடு கூடியிருப்பின், அரச வம்சத்தில் ஜனித்தவன் அரச பதவி யிலிருப்பான். ஐந்து அல்லது அதிக கிரகங்கள் மேற்சொன்னபடி யிருப்பின் அந்நிய வம்சத்தில் பிறந்தவனு யிருப்பினும் அரசனு யிருப்பான். மேலே சொன்ன எண்ணிக்கைகளுக்குக் குறைவு ஏற்படின், அவன் அரசனுக்குச் சமமானவனு யிருப்பான் ஆனுல் அரசனுக மாட்டான்.

சு. 3. பாபக்கிரகங்கள் தங்கள் தங்கள் பரமோச்சங்களி லிருந்தால் ஜாதகன் குரூர ஸ்வபாவமுள்ள அரசனுயிருப்பானென்று யவனேஸ்வரர் கூறுகின்றுர். சுபக்கிரகங்கள் உச்சம் பெற்றிருப்பின் சௌமியப் பிரகிருதியுள்ள அரசன் ஆவனென்றும் நிர்ணயிக்கின்றுர். இப்பிரகாரமுள்ள யோகத்தில் ஜனிக்கின்றவன் வெகுசம்பத்துக்கள் உள்ளவனுயிருப்பான். ஒருக்காலும் அரசனுக மாட்டான் என்று ஜீவசர்மா கூறுகின்றுர்.

சு. 4. இனி சொல்லப்போகும் ராஜயோகங்களில் ஜனித்தவர்கள் அந்நிய குலத்தில் ஜனனமாயிருப்பினும் அவர்கள் அரசபட்டம் பெறுவார்கள் என்கிற சில ஆசாரியார்களின் அபிப்பிராயத்தை யநுசரித்து அவ்வித ராஜயோகங்களே இங்கு கூறப்பெறுகின்றன.

சு. 5. சூரியன் குரு சனி செவ்வாய் ஆகிய இந்நான்கு கிரகங்களாவது, அல்லது இவர்களில் மூன்று கிரகங்களாவது (அவரவர்களுடைய) உச்சஸ்தானத்திலிருந்து அவ்வுச்சமான கிரகங்களிருக்கும் ராசியிலொன்று இலக்கினமாய் வரின் பதினுறு விதமான ராஜயோகம் கிடைக்கும். சந்திரன் கடகத்திலிருந்து மேற்சொன்ன

சூரியன் குரு சனி சேவ்வாய் இந் நான்கு கிரகங்களில் இரண்டு அல்லது ஒருகிரகம் உச்சத்திலு மிருந்து அதில் ஏதாவதொரு ராசிலக்கினமாய் வரின் 16-விதமான ராஜயோகம் உண்டாகும். இவ்விதமாக இங்கு காட்டிய 32 ராஜ யோகங்களில் ஜனித்தவர்கள் நீச குலத்தில் உதித்தவர்களா யிருப்பினும் அவர்கள் அரசர்களாவார்கள்.

சு. 6. இலக்கினமாவது சந்திரனாவது வர்க்கோத்தமாம்சத்தில் இருந்து அந்த இலக்கினத்தையோ சந்திரனையோ சந்திரனுக்கு மித்திரர்களான நான்கு கிரகங்கள் பார்த்தாலும் ராஜயோகம் உண்டாகும். இங்குலக்கினத்தைக் கொண்டும் சந்திரனைக் கொண்டும் தனிமையான யோகங்களுண்டாகு மென்று அறிந்து கொள்ளவேண்டும்.

சு. 7. மேட விராசி லக்கினமாகி அம்மேடத்தில் சந்திரன் செவ்வாய் குரு இவர்கள் கூடிநிற்கும்போது ஜனித்தவன் சகல எதிரிகளையும் ஜெயித்து சினத்தினால் தன்னுடைய சக்தியைப் பிரகாசிக்கச் செய்து சதுஸ் சமுத்திர முத்ரிதயான பூமியை ரக்ஷித்து அரசாட்சி செய்யும் வல்லமையுடைய அரசனாய் இருப்பான்.

சு. 8. குரு பரமோச்சத்திலும் மேஷத்தில் செவ்வாயும் இருந்து அம் மேடம் இலக்கினமானாலும், குருவும் செவ்வாயும் சேர்ந்து மேடலக்கினத்தி லிருந்தாலும் ராஜயோகம் உண்டாகும். இவ்வித யோகத்தில் பிறந்த அரசன் முன் சத்துருசைந்நியம் நிற்கின்றதில்லை. சிநேகத்துவம் உள்ள மந்திரிகளுக்குக் கூட அரசன் சமீபத்தில் வரவர பயம் உண்டாகும்.

சு. 9. கன்னியா லக்கினத்தில் ஜனித்து அதில் புதனும் செவ்வாய் பரமோச்ச பாகையிலும் சனி மகரவிராசியிலும் சந்திரனும் குருவும் சுக்கிரனும் 11-ஆமிடமான கடக விராசியிலும் இருப்பின் அநேக சாஸ்திரங்களை யறிந்து நிபுணத்துவம் பெற்ற அரசனாயிருப்பது நிச்சயமென்று அறிவாளிகள் கூறுகின்றனர்.

சு. 10. கடகராசி லக்கினமாகி அதில் பூர்ண சந்திரனும் 7-ஆமிடத்தில் புதனும் 6-ஆமிடத்தில் சூரியனும் 4-ஆமிடத்தில் சுக்கிரனும் 10-ஆமிடத்தில் குருவும் 3-ஆமிடத்தில் சனி செவ்வாய் இவர்களு மிருக்கும் பொழுது ஜனித்தவன் குடை சாமரம் முதலிய அரச சின்னங்களுடைய அரச சிரேஷ்டனாய் இருப்பன்.

சு. 11. இலக்கினமோ சந்திரனோ வர்க்கோத்தம நவாம்சத்தில் இருந்து சந்திரனைத் தவிர நான்கு அல்லது ஐந்து அல்லது ஆறு கிரகங்கள் பார்த்தாலும் அரசனா யிருப்பான்.

சு. 12. இடபம் லக்கினமாகி அதில் பரமோச்ச பாகத்தில் சந்திரனும் கும்பத்தில் சனியும் சிம்மத்தில் சூரியனும் விருச்சிகத்தில் ரச்மி பலத்தோடு கூடிய குருவும் இருக்கும்போது பிறந்தவன் அநேக (ஏராளமான) சம்பத்து வாகனங்கள் உள்ள அரசனாய் இருப்பான்.

சு. 13. மகரம் ஜன்ம லக்கினமாகி அதில் சனியும் மீனத்தில் சந்திரனும் மிதுனத்தில் செவ்வாயும் கன்னியில் புதனும் தநுசில் குருவும் இருக்கும்போது ஜனித்தவன் இந்திரனுக்குச் சமானமான அரசனாயிருப்பான்.

சு. 14. மீனம் லக்கினமாகி அதில் சந்திரனும் உச்சராசியான மகரத்தில் செவ்வாயும் சிம்மத்தில் சூரியனும் கும்பத்தில் சனியுமிருந்தால் அந்த ஜாதகனுக்கு ராஜயோகம் உண்டாம்.

சு. 15. செவ்வாய் லக்கின பாவத்திலும் பூரண சந்திரன் ஏழாம் பாவத்திலும் இருப்பின் எதிரிகளால் ஒருக்காலமும் தாக்க முடியாதவனாகவும், வேதார்த்தங்களை யறியும் ஆற்றலுள்ள அரசனாகவும் இருப்பான்.

சு. 16. மேட விராசியில் பரமோச்சத்தில் சூரியனிருந்து அம்மேட விராசியிலேயே சந்திரனும் இருந்து சூரியோதய காலத்தில் மேஷலக்கினத்தில் ஜனித்தவன் சகல ஜனங்களுடைய கண்களுக்கும் அமிருத தாரையைச் செய்கின்றவனான அரசனாயிருப்பான். அவ்விதம் கண்ணீரால் † சித்தனென்றாலும் சத்துரு அரசர்களுடைய ஸ்திரீகளின் ஹிருதயத்தில் நிரம்பவும் சோகாக்கினி ஜ்வலிக்கவே (பிரகாசிக்க) செய்கிறான். †சித்த = தெளிக்கப்பட்ட, நனைக்கப்பட்ட, கர்ப்பமாக்கப்பட்ட என்று பொருள்.

சு. 17. சுக்கிரன் கும்பத்திலும் செவ்வாய் மேஷத்திலும் இருந்து கடகத்தில் குரு அதியுச்சமாக இருக்கும்போது கடக லக்கினத்தில் ஜனித்தவன் சகல திக்குகளிலும் வியாபிக்கப்பட்ட கீர்த்தியோடு கூடிய அரசனாய் அழகோடு கூடி யிருப்பான்.

சு. 18. கடகம் இலக்கினமாகி அதில் பரமோச்ச பாகத்தில் குருவும் 10-ஆமிடமான மேடத்தில் சூரியனும் 11-ஆமிடமான இடபத்தில் சந்திரன் புதன் சுக்கிரன் இவர்களுமிருப்பின் தன்னுடைய கைபலங் கொண்டு சகல தேசங்களையும் ஜெயித்து அரசு செய்யும் ஆற்றலுள்ள அரசனாயிருப்பான்.

சு. 19. சந்திரனோடு கூடிய குரு தநுசிலும் செவ்வாய் மகரத்திலும் இருக்கும்போது மீனத்தில் சுக்கிர உதயமாக அல்லது கன்னியில் புதோதயமாக ஜனித்தவன் அரசனாய் இருப்பன்.

சு. 20. தநுரிராசியின் முற்பாகத்தில் சூரியனும் அத் தநுரிராசியிலேயே சந்திரனும் மகரத்தில் செவ்வாயும் துலாத்தில் அதிபலிஷ்டனான சனியும் இருக்கும்போது துலா லக்கினத்தில் ஜனித்தவன் பிரதாக்கினி எரித்துவிடுமென்ற பயத்தினால் தூரத்தில் நின்று சத்துருக்களால் வணங்கப்படுகின்ற அரசனாய் இருப்பன்.

சு. 21. ஜனன காலத்தில் சந்திரனிருக்கு மிராசிக்கு 6-ஆமிடத்திலும் 7-ஆமிடத்திலும் 8-ஆமிடத்திலும் புதன் குரு சுக்கிரன் என்ற இச்சுபக் கிரகங்கள் பாபக்கிரகங்களுடைய சம்பந்தம் திருஷ்டி சத்துரு க்ஷேத்திரம் நீசம் மூடம் இவைகளோடு கூடாமல் பலவான்களாயிருப்பின் சமுத்திரம் வரையிலுள்ள பூமியை அரசாட்சி செய்பவனாகவும், வண்டுகள் பருகத்தக்க மதநீரையுடைய யானைகளோடு கூடிய அரசனாகவுமிருப்பான்.

சு. 22. மேற்சொல்லப்பட்ட ராஜயோகமான அதியோகத்தில் ஜனித்தவன் சீக்கிரத்தில் ஜரை (கிழத்தனம்) அடையாதவனாயும், சத்துருக்களை ஜெயிக்கின்றவனாயும், தைரியம் சௌபாக்கியம் சௌக்கியம் இவைகளோடு கூடினவனாயுமிருப்பான்.

சு. 23. இலக்கினம் கன்னியாகி அதில் பரமோச்ச பாகத்தில் புதனும் மீனத்தில் குரு சந்திரர்களும் மகரத்தில் சனி செவ்வாய் இருவர்களும் மிதுனத்தில் சுக்கிரனும் இருக்கும்போது ஜனித்தவன் எதிரிகளோடு யுத்தம் செய்கின்றவனாயும், பராக்கிரமம் பொருந்திய யானைமுதலிய படைகளால் கிளப்பப்பட்ட தூசுகள் சூரியனை மறைத்து உலகத்தை அந்தகாரமயமாக்கச் செய்யும்படியான அரசனாய் இருப்பான்.

சு. 24. சூரியனும் குருவும் சேர்ந்து சிங்கத்திலும் சனி கும்பத்திலும் சந்திரன் இடபத்திலும் செவ்வாய் விருச்சிகத்திலும் புதன் மிதுனத்திலும் இருக்கும்போது மேடலக்கினத்தில் ஜனித்தவன் அரசனாய் இருப்பன். (சூரியன் சிங்கத்தில் இருக்கும்போது புதனுக்கு மிதுனஸ்திதி இக்காலத்தில் சம்பவிக்கின்றதில்லை. இது முன்கூறப்பெற்றுளது).

சு. 25. மேடம் லக்கினமாகி அதில் சூரியன் அதியுச்ச பாகையில் இருந்து குரு தநுசிலும் சனி சந்திரன் இவர்கள் துலாத்திலும் இருந்தால் அதிக அழகுள்ள அரசனாய் இருப்பான்.

சு. 26. சனி, சூரியன் செவ்வாய் இக்கிரகங்களோடு கூடி குரு புதன் சுக்கிரன் இவர்கள் ஸ்வக்ஷேத்திரத்தில் இலக்னம் 4-7-10 இப்பாவங்களிலுமிருந்து சூரியனே சந்திரனே அதியுச்சத்தில் நிற்கும் பொழுது அவைகளில் ஒரு ராசி மேடமாகவோ கடகமாகவோ ஆகி அதில் ஜனித்தவன் தன்னுடைய சைந்நியங்களை உலகமுழுதும் சஞ்சரிக்கச்செய்து நான்கு சமுத்திர ஜல முழுவதும் குடித்து வற்றச் செய்யும் ஆற்றலுள்ள அதிக சைந்நியங்களுடன் அரசாளும் சக்கரவர்த்தியாய் இருப்பான்.

சு. 27. இராசியில் பூரண சந்திரன் 4-ஆமிடத்திலிருந்து அச் சந்திரனே நவாம்சத்தில் * ஜலராசிகளில் ஏதேனும் ஒன்றில் இருந்து சுபக்கிரகம் ஸ்வக்ஷேத்திரத்தில் நிற்கும் இராசி இலக்கினமாகி அதில் ஜனித்து பாபக்கிரகங்கள் கேந்திரத்திலில்லாமலிருப்பாராயின் அவனுக்கு ராஜயோகம் கிடைக்குமென்று கூறுகின்றனர்.

சு. 28. குருவும் சுக்கிரனும் புதனும் பலவான்களாகி பரிபூர்ணகலைகளோடு கூடிய சந்திரனைப் பார்த்து ஏதாவது ஒரு ஸ்தானத்தில் இருந்தாலும், லக்கினாதிபன் அதிகபலவானயிருந்தாலும், வர்க்கோத்தமாம்சங்களோடு கூடிய உபயராசி (மிதுனம் கன்னி தநுசு மீனம் இவைகளிலொன்று) லக்கினமாயிருந்தாலும் ஜாதகனுக்கு ராஜயோகம் கிடைக்குமென்று கூறுகின்றார்கள்.

சு. 29. மூன்றோ அல்லது அதிகமான கிரகங்களோ பாபர்களோடு கூடாமலும் யுத்தத்தில் † ரூக்ஷதமில்லாமலும் ‡ வைவர்ணயத்தைப் பிராபிக்காமலும் கேதுவினால் § தூமிதராக இல்லாமலும் || பிரசன்னதையோடும் வர்க்கோத்தமாம்சத்தோடும் கூடி கேந்திரங்களில் இருப்பார்களேயானல் ஜாதகன் அரசனாவதற்குச் சந்தேகமில்லை.

சு. 30. ஒரே ஒரு கிரகம் தன்னுடைய உச்சராசியிலிருந்து வர்க்கோத்தமம் பெற்று மித்துருகிரகத்தின் திருஷ்டியோடும் கலாதி

---

* ஜலராசி = கடகம், மகரத்தின் பிற்பாதி, மீனம் ஆகிய இவைகளே ஜலராசியாம்.

† ரூக்ஷதம் = கடினம்.

‡ வைவர்ணம் = சுபாவநிறத்திற்கு வேறுபடுந் தன்மை.

§ தூமிதம் = மறைவுபடுதல்.

|| பிரசன்னம் = தோற்றம்.

பலங்களோடும் கூடியிருந்தால் இராஜயோகம் நிச்சயமாய்க் கிடைக்கும் என்ப.

சு. 31. எல்லாக் கிரகங்களும் சீர்ஷோதயங்களான (சிங்கம் கன்னி துலாம் விருச்சிகம் கும்பம் மிதுனம் ஆகிய இந்த) இராசிகளில் நீசமும் சத்துரு க்ஷேத்திரமும் பெறுமலிருந்து சந்திரன் கடக விராசியில் பரிபூர்ணபலம் பெற்று சுபக்கிரகத்தினுடைய திருஷ்டியோடு கூடி லக்கினத்திலிருந்தால் பூமி ரத்னங்கள் யானை குதிரை முதலானவைகளோடு கூடிய அரசனுய் இருப்பான்.

சு. 32. ஜனனகாலத்தில் சந்திரராசியாதிபன் சந்திரனுக்கு உபசயத்திலும் (3-6-10-11) சுபக்கிரகங்கள் சுபராசியான கேந்திரங்களிலும் (1-4-7-10) சுபாம்சங்களிலும் இருந்து பாபக்கிரகங்கள் பலஹீனர்களாய் இருப்பின் தன்னுடைய பலத்தினுல் இந்திரனுக்குச் சமானமான அரசனுயிருந்து அரசுபுரிவான்.

சு. 33. எல்லாக்கிரகங்களும் அவரவர்களுடைய பரமோச்ச பாகைகளில் பலம் பெற்று (பலவான்களாகி) மித்துரு கிரகங்களால் பார்க்கப்பட்டு சத்துருக்களின் திருஷ்டியில்லாமலுமிருப்பின் சத்துரு சமூகத்தோடு எதிர்க்கும் தலைமை வாய்ந்த யானைத்தலைவர்கள் குதிரைப் படைத்தலைவர்கள் ஆகிய இவர்களது பூமிகளைப்பெறும் அரசனுயிருப்பன்.

சு. 34. பரிபூரண சந்திரன் சுக்கிரனுடைய திருஷ்டியைப் பெற்று பரமோச்சத்திலிருந்து பாபக்கிரகங்கள் 3-6-9-12 இந்த ஸ்தானங்களிலுமிருந்தால் ராஜ யோகம் உண்டு.

சு. 35. சந்திரலக்கினத்தின் அதிபனும் இலக்கினத்தின் அதிபனும் ஆனகிரகங்கள் (இலக்கினத்திற்கு) கேந்திரஸ்தானங்களில் சர்வ பலத்தோடு கூடி மித்துரு கிரகங்களின் திருஷ்டியைப்பெற்று பாபர்களோடு கூடாமலும் அவர்களின் திருஷ்டியைப் பெறுமலும் யுத்தத்தில் தோல்வியடையாமலும் இருப்பின் ஜாதகன் அரசனுக ஆவன். இவ்விதயோகத்தில் ஜனித்த அரசனுடைய கீர்த்தியை அவனது உத்தமமான கஜசிரேஷ்டங்களுடைய மதஜலத்தைப் பருகி வருகின்ற வண்டுகள் நான்கு திசைகளிலும் கானம் செய்யும்.

சு. 36. ஏதாவதொரு கிரகம் உச்சம் பெற்று அதுவே ஜன்ம லக்கினமாகி உச்சத்திலோ ஸ்வக்ஷேத்திரத்திலோ மித்துருக்ஷேத்திரத்திலோ உள்ள நவாம்சகத்தோடு கூடி கேந்திரங்களிலிருக்கின்ற சுபகிரகங்களுடைய திருஷ்டியைப் பெறின் அரசனுவான்.

சு. 37. சூரியன் சிம்மத்திலும் சுக்கிரன் துலாத்திலும் செவ்வாய் மேடத்திலும் சந்திரன் கடகத்திலும் புதன் கன்னியிலும் சனிமகரத்தின் பிற்பாதியிலும் இருக்கும்போது ஜனித்தவன் ஏகசக்ராதிபத்தியத்தோடு பூமியை அநேக காலம் ரட்சிக்கும் அரசனுபிருப்பான்.

சு. 38. எல்லாக் கிரகங்களும்* ரச்மி சமூகத்தோடு கூடி வர்க்கோத்த மாம்சத்திலோ ஸ்வக்ஷேத்திரங்களிலோ இருப்பின் ஜாதகன் சகல சத்துருக்களையும் ஜயித்துப் பூமியை சுதந்தரமாக அனுபவிக்கும் ஆற்றலுள்ள அரசனுயிருப்பான்.

சு. 39. இலக்கினத்தில் ஒரு சுபக்கிரகமிருந்து அந்த லக்கினுதிபன் ஸ்வமித்துருக்களுடைய திருஷ்டியைப்பெற்று கேந்திரபாவங்களில் இருந்தால் நிச்சயமாக ராஜயோகம் உண்டாகும்.

சு. 40. சந்திரனும் குருவும் சேர்ந்து இடபலக்கினத்திலும் பலம் பெற்ற சுக்கிரன் மூலத்திரிகோணமான துலாத்திலும் இருந்து பலவானுன சூரியன் செவ்வாய் சனி இந்தக்கிரகங்களுடைய சம்பந்தமும் திருஷ்டியும் இல்லாமலிருப்பின் சகல சத்துருக்களையும் நாசஞ்செய்து தன்னுடைய கீர்த்தியினுலே இராஜரீகம் செய்யும் அரசனுய் இருப்பான்.

சு. 41. சந்திரன் பரிபூர்ண கலைகளோடு கூடியிருந்து மற்ற எல்லாக் கிரகங்களும் நீசக்ஷேத்திரங்களிலும் சத்துரு க்ஷேத்திரங்களிலும் (இராசியிலும் அம்சத்திலும்) இராமல் ஸ்வக்ஷேத்திரம் மித்துரு க்ஷேத்திரம் உச்ச க்ஷேத்திரம் இவைகளில் இராசியிலாவது அம்சத்திலாவது இருந்து உபசயத்தில் உச்சாம் சகத்தோடு கூடிய மித்துரு கிரகங்களுடைய திருஷ்டியைப் பெற்று இருப்பின் நிச்சயம் ராஜயோகம் கிடைக்கும்.

சு. 42. பரிபூர்ண கலைகளோடு கூடி வர்க்கோத்தமாம்சத்தில் இருக்கின்ற சந்திரன், ரச்மி பலத்தோடும் உச்ச பலத்தோடும் கூடியிருக்கும் ஏதேனு மொருகிரகத்தின் திருஷ்டியைப் பெற கேந்திரத்தில் பலம் பெற்ற பாபக்கிரகங்கள் இல்லாமலிருப்பின் பிரசித்தி பெற்ற அரசனு யிருப்பான்.

சு. 43. சந்திரலக்கினுதிபனும் இலக்கினுதிபனும் ஆனகிரகங்கள் கேந்திரஸ்தானங்களிலும் சந்திரன் ஜலராசியிலு மிருந்து அது லக்கினத்திற்கு 4-5-9-ஆம் பாவங்களாகவரின் அரசனு யிருப்பான்.

* ரச்மி. என்னுல் வெளியிடப்பெற்ற ஸ்ரீபதி ஜாதக பத்ததியிற் காண்க.

சு. 44. எல்லாக் கிரகங்களும் ஸ்வக்ஷேத்திரத்திலோ மித்துரு க்ஷேத்திரத்திலோ இராசியிலும் அம்சத்திலும் பலம் பெற்றிருப்பின் ஜாதகன் சக்கரவர்த்தியாய் இருப்பான்.

சு. 45. சூரியன் சந்திரன் செவ்வாய் குரு சுக்கிரன் சனி இந்த ஆறு கிரகங்களும் அவரவர்களுடைய பரமோச்ச பாகங்களில் இருக்க புதன் உச்சாம்சகத்தோடு கூடியிருப்பின் ஜாதகன் தேவர்களாலும் அசுரர்களாலும் வணங்கப்படுகின்றவனும், சுவர்க்க மத்திய பாதாளங்களென்று சொல்லப்பட்ட மூன்று லோகங்களுக்கும் அதிபதியாயுமிருப்பான்.

சு. 46. ஒரு ஜாதகனுடைய ஜனனகாலத்தில் வசிஷ்டன் வடக்குத் திசையிலும், வியாழன் கிழக்குத் திசையிலும், சுக்கிரன் மேற்குத் திசையிலும், அகஸ்தியன் தெற்குத் திசையிலும் நட்சத்திரரூபஸ்திதியுடன் காணப்பெறின் அரசனா யிருப்பான்.

சு. 47. சந்திரன் பரிபூர்ணனாகி ஸ்வக்ஷேத்திரம் உச்சம் இவைகளிலும், (இராசியிலும் அம்சத்திலும்) சுக்கிரனுடைய திருஷ்டியோடு கூடிய குரு கேந்திரத்திலு மிருக்க, பலம் பெற்ற சூரியன் இலக்கினத்தி லிருந்து தன்னுடைய அம்சகத்தை திருஷ்டி செய்யின், பூமியிலுள்ள காடுகள் முழுவதும் தின்னும்படியான யானைகளோடு கூடிய அரசனாவான்.

சு. 48. சந்திரன் எல்லாக் கிரகங்களுடைய திருஷ்டியோடு கூடினவனா யிருப்பின், ஜாதகன் தீர்க்காயுள் உள்ளவனாய் இருப்பான். கேமத்துருமாதி அசுப யோகங்களுடைய பலத்தை யடையாமல் அந்த ஜாதகன் சகல சத்துருக்களையும் ஜயிக்கின்ற ஆற்றலுள்ளவனாகவும், சக்கரவர்த்தியாகவும், மகா ராஜனாகவும், ராஜாதி ராஜனாகவும் இருப்பான்.

சு. 49. கடகராசி லக்கினமாகி அதில் சந்திரனும் குருவும் கூடியிருந்து சூரியன் மீனவிராசியின் அந்திய நவாம்சத்திலு மிருப்பின் ராஜ்யத்தை இரட்சிக்கும் ஆற்றலுள்ள அரசனாய் இருப்பன்.

சு. 50. ஆறு கிரகங்கள் அவரவர்களுடைய உச்சராசியில் ரச்மி பலத்தோடு கூடி நவாம்சத்தில் ஸ்வக்ஷேத்திரங்களில் இருப்பார்களாயின், பாணி பாதங்களில் வஜ்ரரேகையுள்ளவனாகவும், சகரன் பிருது—யயாதிகள் போன்ற அரசனாகவும் இருப்பான்.

சு. 51. எல்லாச் சுபக்கிரகங்களும் சுபராசியில் (இராசியிலும் அம்சத்திலும்) *இரச்மி பிரகாசத்தோடு கூடியிருந்து லக்கின பாவம் மௌட்டியாதி தோஷங்களுள்ள பாபர்களுடைய சம்பந்தம் பெறுமல் பலம் பெற்று இருப்பின், ஜாதகன் அரசனும் பிற்பட்ட வயதில் வனபர்வதங்களில் இருந்து தவஞ் செய்யும்படியானவனும் இருப்பான்.

சு. 52. சுபபலப் பிரதர்களான எல்லாச் சுபக்கிரகங்களும் 2-5-8-9-11 ஆகிய இந்தப் பாவங்களிலும், பாபபலப் பிரதர்களான எல்லாப் பாபக்கிரகங்களும் உபயராசிகளிலு மிருப்பின் தேவகுருவாகிய குருபகவானுக்குச் சமானமான புத்திசாமர்த்தியம் உள்ளவனுகவும், தன்னுடைய கை உதவியைக்கொண்டு சத்துருக்களை ஜெயிக்கும் ஆற்றலுள்ள அரசனுகவும் இருப்பான்.

சு. 53. இலக்கினதிபன் பலவானுகி சுபகிரகதிருஷ்டியோடும் மித்துரு கிரக திருஷ்டியோடும் கூடி லக்கினபாவத்திலிருப்பின் சத்துருக்களை அதஞ்செய்யும் ஆற்றலுள்ள அரசனுய் இருப்பான்.

சு. 54. பரிபூர்ண சந்திரன் குருவின் திருஷ்டியைப் பெற்று அம்சத்தில் மேஷத்திலிருக்க மற்றொரு கிரகம் நீசவிராசியல்லாத ஓரிடத்திலிருந்து அன்னிய கிரகங்களின் திருஷ்டியைப் பெறின் ஜாதகன் ராஜாதி ராஜன் ஆவன் என்று யவனராஜன் கூறுகின்றுர்.

சு. 55. பரிபூர்ண கலைகளோடு கூடிய சந்திரன், இலக்கினம் 3-6-10-11 இப்பாவங்களிலிருந்து குருவினுடைய திருஷ்டியைப் பெற்று இதர கிரகங்களின் திருஷ்டியைப் பெறுமலிருக்க சந்திரராசியதிபனுன கிரகம் 10-ஆமிடத்திலாவது 7-ஆமிடத்திலாவது இருப்பின் ஜாதகனுக்கு ராஜயோகமுண்டாகும்.

சு. 56. விருத்தியாயிருக்கும் ரச்மிகளோடும் பூர்ணகலைகளோடும் கூடியுள்ள சந்திரனை உச்சாம்சகத்தோடு கூடியுள்ள எல்லாக்கிரகங்களும் பார்ப்பின் பிரசித்த சரீரனும், கஜ துரகாதி சைந்நியங்களோடு கூடினவனும், அனந்தனைப்போல சகல பூமிபாரங்களைச் சுமக்கின்றவனும், தீர்க்கஸ்வாசம் செய்கின்றவனுமான அரசனுயு மிருப்பான்.

சு. 57. சந்திரன் பரிபூர்ணனுகி நவாம்சத்தில் சிம்மத்தில் இருக்க பாபர்களோடு கூடாமல் சுபக்கிரகங்கள் கேந்திரத்தில் இருந்தால் அநேக யானைகளோடு கூடிய ராஜாதி ராஜனுய் இருப்பான்.

* ரச்மி. ஸ்ரீபதி ஜாதகபத்ததியிற் காண்க.

சு. 58. சந்திரன் புதன் செவ்வாய் இந்தகிரகங்கள் ஸ்வக்ஷேத்திராம்சகத்தோடு கூடி நீசஸ்திதியும் மௌட்யமுமில்லாமல் 12-ஆமிடத்திலோ 3-ஆமிடத்திலோ இருக்க சந்திரன் குருவோடு கூடி 5-இல் இருப்பின் அதிக கீர்த்தியுள்ள அரசனாய் இருப்பான்.

சு. 59. திரேக்காணாதி ஷட்வர்க்கங்களிலும் சத்துரு க்ஷேத்திரம் நீசம் முதலியவைகளில்லாமல் ஸ்வக்ஷேத்திராம்சகம் சுப திருஷ்டி இவைகளோடு கூடிய 3-கிரகங்களிருக்க சந்திரன் பரிபூர்ணனாயிருப்பின் அரசனாயிருப்பன்.

சு. 60. சிரேஷ்டமான லக்கினபாவத்தில் பூர்ணனாயிருக்கின்ற சந்திரனிருந்து அவனைப்பலவானான ஒரு சுபக்கிரகம் பார்ப்பினும், இதுபோலவே லக்கினத்தில் இருக்கின்ற கிரகம் பாபனாயிருந்து அந்தப் பாபனைப் பலவானான வேறொரு கிரகம் பார்த்தாலும் சௌபாக்கியனான சக்கிரவர்த்தியாய் இருப்பான்.

சு. 61. பரிபூர்ணசந்திரன் † ஜலராசிகளிலொன்றில் நவாம்சத்திலிருந்து அதிலொரு ராசி லக்கினமாகி ஸ்வ வர்க்காதிக்கியமும்பெற அசுபக்கிரகம் கேந்திரமல்லாத இராசிகளில் இருப்பின் அநேகயானைகளோடு கூடிய அரச சிரேஷ்டனாய் இருப்பான். † கடகம், மகரத்தின் உத்தரார்த்தம், மீனம், ஆகிய இவைகளே ஜலராசியாம்.

சு. 62. பரிபூர்ண கலைகளோடு கூடிய சந்திரன் வர்க்கோத்தம நவாம்சத்திலிருப்பின் அழகோடு கூடிய அரசனாய் இருப்பான். அப்படியுள்ள அரசனுடைய குதிரைகளின் கால் குளம்புகளினின்று புறப்படுகின்ற பொடி சூரியனை பிரதிபாத சந்திரனோடு சமமாகச் செய்கின்றதாகின்றது.

சு. 63. எல்லாக் கிரகங்களும் * ஸ்தானபலமடைந்து ரச்மி பலமும் வர்க்கோத்தமாம்சகமும் பெற்று இருப்பின் ராஜாதிராஜனான சக்கரவர்த்தியாவன். ஒரே ஒரு கிரகத்தைக்கொண்டு மாத்திரம் மேற்சொன்ன பிரகாரம் யோகமுண்டாயிருப்பின் மண்டலாதிபனான சக்கரவர்த்தியாவன்.

சு. 64. ஒரு கிரகமாவது 5-ஆவது பாகத்தில் இருந்தால் அரசனாவன். அந்தக்கிரகம் எல்லாவிதத்தினும் பலம் பெற்றிருப்பின் சக்கிரவர்த்தியாய் இருப்பன்.

---

* ஸ்தானபலவிவரம் பல தீபிகை நான்காமத்தியாயத்திற் கா

சு. 65. இடபவிராசியில் இருக்கும் வியாழன் சந்திரனைப் பூர்ண திருஷ்டிகொண்டு பார்ப்பின் ஜாதகன் பூமியை ரட்சிக்கும் அரசனுய் இருப்பான்.

சு. 66. உச்சத்திலோ மூல க்ஷேத்திரத்திலோ ஸ்வக்ஷேத்திரத்திலோ பலவான்களாயுள்ள கிரகம் பூர்ண சந்திரனைப் பார்த்தால் ஜாதகன் நீசனுய் (காட்டாளாக) இருந்தாலும் அரசனுய் இருப்பான்.

சு. 67. சந்திரன் ஸ்வக்ஷேத்திரமான கடகத்தில் 3-வது பாகையில் இருந்தால் ஜாதகன் அரசனுய் இருப்பான் என்க. அந்தச் சந்திரன் பரிபூர்ண பலமுள்ளவனுகவும் இஷ்ட பாவாதிபனுகவும் இருப்பின் மகாராஜனுகவும் ஆவான்.

சு. 68. சந்திரன் ஸ்வக்ஷேத்திரத்தி லிருந்து சூரியன் ஸ்வக்ஷேத்திராம்சம்பெற்று இருவரும் பலமுள்ளவர்களா யிருந்தால் தன்னுடைய சிரேஷ்டமான யானைகளின் மதஜலத்தால் கழுவப்பட்ட பூப்பிரதேசத்தையுடைய அரசனுய் இருப்பான்.

சு. 69. இலக்கினத்தில் சனியிருக்க, நீசமும் மௌட்யமும் இல்லாமலிருக்கின்ற குருவுக்குச் சுக்கிரனுடைய திருஷ்டியிருப்பின் ஜாதகன் கிராமவாசியாய் இருந்தாலும் அரசனுய் இருப்பான்.

சு. 70. இலக்கினம் தநுசுஆகி அதிலிருக்கின்ற சுக்கிரனைக் குருபார்த்தாலும், புதன் கன்னியில் உச்சஸ்தானத்தில் இருப்பினும் நிச்சயம் அரசனுவான். "குருபே" என்பதனுல் மீனவிராசியும் பெறுமெனின் அந்தப் புதனுக்கு உச்சஸ்திதி சம்பவிக்காதாகையால் தநுசு மாத்திரம் கொள்ளப்பட்டது என்பர் உரையாசிரியர்.

சு. 71. சுக்கிரனும் சூரியனும் சேர்ந்து ஒருராசியில் ஒரே பாகையில் இருக்கும்போது குருதிருஷ்டி ஏற்படின் ராஜயோகம் உண்டாகும்.

சு. 72. சுக்கிரனும் சந்திரனும் செவ்வாயும் சேர்ந்து லக்கினத்திலும்; குரு, சந்திரனேடும் சனியின் திருஷ்டியோடுங் கூடி 7-ஆம் பாவத்திலு மிருந்தால் நிரம்பவும் அழகுள்ள அரசனுய் இருப்பான்,

சு. 73. குரு ஏதாவதொரு ராசியில் பலவானுய் அம்சத்தில் மேடத்திலாவது விருச்சிகத்திலாவது இருந்து செவ்வாயினுடைய திருஷ்டியைப் பெறினும், சூரியன் 10-ஆமிடமான மேடத்தில் உச்சத்தி லிருப்பினும், ஜாதகன் தாழ்ந்த குலத்தில் ஜனித்தவனு யிருப்பினும் அரசனுவான்.

சு. 74. சுக்கிரனும் சந்திரனும் சூரியனும் சேர்ந்து 3-ஆமிடத்திலும் செவ்வாய் 7-ஆமிடத்திலும் குரு 9-ஆமிடத்திலும் இருந்து லக்கின நவாம்சம் வர்க்கோத்தமமாயிருப்பின் ஹீன குலத்தில் ஜனித்த ஜாதகனுனும் அரசனுய் இருப்பன்.

சு. 75. குருவும் புதனும் சுக்கிரனும் சந்திரனும் பலவான்களாகி ரச்மி பலத்தோடுகூடி கிரகயுத்தாதி தோஷங்களில்லாமல் 9-ஆமிடத்திலிருந்து மித்துரு கிரகங்களுடைய திருஷ்டியோடு கூடியிருப்பின் தேவ சமானமானவனும் மகானுமான அரசனுய் இருப்பான்.

சு. 76. ஏதேனுமொரு கிரகம் உச்சம் பெற்று ஒன்பதாமிடத்திலிருந்தாலும், அல்லது அவ்வொன்பதா மிடத்தைப் பார்த்தாலும், வேறு இரண்டு கிரகங்கள் உச்சத்தில் ஏதாவது ஒருபாவத்தில் இருப்பினும் குடும்பங்கள் உள்ளவனுகவும், மனைவி மக்களோடு கூடியவனுகவும், அரசனுகவும் இருப்பான்.

சு. 77. ஐந்தாம் பாவாதிபனுடைய திருஷ்டியோடு ஐந்தாம் பாவத்தில் சந்திரனும் குருவும் சேர்ந்திருக்க சுக்கிரன் மீனத்தில் இருப்பின் ஜாதகன் தாழ்ந்த குலத்தில் ஜனித்தவனு யிருப்பினும் அரசனுய் இருப்பான்.

சு. 78. சந்திரன் சுபபுஷ்கர பாகத்திலும் குரு உச்சத்திலுமிருந்தால் ஜாதகன் ஸ்ரீமானுகவும் சகல பூமிரக்ஷகனுயுமுள்ள அரசனுவான். மேடாதிராசிகளுக்கு சுபபுஷ்காமும் அசுபபுஷ்காமும் உண்டு. மேஷாதிராசிகளுக்கு முறையே 1-24-6-24-1-24-6-24-1 24-6-24-இப்பாகைகள் அசுபபுஷ்கரமாம். 21-14-24-7-21-14-24-7 21-14-24-7-இப்பாகைகள் சுபபுஷ்கரமாம்.

மேடாதி ராசிகளுக்கு முறையே 21-14-18-8-19-9-24-11-13-14-19-9 இப்பாகைகள் சுப புஷ்கர மென்று வேறு நூல்களில் காணப்படுகின்றது.

சுலோகம்: பூதத்வ ரஸ்தத்வாம் சாஸ்திரிகோணு ஜலாகரேனிந்திதா : புஷ்கராச்சஸ்தாஸ்ஸமின்மனுஜினுசலா : என்றும், புத்ரோவடுர்த்திவ்யஜனுதி கோதுனுவிராடபோகேத்ரபயோதி கோதுனுமெ ஷாதிகா : புஷ்கரபாக சமக்ஞிதா முகூர்த்த ஜன்மதிஷு சோபனப்ரதா : என்பது பிரமாணம்.

சு. 79. குரு கேந்திரஸ்தானத்தில் உச்சத்திலும் சுக்கிரன் 10-ஆமிடத்திலு மிருப்பின் சகல பூமிகளுக்கு நாதனுகவும், பிரசித்தி வாய்ந்த அரசனுகவும் இருப்பான்.

சு. 80. சந்திரன் ஸ்வக்ஷேத்திரத்திலும், புதனும் குருவும் சுக்கிரனும் சேர்ந்து சூரியனுடைய திருஷ்டியைப்பெற்று ஸ்வக்ஷேத்திராம்சங்களில் ரச்மியாதிக்கியத்தோடு 4-ஆமிடத்திலும் இருப்பின் அரசர்களுக்குள் சிறந்த அரசனுவான்.

சு. 81. சூரியன் தனது மூலக்ஷேத்திரமான 10-ஆமிடத்திலிருக்க சுக்கிரன் குரு ஆகிய இந்தக்கிரகங்கள் சந்திரன் இருக்குமிடத்திலிருந்து 3-6-11 இப்பாவங்களில் ஸ்வக்ஷேத்திர ஸ்திதியோடு கூடியிருப்பின் கோபாலவம்ச ஜாதகனுனாலும் அரசனுய் இருப்பான்.

சு. 82. சுபக்கிரகங்கள் மித்துரு க்ஷேத்திரத்தில் 7-ஆமிடத்திலிருந்து மித்துரு கிரகங்களுடைய திருஷ்டியைப் பெற்று நிற்க செவ்வாய் உச்சஸ்தானத்தில் இருப்பின் ஜாதகன் அதிக சிரேஷ்டனுகவும், சார்வ பௌமனுமாயுள்ள அரசனுகவும் இருப்பான்.

சு. 83. சத்துரு க்ஷேத்திரம் நீச க்ஷேத்திரம் சத்துருகிரகங்களுடைய திருஷ்டி இவைகளோடு கூடாமல் சூரியன் சந்திரன் செவ்வாய் புதன் இந்தக்கிரகங்கள் 10-ஆமிடத்திலும் சுக்கிரன் 9-ஆமிடத்திலுமிருப்பின் அநேக யானைகளோடு கூடிய அரசனுய் இருப்பான்.

சு. 84. சூரியன் 10-ஆமிடத்தில் உச்சராசியில் குருவோடு கூடியும் சுக்கிரன் செவ்வாய் இவர்கள் ஸ்வக்ஷேத்திராம்சகத்தோடு 9-ஆமிடத்தில் பலம் பெற்று இருக்க சுபவர்க்கத்தோடு கூடிய லக்கினத்திற்குப் புததிருஷ்டியுண்டாயின் தன்னுடைய அழகுகொண்டு ஜெகத்தை ஜொலிக்கச் செய்யும் அரசனுயிருப்பான்.

சு. 85. இடபம் லக்கினமாகி அதில் பரமோச்ச பாகத்தில் நிற்கின்ற சந்திரனை துலாவிராசியின் ஆத்யந்தத்திலிருக்கின்ற சுக்கிரன் பார்க்க லக்கினத்திற்கு 4-ஆமிடமான சிம்மத்தில் புதன் இருந்தால் கடைசி வம்ச ஜாதகனுனாலும் அரசனுவான். இந்த சுலோகத்திலும் முன் சொன்ன யோகத்திலும் இப்பொழுதுள்ள கணிதப்படி அசம்பாவித லட்சணமுண்டு.

சு. 86. சூரியன் சந்திரன் குரு இம்மூவர்களுடைய திருஷ்டியோடு கூடிய செவ்வாய் பலவானுய்ப் பரமோச்ச பாகத்தில் இருந்தால் தாழ்ந்த வம்சத்தில் ஜனித்தவனுயினும் ஜாதகன் சகல பூபரண நிபுணனை அரசனுய் இருப்பான். பூபரணம் = பூமியைத் தாங்குதல்.

சு. 87. * அபிசித்து நட்சத்திரங்கூடிய காலத்து சந்திரன்

*அபிசித்து = உத்திராட நட்சத்திரத்தின் நான்காம் பாதமும், திருவோண நட்சத்திரத்தினுடைய ஆரம்ப முதல் நான்கு நாழிகையும் அபிசித்து நட்சத்திர காலமாகும் என்ப.

சுபக்கிரியையோடு நிற்கும்போது நீச கிருகத்திலோ நீச குலத்திலோ ஜனித்தவனாயினும் நிரம்பவும் கீர்த்திமானான அரசனாவான்.

ஸ்தாநாத்பிருஷ்டஸ்தபஸ்திபரயுவதிநத: இவ்விதமான மூன்று சுலோகங்களைக் கொண்டு சந்திரகிரியையினுடைய சுபாசுபத்தை அறிந்துகொள்க.

சு. 88. கண்டாந்தம், விஷ்டி, பரிகம், வியதிபாதம் இவைகள் சேர்ந்துள்ள கார்த்திகையான ஜன்மநட்சத்திரத்தில் சந்திரோதய ராசியில் ஜனித்தவன் வாள் பரிசு இவைகளைக்கொண்டு செய்கின்ற யுத்தத்தின் குரூர வேகத்தால் ஜெயித்த சத்துருக்களின் சிரசுகளால் பந்தடிக்கின்ற அரசனாய் இருப்பான்.

சு. 89. புதன் லக்கினத்திலும் குரு 7-ஆமிடத்திலும் பலம் பெற்ற சந்திரன் நான்காமிடமான கடகத்திலும் சுக்கிரன் 10-ஆமிடத்திலும் இருக்கும்போது ஜனித்தவன் அரசனாய் இருப்பான்.

சு. 90. முன் நாபச யோகாத்தியாயத்தில் சொல்லியபடி இலக்கினம் 3-5-7-9-11 இந்த ஸ்தானங்களில் ஏழுகிரகங்களுமிருந்தால் சக்கரம் என்ற ராஜயோகம் உண்டாகும். இந்த யோகத்திலே லக்கினத்திலிருக்கும் கிரகம் சுபனாயிருப்பின் நிச்சயம் சக்கிரவர்த்தியாகவே இருப்பான்.

சு. 91. மேற்சொன்ன சக்கரயோகத்தில் ஜனித்தவர்களுக்கு இலக்கினத்தில் இரண்டு சுபக்கிரகங்களிருந்து சுபக்கிரகங்கள் கேந்திர ஸ்தானங்களிலிருப்பார்களேயானால் சமுத்திரம் என்ற ராஜயோகம் கிடைக்கும்.

சு. 92. இலக்கினம் முதல் 6-ஆமிடம் வரையில் எல்லாக் கிரகங்களும் நிரந்தரமாக இருந்தால் நிச்சயம் அரசனாவான். 4-7-10 என்ற இக்கேந்திர ஸ்தானங்களில் எல்லாக் கிரகங்களுமிருந்தால் ராஜாங்க மந்திரியாயிருப்பன்.

சு. 93. எல்லாக் கிரகங்களும் 3-4-5-10-இப்பாவங்களில் இருந்தால் பந்துக்கள், புத்திரர்கள், சம்பத்து, யானைகள், அடிமைகள் இவர்களோடு கூடிய அரசனாவனென்று யவனாதிகள் கூறுகின்றனர்.

சு. 94. இலக்கினம் 4-7-10 இந்தக் கேந்திரபாவங்களில் எல்லாக்கிரகங்களு மிருந்தால் நகரம் என்ற ராஜயோகம் உண்டாகும்.

சு. 95. எல்லாச் சுபர்களும் இலக்கினம் 4-7-இப்பாவங்களிலும் சூரியன் செவ்வாய் சனி இந்தப் பாபர்கள் 3-9-11 இப்பாவங்

களிலுமிருந்தால் பிரசாந்தனுன அரசனு யிருப்பனென்று யவன ராஜன் என்னும் ஆசிரியர் கூறுகின்றார்.

சு. 96. சுபக்கிரகங்கள் 9-ஆமிடத்திலும் 10-ஆமிடத்திலும் இருந்து பாபக்கிரகங்கள் கர்ம பாவத்திலும் இருந்தால் கலசம் என்ற ராஜயோகம் உண்டாகும்.

சு. 97. மூன்று கிரகங்கள் 3-5-11 இந்தப் பாவங்களிலும் இரண்டு சுபக்கிரகங்கள் 6-ஆமிடத்திலும் மீதமுள்ள இரண்டு கிரகங்கள் இலக்கினத்திலும் ஏழா மிடத்திலும் இருந்தால் பூர்ணகும்பம் என்ற பெயரோடு கூடிய ராஜயோகம் உண்டாகும்.

சு. 98. நீசகுலத்தில் (அரசகுல மல்லாத வம்சத்தில்) ஜனித்தவர்களுக்கு உண்டாகும் ராஜயோகங்களை இங்கே நிரம்ப விஸ்தாரமாகவும் தெளிவாகவும் பல விதமான ரூபபேதத்தோடு கூறியுள்ளேன். மேலும் அரச குலத்தில் ஜனித்தவர்களுடைய ராஜயோகங்களை மகருஷிகள் கூறிய பிரகாரம் இங்கு தெளிவாய் விவரிக்கின்றேன்.

சு. 99. சிம்மராசி ஜன்ம லக்கினமாகி அதில் சூரியனும் மேடத்தில் சந்திரனும் கும்பத்தில் சனியும் தநுசிலாவது மீனத்திலாவது குருவும் மகரத்தில் செவ்வாயும் இருந்தால் எல்லா ஜனங்களாலும் நமஸ்கரிக்கத்தக்க அரசனுய் இருப்பான்.

சு. 100. ஒரு பலவானுன சுபக்கிரகம் லக்கினத்திலும் மற்ற சுபக்கிரகங்கள் 9-10-11-இலக்கினம்-2-இந்த பாவங்களிலும் பாபக்கிரகங்கள் 3-6-10-11 இந்தப் பாவங்களிலும் இருந்தால் ராஜ ஜன்மம் கிடைக்கும். அந்த ராஜனுடைய யானைகள் யுத்தாதி யாத்திரை காலங்களில் மேகநீர்போல தங்களுடைய மதநீரைச் சொரியும். அந்த அரசனுக்கு அதிக யானைகள் இருக்குமென்பது கருத்து.

சு. 101. குரு 4-ஆமிடத்தில் ஸ்வக்ஷேத்திரத்திலும் சந்திரன் பரிபூர்ணனுகி 9-ஆமிடத்திலும் மற்ற கிரகங்கள் இலக்கினத்திலும் 3-ஆமிடத்திலும் இருப்பின் தைரியமும் சம்பத்தும் உள்ள ராஜனுகி அநேக வாகனங்களுள்ளவனுய் இருப்பான்.

சு. 102. சந்திரன் பரமோச்ச பாகையில் இலக்கின பாவத்தில் இருந்து குரு 2-ஆமிடத்திலும் சுக்கிரன் 6-ஆமிடத்திலும் (துலாத்திலும்) புதன் கன்னியிலும் செவ்வாய் மேடத்திலும் சூரியன் சிம்மத்திலும் இருந்தால் வெண்ணிலவு போன்ற அழகோடு கூடிய அரசனுய் இருப்பான்.

சு. 103. சூரியனும் சந்திரனும் சேர்ந்து 10-ஆமிடத்திலும் சனி லக்கினத்திலும் குரு 4-ஆமிடத்திலும் புதனும் சுக்கிரனும் செவ்வாயும் 11-ஆமிடத்திலும் இருந்தால் ஸ்வகுணங்களால் புகழப் படுகின்ற அரசனாய் இருப்பான்.

சு. 104. மகரத்தைத் தவிர மற்ற இராசிகளாகிய இலக்கினத்தில் குருபலம் பெற்றிருந்தால் நிச்சயமாக மத்தகஜங்களால் மேன்மையுடைய அரசனாய் இருப்பான்.

சு. 105. இலக்கினத்தில் செவ்வாயும் சனியும் 10-ஆமிடத்தில் சூரியனும் குருவும் 7-ஆமிடத்தில் சுக்கிரனும் 11-ஆமிடத்தில் புதனும் 4-ஆமிடத்தில் சந்திரனும் இருந்தால் நிரம்ப அழகுள்ளவனான அரசனுடைய ஜனனம் கிடைக்குமென்ப.

சு. 106. சந்திரன் க்ஷீணனாயிருந்தாலும் பரமோச்சத்தில் இருந்தால் ராஜயோகம் உண்டாகும். அச்சந்திரன் பரிபூர்ணனாகவும் ரச்மி பிரகாச யுக்தனுமாயிருப்பின் சந்தேகமில்லாமல் ராஜயோகம் உண்டாகும்.

சு. 107. இலக்கினத்தைத் தவிர மற்ற கேந்திரஸ்தானங்களில் சகல கலைகளோடு கூடிய சந்திரன் இருப்பின் விக்கிரமம் தனம் வாகனம் இவைகளோடு கூடிய அரசனாய் இருப்பான்.

சு. 108. சுக்கிரனைக் குரு பூர்ணதிருஷ்டியுடன் பார்ப்பின் அனந்தன் என்று சொல்லத் தகுந்த பிரதாபவானாயும், அநேக நாகங்களுக்கு நாயகனாயும் உள்ள அரசனாய் இருப்பான்.

சு. 109. புதனைக் குரு பூர்ண திருஷ்டியுடன் நோக்கில் அந்த ஜாதகன் ராஜனாவான். அவனுடைய சாசனத்தை இதர ராஜாக்கள் சிரமேற் கொள்கின்றவர்களாய் இருப்பார்கள்.

சு. 110. இலக்கினாதிபன் சந்திரனைப் பார்த்துக்கொண்டு தன்னுடைய உச்சஸ்தானத்தில் இருப்பின் அநேக சைந்நியங்களும் சம்பத்துமுள்ள அரசனாய் இருப்பான்.

சு. 111. சந்திரன், புதன் சுக்கிரன் இவர்களைப் பார்த்துக் கொண்டு உச்சத்திலிருப்பின் தாளில் விழுந்து வணங்குகின்ற சத்துருக்களோடு கூடியவனாயும், அதிக அழகுள்ளவனாயும், சௌபாக்கிய யுக்தனுமாயுள்ள அரசனாய் இருப்பான்.

சு. 112. சுக்கிரனோடு கூடிய சந்திரன் நவாம்சத்தில் அதிமித்துரு க்ஷேத்திரத்தில் இருந்தால் ஸ்ரீமானான ராஜனாய் இருப்பான்.

சு. 113. நவாம்சத்தில் சந்திரன், ஸ்வக்ஷேத்திரத்திலோ அதிமித்துரு க்ஷேத்திரத்திலோ இருந்து குருவினுடைய திருஷ்டியைப் பெற்று நிற்கப் பகலில் ஜனனமாயின் நிச்சயமாக ராஜயோகம் கிடைக்கும்.

சு. 114. சந்திரனிருக்கும் ராசியதிபனான கிரகம் பூர்ண பலயுக்தனாய் கேந்திரத்தி லிருப்பின் பிராம்மண குலத்தில் ஜனித்தவனானாலும் ராஜத்துவம் உண்டாகும். இந்த யோகம் ராஜகுல ஜாதகர்களுடைய வம்சத்தில் உள்ளவர்களுக்குக் கிடைக்கின் சந்தேக மில்லாமல் ராஜத்துவம் உண்டாகும்.

சு. 115. சூரியன், சந்திரதிருஷ்டியோடுகூடி அதிமித்திர க்ஷேத்திரத்தி லிருந்தால் தர்மார்த்தங்களோடு கூடியவனும் அங்க தேசத்தின் நாதனுமான அரசனாவான்.

சு. 116. சந்திரனோடு கூடிய புதன், பரமோச்ச பாகத்தில் இருந்தால் யானைகளுடைய மதஜலகந்தங் கொண்டு திசைகளை அழகு படுத்துகின்றவனும், மகதராஜ்யத்தின் அதிபனுமான ராஜனாவான்.

சு. 117. திக்கு-ஸ்தான-சேஷ்டா-அயன-கால-நைஸர்க்கிகாதி முதலிய ஷட்பலங்களோடும் பரிபூர்ண பலத்தோடுங் கூடிய சந்திரனே சத்துருக்களை நாசம் செய்யும் ராஜனுடைய ஜனனத்திற்குக் காரணனா யிருக்கின்றான்.

சு. 118. இலக்கினாதிபன் பரிபூர்ணபலத்தோடு கூடி கேந்திர ஸ்தானத்தில் இருந்தால் கோபால குலத்தில் பிறந்தவனானாலும் ராஜாவாவன். இராஜ குலத்திலேயே ஜனித்தவர்களுக்குச் சொல்லவும் வேண்டுமோ?

சு. 119. கடகத்தில் நிற்கின்ற குரு லக்கினத்திற்குக் கேந்திரத்திலும் சந்திர லக்கினத்திற்குப் பத்தாமிடத்திலும் இருப்பின் சக்கரவர்த்தியான ராஜனாவான்.

சு. 120. மேடத்தில் சந்திரனோடு கூடி சூரியனிருப்பின் கேரளம் கர்நாடம் ஆந்திரம் (தெலுங்கு) திராவிடம் சோளம் என்ற இந்த ராஜ்யங்களுக்கு அதிபதியான ராஜாவாவன்.

சு. 121. குரு, சந்திரனோடு கூடி பரமோச்ச பாகத்தி லிருந்தால் காச்மீர ராஜ்யத்தினுடைய அதிபனான ராஜனாயிருப்பான்.

சு. 122. குருவோ சுக்கிரனோ அல்லது அவர்கள் இரண்டு பேருமோ உச்சம் மூலத்திரிகோணம் ஸ்வக்ஷேத்திரம் என்னும் இந்த இராசிகளில் இலக்கினம் 4-7-10-11-5-9 இப்பாவங்களில் எவ்

விடத்தில் இருந்தாலும் ராஜவம்சத்தில் ஜனித்தவன் நிச்சயமாக ராஜ னுவான்.

ராஜவம்சத்தில் ஜனித்தவனுக்கு ராஜத்துவம் சுதந்தரமல்லவா? என்று கேட்பது இயற்கை. அதற்குச் சமாதானம் ஒருவன் ராஜவம் சத்தில் ஜனித்தாலும் ராஜ்யமும் ராஜத்துவமும் கிடைக்கின்றதில்லை யென்பது வெளிப்படை. சில சமயம் அப்படி ராஜ்யமும் ராஜத்து வமும் கிடைத்தாலும் அவைகளை முறைப்படி சம்ரக்ஷணை செய்யும் சக்தியில்லாமல் இருப்பதும் உண்டு. ஆனதினுல் இந்த விதமாக விவரிக்கின் கூறுகின்ற ராஜயோகத்தின் மகாத்மியம் ஸ்பஷ்ட மாக விளங்கும்.

சு. 123. மூன்றோ அதற்கு அதிகமான கிரகங்களோ ஸ்தான பலம் திக்குபலம் கேந்திரபலம் சேஷ்டாபலம் இவைகளோடு கூடி அதிகபலம் பெற்று பாபக்கிரகங்களோடு கூடாமல் இருந்தால் ராஜ யோகம் கிடைக்கும்.

சு. 124. சூரியனிருக்கு மிடத்திற்கு 2-ஆமிடத்தில் புதன் குரு சுக்கிரன் சேர்ந்திருந்து பாபக்கிரகங்களுடைய சம்பந்தம் திருஷ்டி மௌட்யம் யுத்தம் முதலான தோஷங்கள் இல்லாதிருந்து * ரச்மிப்பிரகாசம் உண்டாயிருப்பின் ராஜனுவான்.

சு. 125. குருக்கத்தி முல்லை வெண்தாமரை ஆற்றுத்தர்ப்பை என்றிவைகளைப்போல் தவளவர்ணனுகி பரிபூர்ணனுகி † ஆகாயப்பிர தேசத்தில் பிரகாசிக்கின்றவனுகிய சந்திரராசியின் அதிபனும் பலவா னும் சுபபலப்பிரதனுமான கிரகத்தால் திருஷ்டிக்கப்பெற்ற சந்திரன் நிரம்பவும் பிரசித்தி கீர்த்தி இவைகளோடு கூடிய ராஜயோகத்தைக் கொடுப்பான்.

சு. 126. குரு, சுக்கிரனுேடு சேர்ந்து இரண்டாமிடத்தில் இருப் பின் சத்துரு சமூகத்தை நாசம் செய்யும் ஆற்றலுள்ள ராஜனுவான்.

சு. 127. முன் 6-ஆவது அத்தியாயத்தில் சொல்லிய காரக யோகங்களில் ஜனித்தவன் ராஜனுவான். அந்த ராஜனுடைய கஜ துர காதி முதலிய சைந்யங்களால் கிளப்பப்பட்ட பொடியால் ஆகாயப் பிரதேசம் முழுவதும் மறைக்கப்படும். (பெரும்படையையுடையவ னுவன் என்பது கருத்து).

சு. 128. இலக்கினம் மகரமாகவும் மகரமோ கும்பமோ நவாம்ச லக்கினமாகவும் செவ்வாயும் சனியும் லக்கினமான மகரத்திலும்

* ஸ்ரீபதிபத்ததியில் காண்க. † ஆகாசப்பிரதேசம் = பத்தாமிடம்.

புதன் குரு சுக்கிரன் இவர்கள் ஒன்று சேர்ந்து நான்காமிடமான மேடத்திலும் இருப்பின் பூமிக்கதிபனான ராஜனாவான்.

சு. 129. பரமோச்சனான குருவுடன் கூடிய சந்திரன், கடக லக்கினத்திலும் சுக்கிரன் மீனத்திலும் சனி துலாத்திலும் சூரியனோடு கூடிய செவ்வாய் மேடத்திலும் இருப்பின் ராஜாதிராஜனான அரசனாய் இருப்பான்.

சு. 130. யுத்தமில்லாமல் சுக்கிரனும் குருவும் சேர்ந்து மீனத்திலும் ரச்மிபலத்தோடு கூடிய சந்திரன் செவ்வாயினால் பார்க்கப்பட்டு பரமோச்சத்திலும் சூரியன் மேடத்திலும் இருப்பின் ராஜயோகம் உண்டாம். அவ்வரசனுடைய சேனைகளுடைய சஞ்சாரத்தினால் உண்டாகும் பொடிகளால் சூரியன் மறைபடுதலால் அஸ்தமனமாயதென்று பொய்கைத் தாமரைகள் சங்கோசத்தை யடைகின்றன. (சைன்னியங்கள் அதிக மிருக்குமென்பது கருத்து.)

சு. 131. பாபக்கிரகங்கள் நீச சத்துரு க்ஷேத்திரங்களாகிய 3-6-ஆகிய இப்பாவங்களில் இருக்க சுபக்கிரகங்கள் தங்களுடைய பரமோச்ச பாகங்களில் பலம் பெற்று கேந்திரஸ்தானங்களில் இருக்க சந்திரன் 10-ஆமிடமான கடகத்திலும் இருக்க இரவில் பிறந்த ஜாதகன் மூன்று உலகத்தையும் ஏகச்சக்கிராதி பத்தியத்தோடு ஆளும் அரசனாய் இருப்பான்.

சு. 132. குரு, ரச்மிப் பிரகாசத்தோடும் பலத்தோடும் கூடி லக்கினத்திலும் சந்திரன் புதனுடைய திருஷ்டியோடும் பூர்ணகலைப் பிரகாசத்தோடும் கூடி 11-ஆமிடத்திலும் சூரியன் செவ்வாயினால் பார்க்கப்படாமல் சந்திரலக்கினத்திற்கு இரண்டிலும் இருப்பின் அநேக கஜதுரகங்களோடும் கூடிய அரசனாவான்.

சு. 133. சூரியன் சந்திரன் செவ்வாய் இவர்கள் ஒன்று சேர்ந்து லக்கினபாவமான மேடத்திலும் புதன் சுக்கிரன் சனி இவர்கள் இடபத்திலும் வர்க்கோத்தமம்பெற்ற குரு தநுசிலும் சூரியன் பரமோச்ச பாகத்திலும் கூடி இருப்பின் சத்துருக்களை நாசம் செய்யும் அரசனாகவும் வித்துவானாகவும் இருப்பான்.

சு. 134. சந்திரனும் புதனும் குருவும் சேர்ந்து 5-ஆமிடத்திலும் சூரியன் 6-ஆமிடத்திலும் செவ்வாய் உச்சத்திலும் சனி 9-ஆமிடத்திலுமிருந்தால் நிரம்ப கீர்த்தியும், தான சீலமும், தர்மமும், பிரதாபமும் உள்ள ராஜ சிரேஷ்டனாவான்.

சு. 135. சூரியன், குரு திருஷ்டியோடும் சுக்கிரன், சந்திர திருஷ்டியோடும் சனி, செவ்வாய் திருஷ்டியோடும் கூடி நிற்க இலக்கினம் சராசிசளுளொன்முயிருப்பின் சத்துரு சமூகத்தை நாசம் செய்கின்றவனும், அதிக கீர்த்தியோடு கூடிய அரசனும் இருப்பான்.

சு. 136. கன்னியாராசி லக்கினமாகி அதில் புதனும் மீனத்தில் குருவும் மேடத்தில் செவ்வாயும் ஆறுமிடத்தில் சனியும் நான்காமிடத்தில் சுக்கிரனும் இருப்பின் தன்னுடைய தோள் வன்மையால் சத்துருக்களை ஜெயிக்கின்ற ராஜனுவான்.

சு. 137. சனி மகரவிராசியாகிய இலக்கினத்திலும் சூரியன் ஏழாமிடத்திலும் சுக்கிரன் அஷ்டமத்திலும் செவ்வாய் விருச்சிகத்திலும் சந்திரன் கடகத்திலும் இருந்தால் பிரசித்தனை ராஜனுவான்.

சு. 138. இலக்கினம் மகரமாகி அதில் செவ்வாய் பலவானுகவும் 9-ஆமிடத்தில் சனியும் 7-ஆமிடத்தில் சந்திரனேடு கூடிய சூரியனுமிருந்தால் ராஜயோகம் உண்டாகும்.

சு. 139. சனி, சந்திரனேடு கூடி லக்கினத்திலும் குரு ஏழாம் பாவத்திலும் சுக்கிரனுடைய திருஷ்டியோடு கூடிய புதன் உச்சத்திலுமிருப்பின் பிரதாப ஆதிக்கிய நிமித்தம் யாவரும் நெருங்கத்தகாத அரசனுவான்.

சு. 140. ஒரு கிரகத்தினுடைய திருஷ்டியோடுங் கூடாமல் குரு தநுசிலும் சுக்கிரன் லக்கினத்திலும் சந்திரன் கடகத்திலுமிருந்தால் கிணறு குளம் ஏரி தேவாலயங்கள் முதலிய தர்மஸ்தாபனங்களியற்றும் கர்த்தாவாகவும், தேவப்பிராம்மண பக்தனுகவும் உள்ள அரசனுய் இருப்பான்.

சு. 141. ஒரு சுபக்கிரகம் பலவானுய் ரச்மி புஷ்டியோடு கூடி இலக்கினத்திலும் ஐந்தாமிடத்திலிருக்கின்ற குருவால் பார்க்கப்பட்ட சூரியன், பூர்ணபலத்தோடு கேந்திரத்திலுமிருப்பின் * கிருதார்த்தனும் அநேக கஜங்களுள்ளவனும் எல்லாராலும் வணங்கத்தக்கவனுமான அரசனுய் இருப்பான்.

சு. 142. சூரியன் செவ்வாய் சனி இவர்கள் 6-ஆமிடத்திலும் அல்லது 3-ஆமிடத்திலும் இருக்க சுபர்களுடைய திருஷ்டியோடு கூடிய சுக்கிரன் 11-ஆமிடமான சிம்மத்தில் சூரிய சந்திரர்களுடைய

* கருத்தை நிறை வேற்றுபவன்.

திருஷ்டியைப் பெறுமலிருப்பின் தன்னுடைய புஜபலங்கொண்டு சத்துரு சமூகத்தை ஜெயிக்கின்ற அரசனுய் இருப்பான்.

சு. 143. ஆகாயப் பிரதேசம் நல்ல விதமாகத் தெளிந்து கிரகங்கள் தம்மில் விரோதத்தோடு கூடாமல் பலவான்களாய் பிரகாசயுக்தர்களாகி யதாஸ்தான ஸ்திதி இவைகளோடு கூடி நிற்கக் குரு மாதுருகா மண்டலத்தில் (10-ஆமிடம்) உதயத்தையடைய சுக்கிரன் இடப விராசியில் இருக்கும்போது ஜனித்த ஜாதகனுக்கு ராஜயோக முண்டாகும்.

சு. 144. சந்திரன் செவ்வாய் புதன் இவர்கள் நீசம் 12-ஆமிடம் 3-ஆமிடம் மௌட்டியம் இவைகளை யடையாமல் ஸ்வக்ஷேத்திராம்சகத்தோடு கூடி நிற்க குரு, சந்திரனேடு கூடி 5-ஆமிடத்தில் இருந்தால் அதிககீர்த்தியுள்ளவனுன அரசனுவான்.

சு. 145. சந்திரராசியதிபனுன கிரகம் இலக்கினதிபனேடு கூடி அதிமித்துரு க்ஷேத்திரமாயுள்ள கேந்திரஸ்தானத்தில் பலவானுய் இருக்க பலவானுயுள்ள மற்றொரு கிரகம் லக்கினத்தைப் பார்ப்பின் புஷ்கலயோகம் என்ற ராஜயோகம் உண்டாகும்.

சு. 146. புஷ்கல யோகத்தில் ஜனித்தவன் பூமியை நனையச் செய்யும் மதநீரை யுடைய கஜபதிகளான சத்துருக்களை நாசஞ் செய்யும் அரசனுகவும் இருப்பான் என்பதிலையமில்லை.

சு. 147. யோககர்த்தாவாகிய லக்கினதிபன் தானிருக்கும் இராசியினுடைய ஆதி திரேக்காணத்தில் இருப்பின் அரசனுடைய சேனதிபதியாயும், மத்திய திரேக்காணத்தில் இருப்பின் மண்டலாதிபதியாயும், அந்திய திரேக்காணத்தில் இருப்பின் கிராமாதி பதியாயும் இருப்பான்.

சு. 148. ரேவதி, பூராம், மூலம், பூசம் இந்த நட்சத்திரங்களில் சூரியனிருந்து அச்சூரியன் இருக்கும் இராசியே லக்கினமாகவரின் ஆறு யோசனை விஸ்தீரணமுள்ள தேசத்திற்கு நாதனுயுள்ள ராஜனுய் இருப்பான்.

சு. 149. கார்த்திகை, ரேவதி, சுவாதி, பூசம், அசுவினி இந் நட்சத்திரங்களில் சுக்கிரனிருந்து அந் நட்சத்திரராசியே லக்கினமாயின் அரச சிரேஷ்டனுக ஆவான்.

சு. 150. இலக்கின நவாம்சாதிபனும் லக்கினதிபனும் சந்திரராசியதிபனுமான கிரகங்கள் கேந்திரங்களில் உச்சம் பெற்றிருப்பின்

முறையே சார்வபௌமனுகவும், ராஜாவாகவும், பிரபுவாகவும் இருப்பான்.

சு. 151. சந்திரன், மித்துரு கிரகங்களின் திருஷ்டியோடும் பூர்ணகலைகளோடுங் கூடி மீனத்தில் இருப்பின் ஆக்ஞாசக்தியுள்ள சக்கரவர்த்தியாவான்.

சு. 152. செவ்வாய் 10-ஆமிடத்திலும் சந்திரனும் சுக்கிரனும் 9-ஆமிடத்திலும் குருவோடு கூடிய சூரியன் 11-ஆமிடத்திலும் இருப்பின் அரசனுவான்.

சு. 153. மேற்சொன்ன சுலோகப்படியுள்ள ராஜயோகத்தில் ஜனித்தவன் எல்லாவிடங்களிலும் சஞ்சரிக்கின்ற குதிரைகளுடைய குளம்புகளினின்று மேலே கிளம்பும் பொடிகள் சூரியமண்டலத்தை யடைதலால் சூரியனுடைய குதிரைகள் மண்ணின் பரிமள சுகத்தை மேலும் மேலும் அடையுமென்ப.

சு. 154. சந்திரனேடு கூடிய சனி, பலவானுகி கேந்திரத்தி லிருப்பின் ஜாரபுத்திரனுயிருப்பினும் கஜதுரகாதி சம்பத்துக்களோடு கூடிய அரசனுய் இருப்பான்.

சு. 155. சுக்கிரனும் குருவும் புதனும் 2-ஆமிடத்திலும் சந்தி ரனும் சூரியனும் செவ்வாயும் 7-ஆமிடத்திலும் இருப்பின் விசால மான மார்பையுடையவனும், எல்லா விடங்களிலும் சத்துருக்களை நாசம் செய்யும் ஆற்றலுள்ளவனுமான அரசனுய் இருப்பான்.

சு. 156. சூரியன், பலவானுகி சந்திரனேடு கூடி கடகத்திலும் பலம்பெற்ற ஒருகிரகம் நிர்மலமாய் பூர்ணரச்மியோடு கூடி பர மோச்சமாகிய லக்கினத்திலும் குரு ஆறுமிடத்திலும் இருப்பின் சைந்நிய சஞ்சாரத்தினுல் கிளம்பும் பொடிகளைக்கொண்டு ஆகா யத்தை மறைக்கின்ற அரசனுப் இருப்பான்.

சு. 157. சந்திரன், கும்பராசியின் 8-வது பாகையில் இருந்து அது ஐந்து அல்லது ஒன்பதாம் பாவமாகவரின் சகல ஜனங்களுக்கும் நன்மையைச் செய்கின்ற ராஜனுவான்.

சு. 158. மேடவிராசியின் 7-ஆவது பாகையிலாவது, சிம்மம் மிதுனம் இவைகளின் 5-ஆவது பாகையிலாவது செவ்வாய் இருப் பின் ராஜயோக முண்டாகும்.

சு. 159. கும்பத்தினுடைய 15-ஆவது பாகையிலும், கடகத்தினுடைய 10-ஆவது பாகையிலும் சந்திரன் இருந்தால் ராஜயோகமுண்டாகும்.

சு. 160. குரு தநுசில் 20-ஆவது பாகையிலும், சூரியனும் புதனும் சிங்கத்தின் 5-ஆவது பாகையிலும் இருப்பின் ராஜயோக முண்டாகும்.

சு. 161. சந்திரன் ஒரு ராசியில் 25-ஆவது பாகையிலாவது, 15-ஆவது பாகையிலாவது இருந்தால் தனது சொந்த புஜபலத்தினால் ராஜ்யத்தை ஆளுகின்றவனும், வீரனுயு முள்ள அரசனுவான்.

சு. 162. சனி, மகரத்தின் 5-ஆவது பாகையிலிருந்தால் அதிக நீதிமானும், பூதலத்திற்கு அலங்கார பூதனும், தர்மிஷ்டனும், சாஸ்திரக்ஞனுமுள்ள அரசனுவான்.

சு. 163. சந்திரனும் குருவும் சேர்ந்து கடகத்தின் 5-ஆவது பாகையில் இருந்தால் எல்லாக்கிரக சமூகத்துக்கும் சூரியன் விசேஷமானதுபோல வெல்ல முடியாத அரசனுவான்.

சு. 164. பூசம் கார்த்திகை அசுவினி இந்த நட்சத்திரங்களில் வர்க்கோத்தமாம்சம் பெற்று†சுபபுஷ்கர பாகங்களில் சந்திரன் பரிபூர்ண பலத்தோடு இருப்பின் சார்வபௌமனுன அரசனுவான். † இதே அத்தியாயம் 78-ஆம் சுலோகம் பார்க்க.

சு. 165. அசுவினி அநுஷம் அவிட்டம் இந்த நட்சத்திரங்களில் உச்சத்திலாவது வர்க்கோத்தமாம்சத்திலாவது செவ்வா யிருந்தால் ராஜயோகம் உண்டாகும்.

சு. 166. பரிபூர்ணமும் பலமும் பிரகாச யுக்தமு முள்ளவனுன சந்திரன், 10-ஆமிடத்திலும் நிர்மலனுன சுக்கிரன் 9-ஆமிடத்திலும் மற்ற எல்லாக் கிரகங்களும் 11-ஆமிடத்திலு மிருந்தால் தனக்குச் சமமில்லாத பௌருஷத்தோடு கூடிய அரசனுவான்.

சு. 167. எல்லாக் கிரகங்களும் சந்திரனிருக்கு மிடத்திற்கு 3-6-10-11 இந்தப் பாவங்களில் இருப்பின் மானமுடைய சக்கரவர்த்தியாவன்.

சு. 168. செவ்வாயிருக்கின்ற ராசிக்கு 5-ஆமிடத்தில் குருவும் 9-ஆமிடத்தில் சந்திரனும் 3-ஆமிடத்தில் சூரியனு மிருப்பின் அரசனுகவோ அல்லது அதிக சம்பத்தினுல் குபேரனுக்குச் சமமானவனுகவோ இருப்பான்.

சு. 169. புதனிருக்கு மிராசிக்கு 3-ஆமிடத்தில் சூரியனும் 4-ஆமிடத்தில் சுக்கிரனும் மற்ற கிரகங்கள் 5-ஆமிடத்திலும் இருந்து அவர்கள் நீசமும் சத்துரு க்ஷேத்திரமும் அடையாமல் இருப்பின் அரசனாய் இருப்பான்.

சு. 170. குருவிருக்கும் இராசிக்கு 2-4-10 இந்தப் பாவங்களில் முறையே செவ்வாய் சூரியன் சந்திரன் இவர்களும் மற்ற கிரகங்கள் 6-ஆமிடத்திலு மிருப்பின் ராஜ குலத்தில் பிறந்த அரசனாவான்.

சு. 171. சுக்கிரனிருக்கும் இராசிக்கு 4-ஆமிடத்தில் புதனும் சூரியனும் இருக்க மற்ற கிரகங்கள் 3-11 இந்தப் பாவங்களில் இருப்பின் ராஜயோகம் நிச்சயமாகக்கிடைக்கும்.

சு. 172. சனியிருக்குமிராசிக்கு கேந்திரஸ்தானங்களில் சுக்கிரன் புதன் இவர்களும் உச்சத்தில் குருவும் உச்சஸ்தானத்தில் இதர கிரகங்களும் இருப்பின் சிம்மாசன அதிபனான அரசனாவான்.

சு. 173. சூரியன் இருக்குமிராசிக்கு 3-5-11 இந்தராசிகளில் எல்லாக்கிரகங்களும் இருந்தால் அரசனாகவாவது, மந்திரியாகவாவது, சேனாதிபதியாகவாவது ஆவன்.

சு. 174. இலக்கினாதிபன் இருக்கும் இராசிக்கு 11-ஆம் பாவத்தில் எல்லாப்பாபர்களும் கேந்திரங்களில் சுபர்களும் இருப்பின் தன்னுடைய புஜபலங்கொண்டு ராஜ்யங்களை யடக்கியாளும் அரசனாய் இருப்பான்.

சு. 175. சந்திர ராசியதிபனான கிரகம் இருக்கின்ற ராசிக்கு மூன்றிலும் ஆறிலும் எல்லாப்பாபர்களும் சுப திருஷ்டியோடு கூடியிருந்தால் சக்கரவர்த்தியான அரசனாவான்.

சு. 176. குரு சிம்மத்திலோ மேடத்திலோ இருக்கவும் செவ்வாய் சூரியனுடைய திருஷ்டியோடு கூடி ஸ்வக்ஷேத்திரத்திலிருக்கவும் ஒரு கிரகம் நீசம் பெறாமல் 10-ஆமிடத்தில் இருப்பின் ராஜ குலத்தில் பிறந்தவன் அரசனாவான்.

சு. 177. குருவும் சந்திரனும் சுக்கிரனுடைய திருஷ்டியோடு கூடி கேந்திரத்தில் இருக்க ஒரு கிரகமும் நீசம்பெறாமல் பலமாயிருப்பின் அதிக கீர்த்திமானான அரசனாவான்.

சு. 178. சுக்கிரன் உதயத்தில் ஸ்வக்ஷேத்திராம்சத்தோடும் அதிக பலாதிக்கியத்தோடுமிருக்க புதனுடைய திருஷ்டியோ அல்லது

சூரியனுடைய திருஷ்டியோ பெற்று குரு 5-ஆமிடத்திலிருப்பின் தன்னுடைய புஜபலங்கொண்டு சத்துருக்களை நாசம் செய்யும் சக்கரவர்த்தியான அரசனாய் இருப்பான்.

சு. 179. சூரியன் சிம்மத்திலும் சந்திரன் கடகத்திலும் இருந்து இவ்விருவர்களுக்கும் குருவினுடைய திருஷ்டியுண்டாயின் அரசனாவான். (ஸ்ரீபதிபத்ததிப் பிரகாரம் திருஷ்டி கணித்துப் பார்க்க வேண்டும்.)

சு. 180. முன் சொல்லப்பட்ட சுனபா அனபா என்ற யோகங்களாலும், சந்திர கேந்திரத்திலிருக்கின்ற கிரகங்களாலும் ராஜயோகம் உண்டாகும். இந்தயோகங்களில் ஜனித்தவர்கள் ராஜகுலத்திலுதித்தவர்களாயின் அரசர்களாவார்கள்.

சு. 181. புதன் கடகத்திலும் குரு தநுசிலுமிருந்து சூரியன் செவ்வாய் இவர்களுடைய திருஷ்டியைப் பெற்றிருப்பின் வர்த்தமானனை அரசனாவான்.

சு. 182. மீனத்தில் சந்திரனும் கடகத்தில் குருவும் கும்பத்தில் சுக்கிரனுமிருந்தால் சக்தனை அரசனாவான்.

சு. 183. சுக்கிரனுடைய திருஷ்டியோடு கூடிய சனி கும்பத்திலும் சூரியன் லக்கினத்திலும் சந்திரன் ஜலராசியிலுமிருந்தால் ராஜனாவான்.

சு. 184. சூரியன் குரு இவர்களின் திருஷ்டியோடுகூடிய செவ்வாய் மேடம் விருச்சிகம் இவைகளிலிருந்தாலும், குருவினுடைய திருஷ்டியோடு கூடிய புதன் இடபத்திலிருந்தாலும் ராஜயோகம் உண்டாகும்.

சு. 185. சந்திரன் பரிபூர்ணமும் அதிகபிரகாசமும் அடைந்து ஐந்து கிரகங்களின் திருஷ்டியைப்பெற்று நீச விராசியையடையாமல் சுபஸ்தானத்தை யடைந்து நவாம்சத்தில் ஸ்வக்ஷேத்திரத்திலோ உச்ச க்ஷேத்திரத்திலோ இருப்பின் ராஜயோகம் உண்டாகும்.

சு. 186. சனி 11-ஆமிடத்திலும் குருவும் சுக்கிரனும் லக்கினத்திலும் சந்திரன் ஸ்வக்ஷேத்திரத்திலும் சூரியன் 4-ஆமிடத்திலும் நிற்க புதனும் செவ்வாயும் வக்கிரகதியோடு கூடியிருந்தால் அரசனாய் இருப்பான். அவ்வரசனது யானைகளின் மதஜலத்தின் பெருக்கையும் அவ்வியானைத்தலைவர்களையும் பார்த்து சேதுபந்தம் செய்வதற்குத் தகுந்தவனோவென்று சமுத்திர ராஜன் எண்ணுபவனாயிருப்பான்: இதனால் பெரும் படையுடையனென்பது கருத்து.

முப்பத்தைந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

## முப்பத்தாறுவது அத்தியாயம்.

## * கிரக ரஸ்மிகளும் பலன்களும்.

சு. 1. சூரியன் முதலான கிரகங்களின் ரச்மிகளினால் உண்டாகும் பிரதானமான பலாபலன்களை மாணிந்தர்கள் சொல்லி யிருக்கின்றார்கள். அதன் விவரம் கீழே கூறப்படுகின்றது.

சு. 2. சூரியன் முதலிய கிரகங்கள் பரமோச்சத்தி லிருந்தால் அவரவர்களுக்குள்ள ரச்மி சங்கியைகள் சூரியனுக்கு 10, சந்திரனுக்கு 9, செவ்வாய்க்கு 5, புதனுக்கு 5, குருவிற்கு 7, சுக்கிரனுக்கு 8, சனிக்கு 5 இவ்விதம் கொள்க.

சு. 3. பாதராயணர் மயன் மணித்தர் இவர்கள் மகேந்திர சாஸ்திரத்தில் மேற்சொன்ன பிரகாரமாக ரச்மிகளைத் தெரிவித்திருக்கின்றார்கள். எல்லாக் கிரகங்களுக்கும் எப்பொழுதும் ஏழுரச்மிகள் வீதம் கணக்கிடுவார்கள் என்றும் கூறுவர் பெரியார்.

சு. 4. மேற் கூறிய இரண்டு பட்சங்களும் முனிப்புரோக்தங்களாகையால் அவைகளுக்குப் பிராமாண்யம் உண்டெனினும் ஏழு வீதமுள்ளது என்பதனை நோக்கினால் சரியேயாம். எல்லாப் பட்சத்திலும் நீசத்திலிருக்கின்ற கிரகங்களுக்கு ரச்மியே யில்லை யென்ப.

சு. 5. பரம நீசத்திலிருக்கும் கிரகத்திற்கு ரச்மி யில்லை யென்று முன்பு கூறப் பெற்றுளது. அதிக நீசத்திலிருந்து முன்னால் செல்கின்ற கிரகங்களுக்கு முறையாக ரச்மிகள் விருத்தியாகி எதிர் முகமாகவும் பரமோச்சத்தி லிருந்து முன்னால் செல்கின்ற கிரகங்களுக்கு ரச்மிகள் முறையே குறைந்து பின் முகமாயும் வருகின்றன. இவைகளினால் உச்ச நீசங்களின் மத்தியிலிருக்கப்பட்ட கிரகங்களுடைய ரச்மிகளை திரைராசிகம் செய்து கண்டுகொள்ள வேண்டியதாகையினால் அத்திரை ராசிகம் சொல்லப்படுகின்றது.

---

* இதனை ஸ்ரீபதி ஆச்சாரியார் ஒவ்வொரு கிரகங்களுக்கும் பேதமில்லாமல் தனித்தனி 7 ரச்மிகளுண்டென்று கூறுகின்றார். இதனையும் அநேகர் அங்கீகரிக்கின்றனர். இதனால் ஒவ்வொரு கிரகங்களுக்கும் ரச்மி 7 என்பதை கீழே கண்ட கணிதத்தினாலறிக. 6 இராசிக்குரிய கலைகள் 10800 இதனுடன் 1800 கலையைச் சேர்க்க வருவது 12600. இதை 6-ஆல் பெருக்க 75600. இதை 10800-ஆல் வகுக்க ஈவு 7-வருவதையும் அறிக.

சு. 6. கிரகங்களின் சுத்தஸ்புடத்தில் பரம நீசதுருவங்களைக் கழித்துவந்த சேடம் 6 இராசிக்கு அதிக மாயிருப்பின் 12 இராசியில் கழித்துவந்த சேடத்தை அந்தந்த கிரகங்களினுடைய ரச்மிகளின் சங்கியை களினாற் பெருக்கி ராசிஸ்தானத்தை ஆருல் வகுத்து கிடைக்கின்றபலம் ரச்மியின் எண்களாகும்.

சு. 7-8-9. மேற் கூறிய பிரகாரம் நீசஹரணம் செய்து வந்த கிரகங்களுடைய ரச்மி எண்களுக்குக் கணிதம் செய்ய வேண்டிய கிரியைகளைச் சொல்கின்ருர். துவாதசாம்சத்தில் மித்துரு வீட்டில் இருக்கின்ற கிரகத்தினுடைய ரச்மியை இரட்டித்துக் கொள்க. ஸ்வக்ஷேத்திரத்திலும் துவாதசாம்சத்திலும் உச்ச வீட்டிலும் வக்ரத்திலுமுள்ள கிரகங்களுடைய ரச்மிகளை மூன்ருல் பெருக்கிக் கொள்க. (வக்ரத்தி லிருக்கும் கிரகங்களின் ரச்மிகளை இரட்டித்துக் கொள்ள வேண்டு மென்று சிலரும், ஸ்வ துவாதசாம்சத்திலிருக்கின்ற கிரகங்களின் ரச்மிகளை இரட்டித்துக்கொள்ள வேண்டுமென்று சிலரும், வக்ரத்திலிருக்கும் கிரகங்களின் ரச்மிகளை மூன்ருல் பெருக்கிக்கொள்ள வேண்டு மென்று சிலரும் கூறுகின்றனர்.) சத்துருத்துவாதசாம்சத்திலும் நீசத்துவாதசாம்சத்திலும் இருக்கும் கிரகங்களின் ரச்மிகளில் 16-இல் ஒரு பங்கைக் கழித்து விடவேண்டுமென்க. மௌட்டியமான (அஸ்தமனம்) கிரகங்களுடைய ரச்மி பூராவும் நீக்கிவிட வேண்டும். சுக்கிரனுக்கும் சனிக்கும் மௌட்யமுண்டாயிருப்பின் ரச்மிகளை அப்படியே வைத்துக்கொள்க. சுக்கிரனுக்கும் சனிக்கும் மௌட்யமுண்டாயின் அவரவர்களின் ரச்மிகளில் பாதிகளைந்து விட வேண்டுமென்று சிலர் கூறுகின்றனர். இவ்விதமாக பூர்வாசாரியர்களான மகருஷிகள் எல்லாக் கிரகங்களுக்கும் ரச்மிகளைக் கண்டு கொள்ளும் விதங்களைக் கூறியுள்ளார்கள்.

சு. 10. எல்லாக் கிரகங்களுக்கும் மேற்சொன்ன பிரகாரம் ரச்மிகளைக் கணித்து ஒன்று சேர்த்துக் கூட்டிய எண்கள் ஒன்றுமுதல் ஐந்துக்குள்ளிருப்பின் மிகவும் துக்கிதர்களாயும், குலஹீனர்களாயும், பிறர்களுக்கு வசப்படாதவர்களாயும், அதிக தரித்திரர்களாயும், குலோசிதமில்லாத பிரவிருத்திகளைச் செய்கின்றவர்களாயும் இருப்பார்கள்.

சு. 11. ரச்மியின் எண்கள் 6-முதல் 10-க்குள்ளிருப்பின் கூலிவேலை செய்கின்றவர்களாயும், பிறதேசத்திற்குப் போகின்றவர்களாயும், சௌக்கியமில்லாதவர்களாயும், ஆசாரமில்லாதவர்களாயும் இருப்பார்கள்.

சு. 12. ரச்மியோகம் 10-க்கு மேல் 15-க்குள்ளிருப்பின் அநேக சாஸ்திரங்களில் பரிச்சயமுள்ளவர்களாயும், சௌஜன்ய (அன்பு) முள்ளவர்களாயும், சுமுகராயும் குலதுல்ய முள்ளவராயும் இருப் பார்கள்.

சு. 13. ரச்மி யோகம் 16-க்கு மேல் 20-க்குள்ளிருப்பின் முறையே குலசிரேஷ்டன், தனவான், பிரசித்தன், யசஸ்ஸை சம்பா திக்கின்றவன், சொந்த ஜனங்களால் பூஜிக்கப்படுபவன் ஆவன். யஜஸ் = கீர்த்தி.

சு. 14. ரச்மி யோகம் 21-க்குமேல் 25-க்குள்ளிருப்பின் பூஜ்ய னும், சுபகன்மனும், தீரமுள்ளவனும், வித்துவானும், ராஜனு யும், கர்த்தவ்யங்களான சமஸ்தங்களையும் வேண்டியவாறு சாதிக்கின் றவனும் இருப்பான்.

சு. 15. ரச்மி யோகம் 26-க்கு மேல் 30-க்குள்ளிருப்பின் அதி கோபசீலம், அரசர்களைச்சார்ந்து அவர்களால் கிடைக்கப்பட்ட தனங் கள், சுகங்கள், அரச அமைச்சபதவிகள், அரசர்களால் வெகுமானிக் கப்படுதல் ஆகிய இவைகள் உள்ளவனுபிருப்பான்.

சு. 16. ரச்மி யோகம் 31 ஆயின் மிகவும் சிரேஷ்டத்தன்மை, பிரசித்தம், அரசர்களுக்கிஷ்டம் ஆகிய இவைகளோடு கூடினவனு வான். ரச்மி யோகம் 32 ஆயின் ஐம்பதுகிராமங்களுக்கு ஆதிபத்தி யம் வகிக்கின்றவனுயிருப்பான்.

சு. 17. ரச்மியோகம் 33 ஆயின் ஆயிரம் கிராமங்களுக்கு அதி பதியாயும், ரச்மியோகம் 34 ஆயின் மூவாயிரம் கிராமங்களுக்கு அதி பதியாயும் இருப்பான்.

சு. 18. ரச்மி யோகம் 35 ஆயின் மண்டலாதிபர்களாகவும், நிரம்ப பொக்கிஷ சாலைகளுள்ளவராகவும், அந்தப்புரங்கள் அதிக முள்ளவராகவும், அதிகமான சத்துவத்தை யுடையவராகவும், நல்ல காந்தியும் யஜசும் உள்ளவர்களாகவும், எல்லா ஜனங்களுடைய கண் ணிற்கும் அமிர்ததாரையைச் செய்கின்றவராகவும் இருப்பார்கள்.

சு. 19. ரச்மி யோகம் 36 ஆயின் நிச்சயமாக ஒன்றரைலட்சம் கிராமங்களுக்கு அதிபர்களாய் இருப்பார்கள்.

சு. 20. ரச்மி யோகம் 37 ஆயின் ஜாதகன் மூன்றுலட்சம் கிரா மங்கட்கு ஆதிபத்தியம் பெற்று நிர்வாகம் செய்யக்கூடிய அரசனு யிருப்பான்.

சு. 21. ரச்மி யோகம் 38-39 ஆயின் சகல ஜனங்களுக்கும் சந்தோஷத்தை உண்டு பண்ணுகின்ற ராஜசிரேஷ்டனாய் இருப்பான்.

சு. 22. ரச்மி யோகம் 40 ஆயின் ஜாதகன் விசாலமான பூமியின் நாதனாவான். அந்த ராஜாவினுடைய யஜமானை நாசம் செய்ய எண்ணிய சத்துரு ராஜாக்களுடைய மனைவிகள். *ஆக்ரோச முடையவர்களாவார்கள்.

சு. 23. ரச்மி யோகம் 41 ஆயின் நான்கு சமுத்திரங்களால் சூழப்பட்ட இப்பூமியையுடையவனாகவும், 42 ரச்மியாயின் அவைபோல இரண்டு மடங்கு பூமியை யுடையவனாகவும், 43 ரச்மியாயின் மூன்று மடங்கு பூமிகளுக்கு நாயகனான ராஜாதி ராஜனாகவும் இருப்பான்.

சு. 24. ரச்மியோகம் 44 ஆயின் சௌம்மியனாயும், தேவப்பிராம்மண பக்தனாயும், தீர்க்கபஜசு, சத்துவம், பராக்கிரமம் இவைகள் உள்ளவனாயு முள்ள சக்கரவர்த்தியா யிருப்பான்.

சு. 25. ரச்மியோகம் 45 ஆயின் கிரமமாக விருத்தியாகி மேலேமேலே ஏற்பட்ட துவீபாந்தரங்கள் ஒவ்வொன்றிற்கும் ஆதிபத்தியமுள்ளவராகவும், ஒருகாரியங்களிலும் அசுப மில்லாதவர்களாகவும், எல்லாராலும் வணங்கப்படுகின்றவராகவும், ஈகையாளர்களாகவும், இந்திரனைப் போன்ற பிரதாபத்தை யுடையவர்களாகவும் இருக்கிற ராஜாதி ராஜர்களாய் இருப்பார்கள்.

சு. 26. ரச்மியோகம் 45-க்கு மேலிருப்பின் அரசகுலத்தில் ஜனிக்காதவர்களும் ராஜத்துவம் முதலான குணங்களும் எல்லா சுபத்துவமும் சித்திக்கின்றவர்களாய் இருப்பார்கள்.

சு. 27. கிரகங்களின் ரச்மியோகம் 49-ம் சம்பூர்ணமாக ஒருவருக்கிருப்பின் சகல புவனங்களுடைய பாரத்தைச் சகிக்கின்ற வராயும், உலகத்தில் சத்துருக்களே யில்லாதவராயும், தேவேந்திரனைப்போல மகாத்மியத்தை யுடையவராயும், சகல ஜனங்களாலும் துதிக்கப் படுகின்றவராயும் உள்ள சக்கரவர்த்தியாய் இருப்பார்கள். இவ்விதம் சம்பவிப்பது அரிது.

சு. 28. கிரகங்களுடைய ரச்மிகளெல்லாம் அபிமுக (எதிர்முக) மான பிரவாகத்தோடு கூடியிருப்பின் பலத்தை மிகவும் புஷ்டியாக்கி மிகுந்த சுபத்தைச் செய்யும். ரச்மிகள் பராங்முக (பின்முக) மான

* அழுகை, கூப்பிடுதல், நிந்தை, சாபம் முதலியன.

பிரவாகத்தோடு கூடியிருப்பின் பலத்தைக் குறைத்து அசுபத்தைச் செய்யும். உச்சத்தோடும் வக்கிரத்தோடும் அடுத்துச் செல்கின்ற கிரகங்களுடைய ரச்மிகளுக்கு அபிமுகப் பிரவாஹமும், பரமோச்சம் பரம வக்கிரம் கழிந்திருக்கின்ற கிரகங்களுடைய ரச்மிகளுக்குப் பராங் முகத்துவமும் சம்பவிக்கின்றன.

சு. 29. ஜனன சமயம் எல்லாக் கிரகங்களுக்கும் ரச்மிகுறைவு ஏற்பட்டிருப்பின் எல்லா விதத்திலும் தரித்திரம் துஷ்கிருதம் துக்கம் முதலான கஷ்டபலன்களேயும், அற்பாயுளேயும் தரும். ரச்மி விருத்தியாயிருப்பின் சம்பத்தும் சுகிருதமும் தீர்க்காயுளும் நற்குணமும் உண்டாகும். இவைகளால் அதமாதமம்-அதமம்-மத்யமம்-அற்பசுகம் சுபம்-அதிசுபம்-முதலான பலபேதங்களேயும் அறிந்துகொள்ள வேண்டும்.

சமுதாயரச்மி 10-க்குக் குறையின் அதிகமான கஷ்ட பலனும். அதற்குமேல் 15 வரையில் சாமான்ய பலனும். 25-க்கு மேல் ரச்மிகள் உண்டாயின் பெரும் பாக்கியங் கிடைக்கும். இவை முதலான பேதங்களே நன்கறிந்து கொள்ளவேண்டும்.

முப்பத்தாறவது அத்தியாயம் முற்றிற்று.

## முப்பத்தேழாவது அத்தியாயம்.

# பஞ்சமகாபுருஷயோகங்களும் பலன்களும்.

சு. 1. இந்த அத்தியாயத்தில், பஞ்ச மகாயோகங்களையும் அதன் பலன்களையும் தேவகீர்த்தி கூறிய பிரகாரம் பஞ்ச மகா புருஷ யோக லட்சணங்களை யுடைய ராஜாக்களைப் பற்றி சவிஸ்தாரமாகக் கூறுகின்றேன்.

சு. 2. செவ்வாய் முதலிய ஐந்து கிரகங்கள் அவரவர்களின் உச்சராசியிலோ ஸ்வக்ஷேத்திரத்திலோ மூலக்ஷேத்திரத்திலோ இருந்து அவை கேந்திரஸ்தானங்களாக வரின் முறையே 1 ருசகம். 2. பத்திரம். 3. அம்சம். 4. மாளவ்யம். 5. சசம் என்னும் ஐந்து யோகங்கள் உண்டாகும். இந்த யோகங்கள் தான் பஞ்ச மகா புருடயோகங்களென்று கூறப்படுகின்றன. இவைகளின் லட்சணங்களை இங்கு விஸ்தாரமாகவும் சங்கிரம மாகவும் கூறுகின்றேன்.

சு. 3. செவ்வாயைக் கொண்டு சத்வத்தையும், புதனைக் கொண்டு குருத்துவத்தையும், குருவைக் கொண்டு ஸ்வரத்தையும், சுக்கிரனைக் கொண்டு ஸ்நிக்தத்தையும், சனியைக் கொண்டு வர்ணத்தையும் நிச்சயிக்கவேண்டும். இந்தக் கிரகங்கள் பலவான்களாயின் மேற்சொன்ன சத்வாதிகளுக்கு பூரண பலன்களையும், பலஹீனர்களாயின் குறைந்த பலன்களையும் சொல்லவேண்டும்.

சு. 4. சத்வகுணப் பிரதானியான ஜாதகன் சௌம்மியமும் ஜீவராசிகளினிடம் தயையும் உள்ளவனும், விசார முள்ளவனும், அதிக வேலையாட்களையும் மனைவிகளையும் உடையவனும், ஊக்கமான சுபாவத்தை யுடையவனும், பிரியமும் உண்மையும் வாய்ந்த வார்த்தைகளைப் பேசுபவனும், தேவர் பிராம்மணர் இவர்கள்பால் பக்தியுள்ளவனும், பொறுமையுள்ளவனும் இருப்பான்.

சு. 5. ரஜோகுணப் பிரதானியான ஜாதகன் சூரத்தன்மையுள்ளவனும், கலாவித்தைகளையும் காவியங்களையும் அறிகின்றவனும், நிரம்ப புத்திமானும், ஸ்திரீ போகத்திற் பிரீதியுடையவனும், ஆடம்பரமுள்ளவனும், பரிகாச சீலமுள்ளவனும், ஸ்வசாமர்த்தியத்தைப்பற்றிப் புகழ்கின்றவனும், சங்கீதத்திலும் சூதுவிளையாட்டிலும் பிரீதியுடையவனும் இருப்பான்.

சு. 6. தமோகுணப் பிரதானியான ஜாதகன் அறிவில்லாதவனு யும், சோம்பலுள்ளவனும், பிறர்களை வஞ்சிக்கின்றவனும், கோபம் *விஷாதம் கிருபணம் பசியினால் பீடித்தல் இவையுள்ளவனும், தனது ஆசாரங்களை விட்டவனும், சுத்தமில்லாதவனும், அகங்காரம் மிகுந்தவனும், பரதிரவியத்தை அபகரிக்கின்றவனும், மனோதைரிய மில்லாதவனும் இருப்பான். இவ்விதம் சத்வ, ரஜோ, தமோ முத லிய மூன்று குணங்களின் இலட்சணங்களை அறிந்து கொள்ள வேண் டும். இந்த மூன்று குணங்களுடைய அன்யோன்ய சம்பந்தத்தால் மிசிர குணங்களுள்ளவனாகக் காணப்பட்ட போதிலும் பெரும் பான்மை பற்றி குணபேதத்தை நிர்ணயிக்கவேண்டு மென்ப.

சு. 7. அரசர்களுக்குப் பூமியை ஆதரிக்குங் குண முண்டு. மற்றுள்ளவர்களுக்கு அஃதில்லை. அதனால் குணப் பிரகிருதி பேதத்தை யநுசரித்து சில லட்சணங்களினால் ராஜத்துவம் உண்டா கின்றது.

சு. 8. சிம்மம், மிருதங்கம், யானை; தேர், ஜலப்பிரவாகம். பேரிகை, காளை, மேகம் இவைகளின் சப்தம் போலுள்ள சப்தம் (தொனி) உடையவர்கள் சகல பூமியையாளும் சமர்த்தர்களாய் சத் துருக்களை ஜெயிக்கின்ற அரசர்களாய் இருப்பார்கள்.

சு. 9. நாக்கு, தோல், தந்தம், (பற்கள்) கண்கள், நகம், சிரோ ரோமம் இவைகள் மிருதுவாய் ஸ்நிக்த (பிரகாச) முள்ளவைகளாய் இருந்தால் அவர்கள் அரசர்களாகவே யிருப்பார்கள். மேற்சொன்ன வைகள் மிருதுவாய்ப் பிரகாசமில்லாதிருப்பின் அவர்கள் தரித்திரர் களாகவே இருப்பார்கள்.

சு. 10. சரீரவர்ணத்திற்குப் பிரகாசமும், தேஜசும் † நைர் மல்யமும் உண்டாயிருப்பின் அவர்கள் அரசர்களாவதற்குச் சந்தேக மில்லை. இக்குணங்களில்லாதிருப்பின் துக்கிதர்களாகவும், தரித்திரர் களாகவும் இருப்பார்கள். மிசிரலட்சணமாயின் சுகம் தனம் புத்திரர் இவைகள் மத்தியமமாயிருக்குமென்ப.

சு. 11. குருவிற்கு ஆகாயம், சுக்கிரனுக்குச் சலம், சனிக்கு வாயு, சேவ்வாய்க்கு அக்னி, புதனுக்குப் பூமி இவ்விதமாக கிரகங்களி னால் பஞ்ச பூதத்தை நிர்த்தாரணம் பண்ணி அவ்வக்கிரகங்களின் பலத்திற்குத் தக்கவாறு சரீரத்தின் சாயை வாத பித்த கபப்பிர

* வேறுபாடு. † சுத்தம்

கிருதி இவைகளை நிச்சயிக்கவேண்டும். (இந்த கிரகங்கள் மிசிரபல முடையவர்களாயிருந்தால் வாதாதி மூன்று தோஷங்களும் கலந்தே யிருக்கும். செவ்வாய்க்குப் பித்தம், புதனுக்கு வாதமும் பித்தமும் கபமும், குருவிற்குக் கபம், சுக்கிரனுக்குக் கபமும் வாதமும், சனிக்கு வாதம் இவ்விதமாக வாதாதி பேதங்களை அறிக.)

சு. 12. ஆகாயப் பிரகிருதி (சுபாவத்தை) யுடைய ஜாதகன் வீணை முதலிய வாத்தியங்களையும் காவியங்களின் அர்த்தங்களையும் நன்கு அறிகின்றவனும், நியாயசாஸ்திரங்களில் சமர்த்தனும், கௌரவயுக்தனும், திறந்திருக்கின்ற வாயை யுடையவனும், சித்திர மான அங்க சந்திகளுடையவனும், மெலிந்த பாதம் கைகள் உள்ளவனும், மிகவும் நீண்ட சரீரம் உள்ளவனும் இருப்பான்.

சு. 13. ஜலப்பிரகிருதி (சுபாவத்தை) யுடைய ஜாதகன் சௌந்தர்ய முடையவனும், நிரம்ப பாரங்களைச் சுமக்கின்றவனும், தன்னிஷ்டப்படி பேசுகின்றவனும், நெய் ஜலம் முதலான திரவப் பொருள்களை உண்கின்றவனும், அதிக பந்துக்கள் உள்ளவனும், பூமிக்கதிபனும், பூர்ணபலம் இல்லாதவனும் இருப்பான்.

சு. 14. வாயுப் பிரகிருதி (சுபாவத்தை) யுடைய ஜாதகன் மெலிந்த தேகம் உடையவனும், விரைவில் கோபங் கொள்ளும் சுபாவ முடையவனும், கெட்ட செய்கை யுள்ளவனும், சஞ்சாரத்தில் பிரியமுள்ளவனும், தானசீல முள்ளவனும், வெண்மை நிறமுள்ள வனும், அரசனால் வெல்ல முடியாதவனும் இருப்பான். அரசனாலும் அடைய முடியாத கீர்த்தி யுடையனுவன்.

சு. 15. அக்னிப் பிரகிருதி (சுபாவத்தை) யுடைய ஜாதகன் சூரனும், பசியினால் பீடிக்கப்பட்டவனும், ஹிருதய சாபல்ய முடையவனும், மிகவும் கடுமையானவனும், அறிவுள்ளவனும், மெலிந்த (தேகத்தை யுடைய) வனும், வெண்மை நிறமுள்ள சரீரத்தை யுடையவனும், விருத்த ப்பிரகிருதியாயும், வித்துவானும், அபிமானியாயும், அதிகமாய்ச் சாப்பிடுகின்றவனும், சரீர பலமுள்ளவனும் இருப்பான்.

சு. 16. பூப்பிரகிருதி (சுபாவத்தை) யுடைய ஜாதகன் கர்ப்பூரம் பிச்சுப்பூ கருங்குவளைப்பூ இவைகளின் வாசனையோடு கூடியவனும், சிம்மம் இடி இவைகளைப் போன்ற சப்த முடையவனும், நிலையுள்ள மனோ வியாபாரத்தோடு கூடினவனும், சம்பத்திலும் ஆபத்திலும் விகாரத்தை அடையாத மனோபலமுள்ளவனும் இருப்பான்.

சு. 17. இனி பஞ்ச மகா பூதங்களின் சாயையைக் கூறுகின்றார்.

ஸ்படிக மணியோடு சமத்துவமும், மிகவும் நிர்மலமும், தன்யமும் ஆன ஆகாச சத்துவத்தினுடைய சாயை: (நிழல்)நிதியைப்போல தர்மார்த்த காமங்களைக் கொடுத்து சௌம்மியத்தைச் செய்கின்றது.

சு. 18. பிரகாச முள்ளதும், கறுத்ததும், பச்சை நிறமுடையதும், நேத்திரத்திற்குச் சந்தோஷத்தை உண்டு பண்ணுகின்றதுமான ஜல சத்துவத்தினுடைய சாயை: மாதாவைப்போல சகல சுகங்களையும், சௌபாக்கியத்தையும், ஐஸ்வரியாபிவிருத்தியையும் உண்டாக்குகின்றது.

சு. 19. கார்மேகத்தைப்போல் கறுத்ததும், துர்க்கந்த முள்ளதும், மிகவும் திடத்தோடு கூடியதும், மங்கியதும், கடூரமுள்ளதும், துக்க சந்தாபங்களால் தபிக்கப் படுகின்றதுமான வாயு சத்துவத்தினுடைய சாயை: வதம்-பந்தனம்-வியாதி-அனர்த்தம்-பொருள்-நாசம் இவைகளைச் செய்கின்றதாகின்றது.

சு. 20. சுவர்ணம் அக்கினி இவைகளின் நிறமுள்ளதும், மிகவும் குரூரமும், சந்தோஷகரமும், சகல சத்துருக்களுடையதும்-தலையை வணங்கச் செய்வதும், பராக்கிரமத்தினால் பூமியைக் கைவசப்படுத்துகின்றதும், ரோக துக்கங்களில்லாததும் ஆன அக்கினி சத்துவத்தினுடைய சாயை ரத்தினங்கள் சுவர்ணம் இவைகளைக் கொடுத்து சகல காரியங்களையும் ஆயாச மில்லாது சாதிக்கின்றது.

சு. 21. புது மழையில் நனைந்த பொடிமண் அகில் முதலிய கந்தமுள்ளதும், பல் நகம் ரோமம் சரீரம் தலைமயிர் இவைகளுக்கு மிகவும் பிரகாசங் கொடுப்பதும் ஜனங்களுக்குப் பிரியத்தைச் செய்வதுமான பூமி சத்வத்தினுடைய சாயை: தர்மம் பொருள் சந்தோஷம் சுகம் இவைகளைக் கொடுக்கின்றது.

சு. 22-23. இனி திரிதோஷங்களான வாத பித்த கபங்களுடைய பிராதான்ய (விசேட) த்தை நிரூபிக்கின்றார். இது முதல் இரண்டு சுலோகத்தினால் வாதப் பிரதானியான ஜாதகனின் லட்சணம் சொல்லப்படுகின்றது.

சகிக்க முடியாத குளிர், அதிகப் பேச்சு, வேகமான நடை, ஓரிடத்திலும் நிலைத்திருக்காமை, சௌரியம், மத்சரம், (பிறனுடைய நன்மையிலுள்ள துவேஷம்) ரோககரர்களில் பிரியம், துர்பக்த்வம், நயஹீனம், பற்கடித்தல், எல்லாரிடத்திலும் அதிகமான சினேக மில்

லாத புத்தி, சங்கீதஞானம், சரீர மெலிவு, பந்துக்களைத் தேடிப் பிடிப்பதில் சாமர்த்தியம், சொப்பனத்தில் ஆகாச சஞ்சாரம் செய்கின்றதாகத் தோன்றுதல், தைரியஹீனம், தலைமயிரும் மீசையும் கடுரமாயிருத்தல், நன்றியின்மை, கைகால்கள் உடைதல், கோபாதிக்கியம், காந்தியின்மை, விலாபம், மலபந்தம், பொருள் நாசம் இவைகளைக் காணுதல் இவ்வித லட்சணங்களெல்லாம் வாதப்பிரதானியானவனுக் குள்ளவைகளாம்.

சு. 24-25. பித்தப் பிரதானியின் லட்சணம் சொல்லப்படுகின்றது.

துர்க்கந்தம் உண்டாதல், அதியுஷ்ணம், தீவிரபுத்தி, வேகத்தில் சந்தோஷிக்கின்ற சுபாவம், பெருத்த சரீரம், நகங்களும் கண்களும் கைகால்களும் சிவந்திருத்தல், வயோதிகலட்சணம், எரித்தல், தாரணசக்தி, யுத்தத்தில் சூரத்தன்மை, குளிர்ச்சியில் பிரியம், பிறர்கள் கலகம் செய்யும்படி பேசுதல், பயமின்மை, பலவிதமாக சிநேகித்தல், தன்னை வணங்குபவரை விரும்புதல், சொப்பனத்தில் சுவர்ணம், சூரியன், தீபம், காட்டுத்தீ, முள்ளு, முருங்கைப்பூ (கல்யாண முருங்கை) செம்பருத்திப்பூ, ரத்னம், கர்ணி கார புஷ்பம், செந்தாமரை, ரத்தப்பிரவாகம், மின்னற் கூட்டங்கள் இவைகளைக் காணுதல், இவைகளெல்லாம் பித்தப் பிரதானியின் இலட்சணங்களாம்.

சு. 26-27. கபாதிக்கிய முள்ளவனின் லட்சணம் சொல்லப்படுகின்றது.

ஸ்ரீமத்வம், அவயவசந்தி சேர்ந்திருத்தல், தைரியம் பலம் ஆகிய இவைகளையடைதல், தேகபலம், கிராஹித்துவம், சுகதுக்காதிகளின் விகாரமின்மை, முரச (ஒரு வகை பேரிகை) வாத்தியம் போன்ற சப்தம், பொறுமை, வெண்மை நிறம், கடைக்கண் சிவந்திருத்தல், மதுர ரசத்திற் பிரியம், உறுதி, நன்றி, துக்கக் காரியத்திலும் துன்பப்படாதிருத்தல், (அழாதிருத்தல்) விசேஷமாகப் பந்து ஜனங்களாலும் குருக்களாலும் சகல ஜனங்களாலும் பூஜ்யனுதல், சொப்பனத்தில் சமுத்திரம், நதி, தடாகம், முத்து, மணி, அன்னப்பட்சிகளின் கூட்டம், வெண்தாமரை, சங்கு, நட்சத்திரம், முல்லைப்பூ, ஆம்பல்பூ, சந்திரன், பனித்துளிர் ஆகிய இவைகளைக் காணுதல், கபப் பிரதானியின் இலட்சணங்களாம். (இவ்விதம் வாதாதி மூன்று தோஷங்களையும் லட்சணங்களையும் பலன்களையும் நிச்சயிக்கவேண்டும். இவைகளில் ஒன்றோ இரண்டோ

மூன்ளுே கலந்திருப்பின் இந்த லட்சணங்கள் எல்லாம் கலந்திருக்குமென்ப.

சு. 28. பலமற்றவர்களான சந்திரனேடாவது சூரியனேடாவது குஜாதி பஞ்சக் கிரகங்கள் சேர்ந்திருப்பின் ருசகாதி பஞ்சமகா யோகங்களுடைய பலங்கள் மிச்ரமாயிருக்கும். அந்தயோகங்களினுல் ராஜயோகம் கிடைப்பதில்லே. ஆகையால் யோக கர்த்தாக்களான அந்தக் கிரகங்களுடைய தசாபகாரங்களில் (தசாபுத்திகளில்) தன சந்தாளுதிகுணங்கள் உண்டாகும்.

சு. 29. மாளவ யோகத்தில் ஜனித்தவனுடைய பலத்தைச் சொல்லுகின்ருர்.

பருமனில்லாத உதடு, சமசரீரம், அதிகரத்தமில்லாத அங்கசந்தி, மெலிவான இடை, சந்திரனைப்போன்ற சரீரகாந்தி, யானையின் நாதம் போன்ற சப்தம், நல்லவாசனே, நல்ல ஒளியுடைய கண்கள், சமமான வெளுத்தபற்கள், முழங்கால்வரையில் தொங்குகின்றகைகள் இவைகளோடு கூடியவனும், எழுபதுவயது ஆயுளுடையவனும், அரசனும் இருப்பான்.

சு. 30. மாளவ யோகத்தில் ஜனித்தவனுடைய பலத்தை மீண்டும் சொல்லுகின்ருர்.

முகம் பதின்மூன்று விரல் நீளமும், பத்தங்குல விஸ்தாரமும் உடைத்தாயிருக்கும். காதுகளுடைய இடை வெளியும் பத்தங்குல நீள முள்ளதாயிருக்கும். அவன் லாடம், மாளவம், சிந்து, பாரியாத்ரம் என்ற ராஜ்யங்களே ஆளுகின்ற அரசனும் இருப்பான்.

சு. 31. ருசக் யோகத்தில் ஜனித்தவனுடைய பலத்தைச் சொல்லுகின்ருர்.

நீண்டமுகம், நிர்மலமானகாந்தி, அதிக மனேஹரமான பலம், சாகசமாகவே காரியங்களேச் சாதித்தல், மனேஹரமான புருவம், கருத்த சிரோ ரோமம், சஞ்சாரத்திலும் யுத்தத்திலும் பிரியம், மந்திர வாதாதிகளில் அறிவு, கள்வர்களுக்குத் தலைமை, ரக்தசியாமவர்ணம், (சிவப்பும் கறுப்புங்கலந்தது) அதிகக்ரூரத்தன்மை, சத்துருசைங்யத்தைச் செயித்தல், சங்கம்போன்ற கழுத்து பிரதானத்துவம், க்ரூரத்தன்மை, அரசபதவி, தேவப்பிராம்மணபக்தி, கால் முட்டுகள் (முழங்கால்கள்) கணுக்கால்கள் சிறுத்திருத்தல், இவைகள் எல்லாம் ருசக யோகத்தில் பிறந்தவனுடைய லட்சணங்களாம்.

சு. 32. கைகால்களில் கட்வாங்கம், (கதை ஆகிருதியுள்ள ஒரு வகை ஆயுதம்) சயறு-காளை-வில்-வஜ்ரம்-வீணை-இவைகளின் வடிவம் போன்ற ரேகைகள் இருத்தலும், மந்திர வாதத்தாலும் அபிசார (மாயாமந்திரஜப)த்தினாலும் சாமர்த்தியமும், நூறுவிரல் உயரமும், ஆயிரம் பலம் நிறையுள்ள சரீரமும், முகத்தின் நீளத்திற் கொப்பான விசாலமுடைய இடையும் உடைத்தாயிருத்தலும் ருசகயோக லட்சணங்களாம்.

சு. 33. ருசகயோகத்தில் ஜனித்தவன் விந்திய பர்வதம் சஹ்ய பர்வதம் இவைகளுக்குட்பட்ட தேசங்களையும், நகரங்களையும் ரட்சிக்கின்ற அரசனும், எழுபது வயதுவரை ஜீவியமுள்ளவனும், அக்கினி மூலமாகவோ ஆயுத மூலமாகவோ இறந்து தேவ லோகத்தை அடைகின்றவனும் இருப்பான்.

சு. 34. சச யோகத்தில் ஜனித்தவனுடைய லட்சணத்தைச் சொல்லுகின்றார்.

பற்கள் அகன்று விசாலமாக இருத்தல், முகம் சிறுத்திருத்தல், அதிகவேகமாய் நடத்தல், துஷ்டத்தனம், அதிகக்ரூரத்தனம், மறைந்த பிரதாபம், காடு பர்வதம் கோட்டை நதி இவைகளில் அதிக பிரியம், குறைவான பிரவிருத்தி, அதிகமோ அற்பமோ இல்லாத லகுஸ்வபாவம், பிரசித்தி இவைகளோடு கூடினவனாய் இருப்பான்.

சு. 35. சச யோகத்தில் ஜனித்தவன் சேனாநாயகனும், எல்லாவற்றிலும் பிரியமுள்ளவனும், சமமான சரீரமுடையவனும், தாது வாதத்தில் பிரியமுள்ளவனும், நிலைமையற்றவனும், பூமொக்குப் போன்ற மலர்ந்திராத நேத்திரங்களை யுடையவனும், பரஸ்திரீகளையும் பரதனங்களையும் அன்னியர் மனைகளையும் விரும்புகின்றவனும், தாயாரிடத்தில் பக்தியுள்ளவனும், அழகான கணுக்கால்களை யுடையவனும், மெலிந்த இடையுடையவனும், பலவிதமான விசாரமுள்ளவனும், பிறர்களுடைய குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் சமர்த்துள்ளவனும் இருப்பான்.

சு. 36. இந்த சச யோகத்தில் பிறந்தவன் கை கால்களில் கட்டில்-சங்கு-ஆயுதம்-மிருதங்கம்-மாலை-வீணை-இவைகளின் ரூபமுள்ள ரேகைகளை யுடையவனும், 70 வருஷம் ஜீவித்திருப்பவனும், பிரத்யந்தம் என்னும் மிலேச்ச தேசத்தின் அதிபதியாக இராச்சியத்தைப் பரிபாலனம் செய்பவனும் இருப்பனென்று முனீந்திரர்கள் கூறியுள்ளார்கள்.

சு. 37. ஹம்ச யோகத்தில் பிறந்தவனுடைய லட்சணத்தைச் சொல்லுகின்றார்.

சிவந்த முகம், உயர்ந்த மூக்கு, அழகுள்ள பாதம், பிரசன்ன இந்திரியம், வெண்மைநிறம், விசாலமான கன்னம், சிவப்பு நிறம் பொருந்திய நகங்கள், ராஜஹம்சம்போன்ற தொனி, கபாதிக்கியம், அஸ்தம் பாதம் இவைகளில் சங்கு-தாமரை-அங்குசம்-மாலை (கயறு) இரட்டைமீன்வடிவம்-யக்ஞஸ்தம்பம்-வில்-தோள்-வளை-என்னும் ரூபமுடைய ரேகைகள் இருத்தல், தேன்நிறம் போன்ற நிறமுள்ள நேத்திரங்கள், விருத்தாகாரமான சிரசு இவைகள் எல்லாம் ஹம்சயோகத்தில் பிறந்தவனுடைய லட்சணங்களாம்.

சு. 38. இந்த ஹம்சயோகன் ஜலக்கிரீடையில் பிரியமுள்ளவன். ஸ்திரீ போகத்தில் திருப்தியில்லாதவன். இவன் ஆயிரத்தறுநூறு பலம் எடையுள்ள சரீரத்தை யுடையவன். தொண்ணூற்றாறு அங்குல உயரமுள்ளவன் ஆவன் என்க.

சு. 39. இந்த யோகன் சூரசேனம் காந்தாரம் கங்கை யமுனை இந்நதிகளின் மத்தியிலுள்ள பிரதேசங்களை ஆளுகின்றவனும், 90 வயது ஜீவித்திருப்பவனும், காட்டிலிருந்து உயிர்விடுபவனுயும் இருப்பான்.

சு. 40. பத்திர யோகத்தில் பிறந்தவனுடைய லட்சணத்தைச் சொல்லுகின்றார்.

புலிக்குச்சமமான முகம், யானையைப்போன்ற நடத்தை, (நன்றி மறத்தல்) பெருத்திருக்கின்ற தொடை, மார்புகள், உருண்டு தடித்து முழங்கால்வரை தொங்குகின்ற கைகள், இரண்டு கைகளும் சேர்ந்துள்ள நீளத்தை யொத்த சரீர நீளம், காமசீலம், அழகுள்ளதும் நேரானதும் ஈனசிரோ ரோமங்களால் வியாபிக்கப்பட்ட கன்னங்கள், வித்வத்தன்மை, தாமரைப் புஷ்பத்தின் (உள்ளிருக்கும்) நிறம் போன்ற கைகால்கள், சத்வசத்தி, யோக சாஸ்திரக் ஞானம் இவைகள் யாவும் பத்திரயோகத்தில் பிறந்தவனுடைய லட்சணங்களாம்.

சு. 41. இப்பத்திரன் கைகால்களில் சங்கம்-வாள்-யானை-கதை புஷ்பம் - அம்பு - துவஜம்-சக்கரம்-தாமரை-கலப்பை-இவைகளுடைய ரூபம் போன்ற ரேகைகள், பச்சிலை யானையின் மதஜலம் புதுமழையினால் நனைந்திருக்கின்ற பூமி குங்குமம் இவைகளுடைய கந்தமுள்ள

(வாசனை) சரீரம் அழகுள்ள மூக்கு ஆகிய இவைகளும் பத்திர யோகத்தில் பிறந்தவனுடைய லட்சணங்களாகும்.

சு. 42. இப்பத்திரன் சாஸ்திரார்த்த ஞானம், தாரண சக்தி, சமமும் அழகாயுமுள்ள புருவம், யானையின் குஹ்யம் போன்ற ஆண் குறி, அழகுள்ள வயிறு, தர்மிஷ்டத்துவம், அழகுள்ள நெற்றித் தடம், தீரத்தன்மை, கறுத்து இருண்டு நீண்ட தலைமயிர் ஆகிய இவைகளும் பத்திரனுடைய லட்சணங்களாம்.

சு. 43. இப்பத்திரனே சர்வகாரியங்களிலும் ஸ்வாதந்திரியம் வாய்ந்தவனா யிருப்பான். இவனுடைய திரவியத்தினால் யாசகர் களும் மற்றுமுள்ள அன்னிய ஜனங்களும் ஜீவிப்பவர்களா யிருப்பார் கள். ஆனால், தனது சொந்த ஜனங்களுக்கு (தனக்குப் பாத்தியமான பந்து ஜனங்களுக்கு) உதவி செய்து அவர்களை ரட்சிக்கவே மாட் டான். இவைகளும் பத்திரனுடைய லட்சணங்களாம்.

சு. 44. இப்பத்திரனுடைய நிறையானது *இருபது துலாம். இவன் ஹிமாசலம் விந்திய பர்வதங்களின் மத்தியிலுள்ள பிரதேசங் களை ஆளுபவனா யிருப்பான். இவன் மனைவி முதலியவர்களுக்கும் இப்பத்திர யோக லட்சணங்களுண்டாயிருப்பின் அவன் நிச்சயமா கவே சகல ராஜ்யங்களையும் ரட்சிக்கின்ற அரசனாகவே இருப்பான். இவன் 80 வருடம் வரையில் ஜீவித்திருப்பான். மேற்சொன்ன யோகங்கள் பிரபலமும் பூர்ணமு மாயிருப்பின் அதன் பலன்களும் அவ்விதமே பூர்ணமா யிருக்கும். பூர்ணமில்லாத யோகங்களும் பூரண பலங்களைக் கொடுக்க மாட்டா வென்பதையும் அறிந்து கொள்ள வேண்டும்.

முப்பத்தேழாவது அத்தியாயம் முற்றிற்று.

---

* 288 பல நிறை

# முப்பத்தெட்டாவது அத்தியாயம்.

## இராஜ யோக பங்க லட்சணம்.

சு. 1. இவ்வத்தியாயத்தில் ராஜயோக பங்க லட்சணம் கூறப் படுகின்றது. இந்நூலில் பலவிதமான ராஜயோகங்களை விரித்துச் சொல்லி யிருக்கின்றார். ஆதலால் அவ்வித ராஜயோகத்தை அநுப வியாமைக்குரிய காரணமான ராஜயோக பங்கம் தெளிவாகக் கூறப் படுகின்றது.

சு. 2. சூரியன் செவ்வாய் குரு சனி இந்நான்கு கிரகங்களோ அல்லது மூன்றோ இரண்டோ ஒன்றோ நீசவிராசி யிலிருந்து அந்த நீசவிராசி லக்கினமாகி சந்திரன் விருச்சிகத்தி லிருப்பின் ராஜயோ கம் நிஷ்பல மாகின்றது.

சு. 3. சந்திரன், சரராசியின் கடைசி நவாம்சத்திலும், ஸ்திர ராசியின் எட்டாவது நவாம் சத்திலும், உபயராசியின் கடைசி நவாம் சத்திலும் க்ஷீணனாய் இருந்து ஒரு கிரகத்தினாலும் பார்க்கப் பெறா திருப்பின் ராஜயோகம் நிஷ்பல மாகும்.

சு. 4. எல்லாப் பாபர்களும் (சூரியன் செவ்வாய் சனி இவர் கள்) நீச விராசியிலோ சத்துருவிராசியிலோ இருந்து சுப சம்பந்தம் திருஷ்டி இவைகளைப் பெறாமல் கேந்திர பாவங்களி லிருந்தால் ராஜ யோகம் நிஷ்பல மாகும். இவர்கள் ஆறெட்டுப் பன்னிரண்டா மிடங் களில் இருந்து சுபர்களி லொருவர் சேர்ந்து இருப்பினும் ராஜயோகம் பலிக்கின்றதில்லை.

சு. 5. இலக்கினம் வர்க்கோத்தமாம்சகமில்லாமலும் கிரகங்களின் திருஷ்டியைப் பெறாமலும் இருப்பின் ராஜயோகம் பலன் தருவ தில்லை. ஜாதகனும் தரித்திரத்தை யுடையவனாய் இருப்பான்.

சு. 6. கும்பலக்கினத்தில் ஜனித்த ஜாதகருக்கு மூன்று கிரகங் கள் நீசம் அடையவும்; மகரத்தில் குரு, சூரிய சம்பந்தம் பெற்று அஸ் தமன மடையவும் யாதாமொரு கிரகம் சுபக்கிரகத்தோடு சேர்ந்து உச்சத்திலில்லாமலிருப்பின் ராஜயோகம் நிஷ்பலமாகும்.

சு. 7. இலக்கினத்திற்காவது சந்திரலக்கினத்திற்காவது கேந் திரங்களில் கிரகங்களில்லாமல் நான்கு கிரகங்கள் நீசம், அஸ்தமனம்,

சத்துருக்ஷேத்திரம் இவைகளையடைந்திருப்பின் ராஜயோகம் நிஷ்பலமாகும்.

சு. 8. சூரியன் ஸ்வக்ஷேத்திராம்சத்திலிருக்க சந்திரனுக்கு அதிக்ஷீணத்துவம் ஏற்பட்டு பாபர்களுடைய திருஷ்டியைப்பெற்று சுபக்கிரகங்களுடைய திருஷ்டியில்லாதிருப்பின் ஜாதகன் வனத்தில் வாசம் செய்பவனும், அதிக துக்கங்களை யநுபவிக்கின்றவனும் இருப்பான்.

சு. 9. சந்திரனுக்குச் சத்துருவான இலக்கினாதிபன் சந்திரனுடைய திருஷ்டியைப்பெற்று சூரியன் 3-ஆமிடத்திலும் செவ்வாய் 6-ஆமிடத்திலும் சனி 7-ஆமிடத்திலுமிருந்து சுபக்கிரகங்கள் கேந்திரங்களிலில்லாமல் அஸ்தமன மடைந்திருப்பின் ராஜயோகம் நிஷ்பலமாகும்.

சு. 10. ஐந்து கிரகங்கள் நீசமடையினும் அஸ்தமனமடையினும் ராஜயோகம் நாசமடையும் என்ப.

சு. 11. கொள்ளிமீன் விழுதல், இடி முழக்கம், வியதீபாதம், கேது உதயம் ஆகிய இக்காலங்களில் ஜனிப்பின் ராஜயோகம் நாசமென்ப.

சு. 12. முற்கூறியவையல்லாத மற்ற துர்நிமித்தகாலங்களிலும், திரிசங்குநட்சத்திரத்தினுடைய உதய சமயத்திலும், சனி லக்கினத்திலிருக்கின்ற காலத்திலும், ஜனிப்பின் ராஜயோகம் பங்கமடையும் என்ப.

சு. 13. இராஜயோக கர்த்தாவான கிரகங்களுக்கு யுத்த மேற்பட்டாலும் *ரூக்ஷதை †ஜர்ஜாத்வம் முதலான ‡பராஜய சின்னங்கள் (அடையாளங்கள்) சம்பவித்தாலும் ராஜயோகம் நிஷ்பலமாகும்.

சு. 14. சந்திரன் விருச்சிகவிராசியில் மூன்றும் பாகையான பரம நீசபாகையில் இருப்பின் ராஜயோகம் நிஷ்பலமாவதுடன் அரசனும் நாசமடைவான்.

சு. 15. சூரியன் துலாத்தின் 10-ஆவது திரிம்சாம்சத்தில் நிற்கின்ற சமயம் ஜனித்தவன் அதிக ஆசையால் எல்லாக் குண சமூ

* ரூக்ஷ ஃ = கடுமையான உலர்ந்த என்பது தாற்பரியம்.

† ஜர்ஜ = கிழமையான சிதைந்த என்பது தாற்பரியம்,

‡ பராஜயம் = தோல்வி.

கங்களேயும் எந்தமுறையால் அடைகின்றுனே அம்முறையே ராஜ்யத்தையும் இழக்கின்றுன்.

சு. 16. சூரியன் துலாத்தில் 10-ஆவது பாகையிலிருக்கும் போது ஜனித்தவனுக்குச் சந்தேகமில்லாமல் ராஜயோகம் நாசமாகுமென்று சொல்ப.

சு. 17. சில கிரகங்கள் மூலக்ஷேத்திரத்திலும், சிலகிரகங்கள் உச்சக்ஷேத்திரத்திலும், சிலகிரகங்கள் ஸ்வக்ஷேத்திரத்திலும் இருக்க சூரியன் பரம நீசத்தில் இருப்பின் முன்சொன்னகிரகங்களால் உண்டாகும் ராஜயோகம் பலம் கொடுப்பதில்லே.

சு. 18. ஜன்மலக்கினம் மகரமாகி அதில் குரு நீசனுயிருக்க சந்திரன் கடகத்தைத் தவிர்த்து மற்றவிடங்களிலிருப்பின் ராஜயோகத்துக்குப் பங்கம் ஏற்படுவதுடன் அந்த ஜாதகனும் அதிகதுக்கங்களால் பீடிக்கப்பட்டுத் துன்பமடைபவனுயும், காமத்தால் பீடிக்கப்பட்டவனுயும், தரித்திரனுயும், வேசியாவசியனுயும் இருப்பான் என்று கூறுப.

சு. 19. கேமத்துரும யோகத்தில் ஜனித்துச் சந்திரனுக்கு ஒரு கிரகத்தின் பார்வையுமில்லாதிருக்குமாயின் ராஜயோகம் நாசமாகும். ஜாதகனும் ஆசாரமில்லாதவனுய் இருப்பான்.

சு. 20. மூன்று அல்லது அதிகமான கிரகங்கள் நீசத்திலிருக்கும்போது ஜனித்தவன் அரச குமாரனுய் இருந்தாலும் ஜாதகன் மிகவும் துக்கமடைபவனுயும், ஆசாரஹீனனுயும், தரித்திரனுயும் *பராஜயத்தை அடைபவனுயும் இருப்பான்.

சு. 21. ஐந்து அல்லது அதிகமான கிரகங்கள் சத்துரு க்ஷேத்திரத்திலிருந்தாலும் அஸ்தமனம் அடைந்தாலும் சூரிய சந்திரர்கள் உச்சம் பெறுதிருப்பின் ராஜயோகம் நாசமாகும் என்ப.

குரு சுக்கிரர்கள் நீசாம்சகத்திலிருந்தால் ராஜயோகம் நிச்சயமாய் நாசமடையும். அன்றியும் ராஜ்ய நாசமும் சம்பவிக்குமென்ப.

இவ்விதமாக ராஜயோகங்களும் அவைகளின் பங்க லட்சணங்களும் தெளிவாகச் சொல்லப்பட்டன. புத்திமானுன தைவக்ஞன்

* பராஜயம் = தோல்வி.

பலாபலத்தை யறிந்து நன்கு ஆலோசித்து பலன்களை நிர்ணயித்துச் சொல்வானாக.

சூரியன் கன்னியிலும் செவ்வாய் குரு இவர்கள் விருச்சிகத்திலும் புதன் சுக்கிரன் சனி இவர்களின் திருஷ்டியோடு கூடிய சந்திரன், மேடத்திலு மிருப்பின் ஜாதகன் அரசனாயும், தனது யுத்தாதி யாத்திரைகளில் சஞ்சரிக்கின்ற யானைகளான மேகங்களால் மறைக்கப்பட்ட திக்குகளாகிற ஆகாசப் பிரதேசத்தோடு கூடியவனாய் இருப்பான். யானைப்படை அதிக முடையவனென்பது கருத்து.

**முப்பத்தெட்டாவது அத்தியாயம் முற்றிற்று.**

# முப்பத்தொன்பதாவது அத்தியாயம்.

## ஆயுர்த்தாயம்.

சு. 1. இனிமேல் ஆயுர்த்தாயத்தை விவரிக்கின்றூர். மனிதர்கள் யாவரும் ஆயுர்த்தாயத்தை அறிந்துகொள்ள ஆவலுள்ளவர்களாக இருக்கின்றனர். ஆதலால் பூர்வீக சாஸ்திரங்களை யநுசரித்து ஆயுர்த்தாயத்தை விரித்து இங்கு கூறுகின்றேன்.

சு. 2. இலக்கினத்திற்கு அதிக பலமுண்டாயின் அம்சதசையும், சூரியனுக்கு அதிக பலமுண்டாயின் பிண்டதசையும், (உச்சநீச தசை) சந்திரனுக்கு அதிக பலமுண்டாயின் நைஸர்க்கிக தசையும் கொண்டு ஆயுர்ப்பாவத்தை நிர்ணயிக்கவேண்டுமென்ப.

சு. 3. இலக்கினம்-சூரியன்-சந்திரன்-இவர்கள் நிரம்ப பலஹீனர்களாயின் பரமாயுளின் ஏழில் ஒரு அம்சமாய் வரும் ஜீவசர்ம தசையைக் கொண்டு ஆயுளை நிர்ணயிக்க வேண்டுமென்று பெரியோர்கள் கூறுகின்றனர்.

சு. 4, 5. இனி அம்ச தசை கூறப்படுகின்றது. சூரியாதி சப்த கிரகங்களுடைய சுத்த ஸ்புடத்தையும் இலக்கின ஸ்புடத்தையும் தனித்தனி கலைகளாக்கி 200-ஆல் வகுத்த ஈவு வருஷம். சேடத்தைப் பன்னிரண்டால் பெருக்கி 200-ஆல் வகுத்த ஈவு மாசம். சேடத்தை 30-ஆல் பெருக்கி 200-ஆல் வகுத்த ஈவு நாள். சேடத்தை 60-ஆல் பெருக்கி 200-ஆல் வகுத்த ஈவு நாழிகை. இவ்விதமாக எல்லாக் கிரகங்களுக்கும் விவரமாய்க் கணித்துக் கொள்க.

வருஷ ஸ்தானத்தில் 12-க்கு மேலிருப்பின் 12-ஐக் கழித்து சேடத்தைக் கொள்க. இலக்கினத்திற்குப் பூர்ணுதிக பலம் உண்டாயின் மேட முதல் இலக்கினம் வரையில் சென்ற ராசிகளின் எண்களை வருஷங்களாகவும், இலக்கினத்தில் சென்ற பாகை கலைகளைக் கலையாக்கி 150-ஆல் வகுத்த ஈவு மாசமாகவும், சேடத்தை 5-ஆல் வகுத்த ஈவு நாட்களாகவும், சேடத்தை 12-ஆல் பெருக்கி நாழிகையாகவுங் கொள்க. இவ்விதமாக வருஷம் மாசம் நாள் நாழிகையாக இலக்கின தசையைக் கண்டு கொள்க.

சு. 6. கிரகங்கள் வர்க்கோத்தமாம்சத்திலும் ஸ்வக்ஷேத்திரத்திலும் ஸ்வதிரேக்காணத்திலும் ஸ்வநவாம்சத்திலும் இருப்பின் அவ

ரவர்களுக்கு ஏற்பட்டுள்ள ஆயுர்த்தாய வருஷங்களை இரட்டித்துக் கொள்க. கிரகங்கள் வக்கிரத்திலும் உச்சத்திலுமிருப்பின் அவரவர்களுக்கேற்பட்ட வருஷங்களை மும்மடங்கு செய்து கொள்க.

சு. 7-8. மேற்சொல்லிய பிரகாரம் கிரகங்கள் ஸ்வக்ஷேத்திரம் ஸ்வ நவாம்சகம் முதலியவைகளோடு கூடியிருப்பின் அவைகளுக்குச் சொல்லப்பட்ட எல்லாக் குணனங்களையும் செய்யவேண்டுமென்றும், அது போலவே கேந்திரம் பணபரம் ஆபோக்லிபம் முதலிய ஸ்தானங்களில் இருக்கின்ற கிரகங்களுடைய தசையையும் குணிக்க வேண்டுமென்று சூடாமணியாசிரியர் கூறுகின்றனர்.

சு. 9. ஒரு கிரகத்திற்கே பல குணனங்களுண்டாயிருப்பின் அந்த எல்லாக் குணனங்களையும் ஒவ்வொன்றாகச் செய்யவேண்டியதில்லை. அவைகளில் கூடுதலாயுள்ள குணனம் இன்னதெனக் கண்டு அதனை மட்டும் செய்யவேண்டுமென வராகமிகிராசாரியார் கூறுகின்றனர். இக்கருத்தை பூர்வாசாரியர்களும் அங்கீகரித்திருக்கின்றனர். இப்போதுள்ளவர்களும் இவ்விதியை யனுசரித்து வருகின்றனர்.

சு. 10. சத்துரு க்ஷேத்திரத்திலிருக்கும் கிரகத்தின் ஆயுர்த்தாய வருஷங்களில் மூன்றிலொரு பங்கும், நீசத்திலும் அஸ்தமனத்திலும் இருக்கின்ற கிரகங்களின் ஆயுர்த்தாய வருஷங்களில் பாதியையும் நீக்க வேண்டும். சுக்கிரனும் சனியும் அஸ்தமன தோஷமடைந்திருப்பின் நீக்க வேண்டியதேயில்லை யென்பர். செவ்வாய் சத்துரு க்ஷேத்திரத்திலிருப்பின் நீக்க வேண்டியதில்லை யென்பர். வக்கிரமுள்ள கிரகம் சத்துரு க்ஷேத்திரத்திலிருப்பின் நீக்க வேண்டியதில்லை யென்பர் ஒரு சாரார்.

சு. 11-12. பன்னிரண்டாம் பாவத்திலிருக்கின்ற பாபக்கிரகங்களுடைய தசை முழுவதும் நீக்க வேண்டும். பதினொன்றாம் பாவத்திலிருக்கின்ற பாபக்கிரகங்களுடைய தசையில் பாதியும், பத்தாம் பாவத்திலிருக்கின்றபாபக்கிரகங்களுடையதசையில் மூன்றிலொருபங்கும், ஒன்பதாம் பாவத்திலிருக்கின்ற பாபக்கிரகங்களுடைய தசையில் நான்கிலொரு பங்கும், எட்டாம் பாவத்திலிருக்கின்ற பாபக்கிரகங்களுடைய தசையில் ஐந்திலொருபங்கும், ஏழாம் பாவத்திலிருக்கின்ற பாபக்கிரகங்களுடைய தசையில் ஆறிலொருபங்கும் ஹரணம் செய்ய வேண்டும்.

சுபக் கிரகங்கள் மேலே கூறியவாறு இருப்பின் மேற்கூறியவைகளில் பாதி நீக்க வேண்டும். ஒரு பாவத்தில் பல

கிரகங்கள் கூடியிருப்பின் அவைகளில் பலம் பெற்ற ஒரு கிரகத்திற்கு மாத்திரம் நீக்க வேண்டுமென்ப.

சு. 13-14. பிண்டாயுர்த்தாயமான உச்ச நீச தசை கணிக்கும் விவரங்களைத் தெளிவாய்க் கூறுகின்றார்.

பரமோச்ச பாகத்தில் இருக்கும் சூரியனுக்கு வருஷம் 19. சந்திரனுக்கு வருஷம் 25. செவ்வாய்க்கு வருஷம் 15. புதனுக்கு வருஷம் 12. குருவுக்கு வருஷம் 15. சுக்கிரனுக்கு வருஷம் 21. சனிக்கு வருஷம் 20 ஆகிய இவை பிண்டாயுர்த்தாயத்திற்குத் தசா வருஷங்களாம்.

சு. 15. முன் சொன்ன தசா வருஷங்கள் பரமோச்ச பாகத்திலிருக்கும் கிரகங்களுக்காம். கிரகங்கள் பரம நீசத்திலிருப்பின் மேற் சொல்லப் பெற்றுள்ள வருஷங்களில் பாதி வருஷங்களைக் கொள்ள வேண்டும். உச்ச நீசங்களுக்கு மத்தியில் இருக்கும் கிரகங்களின் தசைகளை திரைராசிகம் செய்து கண்டுகொள்க. அத்திரைராசிகம் செய்யும் கிரமம் இங்கு கூறப்படுகின்றது. சூரியாதி சப்த கிரகங்களின் சுத்த ஸ்புடங்களை அவரவர்கள் உச்சராசி பாகை கலைகளில் கழிக்க சேடம் 6 இராசிக்குக் குறைவாயிருப்பின் பன்னிரண்டு ராசியில் கழித்தும், ஆறு ராசிக்கு மேலிருப்பின் அப்படியே வைத்துக் கொண்டு அவைகளைக் கலைகளாக்கி அவரவர்களின் தசா வருஷத்தினால் பெருக்கி 21600-ஆல் வகுத்து வரும் ஈவு வருஷம் சேடத்தை முறையே 12-30-60-60-ஆல் பெருக்கி முறையே 21600-ஆல் வகுக்க வந்தவைகளே மாசம், நாள், நாழிகை, விநாடிகளாம்.

சூரியாதி கிரகங்களுக்குப் பரமோச்ச பாகைகளின் விவரம்.

| | | | |
|---|---|---|---|
| சூரியனுக்கு இராசி | 0-10-0-0. | சந்திரனுக்கு இராசி | 1-3-0-0. |
| செவ்வாய்க்கு இராசி | 9-28-0-0. | புதனுக்கு இராசி | 5-15-0-0. |
| குருவுக்கு இராசி | 3-5-0-0. | சுக்கிரனுக்கு இராசி | 11-27-0-0. |
| சனிக்கு இராசி | 6-20-0-0. | ஆகிய இவைகளே பரமோச்ச பாகமாம். | |

சு. 16. இவ்விதம் கணிக்கப்பெற்று வந்தவைகளை அம்சாயுர்த்தாயத்துக்குச் சொல்லப் பெற்றுள்ள எல்லா ஹரணங்களையும் செய்ய வேண்டும். செவ்வாய் சத்துரு க்ஷேத்திரத்திலிருப்பின் மூன்றிலொரு பங்கு ஹரணம் செய்யவேண்டியதில்லை. நீசத்திலிருக்கும் கிரகங்களுடைய தசையில் பாதி ஹரணம் செய்ய வேண்டும்.

இது திரைராசிகக் கிரியையிலுள்ளதாகையால் இவ்வரணங்களே யன்றி வேருெரு ஹரணமும் செய்ய வேண்டியதே யில்லை.

சு. 17. பிண்டாயுர்த்தாய கணிதத்தோடு கூடிய இலக்கின தசையானது நவாம்சக எண்ணிற்குச் சமமான வருஷத்தைக் கொடுக்கின்றது. நவாம்ச சேடங்கொண்டு திரைராசிகப் பிரகாரம் மாசம் நாள் நாழிகை விஞடி முதலானவைகளைக் கணித்துக்கொள்ள வேண்டும். இலக்கிஞதிபதி பூரண பலவாஞயிருப்பின் லக்கினஸ்புடத்திஞடைய ராசி அளவான வருஷங்கள் தசா வருஷங்களாக ஏற்படும்.

சு. 18-19. *குரூரோதய ஹரணம் சொல்லப் படுகின்றது. இலக்கினத்தில் சூரியஞவது செவ்வாயாவது சனியாவது இருப்பின் இலக்கின ஸ்புடத்தை வைத்து இராசியை நீக்கி பாகை கலைகளைக் கலையாக்கி அவைகளை ஒவ்வொரு கிரகத்திஞடைய ஆயுர்ப்பிரமாண வருஷாதிகளால் பெருக்கி 21600ஆல் வகுத்து வந்ததே இலக்கினத்திலிருக்கும் பாபக்கிரகத்திற்கு ஹரணமாம். இதை அவரவர்களுக்கு வந்திருக்கும் ஆயுர்த்தாய வருஷாதிகளில் கழித்துவிட வேண்டும். இலக்கினத்திற்குச் சுபக்கிரக திருஷ்டியுண்டாயின் மேலே சொல்லப்பட்டவைகளில் பாதி கழிக்கவேண்டும். இவ்விதமாக ஜீவசர்ம தசைக்கும் நைஸர்க்கிக தசைக்கும் ஹரணம் செய்ய வேண்டுமென்ப.

சு. 20. நைஸர்க்கிக தசா கணிக்கும் மார்க்கங்களை தெரிவிக்கின்ருர்.

சூரியனுக்கு வருஷம் 20. சந்திரனுக்கு வருஷம் 1. செவ்வாய்க்கு வருஷம் 2. புதனுக்கு வருஷம் 9. குருவிற்கு வருஷம் 18. சுக்கிரனுக்கு வருஷம் 20. சனிக்கு வருஷம் 50. இவ்விதமாக நைஸர்க்கிக தசா வருஷங்களை யறிந்து கொள்க. சூரியாதி கிரகங்கள் பரமோச்ச பாகங்களிலிருப்பின் மேற்சொன்ன வருஷங்களையும், பரம நீசபாகங்களிலிருப்பின் மேற்சொன்ன வருஷங்களில் பாதியையும் கொள்க.

உச்சத்திற்கும் நீசத்திற்கும் மத்தியிலிருப்பின் திரை ராசி மூலமாய் பிண்டாயுர்த்தாயத்துக்குச் சொன்ன பிரகாரம் கணித்துக் கொள்ளவேண்டும்.

---

*இக்கணன விரிவை என்ஞல் வெளியிடப் பெற்றிருக்கும் ஸ்ரீபதி ஜாதக கர்ம பத்ததி 5-ஆம் அத்தியாயம் 26 - 27-ஆவது சுலோகங்கள் தெளிவாய்க் கூறும். ஆதலால் ஆங்குணர்க.

ஜீவசர்ம தசை கணிக்கும் மார்க்கங் கூறுகின்றார்.

ஜீவசர்ம தசைக்குப் பரமாயுசான 120 வருஷங்களையும் ஏழினால் வகுத்து வந்த வருஷாதிகள் ஒவ்வொரு கிரகத்திற்கும் ஆயுர்த்தாய வருஷங்களாகின்றன. இதற்கு முன்சொன்ன ஹரணங்கள் எல்லாவற்றையும் செய்யவேண்டும். இலக்கினத்திற்கும் முன்சொன்னபடி கணித்துக் கொள்க.

சு. 21. மீனலக்கினத்தில் அந்திய நவாம்சத்தில் ஜனித்த ஜாதகனுக்குப் புதன் இடபவிராசியில் 25 கலைகள் சென்று நிற்கும் காலத்தில் மற்ற ஆறு கிரகங்களும் அவரவர்கள் பரமோச்ச பாகைகளில் இருப்பார்களாயின் பரமாயுள் பூரணமாக சம்பவிக்குமென்ப.

சு. 22. சந்திரனோடு கூடிய குரு கடக லக்கினத்திலும் புத சுக்கிரர்கள் கேந்திரத்திலும் சூரியன் செவ்வாய் இவர்கள் 3- 6- 11 ஆகிய இந்தப் பாவங்களிலுமிருப்பின் ஜாதகன் அதிக ஆயுளுள்ளவனாக இருப்பன் என்க. (இவன் 120 வருஷம் ஜீவித்திருப்பனென்பது சாஸ்திர சம்மதம்.)

சு. 23-24. மனிதர்களுக்கும் யானைகளுக்கும் பரமாயுள் 120 வருஷமும் 5 நாளும் ஆகும். குதிரைகளுக்கு வருஷம் 32, ஆடு மான் இவைகளுக்கு வருஷம் 16, கழுதை ஒட்டகம் இவைகளுக்கு வருஷம் 25. காளை எருமை இவைகளுக்கு வருஷம் 24, நாய்களுக்கு வருஷம் 12, பரமாயுள்களாம்.

மனிதர்களின் பரமாயுளைக்கொண்டு திரைராசிக மூலமாக ஆயுளைக் கணித்தறிதல்போல குதிரை முதலியவைகளின் பரமாயுளைக்கொண்டு திரைராசிக மூலமாகக் கணித்தறிந்துகொள்ள வேண்டும்.

சு. 25. ஹிதமாயும் (நன்றாயும்) மிதமாயும் (கொஞ்சமாயும்) ஆகாராதிகளை யுட்கொள்ளுகின்றவர்களுக்கும், சத்சுபாவமுள்ளவர்களுக்கும், நல்லொழுக்கமுள்ளவர்களுக்கும், இந்திரியாதிகளைச் செயித்தவர்களுக்கும் இங்கு சொன்னபிரகாரம் பரமாயுள் நிச்சயமாக ஏற்படுமென விருத்தன்மார்களான ருஷி சிரேஷ்டர்கள் நிச்சயம் செய்திருக்கின்றனர். மேற்சொன்னவைகளுக்கு விபரீதமாக நடப்பவர்களுக்கு இவை பலிக்காமல் அகால மரணம் உண்டாகுமென்ப.

முப்பத்தோன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

# நாற்பதாவது அத்தியாயம்.

## மூலதசாபலம்.

சு. 1. இந்த அத்தியாயத்தில் தசாபலன்கள் சொல்லப்படுகின்றன. யாதொரு கிரகம் ஆயுளைக் கொடுக்கின்றதோ அவ்வாயுட்காலம் அந்தக் கிரகத்தின் தசையாகின்றது. குணதோஷங்களுக் கேற்றவாறு அந்தக் கிரகம் தன்னுடைய தசாகாலங்களில் தனக்குள்ள பலன்களைக் கொடுக்கின்றது.

சு. 2. பகலில் ஜனித்தவனுக்குச் சூரியனும் இரவில் ஜனித்தவனுக்குச் சுக்கிரனும் முன்னால் தசாநாதர்களாகின்றனர் என்று மணித்தர் சொல்லுகின்றார். இது பலத்திற்குப் பொருத்தமின்மையால் மற்றவர்கள் அங்கீகரிக்கின்றதில்லை.

சு. 3. * இலக்கின ஆதித்ய சந்திரர்களில் பலாதிக்கியமுள்ளவனுடைய தசை முதன் முதலில் உண்டாகும். பிறகு இந்த தசாநாதனுக்குக் கேந்திரத்திலிருக்கின்றவருடைய தசை உண்டாகும். பல கிரகங்கள் கேந்திரத்திலிருப்பின் அவர்களின் பலாதிக்கியத்திற்குத் தகுந்தவாறு முன் பின்னாக தசை நடக்கும். பிறகு பணபரத்திலிருக்கின்றவருடைய தசை யுண்டாகும். பிறகு ஆபோக்லீபத்தி

---

* இதுபற்றி பிரகஜ்ஜாதகர் அபிப்பிராயம் வருமாறு :

இலக்கினம் - சூரியன் - சந்திரன் ஆகிய இவர்களுள் எவர் பலமுடையாரோ அவரின் தசை முதலில் உண்டாம். பின்னர் அதன் கேந்திரத்திலிருக்கிற கிரக தசையாம். அதன்பின் பணபரத்திலிருக்கும் கிரக தசையாம். பின் ஆபோக்லீபத்தி லிருக்கும் கிரக தசையாம். கேந்திரத்திலிருக்கும் கிரக தசையானது பிரதம வயதிலும், பணபரத்திலிருக்கும் கிரக தசையானது மத்தியம வயதிலும், ஆபோக்லீபத்தில் இருக்கும் கிரக தசையானது அந்திய வயதிலும் பலனைத்தரும். கேந்திரத்தில் கிரகங்களில்லாவிடில் பணபரத்திலிருக்கும் கிரகங்களானவை வயதின் முதற்பாகத்தில் பலனைக் கொடுக்கும். பின்னர் ஆபோக்லீபத்திலிருக்கும் கிரகம் பலனைக் கொடுக்கும். கேந்திரத்திலும் பணபரத்திலும் கிரகங்கள் இல்லாவிடின் ஆபோக்லீபத்திலிருக்கும் கிரகங்களே ஒருவனது வாழ்நாள் முழுவதும் பலனைக் கொடுக்கும்.

ஆபோக்லீபத்தில் கிரகங்கள் இல்லாவிடின் பிரதம வயதில் கேந்திர ஸ்தானத்திலுள்ள கிரகத்தாலும், அந்திய வயதில் பணபர ஸ்தானத்திலுள்ள கிரகத்தாலும் நன்மையடைவன் என்க.

விருக்கின்றவருடைய தசை யுண்டாகும். பண பரம் ஆபோக்கி லீபங்களில் பல கிரகங்களிருப்பின் கேந்திரத்திற்குச் சொன்ன வாறு கொள்க என்று சத்தியாசாரியார் சொல்லுகின்றார். இதனையே எல்லோர்களும் அங்கீகரிக்கின்றனர்.

சு. 4. இலக்கின ஆதித்திய சந்திரர்களில் பலம் பெற்றவர் களுடைய தசையும், அதன்பின் கேந்திரம் முதலியவைகளில் இருக் கின்றவர்களுடைய தசைகளும் நிகழும் கிரமத்தை முன் சொல்லி யிருக்கின்றோம். அங்கு கேந்திராதிகளில் இருக்கின்ற கிரகங்களுக் குப் பல சாமியம் ஏற்படின் தசா வருஷம் அதிகமாயுள்ளவனுடைய

---

ஆபோக்கிலீபத்தும் பணபரத்தும் கிரகங்களில்லாதிருப்பின் வாழ்நாள் முழுவதும் கேந்திரத்துள்ள கிரக நன்மையானே நற்பலன்களைப்பெற்று வாழ் வன்.

இதில் வெகு கிரகங்களிருந்தால் பலமுள்ள கிரகம் ஒன்றற்கே ஆரம்பத் திற்றசை கற்பிக்கவேண்டும். பின்னர் கிரகங்களின் பலதார தம்மியத்தான் வரிசைக் கிரமமாய்த் தசை கற்பித்தல்வேண்டும். அவ்விதத்தும் கிரக பலத் திற் சமமானவர்களாய் இருப்பின் தசா வருஷங்கள் அதிகம் உடையார்க்குத் தசை கற்பிக்கவேண்டும். (இரண்டு கிரகங்கள் ஆட்சி உச்சம் திரிகோணம் நட்பு இவைகளில் இருத்தலேயே கிரக சமமானவர்களென்ப.) நைஸர்க்கிக பலத்தில் எந்தக் கிரகம் பலத்துளதோ அதற்குத் தசை கற்பிக்க.

ஒரு கிரகத்திற்கு ஸ்தானபலம் - திக்குபலம் - சேஷ்டாபலம் - காலபலம் - கிரக பார்வை முதலியன பலத்து, அதனுடன் கூடியிருக்கும் கிரகத்திற்கும் இவ்விதமிருப்பின் இவையிரண்டும் சமானபல முடையனவென்றறிக. இக்கிர மத்தில் ஒன்று குறைந்தாலும் சமானபலமில்லை யென்றறிக.

அம்சகாயுர்த்தாயத்தில் கிரகங்களுக்கு எத்தனை வருஷங்கள் கூறப்பெற் றுளதோ அத்தனை வருஷங்களும் அந்தக் கிரகத்திற்குத் தசா வருஷங்களாம். அவ்விதம் கிரக சாமியத்தில் பல கிரகங்கள் இருந்து எது அதிக வருஷங்களை யடைந்துளதோ அந்தக் கிரகத்தின் தசையை முதலில் எடுத்துக்கொள்ள வேண்டும். பலகிரகங்களும் வருஷங்களை சமமாய் அடைந்திருப்பின் சூரிய னுக்கு முன்னே போகும் கிரகத்தின் தசையை முதலில் எடுத்துக்கொள்ளல் வேண்டும்.

சமபலமுடைய இரண்டு கிரகங்களில் யாதொன்று சூரியமண்டலத்தில் முதலில் உதயமாகுமோ அந்தக் கிரகத்திற்கு முதல் தசை யுண்டுபண்ணிக் கொள்க.

குறிப்பு :—இக்கணன விவரங்கள் யாவும் யான் அச்சிட்டுள்ள ஸ்ரீபதி ஜாதக கர்ம பத்ததி ஏழாவது அத்தியாயம் மிகத் தெள் வாய்க் கூறும். ஆங்கு கண்டு கொள்க.

தசா வருஷத்தையும், சமமாயின் அஸ்தமனம் நீங்கப் பெற்றவனுடைய தசாவருஷத்தையும் முதலாகக் கொள்ளவேண்டும்.

சு. 5. இலக்கின ஆதித்திய சந்திரர்களில் லக்கினம் அதிக பலம் பெற்றிருப்பின் அம்சதசையையும், சூரியன் அதிக பலம் பெற்றிருப்பின் பிண்டதசையையும், சந்திரன் அதிக பலம் பெற்றிருப்பின் நைஸர்க்கிக தசையையும் கொள்ளவேண்டும். மேற்சொன்ன மூன்றும் பலமில்லாவிடின் ஜீவசர்ம தசையைக் கொள்ளவேண்டும் என்று சத்தியாசாரியர் கூறுகின்றனர்.

சு. 6. எல்லாக் கிரகங்களும் தனது உச்சம் ஸ்வக்ஷேத்திரம் மித்துரு க்ஷேத்திரம் சுபக்ஷேத்திரம் இவைகளில் (இராசிகளிலும் அம்சங்களிலும்) சமஸ்த பலங்களோடும் சுபக்கிரகங்களின் திருஷ்டியோடும் இருப்பின் அவர்களுடைய தசை அதிக சுபத்தையும், சுபபலத்தையும் கொடுக்கும்.

சு. 7. எல்லாக் கிரகங்களும் சத்துரு க்ஷேத்திரம் நீசக்ஷேத்திரம் அசுபக்ஷேத்திரம் இவைகளில் (இராசியிலும் நவாம்சத்திலும்) மௌட்யம் கிரகயுத்தம் பராஜயம் முதலிய * வைவர்ண்யாதி லட்சணங்களோடும் பாபக்கிரகங்களுடைய சம்பந்தம் திருஷ்டிகளோடும் இருப்பின் அவர்களுடைய தசை அதிகமான அசுபத்தையும், அசுப பலத்தையும் கொடுக்கும். மிசிரமாயிருப்பின் அந்த தசை மிசிர பலத்தைக் கொடுக்கும்.

சு. 8. பரமோச்சங் கழிந்து பரம நீசத்திற்கு மத்தியிலுள்ள ஆறு ராசிகளிலிருக்கும் கிரகத்தினுடைய தசை அவரோகிணி தசையெனவும், மித்திராம்சகத்திலோ உச்சாம்சகத்திலோ இருக்கின்ற கிரகங்களுடைய தசை மத்தியமதசை யெனவும், பரமநீசம் கழிந்து பரமோச்சத்திற்கு மத்தியிலுள்ள ஆறுராசிகளில் இருக்கும் கிரகத்தினுடைய தசை ஆரோகிணி தசை யெனவும், சத்துரு க்ஷேத்திரத்திலோ நீசாம்சத்திலோ இருக்கின்ற கிரகங்களுடைய தசை அதம தசை யெனவும் பெயர்பெறும். இவ்வாறே அந்தர் தசைக்கும் (அபகாரம்) கொள்க.

சு. 9. சூரியன், தசாபலங்களுக்கு பாசயிதனாகவும் சந்திரன், போஷயிதனாகவும் இருக்கின்றார்கள். சந்திர ராசி பேதத்தினால் பலத்திற்கும் பேத முண்டு. அதனையும் தசாரம்பத்தில் தெளிந்து கொள்ளவேண்டும்.

* வைவர்ண்யம் = நிறம் வேறுபடுதல், வேறான தன்மை.

சு. 10. சந்திரனின் மூலதசை ஆரம்பகாலத்தில் சந்திரன், கன்னியாராசியிலிருப்பின் விலைமாதர்களோடுள்ள சமாகமம் எப்போதும் சம்பவிக்குமென யவனர்கள் கூறுகின்றார்கள்.

சு. 11-12-13-14. ஏதேனுமொரு கிரகத்தினுடைய தசாப்பிரவேச சமயம் சந்திரன், கடக விராசியிலிருப்பின் நல்ல ஸ்திரீகளையுடையவனாகவும், தனமுடையவனாகவும், லாபமுடையவனாகவும் ஆவன். அச்சந்திரன், மேடத்திலாவது விருச்சிகத்திலாவது இருப்பின் ஸ்திரீயை துன்பப்படுத்துகின்றவனாயும், நாசம் செய்பவனாயும் (நாசம் = கொலை) இருப்பான். மிதுனத்திலாவது கன்னியிலாவது இருப்பின் சிரேஷ்டமான வித்தையையும், சாஸ்திரஞானத்தையும், பந்துக்களின் லாபத்தையும் அடைவன். இடபத்திலாவது துலாத்திலாவது இருப்பின் அன்னபானாதிகளும் திரவியலாபமும் அதிக சுகமும் சத்துருக்களுக்கு நாசமும் சம்பவிக்கும். தநுசிலாவது மீனத்திலாவது இருப்பின் சுகம் தனம் மானம் ஆக்ஞை இவைகளினால் லாபம் அடைவன். மகரத்திலாவது கும்பத்திலாவது இருப்பின் வயோதிகம் செல்லுமளவும் விரூப ஸ்திரீயையும், அல்லது கற்பில்லாத ஸ்திரீயையும் அடைவன். சிம்மத்திலிருப்பின் காடுமலைகளில் வாசமும், அங்கு கிருஷியும், கிருக நிர்மாணமும், அணையும் உண்டாக்கி மனைவி மக்களோடு கலகத்தைச் செய்து கொண்டு சிறிதும் சந்தோஷம் இல்லாமலிருப்பன்.

சு. 15. அந்தச் சந்திரன், செவ்வாயின் திருஷ்டியைப் பெறினும் அல்லது சனியின் திருஷ்டியைப் பெறினும் பந்து நாசமும் அர்த்த நாசமும் உண்டாகும். ஜாதகனும் ரோகத்தால் பீடிக்கப் படுவன். புதனின் திருஷ்டியைப்பெறின் பாண்டித்தியம் அடைவன். மற்ற கிரகங்களின் திருஷ்டி ஏற்படின் அவரவர்களுடைய பலத்திற்குத் தக்கவாறு பலத்தைச் சொல்லவேண்டுமென்ப.

சு. 16-17-18. தசாபாக நாதனான கிரகம் இலக்கினத்திலிருக்கும்போதும் மித்துரு கிரகங்களுடைய சுபக்கிரகங்களுடைய திரேக்காணம் முதலிய ஷட்வர்க்கங்களிலிருக்கும் போதும் தசாபாக நாதனின் மித்துரு கிரகம் இலக்கினத்தில் நிற்கும்போதும் அந்தக்கிரகத்தினுடைய வர்க்கம் லக்கினத்தில் வரும்போதும் சுபக்கிரகம் லக்கினத்திலிருக்கும்போதும் அல்லது தசாபாக நாதன் லக்கினத்திற்கு உபசய ஸ்தானமான 3-6-10-11-இல் இருக்கும் போதும் ஆரம்பிக்கும் தசையும் அந்தர்தசையும் மிகவும் சுபபலத்தைக் கொடுக்கும் என்று

சொல்க. இதற்கு விபரீதமாயின் அசுப பலன் தருமென்ப. இந்த தசை அல்லது அபகாரம் இவைகளின் சுபாசுப பலானுபவகாலம் சந்திரனைக்கொண்டு அறியவேண்டும். எவ்விதமெனின் சந்திரன் தசாபாக நாதனுடைய மித்துரு க்ஷேத்திரத்திலோ உச்ச க்ஷேத்திரத்திலோ 3-6-10-11 ஆகிய உபசயஸ்தானத்திலோ ஐந்தாமிடம் ஏழாமிடம் ஒன்பதாமிடம் இவைகளிலோ சாரவசமாய் இருக்கின்ற காலம் சுப பலானுபவமும் மேலே சொல்லப்பெறாத மற்றஸ்தானங்களில் சந்திரன் இருக்கின்ற காலம் அசுப பலானுபவமும் உண்டாகுமென்று தெரிந்து சொல்க. தசா நாதன் உச்சம் பெற்றிருப்பின் அந்தக் காலம் சுபத்தைத் தராது.

சு. 19. உச்சம் ஸ்வக்ஷேத்திரம் முதலிய இராசியிலிருக்கும் போதும் சத்துரு க்ஷேத்திரம் நீசம் முதலிய ராசிகளில் அம்சத்தில் இருக்கும்போதும் நடக்கும் கிரகதசை குணமும் தோஷமும் கலந்தே பலன் கொடுக்கும். பலஹீனனான கிரகத்தின் தசை நிஷ்பிரயோசனமாம். அந்தக் காலம் தன நாசம் முதலிய தோஷ பலன்களைத் தருமென்ப.

சு. 20. இலக்கின தசையின் சுபாசுப பலன் சொல்லப்படுகின்றது. இலக்கினம் சரமாகி முதல் திரேக்காணத்தில் உள்ள இலக்கின தசை சிரேஷ்டமான பலனைத் தரும். மத்தியம திரேக்காணத்தில் இருக்கும் கிரகதசை மத்தியம பலனைத் தரும். கடைசித் திரேக்காணத்தில் இருக்கும் கிரகதசை அதம பலனைத் தரும். உபயராசி லக்கினமாயின் முதல் திரேக்காணத்தில் உள்ள தசை அதம பலனையும், மத்தியமதிரேக்காணத்தில் உள்ளதசை மத்தியமபலனையும், கடைசித்திரேக்காணத்தில் உள்ளதசை சிரேஷ்டமான பலனையும் தரும். ஸ்திரராசி லக்கினமாயின் முதல் திரேக்காணத்தில் உள்ளதசை அசுப பலத்தையும், மத்தியம திரேக்காணத்தில் உள்ளதசை சுப பலத்தையும், கடைசித் திரேக்காணத்தில் உள்ளதசை மத்தியம பலத்தையும் தரும்.

சு. 21. நைஸர்க்கிக தசைக்கு முறையே சந்திரன்-செவ்வாய்-புதன்-சுக்கிரன்-குரு-சூரியன்-சனி-லக்கினம் - தசா நாதர்களென அறிந்து கொள்ளவேண்டும்.

சு. 22. உச்சபலம் காலபலம் முதலிய எல்லாப் பலங்களும் பூரணமாய் அடைந்து அபீஷ்ட (இஷ்ட) ஸ்தானத்தில் இருக்கும் கிரகத்தினுடைய தசை மிகுந்த சுப பலத்தைக் கொடுக்கத் தக்கதாகும்.

சு. 23-24. தனது மூல க்ஷேத்திரத்திலோ ஸ்வக்ஷேத்திரத்திலோ (இராசியிலும் அம்சத்திலும்) இருக்கும் கிரகத்தின் தசை சுப மத்தியம பலனைத் தரக்கூடியதாகும். உச்சத்திலிருந்து கீழேஇறங்குகின்ற கிரகத்தின் தசை சுபமத்தியம பலனைத் தரும். அதிமித்துரு க்ஷேத்திரம் மித்துரு க்ஷேத்திரம் முதலிய ராசிகளிலோ அம்சத்திலோ இருக்கும் கிரகதசை சுப அதம பலனைத் தரும். மேற்சொன்ன பிரகாரமே சத்துரு க்ஷேத்திரம் நீச க்ஷேத்திரம் முதலிய அனிஷ்ட க்ஷேத்திரங்களில் (இராசியிலும் அம்சத்திலும்) இருக்கும் கிரகங்களைக் கொண்டு பாப பலப் பிரதான தசைகளை அறிந்து கொள்க.

சு. 25-26. தசாபலன்கள் சொல்லப்படுகின்றன. சுப பலத்தைக் கோடுப்பவனான சூரியனின் தசாகாலத்தில் வனம் மலை இவைகள் மூலமாயும், ஔஷத மூலமாயும், சஞ்சார மூலமாயும், விஷப்பிரயோக மூலமாயும், அறியாமை மூலமாயும், கிலேச முள்ளவனும், மலைகள் சுரங்கம் தந்தம் தோல் நெருப்பு இவை சம்பந்தமான வியாபாரமுள்ளவனும், அரசனைச் சார்ந்ததான பிரவிருத்தி யுத்தம் இவைகளினால் அரசனிடத்திலிருந்து தனலாபமடைபவனும், தைரியம் சதாஉத்சாக சீலம் கூர்மை பிரசித்தி பிரதாபசக்தி சிரேஷ்டத்துவம் இவைகளின் பிராப்தியுடையவனும், இராஜத்துவமோ அல்லது பிரபுத்தன்மையோ உள்ளவனும் இருப்பான்.

சு. 27-28. அசுப பலத்தைக் கோடுப்பவனான சூரியனின் தசாகாலத்தில் தொழிலாளர் நிமித்தம் பீடையும், தனநாசமும், திருடர்களால் உபத்திரவமும், நேத்திர ரோகமும், ஆயுதம் அரசன் ஜலம் நெருப்பு இவைகள் மூலமாய் ஆபத்தும் மனைவி மக்கள் இவர்களுக்கோ அல்லது இவர்கள் மூலமாகவோ பீடையும், பாபகர்மங்கள் செய்தலும்,பசியும் தாகமும் சோகமும் அதிகரித்தலும், இருதய ரோகமும், பித்த விகாரங்களான ரோகங்களும், தேகத்தில் காயம் முதலியவைகளும் சம்பவிக்கு மென்ப.

சு. 29-30. சுப பலத்தைக் கோடுப்பவனான சந்திரனின் தசாகாலத்தில் ஸ்திரீயினால் தனலாபமும், மிருதுவான குணமும், ஜலம் பன்னீர் பால் நெய் தயிர் கரும்பு சர்க்கரை முதலானவைகளினாலும் அல்லது அவைகள் மூலமாயும் தனலாபமும், விநோதமும், பிராம்மணர் மூலமாய் சந்தோஷமும், தனப்பிராப்தியும், மந்திரங்களின் சித்தியும், விசேட புஷ்ப வஸ்திரங்கள் கிடைத்தலும், மெலிந்த தன்மை

யும், மேதா (புத்தி அல்லது யாகம்) சக்தியும், தைரியமும், புஷ்டியும் குரு ஜனங்கள் அரசர்கள் இவர்களினால் சத்கரிக்க (வெகுமானிக்க) ப்படுதலும் சம்பவிக்கு மென்க.

சு. 31-32. அசுப பலத்தைக் கோடேப்பவனான சந்திரனின் தசா காலத்தில் திடீரென்று திரவிய நாசமும், ராஜகோபமும், சபையில் அவமானமும், முயற்சியினால் காரியசித்தியும், பலமுள்ளவர்களோடு விரோதமும், சுயகுலத்திற்குப் பயத்தை உண்டுபண்ணக் கூடிய தன்மையும், சொந்த ஜனங்களோடு சண்டையிடுதலும், துக்கமும், சதா நித்திரையும், சோம்பலும், ஸ்திரீகள் அல்லது ஸ்திரீகளின் நிமித்தம் பயமும், சோகமும், ஆசையின்மையும், இன்பமும் சம்பவிக்கு மென்ப.

சு. 33-34. சுப பலத்தைக் கோடேப்பவனான சேவ்வாயின் தசா காலத்தில் அரசனாலும் நெருப்பினாலும் தனலாபமும், களவு செய்தலும், சத்துருக்களை வென்று வெற்றி பெறுதலும், துஷ்ட ஜெந்துக்கள் விஷகாரியங்கள் ஆயுதம் பந்தனம் இவைகள் மூலமாயும், கபடப் பிரயோகங்களான க்ஷுத்திர மந்திரப் பிரயோகங்கள் யந்திரகாரியங்கள் பூமி காரியங்கள் ஆகிய இவைகள் மூலமாயும், செம்மறியாடுகள் கம்பளங்கள் செம்பு சுவர்ணம் இவைகள் மூலமாயும், வசியம் வித்வேஷணம் (பகைமை) முதலான மாந்திரீக கர்மங்கள் மூலமாயும், சூதுகள் சாராயம் ஔடத விசேடமான கஷாயம் எரிவு முதலிய ரசங்கள் மூலமாயும், தனதானியாதி லாபங்களும் சம்பவிக்கு மென்ப.

சு. 35-36. அசுப பலத்தைக் கோடேப்பவனான சேவ்வாயின் தசா காலத்தில் பந்துக்கள் மனைவி மக்கள் சகோதரர்கள் ஆகிய இவர்களுக்கு விரோதம் செய்பவனாயும், ஆசை மோகாலஸ்யம் ரக்த தோஷம் வெட்டுண்டல் சிதைவு விரணம் பரஸ்திரீயின்பம் ஆகிய இவைகளுள்ளவனாயும், குரு வித்துவான்களோடு விரோதம் கொள்ளுபவனாயும், அதர்மங்கள் செய்பவனாயும், பொருள்களினால் ஏற்படும் ரோகங்களை அடைபவனாயும் இருப்பான்.

சு. 37-38-39. சுப பலத்தைக் கோடேப்பவனான புதனின் தசா காலத்தில் புத்திரன் பந்துக்கள் பிரபுக்கள் தீட்சிதர்கள் அரசர்கள் வியாபாரிகள் சூது ஆகிய இவைகள் மூலமாய் தனலாபம் அடைபவனாயும், விசேடமான குதிரை பூமி சுவர்ணம் முத்துச்சிப்பி குப்பி பரணி ஆகிய இவைகளினால் லாபமடைபவனாயும், யஜசு புகழ்ச்சி பூத கர்மம் மிகவும் சுகானுபவம் சௌபாக்கியம் புத்திவர்த்தனம் பிரசித்தி

தர்மகாரிய சித்தி ஹாஸ்ய விஷயத்தில் பிரியம் சத்துருக்களை நாசம் செய்தல் ஆகிய இவைகளை யடைபவனும், எழுத்து கணிதம் கணக்கு சித்திரம் சில்பம் இவைகளில் அதிக திறமை வாய்ந்தவனும், சபையில் சந்தோஷம் அடைபவனும் இருப்பான் என்க.

சு. 40. அசுப பலத்தைக் கோடேப்பவனான புதனின் தசா காலத்தில் வாத பித்த கபங்களால் ரோகமடைபவனும், கடினமான வார்த்தையுள்ளவனும், பந்தனம் (கட்டுப்படுதல்) காராக்கிரக வாசம் பயம் மனப்பீடை இருதய ரோகம் தளர்ச்சி இவைகளோடு கூடி துன்பமடைபவனும் இருப்பான் என்க.

சு. 41-42-43. சுப பலத்தைக் கோடேப்பவனான குருவின் தசா காலத்தில் அரச அமைச்சர்களது பதவி கிடைத்தல், அல்லது அரச காரியங்கள் செய்தல், நீதிமார்க்கங்களில் பிரவேசித்தல் ஆகியவைகளினால் தனலாபமும், மானம் வித்தை சௌகரியாதி குணங்கள் பிரதாபசக்தி சிரேஷ்டமானபந்துக்களின் சித்தி மனைவி சுவர்ணம் கோவேறு கழுதை யானை குதிரை சௌபாக்கியம் ஆகிய இவைகளின் விருத்தியும், மங்கலமும், புஷ்டிகரமுமான காரியங்களின் லாபமும், சத்துரு நாசமும், சகல காரிய சித்தியும், சிரேஷ்டர்களான அரசர்களுடைய பிரீதியும், ஜனசங்கம் ராஜ சமூகம் பிரசித்த வியாபாரிகள் குரு இவர்களால் தனலாபமும், குடை கொடி சாமரம் ஆலவட்டம் புஷ்பம் பட்டு வஸ்திரம் * குடித்தல் பட்சணங்கள் முதலியவைகளினால் சந்தோஷமும் உண்டாகுமென்ப.

சு. 44-45. அசுப பலத்தைக் கோடேப்பவனான குருவின் தசா காலத்தில் சரீரத்தில் வீக்கமுள்ளவனும், (துர் நீரோடு கூடி துன்பத்தைத் தரும் விஷப்பாண்டு காமாலை மகோதரம் முதலியன) அதிக துக்கமுடையவனும், முடவத்தனம் குன்மரோகம் கர்னரோகம் ஆகியவைகளுடையவனும், பௌருஷமில்லாதவனும், சரீரத்தில் நிணம் குறைந்தவனும், அரசனால் பயமடைந்தவனும், தர்மஹீனர்களின் விரோதத்தை யடைந்தவனும், புத்திக்குறைவுள்ளவனும், மோகாலஸ்யமும் புத்திப் பிரமமுமுள்ளவனும் இருப்பான் என்ப.

சு. 46-47. சுப பலத்தைக் கோடேப்பவனான சுக்கிரன் தசா காலத்தில் பூமி கிருகம் விலாசம் சயன சாதனங்கள் மனைவி மாலை வஸ்திரம் பட்சண சாதனங்கள் யஜசு சந்தோஷம் நிதி இவைகளி

* குடித்தல்=பருகுதற்குரிய பாயசம் முதலிய பொருள்கள்.

ஞல் லாபமடைபவனும், சங்கீதம் ஸ்திரீ சங்கமம் இவைகளில் பிரிய முள்ளவனும், அரசனும் கிருஷியாலும் தனலாப மடைபவனும், மிகுந்த அறிவுள்ளவனும், இஷ்ட சாத்தியம் சுகம் பந்து இவைகளோடு கூடியுள்ளவனும், கட்டில் மெத்தை தலையணை முதலான சயன சாதனங்கள் நிறைந்தவனும் இருப்பான் என்ப.

சு. 48. அசுப பலத்தைக் கோடுப்பவஞன சுக்கிரனின் தசா காலத்தில் தன் குலத்திலுள்ள பெரியோர்களோடும் குணத்தில் பெரியாரோடும் வாதம் செய்பவனுகவும், வாகனங்கள் பீடங்கள் (இருக்கை சாதனங்கள்) இவைகளினுல் கிலேசமடைபவனுகவும், அரசனுலும் ஸ்திரீகளினுலும் துன்பமடைபவனுகவும், உலகவியலுக்கு மாறுபட்டவர்களோடு கூடி சந்தோஷமடைபவனுகவும் இருப்பான் என்க.

சு. 49-50. சுப பலத்தைக் கோடுப்பவஞன சனியின் தசா காலத்தில் கழுதை ஒட்டகம் எருமை இவைகளினுல் லாபமும், குலடை என்னும் கற்பில்லாதவள் அல்லது வயது சென்ற கிழவியானஸ்திரீயை அடைதலும், கொள் எள் வரகு இவைகளினுல் லாபமும், சங்கம் கிராமம் நகரம் இவைகளில் ஆதி பத்தியம் வகித்தலும், அதனுலுண்டான வெகுமதியை யடைதலும், இரும்பு பித்தளை முதலானவைகளினுல் லாபமும், ஸ்திரஸ்தானமும் சம்பவிக்குமென்க.

சு. 51-52. அசுப பலத்தைக் கோடுப்பவஞன சனியின் தசா காலத்தில் வாகன நாசமும், சம்பிரமமும், ஸ்தான சலனமும், அசுகமும், (நைராச்சியம் அல்லது விருப்பமின்மை சோர்வு) உறவினரையும் மனைவியையும் விட்டுப் பிரிதலும், யுத்தம் விவாதம் இவைகளில் தோல்வியடைதலும், சூது விளையாடலும், கள் சாராயம் முதலிய போதைகளைச் சாப்பிடுவதன் மூலமாய் துன்பமடைதலும், வாத ரோகத்தையும் வாயு ரோகத்தையும் அடைதலும், புண்ணிய காரியங்கள் கிடைக்காமற் போதலும், கலகம் ஜெயில் வாசம் தந்திரம் சிரமம் அங்கபங்கம் ஆகிய இவைகளை அடைதலும், வேலையாட்கள் புத்திரர்கள் இவர்களோடு கலகமும் சம்பவிக்குமென்க.

சு. 53. எல்லாக் கிரகங்களுடைய தசைகளின் சாமான்யமான பாப பலம் இங்கு தெளிவாய்க் கூறப்பட்டுளது. கிரகங்களுடைய ஸ்திதி பேதங்களைக் கொண்டு விசேஷபலன்கள் விரித்துச் சொல்லப்படுகின்றன.

சு. 54. தனது உச்சம் நீசம் மூலத்திரிகோணம் கேந்திரம் சத்துரு க்ஷேத்திரம் என்னும் இந்த ராசிகளின் பேதங்களால் உண்

டாகும் சூரியனுடைய ஐந்து விதமான தசையின் பலன்களின் பேதங்கள் தெளிவாய்க் கூறப்படுகின்றன.

சு. 55-56-57. இலக்கினத்திலும் இலக்கின கேந்திரத்திலும் இருக்கும் சூரியனின் தசாகாலத்தில் மகத்தான ராஜ்ய லாபம் உண்டாகும். சத்துரு க்ஷேத்திரத்திலிருக்கும் சூரியனின் தசாகாலத்தில் இடுப்பு கழுத்து கண் முதலிய அங்கங்களுக்கு ரோகம் சம்பவிக்கும். நீசத்திலிருக்கும் சூரியனின் தசாகாலத்தில் ரோகாதிகளால் நேத்திரத்திற்கு ஆணியும் சுரமும் சிரோரோகமும் பந்தனமும் குஷ்டரோகமும் மற்றுமுள்ள ரோகங்களும் சம்பவிக்கும். உச்சத்திலிருக்கின்ற சூரியனின் தசாகாலத்தில் குதிரை வெண்குடை சாமரம் யானைத்தலைவர் இவர்களோடு கூடிய ராஜ்ய லாபம் உண்டாகும்.

சு. 58-59-60. மூலத்திரி கோணத்திலிருக்கும் சூரியனின் தசாகாலத்தில் உத்தம தேசாதி பத்தியமும், சகல துக்க நிவர்த்தியும் சம்பவிக்கும். ஆறுமிடத்திலிருக்கும் சூரியனின் தசாகாலத்தில் நேத்திரங்களுக்குக் கெடுதலும், கடனும், தந்தரோகமும், முகரோகமும், கிருமிரோகமும், காரியங்களில் தோல்வியும் உண்டாகும். அஷ்டமத்திலிருக்கும் சூரியனின் தசாகாலத்தில் சரீரத்திற்கு பலக் குறைவும் தேச சஞ்சாரமும் அதிகக்லேசமும் மரணமும் சம்பவிக்கும்.

சு. 61. உச்சக்ஷேத்திரம் மித்துருக்ஷேத்திரம் சத்துருக்ஷேத்திரம் நீசக்ஷேத்திரம் க்ஷீணத்துவம் பூர்ணத்துவம் என்னும் பேதங்களால் சந்திரனுக்கு உண்டாகும் ஆறுவிதமான தசைகளின் சாமான்னிய பலபேதங்கள் தெளிவாய் கூறப்படுகின்றன.

சு. 62. உச்ச க்ஷேத்திரத்திலிருக்கும் சந்திரனின் தசையில் ராஜ்ய லாபமும், நீசக்ஷேத்திரத்திலிருக்கும் சந்திரனின் தசையில் மரணமும், சத்துரு க்ஷேத்திரத்திலிருக்கும் சந்திரனின் தசையில் பந்தனமும், மித்துரு க்ஷேத்திரத்திலிருக்கும் சந்திரனின் தசையில் சுற்றத்தார்களின் கூட்டமும் உண்டாகும்.

சு. 63. க்ஷீண சந்திரனின் தசையில் உதர ரோகம் ஜுரம் சிரோ ரோகம் நேத்திர ரோகம் இவைகளினால் துன்பமுண்டாகும்.

சு. 64. பரிபூர்ணபலம் பெற்ற சந்திரனின் தசையில் உத்தம ஸ்திரீகளின் சேர்க்கையும், அதிக மனைவிகளோடு கூடிய அந்தப்புர சுகாநுபவமும் சம்பவிக்கும்.

சு. 65. எட்டாமிடத்திலிருக்கும் சந்திரனின் தசையில் தனது தேசம் விட்டு வேறு தேசம் செல்லலும், ஸ்திரீகளுக்கும் வேலையாட்களுக்கும் ஹானியும் பந்துஜனங்களால் பீடிக்கப்பட்டு இம்சையடைதலும் மரணமும் சம்பவிக்கும்.

சு. 66. ஆறுமிடமான சத்துரு க்ஷேத்திரத்திலிருக்கும் சந்திரனின் தசையில் யந்திரங்கள் புற்கள் தடிகள் (விறகு) சாணம் நாணல் மூங்கில் புங்கம்பழம் ஜலம் இவைகளினால் ஜீவிப்பவனும், கெட்ட ஆகாரம் கெட்ட வஸ்திரம் முதலியவைகளோடு கூடியவனும் இருப்பான். அன்றியும் ஜாதகன் அரசனும் பிரவிருத்தி செய்யாதவனுயும் இருப்பான்.

சு. 67. இலக்கினத்திலும் உச்சத்திலும் இருக்கும் சந்திரனின் தசையில் நிச்சயமாக ராஜ்யலாபம் உண்டாகும். கேந்திரத்திலிருக்கும் சந்திரனின் தசையில் தனம் வாகனம் தேசம் இவைகளின் லாபம் சம்பவிக்கும்.

சு. 68. ஆறுமிடத்திலிருக்கப்பட்ட கிரகத்தின் தசையில் வியசனம் உண்டாகும். எட்டாமிடத்திலிருக்கும் கிரகத்தின் தசையில் துக்கமும் மரணமும் ஏற்படும். அஸ்தங்கதமடைந்த கிரகத்தின் தசையில் பந்தனத்தினால் பீடை சம்பவிக்கும்.

சு. 69. வக்கிரகதியுடைய கிரகத்தின் தசையில் ஜாதகன் குலாலசக்கரம்போல் சுழன்று கொண்டிருப்பன். அக்காலத்தில் துக்கங்களும், சத்துரு விரோதமும் உண்டாகும். வக்கிரகதியையுடைய கிரகம் பாபனாயின் மேற்சொன்ன பலம் உண்டென்று சொல்க. வக்கிரகதியையுடைய கிரகம் சுபனாயின் மேற்சொன்ன தோஷம் ஒருக்காலும் சம்பவிக்காதென்று கூறுக.

சு. 70. ரிக்தா-அதிரிக்தா (பலஹீனர்களான கிரகங்களுடைய தசை) தசா காலங்களிலும் நீசம் அதிநீசம் சத்துரு க்ஷேத்திரம் இந்த ராசிகளில் இருக்கின்றவர்களுடைய தசா காலங்களிலும் ஆறும் எட்டாம் பாவங்களில் இருக்கின்றவர்களுடைய தசா காலங்களிலும் ஜாதகன் ராஜனாயிருப்பினும் தனது வேலையாட்களுக்கு வேலையாளாக இருந்து காலங் கழிப்பன்.

சு. 71. சத்துரு க்ஷேத்திரத்தி லிருக்கும் கிரகத்தின் தசையில் ஜாதகன் தனது தேசத்தை விட்டு விலகி வேறு தேசமடைந்து வியாதியினால் பீடிக்கப்பட்டு ஸ்தான சலன முடையவனாய் அடிக்கடி கலக

மும் பந்தனமும் சத்துருக்களினால் தோல்வியும் அடைந்து கஷ்டமடைவான்.

சு. 72. அதிக மதகஜங்களும் பலமும் உள்ள அரசனாய் இருப்பினும் பலஹீனனான கிரகத்தின் தசையில் ஜாதகன் துணையின்றிச் சஞ்சரித்துத் துன்பமடைவான்.

சு. 73. ஆறுமிடமான சத்துரு க்ஷேத்திரத்திலிருக்கின்ற கிரகத்தின் தசா காலத்தில் அங்கங்களுக்காவது, அல்லது பிரத்யங்கங்களுக்காவது சேதம் சம்பவிக்கும். ஐந்திலோ ஒன்பதிலோ ஏழிலோ எட்டிலோ சத்துரு க்ஷேத்திரத்தில் இருக்கின்ற கிரகங்களின் தசையில் சிரச்சேதம் உண்டாகும்.

சு. 74. நீசத்தில் இருக்கின்ற கிரகத்தினுடைய தசையில் சத்துருக்களினால் பயமும், அன்னிய தேச வாசமும், பந்தனமும், ரோகாதிகளினால் பீடையும், அரசனால் உபத்திரவமும் சம்பவிக்கும்.

சு. 75. இங்கு தசாபல நிரூபணத்தில் பஞ்ச மகாபுருஷயோக லட்சணங்களை விவரித்த 37-ஆம் அத்தியாயத்தில் கூறப் பெற்றுள்ள பாகங்களையும் சேர்த்து இந்த தசாபலத்தையு மநுசரித்துப் பலன்களை யோசித்துச் சொல்லவேண்டு மெனப. சிறிதும் பலமில்லாத கிரகத்தின் பலம் கனவில் அநுபவிக்கப்படும். நனவில் அநுபவிக்கப் படாது.

சு. 76. * சீர்ஷோதய விராசிகளில் பலம் பெற்றிருக்கும் கிரகத்தின் தசை முதலிலும், † உபயோதய விராசிகளில் இருக்கின்ற கிரகத்தின் தசை மத்தியமத்திலும், ‡ பிரஷ்டோதய விராசியிலும் நீச விராசியிலும் இருக்கிற கிரகத்தின் தசை முடிவிலும் தனது பலத்தைத் தரும்.

நாற்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

---

* சீர்ஷோதய விராசிகள் = சிங்கம் விருச்சிகம் கன்னி துலாம் கும்பம்.

† உபயோதய விராசிகள் = மிதுனம் மீனம்.

‡ பிரஷ்டோதய விராசிகள் = மேஷம், இடபம் கடகம் தநுசு மகரம்.

## நாற்பத்தொன்றுவது அத்தியாயம்.

# அந்தர் தசாபலம்

சு. 1. இவ்வத்தியாயத்தில் அந்தர் தசாபகாரங்களின் நிர்மாணமும் அவைகளின் பலன்களும் மிகத் தெளிவாய்ச் சொல்லப்படுகின்றன.

யாதாமொரு பாவத்தில் ஒன்று சேர்ந்திருக்கின்ற கிரகம் மற்றக் கிரகத்தினுடைய தசையில் பாதி அபகரிக்கும். ஐந்திலும் ஒன்பதிலு மிருக்கின்ற கிரகம் மூன்றில் ஒன்றை அபகரிக்கும். ஏழிலிருக்கின்ற கிரகம் ஏழில் ஒன்றை அபகரிக்கும். நான்காமிடத்திலும் எட்டாமிடத்திலும் இருக்கின்ற கிரகம் நான்கில் ஒன்றை அபகரிக்கும். இந்த அபகாரணங்களெல்லாம் பரஸ்பரம் சம்பவிக்கின்றன.

சு. 2. முதல் அபகாரம் மூலதசாநாதனுக்கு சம்பவிக்கும். முன் சொன்ன ஸ்தானங்களிலுள்ள கிரகங்களுக்கு அபகாரம் முறையே பின்னர் சம்பவிக்கும். பல கிரகங்கள் ஒரு பாவத்தி லிருந்தால் அவைகளில் பலமுள்ள கிரகத்திற்கு மாத்திரம் அபகாரம் உண்டாகும்.

சு. 3. சுபக்கிரகத்தினுடைய அபகாரம் சுபபலத்தையும், அசுபக்கிரகத்தினுடைய அபகாரம் அசுபபலத்தையும் தருமென்ப. சிலர் அபகாரங்களை கேந்திராதியாக முன் சொல்லப்பட்ட முறைப்படி கொள்ளவேண்டு மென்றும், வேறுசிலர் பாகக்கிரமமாகக் கொள்ள வேண்டு மென்றும் கூறுகின்றனர். இக்கொள்கைகள் எல்லாம் உடன்பாடல்ல.

சு. 4. சத்தியாசாரியர் ஒரு பாவத்தில் ஒன்று சேர்ந்திருக்கின்றவரில் பலம் பெற்றிருக்கின்ற ஒரு கிரகத்திற்கு மாத்திரம் அபகாரம் உண்டாகு மென்றும், மற்றவை யெல்லாம் முற்கூறிய கிரமப்படியேயாம் என்றும் கூறியுள்ளார். இதுவே உடன்பாடு.

சு. 5. அபகாரம் (அந்தரதசை) பிரிக்கும் முறை. தசாதிபதிக்கு ஒன்று மேலும் கீழுமாக வைக்கவேண்டும். $\frac{1}{1}$. பாதி அபகரிக்கின்ற கிரகத்திற்கு (அதாவது மூல தசாதி பதிக்குரிய அந்தர் தசா காலத்தின் பாதியை அபகரிக்கின்ற கிரகத்திற்கு) மேலே ஒன்றும் கீழே இரண்டும் $\frac{1}{2}$. மூன்றில் ஒரு பங்கை அபகரிக்கின்ற கிரகத்திற்கு

மேலே ஒன்றும் கீழே மூன்றும் $\frac{1}{3}$. ஏழில் ஒன்றை அபகரிக்கின்ற கிரகத்திற்கு மேலே ஒன்றும் கீழே ஏழும் $\frac{1}{7}$. நான்கில் ஒன்றை அபகரிக்கின்ற கிரகத்திற்கு மேலே ஒன்றும் கீழே நான்கும் $\frac{1}{4}$ கொள்ள வேண்டும். இவ்விதம் வைத்து லீலாவதியில் கூறிய பிரகாரம் சமச்சேதம் செய்து அவரவர்களின் சேதத்தைக் களைந்த அம்சங்களை வெவ்வேறாகக் கொள்ளவேண்டும். இவைகளை ஒன்றுசேர்த்துக் கூட்டிய தொகை அபகாரம் வருவிக்கும் ஆரகமெனக்கொள்க. அதனை வேறோரிடத்தில் குறித்து வைத்துக் கொள்க. பிறகு மூலதசையை மூலதசாதிபதிக்குச் சமச்சேதம் செய்திருக்கின்ற பாகத்தினாற் பெருக்கி ஆரகத்தினாலரித்து வந்தபலம் அக்கிரகத்தின் அபகாரமாம். பிறகு மூலதசையை ஒரே பாவத்தில் தசாதிபதியோடிருக்கும் கிரகத்தினுடைய பாகத்தினாற் பெருக்கி ஆரகத்தினாலரித்த பலம் அந்தக் கிரகத்தினுடைய அபகார பலமாம். இவ்விதமே திரிகோண சப்தமாதி பாவங்களி லிருக்கின்றவர்களுக்கு அவரவர்களுடைய பாகத்தினால் மூலதசையைப் பெருக்கி ஆரகத்தினாலரித்து வந்தபலம் அவரவர்களின் அபகார காலமாம்.

கிரியா லகுவிற்கு வேண்டியவாறு பூர்வாசாரியர்கள் குணகங்களைக் கணக்கு செய்து வைத்திருக்கின்றனர். அதனைக் கீழே காண்க. மூலதசாதிபதிக்குக் குணகாரம் 84. ஒருபாவத்தில் சேர்ந்திருக்கின்ற கிரகத்திற்குக் குணகாரம் 42. ஐந்தாமிடம் ஒன்பதா மிடம் இவைகளிலிருக்கின்ற கிரகத்திற்குக் குணகாரம் 28. ஏழா மிடத்தில் இருக்கின்ற கிரகத்திற்குக் குணகாரம் 12. நான்காமிடம் எட்டாமிடம் இவைகளிலிருக்கின்ற கிரகத்திற்குக் குணகாரம் 21 ஆகும். அபகரிக்கும் கிரகங்களுடைய குணகாரங்களெல்லாம் சேர்த்துக் கூட்டிய தொகை ஆரகமாம். இலக்கினத்திற்கும் கிரகத்தைப்போல அபகாரம் உண்டு. எல்லாக் கிரகங்களுக்கும் மூலதசையை இந்த குணகாரத்தினால் பெருக்கி ஆரகத்தினால் அரிக்க அபகாரம் வரும். சித்திரம் சித்திராந்தரம் ஆகிய இவைகளையும் இக்கிரமமாகவே திரைராசிகம் செய்து கண்டு கொள்க.

அந்தர் தசா உதாரணம் :—

$\frac{1}{1}+\frac{1}{2}+\frac{1}{3}+\frac{1}{7}+\frac{1}{4}$ இவைகளில் முதலில் இருக்கின்ற ஒன்றை இரண்டினால் பெருக்க 2. அந்த 2-ஐ மூன்றினால் பெருக்க 6. இதனை 7-ஆல் பெருக்க 42. இதை 4-ஆல் பெருக்க 168. இதனையே சமச்சேதம் என்பர்.

இந்த 168-ஐ 1-2-3-7-4 இந்த எண்களால் தனித்தனியாய் வகுத்து வந்த ஈவுகள் முறையே 168-84-56-24-42-ஆம். இந்த ஈவுகள் முறையே மூலதசை-அர்த்தாம்ச-திருதீயாம்ச-சப்தாம்ச சதுர்த்தாம்ச-பாகங்களைத்தரும் எண்களாம். இவைகளே கிரகத்திற்குப் பெருக்கும் எண்களாம். இவைகளையெல்லாம் கூட்டிய தொகை 374. இந்த எண் ஆரக மெனப்படும். (வகுக்கும் எண்) மூலதசாதிபதியின் தசாவருஷத்தை 168-ஆல் பெருக்கி 374-ஆல் வகுத்து வந்த ஈவு மூலதசாதிபதியின் அந்தர்தசா வருஷமாகும். மூலதசா வருஷத்தை 84-56-24-42. இவைகளினுல் முறையே பெருக்கி 374-ஆல் வகுத்து வந்த ஈவுகள் முறையே மூலதசாதிபதியின் அர்த்தாம்ச-திருதீயாம்ச-சப்தாம்ச-சதுர்த்தாம்ச-பாகங்களைத் தருகின்றவர்களின் அந்தர்தசா வருஷங்களாம். இதனையே கிரியாலகுவிற்கு (சுருக்கத்திற்கு) மேற்சொன்ன குணகம் ஆரகங்களில் முறையாக பாதிசங்கியையாக முன்னுல் விவரித்திருக்கின்றனர்.

சு. 6. ஒன்று கூடி யிருக்கிற கிரகங்களின் அபகாரகாலத்தில் பந்தனம், தனநஷ்டம், சத்துருபீடை, மரணம் ஆகிய இவைகள் சம்பவிக்கும். திரிகோணத்திலிருக்கின்ற கிரகத்தின் அபகாரகாலம் மிகவும் சுபத்தைத் தரும்.

சு. 7. ஏழாமிடத்திலிருக்கின்ற கிரகத்தினுடைய அபகாரகாலத்தில் பெருநஷ்டம், சத்துருக்களுக்கு அடிமைப்படுதல், பிறரோடு கூடிப் பிழைத்தல் முதலியன சம்பவிக்கும்.

சு. 8. எட்டாமிடத்திலிருக்கின்ற கிரகத்தினுடைய அபகாரகாலத்தில் மரணமும், தனத்திற்குப் பெருநாசமும் சம்பவிக்கும். ஆறுமிடத்திலிருக்கும் கிரகத்தின் அபகாரகாலத்தில் பந்தனமும், நாசமும் உண்டாகும்.

சு. 9. ஒரு ராசியில் இரண்டு மூன்று நான்கு கிரகங்கள் ஒன்று சேர்ந்து அவைகளில் ஒன்றின் அபகாரம் வருங்காலத்தில் பந்தனமும், நாசமும், தாரித்திரமும், அசுபங்களும் சம்பவிக்கும்.

சு. 10. நான்காமிடத்திலிருக்கின்ற கிரகத்தின் அபகாரகாலத்தில் பந்துகுணமும், ஆரோக்கியமும், சுகமும், வெகுமானமும் விருத்தியாகும்.

சு. 11. இனி சூரியாதி கிரகங்களின் தசையில் சந்திராதிகளின் அபகாரபலன்கள் தெளிவாய்க் கூறப்படுகின்றன.

சூரிய தசையில் சந்திரனின் அபகாரகாலத்தில் சத்துருக்களுடைய பிரதாபம் குறைதல், ஆரோக்கியம், தேகசுகம், தனலாபம், எப்பொழுதும் சுபம் ஆகிய இவைகள் உண்டாகும்.

சு. 12. சூரிய தசையில் அங்காரகனின் அபகாரகாலத்தில் பவளம், சுவர்ணம், இரத்தினங்கள் இவைகளுடையலாபம், மிகவும் பிரதாபம், குரூரம், சுகம் ஆகிய இவையுண்டாகும்.

சு. 13. சூரிய தசையில் புதனின் அபகாரகாலத்தில் சொறி, சிரங்கு, குஷ்டம் முதலான ரோகங்களால் சரீரத்திற்குத் துன்பமும், பீடையும், சத்துரு விருத்தியும் உண்டாகும்.

சு. 14. சூரியதசையில் குருவின் அபகாரகாலத்தில் வியாதிகளினின்றும் சத்துருக்களினின்றும் வியசனங்களினின்றும் பாபங்களினின்றும் விடுதலையடைதலும், ஐசுவரியம் விருத்தியாதலும், தர்மமார்க்கங்களின் சித்தியும் உண்டாகும்.

சு. 15. சூரிய தசையில் சுக்கிரனின் அபகாரகாலத்தில் சிரசு கழுத்து இவைகளில் வியாதியும், கலகமும், சுரமும், சூலரோகமும், (உதரவியாதி) சத்துருக்களின் நிமித்தமாக தனது தேசத்தை விட்டு வெளிதேசம் போதலும் உண்டாகும்.

சு. 16. சூரிய தசையில் சனியின் அபகாரகாலத்தில் சத்துருக்களால் வன்மை இழத்தலும், அரசனுல் பீடையும், தரித்திரமும் உண்டாகும்.

சு. 17. சந்திர தசையில் சூரியனின் அபகாரகாலத்தில் க்ஷயரோகம், பயம், அரசனுல் வெகுமானம், சதாசம்பத்து, திரவியலாபம் ஆகிய இவைகள் உண்டாகும்.

சு. 18. சந்திர தசையில் அங்காரகனின் அபகாரகாலத்தில் பித்தகோபம், ரத்ததோஷம், அக்கினிபயம், கிலேசம், ரோகம் முதலிய அரிஷ்டபயமும், திருடர் பயமும் உண்டாகும்.

சு. 19. சந்திர தசையில் புதனின் அபகாரகாலத்தில் சரீரத்தில் மச்சம் முதலிய அடையாளங்கள் உண்டாதலும், காரியாதிகளில் உத்தமலாபமும், யானை, குதிரை, தனம் ஆகிய இவைகள் கிடைத்தலும், நிகரற்ற சுகானுபவமும் உண்டாகும்.

சு. 20. சந்திர தசையில் குருவின் அபகாரகாலத்தில் தனலாபம், முயற்சி செய்தல், விசேட வஸ்திரம், ஆபரணம், யானை, குதிரை, ஆகிய இவைகள் உண்டாகும்.

சு. 21. சந்திர தசையில் சுக்கிரனின் அபகாரகாலத்தில் தோணி, கப்பல் முதலிய ஜலவாகனங்கள், முத்துமாலைகள், ஆபரணங்கள் ஆகிய இவைகள் கிடைத்தலும், களத்திரலாபமும் உண்டாகும்.

சு. 22. சந்திர தசையில் சனியின் அபகாரகாலத்தில் ஸ்வஜனங்களுக்குத் துன்பமும், அவர்களை விட்டுப் பிரிதலும், ரோகாதிகளினால் உபத்திரவமும், அதிக கடினமான துக்கமும் உண்டாகும்.

சு. 23. செவ்வாய் தசையில் சூரியனின் அபகாரகாலத்தில் குரூரத்தன்மை, சாகசகாரியங்களில் பிரியம், அரசனுடைய யுத்த காரியங்களால் வெகுமானம், திருப்தி, பலவித தனலாபம் ஆகிய இவைகள் உண்டாகும்.

சு. 24. செவ்வாய் தசையில் சந்திரனின் அபகாரகாலத்தில் பலவித தனலாபம், சுகம், பந்துக்கள், முத்து, இரத்தினம், சங்கு, சாமரம், குடை ஆகிய இவைகளினால் லாபமும் உண்டாகும்.

சு. 25. செவ்வாய் தசையில் புதனின் அபகாரகாலத்தில் சத்துரு பயமும், யானை, குதிரை முதலியவைகளைத் திருடர் அபகரித்தலினால் பயமும் உண்டாகும்.

சு. 26. செவ்வாய் தசையில் குருவின் அபகாரகாலத்தில் நல்ல ஆசாரங்கள், நல்ல பிரவிருத்திகள், நல்ல தர்மங்கள், மனத்தெளிவு ஆகியவைகளும், அரசனாகவோ அரசசமானனாகவோ ஆதலும், அநேக விதமான புண்ணிய கர்மங்களை அநுஷ்டித்தல் முதலியனவும் உண்டாகும்.

சு. 27. செவ்வாய் தசையில் சுக்கிரனின் அபகாரகாலத்தில் யுத்தகாரணத்தால் பயம் ஜனித்தலும், ரோகங்கள், விசனங்கள், சிரமங்கள், சஞ்சாரங்கள், பிறதேசவாசங்கள் இவைகளினால் தனத்திற்கு விரயமும் நஷ்டமும் உண்டாகும்.

சு. 28. செவ்வாய் தசையில் சனியின் அபகாரகாலத்தில் அடிக்கடி துக்கமும் ஆபத்தும் உண்டாதலும், ஜனங்களுக்கு நாசமும் உண்டாகும்.

சு. 29. புத தசையில் சூரியனின் அபகாரகாலத்தில் அடையாளம் உண்டாதலும், சுவர்ணம், பவளம், யானை, குதிரை ஆகிய இவை கிடைத்தலும், முயற்சியின்றி ஐசுவரியங்களும் உண்டாகும்.

சு. 30. புத தசையில் சந்திரனின் அபகாரகாலத்தில் சொறி, சிரங்கு, குஷ்டம் என்னும் சர்மரோகமும், க்ஷயரோகமும், அங்க

பேதமும், யானையினால் பயமும், வாகனங்களுக்கு நாசமும் உண்டாகும்.

சு. 31. புத தசையில் அங்காரகனின் அபகாரகாலத்தில் சிரோ ரோகமும், உதரவியாதியினாலும், பலகிலேசங்களினாலும் துக்கமும் உண்டாகும்.

சு. 32. புத தசையில் குருவின் அபகாரகாலத்தில் சத்துருக்களினின்றும் ரோகங்களினின்றும் பயங்களினின்றும் விடுபடுதலும், புண்ணிய கர்மங்கள் செய்தலும், மந்திரியாயிருத்தலும் உண்டாகும்.

சு. 33. புததசையில் சுக்கிரனின் அபகார காலத்தில் குருக்கள் தேவர் அதிதி இவர்களுக்குத் திருப்தி செய்வித்து அநுக்கிரகம் அடைதலும், விசேட வஸ்திரங்கள் ஆபரணங்கள் புண்ணிய கர்மங்கள் சுகந்த திரவியங்கள் இவைகளில் பிரியமும், இவைகளினால் லாபமும் உண்டாகும்.

சு. 34. புததசையில் சனியின் அபகார காலத்தில் ஷண்டர் (பேடர்) களால் காமமூர்த்தியை அடைதலும், தர்மமும் பொருளும் போகமும் புத்திரர்களும் சம்பத்தும் ஆகிய இவைகளுக்கு நஷ்டமும் உண்டாகும்.

சு. 35. குருதசையில் சூரியனின் அபகார காலத்தில் சத்துருக்கள் பயங்கள் கலகங்கள் இவைகளிலிருந்து விடுதலையடைதலும், அரண்மனை அத்தியயனமும் (கற்பிக்கும் உபாத்தியாயர்) விருத்தி கிடைத்தலும், விக்கிரமம் (திறமை) சாகசம் சுகம் ஆகிய இவைகளும் உண்டாகும்.

சு. 36. குருதசையில் சந்திரனின் அபகார காலத்தில் அநேக ஸ்திரீகளோடு போகமும், ஆரோக்கியமும், சத்துருக்களை ஜெயித்தலும், அதிக ஜயம் உண்டாதலும், ராஜஸ்தானம் கிடைத்தலும் உண்டாகும்

சு. 37. குருதசையில் அங்காரகனின் அபகார காலத்தில் கூர்மை, பிறர்களைத் துக்கிக்கச் செய்தல், சூரத்தன்மை, யுத்தத்தில் யஜசு, சம்பத்து, அதிகமான சுகம் இவைகள் உண்டாகும்.

சு. 38. குருதசையில் புதனின் அபகார காலத்தில் வேசிகள் சாராயம் சூது முதலியவைகளால் உபத்திரவமும், தனஹானியும், தர்மங்களுக்கு லோபமும் உண்டாகும்.

சு. 39. குரு தசையில் புதனின் அபகார காலத்தில் ஆரோக்கியம், சுகம், பந்து சங்கமம், வெகுமானம், மாதாபிதாக்களிடம் பக்தி இவையுண்டாகும்.

குறிப்பு: இந்தப் புதனுக்கு இரண்டு விதமாகப் பலன்கள் கூறப்பெற்றுள்ளன. புதன் பலஹீனனும் அசுபனும் இருப்பின் அனிஷ்ட பலத்தையும், பலவானும் சுபனும் இருப்பின் இஷ்ட பலத்தையும் செய்வனென்ப.

சு. 40. குரு தசையில் சுக்கிரனின் அபகார காலத்தில் சத்துருக்களினால் பயமும், நாசமும், துக்கமும், அதனால் பரிபவமும், (நிந்தனையும் அவமதிப்பும்) பிராமணர் மூலமாய்ப் பிழைத்தலும் உண்டாம்.

சு. 41. குரு தசையில் சனியின் அபகார காலத்தில் வேசிகள் சாராயம் சூது இவைகளினால் துக்கமும் நஷ்டமும் உண்டாதலும், எருமை கழுதை இவைகள் கிடைத்தலும், தர்மங்களுக்கு லோபமும் உண்டாகும்.

சு. 42. சுக்கிர தசையில் சூரியனின் அபகார காலத்தில் கன்னம் வயிறு நேத்திரம் இவைகளில் ரோகமும், ஜெபில் வாசத்தால் அதிக பீடையும் உண்டாகும்.

சு. 43. சுக்கிர தசையில் சந்திரனின் அபகார காலத்தில் நகம் பல் தலை இந்த அங்கங்களில் ரோகமும், காமாலை என்னும் ரோகமும் உண்டாகும்.

சு. 44. சுக்கிர தசையில் அங்காரகனின் அபகார காலத்தில் பித்தகோபம் இரத்தகோபம் எனும் ரோகமும், பூமிலாபமும், அரச சகாயமும், ஒன்றிலும் உற்சாகமில்லாதிருத்தலும் உண்டாகும்.

சு. 45. சுக்கிர தசையில் புதனின் அபகார காலத்தில் ஸ்திரீயினாலாவது ஸ்திரீயினிடமிருந்தாவது தனமோ அல்லது ஸ்திரீ தனமோ கிடைத்தலும், சுகமனுபவித்தலும், மனதிற்கின்பமும் உண்டாகும்.

சு. 46. சுக்கிர தசையில் குருவின் அபகார காலத்தில்தர்மாநுஷ்டானம் சதாசாரம் சத்சுபாவம் சம்பத்து தேசம் ராஜ்யம் இவைகளின் லாபமும், தனம் இரத்தினம் சுகம் ஆகிய இவைகளும் உண்டாகும்.

சு. 47. சுக்கிர தசையில் சனியின் அபகாரகாலத்தில் புரம், நகரம், கிராமம், சங்கம், சமுதாயம் ஆகிய இவைகளுக்கு நாயகத்துவ

மும், சத்துருக்களை நாசம் செய்தலும், பந்துக்களின் சமாகமும் உண்டாகும்.

சு. 48. சனி தசையில் சூரியனின் அபகாரகாலத்தில் தனத்திற்கும் மனைவிற்கும் நாசமும், அதிகமான பயமும் உண்டாகும்.

சு. 49. சனி தசையில் சந்திரனின் அபகாரகாலத்தில் பாரியையின் மரணமோ அல்லது அரணமோ (நீக்கிவிடுதல்) உண்டாகும். பந்துக்களுக்கு நாசமோ வேறுபாடோ உண்டாகும். அடிக்கடி வழக்கும் விவகாரமும் உண்டாகும்.

சு. 50. சனி தசையில் அங்காரகனின் அபகாரகாலத்தில் ஸ்வதேசம் விட்டு விலகுதலும், வியாதிகளும் பலவிதத் துக்கங்களும் கஷ்டமும் உண்டாகும்.

சு. 51. சனி தசையில் புதனின் அபகாரகாலத்தில் சுகம், சௌபாக்கியம், கார்யங்களில் விஜயம், (ஜெயம்) சந்தோஷம், பிறர்களை உடசரித்தல், மரியாதை, நம்பிக்கை, தனம் ஆகிய இவைகள் உண்டாகும்.

சு. 52. சனி தசையில் குருவின் அபகாரகாலத்தில் சிறந்த ஸ்தானங்களில் பிரவேசித்தலும், கிராமம் நகரம் சங்கம் இவைகளில் சிரேஷ்டத்துவமும், களத்திரசுகமும், சம்பத்தும் உண்டாகும்.

சு. 53. சனி தசையில் சுக்கிரனின் அபகாரகாலத்தில் பந்துக்களுக்கு அபிவிருத்தியும், தோஷங்களின் நாசமும், யஜசு பிரகாசமும் மனைவி தனம் ஜயம் லாபம் ஆகிய இவைகளும் உண்டாகும்.

சு. 54. முன்னமே கூறப்பெற்றுள்ள மூலதசாபல நிரூபணத்தில் கிரகங்களுக்கு நீசம் சத்துருக்ஷேத்திரம் அஸ்தங்கதம் யுத்தபராஜயம் பலமின்மை முதலிய பேதத்தினால் அசுபபல பிரதத்வத்தையும், (அசுபம் கொடுப்பதையும்) உச்சம் ஸ்வக்ஷேத்திரம் மித்துருக்ஷேத்திரம் பலாதிக்கியம் முதலியவைகளால் சுபபலப் பிரதத்வத்தையும் நிரூபித்தவாறு அபகாரங்களிலும் சுபாசுப பலபேதங்களை புத்திமானான தைவக்ஞன் கவனித்துச் சொல்லுக.

அபகாரங்களில் அசுபபலத்தைக் கொடுப்பவனாகிய கிரகத்திற்கு உச்சம் முதலிய பலங்களுண்டெனில் அசுபத்திற்குக் குறைவும், நீச முதலிய தோஷங்களுண்டாயின் அசுப பலத்திற்கு விருத்தியும் உண்டாகும். இதுபோலவே சுப பலத்தைக் கொடுப்பவனான கிரகத்

திற்கு உச்சம் முதலிய பலம் உண்டாயின் சுபத்திற்குப் புஷ்டியும், நீசாதி தோஷங்களுண்டாயின் சுபத்திற்குக் குறைவும் உண்டாகும்.

சு. 55. சுபனுன மூலதசையில் சுபமான அபகாரம் வரின் அக் காலத்தில் அதிக சுகங்களும், தனலாபமும், மற்ற குணங்களும் உண்டாகும்.

சு. 56. அஸ்தங்கதமுள்ள கிரகத்தின் அபகாரகாலத்தில் ஆசாரமின்மையும், மானம், யஜசு, திரவியம், விலாசம், பிரதாபம், சௌபாக்கியம், உத்சாகம் இவைகளுக்கு ஹானியும் உண்டாகும்.

சு. 57. இலக்கினுதிபதிக்கும் சந்திர லக்கினுதிபதிக்கும் சத்துருக்களின் தசைகளில் மூடபுத்தியும், ராஜ்யத்தினின்று பிரஷ்டனுதலும், சத்துருக்களால் பீடையும், பிறரைத் தழுவிப் பிழைத்தலும் உண்டாகும்.

சு. 58. இலக்கினத்தில் அல்லது பத்தாமிடத்தில் இருக்கின்ற கிரகத்தினுடைய தசையிலோ, அபகாரத்திலோ, அல்லது பலம் பெற்ற கிரகத்தின் தசையிலோ, அபகாரத்திலோ அல்லது லக்கினுதிபன் பத்தாம் பாவாதிபன் இவர்களின் தசாபகாரங்களிலோ ராஜ்ய லாபம் உண்டாகும்.

சு. 59. இலக்கினத்தில் புதனும் குருவும் சுக்கிரனும், ஏழாமிடத்தில் சனியும், பத்தாமிடத்தில் சூரியனும் இருக்கும்போது ஜனித்தவன் போகங்களை அனுபவிக்கின்றவனுய் இருப்பான்.

* சூரியன் பத்தாமிடத்தில் இருக்கும்போது புதசுக்கிரர்களுக்கு இலக்கின ஸ்திதி சம்பவிப்பதில்லை. பூர்வ சாஸ்திரங்களை யநுசரித்து இந்த யோகமும் இங்கு கூறப் பெற்றிருக்கின்றது.

சுபக்கிரகங்கள் கேந்திரத்திலும் பாபக்கிரகங்கள் பாபராசிகளிலும் இருக்கின்ற சமயம் ஜனித்தவன் வேடர் கள்ளர் முதலிய நீசர்களுக்குத் தலைவனும், தனவானும் இருப்பன். சுபக்கிரகங்களுடைய ராசிகள் கேந்திரங்களாகியும் பாபக்கிரகங்கள் பாபராசிகளிலும் இருக்க வேண்டுமென்று சில ஆசாரியர்கள் சொல்கின்றனர். இவ் விதமே கர்க்காசாரியாரின் அபிப்பிராயமும் உளது.

நாற்பத்தொன்றுவது அத்தியாயம் முற்றிற்று.

---

* குறிப்பு : சூரியன் பத்தாமிடத்திலிருக்கும்போது புத சுக்கிரர்களுக்கு இலக்கினஸ்திதி சம்பவிக்கின்றதில்லையென்ற ஆசங்கைக்குச் சமாதானம் இந் நூலின் 22-ஆம் அத்தியாயம் 67-ஆம் சுலோகத்தில் கூறப் பெற்றுளது. ஆங்கு கண்டு கொள்க.

# நாற்பத்திரண்டாவது அத்தியாயம்.

## தசாரிஷ்டபலம்.

சு. 1. பாபக் கிரகத்தின் தசையில் பாபக்கிரகத்தின் அபகார காலத்தில் ஜாதகனுக்கு மரணம் சம்பவிக்கும். இக்கிரகங்கள் பரஸ்பர சத்துருக்களாயிருந்து பலஹீனமடைந்திருப்பின் சந்தேகமில்லாமல் மரணம் உண்டாகும்.

சு. 2. செவ்வாய் தசையின் சனி அபகார காலத்தில் ஜாதகன் தீர்க்காயு ளுள்ளவனு யிருப்பினும், ஜாதகன் நிச்சயமாக மரணமடைவன். அவர் மாரக லட்சணங்களோடு கூடியவராயிருப்பின் சந்தேகமே யில்லாமல் மரணம் உண்டாகும்.

சு. 3. ஆறுமிடத்திலோ அஷ்டமத்திலோ பாபக்ஷேத்திரத்திலோ இருக்கும் பாபக்கிரகம் பாபராசியிலிருக்கின்ற மற்றொரு பாபக்கிரகத்தால் பார்க்கப்படின் அந்தக் கிரகத்தின் தசையிலோ அபகாரத்திலோ மரணம் சம்பவிக்கும்.

சு. 4. இலக்கினுதிபதிக்குச் சத்துருவான கிரகத்தின் தசையின் அபகார காலம் எதிர்பாராத மரணத்திற்கு ஆளாக்குமென்று சத்தியாசாரியார் சொல்லுகின்றார்.

நாற்பத்திரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

## நாற்பத்துமூன்ருவது அத்தியாயம்.

## தசாரிஷ்டபங்கம்.

சு. 1. மேற்சொன்ன தசாரிஷ்ட கர்த்தாவான கிரகம் பலவாஞய் சுபக் கிரகங்களால் பார்க்கப்பட்டு சுபக் கிரகங்கள் மித்துருக் கிரகங்கள் இவர்களுடைய திரேக்காணுதி ஷட்வர்க்கங்களிலிருப்பின் மரணத்தைச் செய்வதில்லை.

சு. 2. மூலதசாநாதனுக்கும் லக்கினத்திற்கும் பலமுண்டாயிருப்பின் மரணம் ஒருக்காலும் சம்பவிக்காதென்று கூறுக.

சு. 3. யுத்தத்தில் ஜெயமடைந்து பலவாஞய் உச்சம் ஸ்வக்ஷேத்திரம் மித்துருக்ஷேத்திரம் முதலிய விராசிகளில் சுப ஸ்தானங்களிலிருக்கின்ற கிரகத்தின் தசாபகாரத்தில் அரிஷ்டபலம் சம்பவிக்காதென்று ஸ்பஷ்டமாய்ச் சொல்லுக.

நாற்பத்து மூன்றவது அத்தியாயம் முற்றிற்று.

## நாற்பத்துநான்காவது அத்தியாயம்.

## உச்ச ஸ்வக்ஷேத்திராதி கிரகஸ்திதி பலன்.

இவ்வத்தியாயத்தில் சூரியன் முதலிய கிரகங்கள் உச்சாதிராசிகளில் இருப்பதினுலுண்டாகும் பலன் சொல்லப்படுகின்றது.

### கிரகங்கள் உச்ச ராசிகளில் இருப்பதின் பலன்.

சு. 1-2-3-4. சூரியன் உச்சத்திலிருப்பின் அதிக உக்கிரனும், அதிக திரவியமுள்ளவனும், மகானும் இருப்பான். சந்திரன் உச்சத்திலிருப்பின் சுகமான பட்சணங்கள் நல்ல வஸ்திரங்கள் சம்பத்துக்கள் ஆபரணங்கள் ஆகிய இவைகளை உடையவனுய் இருப்பான். செவ்வாய் உச்சத்திலிருப்பின் அதிக தேஜசு உள்ளவனும், நிகரற்ற பிரதாப சக்தி கர்வம் ஆகிய இவைகளுள்ளவனும் இருப்பான். புதன் உச்சத்திலிருப்பின் புத்தி சாமர்த்தியம் தாரணசக்தி குல சிரேஷ்டம் நல்ல வாக்கு சாமர்த்தியம் வித்தியா குணம் ஆகிய இவைகள் உள்ளவனுய் இருப்பான். குரு உச்சத்திலிருப்பின் பிரசித்தி பிரபுத்துவம் வித்வத்தன்மை பிறர்களை மரியாதை செய்தல் சுபமான தன்மை சாமர்த்தியத்தன்மை ஆகிய இவைகள் உள்ளவனுய் இருப்பான். சுக்கிரன் உச்சத்திலிருப்பின் விலாசத்திலும் ஹாஸ்யத்திலும் சங்கீதத்திலும் நடனம் கூத்து வாத்தியம் முதலானவைகளிலும் பிரியமோ சாமர்த்தியமோ உள்ளவனுய் இருப்பான். சனி உச்சத்திலிருப்பின் அரசனின் ஆக்ஞையைச் செய்கின்றவனும், கிராம நகராதிகளுக்குத் தலைவனும், வனதானியங்கள் உள்ளவனும், கெட்ட ஸ்திரீயோடு கூடினவனும் இருப்பான்.

### கிரகங்கள் மூலத்திரிகோண ராசிகளில் இருப்பதின் பலன்.

சு. 5-6-7. சூரியன் மூலத்திரிகோணத்திலிருப்பின் தனவானும், பிரதானியாயும், அதிக நிபுணனும் இருப்பான். சந்திரன் மூலத்திரிகோணத்திலிருப்பின் அநுபவசுகமுள்ளவனும், தனவானும் இருப்பான். செவ்வாய் மூலத்திரிகோணத்தி லிருப்பின் திருடர்களுக்குத் தலைவனும், சூரனும், பயமில்லாதவனும், குரூரனும் இருப்பான். புதன் மூலத்திரிகோணத்தி லிருப்பின் விநோத சுபாவமுள்ளவனும், காரியங்களை ஜெயிக்கும் வல்ல

மையுடையவனும் இருப்பான். குரு மூலத்திரிகோணத்தி லிருப்பின் இஷ்ட காரியங்களைச் செய்கின்றவனும், மகானு யும், நீதிகளை அறிகின்றவனும், சுகியாயும் இருப்பான். சுக்கிரன் மூலத் திரிகோணத்திலிருப்பின் கிராம நகரங்களுக்குப் பிரதானியா யும், பிரபுவாயும், மிகவும் சௌபாக்கிய முள்ளவனும் இருப்பான். சனி மூலத் திரிகோணத்தி லிருப்பின் முடிவான பெருந்தனத்தை யுடையவனும், வம்ச கர்த்தாவாயும் இருப்பான்.

கிரகங்கள் ஸ்வக்ஷேத்திரங்களில் இருப்பதின் பலன்.

சு. 8-9-10-11. சூரியன் ஸ்வக்ஷேத்திரத்திலிருப்பின் அதிக உக்கிரனும், அதிகமேலான கர்மங்களைச் செய்கின்றவனும் இருப் பான். சந்திரன் ஸ்வக்ஷேத்திரத்திலிருப்பின் தர்மிஷ்டனும், நல்ல மனதை யுடையவனும், சுந்தரனும் இருப்பான். செவ்வாய் ஸ்வ க்ஷேத்திரத்திலிருப்பின் பிரபுவாயும், அதிக குரூரனும், ஸ்திர முள்ள வனும் இருப்பான். புதன் ஸ்வக்ஷேத்திரத்திலிருப்பின் நல்ல வாக் கியங்களைச் சொல்பவனும், பண்டிதனும் இருப்பான். குரு ஸ்வ க்ஷேத்திரத்திலிருப்பின் காவியம் வேதசாஸ்திரம் இவைகளில் சமர்த்த னும், பிரபுவாயும், மகத்தான வியாபாரத்தை யுடையவனும் இருப்பான். சுக்கிரன் ஸ்வக்ஷேத்திரத்திலிருப்பின் கிருஷிகாரியங்களைச் செய்பவனும், அதிக தனபுஷ்டி யுடையவனும் இருப்பான். சனி ஸ்வக்ஷேத்திரத்திலிருப்பின் மரியாதையுள்ளவனும், துக்கங் களினின்று விடுபட்டவனும் இருப்பான்.

கிரகங்கள் மித்துரு ராசிகளில் இருப்பதின் பலன்.

சு. 12-13-14. சூரியன் மித்துரு க்ஷேத்திரத்திலிருப்பின் ஸ்திர மான பந்து வர்க்கங்கள் உள்ளவனும், பொருள்களைத் தானம் செய் கின்றவனும் இருப்பான். சந்திரன் மித்துரு க்ஷேத்திரத்திலிருப்பின் எங்கும் சுக வெகுமானங்களை அடைபவனும் இருப்பான். செவ் வாய் மித்துரு க்ஷேத்திரத்திலிருப்பின் பந்துக்களையும், தனங்களையும் காப் பாற்றுபவனும் இருப்பான். புதன் மித்துரு க்ஷேத்திரத்திலிருப்பின் சாதுரியம் ஹாஸ்யரசம் தனம் ஆகிய இவைகள் உள்ளவனும் இருப் பான். குரு மித்துரு க்ஷேத்திரத்திலிருப்பின் சத்ஜனங்களுக்குப் பூச் சியனும், மிகவும் மேலான கர்மங்களையுடையவனும் இருப்பான். சுக்கிரன் மித்துரு க்ஷேத்திரத்திலிருப்பின் பந்துக்களிடத்தில் பிரிய ளவனும், தனவானும், சூரனும் இருப்பான். சனி மித்துரு

க்ஷேத்திரத்திலிருப்பின் பரான்னத்தைப் புசிப்பவனும், அதர்மங்களி லும் துர்க்கர்மங்களிலும் பிரியமுள்ளவனும் இருப்பான்.

## கிரகங்கள் நீச ராசிகளில் இருப்பதின் பலன்.

சு. 15-16-17-18. சூரியன் அதிநீசத்திலிருப்பின் அடிமை வேலை செய்து ஜீவிப்பவனும், பந்துக்களால் தள்ளப்பட்டவனும் இருப்பான். சந்திரன் அதிநீசத்திலிருப்பின் குறைந்த புண்ணியம் உடையவனும், ரோக பீடிதனும், லோகத்தில் துர்ப்பாக்கியனும் இருப்பான். சேவ்வாய் நீசத்திலிருப்பின் அனர்த்தங்கள் வியசனங் கள் இவைகளினால் பீடிக்கப்பட்டவனும், அதிக தரித்திரனும் இருப்பான். புதன் நீசத்திலிருப்பின் சாரமில்லாதவனும், தனது பந்துக்களோடும் ஞானிகளோடும் விரோதம் உடையவனும் இருப் பான். குரு நீசத்திலிருப்பின் ஆசாரமற்றவனும், அவமானம் அடை பவனும், அதிக தரித்திர முடையவனும் இருப்பான். சுக்கிரன் நீசத்திலிருப்பின் ஸ்வாதந்திரியமில்லாதவனும், மனைவிக்கு நாசம் உண்டு பண்ணுபவனும், கெட்ட சுபாவமுள்ளவனும் இருப்பான். சனி நீசத்திலிருப்பின் கெட்ட சுபாவம் துராசாரம் தாரித்திரம் முதலியவைகளோடு கூடி இருப்பான்.

## கிரகங்கள் சத்துரு ராசிகளில் இருப்பதின் பலன்.

சு. 19-20-21. சூரியன் சத்துரு க்ஷேத்திரத்திலிருப்பின் தாரித் திரத்தையும், தேச பீடையையும் உடையவனாய் இருப்பான். சந்தி ரன் சத்துரு க்ஷேத்திரத்திலிருப்பின் ஹிருதய ரோகம் உள்ளவனாய் இருப்பான். சேவ்வாய் சத்துரு க்ஷேத்திரத்திலிருப்பின் பந்தனம் சத்துருக்களால் தோல்வியும் தாரித்திரமும் அங்க விகல்பமும், கெடு தியை யுடைய குறியையு முடையவனாய் இருப்பான். புதன் சத்துரு க்ஷேத்திரத்திலிருப்பின் அறிவு புத்தி இவைகளில்லாதவனும், அதிக துக்கமும் தரித்திரமும் உள்ளவனும் இருப்பான். குரு சத்துரு க்ஷேத்திரத்திலிருப்பின் பௌருஷ மில்லாதவனும், காது கேட்காதவனும், நீதியற்றவனும், தரித்திரனும் இருப் பான். சுக்கிரன் சத்துரு க்ஷேத்திரத்திலிருப்பின் அடிமை வேலை செய்கின்றவனும், கபட தந்திரங்களையுடையவனும், அதிக துக்கித னும் இருப்பான். சனி சத்துரு க்ஷேத்திரத்திலிருப்பின் ஆசார மில்லாதவனும், ரோகாதிகளால் துக்கமடைபவனும், துன்பம் அடைபவனும் இருப்பான்.

அம்சத்தில், உச்சம்- ஸ்வக்ஷேத்திரம்-நீசம்-மித்துரு-சத்துரு ராசிகளில் கிரகங்கள் இருப்பதின் பலன்.

சு. 22. எல்லாக் கிரகங்களும் அவரவர்களின் உச்சாம்சகத்தில் இருப்பின் பலம் பூர்ணமாக உண்டாகும். ஸ்வ க்ஷேத்திராம்சகத்திலிருப்பின் ஸ்வ க்ஷேத்திரத்தினுடைய பலம் உண்டாகும். நீசாம்சத்திலும்-சத்துரு அம்சத்திலும் இருப்பின் அதம பலம் உண்டாகும். மித்துரு அம்சத்திலிருப்பின் மத்தியம பலம் உண்டாகும்.

இரண்டு முதலிய கிரகங்களின் உச்சஸ்திதி பலன்.

சு. 23. இரண்டு கிரகம் உச்சம் பெறின் தனவானும், கீர்த்திமானும் இருப்பான். மூன்று கிரகம் உச்சம் பெறின் நகரத்திற்கு நாதனும், பிரபுவாகவாவது சேனை நாயகனாகவாவது ஆகின்றவனும், பிரசித்தனும் இருப்பான்.

சு. 24. நான்கு கிரகம் உச்சம் பெறின் அரசர்களாற் பெறும் கீர்த்தியோடு கூடியவனும், பிரபுவாயும் அரசனுடைய தர்மத்தையுடையவனும் இருப்பான். ஐந்து கிரகம் உச்சம் பெறின் பிரசித்தனும், அரசனுக்கு இஷ்டமும் சம்மதமுமுள்ளவனும், பலவிதமாக விருத்தியடைந்த பொக்கிஷத்தோடு கூடியவனும் இருப்பான்.

சு. 25. ஆறு கிரகம் உச்சம் பெறின் அரசனாகவும், வீர்யம் ஔதாரியம் (பெருந்தன்மை) முதலிய குணங்களையுடையவனாகவும், அதிக வாகனங்களுடையவனாகவும் இருப்பான்.

சு. 26. எல்லாக் கிரகங்களும் உச்சத்திலிருப்பின் சமுத்திரம் வரையிலுள்ள எல்லாப் பூமிகளுக்கும் நாதனான சக்கரவர்த்தியாய் இருப்பான். இங்கு புதனும் சுக்கிரனும் சேர்ந்து ஒரே காலத்தில் உச்சவிராசியிலிருத்தல் சம்பவிக்காததலால் புதனுக்கு உச்சமென்பது உச்சாம்சகம். புதன் உச்சாம்சகம் பெறின் உச்சமெனக் கொள்க என்பது பிரமாணாந்தரம். இவ்விதம் சம்பவிப்பது அரிது.

இரண்டு முதலிய கிரகங்களின் மூலத்திரிகோண ஸ்திதி பலன்.

சு. 27. இரண்டு கிரகம் மூலத்திரிகோணம் பெறின் ஜாதகன் குடும்பவானும், குலத்தை அபிவிருத்தி செய்கின்றவனும், பிரசித்தியான கீர்த்தியோடுள்ளவனும், சிரேஷ்டனும் இருப்பான்.

சு. 28. மூன்று கிரகம் மூலத்திரிகோணம் பெறின் அதிக தனவானும், சங்கம் கிராமம் இவைகளுக்குத் தலைவனும் இருப்பான்.

நான்கு கிரகம் மூலத்திரிகோணம் பெறின் பிரபுத்துவம் சம்பத்து அரசனால் சன்மானம் பெறுதல் இவைகளை யுடையவனும், ஜனங்களுக்குச் சம்மதமுள்ளவனும் இருப்பான்.

சு. 29. ஐந்து கிரகம் மூலத்திரிகோணம் பெறின் சைந்யம் நகரம் கிராமம் ராஜதானி பொக்கிஷம் இவைகளைக் காப்பாற்றுபவனு யும், ஆதார புருஷனும், குடும்பம் உள்ளவனும், அதிக சுகமுள்ள வனும் இருப்பான்.

சு. 30. ஆறு கிரகம் மூலத்திரிகோணம் பெறின் கோபால வம்சத்தில் ஜனித்தவனு யிருப்பினும் வித்தை பெருந்தன்மை சம்பத்து இவைகளையுடையவனும், ராஜ்ஜியத்தை ரட்சிக்கின்றவனும் இருப்பான்.

சு. 31. எல்லாக் கிரகங்களும் மூலத்திரிகோணத்திலிருப்பின் தனம் நல்ல மனைவி பலம் (சைந்யம்) இவைகளையுடையவனும், எல்லா வித்தைகளிலும் சாஸ்திரங்களிலும் நிபுணத்தன்மையுடையவனும், அரசனும் இருப்பான்.

இரண்டு முதலிய கிரகங்களின் ஸ்வக்ஷேத்திர ஸ்திதி பலன்.

சு. 32. இரண்டு கிரகம் ஸ்வக்ஷேத்திரம் பெறின் குலமுக்கியனும், பந்துக்களால் பூசிக்கப்பட்டவனும் இருப்பான். மூன்று கிரகம் ஸ்வக்ஷேத்திரம் பெறின் வம்சபலத்தைச் செய்கின்றவனும், தனவானும், ஸ்தானமானங்களும் யஜசும் உள்ளவனும் இருப்பான்.

சு. 33. நான்கு கிரகம் ஸ்வக்ஷேத்திரம் பெறின் பிரசித்தியானவனும், உத்கிருஷ்டமான வியாபாரத்தையுடையவனும், சங்கம் புரம் நகரம் ஆகிய இவைகளுக்கு நாதனும் இருப்பான். ஐந்து கிரகம் ஸ்வக்ஷேத்திரம் பெறின் அதிக பசுக்கள் பூமி மனைவி ஆகிய இவைகளுள்ளவனும், அரச சமானனும் இருப்பான்.

சு. 34. ஆறு கிரகம் ஸ்வக்ஷேத்திரம் பெறின் சப்தசாஸ்திர (வியாகரண சாஸ்திர)த்தில் அறிவுள்ளவனும், யஜசு சம்பத்து பந்து குதிரை மானம் ஆகிய இவைகளுள்ளவனும் இருப்பான். அரச குலத்தில் ஜனித்தவனுயின் அரசனுய் இருப்பான்.

சு. 35. ஏழு கிரகம் ஸ்வக்ஷேத்திரம் பெறின் சகல சத்துருக்களையும் ஜெயிக்கின்றவனும், சக்கரவர்த்தியாயும் இருப்பான்.

இரண்டு முதலிய கிரகங்களின் மித்துரு க்ஷேத்திர ஸ்திதி பலன்.

இரண்டு கிரகங்கள் மித்துரு க்ஷேத்திரம் பெறின் பந்துக்களுக்கு ஆசிரயபூதனும், நல்ல கதைகளைச் சொல்லுபவனும் இருப்பான்.

சு. 36. மூன்று கிரகம் மித்துரு க்ஷேத்திரம் பெறின் பந்துக்கள் சிநேகிதர்கள் இவர்களுக்கு உபகாரம் செய்கின்றவனும், அநேகவித மான குணங்களினால் பிரசித்தனும் இருப்பான். நான்கு கிரகம் மித்துரு க்ஷேத்திரம் பெறின் பிராம்மணர்களையும் தேவர்களையும் பூசிப்பதில் பிரியமுள்ளவனும், ஆதார புருஷனும் அலங்கரித்துக் கொள்ளுவதில் சாமர்த்தியவானும் இருப்பான்.

சு. 37. ஐந்து கிரகம் மித்துரு க்ஷேத்திரம் பெறின் அரசனைத் தழுவுகின்றவனும், தனவானும், அல்லது அரசனும் நாயகனும் இருப்பான். ஆறு கிரகம் மித்துரு க்ஷேத்திரம் பெறின் அதிக சுக சாதனங்கள் வாகனம் சம்பத்து அரச சமானத்துவம் ஆகிய இவைக ளோடு கூடி இருப்பான்.

சு. 38. எல்லாக் கிரகங்களும் மித்துரு க்ஷேத்திரம் பெறின் அதிக வாகனங்கள் வேலைக்காரர்கள் உபகரண சாமான்கள் ஆகிய இவைகள் உள்ளவனும், அரசனும் இருப்பான். இனி நீசஸ்திதி பலன் சொல்லப்படுகிறது.

இரண்டு முதலிய கிரகங்களின் நீச க்ஷேத்திர ஸ்திதி பலன்.

இரண்டு கிரகம் நீசம் பெறின் நீசனும், ஒவ்வொரு சிந்தைகளும் பல ஆக்ரகங்களும் (பிடித்தல் எதிர்ப்பு பிடிவாதம்) உள்ளவனும் இருப்பான்.

சு. 39. மூன்று கிரகம் நீசம் பெறின் மூடனும், தர்மஹீனனும், தரித்திரனும், சஞ்சரிக்கின்றவனும், அடிமைப்பிரவிருத்தியைச் செய்பவனும் இருப்பான். நான்கு கிரகம் நீசம் பெறின் சோம்பலினால் ஒரு தொழிலும் செய்யாதவனும், தரித்திரனும், கூலி வேலை செய்கின்றவனும் இருப்பான்.

சு. 40. ஐந்து கிரகம் நீசம் பெறின் வீடும் மனைவியும் இல்லாதவனும், அடிமையாயும் இருப்பான். ஆறு கிரகம் நீசம் பெறின் அடி பயம் தண்டம் இவைகளால் மெலிந்தவனும், தளர்ச்சியுள்ளவனும், தரித்திரனும் க்ஷீணனும் இருப்பான்.

சு. 41. ஏழு கிரகம் நீசம் பெறின் சன்னியாசியாயும், பிறரால் தள்ளப்பட்ட சாதனங்களுள்ளவனும், எச்சில் சாப்பிடுபவனும்

ஒரு வஸ்துவும் இல்லாதவனும், வஸ்திரதாரணமில்லாதவனும் இருப்பான். இங்கு ஏழு கிரகங்களுக்கும் ஒரேகாலத்தில் நீசஸ்திதி வராது. ஆதலால் புதனுக்கு நீசாம்சகத்தினைக் கொண்டு இப்பலனை நிர்ணயம் செய்யவேண்டும். இவ்விதம் சம்பவிப்பது அரிது.

இரண்டு முதலிய கிரகங்களின் சத்துரு க்ஷேத்திர ஸ்திதி பலன்

சு. 42. இரண்டு கிரகம் சத்துரு க்ஷேத்திரம் பெறின் சதா கிலேசமுள்ளவனும், சதா கலகத்திற் பிரியமுள்ளவனும், நிந்தை அல்லது அவமதிப்பு உள்ளவனும் இருப்பான்.

சு. 43. மூன்று கிரகம் சத்துரு க்ஷேத்திரம் பெறின் பலவித செலவு துக்கம் உள்ளவனும், சிரமப்பட்டு சம்பாதித்த தனநாச முடையவனும் இருப்பான். நான்கு கிரகம் சத்துரு க்ஷேத்திரம் பெறின் இஷ்டர்களும் மனைவிகளும் புத்திரர்களும் தனமும் நசிப்பவனும், ரோக பீடிதனும் இருப்பான்.

சு. 44. ஐந்து கிரகம் சத்துரு க்ஷேத்திரம் பெறின் பந்துக்களைக் கொண்டு பீடையடைபவனும், தண்டங்களினால் (அடி கொலை) உபத்திரவங்களை யடைந்தவனும் இருப்பான். ஆறு கிரகம் சத்துரு க்ஷேத்திரம் பெறின் ரோகங்களால் பீடிக்கப்பட்டவனும் சதா துக்க முள்ளவனும் இருப்பான்.

சு. 45. ஏழு கிரகம் சத்துரு க்ஷேத்திரம் பெறின் இழிவான வம்சத்தில் ஜனித்தவனும், படுக்கை பாய் வஸ்திரம் பக்ஷண சாதனங்கள் ஆகிய இவைகள் ஒன்றும் இல்லாதவனும் இருப்பான்.

நாற்பத்துநான்காவது அத்தியாயம் முற்றிற்று.

## நாற்பத்தைந்தாவது அத்தியாயம்.

# ஸ்திரீ ஜாதகம்.

இவ்வத்தியாயத்தில் ஸ்திரீ ஜாதக பலன்கள் சோல்லப்படுகின்றன.

சு. 1. முன் புருஷ ஜாதகத்தில் சொல்லிய பிரகாரமாகவே ஸ்திரீ ஜாதகத்தையும் அறிந்து சொல்லவேண்டும். இங்கு புருஷ ஜாதகத்தைவிட சில விசேஷங்கள் மாத்திரம் ஸ்திரீ ஜாதகத்தில் அதிக விஸ்தாரமாய்க் கூறப்படுகின்றன.

சு. 2. ஸ்திரீ ஜாதகத்தில் எட்டாமிடத்தைக் கொண்டு வைதவ்யத்தையும், (பர்த்தாவின் ஆயுள்) சந்திரனைக் கொண்டும் இலக்கினத்தைக் கொண்டும் சரீரத்தையும், ஏழாம் பாவத்தைக் கொண்டு பர்த்தாவின் சௌபாக்கியத்தையும், ஐந்தாம் பாவங்கொண்டு ஸ்திரீ சந்தானத்தையும், ஒன்பதாம் பாவங்கொண்டு புருஷ சந்தானத்தையும், நிச்சயம் செய்துகொள்ளவேண்டும். ஸ்திரீ ஜாதகத்தில் சந்தான பாவம் எவ்விதத்திலும் ஒன்பதாம் பாவங்கோண்டே கூறவேண்டுமென்ப. "ஜன்ம லக்கினயோத்" என்று சொன்னதினால் லக்கினத்தைக் கொண்டும் சந்திர லக்கினத்தைக் கொண்டும் பலாபலத்திற்குத் தக்கவாறு பாவ பலங்களைக் கூறவேண்டுமென்ப.

சு. 3. இலக்கினம் சந்திரன் இவர்களுடைய ஸ்திதி இடபம் கடகம் முதலான இரட்டை ராசிகளாயிருப்பின் இயற்கையான தன்மை நல்ல ஆகிருதி பிரகிருதி அலங்காரம் உத்தம குணம் சௌந்தர்யம் இவைகளுள்ளவளாவள். இலக்கின சந்திரர்களுக்கு சுபதிருஷ்டியுண்டாயிருப்பின் இப்பலன் பூர்ணமாயுண்டாகும்.

சு. 4. இலக்கினம் சந்திரன் இவர்களுடைய ஸ்திதி மேடம் மிதுனம் முதலான ஒற்றை ராசிகளாயிருப்பின் ஸ்திரீத்துவம் குறைந்து புருஷனின் ஆகிருதி பிரகிருதிகளுக்குச் சமத்துவம் உள்ளவளாயிருப்பாள். இலக்கினத்திற்கும் சந்திர லக்கினத்திற்கும் பாபக்கிரகங்களின் சேர்க்கையோ பார்வையோ இருப்பின் கெட்டசுபாவமுள்ளவளாயும், துக்கமுடையவளாயும், பாபியாயும், ஒரு குணங்களுமில்லாதவளாயும் இருப்பாள். இங்கு சொன்ன லட்சணங்கள் கலந்திருப்பின்

மிசிர சுபாவமும் மிசிர குணங்களும் உள்ளவளா யிருப்பளென்று சொல்க.

சு. 5. இலக்கினம் சந்திரன் இவைகளில் எதற்குப் பலமதிக மிருக்கின்றதென்றறிந்து அதைக் கொண்டு மேற்சொல்லப்போகிற திரிம்சாம்சங்களை குஜாதி கிரகங்களைக் கொண்டு முறையே நிச்சயிக்க வேண்டும்.

சு. 6-7-8-9-10-11-12-13. சேவ்வாயின் க்ஷேத்திரமான மேடம் விருச்சிகம் இவைகளிலொன்று லக்கினமாகவோ சந்திரலக்கினமாகவோ இருந்து சேவ்வாயின் திரிம்சாம்சகத்தில் ஜனித்த ஜாதகி கன்னிகையாக இருக்கும்பொழுதே துஷ்டையா யிருப்பாள். சுக்கிரனின் திரிம்சாம் சகத்தில் ஜனித்தவள் கற்பில்லாதவளாய் இருப்பாள். புதனின் திரிம்சாம்சகத்தில் ஜனித்தவள் மாயையுள்ளவளாயிருப் பாள். குருவின் திரிம்சாம்சகத்தில் ஜனித்தவள் பதிவிரதையாயிருப் பாள். சனியின் திரிம்சாம்சகத்தில் ஜனித்தவள் வேலைக்காரியாயிருப் பாள்.

புதனின் க்ஷேத்திரமான மிதுனம் கன்னி இவைகளிலொன்று லக்கினமாகவோ சந்திரலக்கினமாகவோ இருந்து சேவ்வாயின் திரிம் சாம்சகத்தில் ஜனித்த ஸ்திரீ கபட குணமுள்ள வளாயிருப்பாள். சுக்கிரனின் திரிம்சாம்சகத்தில் ஜனித்தவள் அதிக காமத்தால் பீடிக் கப்பட்டவளாய் இருப்பாள். புதனின் திரிம்சாம்சகத்தில் ஜனித் தவள் குணவதியாயிருப்பாள். குருவின் திரிம்சாம்சகத்தில் ஜனித் தவள் பதிவிரதையாய் இருப்பாள். சனியின் திரிம்சாம்சகத்தில் ஜனித்தவள் நபும்சகத்துவம் உள்ளவளா யிருப்பாள்.

சுக்கிரனின் க்ஷேத்திரமான இடபம் துலாம் இவைகளிலொன்று லக்கினமாகவோ சந்திரலக்கினமாகவோ இருந்து சேவ்வாயின் திரிம் சாம்சகத்தில் ஜனித்தவள் அதிக துஷ்டையாயிருப்பாள். சுக்கிரனின் திரிம்சாம்சகத்தில் ஜனித்தவள் நல்ல குணங்களுள்ளவளா யிருப் பாள். புதனின் திரிம்சாம்சகத்தில் ஜனித்தவள் சங்கீதம் முதலிய வைகளில் அதிக நிபுணத்துவம் உடையவளாயிருப்பாள். குருவின் திரிம்சாம்சகத்தில் ஜனித்தவள் குணவதியாயிருப்பாள். சனியின் திரிம்சாம்சகத்தில் ஜனித்தவள் தனது பர்த்தாவை விட்டு விலகி மற் றொரு பர்த்தாவோடு சேருபவளாய் இருப்பாள்.

சந்திரனின் க்ஷேத்திரமான கடகம் லக்கினமாகவோ சந்திரலக்கி னமாகவோ இருந்து சேவ்வாயின் திரிம்சாம்சகத்தில் ஜனித்தவள்

தன்னிஷ்டப்படி நடப்பவளாயும், கற்பில்லாதவளாயும் இருப்பாள். சுக்கிரனின் திரிம்சாம்சகத்தில் ஜனித்தவள் குலதூஷணை (கற்பில்லாதவள்) யாய் இருப்பாள். புதனின் திரிம்சாம்சகத்தில் ஜனித்தவள் சிற்பவித்தையுள்ளவளா யிருப்பாள். குருவின் திரிம்சாம்சகத்தில் ஜனித்தவள் அதிக குணவதியாய் இருப்பாள். சனியின் திரிம்சாம்சகத்தில் ஜனித்தவள் புருஷனை இம்சை செய்பவளாயிருப்பாள்.

சூரியனின் க்ஷேத்திரமான சிம்மம் லக்கினமாகவோ சந்திர லக்கினமாகவோ இருந்து செவ்வாயின் திரிம்சாம்சகத்தில் ஜனித்தவள் புருஷ ஆசாரமுள்ளவளா யிருப்பாள். சுக்கிரனின் திரிம்சாம்சகத்தில் ஜனித்தவள் கற்பில்லாதவளா யிருப்பாள். புதனின் திரிம்சாம்சகத்தில் ஜனித்தவள் புருஷசேஷ்டையுள்ளவளா யிருப்பாள். குருவின் திரிம்சாம்சகத்தில் ஜனித்தவள் அரசத்துவ முள்ளவனுக்கு மனைவியாயிருப்பாள். சனியின் திரிம்சாம்சகத்தில் ஜனித்தவள் துர்க்குணமுள்ளவளாய் இருப்பாள்.

குருவின் க்ஷேத்திரமான தநுசு மீனம் இவைகளி லொன்று லக்கினமாகவோ சந்திரலக்கினமாகவோ இருந்து செவ்வாயின் திரிம்சாம்சகத்தில் ஜனித்தவள் அநேக குணங்களுள்ளவளாய் இருப்பாள். சுக்கிரனின் திரிம்சாம்சகத்தில் ஜனித்தவள் பதிவிரதையாயிருப்பாள். புதனின் திரிம்சாம்சகத்தில் ஜனித்தவள் சிற்பவித்தையில் சாமர்த்திய முள்ளவளாயிருப்பாள். குருவின் திரிம்சாம்சகத்தில் ஜனித்தவள் அதிக குணங்களுள்ளவளாயிருப்பாள். சனியின் திரிம்சாம்சகத்தில் ஜனித்தவள் கொஞ்சம் இன்பமுள்ளவளாயிருப்பாள்.

சனியின் க்ஷேத்திரமான மகரம் கும்பம் இவைகளிலொன்று லக்கினமாகவோ சந்திரலக்கினமாகவோ இருந்து செவ்வாயின் திரிம்சாம்சகத்தில் ஜனித்தவள் வேலைக்காரியாய் இருப்பாள். சுக்கிரனின் திரிம்சாம்சகத்தில் ஜனித்தவள் பிரசவிக்காத மலடியாயிருப்பாள். புதனின் திரிம்சாம்சகத்தில் ஜனித்தவள் கற்பில்லாதவளாய் இருப்பாள். குருவின் திரிம்சாம்சகத்தில் ஜனித்தவள் பதிவிரதையாய் இருப்பாள். சனியின் திரிம்சாம்சகத்தில் ஜனித்தவள் நீச்ச புருஷர்களிடத்தில் பிரியமுள்ளவளாயிருப்பாள்.

சு. 14. சனி க்ஷேத்திரத்தில் சுக்கிரனின் அம்சகமும், சுக்கிர க்ஷேத்திரத்தில் சனி அம்சகமும் வரினும், இந்த சுக்கிரனுக்கும் சனிக்கும் பரஸ்பரதிருஷ்டியுண்டாயிருப்பினும் அல்லது இடபமோ

துலாமோ இலக்கினமாகி லக்கினம்சக ராசி கும்பமாகவரினும் ஸ்திரீகட்கு காமோத்தீபனம் அதிகம் வர்த்தித்திருக்கும் (விருத்தியாயிருக்கும்). அதனை நிவிர்த்திக்கும் பொருட்டு புருஷரூபத்தில் அவயவம் உண்டுபண்ணி தானுகவே தன்னுடைய அபீஷ்டத்தை நிறைவேற்றிக் கொள்ளுபவளாக இருப்பாள்.

சு. 15. ஏழா மிடத்தில் கிரகமிருந்து சுபதிருஷ்டியில்லாதிருப்பின் பர்த்தா கெட்டவனுய் இருப்பான். ஏழாம் பாவம் சரராசியாயிருப்பின் பெரும்பாலும் பர்த்தா அன்னியதேசத்தில் வசிக்கின்றவனுப் இருப்பான். ஏழாமிடத்தில் புதனுவது சனியாவது இருப்பின் பர்த்தா நபும்சகனுய் (புருஷத்தன்மை இல்லாதவனுப்) இருப்பான்.

சு. 16. கன்னிகையின் ஏழாம் பாவத்தில் சூரியனிருப்பின் பர்த்தாவினுல் விலக்கப்படுவாள். அங்கு செவ்வாயிருப்பின் விவாகமானவுடனேயே பர்த்தா மரணமடைவான். பாபதிருஷ்டியோடு கூடிய சனி ஏழாம் பாவத்திலிருப்பின் விவாகத்திற்கு அதிக காலதாமத முண்டாகும்.

சு. 17. பலஹீனனுன பாபக்கிரகம் மற்ற கிரகங்களால் பார்க்கப்பெற்று ஏழாமிடத்திலிருப்பின் பர்த்தாவினுல் விலக்கப்படுவாள். ஏழாமிடத்தில் பாபக்கிரகங்களிருப்பின் வைதவ்வியமே சம்பவிக்கும். ஆனுல் சுபர்களும் பாபர்களும் சேர்ந்து ஏழாமிடத்திலிருப்பின் முதலில் பர்த்தா விலக்குகையோ இறக்குகையோ உண்டாகி பிறகு அன்னிய பர்த்தாவினிடம் சேர்ந்து வாழ்பவளாய் இருப்பாள்.

சு. 18. ஸ்திரீ ஜாதகத்தில் செவ்வாய் க்ஷேத்திரத்தில் சுக்கிரனும், சுக்கிர க்ஷேத்திரத்தில் செவ்வாயும், நவாம்சத்திலிருப்பின் அன்னிய புருஷனை அடைகின்றவளாயிருப்பாள். மேற்சொன்னவாறிருந்து ஏழாமிடத்தில் சந்திரனிருப்பின் அவள் பர்த்தாவினுடைய சம்மதத்தின் பேரில் அன்னிய புருஷனைச் சேருபவளாயிருப்பாள்.

சு. 19. மேடமோ விருச்சிகமோ மகரமோ கும்பமோ இலக்கினமாகி அந்த லக்கினம் பாபக்கிரக திருஷ்டியோடு கூடி சந்திரனும் சுக்கிரனும் ஒன்று சேர்ந்திருப்பின் மாதாவினேடு தானும் கற்பில்லாதவளாய் இருப்பாள்.

சு. 20. ஏழாம்பாவம் செவ்வாயின் நவாம்சத்தோடும் சனியின் திருஷ்டியோடுங் கூடியிருப்பின் யோனிரோக முள்ளவளாய் இருப்

பாள். ஏழாமிடத்திற்குச் சுபக்கிரகங்களுடைய நவாம்சம் உண்டாயின் பர்த்தாவிற்கு அநுகூலமுள்ளவளாயும் சௌபாக்கியமுள்ளவளாயும் இருப்பாள்.

சு. 21. ஸ்திரீ ஜாதகத்தில் ஏழாம் பாவம் சனி க்ஷேத்திரமாகவோ சனியின் நவாம்சமாகவோ இருப்பின் பர்த்தா கிழவனும், மூர்க்கனுயு மிருப்பான். செவ்வாய் க்ஷேத்திரமாகவோ செவ்வாய் நவாம்சமாகவோ இருப்பின் பர்த்தா ஸ்திரீலோலனும், கோபகுணமுடையவனும் இருப்பான்.

சு. 22. ஏழாம் பாவம் சுக்கிர க்ஷேத்திரமாகவோ சுக்கிரநவாம்சமாகவோ இருப்பின் சௌந்தர்ய சௌபாக்கிய குணத்தையுடைய பர்த்தா உண்டாவான். புத க்ஷேத்திரமாகவோ புத நவாம்சமாகவோ இருப்பின் பர்த்தா எல்லாவற்றிலும் சூட்சும புத்தியுடையவனும், வித்வானும், சிற்பசாஸ்திரம் அறிந்தவனும் இருப்பான்.

சு. 23. ஏழாம் பாவம் சந்திர க்ஷேத்திரமாகவோ சந்திர நவாம்சகமாகவோ இருப்பின் பர்த்தா காமார்த்தனும் கடினமான மனதில்லாதவனுமாய் இருப்பான். குரு க்ஷேத்திரமாகவோ குரு நவாம்சகமாகவோ இருப்பின் பர்த்தா குணவானும், ஜிதேந்திரியனும் இருப்பான்.

சு. 24. ஏழாம் பாவம் சூரிய க்ஷேத்திரமாகவோ சூரிய நவாம்சமாகவோ இருப்பின் அநேக வியாபாரங்களுள்ளவனும், மிகவும் கூர்மையுள்ளவனும் இருப்பான். ஏழாம் பாவத்தில் கிரகங்களிருப்பின் அவர்களைக் கொண்டும், கிரகங்களில்லாவிடின் இராசி அமிசம் இவைகளின் அதிபர்களில் பலமுள்ளவர்களைக் கொண்டும், பர்த்தாவினுடைய ஆகிருதி பிரகிருதி முதலானவைகளை நிச்சயித்துச் சொல்ல வேண்டும்.

சு. 25. சந்திரனும் சுக்கிரனும் ஒன்றுசேர்ந்து இலக்கினத்திலிருப்பின் பொறுமையுள்ளவளும், சுகாசக்தியுள்ளவளுமா யிருப்பாள். புதனும் சந்திரனும் சேர்ந்து இலக்கினத்தி லிருப்பின் சுகமுள்ளவளாயும், கலா வித்தைகளில் சாமர்த்திய முள்ளவளாயும், அநேக குணங்களுடையவளாயும், விநயமுள்ளவளாயும் இருப்பாள்.

சு. 26. சுக்கிரன் புதன் இவர்கள் ஒருமித்து இலக்கினத்திலிருப்பின் சௌந்தர்யமும், சௌபாக்கியமும், கலா வித்தைகளில் நிபுணத்துவமும் உள்ளவளாயிருப்பாள். சுபக்கிரகங்கள் எல்லோரும்

ஒன்று சேர்ந்து இலக்கினத்திலிருப்பின் அதிக வேலைக்காரிகளும், வஸ்திர திரவியங்களும், அலங்காரங்களும், அதிக சுகமும் சம் பத்தும் உள்ளவளாயிருப்பாள். பாபர்கள் இலக்கினத்தி லிருப்பின் பலவிதத்தினால் அசுகமும், துக்கமும், மற்ற தோஷங்களும் கூடிய வளாயிருப்பாள்.

சு. 27. ஸ்திரீ ஜாதகத்தில் இலக்கினத்திற்காவது சந்திர லக் கினத்திற்காவது எட்டாம் பாவத்தில் பாபக்கிரகம் (சூரியன் செவ் வாய் சனி ராகு கேது) இருப்பின் வைதவ்யம் உண்டாகும். அந்த வைதவ்யம் அஷ்டமாதி யிருக்கும் நவாம்ச ராசிக்கதிபனின் தசா காலத்தில் சம்பவிக்கின்றது. "ஏகம் த்வேள நவ விம்சதி" என்று தொடங்கி நிஸர்க்க தசைக்குச் சொல்லிய சம்வத்சரத்தில் (விவாகம் ஆனபிறகு அத்தனைவருடம் கழியும்போது) ஆகுமென்று ஹோரா வியாக்கியான முடையார் கூறுகின்றனர். இங்கு அஷ்ட மத்தில் பாபக்கிரகம் இருக்கும்போது இரண்டாமிடத்தில் சுபக்கிர கமிருப்பின் வைதவ்யம் வருவதில்லை யென்றும் அந்த ஸ்திரீக்கே மரணம் சம்பவிக்கு மென்றும் சொல்க.

சு. 28. சந்திரன், ஐந்தாமிடத்திலேலா ஒன்பதாமிடத்திலோ இருந்தாலும், கன்னி விருச்சிகம் இடபம் சிம்மம் இந்த விராசிகள் புத்திரபாவமானாலும் அதற்குச் சுபக்கிரகத்தினுடைய யோகமும் திருஷ்டியும் உண்டாயிருப்பினும் அற்ப புத்திரர்கள் உண்டாவார்கள். ஐந்தாமிடத்திற்குப் பாபர்களுடைய சேர்க்கையோ பார்வையோ உண்டாயிருப்பின் அற்ப புத்திரர்கள் உண்டாவார்கள்.

சு. 29. புதன் சுக்கிரன் சந்திரன் இவர்கள் பலஹீனர்களாயும், சனி மத்தியம பலத்தையுடையவனும், மற்றக் கிரகங்கள் (சூரியன் செவ்வாய் குரு) பலவான்களாயும், இலக்கினம் ஒற்றை ராசியாயும் இருப்பின் அப்போது ஜனித்த ஸ்திரீ புருஷனுடைய ஆகிருதி பிர கிருதி பிரவிருத்திகளுள்ளவளாகி உலகத்தில் சஞ்சரிக்கின்றவ ளாகவே இருப்பாள்.

சு. 30. பாபக் கிரகம் ஏழாமிடத்திலிருந்தால் வைதவ்யம் உண்டாகுமென்று முன்சொன்னோமல்லவா? ஒரு கிரகம் ஒன்பதா மிடத்திலிருப்பின் அந்தக் கிரகம் தனக்குரிய பிரவிரஜ்யயைக் கொடுப்பதால் அந்த ஸ்திரீ வைதவ்யம் அடைவதில்லை.

சு. 31. புதன் குரு சுக்கிரன் சந்திரன் இவர்கள் மிகவும் பல வான்களாகி எந்த ராசிகளிலாவது இருந்து இலக்கினம் ஒற்றை ராசி

யாக இருக்குமாயின் அந்த ஸ்திரீ அநேக சாஸ்திரங்களில் நிபுணத்துவம் உள்ளவளாயும், உபநிஷத் சித்தாந்தங்களை பிரதிவாதிக்கின்றவளாயும் இருப்பாள்.

சு. 32. மேற்சொன்ன பலன்களெல்லாம் ஜாதகம் பிரச்னம் விவாககாலம் கன்னிகையை மணம் பேசுங்காலம் இவைகளுக்கும் பொருந்தும். ஸ்திரீ ஜாதகத்தில் சொல்லிய பலன்கள் அவஸ்தானுசரணம் புருஷ ஜாதங்களுக்கும் பொருந்தும்.

**நாற்பத்தைந்தாவது அத்தியாயம் முற்றிற்று.**

## நாற்பத்தாருவது அத்தியாயம்.

## நிர்யாண லட்சணம்.

இவ்வத்தியாயத்தில் நிர்யாண லட்சணங்கள் மிகத் தெளிவாய்ச் சொல்லப்படுகின்றன.

சு. 1. சூரியன் முதலான ஏழு கிரகங்கள் அஷ்டமத்திலிருந்தால் முறையே அக்கினி, ஜலம், ஆயுதம், ஜ்வரம், ரோகம், (அஞ்ஞான வியாதி) தாகம், பசி இவைகளின் மூலமாக மரணம் உண்டாகும். அஷ்டமம் சரராசியாயின் அன்னிய தேசத்திலும், ஸ்திரராசியாயின் தனது வீட்டிலும், உபயராசியாயின் வழியிலும் மரணம் உண்டாகுமென்று கூறுப.

சு. 2. எட்டாமிடத்தில் ஒரு கிரகமும் இல்லையெனில் எட்டாமிடத்தைப் பார்க்கின்ற கிரகங்களில் பலவானயிருக்கின்ற கிரகத்திற்குச் சொல்லிய வாதாதி தோஷங்களினல் மரணம் உண்டாகும். பலவானன பலகிரகங்களுடைய சேர்க்கையோ பார்வையோ உண்டாயிருப்பின் அக்கிரகங்களுக்குள்ள வாதாதி தோஷங்களால் பலவிதமான ரோகமும் மரணமும் உண்டாகும். அஷ்டமபாவம் காலபுருஷனின் அவயவாதிகளில் எவ்வங்கமாயிருக்குமென்பதை யறிந்து அவ்வங்கத்தில் அக்கிரகத்திற்குச் சொல்லிய வாதாதி ரோகங்களினல் மரணம் உண்டாகுமென்று சொல்லவேண்டும்.

இனி மிருத்தியு தோஷம் சொல்லப்படுகின்றது.

சு. 3. சூரியனும் செவ்வாயும் சேர்ந்து நான்காமிடத்திலோ பத்தாமிடத்திலோ அல்லது இவற்றுள் ஒரு கிரகம் நான்காமிடத்திலோ மற்றொருகிரகம் பத்தாமிடத்திலோ இருப்பின் மலையினுச்சியிலிருந்து வீழ்ந்தோ கற்களினலடிபடுதல் முதலிய வைகளினலோ மரணம் சம்பவிக்கும். செவ்வாய்பத்தாமிடத்திலும் சந்திரன் ஏழாமிடத்திலும் சனி நான்காமிடத்திலுமிருப்பின் கிணற்றில் விழுந்து மரணமடைவான். பாபவீட்சண்யத்தைப்பெற்று சூரிய சந்திரர்கள் கன்னியாவிராசியிலிருப்பின் சொந்த ஜனங்கள் மூலமாக மரணமடைவான். மீனவிராசிலக்கினமாகி அதில் சூரிய சந்திரர்கள் சேர்ந்திருப்பின் ஜலத்தில் மூழ்கி மரணமடைவான். (இங்கு லக்கினம் மீனமாயிருக்கவேண்டு

மென்கிற நியதியில்லை. உபயராசிகளில் ஏதாவதொன்று லக்கின மாயிருத்தல்வேண்டு மென வராக ஹோரையில் கூறப்பட்டுளது.)

சு. 4. சனி கடகத்திலும் சந்திரன் மகரத்திலும் இருப்பின் ஜலோதரத்தால் மரணம் சம்பவிக்கும். சந்திரன் பாபரின் மத்தியில் மேடத்திலாவது விருச்சிகத்திலாவது இருப்பின் அக்கினியினலோ ஆயுதத்தினலோ மரணம் உண்டாகும். ஜலோதரம் = பெருவயிறு.

சு. 5. சூரியன் பாபரின் மத்தியில் கன்னியா விராசியிலிருப்பின் இரத்தக்கெடுதியின் மூலமான ரோகத்தினலோ சரீரம் மெலிதலினலோ மரணம் உண்டாகும்.

சு. 6. மகரம் கும்பம் இவைகளில் சந்திரன் பாப மத்தியத்திலிருப்பின் கயிற்றினலோ நெருப்பினலோ விழுதலினலோ மரணம் சம்பவிக்கும் என்பது நிச்சயம். சாணக்கியரும் இவ்விதமே கூறுகின்றார்.

சு. 7. ஐந்தாமிடத்திலும் ஒன்பதாமிடத்திலும் பாபக்கிரக திருஷ்டியோடு பாபக்கிரகங்களிருந்து சுபரின் வீட்சண்யம் இல்லாமலிருப்பின் பந்தனமூலமாக மரணம் உண்டாகும். அஷ்டம பாவம் * பாசத்திரேக்காணமோ † சர்ப்பத்திரேக்காணமோ ‡ நிகளத்திரேக்காணமோ இவற்றுளொன்றை உடைத்தானலும் பந்தன (ஜெயில் வாசம்) நிமித்தம் மரணம் உண்டாகும். திரேக்காணஸ்வரூபத்தை ஹோரா சாஸ்திரத்தைக் கொண்டு அறியவேண்டும்.

சு. 8. மீனவிராசி லக்கினமாகி அதில் சூரியனும், சந்திரன் ஒரு பாபியோடு ஏழாமிடமான கன்னியிலும் சுக்கிரன் மேடத்திலும் இருப்பின் தனது கிருகத்தில் ஸ்திரீயின் காரணமாக மரணம் உண்டாகு மென்று சிலர் சொல்லுகின்றனர்.

சு. 9. சூரியனே செவ்வாயோ நான்காமிடத்திலும் சனி பத்தாமிடத்திலும் இருந்தாலும் இலக்கினத்திலோ ஐந்தாமிடத்திலோ ஒன்பதாமிடத்திலோ பாபர்களோடுகூடிய சந்திரன் இருந்தாலும் கழுவினல் மரணம் உண்டாகும்.

---

* கடகத்தின் 2-ஆவதும் 3-ஆவதும் பாசத்திரேக்காணமாம்.

† கடகத்தின் 2-ஆவதும் 3-ஆவதும், விருச்சிகத்தின் 1-ஆவதும் 2-ஆவதும், மீனத்தின் 3-ஆவதும் சர்ப்பத்திரேக்காணமாம்.

‡ மகரத்தின் 1-ஆவது திரேக்காணம் நிகளத்திரேக்காணம்.

சு. 10. சூரியன் நான்காமிடத்திலும் செவ்வாய், க்ஷீணசந்திரன் அல்லது சனி இவர்களுடைய திருஷ்டியோடு பத்தாமிடத்திலுமிருந்தால் விறகினாலோ தடியினாலோ ஏற்பட்டுள்ள வெட்டு அடி இவைகளின் காரணமாக மரணம் சம்பவிக்கும்.

சு. 11. க்ஷீண சந்திரன் அஷ்டமத்திலும் செவ்வாய் பத்தாமிடத்திலும் சனி லக்கினத்திலும் சூரியன் நான்காமிடத்திலும் இருப்பின் தடியடியின் மூலமாக மரணம் சம்பவிக்கும். அதுபோலவே க்ஷீணசந்திரன் பத்தாமிடத்திலும் செவ்வாய் ஒன்பதாமிடத்திலும் சனி லக்கினத்திலும் சூரியன் ஐந்தாமிடத்திலும் இருப்பின் புகை அக்கினி பந்தனம் அடி இடி இவைகளினாலோ மற்றும் ஹேமதண்டத்தினாலோ (தடி) மரணம் உண்டாகுமென்று சொல்க.

சு. 12. செவ்வாய் நான்காமிடத்திலும் சூரியன் ஏழாமிடத்திலும் சனி பத்தா மிடத்திலும் இருப்பின் ஆயுதம் அக்கினி ராஜகோபம் இவை காரணமாக மரணம் சம்பவிக்கும்.

சு. 13. செவ்வாய் 10-ஆமிடத்திலும் சந்திரன் 4-ஆமிடத்திலும் சனி 2-ஆமிடத்திலும் இருப்பின் விரணத்தினால் புழுத்து மரணம் உண்டாகும். சூரியன் 10-ஆமிடத்திலும் செவ்வாய் 4-ஆமிடத்திலும் இருப்பின் கள் குடித்து மயங்கி விழுதலினால் மரணமுண்டாகும். (வாகனாதிகளிலிருந்து விழுந்து மரணமடைவனென்று பிருகஜ் ஜாதகம் முதலியவைகளில் காணப்படுகின்றது.)

சு. 14. ஏழாமிடத்தில் செவ்வாயும் இலக்கினத்தில் க்ஷீணசந்திரனும் சூரியனும் சனியும் சேர்ந்திருப்பின் யந்திரத்தினால் நசுக்கப்பட்டு மரணம் உண்டாகும்.

சு. 15. செவ்வாய் துலாத்திலும் சூரியன் செவ்வாய் க்ஷேத்திரத்திலும் (மேடம் விருச்சிகம்) சந்திரன் சனி க்ஷேத்திரத்திலும் (மகரம் கும்பம்) இருப்பின் விண்மத்தியில் (மலம்) மரணம் சம்பவிக்கு மென்ப. (வராக ஹோரையில் கருத்து வேறுபட்டுளது.)

சு. 16. க்ஷீண சந்திரன் பத்தாமிடத்திலும் சூரியன் ஏழாமிடத்திலும் செவ்வாய் நான்காமிடத்திலும் இருப்பின் விண்மத்தியில் மரணம் சம்பவிக்குமென்று சித்தசேனன் சொல்லுகின்றார்.

சு. 17. பலவானான செவ்வாயினுடைய பார்வையோடு கூடிய க்ஷீணசந்திரன் ஏதாவதொரு ராசியிலும் சனி எட்டாமிடத்திலுமிருப்பின் பகந்தரம் முதலிய வியாதிகளினால் பாதையடைந்து கிரு

மிகள் உண்டாகியோ எரிவு உண்டாகியோ ஆயுதக்கிரியையால் வேதனைப்பட்டு மரணத்தையடைவான்.

சு. 18. சூரியனும் செவ்வாயும் ஒன்று சேர்ந்து ஏழாமிடத்திலும் சனி அஷ்டமத்திலும் சந்திரன் நான்காமிடத்திலு மிருப்பின் பட்சிகளின் மூலம் மரணம் உண்டாகும்.

சு. 19. சூரியன் லக்கினத்திலும் செவ்வாய் ஐந்தாமிடத்திலும் சனி எட்டாமிடத்திலும் சந்திரன் ஒன்பதாமிடத்திலுமிருப்பின் மலையினுச்சியிலிருந்து கீழே விழுந்தோ ஆயுதம் இடி உல்கா (எரி நட்சத்திரம் கொள்ளிமீன்) இவைகளினாலோ சுவர் விழுந்தோ பாச பந்தத்தினாலோ மரணம் உண்டாகும்.

சு. 20. ஜன்ம லக்கினத்தினுடைய நவாம்சராசியின் அதிபனிருக்கின்ற ராசிக்குச் •சொன்ன விடத்தில் மரணம் உண்டாகுமென யவனாசாரியார் கூறுகின்றார். [மேடத்திற்கு ஆடுகளுடைய சஞ்சாரஸ்தலம் (காடு). இடபத்திற்கு பசுக்களை மேய்க்குந் தலம். மிதுனத்திற்கு வீடு. கடகத்திற்கு ஜலஸ்தானம். சிம்மத்திற்குக்காடு குகை இவைகளைக் கண்டுகொள்க.] இங்கு கிரகங்களுடைய யோக திருஷ்டி முதலிய வைகளுண்டெனில் அதனையு மனுசரித்து ஸ்தான பேதத்தை யுக்தியினால் ஆலோசித்துச் சொல்லவேண்டும்.

சு. 21. இலக்கினத்திலுதித்த நவாம்ச சங்கிைைபக்குத்தக்கவாறு மரணசமயம் மோகாலஸ்யம் (மயக்கம்) சம்பவிக்கும். அதற்குத் தனது ராசியதிபனின் திருஷ்டியுண்டாயின் அந்த எண்ணை இரட்டித்தும், சுபதிருஷ்டியுண்டாயின் மூன்றால் பெருக்கியும் மோகாலஸ்யம் இத்தனை முறையுண்டாகு மென்று சொல்க.

சு. 22. இலக்கின ஸ்புடத்திற்கு உரியதிரேக்காணமுதல் 22-ஆவது திரேக்காணத்தின் அதிபன் எந்த கிரக மென்றறிந்து அந்தக் கிரகத்தினால் மரணத்தை அறிந்துகொள்ள வேண்டும். அந்த திரேக்காணமானது மரணத்திற்குப் பிரதானகாரண மென்று பல ஆசாரியார்கள் சொல்லுகின்றார்கள். 22-ஆம் திரேக்காணாதிபனால் முன் சொன்ன பிரகாரம் “சிகி ஜலஹுதபுக்” இவை முதலிய நியாப மநுசரித்து மரணஹேதுவைக் கற்பித்துச் சொல்லவேண்டும்.

சு. 23. இனி 22-ஆம் திரேக்காணத்தைக்கொண்டு மரண நிச்சயத்தைச் சொல்லுகின்றனர்.

மேட விராசியின் முதல் திரேக்காணமாய் பாபக்கிரகங்களின் சேர்க்கையோ பார்வையோ பெறின் ஜலம் சர்ப்பம் விஷம் பித்தம் இவைகளின் காரணமாக மரணம் சம்பவிக்கும்.

சு. 24. மேடத்தின் மத்தியம திரேக்காணமாயின் ஜலம் புழுபனி ஆரண்யம் இவைகள் மரணத்திற்குக் காரணமாகும். கடைசித்திரேக்காணமாயின்தடாகத்திலோகிணற்றிலோவிழுந்துமரணம் அடைவன்.

சு. 25. இடபத்தின் முதல் திரேக்காணமாயின் ஒட்டகம் குதிரை கழுதை இவைகளினால் மரணம் உண்டாகும். மத்தியம திரேக்காணமாயின் பித்தம் அக்கினி வாதம் திருடர் இவைகளின் காரணத்தினால் மரணம் சம்பவிக்கும்.

சு. 26. இடபத்தின் கடைசித் திரேக்காணமாயின் வாகனம் பீடம் குதிரை முதலானவைகளிலிருந்து வீழ்ந்தோ யுத்தரங்கத்தில் ஆயுதத்தினா லடிபட்டோ மரணமடைவன்.

சு. 27. மிதுனத்தின் முதல் திரேக்காணமாயின் காச சுவாசங்களினால் மரணம் சம்பவிக்கும். மத்தியம திரேக்காணமாயின் ஜன்னி பாதம் விஷம் காளை செந்நாய் எருமை இவைகளின் மூலமாக மரணம் சம்பவிக்கும்.

சு. 28. மிதுனத்தின் கடைசித் திரேக்காணமாயின் காற்று (அதாவது வாதவாயுக்கள்) வாள் நாற்கால் பிராணிகள் யானை இவைகளின் மூலமாகவோ மலையிலிருந்து விழுந்தோ வனத்தில் கிடந்தோ மரணம் அடைவன்.

சு. 29-30. கடகத்தின் முதல் திரேக்காணமாயின் முதலைகள் துஷ்டர்கள் சுவப்பனம் இவைமூலமாக மரணம்சம்பவிக்கும். மத்தியம திரேக்காணமாயின் அடி இடி விஷமுண்ணல் பயமடைதல் இவை காரணமாக மரணம் சம்பவிக்கும். கடைசித் திரேக்காணமாயின் ஈரல் பிரமேகம் குன்மம் இவைகளினால் மரணம் சம்பவிக்கும்.

சு. 31. சிம்மத்தின் முதல் திரேக்காணமாயின் ஜலத்தில் வீழ்ந்தோ விஷமத்தினாலே பாதரோகத்தினாலோ மரணம் அடைவன். மத்தியம திரேக்காணமாயின் ஜல விகாரங்களான ரோகங்களினால் வனப்பிரதேசத்திலிருந்து மரணம் அடைவன்.

சு. 32. சிம்மத்தின் கடைசித் திரேக்காணமாயின் விஷம் ஆயுதம் அடி தட்டல் முட்டல் வீழ்தல் இவைகளினால் நிச்சயமாய் மரணம் உண்டாகும்.

சு. 33. கன்னியின் முதல் திரேக்காணமாயின் சிரோரோகம் வாதகோபம் இவைகளினுல் மரணம் உண்டாகும். மத்தியம திரேக்காணமாயின் சுவப்பனம் மற்றும் துஷ்ட ஜந்துக்கள் வனம் மலை கோட்டை கிடங்கு அரச புத்திரர்கள் இவைகள் மூலமாக மரணம் சம்பவிக்கும்.

சு. 34. கன்னியின் கடைசித் திரேக்காணமாயின் ஒட்டகம் கழுதை ஆயுதம் ஜலம் அடி இடி இவைகளினுலோ ஸ்திரீயால் சமைத்துக் கொடுக்கப்பட்ட அன்னபான சாதனங்களின் மூலமாகவோ மரணம் சம்பவிக்கும்.

சு. 35. துலாத்தின் முதல் திரேக்காணமாயின் ஸ்திரீகளாலோ நாற்கால் ஜெந்துக்களாலோ வீழ்தலாலோ மரணம் உண்டாகும். மத்தியமதிரேக்காணமாயின் உதரவியாதியினுல் மரணம் சம்பவிக்கும். கடைசித்திரேக்காணமாயின் சர்ப்பம் துஷ்ட ஜெந்துக்கள் ஜலம் ஜல ஜெந்துக்கள் இவைகளினுல் மரணம் உண்டாகும்.

சு. 36. விருச்சிகத்தின் முதல் திரேக்காணமாயின் விஷம் ஆயுதம் ஸ்திரீயினுல் சமைத்துக் கொடுக்கப்பட்ட அன்னபானுதிகள் இவைகளின் மூலமாக மரணம் உண்டாகும். மத்தியம திரேக்காணமாயின் வஸ்திரம் சுமை ஸ்ரவணம் (அஃதாவது வியர்வை மூத்திரம்) இவைகள் மூலமாக மரணம் சம்பவிக்கும்.

சு. 37. விருச்சிகத்தின் கடைசித் திரேக்காணமாயின் கல் மண்ணுங் கட்டிகளால் அடிபட்டோ கணுக்காலின் எலும்பு நொறுங்கி வேதனைப்பட்டோ மரணம் அடைவன்.

சு. 38. தநுசின் முதல் திரேக்காணமாயின் பலவித குஹ்ய ரோகங்களினுலும் அல்லது வாதரோகங்களினுலும் மரணம் உண்டாகும். மத்தியமதிரேக்காணமாயின் விஷத்தினுலோ வியாதிகளினுடைய தோஷத்தினுலோ வாதவிகார மூலமாகவோ மரணம் உண்டாகும்.

சு. 39. தநுசின் கடைசித் திரேக்காணமாயின் ஜலமத்தியில் இருந்தோ ஜலத்தில் விழுந்தோ உதர ரோகங்களினுலோ மரணம் அடைவன்.

சு. 40. மகரத்தின் முதல் திரேக்காணமாயின் ராஜஹிம்சை புலி ஜல்ஜெந்துக்கள் சர்ப்பம் இவைகளாலும், தொடைகளுக்கு ஹானி சம்பவிப்பதாலும் மரணம் உண்டாகும்.

சு. 41. மகரத்தின் மத்தியம திரேக்காணமாயின் நெருப்பு ஆயுதம் திருடர் சுரம் * மனுஷ்யர்களல்லாதவர்களாலுண்டாகும் தோஷங்கள் ஆகிய இவைகள் மூலமாக மரணம் சம்பவிக்கும். கடைசித் திரேக்காணமாயின் ஸ்திரீகளின் தோஷத்தினல் மரணம் உண்டாகும்.

சு. 42. கும்பத்தின் முதல் திரேக்காணமாயின் ஸ்திரீகள் ஜலம் உதரவியாதி மலை வனம் யானை முதலிய ஜெந்துக்கள் இவைகளின் காரணமாக மரணம் உண்டாகும்,

சு. 43. கும்பத்தின் மத்தியம திரேக்காணமாயின் ஸ்திரீயின் மூலமான துக்கத்தினலோ அர்ச்சஸ் பகந்தரம் முதலான குஹ்ய ரோகத்தினலோ மரணம் உண்டாகும். கடைசித் திரேக்காணமாயின் இன பந்துக்கள் நாற்கால் பிராணிகள் முகரோகம் இவைகளினல் மரணம் உண்டாகும்.

சு. 44. மீனத்தின் முதல் திரேக்காணமாயின் குன்மம் வயிற்றிழைச்சல் (இரத்தக்கழிச்சல்) பிரமேகம் ஆகிய வியாதிகள், ஸ்திரீகள், கணுக்கால் வயிறு இந்த அவயவங்களிலுள்ள ரோகங்கள், யானை, கிரகபாதம் (வீடிடிதல்) ஆகிய இவைகள் மூலமாக மரணம் உண்டாகும்.

சு. 45. மீனத்தின் மத்தியம திரேக்காணமாயின் ஜலமத்தியில் தோணி முழுகியோ தோணிக்கு மற்ற தோஷங்கள் நேரிட்டோ மரணம் சம்பவிக்கும். கடைசித் திரேக்காணமாயின் கெட்ட ரோகங்களினல் மரணம் உண்டாகும். இவ்விதம் திரேக்காணத்தினல் மிருத்தியுலட்சணங்களை நிரூபிக்க வேண்டும். முன்சொன்ன கிரகயோக திருஷ்டியாதிகளுக்கு பல முண்டாயிருப்பின் அதனைக் கொண்டும், பலமில்லாவிடின் கூறிய பிரகாரமும் மரணயோகத்தை அறிந்து அவஸ்தானு சரணம் சூட்சுமமாகச் சொல்லவேண்டும்.

**நாற்பத்தாறவது அத்தியாயம் முற்றிற்று.**

---

* தேவர், யக்ஷர் முதலியவர்கள்.

## நாற்பத்தேழாவது அத்தியாயம்.

# நஷ்டஜாதக லக்கினபலம்.

இந்த அத்தியாயத்தில் நஷ்ட ஜாதக லக்கின லட்சணம் தெளிவாய்ச் சொல்லப்படுகின்றது.

சு. 1. ஒருவன், ஜாதகமும் ஜனித்த சமயத்தின் காலமும் இல்லாமல் பிரச்னம் செய்து தாம்பூல தட்சிணைகளை சமர்ப்பித்த பிறகே தைவக்ஞன் ஜாதகத்தினுடைய பலனைப்பற்றிச் சொல்ல வேண்டும். அப்போது அங்குள்ள பாஹ்யாப்யந்தர லட்சணங்களையும் பிரச்னம் நிகழ்ந்த சமயத்தையும் நன்காராய்ந்து ஜனித்த ஆண்டு மாசம் நக்ஷத்திரம் இலக்கினம் இவைகளைச் சுத்தமாக பிரச்னை செய்பவனிடத்தில் சொல்லவேண்டியவனாகின்றான். ஆகையால் மேற்கூறியவாறு தெரிந்துகொள்ளுதற்குரிய சமயாதிகள் சூட்சுமமாவென்று அனுபவ பலன்களினால் நிச்சயித்துச் சொல்ல வேண்டும். அது இங்கு கூறப்படுகின்றது.

சு. 2. பத்து வகை லட்சணங்களினால் பிரச்னம் செய்பவனுடைய அநுபவத்தை யறிந்துகொண்டு இலக்கினத்தைத் தீர்மானிக்க வேண்டியதாகையால் அந்த லக்கினத்தினுடைய இலட்சணரூபமான பலன்களை இங்கு சொல்லுகின்றனர்.

சு. 3-4-5-6. மேட லக்கினத்தில் ஜனித்தவன் அதிக கடினமான கோபம் பிறதேச சஞ்சாரம் பொறுமை சரீரமெலிவு அற்பசுகம் பிறர்களுக்குச் சேவகத் தொழில்புரிதல் திக்கிப்பேசுதல் ஆகிய இவைகளுடையவனும், பித்தம் வாதம் உஷ்ணம் என்னும் ரோகங்களால் பீடிக்கப்பட்டவனும், கர்மங்களில் சாமர்த்தியம் பயசாஞ்சல்யம் தர்மகாரியங்களில் பிரியம் ஸ்திரமின்மை அற்பபுத்தி பிறர்களின் காரியங்களை நாசஞ்செய்தல் சுகாநுபவம் பிரசித்தி நகதோஷம் சகோதரஹீனம் இவைகளை யுடையவனும், பிதாவினால் விலக்கப்பட்டவனும், வேகமான நடை அற்பபுத்திரர் பலவித பொருள்கள் நல்ல சுபாவம் தாழ்மையான சுகம் கெட்டதர்மங்களில் விருத்தியடைந்த திரவியம் இவைகளுள்ளவனும், நிந்திய குலத்தில் ஜனித்தவனும் கெட்டநடத்தை யுடையவனும் அங்கஹீனமுள்ளவ

ளும் சொந்த ஜனங்களிடத்தில் இரக்கமில்லாதவளுமான மனைவியை அடைந்தவனுயுமிருப்பான்.

சு. 7-8-9. இடப லக்கினத்தில் ஜனித்தவன் சூரத்தனமுள்ள வனுயும்; கிலேசங்களைப் பொறுக்கும் சக்தியில்லாதவனுயும் சுகம் சத்துருக்களை நாசஞ்செய்தல் பால்யத்தில் சம்பாத்தியம் ஆகிய இவைகளுள்ளவனுயும், தடித்தும் விரிந்துமிருக்கின்ற நெற்றி மூக்கு கன்னம் உதடு இவைகளை யுடையவனுயும், உத்சாகமுடைய கர்மங் களில் சாமர்த்தியமுள்ளவனுயும், மாதா பிதாக்களுக்குச் சுகத்தை யுண்டுபண்ணுகின்றவனுயும், தானம் செய்கின்றவனுயும், பலவித செலவு குரூரம் கபவாதப் பிரகிருதி அதிக ஸ்திரீ சந்தானம் சுற்றத் தார்களைப் பீடிக்கின்றதில் பிரியம் ஆகிய இவையுள்ளவனுயும், தர் மிஷ்டனுயும், ஸ்திரீகளிடத்தில் பிரியமுள்ளவனுயும், அன்னபானுதி களில் அதிக பிரீதி யுள்ளவனுயும், விசேடமான வஸ்திரங்களில் விருப்பமுள்ளவனுயும் இருப்பான்.

சு. 10-11-12-13. மிதுன லக்கினத்தில் ஜனித்தவன் இஷ்ட மான மனைவியை யுடையவனுயும், அலங்கார திரவியங்களில் பிரிய முள்ளவனுயும், பூசிக்கப்படுந்தன்மை யுடையவனுயும், அழகான வாக்கு சாமர்த்திய முடையவனுயும், பெற்றவளும் வளர்த்தவளு மான இரண்டு தாய்களை யுடையவனுயும், சத்துருக்களால் சிட்சிக் கப்பட்டவனுயும், சங்கீதம் சித்திரம் எழுதல் சிற்பப்பணி வேதசாஸ் திரங்களில் ஞானம் ஹாஸ்ய ரசத்தில் பிரியம் காவியங்களில் சிரத்தை (பற்று) இவை யுடையவனுயும், சாதுத்தன்மை அலங்காரப்பிரியம் மதத்தினுடைய ஆதிக்கம் (மேன்மை) சத்ஜனங்களுக்குச் சம்மதம் சகிக்கும் சக்தியின்மை இஷ்டமில்லாத புத்திரன் துஷ்டத்தன்மை அற்பபந்து பாதங்களுக்கோ மற்றுமுள்ள அவயவங்களுக்கோ குறைவு அழகும் விருத்தமுமான கண்கள் கண் ரோமங்கள் குரூ மான ஆகிருதி கட்டுப்படுந்தன்மை சத்துருக்களின் கூட்டத்தை நாசஞ் செய்கின்ற சுபாவம் இவைகளுடையவனுயும், பூமிகள் இரத்தினங்கள் சுவர்ணங்கள் மோதிரங்கள் ஜலத்தி லுற்பத்தியான மற்ற திரவியங்கள் இவைகளைச் சம்பாதிக்கின்றவனுயும் இருப்பான்.

சு. 14-15-16-17. கடக லக்கினத்தில் ஜனித்தவன் பய சஞ் சலத் தன்மை யுள்ளவனுயும், ஸ்திரமாக ஓரிடத்திலும் இல்லாதவனு யும், இளகிய புத்தி யுள்ளவனுயும், மேதாவியாயும், ஆதார புருஷனு யும், குஹ்யரோகியாயும், சத்துருக்களை ஜெயிக்கின்றவனுயும், மன

தில் அயோக்கிய குணமுள்ளவனும், காமசீல முள்ளவனும், தேவர்கள் விருந்தினர்கள் அந்தணர் இவர்களைப் பூசிக்கின்றதிலும் தானம் செய்வதிலும் பிரியமுள்ளவனும், தர்மிஷ்டனும், கபாதிக்கிய முள்ளவனும், ஸ்திரீகளை யநுசரிக்கின்றவனும், குணவானும், அடுத்த சகோதரம் பெண்ணாக உள்ளவனும், பந்துக்க ளில்லாதவனும், அற்ப புத்திரர் உடையவனும், கெட்ட குடும்பங்களையும் கெட்ட நடத்தையுள்ள ஸ்திரீகளையும் வெகுமானிப்பவனும், பாதிரவியத்தை அடைபவனும், ஊக்கமாகக் கிரகிப்பவனும், பிறதேசகமனம் அதிக தீரத்தன்மை சாகசப் பிரவிருத்தி ஜலத்திலுற்பவமான திரவியங்களின் லாபம் மனைவி வஸ்திரம் ஆபரணம் சுகம் போகம் ஆகிய இவைகளுடையவனும் இருப்பான்.

சு. 18-19-20-21. சிம்ம லக்கினத்தில் ஜனித்தவன் மாமிசத்தில் பிரியமுள்ளவனும், அரசனால் அடையப்பட்ட தனத்தையும் மானத்தையு முடையவனும், தர்மங்களிலிருந்து விடுபட்டவனும், குடும்ப காரியங்களில் உற்சாகமில்லாதவனும், ஸ்திரீகளினிடத்தில் அதிக காமமில்லாதவனும், சிம்மம்போன்ற முகமுடையவனும், மரியாதை கம்பீரம் சத்வம் லஜ்ஜையின்மை அற்பமானவாக்கு பேராசை பாத்துரோக சீலம் அதிக ஆகாரம் சாப்பிடுவதில் பிரியம் வனபர்வதங்களில் சஞ்சாரம் அதிகோபம் திடபந்துக்கள் கவன மின்மை தேஜசு சத்துருக்களை ஜெயித்தல் பிரசித்தி ஆகிய இவைகளுடையவனும், சத்ஜனங்களால் நமஸ்கரிக்கப் படுகின்றவனும், கிருஷி முதலான காரியங்களால் அடைந்த தனத்தையுடையவனும், கர்மங்களில் முயற்சியுடையவனும், அதிகமான விரயமுள்ளவனும், பல்லில் ரோகமுள்ளவனும், வேசி நடிப்பவள் தாசி ஆகிய இவர்களை மனைவியாகவுடையவனும் இருப்பான்.

சு. 22-23-24-25. கன்னியா லக்கினத்தில் ஜனித்தவன் சாதுவாயும் சிட்சை (சாஸ்திரவிசேஷம்) சங்கீதம் காவியம் சிற்பசாஸ்திரம் சித்திரப்பணி இவைகளில் சாமர்த்தியமுள்ளவனும், இஷ்டமாகவும் நல்லவையுமான கதைகளைச் சொல்லுகின்றவனும், சினேகிக்கின்றவனும், பூஜை தானம் செய்தல் இவைகளிற் பிரியமுள்ளவனும், ஸ்திரீகளைப்போன்றமனமும் நடத்தைகளுமுடையவனும், தயாசீலம் பாத்திரவியாநுபவம் போகம் தேச சஞ்சாரம் ஸ்திரீயின் தன்மை வினயமான வார்த்தை காமுகத்துவம் இவையோடு கூடினவனும், பூமண்டலத்திற்கு விருத்தியைச் செய்கின்றவனும், அதிருஷ்டமுடையவனும், காம சீலம் அதிகமான கீர்த்தி நேரானதர்மம் அழகு

திரேககாந்தி தர்சனீயத்துவம் குருவினிடத்தில் இஷ்டம் துர்விருத்தர்களும் பாபிகளுமான சகோதரர்களிடத்தில் வெறுப்பு அதிகமான பெண் சந்ததி கபவாதப் பிரகிருதி நீசர்கள் சத்துருக்கள் இவர்களிடம் அதிகம் பேசாமை ஆகிய இவைகளையுடையவனும் இருப்பான்.

சு. 26-27-28-29. துலா லக்கினத்தில் ஜனித்தவன் குறைந்தும் கூடியுமிருக்கின்ற அங்கங்களையுடையவனும், சுபாவகுணமில்லாதவனும், சபலனும், பெருந் திரவியத்தை நாசம் செய்கின்றவனும், சுகம் உள்ளவனும், சரீரத்தை வளர்ப்பவனும், கபவாதமுள்ளவனும், கலகப்பிரியனும், நீண்ட சரீரமும் முகமும் உள்ளவனும், வித்வானும், அதிக துக்கங்களை அநுபவிக்கின்றவனும், அதிக தாரணையும் புத்தியும் உள்ளவனும், பிறர்களைப் பீடிக்கின்றவனும், மனதிற்கினிய கறுத்த கண்களையுடையவனும், தேவர்கள் குருக்கள் பிராம்மணர்கள் அதிதிகள் இவர்களைப் பூசிக்கின்றவனும், யாகாதி கர்மங்களைச் செய்கின்றவனும், குரு பக்தனும், பூஜ்யனும், உண்மையுள்ளவனும், சுக்கில புஷ்டியில்லாதவனும், கெட்ட வியாபாரங்களிலும் தர்மங்களிலும் பிரியம் நீசபுத்தி சகோதரர்களுக்கிஷ்டம் தனப் பிரதானித்துவம் சுத்தம் பந்துகுணமின்மை ஆகிய இவைகளுடையவனும் இருப்பான்.

சு. 30-31-32-33. விருச்சிக லக்கினத்தில் ஜனித்தவன் பெருத்தும் உயர்ந்துமிருக்கின்ற சரீரம் கூர்மை மனத்தில் வஞ்சகம் உடைத்தாதல் சூரத்தனம் மாதாவிற்கிஷ்டம் யுத்தத்தி லுற்சாகம் தியாக குணம் மங்கிய சிவப்பு நிறமான கெம்பீரமுள்ள கண்கள் விசாலமான ஹிருதயம் தாழ்ந்த வயிறு அமுந்தி மெலிந்திருக்கின்ற மூக்கு சாகச காரியத்தில் பிரியம் நிலையான தன்மை கொடுமை விசுவாசத்திற்கும் ஹாஸ்யத்திற்கும் வசப்படுதல் பித்தரோக உபத்திரவம் குடும்ப புஷ்டி பந்து குருக்கள் இவர்களுக்கு உபத்திரவத்தைச் செய்தல் அன்னிய ஸ்திரீகளைச் சிரமப்பட்டு கவருதல் அழகில்லாத முகம் இவைகளை யுடையவனும், அரசனைச் சேவிக்கின்றவனும், சத்துருக்களோடு கூடியவனும், பரிசுத்தனும், பொருளைத் தானம் செய்கின்றவனும் நல்ல மனைவியை யுடையவனும், தர்மத்தில் பிரியமுள்ளவனும், நிஸ்ஸாரனுகவோ நீசனுகவோ கேவலமான பிரவிருத்தியைச் செய்கின்றவனுகவோ ஆகின்றவனும் இருப்பான்.

சு. 34-35-36-37. தநுசு லக்கினத்தில் ஜனித்தவன் பெருத்த பற்களும் அகலமும் நீளமுமான தலையுடையவனும், வணங்குகின்

றவர்களுக்கு இஷ்டத்தைச் செய்கின்றவனும், தைரியம் சௌரியம் நயம் இவைகளோடு கூடியவனும், அழுக்கடைந்த வயிற்றின் உட்பக்கம் உடையவனும், கெடுதியான நகம் மிகவும் பெருத்த தொடை வயிறு லஜ்ஜை சிற்ப சாஸ்திரங்களில் பாண்டித்தியம் அறிவு வளர்ச்சி அதிகமான கோபம் பலத்தொடு சத்துருக்களை எதிர்த்தல் சுபாவம் குல சிரேஷ்டம் சகல சத்துருக்களையும் நாசஞ்செய்தல் போர்க்களத்தில் பிரதானித்துவம் அதிகமான கபடம் சிற்பம் முதலிய காரியங்களிற் பிரியம் தனது கர்மங்களில் சிரத்தை ஆகிய இவைகளையுடையவனும், பந்துக்களுக்கு நன்மையைச் செய்கின்றவனும், நல்ல அழகுள்ளவனும், முகத்திலும் கண்ணிலும் வியாதியுடையவனும், அரசர்களால் தனம் அடைபவனும், நல்ல தர்மங்களைச் செய்கின்றவனும் இருப்பான்.

சு. 38-39-40-41. மகர லக்கினத்தில் ஜனித்தவன் மெலிந்த (பலமில்லாத) சரீரத்தை யுடையவனும், தைரியமில்லாதவனும், யானைப்போன்ற முகத்தையுடையவனும், வாத வியாதியால் பீடிக்கப்பட்டவனும், தெளிந்துயர்ந்திருக்கின்ற மூக்கையும் அற்பமான சத்துவம் (பலம்) அற்பபுத்திரன் அதிகமான ரோமங்கள் விஸ்தாரமான கை கால்கள் ஆசாரம் குணம் இவைகளில் குறைவு ஆசையினால் பீடிக்கப்பட்டு வேசிகளான ஸ்திரீகளினிடம் பிரியமான மனது காடு மலைகளில் சஞ்சாரம் சௌரியம் வேத சாஸ்திரங்கள் சங்கீதங்கள் தெரிந்துகொள்ளுதல் குடும்பஸ்திதி நிந்திக்கப் படுதல் கொடுமை பந்துக்களுக்கு கெடுதிசெய்தல் துர்நடத்தை அதிருஷ்டம் துஷ்டஸ்திரீ (மனைவி) அசூயையின்மை (அவதூறு பொறாமை) சம்பத்து தர்மங்களில் பிரியம் அரசசேவை பெருந்தானம் செய்யாமை சுகம் சௌபாக்கியம் இவைகளுள்ளவனும் இருப்பான்.

சு. 42-43-44. கும்ப லக்கினத்தில் ஜனித்தவன் அதிக நீசமான கருமத்தைச் செய்கின்றவனும், குலசிரேஷ்டனும், அறிவில்லாதவனும், மலர்ந்திருக்கின்ற மூக்கின் நுனி சந்தோஷமின்மை விரோதம் நீசத்தன்மை அதிகமான கோபம் சோம்பல் சுறுசுறுப்பின்மை அல்லது துர்ப்பல சரீரம் கொடுமைத்தன்மை சூதுவிளையாடல் நீச ஜனங்களிடத்தும் தாசிகளிடத்தும் பிரியம் பந்துக்களுடைய ஆலோசனையாற் கலங்குதல் அல்லது பந்துக்களோடு மரியாதை யின்மை விருத்தியும் க்ஷயமும் கலந்து வருதல் தனம் கிடைத்தல் கோள் சொல்லல் துஷ்டத்தன்மை தரித்திரம் கபடம் பந்துஹீனம் லோகத்

தில் தள்ளப்படுதல் ஒருவருக்கும் ஹிதமின்மை அதிக சம்பத்து குருவினிடம் பிரியம் ஆகிய இவையுள்ளவனும் இருப்பான்.

சு. 45. ஜாதகன் கும்ப லக்கினத்தில் ஜனிப்பது சுபமல்லவென்று சத்தியாசாரியார் ஸ்திரமாகச் சொல்லுகின்றார். இதனது கருத்து கும்பத்தினுடைய வர்க்கத்திற்கு மாத்திரம் தோஷமுண்டென்பதும், இலக்கினம் தோஷமில்லையென்பதுமாம். இங்குவர்க்கமென்றது துவாதசாம் சகத்திற்கு மாத்திரமே என்று யவனஹோரையில் யவனாசாரியர்கள் கூறுகின்றார்கள். கும்பத் துவாதசாம்சம் அசுபமானால் இவ்வித தோஷம் எல்லா ராசிகளுக்கும் தொடருகின்றதாகையால் துவாதசாம்சக மல்லவென்றும் கும்பத்திற்குத் தோஷசாங்கத்தியமுள்ளதென்றும் சாணக்கியர் சொல்கின்றனர். இவ்விதம் பல கொள்கைகளிருந்தாலும் சத்தியாசாரியார் கொள்கையைப் பல ஆசாரியார்களும் இப்போது அநுசரிக்கின்றார்களென அறிந்து கொள்க.

சு. 46-47-48-49. மீன லக்கினத்தில் ஜனித்தவன் செல்வமுள்ளவனும், விளக்கமான மூக்கு கண் உள்ளவனும், சிற்ப சாஸ்திரம் காவ்யம் இவைகளிற் பிரியமுள்ளவனும், வெகுமான ஆதரவினால் கிடைக்கப்பட்ட யஜசு உடையவனும், குஷ்டரோகமுள்ளவனும், திறக்கப்பட்ட வாய் மலர்ந்திருக்கின்ற முகம் நீண்டு அகன்றிருக்கின்ற பற்கள் இவைகளை யுடையவனும், காளை பசு முதலிய இவைகளில் பெருவிருப்பம் தாட்சண்யம் விசுவாசம் செம்மறியாடு (கம்பளியாடு) இவைகளையுடையவனும், சுத்தம் ஆகாசம் சாஸ்திரம் வித்தை தைரியம் அதிக பெண்சந்தானம் கட்டுப்படுதல் நற்புத்தி சத்தியம் சங்கீதம் ஸ்திரீகளினிடத்தில் பிரியம் இவைகளுள்ளவனும், நற்சுபாவம் உதாரமுள்ள புத்தி சகோதரர்களால் தனலாபம் கோபசீலம் பந்துகுணம் இவைகளை யுடையவனும் இருப்பான். இவ்விதம் மேடாதிகளான ராசிகள் லக்கினங்களாக வந்தால் அவைகளின் பலன்கள் ராசிக்கும் ராசியாதிபதிக்கும் பூர்ணமான பலமுண்டென்றால் பூர்ணமாகவே உண்டாகும்.

நாற்பத்தேழாவது அத்தியாயம் முற்றிற்று.

## நாற்பத்தெட்டாவது அத்தியாயம்.

# ஹோரா பலம்.

சு. 1. இந்த அத்தியாயத்தில் மேடாதிகளின் ஹோரா பலன்கள் தெளிவாய்க் கூறப்படுகின்றன.

மேடத்தின் முன்ஹோரையில் ஜனித்தவன் குரூரமான சிவந்த கண்களையுடையவனும், கடினமானவனும், தனத்தைக் காப்பாற்றுபவனும், அதிகமான சுக்கிலதாது உள்ளவனும், உக்கிரமான பார்வையுடையவனும், பெருத்து நீண்டிருக்கின்ற சரீரமுடையவனும், அதிக கோப சுபாவமுடையவனும் திருடர்களுக்குத் தலைவனும் இருப்பான்.

சு. 2. மேடத்தின் பின்ஹோரையில் ஜனித்தவன் கள்ளத்தனமும், நிரம்ப அசட்டுத்தனமும், குரூரமான பாதாக்கிரமும், (விரல்களும்) பிரகாசமும், நீண்ட கண்களும், சாதுர்யமும், பெருத்து உயர்ந்த அங்கமும், அதிக தாரணாசக்தியோடு கூடிய புத்தியும் உடையவனாய் இருப்பான்.

சு. 3. இடபத்தின் முன்ஹோரையில் ஜனித்தவன் கறுத்த நிறமும், விஸ்தாரமான கண்களும், நெற்றியும் விரிந்த மார்பும், மேன்மையான சம்போகத்தில் பிரீதியும், கடினமான அஸ்தியும், நல்ல சரீரமும் உள்ளவனாய் இருப்பான்.

சு. 4. இடபத்தின் பின்ஹோரையில் ஜனித்தவன் பெருத்து உயர்ந்திருக்கின்ற அங்கமும், நல்ல சிரோரோமமும், உதார சத்துவமும், ஒன்றுக்கொன்று சேர்க்கையில்லாப் பிரதேசமும், (இடுப்பு) விருஷபத்தின் கண்போன்ற கண்களும் ஆகிய இவைகளையுடையவனாய் இருப்பான்.

சு. 5. மிதுனத்தின் முன்ஹோரையில் ஜனித்தவன் உயர்ந்திருக்கின்ற மத்திய பிரதேசமும், (இடையும்) அதிக சாமர்த்தியமும், ஒரே விதமான சரீரமும், மிருதுவான சிரோரோமமும், அழகான பாதமும், சூரத்தனமும், சம்போகத்தில் அதிக விருப்பமும், தனமும், வித்வத்தன்மையும் ஆகிய இவைகளையுடையவனாய் இருப்பான்.

சு. 6. மிதுனத்தில் பின்ஹோரையில் ஜனித்தவன் மனோகரமான நீண்ட கண்களும், காமமும், மிருதுவான கர்மங்களைச் செய்த

லும், வாக்கு சாதுரியமும், பர ஸ்திரீகளினிடம் பிரியமும் ஆகிய இவைகளை யுடையவனும் இருப்பான்.

சு. 7. கடகத்தின் முன்ஞேரையில் ஜனித்தவன் உயர்ந்த சரீரமும், அழகான சிரசும், கர்வமான புத்தியும், அல்லது தைரியமான புத்தியும், மந்தமான கண்களும், இளக்கமான அங்கமும், துஷ்டத்தனமும், கறுத்த வர்ணமுள்ள சரீரமும், அதிக உபகார ஸ்மரணையில்லாதிருத்தலும், பல் நுனியில் கெடுதலும் ஆகிய இவைகளை யுடையவனும் இருப்பான்.

சு. 8. கடகத்தின் பின்ஞேரையில் ஜனித்தவன் சூது விளையாட்டில் பிரியமும், சஞ்சாரத்தில் பிரியமும், அகன்ற மார்பும், நல்ல பிரமாணமும், உறுப்பிலக்கணத்திற்கேற்ற உயரமும், கொடுமையான சரீரமும், கோபமும் ஆகிய இவைகளை யுடையவனும் இருப்பான்.

சு. 9. சிம்மத்தின் முன்ஞேரையில் ஜனித்தவன் சிவந்த கண்களும், கர்வமும், சிரேஷ்டத்துவமும் நீண்ட சரீரமும், வக்கிரமான சுபாவமும், சுகமும், ஊக்கமான மனதும், திடமான காரியமும் ஆகிய இவைகளை யுடையவனும் இருப்பான்.

சு. 10. சிம்மத்தின் பின்ஞேரையில் ஜனித்தவன் மனைவி சுகமான உணவுகள் பானங்கள் நல்ல வஸ்திரங்கள் இவைகளை விரும்புகின்றவனும், பல வியாபாரங்களை யுடையவனும், கடினமான அவயவம் தானசீலம் சஞ்சாரம் குறைந்த சந்தானம் போகம் நிலையான பந்து ஆகிய இவைகளை யுடையவனு மிருப்பான்.

சு. 11. கன்னியின் முன்ஞேரையில் ஜனித்தவன் மிருதுவான சரீரமும், அழகும், நல்ல வாக்கியமும், சங்கீதமும், மாதுர்யமும், சங்கீத ஞானமும், ஸ்திரீகளினிடத்தில் பிரியமும் ஆகிய இவைகளை யுடையவனும், ஸ்திரீகளுக்கு நல்லவனும், சேஷ்டனும் இருப்பான்.

சு. 12. கன்னியின் பின்ஞேரையில் ஜனித்தவன் உயரமில்லாதவனும், பலாத்காரமாக அர்த்தங்களைக் கேட்கின்றவனும், பெரிய தலையுடையவனும், சம்மதனும் வியவகாரியாயும், பிறரைச் சேவிக்கின்றதில் சாமர்த்தியனும், எழுத்து சித்திரம் இவைகளில் நிபுணத்துவமுடையவனும் பெருக்க சுருக்க முடையவனும், சுகித்துவமுடையவனும் இருப்பான்.

சு. 13. துலாத்தின் முன்ஞேரையில் ஜனித்தவன் வட்டமான முகமும், உயர்ந்த சரீரமும், கறுத்து நீண்ட நல்ல கண்களும், விலாச

மும் பெருத்து நீண்ட ஆகிருதியும், பலமுள்ள எலும்புகளும், ஊக்கமும், தனமும், சொந்த ஜனங்களினிடத்தில் சந்தோஷமும் ஆகிய இவைகளையுடையவனாய் இருப்பான்.

சு. 14. துலாத்தின் பின்னோரையில் ஜனித்தவன் பெருந்தனமும், பூர்ணமாகாத சிறு நரம்பும், கறுத்து சுருண்ட சிரோ ரோமமும், வட்டமான கண்களும், அழகும் மிருதுவான தோலும், குறைவான பாதாக்ரமும் ஆகிய இவைகளையுடையவனாய் இருப்பான்.

சு. 15. விருச்சிகத்தின் முன்னோரையில் ஜனித்தவன் கடை சிவந்து பிங்கள வர்ணமுள்ள கண்களும், சாகசகர்மங்கள் செய்தலும், யுத்தத்தில் பராக்கிரமமும், கெட்ட சுபாவமும், ஸ்திரீகளினிடத்தில் பிரியமும், தனமும் ஆகிய இவைகளை யுடையவனாய் இருப்பான்.

சு. 16. விருச்சிகத்தின் பின்னோரையில் ஜனித்தவன் விஸ்தாரமாகவும் தடிப்பாகவும் உருண்டு நீண்டிருக்கின்ற சரீரமும், அரசனை சேவித்தலும், அதிக கடனும், பந்துக்களும், மலர்ந்திருக்கின்ற கண்களும் ஆகிய இவைகளையுடையவனாய் இருப்பான்.

சு. 17. தநுசின் முன்னோரையில் ஜனித்தவன் கெட்டியாயும் வெட்டுள்ளதாயுமுள்ள முகமுடையவனாயும், விசாலம் பொருந்திய மார்பும், தாழ்ந்திருக்கும் கண்களுமுடையவனாயும், ஒட்டியிருக்கும் கன்னமுடையவனாயும், பாலியவயதில் பிதாவினால் நீக்கப்பட்டவனாயும், தபசு செய்பவனாயும், அல்லது துக்கமடைபவனாயும் இருப்பான்.

சு. 18. தநுசின் பின்னோரையில் ஜனித்தவன் அரவிந்தமலர் போன்ற கண்களையுடையவனாயும், முழங்கால் வரையில் நீண்டு தொங்கும் கைகளையுடையவனாயும், சாஸ்திரங்களின் அர்த்தத்தை அறிந்தவனாயும், நல்ல அங்கத்தோடு கூடியவனாயும், கேட்பவர்களுக்குச் சந்தோஷம் உண்டாகும்படி அழகாகப் பேசுபவனாயும், அதிக செல்வ முள்ளவனாயும், பற்றற்றவனாயும், கீர்த்திமானாயும் இருப்பான்.

சு. 19. மகரத்தின் முன்னோரையில் ஜனித்தவன் கறுத்த நிறமுடையவனாயும், மானின் கண்போன்ற கண்ணுள்ளவனாயும், செல்வம் வாய்ந்தவனாயும், ஸ்திரீகளுக்கு வசப்படாதவனாயும், நல்ல சரீரமுள்ளவனாயும், துஷ்டத்தன முள்ளவனாயும், பிரபுத்துவமுள்ளவனாயும், சுகமுள்ளவனாயும், நல்ல உணவுகளை உட்கொள்ளுபவனாயும், நல்ல வேஷமுள்ளவனாயும், கொஞ்சம் உயர்ந்த மூக்கை யுடையவனாயும் இருப்பான்.

சு. 20. மகரத்தின் பின்ஞேரையில் ஜனித்தவன் சிவந்திருக்கின்ற கடைக்கண்களுள்ளவனும், சோம்பலுள்ளவனும், அதிக தூரம் வழி நடக்கின்றவனும், அறிவில்லாதவனும், கறுத்த சரீரமுள்ளவனும், திரேகத்தில் அதிக ரோமம் உள்ளவனும், கடினமானவனும், ஹாஸ்ய சீல முள்ளவனும், அதிக குரூர கர்மம் செய்பவனும் இருப்பான்.

சு. 21. கும்பத்தின் முன்ஞேரையில் ஜனித்தவன் ஸ்திரீகளும் (மனைவிகள்) பந்துக்களும் உள்ளவனும், ரசங்களை யறிபவனும், மிருதுவானவனும், அற்ப புத்திரனுள்ளவனும், நல்ல குணமும் சூரத்தனமும் தாமிரவர்ணம் போல் பிரகாசிக்கின்ற சரீரமும் உள்ளவனும், வழி நடப்பதில் பிரிய முள்ளவனும் இருப்பான்.

சு. 22. கும்பத்தின் பின்ஞேரையில் ஜனித்தவன் திறந்திருக்கின்ற இரக்தவர்ணமான கண்களுள்ளவனும், ஸ்திரமானவனும், தடித்து உயரமில்லாத சரீர முள்ளவனும், சோம்பல் (உத்சாகமின்மை) உள்ளவனும், நிந்தையுள்ளவனும் அதிக துக்கமும் கபடமும் துஷ்டத்தனமும் உள்ளவனும் இருப்பான்.

சு. 23. மீனத்தின் முன்ஞேரையில் ஜனித்தவன் உயரமின்றி தடித்த நல்ல சரீர முள்ளவனும், வலிதான நெற்றியும் விசாலமான மார்பும் புஷ்டியுள்ள முகமும் உள்ளவனும், ஸ்திரீகளினிடத்தில் பிரியமுள்ளவனும், நிரம்ப கீர்த்தியும் சத்கருமங்களில் திறமையும், சூரத்தன்மையும் உள்ளவனும் இருப்பான்.

சு. 24. மீனத்தின் பின்ஞேரையில் ஜனித்தவன் தாதாவாயும், (கொடையாளி) மிகவும் உயர்ந்த மூக்குள்ளவனும், அதிகமான நிபுணத்துவமும் தாரணபுத்தியு முள்ளவனும், நல்ல கண்களையும் அரசனின் சிநேகத்தையுமுள்ளவனும், ஸ்திரீகளுக்குத் தர்சனீயனும், அழகு வாய்ந்தவனும், சங்கடமாக வார்த்தைகளை வேண்டியவாறு பேசுகின்றவனும் இருப்பான்.

சு. 25. ஹோராநாதர்களான சூரிய சந்திரர்களில் ஒருவன் (ஜன்மலக்கினத்தினுடைய ஹோரையின் அதிபன்) பலவானும் கேந்திரத்திலிருப்பவனும் இலக்கினத்தைப் பார்க்கின்றவனும் இருந்தால் முற்சொன்ன ஹோராபலம் முழுவதும் பூர்ணமாக உண்டாகும். ஹோரேசனுக்குப் பலஹீன முண்டாயிருப்பின் பலன் மிகக் குறைவாகவே இருக்குமென்று அறிந்துகொள்ளவேண்டும்.

நாற்பத்தேட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

# நாற்பத்தொன்பதாவது அத்தியாயம்.

## திரேக்காண பலம்.

சு. 1. இந்த அத்தியாயத்தில் திரேக்காணபலன்கள் தெளிவாய்ச் சொல்லப்படுகின்றன.

மேடத்தின் முதல் திரேக்காணத்தில் ஜனித்தவன் கொடையாளி யாயும், அபகரிக்கின்றவனும், பிரகாசம் உள்ளவனும், ஏற்றத் தாழ்வு உள்ளவனும், யுத்தத்தில் திறமையுள்ளவனும், கலகப் பிரிய னும், பந்துக்களுக்கு உக்கிரமான தண்டத்தைச் செய்கின்றவனும் இருப்பான்,

சு. 2. மேடத்தின் இரண்டாம் திரேக்காணத்தில் ஜனித்தவன் ஸ்திரீகளைப்போல் சபலம் உள்ளவனும், ஸ்திரீபோகம் விளையாட்டு சங்கீதத்திற் பிரியம் மனோ குணம் பந்துக்கள் தனம் சௌந்தரியம் உள்ளவனும், ஸ்திரீ தனத்தை இச்சிக்கின்றவனும் இருப்பான்.

சு. 3. மேடத்தின் மூன்றாம் திரேக்காணத்தில் ஜனித்தவன் குணவானும், அன்னியர்களுக்குத் தோஷத்தைச் செய்கின்றவனு யும், ஸ்திர மில்லாதவனும், * சத்ரமுடையவனும், அரசனிடம் சேவிக்கின்றவனும், பந்துசினேகிதனும், அதிக தர்மமும் மனைவி யின் ஆதரவும் உள்ளவனும் இருப்பான்.

சு. 4. இடபத்தின் முதல் திரேக்காணத்தில் ஜனித்தவன் சாப்பிடுதல் பானம் செய்தல் இவைகளில் பிரியமுள்ளவனும், மனை வியின் பிரிவால் துக்கிதனும், வஸ்திரமும் அலங்காரமும் உள்ளவ னும், ஸ்திரீயின் இயற்கையை யநுசரிக்கின்றவனும் இருப்பான்.

சு. 5. இடபத்தின் இரண்டாம் திரேக்காணத்தில் ஜனித்தவன் மிருதுவான சரீரம் உள்ளவனும், ஸ்திரீகளுக்கு நல்லவனும், பெரிய உதடும் சௌந்தரியமும் சம்பத்தும் தனமும் உள்ளவனும், நல்லஹிருதயமுள்ளவனும், பேராசைக்காரனும், ஸ்திரீகளுக்குப் பிரிய முள்ளவனும் இருப்பான்.

சு. 6. இடபத்தின் மூன்றாம் திரேக்காணத்தில் ஜனித்தவன் சாதுரியமும், அற்பபாக்கியமும், வீரமும், அசுத்தமும் உள்ளவனுய்

* யாகம் வீடு காடு செல்வம் முதலியன.

இருப்பான். முற்கூற்றில் தனலாபமும் பிற்கூற்றில் துக்கமும் உள்ள வனாய் இருப்பான்.

சு. 7. மிதுனத்தின் முதல் திரேக்காணத்தில் ஜனித்தவன் பெரிய தலையும் நீண்ட அங்கமும் உள்ளவனாயும், தனவானாயும், துர்க்குணமும் விலாசமும் உள்ளவனாயும், குணவானாயும், அரசனால் பெருமையடைபவனாயும், வாக்கு சாதுரிய முள்ளவனாயும் இருப்பான்.

சு. 8. மிதுனத்தின் இரண்டாம் திரேக்காணத்தில் ஜனித்தவன் சிறுத்தமுகம், மெலிந்து உயர்ந்த நல்ல அவயவம், கனம் குறைந்த தலைமயிர், செல்வம், மிருதுத்துவம், அதிகபுத்தி, கீர்த்தி, நல்லபுகழ் ஆகிய இவைகளுள்ளவனாய் இருப்பான்.

சு. 9. மிதுனத்தின் மூன்றும் திரேக்காணத்தில் ஜனித்தவன் ஸ்திரீகளைத் துவேஷித்தல், நல்ல சரீரம், மேன்மை, வலிதான சிரசு, சத்துருக்கள், குரூரமான நகங்கள், வலிய கை கால்கள் ஆகிய இவைகளுள்ளவனாய் இருப்பான்.

சு. 10. கடகத்தின் முதல் திரேக்காணத்தில் ஜனித்தவன் தேவகாரியத்திலும் பிராமண காரியத்திலும் பிரியம், வெண்மையான நிறம், பிறர்களுடைய காரியத்தைச் செய்தல், வித்துவத்துவம், நற்புத்தி, நல்ல அவயவம், மனைவி, சௌபாக்கியம் ஆகிய இவைகளுள்ளவனாய் இருப்பான்.

சு. 11. கடகத்தின் இரண்டாம் திரேக்காணத்தில் ஜனித்தவன் பேராசைக் குணம், பட்சணப் பிரியம், அதிக உறக்கம், ஸ்திரீஜிதம், அபிமானம், அதிகரோகம், விலாசம், ஸ்திரமின்மை, நற்சகோதரர் ஆகிய இவைகளுள்ளவனாய் இருப்பான்.

சு. 12. கடகத்தின் மூன்றும் திரேக்காணத்தில் ஜனித்தவன் ஸ்திரீ சஞ்சலமுள்ளவன். அர்த்தங்களைச் (பொருள்) சம்பாதிக்கின்றவன். பிறதேச வாசம் செய்பவன். கள் அல்லது சாராயத்தில் பிரியமுள்ளவன். சாதுத்தன்மையுள்ளவன். காட்டில் வாசம் செய்யப் பிரியமுள்ளவன், ஜலத்தில் விருப்பமுள்ளவன், கோபதிருஷ்டியுள்ளவன், நல்ல மாலைகளைத் தரிப்பவன் ஆவன்.

சு. 13. சிம்மத்தின் முதல் திரேக்காணத்தில் ஜனித்தவன் தானம் செய்கின்றவனாயும், தாங்குங் கர்த்தாவாயும், சத்துருக்களை ஜெயிக்கின்றவனாயும், அதிக பந்துக்களும் தனமும் மனைவிகளும்

உள்ளவனும், பல அரசர்களைச் சேவிக்கின்றவனும், நிரம்ப சத்துவ முள்ளவனும் இருப்பான்.

சு. 14. சிம்மத்தின் இரண்டாம் திரேக்காணத்தில் ஜனித்தவன் அதிககாலம் காரியங்களைச் செய்கின்றவனும், கொடையாளியாயும், நிலையுள்ளவனும், நல்ல சரீரமுள்ளவனும், யுத்தத்தில் பிரீதியுள்ளவனும், சுகமநுபவிப்பவனும், வேததர்மங்களில் விருப்பமுள்ளவனும், விசால புத்தியுடையவனும் இருப்பான்.

சு. 15. சிம்மத்தின் மூன்றாம் திரேக்காணத்தில் ஜனித்தவன் பிறர்களின் திரவியத்தைக் கைக்கொள்ளும் சாமர்த்தியமும் பிடிவாதமும் உடையவனும், அதிக புத்தியும் துர்க்குணமும் நிரம்ப புஷ்டியும் நீளமுள்ள சரீரமும் அதிக சந்தானமும் பிரகாசமும் உடையவனும், பேராசைக்காரனும் இருப்பான்.

சு. 16. கன்னியின் முதல் திரேக்காணத்தில் ஜனித்தவன் கறுத்த நிறம், நீண்ட சரீரம், தலை, தேன் நிறம் போன்ற கண்கள் வாக்கு சாதுரியம், விநயம், மிருதுவான சரீரம், ஸ்திரீயினால் தனத்தைச் சம்பாதித்தல் ஆகிய இவைகளுள்ளவனும் விருப்பற்றவனும் இருப்பான்.

சு. 17. கன்னியின் இரண்டாம் திரேக்காணத்தில் ஜனித்தவன் தீரம் அன்னிய தேசவாசம் சிற்பம் கதைகள் யுத்தம் இவைகளில் சாமர்த்தியமுடையவனும், அதிக கெடுதலாகப் பேசுதலும் அங்கீகாரமான வசனமும் வனவாசிகளுக்கு விருப்பமுமுள்ளவனும் இருப்பான்.

சு. 18. கன்னியின் மூன்றாம் திரேக்காணத்தில் ஜனித்தவன் சங்கீதம், பிறர் திரவியம், சங்கீதப் பிரியம், அரசனின் சினேகம், உயரமில்லாத சரீரம், அற்பமான வேஷம், விஸ்தாரமான கண்கள் வலிதான சிரசு ஆகிய இவைகளை யுடையவனும் இருப்பான்.

சு. 19. துலாத்தின் முதல் திரேக்காணத்தில் ஜனித்தவன் மன்மதனுக்குச் சமத்துவமான சரீரம், சாமர்த்தியம், வழி நடத்தல், கலாவித்தைகளிலும் வியாபாரத்திலும் நிபுணத்துவம், கட்டளையில் தீரம், தாரணபுத்தி ஆகிய இவைகளையுடையவனும் இருப்பான்.

சு. 20. துலாத்தின் இரண்டாம் திரேக்காணத்தில் ஜனித்தவன் அரவிந்த மலரின் இதழ்போன்ற விசாலமான கண்கள், நல்ல சொரூபம், சாகசமாகப் பேசுந்தன்மை, அலங்கார ரஹிதம், பிரசித்தம்,

தனது வம்சத்தில் வர்த்திக்கப்படுதல் ஆகிய இவைகளும், விருத்தர்களான அநுசரணர் (வேலைக்காரர்கள்) களோடு சேர்க்கையும் ஆகிய இவையுள்ளவனாய் இருப்பான்.

சு. 21. துலாத்தின் மூன்றும் திரேக்காணத்தில் ஜனித்தவன் சபலமும் துஷ்டத்தன்மையும் உள்ளவன். நன்றியில்லாதவன். அவலட்சணமும் வளைந்தும் குறைவுள்ளதுமான சரீரமுள்ளவன். பந்துக்களும் தனமும் யஜசும் இல்லாதவன். அற்பபுத்தியுள்ளவனாவனென்க.

சு. 22. விருச்சிகத்தின் முதல் திரேக்காணத்தில் ஜனித்தவன் வெண்மைநிறம், பெருத்து உயர்ந்த சரீரம், விசாலமடைந்த கண்கள், நிலைமை, (ஸ்திரம்) அதிக குரூரம், யுத்தம், கலகம், ஆகிய இவைகளில் சாமார்த்தியமும் பிரியமும் உள்ளவனாய் இருப்பான்.

சு. 23. விருச்சிகத்தின் இரண்டாம் திரேக்காணத்தில் ஜனித்தவன் சுகமான பட்சணம் பானம் இவைகளில் இச்சையுடையவன். கலங்கின கண்களும், பொன்னிறம் போன்ற அழகான சரீரமும் உள்ளவன். பிறர் பொருள்களை அபகரிப்பவன். நல்ல சுபாவம் கலாவித்தைகளுள்ளவன் ஆவனென்க.

சு. 24. விருச்சிகத்தின் மூன்றும் திரேக்காணத்தில் ஜனித்தவன் மீசையும் ரோமங்களு மில்லாதவன். இமிசை செய்பவன். பிங்களவர்ண முடைய கண்களையுடையவன். பெரும் வயிறுள்ளவன். வில்லாளி. சகோதரர்களை விட்டு விலகியவன். பெருத்த கைகளுடையவன். அதிக தீரமான நெஞ்சுடையவனாவன் என்க.

சு. 25. தநுசின் முதல் திரேக்காணத்தில் ஜனித்தவன் வட்டமான கண்களும் முகமும் உள்ளவன். சங்கத்திற்கு முக்கியன். தன்னால் புஷ்டியடையப்பட்ட நன்னடக்கையுடையவன். மிருதுத்துவமுடையவனாவனென்க.

சு. 26. தநுசின் இரண்டாம் திரேக்காணத்தில் ஜனித்தவன் சாஸ்திரார்த்தங்களை அறிந்தவன். நன்கு பேசுகின்றவன். அதிக யாகங்களைச் (புண்ணிய கர்மங்களை) செய்கின்றவன். மந்திரவித்தைகளில் சிரேஷ்டமானவன். அநேக புண்ணிய தீர்த்தங்களிலும் க்ஷேத்திரங்களிலும் ஸ்நாநதர்சனம் முதலிய கர்மங்களைச் செய்கின்றவனாவனென்க.

சு. 27. தநுசின் மூன்ரும் திரேக்காணத்தில் ஜனித்தவன் பந்துக்களில் முக்கியன். சமர்த்தன், சத்ஜனங்களுக்கு ஆசிரயன். தர்மங்களை அநுஷ்டிக்கின்றவன். காமமுள்ளவன். பரஸ்திரீ பிரியன். சௌந்தர்யத்திற்கும் யஜசிற்கும் இருப்பிடமானவன். ஜயிக்கும் சக்தியுள்ளவனுவ னென்க.

சு. 28. மகரத்தின் முதல் திரேக்காணத்தில் ஜனித்தவன் நீண்டகைகள், கருமைநிறம், நல்ல கீர்த்தி, அழகு, காந்தி, ஆகிய இவைகள் உள்ளவன். புன்சிரிப்போடு பேசுந்தன்மையுள்ளவன். ஸ்திரீஜிதன். மனோஹரமான வியாபாரம் தனம் ஆகிய இவைகளோடு கூடினவன் ஆவனென்க.

சு. 29. மகரத்தின் இரண்டாம் திரேக்காணத்தில் ஜனித்தவன் சிறியமுகம் நிலையின்மை ஆகிப இவையுள்ளவன். பரஸ்திரீகளையும் பரதனத்தையும் அபகரிப்பதில் சமர்த்தன். சத்ஜனங்களுக்கு உதவி செய்பவன். தானசீலம் அழகற்றகால் இவைகளுள்ளவன் ஆவன் என்க.

சு. 30. மகரத்தின் மூன்ரும் திரேக்காணத்தில் ஜனித்தவன் நிந்தியமாகப் பேசுபவன் அழுக்குற்று மெலிந்து நீண்ட சரீரமுடையவன். பிதாவை விட்டுப் பிரிந்தவன். பிரதேச சஞ்சாரத்திஞல் துன்பங்களையநுபவிக்கின்றவன் ஆவனென்க.

சு. 31. கும்பத்தின் முதல் திரேக்காணத்தில் ஜனித்தவன் மனைவி மானம் யஜசு ஐசுவரியம் முதலியன உள்ளவன். குலசிரேஷ்டன். நீண்ட அங்கமும் கர்மங்களில் நிலைமையும் உள்ளவன். தனவான். அரசசேவகனுவன் என்க.

சு. 32. கும்பத்தின் இரண்டாம் திரேக்காணத்தில் ஜனித்தவன் சாமர்த்தியமும் மாதுர்யமும் உள்ளவன். வெண்மை நிறமும் பிங்களநிறமும் உள்ள குரூரமான கண்களை யுடையவன். ஹாஸ்யரசமுள்ளவன். தனமுள்ளவன். பெருத்த சப்தத்தில் சந்தோஷ கரமாகச் சிரித்துப் பேசுகின்றவன். புத்திமான். நிரம்ப பந்துக்களுள்ளவன். பேராசைக்குண முடையவனுவனென்க.

சு. 33. கும்பத்தின் மூன்ரும் திரேக்காணத்தில் ஜனித்தவன் உயர்ந்த சரீரம் துஷ்டத்தனம் மேன்மை மெலிவு சிறியகைகள் ஆகிய

இவைகளுள்ளவன். *ஸ்தப்தன் புத்திரர் பொருள் அதிகமான பொய் உள்விஷமம் திறந்திருக்கின்ற கண்கள் † ரதிசாஸ்திர ஆராய்ச்சி ஆகிய இவைகளுள்ளவனுவனென்க.

சு. 34. மீனத்தின் முதல் திரேக்காணத்தில் ஜனித்தவன் தேன்போன்ற பிங்களவர்ணமுள்ள கண்களும், வெண்மை நிறமும் உள்ளவன். மேதாவித்தன முள்ளவன். நல்ல கர்மங்களிலும் இன்பத்திலும் நல்லபழக்கத்திலும் சுசத்திலும் ஜலமார்க்கத்தில் சஞ்சரித்தலிலும் பிரியமுள்ளவன். விநயம் குணம் உள்ளவனுவனென்க.

சு. 35. மீனத்தின் இரண்டாம் திரேக்காணத்தில் ஜனித்தவன் மனைவியை உபசரிப்பதில் சமர்த்தன். சுகபோஜனத்தில் பிரியமுள்ளவன். பிறர் திரவியத்தை அடைகின்றவன். காமமுள்ளவன். ஸ்திரீகளிடத்திலும் சத்ஜனங்களினிடத்திலும் அதிக இஷ்டமுள்ளவன். பேசுந் திறமையுடையவனுவ னென்க.

சு. 36. மீனத்தின் மூன்றும் திரேக்காணத்தில் ஜனித்தவன் கறுப்பு நிறமுள்ளவன். கலா வித்தைகளில் சமர்த்தன். நிரம்ப தானங்களும் பந்து ஜனங்கட்குத் திரவியமும் கொடுத்துபகரிக்கும் சீலன். சுபமான அன்னபானங்களிலும் ஹாஸ்யத்திலும் பிரியமுள்ளவனுவனென்க.

சு. 37. இவ்விதம் மேடாதி பன்னிரண்டு ராசிகளுடைய திரேக்காண பலன்கள் இவ்விடத்தில் விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டன. திரேக்காணத்திற்கும் திரேக்காணுதிபனுக்கும் பலம் ஏற்பட்டு திரேக்காண நாதனுடைய திருஷ்டியும் ஏற்படின் மேற்சொன்ன பலன்களெல்லாம் பூர்ணமாக உண்டாகு மென்ப.

**நாற்பத்தோன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.**

---

* ஸ்தப்தன் = அசைவற்ற, தடுக்கப்பட்ட, உறுதியான, பிடிவாதமுள்ள, உணர்ச்சியற்ற என்பது பொருள்.

† ரதிசாஸ்திரம் = காமசாஸ்திரம்.

# ஐம்பதாவது அத்தியாயம்.

## நவாம்ச பலம்.

சு. 1. இந்த அத்தியாயத்தில் மேஷாதி ராசிகளின் நவாம்ச பலன்கள் மிகத் தெளிவாய்ச் சொல்லப்படுகின்றன. இவற்றால் நிறம் ஆகிருதி சுபாவம் லட்சணம் முதலிய பலன்களை அறிய வேண்டும். சந்திர நவாம்சத்தினாலும் இவை போன்ற பலன்களை நிரூபணம் செய்ய வேண்டும். அம்சாதிபன் பலவானாய் இருப்பின் பலன்களும் பூர்ணமா யிருக்கும். அவற்றை இராசிக் கிரமமாய் விவரிப்போம்.

சு. 2. மேடத்தில் முதல் நவாம்சத்தில் ஜனித்தவன் ஆட்டின் முகம் போன்ற முகமுடையவனும், சிறிய மூக்கும் கைகளும் உடையவனும், குரூரமான சப்தமும் கொஞ்சம் ஆழமாயிருக்கும் கண்களும் உடையவனும், மெலிந்தவனும், சேதப்படாத அங்கமுடையவனும் இருப்பான்.

சு. 3. மேடத்தின் இரண்டாம் நவாம்சத்தில் ஜனித்தவன் கறுத்த வர்ணமும் பெரிதான (பளுவான) கைகளும் தோளும் உடையவனும், சிறிய நெற்றியும் சுபமான கழுத்தெலும்பும் விழித்திருக்கின்ற கண்களும் நீண்ட முகமும் மூக்கும் கனங்குறைந்த கால்களும் துர்ப்பலமான அவயவ சந்திகளும் மிருதுவான வாக்கும் உடையவனும் இருப்பான்.

சு. 4. மேடத்தின் மூன்றாம் நவாம்சத்தில் ஜனித்தவன் அழிந்த (மறைந்த) கேசமும், வெண்மை நிறமும், சமமல்லாத கைகளும், அழகான கண்களும் மூக்கும், வாக்கு சாமர்த்தியமும், சிறிய தொடைகளும், முழங்கால்களும் கணுக்கால்களும் உடையவனும் இருப்பான்.

சு. 5. மேடத்தின் நான்காம் நவாம்சத்தில் ஜனித்தவன் அங்குமிங்கும் நோக்கின்றவனும், மிகவும் குரூரனும், சிறிய மூக்குள்ளவனும், சஞ்சாரமுள்ளவனும், கடினமான பாத ரோமங்கள் உள்ளவனும், துர்ப்பலமுடையவனும், துணைவரில்லாதவனும் இருப்பான்.

சு. 6. மேடத்தின் ஐந்தாம் நவாம்சத்தில் ஜனித்தவன் கர்வமும் யானையின் கண்கள்போன்ற கண்களும் தடித்த மூக்கும் கெட்டியான புருவமும் பரந்த நெற்றியும் உள்ளவனும், சரீரத்தின் மேல் பாகம் தடித்து புஷ்டியா யிருக்கின்றவனும், அதிக கடினமான ரோமங்களுள்ள கால்களும் கொஞ்ச ரோமங்களுள்ள சிரசும் உள்ளவனும் இருப்பான்.

சு. 7. மேடத்தின் ஆறும் நவாம்சத்தில் ஜனித்தவன் கறுப்பு நிறமும் மிருதுவானதும் யானையைப் போன்றதுமான கண்கள் உள்ளவனும், சிறத்த இடுப்பு (குண்டி) களும் கடினமான பாதங்களும் சமமில்லாத வயிறும் கைகளும் தோளும் உள்ளவனும், தைரியமில்லாதவனும், அதிகமாய்ப் பேசுகின்றவனும், மகத்துவ முள்ளவனும் இருப்பான்.

சு. 8. மேடத்தின் ஏழாம் நவாம்சத்தில் ஜனித்தவன் அருகம் புல்லின் நிறமுடையவனும், நிலையின்மை யுடையவனும், வெண்மை நிறமான கண்களையும் தடித்து விரிந்த சரீரத்தையும் கற்பில்லாத மனையாளையும் கொலைத் தொழிலையும் உடையவனும் இருப்பான்.

சு. 9. மேடத்தின் எட்டாம் நவாம்சத்தில் ஜனித்தவன் வானரத்தின் முகத்தை யொத்த முகமும், நிரம்ப வாக்கு சாமர்த்தியமும், கொடூரமும், பிங்களவர்ணமுள்ள அங்கமும், அர்ச்சஸ் பகந்தரம் முதலான குஹ்யவியாதியும், கபடம் பொய் இச்சை வதம் இவைகளிற் பிரீதியும், பந்துக்களினிடம் பிரியமும், குரூரத்தன்மையுமுடையவனும் இருப்பான்.

சு. 10. மேடத்தின் ஒன்பதாம் நவாம்சத்தில் ஜனித்தவன் மெலிந்து உயர்ந்த அங்கமும் (சரீரம்) சமமில்லாத நெற்றியும் காதுகளும் உள்ளவனும், கிரீடையில் பிரியமும் துஷ்டத்தனமும் உள்ளவனும், அதிகமாய்ப் பேசுபவனும் இருப்பான்.

சு. 11. இடபத்தின் முதல் நவாம்சத்தில் ஜனித்தவன் கறுப்பும் சமமுமான சரீரமும் உணர்ச்சியின்மையும் உடையவனும், அபரக்கிரியையை கிரமமாகச்செய்யாதவனும், நீசத்துவமுடையவனும், சுபாவத்திற்கு விரோதமான நடவடிக்கையோடு கூடினவனும், ஒற்றைக்கண்ணால் பார்க்கின்றவனும் இருப்பான்.

சு. 12. இடபத்தின் இரண்டாம் நவாம்சத்தில் ஜனித்தவன் ஆழமான கண்களும் சோம்பலான சுபாவமும் அற்பமான புத்தியும்

தாழ்ந்திருக்கின்ற தலையும் முகமும் உடையவனும், பிரதிகூலமான கர்மத்தைச் செய்கின்றவனும், அர்த்தமில்லாது அதிகமாய்ப் பேசுகின்றவனும் இருப்பான்.

சு. 13. இடபத்தின் மூன்றும் நவாம்சத்தில் ஜனித்தவன் மிருதுவும் தடிப்பும் உள்ள அழகிய சரீரமும், அழகான மூக்கும், சுத்தமானதும் நீளமாயிருக்கின்றதுமான கண்களும், பெரிய அங்கமும், யாகாதி புண்ணிய கர்மங்களில் பிரியமும், ஸ்திரமான குதிக்கால்களும் கைகளும் உடையவனுய் இருப்பான்.

சு. 14. இடபத்தின் நான்காம் நவாம்சத்தில் ஜனித்தவன் சிறிய வயிறும், ஆட்டின் கண்போன்ற கண்களும், பிங்கள நிறமும் தரித்திரமும், அதிக கோபமும், அன்னிய திரவியங்களை அபகரித்தலும் உடையவனுய் இருப்பான்.

சு. 15. இடபத்தின் ஐந்தாம் நவாம்சத்தில் ஜனித்தவன் உயர்ந்திருக்கின்ற மூக்கும், விருஷபத்தின் முகம்போன்ற முகமும், கார் முகிலையொத்த சிரோரோமமும், நீளமான கைகளும், பலமுள்ள தோளும், விஸ்தாரமான இடுப்பும், வெண்மை நிறமும், விலாசத்தன்மையும், துஷ்டத்தனமும் உடையவனுய் இருப்பான்.

சு 16. இடபத்தின் ஆறும் நவாம்சத்தில் ஜனித்தவன் நல்ல கண்களும், நிலையும், அழகான கறுத்த சிரோரோமமும், பிரகாசமான சரீரமும், அழகான வார்த்தையும், நல்ல அறிவும், அழகும், ஹாஸ்யமும், மெலிவும் உடையவனுய் இருப்பான்.

சு. 17. இடபத்தின் ஏழாம் நவாம்சத்தில் ஜனித்தவன் சிறந்த புத்திரனிடத்திலும் மனைவியிடத்திலும் அதிக பிரியமும், கொஞ்சம் தொங்கிய மூக்கின் நுனியும், நீண்ட கடைக்கண்ணும், பலமுள்ள அங்கமும், ஸ்வஜனங்களைத் துவேஷிக்கும் தன்மையும், கனமுள்ள காலும், மிருதுவான தலை மயிரும் உடையவனுய் இருப்பான்.

சு. 18. இடபத்தின் எட்டாம் நவாம்சத்தில் ஜனித்தவன் புலியின் கண்களையொத்த கண்களையும், அழகுவாய்ந்த பற்களையும், மலர்ந்திருக்கின்ற மூக்கையும், கறுத்து நீண்டு சுருண்டிருக்கின்ற தலை மயிரையும், பயங்கரமான நகங்களையும் உடையவனும், ஜபிக்கப்படாதவனும், வாசாலனுகயும், அற்பப் பிரவிருத்திகளைச் செய்பவனும் இருப்பான்.

சு. 19. இடபத்தின் ஒன்பதாம் நவாம்சத்தில் ஜனித்தவன் மரியாதையுள்ளவனும், அற்ப சத்தியமுள்ளவனும், தைரியமில்லாதவனும், ஒரே தன்மையான கோபமும், மனோகரமான சரீரமும் துர்க்குணமும் உடையவனும், தனம் சம்பாதிப்பவனும், பிரசித்தியுள்ளவனும், சரீரத்தின் கீழ்ப்பாகம் மெலிவுள்ளவனும், அர்த்தமில்லாமல் பேசுபவனும் இருப்பான்.

சு. 20. மிதுனத்தின் முதல் நவாம்சத்தில் ஜனித்தவன் தோளிலும் கைகளிலும் நிரம்ப ரோமங்களும், திடமும், கறுப்புமுள்ள கடைக்கண்களும், நீண்டிருக்கின்ற கைகளும், அறுகம்புல் போன்ற கறுத்த நிறமுடைய சரீரமும், மெலிந்த கை கால்களும் உடையவனுமாய் இருப்பான்.

சு. 21. மிதுனத்தின் இரண்டாம் நவாம்சத்தில் ஜனித்தவன் குடம் போன்ற சிரசும் மத்தியில் அமுங்கியிருக்கின்ற மூக்கும் உடையவனும், சுத்த மில்லாத கர்மங்களைச் செய்கின்றவனும், இம்சையில் பிரியமுள்ளவனும், அதிகமாய்ப் பேசுகின்றவனும், கலகத்திற்கு நாதனும்,பல சேஷ்டைகளுடையவனும் இருப்பான்.

சு. 22. மிதுனத்தின் மூன்றும் நவாம்சத்தில் ஜனித்தவன் வெண்மைநிறமும் மிகவும் சிவப்பான கண்களும் அழகு பொருந்திய மூக்கும் நல்ல சமமான தேகமும் உடையவனும், மிகவும் புத்தி சாமர்த்தியமுள்ளவனும், நீண்டிருக்கின்ற முகமும்,கறுத்திருக்கின்ற புருவமும், நல்ல வாக்கு சாமர்த்தியமும் உடையவனும் இருப்பான்.

சு. 23. மிதுனத்தின் நான்காம் நவாம்சத்தில் ஜனித்தவன் அழகுவாய்ந்த புருவமும், இலட்சணமான நெற்றியும், நீலோத்பலத்தின் நிறம் போன்ற சரீரமும், பரந்தமார்பும், வெண்மையான பற்களும், மிருதுவான முகமும், அழகு பொருந்திய நிரம்பின ரோமங்களும், காமசீலமும் உடையவனும் இருப்பான்.

சு. 24. மிதுனத்தின் ஐந்தாம் நவாம்சத்தில் ஜனித்தவன் அகலமான முகமும், புஷ்டியுள்ள தலையும், வலுவான இடுப்பும், விரிந்த மார்பும், கனத்து நீண்ட கைகளும், வெளுப்புள்ள கண்களும், அநுகூலமும், கபடமும் உடையவனும் இருப்பான்.

சு. 25. மிதுனத்தின் ஆறும் நவாம்சத்தில் ஜனித்தவன் தேன் நிறம்போன்ற கண்களும், சமமில்லாத நெற்றியும், சமமான

நல்ல சரீரமும், துர்க்குணமும், துஷ்டத்தனமும், சிவப்பான உதடும் பற்களும், அர்த்தமில்லாது பேசுதலும் உடையவனாய் இருப்பான்.

சு. 26. மிதுனத்தின் ஏழாம் நவாம்சத்தில் ஜனித்தவன் உயர்ந்து தாமிர நிறம்போன்ற கண்களும், தேகமும் விரிந்த மார்பும் ஹாஸ்ய சீலமும், சிட்சையிலும் சிற்பத்திலும் சாமர்த்தியமும் உடையவனாய் இருப்பான்.

சு. 27. மிதுனத்தின் எட்டாம் நவாம்சத்தில் ஜனித்தவன் கறுப்புவர்ணமுள்ள சரீரமும், மகத்துவமும், மனோகுணமும், அழகும் மதுரமான சம்சாரமும், சமமில்லாமல் தடித்திருக்கின்ற தேகமும், கறுத்து நீண்டிருக்கின்ற கண்களும், கலாவித்தைகளில் ஞானமும் உடையவனாய் இருப்பான்.

சு. 28. மிதுனத்தின் ஒன்பதாம் நவாம்சத்தில் ஜனித்தவன் விருத்தாகாரமான கறுத்த கண்களும், நல்ல சரீரமும், அபிப்பிராய சாத்தியமும், புத்திவன்மையும், கிரமங்களை யறியும் அறிவும், சிற்ப சாஸ்திரங்களிலும் காவியங்களிலும் பழக்கமும், காம கேளீ விலாசமும் உடையவனாய் இருப்பான்.

சு. 29. கடகத்தின் முதல் நவாம்சத்தில் ஜனித்தவன் நிர்மலமும் மனோகரமும் நல்ல வெண்மைநிறமும் உடையவனாயும், கறுத்துச் சுருண்ட தலைமயிர்களையும் விசாலமான வயிற்றையும் பிரகாசமுள்ள முகத்தையும் உயர்ந்த கண்களையும் சிறிய அவயவங்களையும் நீளமில்லாத கைகளையும் உடையவனாயும் இருப்பான்.

சு. 30. கடகத்தின் இரண்டாம் நவாம்சத்தில் ஜனித்தவன் இரத்த நிறமுள்ள சரீரமும், யுத்தபராக்கிரமமும, கலாவித்தைகளில் பிரியமும், பூனைபோன்ற முகமும் கண்களும், தியாகத்தன்மையும், சிறியகால் மூட்டுகளும், கனமும் பலமு மில்லாத கணுக்கால்களும் உடையவனாய் இருப்பான்.

சு. 31. கடகத்தின் மூன்றாம் நவாம்சத்தில் ஜனித்தவன் வெண்மையான வர்ணமும், நல்ல கண்களும், வாக்கு சாமர்த்தியமும், அழகும், தடித்த ஸ்திரீகளின் அங்கம்போன்ற அங்கங்களும், வித்வத்துவமும், அற்பகாரியங்களில் மாத்திரம் பிரீதியும், சோம்பலும் உடையவனாய் இருப்பான்.

சு. 32. கடகத்தின் நான்காம் நவாம்சத்தில் ஜனித்தவன் கறுத்து வளைந்த புருவமும், விலாசத்தை யுடையதாய் தடித்து நீண்

டுள்ள ஆகிருதியும், அழகுள்ள கண்களும் மூக்குகளும், க்ஷீணமும், பெருந்தன்மையும், ஸ்வஜாதிகாரியங்களில் உத்சாகமும் உடையவனுய் இருப்பான்.

சு. 33. கடகத்தின் ஐந்தாம் நவாம்சத்தில் ஜனித்தவன் மணி போன்ற தலையும், தாழ்ந்த முகமும், மிகவும் கனத்த புருவமும், மிகவும் நீண்ட கைகளும், பிறர்களைச் சேவிக்கின்றதில் பிரியமும், கர்மலோபமும், யாவருக்கும் வசப்படாத சுபாவமும், அற்பபுத்தியும் உடையவனுய் இருப்பான்.

சு. 34. கடகத்தின் ஆறும் நவாம்சத்தில் ஜனித்தவன் தடித்து நீண்ட சரீரமும், நல்ல கண்களும், அதிகமான பிரதாபமும், வெண்மையான சரீரமும், நல்ல பற்களும், அழகுபொருந்திய மூக்கும், வாக்குசாமர்த்தியமும் உடையவனுய் இருப்பான்.

சு. 35. கடகத்தின் ஏழாம் நவாம்சத்தில் ஜனித்தவன் வேறுபட்ட தலைமயிரும் ரோமங்களும் உடையவனுயும், தடித்த சரீரமும் அதிக நரம்புகள் பொருந்தியிருக்கின்ற கணுக்கால்களும் உள்ளவனுயும், அன்னியர்களுடைய கிருகத்தைக் காப்பாற்றுபவனுயும், காக்கையின் ஆகிருதிபோன்ற ஆகிருதியுள்ளவனுயும் இருப்பான்.

சு. 36. கடகத்தின் எட்டாம் நவாம்சத்தில் ஜனித்தவன் மணிபோன்ற தலையும், நல்ல முகமும், கைகளும், அங்கங்களும், ஆமையைப் போன்ற நடத்தையும், மத்தியில் அமுங்கியிருக்கின்ற மூக்கும், கறுத்த நிறமும், கெட்ட சிற்பங்களில் பழக்கமும் உடையவனுய் இருப்பான்.

சு. 37. கடகத்தின் ஒன்பதாம் நவாம்சத்தில் ஜனித்தவன் வெண்மை நிறமும், மீன்போன்ற கண்களும், சிரேஷ்டமும், சிறிய வயிறும், தடித்துப் பரந்திருக்கின்ற மார்பும், நீண்டிருக்கின்ற மேல்வாயும், தொங்கின உதடும், தடித்த தொடைகளும், சிறிய கணுக்கால்களும், அற்பமான முழங்கால்களும் உடையவனுய் இருப்பான்.

சு. 38. சிம்மத்தின் முதல் நவாம்சத்தில் ஜனித்தவன் சிறிய வயிறும், குரூர சுபாவமும், மூக்கின் நுனியில் சிகப்பும், வலிதான சிரசும், சூரத்துவமும், அதிக மாம்சங்களுடையதாய் உயர்ந்திருக்கின்ற மார்பும் உடையவனுய் இருப்பான்.

சு. 39. சிம்மத்தின் இரண்டாம் நவாம்சத்தில் ஜனித்தவன் விசாலமாய் உயர்ந்திருக்கின்ற நெற்றியும், தடித்த சரீரமும், விபரீத

மான கீழ்ப்பார்வையும், நீண்டகைகளும், உயர்ந்த மார்பும், குரூரமும் தடித்ததுமான மூக்கும் உடையவனும் இருப்பான்.

சு. 40. சிம்மத்தின் மூன்றும் நவாம்சத்தில் ஜனித்தவன் ரோம முள்ள நீண்டகைகளும், சகோரம் போன்ற கண்களும், நிலையின்மை யும், பெருந்தன்மையும், உயரமான மூக்கும், பிரகாசமான தேக மும் கைகளும், உருண்ட கழுத்தும் உடையவனும் இருப்பான்.

சு. 41. சிம்மத்தின் நான்காம் நவாம்சத்தில் ஜனித்தவன் நெய் தயிர் ஜலம் இவைகளைப்போன்ற வெண்மை நிறமான தேகமும், கறுத்து நீண்ட கண்களும், கனமில்லாத தலைமயிர்களும், தடித்த கைகால்களும், இரட்டைக் குரலும் உடையவனும் இருப்பான்.

சு. 42. சிம்மத்தின் ஐந்தாம் நவாம்சத்தில் ஜனித்தவன் மணி போன்ற சிரசும், அற்ப கேசமும், வெண்மையான மூக்கும் கண் ணும், மயிர் நிறைந்த சரீரமும், தொங்கின வயிறும், அதிக கொடு மையும், நீண்டபற்களும், தடித்த மார்பும் உடையவனும் இருப்பான்.

சு. 43. சிம்மத்தின் ஆறும் நவாம்சத்தில் ஜனித்தவன் உதிர்ந்து கொஞ்சமாக இருக்கின்ற ரோமங்களும், மினுமினுப்பும் கறுப்பும் சமமுமுள்ள கண்களும், நீண்ட தேகமும், கறுப்பு நிறமும், ஸ்திரீக ளுக்குப் பிரியமும், வாக்கு சாமர்த்தியமும் உடையவனும் இருப்பான்.

சு. 44. சிம்மத்தின் ஏழாம் நவாம்சத்தில் ஜனித்தவன் நீண்ட முகமும், உயர்ந்திருக்கின்ற சிறு நரம்புகளும், தடித்த தேகமும், ஸ்திரீகளுக் கிஷ்ட மின்மையும், கறுத்த நிறமும், அதிக கோபமும், அதிக ரோமமும், திருட்டுத்தனமும், கோபமுள்ள வார்த்தைகளும் உடையவனும் இருப்பான்.

சு. 45. சிம்மத்தின் எட்டாம் நவாம்சத்தில் ஜனித்தவன் மேன் மையான வார்த்தையும், பலமுள்ள அவயவங்களும், சௌபாக்கிய மும், ஆழமான கண்களும், கர்ம விபரீதமும், தனஹீனமும், திருட் டுத்தனமும், பொய்யும், கபடமும், ஜலாதிகூட வித்தைகளும் உடைய வனும் இருப்பான்.

சு. 46. சிம்மத்தின் ஒன்பதாம் நவாம்சத்தில் ஜனித்தவன் கழுதையைப்போன்ற முகமும், கறுத்த நிறமுள்ள கண்களும், நீண்ட கைகளும், நல்ல குதிக்கால் கணுக்கால்களும், சுவாச ரோகத்தினால் பீடிக்கப்பட்ட ஹிருதயமும் உடையவனும் இருப்பான்.

சு. 47. கன்னியின் முதல் நவாம்சத்தில் ஜனித்தவன் மானின் கண் போன்ற கண்களும், வசன சாதுரியமும், தானசீலமும், சம்போகமும், தனமும் கறுத்து நீண்ட தேகமும், உபாமான மார்பும் உடையவனும் இருப்பான்.

சு. 48. கன்னியின் இரண்டாம் நவாம்சத்தில் ஜனித்தவன் பூர்ணமான முகமும், அழகிய கண்களும், மினுமினுப்பும், மிருதுவாகப் பேசும் சுபாவமும், தொங்கிய வயிறும், நிலையின்மையும், தடித்த தொடைகளும் உடையவனும் இருப்பான்.

சு. 49. கன்னியின் மூன்றும் நவாம்சத்தில் ஜனித்தவன் பிரகாசம் பொருந்திய மூக்கும், விளங்காத தன்மையும், சிறந்த பாதமும், தடித்த அஸ்தமும், வணக்கமான வார்த்தையும், வெண்மை நிறமும், கன்னிகைகளிடத்தில் சிநேகமும் உடையவனும் இருப்பான்.

சு. 50. கன்னியின் நான்காம் நவாம்சத்தில் ஜனித்தவன் சாஸ்திர ஞான முள்ளவனும், ஸ்திரீகளோடு விளையாடுகின்றவனும், வெண்மையும் சிவப்பும் கலந்துள்ள நிறம் மதுரம் கோமளம் இவைகளோடு கூடினவனும், குரூர சுபாவமும் அதிக உணர்ச்சியும் உடையவனும், திரேகத்தின் கீழ்பாகம் மெலிந்திருப்பவனும், இரட்டைத் தலையனும் இருப்பான்.

சு. 51. கன்னியின் ஐந்தாம் நவாம்சத்தில் ஜனித்தவன் தடித்த உதடும் கைகளும் உள்ள திரேகத்தையும், கனமுள்ள தலை மயிரையும், பலமான தோளையும், அகன்ற மார்பையும், பலமுள்ள கணுக்கால்களையும், பிறரைத் தழுவுதலையும் உடையவனும் இருப்பான்.

சு. 52. கன்னியின் ஆறும் நவாம்சத்தில் ஜனித்தவன் பளபளப்பான காந்தியும், சுபமான வார்த்தையும், புகழத்தக்க சரீரமும், சாஸ்திராப் பியாசத்தினுல் பேசும் புத்திவன்மையும், எழுத்து கணிதம் அட்சரம் சித்திரம் கலாவித்தை இவைகளின் அறிவும், நல்ல மனஸ்திதியும், விளையாடுதலில் பழக்கமும் உடையவனும் இருப்பான்.

சு. 53. கன்னியின் ஏழாம் நவாம்சத்தில் ஜனித்தவன் சிறிய முகமும், உயர்ந்த தோள்களும், பிரகாசமுள்ள கைகளும், பிற்காலத்தில் தலை நரைத்தலும், பெரு வயிறும், தடித்த கால்களும், ஜலத்திற்குப் பயமும் உடையவனும் இருப்பான்.

சு. 54. கன்னியின் எட்டாம் நவாம்சத்தில் ஜனித்தவன் வெண்மையாய் உயர்ந்திருக்கின்ற சரீரமும், ஆச்சரியகரமும், உயர்ந்த

கண்களும், பெருத்து நீண்ட கைகளும், சிவந்த ரோமங்களும், அதிக கொடுமையும், அபிமானமும் உடையவனுய் இருப்பான்.

சு. 55. கன்னியின் ஒன்பதாம் நவாம்சத்தில் ஜனித்தவன் பிரசித்தியும், மிருதுத்துவமும், சுகமுள்ள சரீரமும், விஸ்தாரமான நேத்திரமும், ஸ்திரீகளைப் போன்ற மனோபாவமும், சாதுர்யமும், தாழ்ந்திருக்கின்ற தோள்களும், எழுத்து சித்திரம் முதலியவைகளில் பாண்டித்தியமும் உடையவனுய் இருப்பான்.

சு. 56. துலாத்தின் முதல் நவாம்சத்தில் ஜனித்தவன் வெண்மை நிறமும், விஸ்தாரமான கண்களும், நீண்ட முகமும் உடையவனுயும், புகழ்ந்து பேசுகின்றவனுயும், தனத்தைக் காப்பாற்றுகின்றவனுயும், புதிய * சம்மான வியாபாரம் செய்கின்றவனுயும், அதிக பிரசித்தியுடையவனுயும் இருப்பான்.

சு. 57. துலாத்தின் இரண்டாம் நவாம்சத்தில் ஜனித்தவன் விருத்தமாய் நீரொழுகும் கண்களும், நிறமும் அழகில்லாத பற்களும், அமுங்கி மறைந்திருக்கின்ற மத்தியப் பிரதேசமும், ஆச்சரியமான மனதும், கெட்ட தேகமும், பெருத்து வளைந்திருக்கின்ற புருவமும் ஆகிய இவைகளை உடையவனுய் இருப்பான்.

சு. 58. துலாத்தின் மூன்றும் நவாம்சத்தில் ஜனித்தவன் வெண்மை நிறமும், குதிரையைப் போன்ற முகமும், நல்ல பற்களும், அகலமும் உயரமுமுள்ள கண்களும், மெலிந்த தேகமும், நீண்ட நகங்களும், மூக்கும், அழகிய பாதங்களும், யஜசும் அதிக பிரசித்தியும் உடையவனுய் இருப்பான்.

சு. 59. துலாத்தின் நான்காம் நவாம்சத்தில் ஜனித்தவன் சிறிய தோளும் கைகளும், தீரமின்மையும், உயர்ந்திருக்கின்ற பற்களும், மெலிந்து உயரமில்லாத திரேகமும், மான் போன்ற கண்களும், அதிக துக்கமும், கறுப்பு வர்ணமும், தோஷ சுபாவமும் உடையவனுய் இருப்பான்.

சு. 60. துலாத்தின் ஐந்தாம் நவாம்சத்தில் ஜனித்தவன் ஆழமானகண்களும், ஸ்திரப்பிரகிருதியும், பந்துக்களினிடத்தில் பிரியமும், மானமின்மையும், குரூரமான கேசங்களும், சமமான கண்களும் மத்தியில் தாழ்ந்திருக்கின்ற மூக்கும் உடையவனுய் இருப்பான்.

சு. 61. துலாத்தின் ஆறும் நவாம்சத்தில் ஜனித்தவன் பெருத்து வெளுத்த தேகமும், விசாலமுள்ள கண்களும், சோபனமான மூக்கும்,

* சிறு தோணி

அழகான முதுகெலும்பும், காந்தியுள்ள நகமும், அதிக நீதி ஞானமும், சாஸ்திர அறிவும் உடையவனுய் இருப்பான்.

சு. 62. துலாத்தின் ஏழாம் நவாம்சத்தில் ஜனித்தவன் சிவப்பும் கறுப்பும் கலந்த நிறமும், அதிக புத்தியும், கனமுள்ளதும் சிறுத்ததுமான தேகமும், சிறிய நெற்றியும், கிருபணத்துவமும், கொடிய குரூர சுபாவமும், துன்பமும் அல்லது கௌரவமும், நல்ல மனசும் உடையவனுய் இருப்பான்.

சு. 63. துலாத்தின் எட்டாம் நவாம்சத்தில் ஜனித்தவன் உன்னதமான தோள்களும், கன்னமும், போஜன சீலமும், கறுத்து நீண்ட புருவமும், பரிசுத்தமான வாக்கும், கடினமான தேகமும், விஸ்தாரமான மார்பும், பொருத்தமற்ற சிரசும், புகழும் உடையவனுய் இருப்பான்.

சு. 64. துலாத்தின் ஒன்பதாம் நவாம்சத்தில் ஜனித்தவன் சுபமான கண்களும், தெளிவு அல்லது சந்தோஷமும், வெண்மை நிறமும், மனோகரமான சமதேகமும், சாமர்த்தியமும் கலாவித்தைகளில் பிரியமும், பெருந்தன்மையும், ஹாஸ்யத்திற் பிரியமும், காமுகப் பிரகிருதியும் உடையவனுய் இருப்பான்.

சு. 65. விருச்சிகத்தின் முதல் நவாம்சத்தில் ஜனித்தவன் உன்னதமாயுள்ள சிறிய மூக்கும் உதடும், அழகுள்ள நெற்றியும், திடமான அவயவங்களும், வெளுத்த நிறமும், தவளையைப் போலுள்ள வயிறும், தம்மில் யோசிக்கின்ற சுபாவமும் உடையவனுய் இருப்பான்.

சு. 66. விருச்சிகத்தின் இரண்டாம் நவாம்சத்தில் ஜனித்தவன் வெண்மை நிறமும், பெருத்து நீண்டகைகளும், விசாலமான மார்பும், குரூரமாயும் சிவந்து மிருக்கின்ற திருஷ்டியும், அதிகபலமும், கொல்லுவதில் பழக்கமும், சாகச கர்மமும், திரவியத்தைக் காப்பாற்றுதலும் உடையவனுய் இருப்பான்.

சு. 67. விருச்சிகத்தின் மூன்றும் நவாம்சத்தில் ஜனித்தவன் வித்துவத்துவமும், உறுதியான தோள் கைகளும், முயற்சியினல் பணம் சம்பாதித்தலும், பரிசுத்தமான வார்த்தைகளும், வெளுத்த தேகமும், மனோஹரமான உதடும் உடையவனுய் இருப்பான்.

சு. 68. விருச்சிகத்தின் நான்காம் நவாம்சத்தில் ஜனித்தவன் பரஸ்திரீகளைத் துன்புறுத்தலும், இகழ்தலும், தீரமும், கறுத்து நீண்ட கேசமும் கண்களும், ஆட்ட நடனங்களில் பிரவிருத்தியும்,

திறமையும், தடித்த ரோமங்களும், உறுதியுள்ள தோள்களும் உடைய வனாய் இருப்பான்.

சு. 69. விருச்சிகத்தின் ஐந்தாம் நவாம்சத்தில் ஜனித்தவன் கம்பீரமும், சிவந்த கண்களும், பதுங்கின மூக்கும், தீரமும், வயிறு நிறைய உண்ணுதலும், குரூரமான பிரவிருத்தியும், சமமில்லாததும் பல முள்ளதுமான அங்கங்களும் யஜசும் உடையவனாய் இருப்பான்.

சு. 70. விருச்சிகத்தின் ஆறும் நவாம்சத்தில் ஜனித்தவன் இறுமாப்பும் அல்லது துணிவும், சிரேஷ்டமான புத்தியும், பின்பாகம் உயர்ந்திருக்கின்ற மூக்கும், அதிக சத்துவமும், (விகாரமில்லா மனஸ்திதி) அதிக நயமும், குரூரமான பிரவிருத்தியும், நிபுணத்துவமும் ஆகிய இவைகள் உள்ளவனாயும், குறைந்த கேசமும், அற்பமான தனமும், சிறிய புருவமும் உடையவனாயும் இருப்பான்.

சு. 71. விருச்சிகத்தின் ஏழாம் நவாம்சத்தில் ஜனித்தவன் வெட்டப்பட்ட வாயும், உறுதியான அவயவங்களும், சிதறின பற்களும், வெளிப்பட்ட நரம்புகளும், தாழ்ந்த வயிறும், நீரொழுகும் கண்களும், துல்லியமான சரீரமும் உடையவனாய் இருப்பான்.

சு. 72. விருச்சிகத்தின் எட்டாம் நவாம்சத்தில் ஜனித்தவன் மலர்ந்திருக்கின்ற மூக்கின் நுனியும், கெடுதியான தன்மையும், கறுத்து அழுக்குடைய தேகமும், முறிந்த குரூரமான கேசமும், புத்தியீனமும் உடையவனாயும் இருப்பான்.

சு. 73. விருச்சிகத்தின் ஒன்பதாம் நவாம்சத்தில் ஜனித்தவன் மிருக வடிவமும், வெளுத்த நிறமும், தடித்த பளபளப்புள்ள சரீரமும், அதிக சாந்தமும், பிங்களவர்ணமான கண்களும், அதிக ரோமங்களும், குரு ஜனங்களிடத்தில் அன்பும் உடையவனாய் இருப்பான்.

சு. 74. தநுசின் முதல் நவாம்சத்தில் ஜனித்தவன் மிகவும் வலிய மூக்கும், ஆட்டின் கண் போன்ற கண்களும், ஸ்பஷ்டமாயுள்ள வாக்கும், நல்ல பற்களும், ரோமங்களும், வெண்மை நிறமும், மிகவும் தொங்கியதும் அல்லது வலியதுமான பீஜமும், அதிக கோபமும் உடையவனாய் இருப்பான்.

சு. 75. தநுசின் இரண்டாம் நவாம்சத்தில் ஜனித்தவன் அதிகமாக உயர்ந்த தலையும், விசாலமான குற்றமுடைய கண்களும், வலிய இடுப்பும், தடித்த தொடைகளும், அழகற்ற மூக்கும், வலிய மேவாயும், ஸ்திரமான அறிவும் உடையவனாய் இருப்பான்.

சு. 76. தநுசின் மூன்றும் நவாம்சத்தில் ஜனித்தவன் சிட்சை வியாகரண முதலிய சாஸ்திரங்களில் பாண்டித்தியமும், அழகும், கெம்பீரமான தேகமும், ஸ்திரீகளுக்குச் சந்தோஷம் உண்டு பண்ணுதலும், நல்ல மனசும், ஹாஸ்யத்திலும் சிற்ப வேலையிலும் பிரியமும் உடையவனுய் இருப்பான்.

சு. 77. தநுசின் நான்காம் நவாம்சத்தில் ஜனித்தவன் சாமர்த்தியமும், தேன்போன்ற வட்டமான கண்களும், வெண்மை நிறமும், உதரம் நிறைத்தற்குப் பிரயாசமும், அறிவும், சஞ்சாரமும், நல்ல கேச பாசமும், தடித்த நல்ல சரீரமும் உடையவனுய் இருப்பான்.

சு. 78. தநுசின் ஐந்தாம் நவாம்சத்தில் ஜனித்தவன் தடித்த கழுத்தும், விசாலமான கண்களும், வலிய முகமும், விஸ்தாரமான புருவமும், தடித்துயர்ந்த தோளும், அதிக ரோமங்களும், பெருத்த கபில வர்ணமான தேகமும், உறுதியான புத்தியும் உடையவனுய் இருப்பான்.

சு. 79. தநுசின் ஆறும் நவாம்சத்தில் ஜனித்தவன் பளபளப்பும் கடை கறுத்த விசாலமான கண்களும், பரந்த நெற்றியும், சுபமான ஜீவனமும், கதைகளிலும் வித்தைகளிலும் பிரியமும், வித்வத்தன்மையும், தடித்த விசாலமான முகமும், சிரேஷ்டமும் உடையவனுய் இருப்பான்.

சு. 80. தநுசின் ஏழாம் நவாம்சத்தில் ஜனித்தவன் கறுப்பும், மிருதுத் தன்மையும், நல்ல வாக்கும், சம்பாத்தியம் அல்லது யோசித்தலிற் பிரியமும், உயர்ந்த தலையும், நீண்ட தேகமும் விசாலமான கண்களும், பெருந்தன்மையும் உடையவனுய் இருப்பான்.

சு. 81. தநுசின் எட்டாம் நவாம்சத்தில் ஜனித்தவன் தாழ்ந்த நுனி மூக்கும், விசாலமான தலையும், பெரிய வைரமும், சுழல்கின்ற கண்ணும், ஸ்திரமான வார்த்தையும், குருக்களிடத்தில் பிரியமும் உடையவனுய் இருப்பான்.

சு. 82. தநுசின் ஒன்பதாம் நவாம்சத்தில் ஜனித்தவன் வெளுத்த நிறமும், குதிரையின் முகம் போன்ற முகமும், கறுத்து நீண்ட கண்களும், மிதமாகப் பேசுதலும், நல்லவர்களுக்கு நல்லவனுதலும், துக்கமும், வளைந்த தொடைகளும் கணுக்கால்களும் உடையவனுய் இருப்பான்.

சு. 83. மகரத்தின் முதல் நவாம்சத்தில் ஜனித்தவன் சிறிய அல்லது பெரிய பற்களும், கறுப்பு நிறமும், பேதவாக்கும் கொடூரமான

முகமும், தொடையும், நகம், முழங்கால்களும், மெலிந்த தேகமும், சங்கீதத்திற் பிரியமும், சஞ்சாரமும், ஹாஸ்யப் பிரதானமும் அற்ப தனமும் உடையவனுய் இருப்பான்.

சு. 84. மகரத்தின் இரண்டாம் நவாம்சத்தில் ஜனித்தவன் சோம்பலும், துஷ்டத்தனமும், வளைந்த மூக்கும், சங்கீதப் பிரியமும், தேகபுஷ்டியும், வெகு ஸ்திரீ இன்பமும், அதிகமாகப் பேசுதலும் உடையவனுய் இருப்பான்.

சு. 85. மகரத்தின் மூன்றும் நவாம்சத்தில் ஜனித்தவன் சங்கித கலைகளில் பிரியமும், பிரசித்தியும், வெண்மையான கண்களும், சமமாயும் அழகாயுமிருக்கும் மூக்கும், இஷ்ட கர்மமும், அதிக பந்துக்களும் சினேகிதர்களும் இன்பசுகமும் உடையவனுய் இருப்பான்.

சு. 86. மகரத்தின் நான்காம் நவாம்சத்தில் ஜனித்தவன் சிவப்பும் கறுப்பும் கலந்த வட்டமான கண்களும், வலிய நெற்றியும், பலமான தோள்களும், பலமில்லாத கைத்தலமும், சிதறிய கேசபாசமும், அகண்டிருக்கின்ற பற்களும், அற்பமான வார்த்தைகளும் உடையவனுய் இருப்பான்.

சு. 87. மகரத்தின் ஐந்தாம் நவாம்சத்தில் ஜனித்தவன் பெருவயிறும், போஜன சீலமும், அழகிய உயர்ந்த மூக்கும், சோபையான முதுகெலும்பும், பெருத்து உருண்டு நீண்ட கைகளும், கறுப்பு வர்ணமும், ஸ்திரமான முயற்சியும் உடையவனுய் இருப்பான்.

சு. 88. மகரத்தின் ஆறும் நவாம்சத்தில் ஜனித்தவன் காந்தியுள்ள தேகமும், நல்ல அலங்காரமும், சிறியதும் சமமானதுமான பற்களும், நல்ல வாசாலமும், காமசீலமும், விசாலமான மேவாயும், டரந்த நெற்றியும் உடையவனுய் இருப்பான்.

சு. 89. மகரத்தின் ஏழாம் நவாம்சத்தில் ஜனித்தவன் கறுப்பு நிறமும், சோம்பலும், நன்கு பேசுதலும், கொஞ்சம் குளிர்ந்ததும் தடித்ததுமான தேகமும், கடினத்தன்மையும், கைகால்களில் மிருதுத்துவமும், சத்சுபாவமும், சாந்த புத்தியும் உடையவனுய் இருப்பான்.

சு. 90. மகரத்தின் எட்டாம் நவாம்சத்தில் ஜனித்தவன் ஆழமான கண்களும், அழகான மூக்கும், சிவந்த முகமும், பின்னமான கேசபாச நகங்களும், உறுதியும் பலமுமுள்ள தேகமும், குடம் போன்றதும் விஸ்தார முள்ளதுமான நெற்றியும் உடையவனுய் இருப்பான்.

சு. 91. மகரத்தின் ஒன்பதாம் நவாம்சத்தில் ஜனித்தவன் விசாலம் வாய்ந்த கண்களும், விஸ்தாரமான மார்பும், நல்ல மூக்கும், பரிபூர்ணமான முகமும், கீதவாத்தியங்களில் பிரியமும், மாதுர்யமுள்ள நிர்விகாரமான மனோபாவமும், சிரேஷ்டமும், சத்ஜனத்துவமும் உடையவனாய் இருப்பான்.

சு. 92. கும்பத்தின் முதல் நவாம்சத்தில் ஜனித்தவன் கறுப்பு வர்ணமும், மெலிந்த தேகமும், மிருதுத்துவமும், தடித்த மேவாயும், காவிய சாஸ்திரங்களில் பிரியமும், காமசீலமும், விஷய இன்பமும், அழகான தன்மையும் உடையவனாய் இருப்பான்.

சு. 93. கும்பத்தின் இரண்டாம் நவாம்சத்தில் ஜனித்தவன் தோல் நகம் கண் தலைமயிர் ஸ்வரம் இவைகளில் துன்பமும், அன்பும் சாதுத்துவமும், நீண்ட சரீரமும், விகல்பமான சிரசும், அறிவின்மையும் உடையவனாய் இருப்பான்.

சு. 94. கும்பத்தின் மூன்றும் நவாம்சத்தில் ஜனித்தவன் நல்ல அவயவ சந்தியுடைய தேகமும், ஸ்திரீகளில் பிரியமும், வைடூரியம் போன்ற தேக காந்தியும், சாஸ்திர ஞானமும், பிரவிருத்திசெய்கின்றதில் சாமர்த்தியமும் உடையவனாய் இருப்பான்.

சு. 95. கும்பத்தின் நான்காம் நவாம்சத்தில் ஜனித்தவன் மனைவியிடத்தில் மிகவும் பிரியமும், வெண்மை நிறமும், வெட்டப்பட்டவாயும், சத்துருக்களை நாசம் செய்கையும், கம்பீரமும், தீரமுமுள்ள மனோபாவமும் போகமும் இன்பமும் உடையவனாய் இருப்பான்.

சு. 96. கும்பத்தின் ஐந்தாம் நவாம்சத்தில் ஜனித்தவன் கலைகளின் உண்மைப் பொருளை அறிதலும், கொடூரமான ரோமங்களுடன் கூடிய கால்களும், பலமான கன்னமும், செவியும், குரூரத்தன்மையும், கறுத்த நிறமும் உடையவனாய் இருப்பான்.

சு. 97. கும்பத்தின் ஆறும் நவாம்சத்தில் ஜனித்தவன் புலி போன்ற முகமும், தைரியமும், சுருண்ட தலைமயிர்களும், காரியங்களிற் றுணிவும், காட்டானை முதலிய துஷ்ட மிருகங்களையும் சர்ப்பங்களையும் நாசம் செய்தலும், அரசனிடம் நட்பும் உடையவனாய் இருப்பான்.

சு. 98. கும்பத்தின் ஏழாம் நவாம்சத்தில் ஜனித்தவன் ஆட்டைப்போன்ற கண்களும் முகமும் உடையவனாயும், குரூரனாயும், கிராம்யங்களில் (நாகரீகமற்றது) பிரியமுடையவனாயும், ஸ்திரீகளால்

பீடிக்கப்பட்டவனும், பித்தரோகியாயும், நிர்விகாரமான மனோ பாவம் ஸ்தைரியம் இவைகளையுடையவனும் இருப்பான்.

சு. 99. கும்பத்தின் எட்டாம் நவாம்சத்தில் ஜனித்தவன் விகார மில்லாத மனஸ்திதியும், உறுதியுள்ள புத்தியும், விஷய சுகமும் தடித்த பற்களும் விசாலமான கண்களும் உடையவனும், அரசன் அல்லது அரச சமானனுயும் இருப்பான்.

சு. 100. கும்பத்தின் ஒன்பதாம் நவாம்சத்தில் ஜனித்தவன் கறுப்பு வர்ணமும் பரிபூர்ணமான முகமும் விசேடத்துவமும் அதிக தனமும் நல்ல மனைவியும் நல்ல புத்திரர்களும் உடையவனும், நன்ருகப் பேசுகின்றவனும், பிரசித்தியும் சக்தியும் உடையவனும் இருப்பான்.

சு. 101. மீனத்தின் முதல் நவாம்சத்தில் ஜனித்தவன் சிவப்பும் வெண்மையும் கலந்த நிறமும், அழகான காந்தியும், பெண்புத்தியும், இளகிய மனமும், சிறிய கழுத்தும் மெலிந்த இடையும் உடையவனுய் இருப்பான்.

சு. 102. மீனத்தின் இரண்டாம் நவாம்சத்தில் ஜனித்தவன் பெருத்து வளர்ந்திருக்கின்ற மூக்கும், சகல பிரவிருத்திகளிலும் சாமர்த்தியமும், மாம்ச போஜனமும், மனோகரமான சரீரமும், வனம் மலை இவைகளில் சஞ்சாரமும், பெரிய சிரசும் உடையவனுய் இருப்பான்.

சு. 103. மீனத்தின் மூன்ரும் நவாம்சத்தில் ஜனித்தவன் வெண்மை நிறமும், துஷ்டத்தனமும், நல்ல அழகுள்ள கண்களும், புகழத்தக்க தேகமும், வித்தியா தர்மமும், சாமர்த்தியமும், கற்பிக்கு மியல்பும், சௌந்தரியமும் சாதுரியமும் உடையவனுய் இருப்பான்.

சு. 104. மீனத்தின் நான்காம் நவாம்சத்தில் ஜனித்தவன் குணவானும், துர்நடத்தையுடையவனும், விருத்தர்களைச் சேவிக்கின்றவனும், கர்ம நிபுணம் பராக்கிரமம் நிர்விகாரமான மனோபாவம் இவைகளை யுடையவனும், நீதிசாஸ்திரம் அறிந்தவனும், உயர்ந்த மூக்கை யுடையவனும் இருப்பான்.

சு. 105. மீனத்தின் ஐந்தாம் நவாம்சத்தில் ஜனித்தவன் நீண்டு கறுத்த தேகமும், பிரதாபமும், மேன்மையான அவயவமும், சிறிய மூக்கும், மனதிற்கினிய கண்களும், இமிசையில் பிரியமும், நல்ல பற்களும், அதிக தேஜசும் உடையவனுய் இருப்பான்.

சு. 106. மீனத்தின் ஆறாம் நவாம்சத்தில் ஜனித்தவன் அழகும் பிரதாபமும், நல்ல குணமும், நிர்மலமான வம்சமும், சிறிய மூக்கும், மானமும், வளைந்து கோணலான முகமும், பிரசித்தியும், நிபுணத்தனமும் உடையவனாய் இருப்பான்.

சு. 107. மீனத்தின் ஏழாம் நவாம்சத்தில் ஜனித்தவன் பௌருஷமும், அபிமானமும், தர்மகாரியங்களில் பிரியமும், சிரேஷ்டமும், மந்திரித் தன்மையும், பிரபலமும் *விஷாத சுபாவமும், துஷ்டத் தன்மையும், ஸ்திரமின்மையும் உடையவனாய் இருப்பான்.

சு. 108. மீனத்தின் எட்டாம் நவாம்சத்தில் ஜனித்தவன் நீண்டு பெருத்த தேகமும், பெரிய சிரசும், சோம்பலும், குரூரமான கண்களும் தலைமயிரும், அற்பபுத்திரர்களும், தனத்தில் அதிக ஆசையும், யுத்தத்தில் சாமர்த்தியமும் உடையவனாய் இருப்பான்.

சு. 109. மீனத்தின் ஒன்பதாம் நவாம்சத்தில் ஜனித்தவன் மிருதுவான தன்மையும், அதிக தீரத்துவமும், விஸ்தாரமுள்ள மார்பும், விசாலம் பொருந்திய கண்களும் வலிய மூக்கும் பிரகாசமும் அகன்ற தேகமும் அதிக புத்தியும் பிரசித்தியும் உடையவனும் குள்ளனுயும் இருப்பான்.

சு. 110. மேற்கூறிய ராசிபலன்களையே துவாதசாம்சத்திற்கும் கொள்ளவேண்டும். புத்திசாலியான தைவக்ஞன் சப்தமாம்சத்தோடு சமமாகவே மற்ற வர்க்கங்களின் பலன்களையும் நிர்ணயிக்க வேண்டும். இந்த சப்தவர்க்கங் களினுடைய பலன்களினால் ஜாதகனுடைய நஷ்ட ஜாதக லக்கினத்தை நிச்சயிக்க வேண்டும்.

ஐம்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

---

* விஷாதம் = வேறுபாடு.

# ஐம்பத்தோராவது அத்தியாயம்.

## நஷ்ட ஜாதகம்.

இந்த அத்தியாயத்திலும் நஷ்ட ஜாதகம் கூறப்படுகிறது.

சு. 1. ஒருவன் ஜனித்த வருஷம் மாசம் தேதி நாழிகை இவைகளிலொன்றும் நிச்சயமில்லாமல் ஜாதக பலன்களை அறியும் இச்சையோடு கார்த்தாந்திகன் (ஜோதிஷன்) முன்னிலையில் வந்து கேட்கும்போது அத்தருணம் உதயமான லக்கினத்தைக் கொண்டு பிரஸ்னம் செய்பவனுடைய ஜனன காலத்தைச் சொல்லவேண்டும். அந்த உதயலக்கினம் முன்ஹோரையாயின் ஜனனம் உத்தராயணத்தி லென்றும், பின்ஹோரையாயின் ஜனனம் தட்சிணாயனத்திலென்றும் சொல்லவேண்டும்.

[இங்கு சம்பிருச்சத : என்று கூறினமையால் இயன்ற பொருளோடு பலதாம்பூலங்களும் வைத்து பிரஸ்னம் செய்யவேண்டு மென வும் பரீக்ஷார்த்தமாகவோ துர் உத்தேசங்களினாலோ சோதித்தல் கூடாதெனவுங் கொள்க.]

சு. 2. உதயலக்கினத்தில் கிரகமுண்டெனில் அவ்விலக்கினத் தில் இருக்கும் கிரகத்தின் ருதுவில் ஜனனம் என்று கொள்ள வேண் டும். அந்த லக்கினத்தில் பல கிரகங்களுண்டெனில் அவர்களில் பலம் பொருந்திய கிரகத்தின் ருது காலத்தைக் கொள்ளவேண்டும். சூரியன் சேவ்வாய் இவர்களுக்குக் கிரீஷ்மருது. சந்திரனுக்கு வருஷ ருது. புதனுக்கு சரத்ருது. குருவிற்கு ஹேமந்தருது. சுக்கிரனுக்கு வசந்தருது. சனிக்கு சிசிரருது என ருதுக்களை முன் சம்க்ஞா அத் தியாயத்தில் கூறிய விதம் அறிந்து கொள்க. இங்கு முதலில் சொல் லிய பிரகாரம் அயனமும் ருதுவும் பேதமாக வரின் கீழே சொல்லப் புகும் ருது காலத்தை மாற்றிச் சொல்லுக.

சு. 3. உத்தராயணத்தில் வருஷ ருதுவாயின் வசந்தருது வென் றும், சரத் ருதுவாயின் கிரீஷ்ம ருது வென்றும், ஹேமந்த ருதுவா யின் சிசிர ருது வென்றும், தட்சிணாயனத்தில் வசந்த ருதுவாயின் வருஷருது வென்றும், கிரீஷ்மருதுவாயின் சரத்ருது வென்றும், சிசிர ருதுவாயின் ஹேமந்தருது வென்றும் கொள்க. மேற்சொல்லப்பட்ட இலக்கினத்தின் திரேக்காணம் பாதிக்கு முன்னானல் முதலில் விவ

ரித்த ருதுவில் முன்னுள்ள மாசத்திலும், பாதிக்குப் பின்னானால் பின்னுள்ள மாசத்திலும் ஜனன மெனத் தெரிந்துகொள்க.

சு. 4-5. மேற் சொன்ன பிரகாரம் திரேக்காணூர்த்தங்கொண்டு மாசத்தை நிர்ணயித்தபடியால் திரை ராசிகத்தால் ஜனித்த திதியையும் அறிந்து கொள்ள வேண்டும். அந்த திரேக்காணூர்த்தத்தில் சென்ற பாகையைக் கலையாக்கி 10-க்குக் கொடுத்துவந்த பலம் சென்ற திதிகளாகும். அத்திதிகளைச் சுக்கிலபட்ச முதலாக எண்ணி நிர்ணயித்துக் கொள்க. சிலர் பிரஸ்ன காலத்தில் சுத்தஸ்புட சூரியனுக்கு அந்த ராசியில் சென்ற பாகைகலைகளின் சங்கியையின்படி திதிகளைக் கொள்கவென்று கூறுகின்றனர். [இதனால் நஷ்ட ஜாதகப் பிரசினத்தில் சூரியஸ்புடம் ஜனனகால திதிஸ்புடமாக இருக்கு மென்பது பெறப்படுகின்றது.] உதய லக்கின ஸ்புடம் முதல் திரேக்காணமாயின் அவ்வுதய விராசியில் குரு விருக்கின்ற காலமும், மத்திய திரேக்காணமாயின் அதற்கு ஐந்தா மிராசியில் குரு விருக்கின்ற காலமும் கடைசித் திரேக்காணமாயின் அதற்கு ஒன்பதா மிராசியில் குரு விருக்கின்ற காலமும் ஜனித்த காலமாக நிர்ணயிக்கவேண்டும் இங்கு திரை ராசிகங் கொண்டு அந்த ராசிகளிலே குருவிருக்கின்ற காலத்தை ஊகித்து ஜனன காலத்தை நிர்ணயித்துக் கொள்க. அதாவது ஒவ்வொரு திரேக்காணத்தையும் நான்காகப் பாகித்தால் இரண்டரைப் பாகையாம். அதனால் குரு இருக்கு மிராசி நிச்சயிக்கப்படும். இலக்கினத்தினுடைய முதல் திரேக்காணம் முதலில் இரண்டரை பாகைக்குள்ளிருப்பின் இலக்கினத்தில் குரு வென்றும், $2\frac{1}{2}$-க்கு மேல் 5 பாகைக்குள்ளிருப்பின் இரண்டாம் இராசியி லென்றும் 5-க்குமேல் $7\frac{1}{2}$ பாகைக்குள்ளிருப்பின் மூன்றும் இராசியிலென்றும், $7\frac{1}{2}$-க்கு மேல் 10 பாகைக் குள்ளிருப்பின் நான்காம் இராசியி லென்றும் இங்ஙனம் குருவிருக்கு மிராசியை நிச்சயம் செய்துகொள்க. இங்ஙனமே மற்ற திரேக்காணங்கொண்டும் குரு இருக்கும் இராசியை அறிந்து கொள்க. இவ்விதம் குருவின் இருப்பிடம் எந்த ராசியென்று நுட்பமாக அறிந்து ஒரு பரிவிருத்திக்குப் பன்னிரண்டு வருஷ வீதம் ஜாதகனுடைய உத்தேச வயதிற்குத் தக்கபடி இன்ன வருஷத்தில் ஜனித்திருக்கலா மென்று நிச்சயம் செய்க. பிரஸ்னலக்கினம் சிம்மம் கன்னி துலாம் விருச்சிகம் கும்பம் மீனம் இந்த ராசிகளி லொன்றாயின் இராத்திரியிலும், மேடம் இடபம் மிதுனம் கடகம் தநுசு மகரம் இந்த ராசிகளி லொன்றாயின் பகலிலும் ஜனனம் என்று கண்டு கொள்க.

சு. 6. பகல் இரவு என்று நிச்சயித்த பிறகு இலக்கின ஸ்புடத்தில் சென்ற பாகைகளின் அளவான நாழிகைகள் சூரியோதயம் முதல் அல்லது அஸ்தமனம் முதல் சென்ற நாழிகை ஜனனமென்று சொல்லவேண்டும். தினராத்திரிகளுக்குக் கூடுதல் குறைவு வருகின்ற காலம் ஜனனகால சூரியஸ்புடத்தினால் தினராத்திரிப் பிரமாணங்களைத் தெரிந்து இலக்கின ஸ்புடத்தில் சென்ற பாகை கலைகளைப் பகலில் ஜனன மாயின் தினப்பிரமாணங் கொண்டும், ராத்திரியில் ஜனனமாயின் ராத்திரிப் பிரமாணங் கொண்டும் பெருக்கி இலக்கின ராசிப் பிரமாண நாழிகையினால் வகுத்து வந்த பலம் ஜனன காலத்தில் சென்ற நாழிகை களாகும். பிரச்ன சமயம் இலக்கினம் ஐந்து, ஒன்பது இந்த ராசிகளில் பலமுள்ள ராசியில் சந்திரனி ருக்கின்ற சமயம் ஜனனமென்று கண்டுகொள்க.

சு. 7. பிரஸ்னம் செய்பவன் சிரசு முகம் முதலான அங்கங்களைத் தொட்டுக் கொண்டு செய்தால் அந்தந்த அங்கங்களுக்குரிய ராசியில் ஜனனமென்று சொல்க. பிரஸ்ன காலத்தில் லக்கினத்திலிருந்து எத்துணையாவது ராசியில் சந்திரனிருக்கின்றானோ அந்த சந்திரனிலிருந்து அத்துணையாவது ராசியும் ஜனன ராசியாகு மென்ப.

சு. 8. பிரஸ்ன லக்கினம் மீனராசியாகவரின் ஜனனம் மீனமென்றேகொள்க. அல்லது லக்கினத்தினுடையநவாம்சராசி ஜனித்தலக்கினமாகவும் வரும். பிரஸ்னசமயம் ஆட்டின் உணவுப் பொருள்களின் ரூபம் சப்தம் தரிசனம் கம்பளாதிகள் ஆட்டுத்தோல் கள்ளியிலை எருக்கிலை முதலானவை தற்செயலால் தைவக்ஞனுடைய சிரவண தரிசனாதிகளுக்கு விஷயமாயின் மேடம் என்றும், வைக்கோல் கரி நுகம் முதலியவை யாயின் இடபம் என்றும், மற்றுமுள்ள நிமித்தங்களினால் மிதுன விராசியாதி யென்றும் நிர்ணயித்துக் கொள்க.

சு. 9. இலக்கினஸ்புடத்திற்குரிய திரேக்காணத்தி லிருந்து எத்தனையாவது திரேக்காணத்தில் பிரஸ்னகால ரவி யிருக்கின்றானென்றறிந்து அந்த சங்கியை பன்னிரண்டிற் கதிகமாயின் பன்னிரண்டால் வகுத்த சேடம் எத்தனையோ அத்தனையாவது ராசியில் (இலக்கினமுதல்) ஜனித்திருக்கவேண்டு மென்று புத்திமானான கார்த்தாந்திகன் (ஜோதிஷன்) நிச்சயித்துச் சொல்லவேண்டும்.

சு. 10. பிரஸ்னகால லக்கினத்தி லிருக்கின்ற கிரகத்தினுடைய அல்லது பலவானான கிரகத்தினுடைய ஸ்புடத்தைக் கணித்து பன்னிரண்டங்குலச் சங்குச் சாயையின் அங்குலங் கொண்டு பெருக்கி

பன்னிரண்டால் வகுத்த சேடத்தை மேடமுதலெண்ணி வந்தராசி ஜன்மலக்கினமாகும் எனக்கொள்க. கிரகஸ்புடத்தை ராசி. பாகை கலைகளாக வைத்து சாயாங் குலத்திறுற் பெருக்கி வந்தவைகளைக் கலையாக்கிப் பன்னிரண்டால் வகுத்த சேடங் கொண்டு ஜன்ம லக்கினத்தை நிர்ணயிக்க வேண்டும்.

சு. 11. பிரஸ்னம் செய்பவன் முன்னின்று கொண்டு பிரஸ்னம் செய்யின் உதயராசியே ஜன்மலக்கின மென்றும், படுத்துக் கொண்டு பிரஸ்னம் செய்யின் அதன் நான்கா மிராசியும், இருந்து கொண்டு பிரஸ்னம் செய்யின் அதன் ஏழாமிராசியும், எழுந்து கொண்டு பிரஸ் னம் (நடந்து கொண்டென்றும் பட்ச பேதம்) செய்யின் அதன் பத்தா மிராசியும் இலக்கினமாகு மென்று நிச்சயிக்கவேண்டும்.

சு. 12. பிரஸ்னம் செய்பவனுக்குரிய நாமகரணம் செய்துள்ள நாமதேயத்தினுடைய மாத்திரைகளை யிரட்டித்து பிரஸ்ன காலத்தில் துவாதசாங்குல சங்குச் சாயையின் அங்குலங்களோடு சேர்த்து இருபத்தேழால் வகுத்த சேடத்தை அவிட்ட முதல் எண்ணிவந்த நட்சத்திரம் பிரஸ்னம் செய்பவனின் ஜன்ம நட்சத்திரமாகும். [இங்கு நெட்டெழுத்துக்கு இரண்டும் குற்றெழுத்திற்கு ஒன்றும் மெய் யெழுத்திற்கு அரையும் மாத்திரைகளாம்].

சு. 13-14-15. பிரஸ்ன லக்கினம் இடப சிம்மங்களாயின் ஸ்புடம்பண்ணி அவற்றைக் கலையாக்கிப் பத்தினுலும், மிதுன விருச்சிகங்களாயின் எட்டினுலும், மேட துலாங்களாயின் ஏழி னுலும், கன்னி மகரங்களாயின் ஐந்தினுலும் பெருக்க வேண் டும். மற்ற ராசிக்குள்ள எண்கள் ராசி சங்கியைகள் ஆகின்றன. கட கத்திற்கு நான்கு, தநுசுற்கு ஒன்பது, கும்பத்திற்குப் பதினொன்று, மீனத்திற்குப் பன்னிரண்டு எனக் கொள்க. பிறகு இலக்கினத்தில் கிரக மிருந்தால் கிரக குணகாரங் கொண்டும் குணிக்கவேண்டும். கிர கமில்லை யெனில் இந்த குணனம் அவசிய மில்லை. பல கிரகங்கள் லக்கினத்தி லிருந்தால் ராசி குணகாரம் செய்த கலா பிண்டத்தை அக்கிரகங்களுடைய குணகாரங்களின் சங்கியையினுல் பெருக்க வேண்டும். கிரக குணகாரங்களாவன குருவிற்குப் பத்தும், செவ் வாய்க்கு எட்டும், சுக்கிரனுக்கு ஏழும், புதனுக்கும் சந்திரனுக்கும் சூரியனுக்கும் சனிக்கும் ஐந்தும் ஆகின்றன. இவ்விதம் ராசி குண காரங்களாலும் லக்கினத்தில் கிரகமிருந்தால் அந்த கிரகத்தின் குணகாரங்களாலும் பெருக்கி வந்த லக்கினஸ்புட கலாபிண்டத்தை

வைத்துக் கொள்ளவேண்டும். பிறகு இக்கலாபிண்டத்தை பத்தில் பெருக்கி அறுபதால் வகுத்த சேடம் வருஷம். அதனைப் பிரபவாதியாக வெண்ணி ஜனன வருடத்தைச் சொல்லவேண்டும். முன்னே பத்தால் பெருக்கியதை ஆறால் வகுத்த சேடம் வஸந்தாதி ருதுக்களாகும். பன்னிரண்டால் வகுத்த சேடம் சைத்திராதி மாசங்களாகும். முப்பதினால் வகுத்த சேடம் சுக்கில பட்சப் பிரதமையாதி திதிகளாகும். பிறகு கலா பிண்டத்தை எட்டால் பெருக்கி இரண்டால் வகுத்த சேடம் ஒன்றாயின் பகலினும், இரண்டாயின் இரவினும் ஜனனமென்ப. அக்கலாபிண்டத்தை ஏழால் பெருக்கி இருபத்தேழால் வகுத்த சேடம் அசுவினி முதலான நட்சத்திரங்களாம். மறுபடியும் கலாபிண்டத்தை ஐந்தில் பெருக்கி முப்பதினால் வகுத்த சேடம் ஜனனகால நாழிகையாகும், இவ்வைந்தில் பெருக்கிய கலாபிண்டத்தை இரண்டால் வகுத்த சேடம் இலக்கினத்தினுடைய ஹோரையாகும். மூன்றால் வகுத்த சேடம் திரேக்காணமாகும். ஒன்பதால் வகுத்த சேடம் நவாம்சமாகும். பன்னிரண்டால் வகுத்த சேடம் துவாதசாம்சமாகும். இம் முறைப்படி கணித்துக் கொள்க.

இராசி குணகாரத்தினாலும் கிரக குணகாரத்தினாலும் கணித்து வந்த கலாபிண்டத்தோடு ஒன்பது கூட்ட வேண்டு மென்பதும் குறைக்கவேண்டுமென்பதும் சில ஆசிரியர்கள் கொள்கை. இலக்கினம் பிரதம திரேக்காணமாயின் ஒன்பது கூட்டவேண்டும். கடைசித் திரேக்காணமாயின் ஒன்பது கழிக்கவேண்டும். மத்திய திரேக்காணமாயின் கூட்டவும் கழிக்கவும் வேண்டியதில்லை. இதனால் கலாபிண்டத்திற்குக் கர்மயோக்கியத்துவம் சித்திக்கின்றது. பிறகு பத்து முதலான சங்கியைகளைக் கொண்டு முறையாகப் பெருக்கி வருடாதிகளைக் கணித்துக் கொள்க.

சு. 16. யவனாசாரியர் முதலியவர்களால் சொல்லப்பட்ட பிரகாரம் நஷ்டஜாதகம் கணிக்கும் மார்க்கம் இங்கு கூறப்பட்டது. இவ்விதம் சொல்லப்பட்டயாவும் பிரமாணீகரிக்கத் தக்கதல்ல. ஆதலால் நஷ்ட ஜாதகத்தைக் கணிக்கும் மார்க்கத்தை நன்கு நுட்பமாக அறிந்து கொள்ளவேண்டும். குருபதேசம் பரமேச்வர காருண்யம் குருத்துவம் முதலான குணங்களுள்ள கார்த்தாந்திகர்கள் பரிசோதித்தறிந்து சாரங்கொண்டு பிரஸ்னனுடைய ஜனனகாலத்தை நன்கு நிச்சயித்துச் சொல்வார்களாக.

ஐம்பத்தோராவது அத்தியாயம் முற்றிற்று.

## ஐம்பத்திரண்டாவது அத்தியாயம்.

# அஷ்டவர்க்க வின்யாசக் கிரமம்.

சு. 1. யவனசாரியர் முதலியவர்களால் சொல்லப்பட்ட அஷ்டவர்க்கம் எல்லாருக்கும் நாடோறும் உண்டாகிற சுபாசுப பலங்களை ஸ்பஷ்டமாகச் சொல்லுகின்றதாகையால் இனி அதனுடைய இலட்சணம் இங்கு தெளிவாகச் சொல்லப்படுகின்றது.

சு. 2. இச்சுலோகத்தில் சூரியாஷ்டவர்க்க விதிசோல்லப்படுகின்றது. சூரியன் செவ்வாய் சனி இம்மூன்று கிரகங்களுக்கும் அவரவர்களிருக்கின்ற ஸ்தானமுதல் 1-2-4-7-8-9-10-11 இந்த விராசிகளிலும், குருவிருக்கின்ற விராசி முதல் 5-6-9-11 இந்த விராசிகளிலும், சுக்கிரனிருக்கின்ற விராசி முதல் 6-7-12 இந்த விராசிகளிலும், சந்திரனி ருக்கின்ற விராசிமுதல் 3-6-10-11 இந்த விராசிகளிலும், புதனிருக்கின்ற விராசி முதல் 3-5-6-9-10-11-12 இந்த விராசிகளிலும், இலக்கின ராசிமுதல் 3-4-6-10-11-12 இந்த விராசிகளிலும் சூரியன் சுபனாகின்றான். சொல்லப்படாத ஸ்தானங்களில் அசுபனாகின்றான்.

சு. 3. சந்திராஷ்டவர்க்கத்தைக் கூறுகின்றார். இலக்கினத்திலிருந்து 3-6-10-11 இவ்விராசிகளிலும், சந்திரனிலிருந்து 1-3-6-7-10-11. இவ்விராசிகளிலும், செவ்வாயிலிருந்து 2-3-5-6-9-10-11 இவ்விராசிகளிலும், சூரியனிலிருந்து 3-6-7-8-10-11 இவ்விராசிகளிலும், குருவிலிருந்து 1-2-4-7-8-10-11 இவ்விராசிகளிலும், சுக்கிரனிலிருந்து 3-4-5-7-9-10-11 இவ்விராசிகளிலும், புதனிலிருந்து 1-3-4-5-7-8-10-11 இவ்விராசிகளிலும், சனியிலிருந்து 3-5-6-11 இவ்விராசிகளிலும் சந்திரன் சுபனும், மற்ற ராசிகளில் அசுபனுமாகிறான்.

சு. 4. செவ்வாய் அஷ்டவர்க்கம். சூரியனுக்கு 3-5-6-10-11. இலக்கினத்திற்கு 1-3-6-10-11. சந்திரனுக்கு 3-6-11. செவ்வாய்க்கு 1-2-4-7-8-10-11. சனிக்கு 1-4-7-8-9-10-11. புதனுக்கு 3-5-6-11. சுக்கிரனுக்கு 6-8-11-12. குருவிற்கு 6-10-11-12. இந்த விராசிகளில் செவ்வாய் சுபனாகின்றான். மற்ற ராசிகளில் அசுபனாகின்றான்.

சு. 5. புதன் அஷ்டவர்க்கம். சுக்கிரனுக்கு 1-2-3-4-5-8-9-11. செவ்வாய்க்கு 1-2-4-7-8-9-10-11. சனிக்கு 1-2-4-7-8-9-10-11.

குருவிற்கு 6-8-11-12. சூரியனுக்கு 5-6-9-11-12. புதனுக்கு 1-3-5-6-9-10-11-12. சந்திரனுக்கு 2-4-6-8-10-11. இலக்கினத்திற்கு 1-2-4-6-8-10-11. இந்த ராசிகளில் புதன் சுபனாகின்றான். மற்ற ராசிகளில் அசுபனாகின்றான்.

சு. 6. குரு அஷ்டவர்க்கம். செவ்வாய்க்கு 1-2-4-7-8-10-11. குருவிற்கு 1-2-3-4-7-8-10-11. சூரியனுக்கு 1-2-3-4-7-8-9-10-11. சுக்கிரனுக்கு 2-5-6-9-10-11. சந்திரனுக்கு 2-5-7-9-11. சனிக்கு 3-5-6-12. புதனுக்கு 1-2-4-5-6-9-10-11. இலக்கினத்திற்கு 1-2-4-5-6-7-9-10-11. இந்த ராசிகளில் குரு சுபனாகின்றான், மற்ற ராசிகளில் அசுபனாகின்றான்.

சு. 7. சுக்கிரன் அஷ்டவர்க்கம். இலக்கினத்திற்கு 1-2-3-4-5-8-9-11. சந்திரனுக்கு 1-2-3-4-5-8-9-11-12. சுக்கிரனுக்கு 1-2-3-4-5-8-9-10-11. சனிக்கு 3-4-5-8-9-10-11. செவ்வாய்க்கு 3-4-6-9-11-12. சூரியனுக்கு 8-11-12. புதனுக்கு 3-5-6-9-11. குருவிற்கு 5-8-9-10-11. இந்த ராசிகளில் சுக்கிரன் சுபனாகின்றான். மற்ற ராசிகளில் அசுபனாகின்றான்.

சு. 8. சனி அஷ்டவர்க்கம். சனிக்கு 3-5-6-11. செவ்வாய்க்கு 3-5-6-10-11-12. சூரியனுக்கு 1-2-4-7-8-10-11. இலக்கினத்திற்கு 1-3-4-6-10-11. புதனுக்கு 6-8-9-10-11-12. சந்திரனுக்கு 3-6-11. சுக்கிரனுக்கு 6-11-12. குருவிற்கு 5-6-11-12. இந்த விராசிகளில் சனி சுபனாகின்றான். மற்ற ராசிகளில் அசுபனாகின்றான்.

சு. 9. இவ்விதம் சூரியன் முதலிய சப்த கிரகங்களுடைய அஷ்டவர்க்க வின்னியாசக்கிரமம் இங்கு தெளிவாய்க் கூறப்பட்டது. மேலே சொல்லப்பட்ட ஸ்தானங்களெல்லாம் இஷ்ட ஸ்தானங்க (சுபஸ்தானங்க)ளாம். சொல்லப்படாத ஸ்தானங்களெல்லாம் அனிஷ்ட ஸ்தானங்க (அசுபஸ்தானங்க)ளாம். சூரியாதி கிரகங்கள் சாரவசத்தால் இஷ்ட ஸ்தானங்களில் சஞ்சரிக்கின்ற காலம் சுபபலத்தையும், அனிஷ்ட ஸ்தானங்களில் சஞ்சரிக்கின்ற காலம் அசுபபலத்தையும் நிச்சயமாகக் கொடுக்கின்றார்கள். மேற்கூறிய இஷ்ட ஸ்தானங்கள் உச்சம் ஸ்வக்ஷேத்திரம் மித்துருக்ஷேத்திரம் முதலான பலம் பொருந்திய ஸ்தானங்களாகவரின் அந்தந்த கிரகங்கள் சுபபலத்தைப் பூர்ணமாகக் கொடுப்பார்கள். சத்துருக்ஷேத்திரம் நீசம் முதலான ஸ்தானங்கள் அனிஷ்ட ஸ்தானங்களாய்வரின் அசுபபலன்களை மிகுதி

யாகக் கொடுப்பார்கள். தசாநாதன் பலவானுய் இருப்பின் அஷ்டவர்க்க பலத்திற்கு அக்காலம் பிரபலமில்லை யென்றறிக. இனி அஷ்டவர்க்க வின்யாசக் கிரமத்தை விளக்கமாகக் காண்பிப்போம்.

சு. 10. இனி அஷ்டவர்க்கப் பிரகாரம் இஷ்டானிஷ்ட பலசம்பவகாலம் சொல்லப்படுகின்றது. சூரியனும் செவ்வாயும் முதல் திரேக்காணத்திலும், குருவும் சுக்கிரனும் மத்திய திரேக்காணத்திலும், சந்திரனும் சனியும் கடைசித் திரேக்காணத்திலும் இருக்கின்ற காலம் தங்கள் தங்களுக்குரிய சுபாசுப பலங்களைக் கொடுக்கின்றார்கள். புதன் அவ்விராசியிலிருக்கும் காலம் வரையிலும் தனக்குச் சொல்லப்பட்ட பலத்தைக் கொடுப்பான் என்று கொள்க.

ஐம்பத்திரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

# ஐம்பத்து மூன்ருவது அத்தியாயம்.

## வியோனி ஜன்மம்.

சு. 1. தைவக்ஞர்களுக்குச் சந்தோஷத்தையும் மற்றவர்களுக்கு ஆச்சரியத்தையும் உண்டுபண்ணக்கூடிய வியோனி ஜன்மத்தைக் கனகாசாரியருடைய மதத்தைத் தழுவி விஸ்தாரமாகச் சொல்லுகின்ருர். இதில் வியோனியாவது மனுஷ்யர் நீங்கலாகவுள்ள சகல ஸ்தாவர சங்கமங்கள் என்றறிக.

சு. 2. கடகராசி லக்கினமாகி அதில் சந்திரனும் சுபக்கிரகங்களெல்லாம் சுயக்ஷேத்திரங்களிலும் பலவான்களாயிருந்த காலத்தில் ஈசுவரன் இந்த ஜெகத்தைச் சிருஷ்டித்தார். அதனுல் யாதாமொரு புருஷனது ஜனனகாலத்தில் சுபக்கிரகங்களுக்கும் சந்திரனுக்கும் மேற்சொன்னவாறு பலமுண்டாயிருப்பின் அவன் தேவஸ்திரீகள் சூழ திரிலோக நாதனுக இருப்பான். ஆதலால் இதற்கு விபரீதமாயின் வியோனி ஜன்மமாயிருக்கு மென்றறிக.

சு. 3. இந்த ஹோரா சாஸ்திரம் அல்லது ஹோரா லக்கினம் சகல ஸ்தாவர சங்கமங்களுடைய சுபாசுப பலத்தைச் சொல்லுகின்றது. காலம் தேசம் நிமித்தம் ஆகிருதியாதிகளின் பலாபலத்திற்குத் தக்கவாறு பலத்தை உசிதம்போலச் சிந்தித்துச் சொல்ல வேண்டும்.

சு. 4. இனி வியோனி ஜன்மலட்சணம் சோல்லப்படுகின்றது. பாபக்கிரகங்களான சூரியன் செவ்வாய் சனி ஆகிய கிரகங்கள் அதிக பலவான்களாயும் சந்திரன் க்ஷீணனுயும் புதன் குரு சுக்கிரன் ஆகிய இவர்கள் பலஹீனர்களாயும் இருப்பினும், கேந்திரத்தில் சனியும் புதனும் இருப்பினும், அல்லது லக்கினத்தைப் பார்ப்பினும், லக்கினமோ சந்திர லக்கினமோ வியோனி ராசியாகவு மிருப்பின் வியோனி ஜென்மமாகுமென்ப.

சு. 5. ஆதான லக்கினம் ஜன்மலக்கினம் பிரஸ்ன லக்கினம் இவைகளைக் கொண்டும் வியோனி ஜென்மத்தை அறியவேண்டும். அப்பொழுது சந்திரன் துவாதசாம்சத்தில் எந்த ராசியிலிருக்கின்ருனே அதற்குப் பொருத்தமான பிராணியுடைய [மேஷத்திற்கு ஆடு இடபத்திற்குக் காளை எருமை] உற்பவத்தைச் சொல்லவேண்

டும். இங்கு லக்கினத்தினுடைய துவாதசாம்சத்தினுலும் நிரூபிக்க லாம் என்று கொள்வது முண்டு.

சு. 6. வியோனி ஜென்ம லட்சணப் பிரகாரம் சத்துவத்தி னுடைய நிறம் ஆகிருதி முதலிய பேதங்களை கிரகங்களுடைய ஸ்திதி திருஷ்டி முதலியவைகளைக்கொண்டு பூர்வாசாரியர்களான மகருஷிகள் நிச்சயித்துச் சொல்லியிருக்கின்றார்கள். அதன் சாரத்தை மாத்திரம் இங்கு கூறுகின்றார்.

சு. 7-8-9. வியோனிகளாகிய பசு காளை எருமை நாய் பூனை மான் முதலான நாற்கால் மிருகங்களுடைய அங்கவிபாகம் சொல்லப் படுகின்றது. மேஷம்-முகம். இடபம்-கழுத்து. மிதுனம்-வலது காலும் பாதமும் (குளம்புகள்). மீனம்-இடது காலும் பாதமும் (குளம்புகள்). கடகம்-பின் பக்கத்தின் வலது பாகமும் பிருஷ்ட மும் (முதுகும்). கும்பம்-இடது பாகமும் பிருஷ்டமும் (முதுகும்). சிங்கம்-வலது சகனம். மகரம்-இடது சகனம் (இடுப்பு). தநுசு-இடது கால். கன்னி-வலது கால். துலாம்-குஹ்யம் (லிங்கஸ்தானம்). விரு ஷணம் (பீஜம்) அரைக்கட்டு (இடுப்பு) வால் இவைகளுடைய வலது பாகம். விருச்சிகம்-இவைகளுடைய இடது பாகம். இவ்விதமாக நான்கு காலுள்ள மிருகங்களுடைய அவயவ விபாகங்களை ஊகித் தறியவேண்டும். மிதுனம் முதல் துலாம் வரையில் ஐந்து ராசிகளும் சரீரத்தின் வலது பாகமாகவும், மீனமுதல் பின்பக்கமாய் விருச்சிகம் வரையில் ஐந்து ராசிகளும் சரீரத்தின் இடதுபாகமாகவும் கொள்ள வேண்டும். பட்சிகளுக்கும் இவ்விதமாகவே அவயவ விபாகத்தை நிச்சயித்தறியவேண்டும். பட்சிகளுக்குக் கால் கைகளுடைய ஸ்தா னம் சிறகெனக் கொள்ளவேண்டும். வராஹமிஹிரஹோரையிலுள்ள அவயவ விபாகம் சிறிது வேறுபட்டுளது.

சு. 10. மேஷம் முதலான இராசிகளைக் கொண்டோ லக்கினும்ச ராசிகளைக்கொண்டோ இலக்கினத்தில் பலமுள்ளவராக நிற்கப்பட்ட பார்க்கப்பட்ட கிரகங்களைக் கொண்டோ வியோனியுடைய நிறத்தை யும் அவ்விராசிகளுக்குரிய அங்கத்தில் அடையாளம் காயம் முதலா னவைகளையும் நிச்சயித்தறியவேண்டும்.

சு. 11. இராசியாதிபனுடைய சம்பந்தமோ திருஷ்டியோ இலக்கினத்திற்குண்டாயிருப்பின் அவ்வதிபனைக்கொண்டும், இலக்கி னும்ச ராசி பலமுண்டாயிருப்பின் அதைக்கொண்டும், இலக்கினம் ஸ்வக்ஷேத்திராம்சகத்தோடு கூடியிருப்பின் அதைக் கொண்டும் நிறத்

தைச் சொல்லவேண்டும். ஏழாமிடத்தில் இருக்கும் கிரகங்களைக் கொண்டு பிருஷ்ட பாகத்தில் சுவர்ணத்திற்குச் சமானமான ரேகைகள் உண்டென்று சொல்லவேண்டும்.

சு. 12. இலக்கினத்திற்கு எத்தனை கிரகங்களுடைய திருஷ்டியுண்டென்று தெரிந்து அத்தனை நிறம் உண்டென்று சொல்ல வேண்டும். அதிக பலமுள்ள கிரகத்தினுடைய நிறம் பிரதானமா யிருக்குமென்று தெரிந்துகொள்க.

சு. 13. குரு-மஞ்சள். சந்திரன் - வெண்மை. சுக்கிரன்-பல நிறம். சூரியன்-செவ்வாய்-சிவப்பு. சனி-கறுப்பு. புதன்-பல நிறம். இக்கிரகங்களின் நிறங்களால் வியோனி வர்ணத்தைத் தீர்மானிக்க வேண்டியது.

சு. 14. ஸ்வக்ஷேத்திரத்தில் நிற்கின்றதும் அல்லது அன்னிய நவாம்சத்தில் நிற்கின்றதும், அன்னிய க்ஷேத்திரத்தில் நிற்கின்றதும் அல்லது ஸ்வாம்ச க்ஷேத்திரத்தில் நிற்கின்றதுமாகிய கிரகம் இலக்கினத்தைப் பார்ப்பின் அந்தக் கிரகத்தினுடைய நிறத்தைச் சொல்ல வேண்டும்.

சு. 15-16. எல்லாக் கிரகங்களும் சுபாவஸ்திதியோடு கூடியிருப்பின் அவரவர்களுக்குள்ள சுபாவமான நிறமாக இருக்குமென்று சொல்க. பரிகம் - பரிவேஷம் - மேகம் - சங்கு - கவேதம் - துவஜம் - தூமம் - விருஷமிருகதண்டங்கள் - இந்திரசாபம் பொடிகள் இவை முதலானவைகளின் சம்யோகம் கிரகங்களுக்குண்டாயிருப்பின் சம்யுக்த பதார்த்தத்தின் நிறம் உண்டாகும். இவ்வித லட்சணங்கள் சம்ஹிதாஸ்கந்தத்தால் வெளியாவதாலும் விரிவின் பயத்தினாலும் இங்கு விவரிக்கப்படவில்லை.

சு. 17. பட்சிகளின் ஜனன லட்சணம் சொல்லப்படுகின்றது. இலக்கினம் பட்சித் திரேக்காணமானாலும், சரராசியான நவாம்சக லக்கினத்தில் பலவானான கிரகத்தின் சம்பந்தம் உண்டானாலும், மிதுனம் கன்னி இவைகளிலொன்று லக்கின நவாம்சகமாய் அதில் பலமுள்ள ஒரு கிரகம் நின்றாலும், இந்த மூன்று யோகத்திலும் இலக்கினத்தைச் சனி பார்த்தாலும், அல்லது அதிலிருந்தாலும், ஸ்தல சரங்களான பட்சிகளுடைய ஜனனத்தையும், மேற்கூறியவாறு கிரகமிருந்து சந்திரன் லக்கினத்தைப் பார்ப்பின் ஜலசரங்களான பட்சிகளுடைய ஜனனத்தையும், சனி சந்திரன் இருவர்களுடைய சம்பந்த

திருஷ்டிகளுண்டானல் ஜலத்திலும் கரையிலும் கூடி சஞ்சரிக்கும் பட்சிகளுடைய ஜனனத்தையும் சொல்லவேண்டும்.

சு. 18. இலக்கினமோ நான்காமிடமோ ஜலராசியாகி அதற்குச் சந்திரனுடைய யோகமாவது திருஷ்டியாவது உண்டாயின் ஜல சர பட்சிகளுடைய ஜனனத்தையும், இலக்கினம் நான்காமிடம் ஸ்தல ராசியாகி சனியினுடைய யோக திருஷ்டி உண்டாயின் ஸ்தல சர பட்சிகளுடைய ஜனனத்தையும் சொல்லவேண்டும். இங்கு பலா பலத்திற்குத் தக்கபடி கிரக ராசிகளைக்கொண்டு பட்சிகளுடைய ஜனன ஸ்தலம் நிறம் முதலானவைகளை நிச்சயிக்கவேண்டும்.

சு. 19. இனி விருட்சங்களின் உத்பத்தி லட்சணம் சொல்லப் படுகின்றது. இலக்கினம் சூரியன் சந்திரன் குரு இவர்கள் பல ஹீனர்களாகி மற்ற கிரகங்கள் பலமுள்ளவைகளாகி இருப்பின் விருட்ச ஜாதகம் என்று சொல்லவேண்டும். ஜலசம்-ஸ்தலஜம் என்ற விபாகங்கள் விருட்சவர்க்கத்திலுமுண்டு. அதனல் இலக்கின நவாம் சம் ஜலராசியாயின் ஜலவிருட்சமென்றும், ஸ்தலராசியாயின் ஸ்தல விருட்சமென்றும் நிச்சயித்துக் கொள்க.

சு. 20-21. சூரியாதிகளுடைய விருக்ஷ விசேஷ லட்சணம் சொல்லப்படுகின்றது.

சூரியனுக்குக் காதலுள்ளதும் உன்னதமுள்ளதுமான விருட்சமும், சந்திரனுக்கு ஜலம் உள்ளதும் (கரும்பு, பால் முதலானவை) சினேகத்தன்மையுள்ளதும் (தேவதாரு முதலியவை) ஆகிய விருக்ஷமும், செவ்வாய்க்குத் தீட்சணத்தை (எரிவு) யுண்டுபண்ணக் கூடியதும் (சோரங்கொட்டை மிளகு) முள்ளுள்ளதும் ஆன விருக்ஷமும், குருவிற்குப் பலமுள்ள விருக்ஷமும், சனிக்கு நிகிருஷ்டமான விருக்ஷமும், சுக்கிரனுக்குப் பூவும் காயும் சினேகமும் உள்ள விருக்ஷமும், புதனுக்குக் காய்க்காத விருக்ஷமும் (சந்தனம் முதலானவை) ஆம். இவ்விதமாக விருக்ஷங்களின் பேதத்தை ஆலோசித்து இன்ன விருக்ஷமென்று நிர்ணயித்துச் சொல்லவேண்டும்.

சு. 22-23. பாபக்ஷேத்திரத்தில் நிற்கின்ற சுபக்கிரகத்தால் நிகிருஷ்ட பூமியில் (மேன்மையில்லாத பூமி) சிரேஷ்டமான விருக்ஷத்தையும், சுபக்ஷேத்திரத்தில் நிற்கின்ற பாபக்கிரகத்தால் சிரேஷ்ட பூமியில் நிகிருஷ்டமான விருக்ஷத்தையும், பாபக்ஷேத்திரத்தில் நிற்கின்ற பாபக்கிரகத்தால் குச்சித பூமியில் குச்சித விருக்ஷத்தையும், சுபக்ஷேத்திரத்தில் நிற்கின்ற சுபக்கிரகத்தால் சிரேஷ்ட

பூமியில் சிரேஷ்டமான விருக்ஷத்தையும், சுபக்ஷேத்திரத்திலோ பாப க்ஷேத்திரத்திலோ நிற்கின்ற சுபாசுப கிரகங்களுடைய சேர்க்கையினுல் அவ்விதமுள்ள விருக்ஷங்களையும் ஆலோசித்துச் சொல்ல வேண்டும். இலக்கினும்சம் ஜலராசியானுல் ஜலஜங்களான விருக்ஷங்களென்றும், ஸ்தலராசியானுல் ஸ்தலஜங்களான விருக்ஷங்களென்றும் நிச்சயிக்கவேண்டும். ஸ்தலராசி ஜலராசி ஆதிபத்தியமுள்ள கிரகங்களால் ஸ்தலஜங்களாயும் ஜலஜங்களாயும் உள்ள விருக்ஷங்களை நிச்சயிக்கவேண்டும்.

சு. 24-25. ஸ்தலராசியதிபதியோ ஜலராசியதிபதியோ ஆன கிரகம் லக்கினத்திலிருந்து எத்தனையாவது இராசியில் நிற்கின்றதோ அத்தனை ஸ்தலஜங்களாவது ஜலஜங்களாவது விருக்ஷங்கள் உண்டென்று சொல்லவேண்டும். மேற்சொன்னபடி கிரகம் ஸ்வநவாம்சத்திலிருந்து எத்தனையாவது அன்னிய நவாம்சத்தில் நிற்கின்றதோ தத்ஜாதீயங்களான அத்தனை விருக்ஷங்கள் உண்டென்றுஞ் சொல்ல வேண்டும். இங்கு விருக்ஷங்களுடைய தொகை நிச்சயத்திற்கு முன் ஆயுர்த்தாயாத்தியாயத்தில் சொன்னபடி ஸ்வக்ஷேத்திராதி ஸ்திதிக்கு ஏற்பட்ட குணிதங்களைச் செய்துகொள்ள வேண்டும்.

சு. 26. பாபக்கிரகங்கள் பலவான்களாகி ஸ்வநவாம்சத்திலும், சுபக்கிரகங்கள் பலஹீனர்களாக அன்னிய நவாம்சத்திலும், இருந்து இலக்கினம் வியோனியாயின் வியோனி ஜென்மத்தைச் சொல்ல வேண்டும். இலக்கின துவாதசாம்சத்திற்குப் பலமுண்டாயின் அதனுல் வியோனிஜத்தையும் சொல்லவேண்டும்.

சு. 27. பலஹீனர்களாகிய கிரகங்களுடைய ராசிகளில் நிற்கின்றவரும் மௌட்டியம் யுத்தத்தில் தோல்வி க்ஷீணம் பாபயோகம் பாபதிருஷ்டி முதலியவைகளை அடைந்தவருமான கிரகங்கள் வியோனிக்கு நாசத்தைச் செய்கின்றவராகின்றூர்கள்.

சு. 28. 1-உத்பிஜம், (விருக்ஷாதிகள்) 2-சராயுஜம், (மனுஷ்ய மிருகாதிகள்) 3-சுவேதஜம், (கிருமிகீடாதிகள்) 4-அண்டஜம் (பக்ஷி சர்ப்பாதிகள்) என ஜனனம் நான்குவகையாம். இனி இவைகளின் இலட்சணங்கள் கிரகயோகாதிகளைக்கொண்டு தெளிவாய்ச் சொல்லப்படுகின்றன.

சு. 29. கிரகங்கள் முன் சொல்லியவாறு பலஹீனர்களாகி இலக்கினம் மேடமாய் சூரியன் சதுஷ்பாதராசி ஸ்திதனும் இருப்பின் சதுஷ்பாத மிருகங்களின் ஜனனத்தைச் சொல்லவேண்டும்.

சு. 30. இங்கு வியோனி ஜென்மத்தைப்பற்றி நான் சுருக்கமாய்ச் சொன்னேன். இனிமேல் கேட்பவர்களுக்கும் சொல்பவர்களுக்கும் சந்தோஷத்தையுண்டாக்குகின்ற சில விசேஷ லட்சணங்களைச் சொல்லுகின்றேன்.

சு. 31. முன் மேஷாதி 12-இராசிகளிலும் சந்திர துவாதசாம்சங்கொண்டு சத்துவ விசேஷம் சொல்லப்பட்டதல்லவா. அந்த யோகங்களைக்கொண்டு இங்கே யோகாந்தரங்கள் சொல்லப்படுகின்றன.

சு. 32. சந்திரனுடைய துவாதசாம்சம் மேஷமாயின் ஆடு முதலிய ஜனனமும், இடபமாயின் பசு காளை எருமை முதலிய ஜனனமும், மிதுனமாயின் மனுஷ்ய ரூபமுள்ளவைகளின் ஜனனமும் சொல்லவேண்டும்.

சு. 33. சந்திரனுடைய துவாதசாம்சம் கடகமாயின் ஆமை முதலான ஜல ஜந்துக்களின் ஜனனமும், சிம்மமாயின் சிம்மம் புலி நரி நாய் பூனை கடுவாய் முதலிய ஜனனமும், கன்னியாயின் மனுஷ்ய ரூபமுள்ளவைகளின் ஜனனமும் சொல்லவேண்டும்.

சு. 34. சந்திரனுடைய துவாதசாம்சம் துலாமாயின் மனுஷ்யருடைய ஜனனமும், விருச்சிகமாயின் சர்ப்பகீடாதிகளின் ஜனனமும், தநுசின் பூர்வார்த்தமாயின் மனுஷ்யருடைய ஜனனமும், அபரார்த்தமாயின் குதிரை கழுதை முதலானவைகளின் ஜனனமும், மகரத்தின் பூர்வார்த்தமாயின் மான் முயல் மயில் முதலிய ஜனனமும், அபரார்த்தமாயின் தவளை முதலான ஜல சர சத்துவங்களுடைய ஜனனமும் சொல்லவேண்டும்.

சு. 35. மகரத்தின் அபரார்த்தமாயின் சந்திர துவாதசாம்சங்கொண்டு பலவிதமான விருக்ஷ விசேஷங்களும் திருண பேதங்களும் தெரிந்துகொள்ளவேண்டும். சந்திர துவாதசாம்சம் கும்பமாயின் மனுஷ்ய ஜனனமும், மீனமாயின் மீன் முதலான ஜல ஜந்துக்களுடைய ஜனனமும் சொல்லவேண்டும்.

சு. 36. மேஷத்தின் சந்திர துவாதசாம்சங்கொண்டு பல ரூப வியோனி ஜாதிகளைச் சொல்லவேண்டும். இதைப் போலவே மற்ற ராசிகளுக்கும் கண்டு கொள்க.

சு. 37. முதலாவது சொல்லப்பட்ட வியோனி ஜன்ம லட்சணப் பிரகாரம் சந்திர துவாதசாம்சங் கொண்டு புத்திமான்களான

ஜோதிஷர்கள் ஆலோசித்து எல்லா வகைச் சத்துவத்தையும் சொல்ல வேண்டும். லக்கின துவாதசாம்சங் கொண்டு நிரூபிக்கலாமென்று முன்பு சொல்லி யிருப்பது பிரத்தியேகமாக நிரூபிக்க வேண்டும்.

சு. 38. மேஷ துவாதசாம்சங் கொண்டு ஆட்டினை நிரூபிக்கலாமென்று முன்பு சொல்லி யிருக்கின்றதல்லவா. அங்கேயே ஓஜ யுக்மங்கள் ஸ்திரீ புருஷ பேதங்கள் துவிஸ்வ பாவத்துவம் (உபயராசித்துவம்) கிரக யோக திருஷ்டிகள் இவை முதலான பேதங்களைக் கொண்டும் பலவிதமான சத்துவங்களுடைய ஜனனத்தை நிச்சயிக்க வேண்டும்.

சு. 39. நாய், பூனை, எலி முதலானவைகளுடைய ஜனனத்தில் லக்கினத்தில் எத்தனை துவாதசாம்சங்கள் உதிக்கின்றதோ அத்தனை சந்தானம் என்று சொல்ல வேண்டும். ஓஜ கிரகராசிகளைக்கொண்டு புருஷத்துவத்தையும், யுக்ம கிரகராசிகளைக் கொண்டு ஸ்திரீத்துவத்தையும் நிரூபிக்கவேண்டும்.

சு. 40. வியோனி லட்சணமுளதாய் இலக்கினத்தில் குருவோ சனியோ சந்திரனோ இருப்பின் இலக்கின துவாதசாம்ச தொகை யளவு ஆமை முதலானவைகளுடைய ஜனனத்தைச் சொல்ல வேண்டும்.

சு. 41. மேற்சொன்னபடி சுக்கிரனோ செவ்வாயோ புதனோ சந்திரனோ சனியோ இலக்கினத்தில் இருப்பின் ஜனித்த வியோனி சத்துவத்தினுடைய அங்கங்கள் பலமுள்ளவைகளா யிருக்கும்.

சு. 42. கிரகம் ஸ்வக்ஷேத்திராம்சத்தில் இல்லாமல் அன்னிய நவாம்சத்தில் இருப்பின் ஜாதகங்களாகிற வியோனிகளுக்கு சில வித்தியாசங்கள் சம்பவிக்கின்றமையால் புத்திமான்களான ஜோதிஷர்கள் அவைகளையும் நன்கு ஆலோசிக்க வேண்டும். இனி அத்தகைய பேதங்கள் பின்வரும் சுலோகமுதல் கூறப்படுகின்றன.

சு. 43-44. வியோனி ஜன்மலட்சணப் பிரகாரம் இலக்கினம் விருச்சிகமாயும் இலக்கின நவாம்சம் துவிபாத (மிதுன கன்னி துலாம் முதலான மனுஷ்ய) ராசியாயும் வரின் போடு புனம் முதலான விடங்களிலிருக்கின்ற குரூர ஜந்துக்களின் ஜனனத்தையும் உடும்பு, அரணை, கௌளி, பெருச்சாளி, எலி, சர்ப்பம், முள்ளன், கூட்டங் கூட்டமாகச் சஞ்சரிக்கின்ற எறும்பு முதலிய க்ஷுத்திர ஜந்துக்களுடைய ஜனனத்தையும் சொல்லவேண்டும்.

சு. 45-46-47 தநுசின் லக்கினமோ தநுசின் நவாம்சகமோ துவாதசாம்சகமாக வந்து குருவின் திருஷ்டியைப்பெறின் சிலந்தி, கிரி, தேள், வண்டு, விஷமில்லாது புனத்திலும் கல்லினிடையிலும் இருப்பவைகளான சர்ப்ப ஜாதிகள், கழுதை, உத்தம மத்தியம மாதி பேதமுள்ள குதிரைகள், பசு, எருமை, ஒட்டகம் முதலியவைகளின் ஜனனத்தைச் சொல்லவேண்டும்.

சு. 48-49. இலக்கினமாவது நவாம்சமாவது மகரத் துவாத சாம்சமா யிருந்து சனியின் திருஷ்டி யிருப்பின் காட்டு ஜந்துக்களான யானை, வாள்புலி, செந்நாய், எட்டடிமான், பன்றி, குரங்கு, கரடி, நரி, கடுவாய், புலி முதலானவைகளின் ஜனன மென்றறிக.

சு. 50. இலக்கினமாவது நவாம்சமாவது மீனத்துவாதசாம் சமாய் குருவின் திருஷ்டியிருப்பின் பலவிதமான ஜலஜங்களான சத்து வங்களுடைய ஜனனமுண்டாகும்.

சு. 51. இலக்கினமாவது நவாம்சகமாவது மேஷ துவாதசாம் சகமாய் செவ்வாயினுடைய திருஷ்டியைப்பெறின் ஆடுகளும் மேற் சொன்னபடி இடபமாயிருந்து சுக்கிரனுடைய திருஷ்டியைப்பெறின் எருமை, பசு முதலானவைகளும் ஜனிக்கும்.

சு. 52. முன் சொல்லியபடி எல்லா ராசிகளுக்கும் இலக்கின ஸ்திதியும் அந்தந்த ராசியாதிபனுடைய திருஷ்டியும் உண்டாயிருப் பின் ராசி ஸ்வரூபத்தோடு கூடின அதிருசமான சத்துவத்தினுடைய ஜனனத்தைக் சம்சயமில்லாமல் சொல்லலாம்.

சு. 53. கிராம சரங்களான ராசிகள் இலக்கினமாகவும் வன சரங்களான ராசிகள் லக்கின நவாம்சகமாகவும் வரின் கிராமங் களில் காட்டு மிருகங்களின் ஜனனத்தைச் சொல்லவேண்டும்.

சு. 54. நகரராசிகள் லக்கினமாகவும் அதனுடைய நவாம்சம் ஸ்தல ராசியாகவும் வரின் ஸ்தலஜங்களாய சத்துவங்களுடைய ஜனனத்தையும், விருக்ஷங்களுடைய ஜனனத்தையும், மேல் சொன்ன பிரகாரமிருந்து ஜலராசி நவாம்சமாயின் ஜலஜங்களான சத்துவங்க ளுடைய ஜனனத்தையும், விருட்சங்களுடைய ஜனனத்தையும் சொல்லவேண்டும்.

சு. 55. துலா லக்கினமும் துலாத்திரேக்காணமுமாய் சுக்கிர திருஷ்டி யுண்டாயின் கிளி-தத்தை-குயில்-செம்போத்து-பாசம் (கோஷ்டக்குடம்) இவைகளின் ஜனனமென்று நிச்சயித்துக் கூறுக.

சு. 56. சிம்ம லக்கினமும் சிம்மத்திரேக்காணமுமாய் சூரிய திருஷ்டி யுண்டாயின் கிச்சிலி, மயில், கோழி, மாடப்புரு முதலான பட்சிகளுடைய ஜனனமென்று சொல்லுக.

சு. 57. மேற்சொன்னபடி கிராம சரங்களும், நகர சரங்களும் ஆன கிரகங்களுக்கு மற்ற கிரகங்களுடைய யோகமும் திருஷ்டியு முண்டாயின் பவனம் மாளிகை முதலானவைகளில் உற்பத்தியென்று தெரிந்துகொள்ள வேண்டியது. இவ்விதமாக ராசி ராசியம் சக கிரக யோக திருஷ்டிகள் முதலானவைகளையும் அவைகளுடைய பலாபலன்களையும் நன்கு ஆராய்ந்து சகல விதமான வியோனிகளுடைய உற்பவத்தைச் சமர்த்தனுன ஜோதிஷன் நிச்சயித்துச் சொல்லவேண்டுமென்ப.

ஐம்பத்து மூன்றவது அத்தியாயம் முற்றிற்று.

# ஐம்பத்து நான்காவது அத்தியாயம்.

## அஷ்டவர்க்கபலம்.

சு. 1. இந்த அத்தியாயத்தில் அஷ்டவர்க்க பலம் சொல்லப் படுகின்றது.

முதல் சுலோகத்தில் அஷ்டவர்க்கம் இன்ன முறையில் ஆரம் பிக்க வேண்டுமென்பது தெளிவாய்ச் சொல்லப்படுகின்றது. நீளத் தில் 13 ரேகையும் குறுக்கில் 9 ரேகையும் கீற 96 அறையுள்ள ஒரு சக்கரமாகும். இதனையே பிரஸ்தாராஷ்டகவர்க்க மென்பர் பெரியார்.

அதில் ரேகை சமபாதஸ்தானங்களில் ஒரு பக்கம் மேஷ முத லிய பன்னிரண்டு ராசிகளையும் கிரகஸ்திதியையும் அதனதன் ஸ்தா னங்களில் 1-சனி, 2-குரு, 3-செவ்வாய், 4-சூரியன், 5-சுக்கிரன், 6-புதன், 7-சந்திரன், 8-இலக்கினம் இவை யெட்டினையும் கட்சிக் கிரம மநுசரித்து எழுதிக்கொள்க. எந்தக் கிரகத்திற்கு அஷ்டவர்க் கம் வேண்டுமோ அதை 52-ஆம் அத்தியாயத்தில் சொல்லியபடி கிர கங்களுடைய இஷ்ட ஸ்தானங்களில் பிந்துக்களையும் அனிஷ்ட ஸ்தா னங்களில் ரேகைகளையும் கட்சிக்கிரம மநுசரித்து எல்லா ராசிகளி லும் அஷ்டமாம்சங்களைக் கொண்டு சுபா சுப பலன்களைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

பால போதத்திற்காக இங்கு அஷ்டவர்க்கத்தைப்பற்றிய சக்கரம் எழுதப்படுகின்றது. இது 52-ஆம் அத்தியாயம் ஒன்பதாம் சுலோக வியாக்கியானத்தில் உதகரித்துள்ள சந்திரன் அஷ்டவர்க்கமாம்.

உதாரண சந்திராஷ்டவர்க்கம் 429-ஆம் பக்கத்தில் காண்க.

மேஷத்தில் ஐந்து எண்கள் ஆனால் மேஷத்தில் ஐந்து பிந் துக்கள். அந்த பிந்துக்கள் குரு-சூரியன்-புதன்-சந்திரன்-லக்கினம் இந்தக் கிரகங்களுடைய கட்சிகளிலிருக்கின்றன. மேஷ ராசியில் அஷ்டமாம்ச பாகங்களில் பிந்து உள்ள கிரகங்களின் கட்சிகளில் சந் திரன் வருங்காலம் சுபமும், மற்ற பாகங்களில் சந்திரன் வருங்காலம் அசுபமும் உண்டாகின்றன. இதுபோலவே மற்ற ராசிகளுக் கும் கிரகங்களுக்கும் பலன்களைத் தெரிந்துகொள்ளவேண்டும்.

ஓரிராசியை எட்டுப் பாகங்களாக்க வேண்டும். அதில் 1-சனி, 2-குரு, 3-செவ்வாய், 4-சூரியன், 5-சுக்கிரன், 6-புதன், 7-சந்திரன், 8-இலக்கினம் என எட்டுப் பாகங்களாக்கவேண்டும். அவ்வாறு ஆக்கி வரும் கிரகங்களைக் கட்சிக் கிரம வரிசைப்படி பார்க்கின் கடைசிப் பாகத்தில் இலக்கின கட்சி வரும். இவைகள் கிரமமாய்ப் பிரபல மான பலன்களைக் கொடுக்கும்.

| எண். | இராசி கிரக கட்சிக் கிரமம் | மே. | இட | மிது | கட | சிங். | கன் | து. | விரு | தநு | மக. | கும் | மீன | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | விவரம் | ச. | | ல குரு | சந். | | | குபு செ | சு | | | | | |
| 1 | சனி. | — | — | 0 | — | 0 | 0 | — | — | — | — | 0 | — | 4 |
| 2 | குரு. | 0 | — | 0 | 0 | — | 0 | — | — | 0 | 0 | — | 0 | 7 |
| 3 | செவ்வாய். | — | — | 0 | 0 | 0 | — | — | 0 | 0 | — | 0 | 0 | 7 |
| 4 | சூரியன். | 0 | 0 | — | 0 | 0 | — | — | — | 0 | — | — | 0 | 6 |
| 5 | சுக்கிரன். | — | 0 | — | 0 | 0 | 0 | — | — | — | 0 | 0 | 0 | 7 |
| 6 | புதன். | 0 | 0 | — | 0 | 0 | — | 0 | — | 0 | 0 | 0 | — | 8 |
| 7 | சந்திரன். | 0 | 0 | — | 0 | — | 0 | — | — | 0 | 0 | — | — | 6 |
| 8 | இலக்னம். | 0 | — | — | — | 0 | — | — | 0 | — | — | — | 0 | 4 |
| | ஆகபிந்து. | 5 | 4 | 3 | 6 | 6 | 4 | 1 | 2 | 5 | 4 | 4 | 5 | 49 |

இதற்கு மேற்கோள் நரபதி ஜயசரியா சுரோதயம்.

எல்லா ராசிகளிலேயும் கட்சி அதிபர்கள் 1-சனி, 2-குரு, 3-செவ்வாய், 4-சூரியன், 5-சுக்கிரன், 6-புதன், 7-சந்திரன், 8-இலக்கினம் என இவ்விதம் கிரமமாக எட்டுக் கட்சிகளையும் பார்க்கவேண் டும். அஃதாவது ஓரிராசிக்கு 30 பாகைகளானதினால் 30 பாகையை

எட்டுப் பாகம் செய்ய பாகம் ஒன்றுக்கு 3 பாகையும் 45 கலையும் ஏற்படுகின்றது. இந்த 3 பாகை 45 கலை ஒரு கட்சிக்கு ஏற்படுகிறது. இவ்விதம் மற்றவைகளையும் பார்க்கவேண்டும்.

கட்சியின் உதாரணம் :—சூரியஸ்புடம் 6 இராசி, 18 பாகை, 52 கலை, 45 விகலை என்று வைத்துக்கொள்வோம். இதில் சூரியன் யாருடைய கட்சியி லிருக்கின்றாரென்று பார்த்தால் 5 கட்சிக்கு 18 பாகை 45 கலை போக 6-ஆவது கட்சியில் சூரியன் இருக்கிறார். (6-ஆவது கட்சியானது புதன் கட்சி யாகிறது) சூரியன் புதன் கட்சியிலிருக்கின்றாரென்று அறியவேண்டும்.

சூரியகட்சியின் பிரயோசன உதாரணம் :—சூரியன் அஷ்டவர்க்கத்தில் 8 பிந்துள்ள ராசியில் சூரியன் வருகிற சமயம் பூரணபலம். அதில் ஒரு பிந்து குறைந்தால் அது யாருடைய பிந்துவாகிறதோ அந்தக் கிரகத்தின் கட்சியில் சூரியன் நிற்கிறசமயம் தோஷம் உண்டாம். இதுபோல யாருடைய பிந்து இல்லையோ அவர்கள் கட்சியில் சூரியன் வருகிற சமயம் தோஷம் உண்டென்று சொல்லுக.

சூரியன் அஷ்டவர்க்கத்தில் பிந்துவுள்ள கட்சியில் சூரியன் நிற்கிற சமயம் சூரியன் யாதொரு திரவியங்களுக்குக் காரகனோ அந்தத் திரவியங்களையும் சூரியனுக்குத் தாது - மூல - ஜீவன்களில் மூல திரவியமாதலால் மூல திரவிய சம்பந்தமானவைகளையும் கொடுப்பார். மேலும் சூரியன் தான்நின்ற ராசிக்கு எத்தனையாம் பாவத்தில் பிந்து விழுந்திருக்கின்றதோ அந்தப் பாவ பலனும் கொடுப்பார். அதுவுமல்லாமல் அந்தச் சூரியன் எத்தனையாம் பாவாதிபனோ அந்தப் பாவத்திற்கும் எத்தனையாம் பாவத்திலிருக்கின்றாரோ அந்தப் பாவத்திற்குமுள்ள சுபா சுப பலன்களையும் கொடுப்பார்.

அஷ்டவர்க்க கட்சி பலம் :—சூரிய அஷ்ட வர்க்கத்தில் எந்த ராசியில் எந்தக்கிரகத்தின் பிந்து விழுந்திருக்கவில்லையோ அந்த ராசியில் அவருடைய கட்சியில் சூரியன் சஞ்சரிக்கிற காலம் அந்தக் கட்சி நாதனும் சூரியனும் தமக்குரிய அசுபங்களையும், அந்த இராசி, கட்சிநாதன் நிற்கிற ராசியிலிருந்து எத்தனையாம் பாவமாகிறதோ அந்தப் பாவத்திற்கும் சூரிய லக்கினாதிபதிக்கு எத்தனையாம் பாவாதிபனாகிறாரோ அந்தப்பாவத்திற்கும் உரிய அசுப பலன்களையும் கொடுப்பாரென்று சொல்லவேண்டும்.

சூரியனுக்குக் கட்சி பல உதாரணம் :—சூரியாஷ்ட வர்க்கத்தில் பிந்துவுள்ள கட்சியில் சூரியன் நிற்கிற சமயம் சூரியன் யாதொரு திரவியங்களின் காரகனே அந்தத் திரவியங்களைச் சம்பந்தித்தும், தாது-மூல-ஜீவன்களில் சூரியனுக்குச் சொன்ன மூல திரவியங்களைச் சம்பந்தித்தும், அந்தப் பிந்து தாதாவாயிருக்கின்ற கிரகத்தினின்று எத்தனையாம் பாவத்தில் விழுந்திருக்கிறதோ அந்தப் பாவத்தைச் சம்பந்தித்தும், சூரியன் லக்கினத்தில் நின்று எத்தனையாம் பாவாதிபனாயிருக்கின்றானோ அந்தப் பாவத்தைச் சம்பந்தித்தும் உள்ள சுபங்கள் (அநுபவம்) உண்டாகும். அதுமாத்திரமுமல்ல அந்தப் பிந்து யாருடையதாயிருக்கின்றதோ அந்தப் பிந்து தாத்ருகிரகம் எந்தத் திரவியங்களுடைய காரகராகிறாரோ அந்தத் திரவியங்களைச் சம்பந்தித்தும் உள்ள சுபங்கள் (அநுபவம்) உண்டாகுமென்று சொல்ல வேண்டும்.

கட்சி பலம் :—பிந்தில்லாத விராசியில் கிரகம் நிற்கிற காலம் முழுவதும் அசுப பலம். இதுபோல 8-பிந்துள்ள விராசியில் கிரகம் நிற்கிற காலம் முழுவதும் சுப பலம். ஒரு ராசியில் 7-பிந்திருந்தாலும் யாருடைய பிந்து இல்லாதிருந்ததோ அந்தக் கிரகத்தின் கட்சியில் அந்த ராசியில் கிரகம் வருகிற காலம் மாத்திரம் அசுப பலமும், பிந்து விழுந்திருக்கின்ற 7-பேர்களுடைய கட்சியில் கிரகம் வருகிற காலம் முழுவதும் சுப பலமும் உண்டாகும். அதுபோல ஒரு ராசியில் ஒரு பிந்து மாத்திரம் விழுந்திருந்தால் அந்தப் பிந்து யாருடையதாகிறதோ அந்தக்கட்சியில் மாத்திரம் சுபமும், சேஷம் 7-கட்சிகளில் கிரகம் நிற்கிற காலமெல்லாம் அசுபமும் உண்டாகும். இந்த நியாயப்பிரகாரம் எல்லா ராசிகளிலும் எந்தெந்தக் கட்சிகளில் சுபமென்றும் எந்தெந்தக் கட்சிகளில் அசுபமென்றும் அறிந்துகொள்ள வேண்டும்.

• இதுபோலவே சந்திரன் முதலான கிரகங்களின் அஷ்டவர்க்கங்களினும் கட்சி கிரம பலன்களைப் பார்க்க வேண்டும்.

ஒரு கிரகத்தின் சார பலம் பார்க்கவேண்டுமானால் அந்தக் கிரகமும் அந்தக் கிரகம் நிற்கின்ற கட்சியாதிபனும் பலவான்களாயிருந்தால் கட்சியாதிபனுக்கும் தனக்குமுள்ள சுப பலன்களுண்டாகும்.

பலம் கொடுக்கிற கிரகம் துர்ப்பலமாய்ச் சத்துரு-நீச க்ஷேத்திரத்திலோ அநுபஜயத்திலோ (2-4-5-7-8-9-12-1) இருக்கின் பலம் பூர்ணமாய் உண்டாகாது.

அந்தக் கிரகம் தன்னுடைய உச்சத்திலோ சுய க்ஷேத்திரத்திலோ மித்துரு க்ஷேத்திரத்திலோ உப ஜயத்திலோ (3-6-10-11) இருக்கின் பலம் பூர்ணமாக உண்டாகும்.

உதாரணம் :—சூரியன் அஷ்டவர்க்கத்தில் மேஷ விராசியில் நான்கு பிந்துக்கள் விழுந்திருக்கின்றதென்று வைத்துக்கொள்வோம். அந்தப் பிந்துக்கள் நான்கும் யாருடைய பிந்தாகிறதோ (மேஷவிராசியில்) அதனுடைய எல்லாக் கட்சிகளிலும் சூரியன் நிற்கிறகாலம் சூரியனுக்குச் சொன்ன சுப பலன்களும் பிந்தில்லாத நான்கு கட்சிகளில் சூரியன் சஞ்சாரகாலம் (கோசாரரீதியாய்) சூரியனுக்குச் சொன்ன அசுப பலன்களும் உண்டாகும்.

இஃதல்லாமலும் யாருடைய பிந்து இருக்கின்றதோ அந்தப் பிந்து தாத்ரு கிரகம் எந்தத் திரவியங்களுக்குக் காரகனாகிறாரோ அந்தத் திரவியங்களைச் சம்பந்தித்தும் அந்தக் கிரகங்களுக்குச் சொல்லியிருக்கிற தாது மூலங்களை சம்பந்தித்தும் அந்தக் கிரகம் லக்கினத்திலிருந்து எத்தனையாம் பாவத்தில் நிற்கின்றாரோ அந்தப் பாவத்தைச் சம்பந்தித்தும் சுபங்கள் உண்டாகுமென்றும் சொல்லவேண்டும்.

குறிப்பு: கிரகங்களுடைய திரவியங்கள்பற்றி வராஹ ஹோரை 10-ஆவது அத்தியாயத்திலும், பலதீபிகை 5-ஆவது அத்தியாயத்திலும், கிரகபலம் வராஹ ஹோரை 8-ஆவது அத்தியாயத்திலும், காரகங்கள் பலதீபிகை 2-ஆவது அத்தியாயத்திலும், பாவ பலம் பல தீபிகை முதல் அத்தியாயம் 10-ஆவது சுலோக முதலிலும் பார்த்து பலன்கள் கூறவேண்டும்.

அஷ்டவர்க்கத்தில் பிந்து எடுபடுகிற கிரமம் :—

எல்லாக் கிரகங்களுக்கும் அஷ்டவர்க்கம் பலதீபிகை முதலான கிரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் யாருடைய பிந்து முன்னால் விழுந்ததோ அவருடைய பிந்து முன்னால் எடுபடும் என்று பிருகத் வராஹ ஹோரை கூறுகின்றது.

அஃதாவது :—சூரியாஷ்டவர்க்கத்தின் ஆதிபரல் 1-சூரியன், 2-செவ்வாய், 3-சனி, 4-சுக்கிரன், 5-குரு, 6-சந்திரன், 7-புதன், 8-இலக்னம் ஆகிய இந்தக்கிரமப்படி பரல்களைப் போட்டு பிற்பாடு திரிகோண சோதனை ஏகாதிபத்திய சோதனை கழித்துப்பார்க்கும் போது இதில் எடுபட்டிருக்கும் பிந்துக்கள் யாருடையதெனின் முன்

னதாக சூரிய பிந்துவும், பின் ஒன்றன் பின் ஒன்ருய் முறையே செவ்வாய், சனி, சுக்கிரன், குரு, சந்திரன், புதன், இலக்கினம் வரையுமுள்ள கிரகாதியர்கள் பிந்துக்களும் எடுபடுமென்ப.

இந்தப்படியே மற்றைய கிரகங்களின் வரிசைக் கிரமங்களேயும் வராஹ ஹோராஷ்டவர்க்கத்திற் காண்க.

சூரியன் சமுதாயாஷ்டவர்க்கத்தில் சமுசாயத்தில் மேஷத்தில் சூரியன் 1, செவ்வாய் 1, சனி 1, சுக்கிரன் 1, குரு 1, சந்திரன் 1, இலக்கினம் 1-ஆக பிந்து 7-ம், சிங்கத்தில் சூரியன் 1, செவ்வாய் 1, புதன் 1, இலக்கினம் 1-ஆக பிந்து 4-ம் தநுசில் சனி 1, சந்திரன் 1, புதன் 1.ஆக பிந்து 3-ம் இருப்பதைத் திரிகோண சோதனே செய்ய மேஷத்தில் 3, சிங்கத்தில் 3, தநுசில் 3 ஆக இருக்கின்றன.

மேஷத்தில் இருக்கும் பிந்துக்கள் 7-ல் நான்கு பிந்துக்கள் போய்விட்டன, யாருக்கெனின் (வராஹ ஹோரைப்படி) முன்னல் சூரியனுல் கொடுக்கப்பட்ட பிந்து 1-ம், பிறகு செவ்வாயால் கொடுக்கப்பட்ட பிந்து 1-ம், பின்பு சனியினுல் கொடுக்கப்பட்ட பிந்து 1-ம் பின் சுக்கிரனுல் கொடுக்கப்பட்ட பிந்து 1-ம், ஆக நான்கு பேர்களால் கொடுக்கப்பட்ட பிந்துக்கள் போயிருக்கின்றனவென்றறிதல் வேண்டும். மிகுதியுள்ள பிந்துக்கள் 3-ம் அவையாவன:—குருவினுல் கொடுக்கப்பட்ட பிந்து 1-ம், சந்திரனுல் கொடுக்கப்பட்ட பிந்து 1-ம், இலக்கினத்தினுல் கொடுக்கப்பட்ட பிந்து 1-ம் ஆக மூன்று பிந்துக்கள் இருக்கின்றனவென்று தெளிதல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | சனி - கேது | | லக்னம் குரு |
| | கிரகநிலே. | | சந்திரன் |
| | | | |
| | சுக்கிரன் | சூரி - செவ் புத - ராகு | |

இவ்வஷ்டவர்க்க விவரங்கள் யாவும் என்னுல் வெளியிடப் பேற்ற மந்த்ரேஸ்வரீயம் என்னும் பலதீபிகையிற் காண்க.

<table>
<tr><td>புதன் 1<br>லக்கினம் 1<br>ஆகபிந்து 2.</td><td>சூரியன் 1<br>செவ்வாய் 1<br>சனி 1<br>சுக்கிரன் 1<br>குரு 1<br>சந்திரன் 1<br>லக்கினம் 1<br>ஆகபிந்து 7.</td><td>சூரியன் 1<br>செவ்வாய் 1<br>சனி 1<br>சுக்கிரன் 1<br>சந்திரன் 1<br>லக்கினம் 1<br>ஆகபிந்து 6.</td><td>சூரியன் 1<br>செவ்வாய் 1<br>புதன் 1<br>ஆகபிந்து 3.</td></tr>
<tr><td>சனி 1<br>குரு 1<br>புதன் 1<br>ஆகபிந்து 3.</td><td colspan="2" rowspan="2">சூரியன்<br>அஷ்டவர்க்க சமுதாய<br>பிந்து 48-க்கு<br>விவரம்.</td><td>சூரியன் 1<br>செவ்வாய் 1<br>சனி 1<br>புதன் 1<br>ஆகபிந்து 4.</td></tr>
<tr><td>சூரியன் 1<br>செவ்வாய் 1<br>சனி 1<br>ஆகபிந்து 3.</td><td>சூரியன் 1<br>செவ்வாய் 1<br>புதன் 1<br>லக்கினம் 1<br>ஆகபிந்து 4.</td></tr>
<tr><td>சனி 1<br>சந்திரன் 1<br>புதன் 1<br>ஆகபிந்து 3.</td><td>சூரியன் 1<br>செவ்வாய் 1<br>சனி 1<br>குரு 1<br>லக்கினம் 1<br>ஆகபிந்து 5.</td><td>சூரியன் 1<br>செவ்வாய் 1<br>சனி 1<br>சுக்கிரன் 1<br>குரு 1<br>ஆகபிந்து 5.</td><td>சந்திரன் 1<br>புதன் 1<br>லக்கினம் 1<br>ஆகபிந்து 3.</td></tr>
</table>

<table>
<tr><td>2</td><td>3</td><td>3</td><td>3</td></tr>
<tr><td>3</td><td colspan="2" rowspan="2">சூரியன்<br>திரிகோண சோதனை<br>33.</td><td>2</td></tr>
<tr><td>3</td><td>3</td></tr>
<tr><td>3</td><td>2</td><td>3</td><td>3</td></tr>
</table>

பிரஸ்தாராஷ்டகவர்க்கம்

| இராசி | சனி | குரு | செவ் | சூரி | சுக் | புதன் | சந்தி | இலக் |
|---|---|---|---|---|---|---|---|---|
| மேஷம் | 3 | 7 | 4 | 4 | 4 | 1 | 3 | 7 |
| விருஷபம் | 2 | 3 | 4 | 5 | 2 | 2 | 1 | 1 |
| மிதுனம் | 4 | 2 | 4 | 3 | 3 | 5 | 7 | 5 |
| கடகம் | 4 | 2 | 6 | 5 | 4 | 5 | 2 | 3 |
| சிங்கம் | 4 | 1 | 7 | 7 | 3 | 7 | 3 | 5 |
| கன்னி | 3 | 2 | 2 | 2 | 6 | 3 | 5 | 5 |
| துலாம் | 3 | 3 | 4 | 3 | 3 | 3 | 2 | 2 |
| விருச்சிகம் | 4 | 2 | 5 | 3 | 2 | 1 | 2 | 6 |
| தநுசு | 4 | 4 | 3 | 3 | 3 | 5 | 8 | 1 |
| மகரம் | 4 | 1 | 5 | 3 | 3 | 2 | 2 | 2 |
| கும்பம் | 6 | 2 | 2 | 2 | 3 | 6 | 2 | 2 |
| மீனம் | 1 | 4 | 3 | 3 | 4 | 6 | 2 | 6 |

இந்தப் பிரஸ்தாராஷ்டக வர்க்கத்தில் கிரகம் நின்ற ராசி முதல் 12 இராசிக்கும் முறையாக சர்வாஷ்டக வர்க்க வாக்கியப்படி போடவும். இது ஒவ்வொரு கிரகமும் ஒவ்வொரு இராசியில் எத்தனை பிந்து கொடுத்திருக்கின்றார்களென்பதை எளிதில் தெரிதற்குப் பயன்படும். அஃதாவது சூரியன் முதல் சனிவரையு முள்ள அஷ்டவர்க்கங்களில் சனி மேஷத்தில் மூன்று பிந்துக்கள் கொடுத்திருக்கின்றார் என்பதைச் சுலபமாய் அறியலாம்.

சு. 2. எல்லாக் கிரகங்களுக்கும் *அஷ்டவர்க்கம் கணித்து அவ்வஷ்டவர்க்கங்க ளொவ்வொன்றிலும் கிரகங்களுள்ள ராசியில் 8 பிந்துக்கள் பூரணமாயிருப்பின் அரசனே அரச சமானனே ஆவன். ஏழு பிந்துக்களிருப்பின் ஐசுவரியப் பெருக்கமுண்டாகும். ஆறு பிந்துக்களிருப்பின் ஸ்திரீ போகாதி சுகமுண்டாகும். ஐந்து பிந்துக்களிருப்பின் இஷ்டபந்துக்களின் லாபமுண்டாகும். நான்கு பிந்துக்களிருப்பின் ஆபத்தும் சம்பத்தும் இல்லாமலிருக்கும். மூன்று பிந்துக்களிருப்பின் தனஹானி யுண்டாகும். இரண்டு பிந்துக்க ளிருப்பின் ரோகமும் அதிக துக்கமுமுண்டாகும். ஒரு பிந்து இருப்பின் பல வழியிலும் குறைவுண்டாகும். பிந்து சூன்னியமா யிருப்பின் மரணமுண்டாகும். இனி தனித்தனியாய் அஷ்டவர்க் கங்களின் பலன்கள் சொல்லப்படுகின்றன.

மேஷாதியாய் எவ்விராசிகளில் 8 பிந்துக்கள் இருக்கின்றனவோ, அவ்விராசிகளின் பாவங்கள் தமக்குரிய புஷ்டியையும் தேஜஸையும் பலத்தையும் உண்டாக்கும்.

6-5-7 ஆகிய இப் பிந்துக்களுள்ள இராசிகளின் பாவங்கள் சுபத்தைக் கொடுக்கும். 3-2-1 இந்தப் பிந்துக்களுள்ள இராசி பாவங்கள் அசுபங்களைக் கொடுக்கும்.

4 பிந்துக்களுள்ள ராசி பாவங்கள் மிசிரபலனைக் கொடுக்கும். பிந்தில்லாத விராசி பாவங்கள் ரோகம் அபவாதம் இவற்றைத் தரும்.

கிரகங்களுக்குத் தனித்தனி அவரவர்களின் அஷ்டவருக்கத்தின் மேட முதலான விராசிகளைக்கொண்டு பிந்து பலன் கூறல் வேண்டும்.

பிந்து சூன்யமான பாவங்களிலும் பகைநீச விராசிகளிலும் இருக்கின்ற கிரக தசையில் சந்தேகமில்லாது வியாதி தனநாசம் முதலியன உண்டாமென்க.

1-2-3 பிந்துக்களுள்ள இராசிகளிலிருக்கும் கிரகங்களது தசை யில் தனம் தானியம் பசு இவை நாசமாம்.

4 பிந்துக்களிருக்கும் இராசியிலுள்ள கிரகதசை மத்தியமாம். 5 பிந்துக்களுக்கு மேல் குணமதிகமாம். 8 பிந்துக்கள் சமஸ்த

* 1 சமுதாயம், 2. திரிகோணம், 3. ஏகாதிபத்தியம், 4. குணசமுகம், 5. இராசிகுணகாரம், 6. கிரககுணகாரம், 7. சுத்தபிண்டம், 8, ஏகசமுகம் என்பன.

சித்தியையுமுண்டாக்கும். இவை ஸ்வக்ஷேத்திரத்தும் உபஜய ஸ்தானத்தும் பலமுடையனவாம்.

சு. 3. சூரியனஷ்டவர்க்கத்தில் 8-பிந்துக்கள் உள்ள ராசியில் சூரியன் சஞ்சரிக்குங்காலம் அரசனிடமிருந்து ஐசுவரிய லாப முண்டாகும் 7-பிந்துக்கள் உள்ளராசியில் சூரியன் சஞ்சரிக்குங் காலம் அதிசயிக்கத் தகுந்த பொருளும் புகழும் சுகமு முண்டாகும். 6-பிந்துக்கள் உள்ள ராசியில் சூரியன் சஞ்சரிக்குங் காலம் பிரதாப சக்தி யுண்டாகும். 5-பிந்துக்கள் உள்ள ராசியில் சூரியன் சஞ்சரிக்குங் காலம் அர்த்த லாபமுண்டாகும். 4-பிந்துக்கள் உள்ள ராசியில் சூரியன் சஞ்சரிக்குங் காலம் சுபாசுப சமத்துவம் உண்டாகும். 3-பிந்துக்கள் உள்ள ராசியில் சூரியன் சஞ்சரிக்குங்காலம் சஞ்சார முண்டாகும். 2-பிந்துக்கள் உள்ள ராசியில் சூரியன் சஞ்சரிக்குங் காலம் பாபகர்ம செய்கை யுண்டாகும். 1-பிந்துவுள்ள ராசியில் சூரியன் சஞ்சரிக்குங்காலம் ரோக பயமுண்டாகும். பிந்துசூன்யமாயுள்ள ராசியில் சூரியன் சஞ்சரிக்குங் காலம் மரணம் உண்டாகும்.

சு. 4. சந்திரனஷ்டவர்க்கத்தில் 8-பிந்துக்கள் உள்ளராசியில் சந்திரன் சஞ்சரிக்குங் காலம் ஐசுவரியமும் சோபையும் பந்துக்களும் உண்டாகும். 7-பிந்துக்கள் உள்ளராசியில் சந்திரன் சஞ்சரிக்குங் காலம் வஸ்திரம் அன்னபானம் சுகந்தவஸ்து உற்சவம் இவைகளின் பிராப்தி யுண்டாகும். 6-பிந்துக்கள் உள்ள ராசியில் சந்திரன் சஞ்சரிக்குங் காலம் நல்ல மந்திரமும் பிராம்மண சம்சர்க்கமும் உண்டாகும். 5-பிந்துக்கள் உள்ள ராசியில் சந்திரன் சஞ்சரிக்குங் காலம் தைரியத்தோடு கூடிய சுகஸ்திதி யுண்டாகும். 4-பிந்துக்கள் உள்ள ராசியில் சந்திரன் சஞ்சரிக்குங் காலம் சுகதுக்கங்கள் சமமாக உண்டாகும். 3-பிந்துக்கள் உள்ளராசியில் சந்திரன் சஞ்சரிக்குங்காலம் பந்துக்களுடன் விரோதமுண்டாகும். 2-பிந்துக்கள் உள்ள ராசியில் சந்திரன் சஞ்சரிக்குங் காலம் களத்திரகாரணமாகவும் அர்த்த காரணமாகவும் கலகமுண்டாகும். 1-பிந்துவுள்ள ராசியில் சந்திரன் சஞ்சரிக்குங் காலம் அகாரணமாய்த் தடுக்க முடியாத ஆபத்துண்டாகும். பிந்து சூன்யமாயுள்ள ராசியில் சந்திரன் சஞ்சரிக்குங் காலம் துக்கம் பயம் மரணம் முதலான அனர்த்தங்களுண்டாகும்.

சு. 5. செவ்வாய் அஷ்டவர்க்கத்தில் 8-பிந்துக்கள் உள்ள ராசியில் செவ்வாய் சஞ்சரிக்குங் காலம் தனலாபம் பூமிலாபம் சத்துரு

ஜெயம் இவைகள் உண்டாகும் 7-பிந்துக்கள் உள்ள ராசியில் செவ்வாய் சஞ்சரிக்குங்காலம் சௌபாக்கியமும் அழகுமுண்டாகும். 6-பிந்துக்கள் உள்ள ராசியில் செவ்வாய் சஞ்சரிக்குங் காலம் அரசனிடம் இஷ்டமுண்டாகும். 5-பிந்துக்கள் உள்ள ராசியில் செவ்வாய் சஞ்சரிக்குங் காலம் பிரசித்தமான குணங்களுடைய சித்தி யுண்டாகும். 4-பிந்துக்கள் உள்ள ராசியில் செவ்வாய் சஞ்சரிக்குங் காலம் சுகமும் துக்கமும் சமமாக உண்டாகும். 3-பிந்துக்கள் உள்ள ராசியில் செவ்வாய் சஞ்சரிக்குங் காலம் சகோதரர் களத்திரம் இவர்களின் பிரிவுண்டாகும். 2-பிந்துக்கள் உள்ள ராசியில் செவ்வாய் சஞ்சரிக்குங் காலம் ஆபத்தும் தோல்வியுமுண்டாகும், 1-பிந்துவுள்ள ராசியில் செவ்வாய் சஞ்சரிக்குங் காலம் அரசன் ஆயுதம் அக்கினி பித்தம் சுரம் வைசூரி முதலியவைகளால் பீடை உண்டாகும். பிந்து சூன்யமாயுள்ள ராசியில் செவ்வாய் சஞ்சரிக்குங் காலம் உதர ரோகம் மோகாலஸ்யம் நேத்திர ரோகம் மரணம் ஆகிய இவையுண்டாகும்.

சு. 6. புதனஷ்டவர்க்கத்தில் 8-பிந்துக்கள் உள்ள ராசியில் புதன் சஞ்சரிக்குங் காலம் அரசர்களால் வெகுமான முண்டாம். 7-பிந்துக்கள் உள்ள ராசியில் புதன் சஞ்சரிக்குங் காலம் தனம் புத்தி அறிவு சுகம் இவைகளின் லாபமுண்டாகும். 6-பிந்துக்கள் உள்ள ராசியில் புதன் சஞ்சரிக்குங் காலம் எல்லா உற்சாகங்களும் பல சித்தியுமுண்டாகும். 5-பிந்துக்கள் உள்ள ராசியில் புதன் சஞ்சரிக்குங் காலம் நூதன பந்துக்களின் பிராப்தி யுண்டாகும். 4-பிந்துக்கள் உள்ள ராசியில் புதன் சஞ்சரிக்குங் காலம் ஒன்றிலும் பிரியமில்லாமை யுண்டாகும். 3-பிந்துக்கள் உள்ள ராசியில் புதன் சஞ்சரிக்குங் காலம் மனோ விசாரத்தால் பிரமை யுண்டாகும். 2-பிந்துக்கள் உள்ள ராசியில் புதன் சஞ்சரிக்குங் காலம் திரிதோஷ கோபத்தால் ரோகமுண்டாகும். 1-பிந்துவுள்ள ராசியில் புதன் சஞ்சரிக்குங் காலம் பலாத்காரத்தால் பந்தனத்தி லகப்படுதலும் ஆயுதங்களினால் துக்கமும் உண்டாகும். பிந்து சூன்யமாயுள்ள ராசியில் புதன் சஞ்சரிக்குங் காலம் எல்லாவற்றிற்கும் நாசமும் தனமூலம் மரணமும் உண்டாகும்.

சு. 7. குரு அஷ்டவர்க்கத்தில் 8-பிந்துக்கள் உள்ள ராசியில் குரு சஞ்சரிக்குங் காலம் அரசஸ்தானம் உண்டாகும். அல்லது அதற்குச் சமானமான ஐசுவரியம் உண்டாகும். 7-பிந்துக்கள் உள்ள ராசியில் குரு சஞ்சரிக்குங் காலம் பல விதமான திரவியங்களும் சுகங்களும் லாபமும் உண்டாகும். 6-பிந்துக்கள் உள்ள ராசியில் குரு

சஞ்சரிக்குங் காலம் வஸ்திரம் வாகனம் சுவர்ணம் இவைகளினால் லாப முண்டாகும். 5-பிந்துக்கள் உள்ள ராசியில் குரு சஞ்சரிக்குங் காலம் பிரவிருத்திகளின் சித்தியும் சத்துருக்களின் நாசமும் உண்டாகும் 4-பிந்துக்கள் உள்ள ராசியில் குரு சஞ்சரிக்குங் காலம் லாபமும் நஷ்டமும் சமமாக உண்டாகும். 3-பிந்துக்கள் உள்ளராசியில் குரு சஞ்சரிக்குங் காலம் நேத்திர ரோகமும் தாது க்ஷயமும் பௌருஷத்திற்குக் குறைவும் உண்டாகும். 2-பிந்துக்கள் உள்ள ராசியில் குரு சஞ்சரிக்குங் காலம் அரச விரோதமுண்டாகும். 1-பிந்துவுள்ள ராசியில் குரு சஞ்சரிக்குங் காலம் தனத்திற்கும் பந்துக்களுக்கும் நாச முண்டாகும். பிந்து சூனியமாயுள்ள ராசியில் குரு சஞ்சரிக்குங் காலம் தனத்திற்கும் புத்திரருக்கும் புத்திக்கும் நாசமுண்டாகும்.

சு. 8. சுக்கிரனஷ்ட வர்க்கத்தில் 8-பிந்துக்கள் உள்ள ராசியில் சுக்கிரன் சஞ்சரிக்குங்காலம் பலவிதமான சுகசாதனங்கள் வஸ்திரங்கள் ஸ்திரீகள் புஷ்பங்கள் அன்னபானாதி வஸ்துக்கள் ஆகிய இவைகளின் லாபம் உண்டாகும். 7-பிந்துக்கள் உள்ள ராசியில் சுக்கிரன் சஞ்சரிக்குங் காலம் ஆபரணங்கள் முத்து மணிகள் இவைகளின் லாபமுண்டாகும். 6-பிந்துக்கள் உள்ள ராசியில் சுக்கிரன் சஞ்சரிக்குங் காலம் இஷ்ட களத்திர லாபமுண்டாகும். 5-பிந்துக்கள் உள்ள ராசியில் சுக்கிரன் சஞ்சரிக்குங் காலம் பந்துக்களின் சேர்க்கை உண்டாகும். 4-பிந்துக்கள் உள்ள ராசியில் சுக்கிரன் சஞ்சரிக்குங் காலம் சுபாசுப சமத்துவம் உண்டாகும். 3-பிந்துக்கள் உள்ள ராசியில் சுக்கிரன் சஞ்சரிக்குங் காலம் தேசத்திலுள்ளவர்களோடும் கிராமத்திலுள்ளவர்களோடும் விரோதமும் அருசியுமுண்டாகும். 2-பிந்துக்கள் உள்ள ராசியில் சுக்கிரன் சஞ்சரிக்குங் காலம் ஸ்தானப் பிரஷ்டமும் மனோ ரோகமும் உண்டாகும். 1-பிந்துவுள்ள ராசியில் சுக்கிரன் சஞ்சரிக்குங்காலம் கபம் ஜலம் விஷம் இவைகளினால் பய முண்டாகும். பிந்து சூன்யமாயுள்ள ராசியில் சுக்கிரன் சஞ்சரிக்குங் காலம் பலவிதத்திலும் ஆபத்துக்களுண்டாகும்.

சு. 9. சனி அஷ்ட வர்க்கத்தில் 8-பிந்துக்கள் உள்ள ராசியில் சனி சஞ்சரிக்குங் காலம் கிராமம் நகரம் தேசம் இவைகளுடைய ஆதிபத்திய முண்டாகும். 7-பிந்துக்கள் உள்ள ராசியில் சனி சஞ்சரிக்குங் காலம் தாசி கழுதை ஒட்டகம் முதலியவைகளால் லாபமுண்டாகும். 6-பிந்துக்கள் உள்ள ராசியில் சனி சஞ்சரிக்குங் காலம் கள்ளர்களினாலும் காடர்களினாலும் சேனா நாயகர்களினாலும் நன்மை உண்டாகும். 5-பிந்துக்கள் உள்ள ராசியில் சனி சஞ்சரிக்குக்குங்காலம்

தனதானியாதிகளின் லாபமுண்டாகும். 4-பிந்துக்கள் உள்ள ராசியில் சனி சஞ்சரிக்குங் காலம் அதிகமான துக்கமும் சுகமுமில்லாத நிலைமையுண்டாகும். 3-பிந்துக்கள் உள்ள ராசியில் சனி சஞ்சரிக்குங் காலம் சுகத்திற்கும் புத்திக்கும் வேலையாளுக்கும் நாசம் உண்டாகும். 2-பிந்துக்கள் உள்ள ராசியில் சனி சஞ்சரிக்குங் காலம் பந்தனமும் பயமும் ரோகமும் உண்டாகும். 1-பிந்துவுள்ள ராசியில் சனி சஞ்சரிக்குங் காலம் அதிக அசுத்தமுண்டாகும். பிந்து சூன்யமாயுள்ள ராசியில் சனி சஞ்சரிக்குங் காலம் பாக்கியம் முதலான சர்வத்திற்கும் நாசம் உண்டாகும்.

இவ்விதம் சூரியன் முதல் சனி வரையிலுள்ள அஷ்டவர்க்க பலன்கள் தெளிவாய்ச் சொல்லப்பட்டன. இவை சாமானிய பலன்கள். இதுவன்றி சமுதாயாஷ்ட வர்க்கம் என்று வேறொன்றுண்டு. அஷ்ட வர்க்கத்தின் விசேஷ பலன்களும் திரிகோணம் ஏகாதிப்த்தியம் முதலான சோதனைகளும் அவற்றின் கணிதக் கிரியைகளும் அவைகளின் பலன்களும் இதர நூல்களில் சொல்லப்பட்டுள்ளன. ஆசிரியர் மூலத்தில் சொல்லாமையாலும் விஸ்தார பயத்தினாலும் இங்கு விவரிக்கவில்லை. (இஃது உரையாசிரியர் கூற்று)

சு. 10. இவ்விதமாக கல்யாண வர்மா எனும் பண்டிதனாகிய என்னால் பூர்வாசாரிய பிரணீதங்களாகிய கிரந்தங்களை ஆராய்ந்து அவைகளுடைய சாரத்தை மட்டும் தொகுத்து சாராவளியென்ற இந்த ஓரா சாஸ்திரம் இயற்றப்பட்டது.

சு. 11-12. பௌலிசன்-ரோமசன்-வசிஷ்டன்-யவனன்-பாதராயணன் - சக்தி - அத்திரி - பாரத்வாஜன் - விஸ்வாமித்திரன் - குடன்-அக்னி கேசன்-கர்க்கன்-மனு-காசியபன் முதலிய 18 ஆசாரியர்கள் ஹோரா சாஸ்திரத்தை அதிக விஸ்தாரமாக இயற்றியுள்ளார்கள். அவற்றைத்தழுவி ஜாதக பல பிரதானமான இந்நூல் என்னால் இங்ஙனம் இயற்றப்பட்டது. சுபம். சுபம். சுபம்.

கல்யாண வர்மன் கழலடி வாழ்க.

**ஐம்பத்து நான்காவது அத்தியாயம் முற்றிற்று.**

சாராவளி முற்றுப்பெற்றது.

Kesari Printing Works, Madras.

READY FOR SALE.

A RARE WORK ON ASTROLOGY.

Kalidasa's

उत्तरकालामृतम्

# UTTARAKALAMRITA.

In 2 Kandas containing more than 350 Slokas. (pp. 335 8vo.)

A rare and valuable publication with English translation and copious notes containing the essence of the principles laid down by ancient Rishis, illustrated by about 86 charts by **Pandita bhushana V. Subrahmanya Sastri, B. A.**, Retired Assistant Secretary to the Government of Mysore and Translator of **Brihat Jataka, Jatakaparijata,, Phaladeepika, and Sripatipaddhati.** The marvellous revelations of the hidden truths will be verified by the reader once he peruses the book. The indefinite science has been rendered by the author as definite and the vagaries in prediction are brought down to definiteness. The **Annual Prediction** is a speciality dealt in this book.

PRICE PER COPY.

| | | Rs. | A. | P. |
|---|---|---|---|---|
| Full cloth, gilt | ... | 4 | 0 | 0 |
| do. ordinary | ..., | 3 | 12 | 0 |
| Half cloth | ... | 3 | 8 | 0 |

[Postage extra 7 annas in each of the above.]

## Other astrological works translated by the same author—

| | | | Rs. | A. | P. |
|---|---|---|---|---|---|
| 1. Brihat Jataka with English Translation and Notes. (8vo. 616 pp.) | | | | | |
| | Half leather gilt | ... | 10 | 0 | 0 |
| | Full cloth | ... | 8 | 8 | 0 |
| | Half cloth | ... | 8 | 0 | 0 |
| [Postage 9 annas extra.] | | | | | |
| 2. Jatakaparijata in 2 volumes with English Translation and Notes. (8vo. 1360 pp.) | | | | | |
| | Half leather gilt | ... | 16 | 0 | 0 |
| | Full cloth | ... | 14 | 0 | 0 |
| | Half cloth | ... | 13 | 0 | 0 |
| [Postage Rs. 1-2-0 extra.] | | | | | |
| 3. Phaladeepika, with English Translation and Notes. (8vo. 464 pp.) | | | | | |
| | Full cloth | ... | 5 | 0 | 0 |
| | Half cloth | ... | 4 | 8 | 0 |
| [Postage 9 annas extra.] | | | | | |
| 4. Sripatipaddhati with English Translation and Notes. (8vo. 196 pp.) | | | | | |

**Revised and enlarged edition.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | Full cloth gilt | ... | 2 | 12 | 0 |
| | do. ordinary | ... | 2 | 8 | 0 |
| [Postage 6 annas extra] | | | | | |

*For copies apply to*

Pandita bhushana

**Mr. V. Subrahmanya Sastri, B. A.,**

50, 3rd Cross Road, Basavangudi P. O.

குகமயம்

ஓம் குமார குருப்யோ நம:

# வெளியிடப்படும் சோதிட நூல்கள்

## 1. கோசாரபல நிர்ணயம்.

இது பிருகத்சம்மிதை, பலதீபிகை முதலிய பல அரிய நூற்களிற் கூறப் பெற்றுள்ள சாராம்சத்தைத் தழுவி எளிய நடையில் எழுதப்பெற்றுளது. இந்நூலொன்றினால் கிரகங்கள் சார வசத்தினால் ஒவ்வொரு ராசிகளில் சஞ்சரிக்கும் பலாபலன்களை மிகச் சுலபமாய்த் தெரிந்து கொள்ளலாம். சுமார் 6 பாரத்தில் முடியும்.

## 2. தசாபல நிர்ணயம்.

இது ஜாதகபாரிஜாதம், சர்வார்த்த சிந்தாமணி, பாராசர ஹோரை, பலதீபிகை, சாராவளி முதலிய அரியநூல்களின் கருத்தைத் தழுவி எழுதப் பெற்றுளது. இதனால் ஒவ்வொருவரும் தமக்கேற்படும் தசாபுத்திகளின் பலன்களை மிகத் தெளிவாய்த் தெரிந்து கொண்டு அததற் குரிய சாந்தியையும் செய்து கொள்ளலாம். சுமார் 20-பாரத்தில் முடியும்.

## 3. வித்யாபாவம்.

இது பாராசரஹோரை, ஜயமுனி சூத்திரம், பலதீபிகை, ஜாதக பாரிஜாதம், ஜாதகதத்துவம், சர்வார்த்த சிந்தாமணி, சாராவளி, ஜாதகாலங்காரம், சங்கராசாரியம் முதலிய அரிய நூல்களில் கூறப்பெற்றுள்ள சாராம்சத்தைத் திரட்டி எழுதப்பெற்றிருக்கின்றது. இந்நூலில் வித்தை புத்தி முதலியவைகளை மிகத் தெளிவாயும் விளக்கமாயும் கூறப்பட்டிருக்கின்றது. சுமார் 8-பாரத்தில் முடியும்.

## 4. யோக மஞ்சரி.

இது பாராசர ஹோரை, ஜயமுனி சூத்திரம், பலதீபிகை, ஜாதக பாரிஜாதம், ஜாதகதத்துவம், சர்வார்த்த சிந்தாமணி, சாராவளி,

ஜாதகாலங்காரம் முதலிய அரிய நூல்களில் கூறப்பெற்றுள்ள யோக பாவங்களைத் திரட்டித் தெளிவாயும் விரிவாயும் எழுதப் பெற்றிருக்கின்றது. சுமார் 5-பாரத்தில் முடியும்.

### 5. ஜீவனபாவம்.

பல நூல்களில் கூறப்பெற்றுள்ள சாராம்சங்களைத் திரட்டி இந்நூல் மிகத் தெளிவாய் எழுதப்பெற்றுளது. இதனுல் ஒவ்வொருவரும் தமது வாழ்நாளில் ஜீவனம் இன்னதென்பதை மிகத் தெளிவாய் அறிந்துகொள்ளலாம். இந்நூலொன்று கைவசமிருப்பின் ஒருவரைத்தேடிப் பலன்கேட்க வேண்டிய அவசியமேயில்லை. சுமார் 15-பாரத்தில் முடியும்.

### 6 ஸ்ரீ வெங்கடேச ஜாதக பல விமர்சனம்

இது பலதீபிகை, பாராசரஹோரை, ஜாதகபாரிஜாதம், ஜாதகதத்துவம், சாராவளி, சர்வார்த்த சிந்தாமணி முதலிய பல நூல்களில் கூறப்பெற்றுள்ள துவாதச பாவபலன்களைத் தொகுத்துச் சங்கிரகமாகவும் அதிக விளக்கமாகவும் எளியநடையில் சிறுவரும் வாசித்துணருமாறு எழுதப் பெற்றிருக்கின்றது. சுமார் 5 - பாரத்தில் முடியும்.

குறிப்பு.—இந்நூல்கள் யாவும் சென்னை தங்கசாலை வீதியிலுள்ள ஸ்ரீகாசியப ஆசிரமத்தின் தலைவரும் பிரபல ஜோதிஷருமான பிரம்மஸ்ரீ தீ. ரெ. திருவேங்கடாசாரிய சுவாமிகள், பி. ஏ., அவர்களால் இயற்றப்பெற்றன.

இந்நூற்கள் யாவும் விரைவில் வெளிவரும் பருவத்திலிருக்கின்றன.

வெளிவந்தவுடன் பத்திரிகைகள் மூலமாயும் துண்டுப் பிரசுரங்கள் மூலமாயும் தெரிவிக்கப்படும். சுபம். சுபம்.

பறங்கிப்பேட்டை
7-8-1939.

இங்ஙனம்,
சு. ஏ. குமாரஸ்வாமி.

குகமயம்

ஓம் குமார குருப்யோ நம :

# சோதிட நூற் பிரகடனம்.

---

மந்திரேஸ்வரிய மென்னும் பலதீபிகை இரண்டாம் பதிப்பு:—இது சோதிட சாஸ்திரிகளுக்கு அவசியமான நூல். சோதிடம் பயிலுநர்க்கும் அத்தியாவசியமானதே. இஃது இருபத்தேழு அத்தியாயங்களையுடையது. முதற்பதிப்பைவிடத் திருத்தமாகவும் தெளிவாகவும் எழுதப்பட்டிருக்கின்றது. பல புத்துரைகளையும் விளக்க விருத்தியுரைகளையுங் கொண்டுள்ளது. நல்ல அச்சில் அச்சிடப் பெற்றுள்ளது. ரூ. 20-0-0. சாலிகோ, 23.00

ஸ்ரீபதி பத்ததி என்னும் ஜாதக கர்ம பத்ததியின் விருத்தியுரை:—சோதிடம் பயின்றோர்க்கும் பயில விரும்புநர்க்கும் இன்றியமையாப் பாவபல, திருஷ்டிபல, ஷட்பல, இஷ்ட கஷ்டபல, ஆயுர்த்தாயபல, அரிஷ்டபங்கபல, தசாந்தர தசாபல, பிரகீரண பலன்களை ஒரு உதாரண ஜாதக வாயிலாய் திருஷ்டாந்த தாஷ்டாந்தங்களோடு விரிவாய் விளக்கிக் காட்டும் இந்நூல் சிறுவரும் வாசித்துணருமாறு நல்ல அச்சில் அச்சிடப் பெற்றுள்ளது. ரூ. 6-0-0. அச்சில்

சூரிய சித்தாந்த சோதிட கணிதம்:—இது பாஸ்கராசாரியாரவர்களால் ஆக்கப்பெற்றது. சோதிடத்திற்குக் கண்ணுயுள்ளது. ஜாதக கணிதத்திற்கு அங்கமான அஹர்கணம், சூரியாதி நவக்கிரகஸ்புடம், தூமாதி குளிகாதி உபக்கிரகஸ்புடம், இலக்கினஸ்புடம், பாவஸ்புடம், திதி, நட்சத்திர யோகஸ்புடம், சுதேச விராசிமானம் முதலியவற்றைக் கிரமமாய்க் காட்டவல்லது. . ரூ. 1-8-0.

• புட்பபந்தம்:—(மேகமாலாவின் தமிழ் மொழி பெயர்ப்பு) மழைக் காலத்தை நன்கு தெரிவிக்கும் சிறுநூல். இது கண்ட விருஷ்டி, அதி விருஷ்டி, அணுவிருஷ்டி முதலியவற்றைக் கூறவல்லது. இஞ்ஞான்றிவ்வகைத் தானியங்களைத்தான் விளைவித்தல் வேண்டுமென்று ஒவ்வோர் விவசாயியையும் தன் வழிப்படுத்திப் பயனடையச் செய்வதிந்நூலேயாம். ரூ. ~~0-6-0~~. அச்சில்

ஸ்ரீநீலகண்ட தாஜிக சமிக்ஞாதந்திர சகமஸ்புட விவேகம்:—இது புண்ணிய சகமஸ்புடம் முதல் சத்யாந்ருத சகமஸ்புடம்வரை உள்ள 59-சகமஸ்புடங்களை விரிவாய் எடுத்துரைக்கவல்லது. அச்சில்.

மச்ச சாஸ்திரம்:—உடலிற்காணும் மச்சங்கள் இருக்கும் இடங்களைத் தெரிந்துகொண்டு மனிதனுடைய இயல்பைக் குறித்தும் ஜீவிய காலத்தில் அவன் அடையப்போகும் இலாப நஷ்டங்களைக் குறித்தும் அறிவிக்கக்கூடியது. ரூ. 0-8-0.

மயநூலென்னும் சிற்பரத் நாகரம்:—இஃது ஆயாதிப் பொருத்தங்கள் நிறைந்த நூல். மனைகணித்து வாழும் மாந்தர்க்கவசியமானது. இது மயநூல் பதினுயிரத்தினின்று தொகுக்கப்பெற்றது. இது மனை சம்பந்தமான சகல விவரங்களையும் தெளிவாய் எடுத்துக்கூறுகின்றது. இது பழைய காலத்து ஏட்டுப்பிரதியினின்று அரிய பிரயாசையின் பேரில் வெளியிடப் பெற்றுள்ளது. ரூ. 5-8-0.

விஸ்வ கர்மீய ஆயாதிப் பொருத்த விளக்கம்:—விஸ்வகர்மாவினுல் செய்யப்பட்ட இவ்வாயாதிப் பொருத்தம் ஒன்று முதல் 5001-குழி வரையுமுள்ள ஒற்றித்த குழிகளுக்குக் கருப்பம், ஆதாயம், விரயம், யோனி, நட்சத்திரம், வாரம், அமிசம், வமிசம், திதி, லக்கினம், வயது, பூதம், குணம், சூத்திரம், நேத்திரம், கணம், யோகம் முதலிய பொருத்தங்கள் நிறைந்த அட்டவணையுடனும் பலன்களுடனும் எழுதப்பட்டிருக்கின்றது. ரூ. 4-8-0.

தேசாந்தர சமஸ்காரத்துடன் கூடிய சித்தாந்த திருக்கணிதம்:—திருக்கணிதங் கணிக்கத்தக்க பொதுவிதிகள், இலங்காமத்தியான்னத்யுகணம் சூரியாதி கிரகங்களுக்குப் பிரதம துதீய திருதீய சமஸ்கார கணனங்கள், இலங்கா மத்தியான்ன மத்தியம கிரகங்களின் கணனம், தேசாந்தரசமஸ்கார கணனம், திருச் சமஸ்கார கணனம், இஷ்டதேசத்திற்கு மத்தியான்ன கிரகங்களின் கணனம், சுதேச மத்தியான்ன சூரிய சந்திர ஸ்புடகணனம், குஜாதி பஞ்சக்கிரகங்களுக்குப் பிரதமதுதீய திருதீய சமஸ்கார சுத்தஸ்புட கணனம், சூரிய சந்திர கதிஸ்புட கணனம், குஜாதி பஞ்சக்கிரகங்களுக்கு கதிஸ்புட கணனம் முதலியவற்றைக் காட்டவல்லது. ரூ. 1-4-0.

வைத்திய ரத்ந வசன பூஷணம்:—(சிறந்த வைத்தியநூல்) இந்நூலில், சூரணம், கஷாயம், பாகு, (சர்பத்து) மாத்திரை, பற்பம் செந்தூரம், மெழுகு, தைலம், இலேகியம், தீநீர், (திராவகம்) பொதுவினம், கலம்பகம் முதலிய அரிய பெரிய 421 முறைகள் தெளிவாய் கூறப்பட்டிருக்கின்றன. ரூ. 4-8-0.

இப்புத்தகங்களுக் கெல்லாம் வி. பி. செலவு பிரத்தியேகம்.

**சு. ஏ. கு. ஏகாம்பரம்,**
1, ஏகாம்பர ஆச்சாரி வீதி,
பறங்கிப்பேட்டை, (தென்னாற்காடு.)

1(